வரைபொருதிழியருவிகள்பலபருகொருகடல்வரிமணலிடை
கரைபொருதிரையொலிகெழுமியகமூமலமமர்கனலுருவின
னரைபொருபுலியதளுடையினனடியிணைதொழவருவினையெனு
முரைபொடிபடவுறுதுயர்கெடவுயருலகெய்தலொருதலைமையே. (சு)

முதிருறுகதிர்வளரிளமதிசடையணிநறைதலைதனி
லுதிருறுமயிர்பிணைதவிர்தசையுடைபுலியதளிடையிருள்கடி
கதிருறுசுடரொளிகெழுமியகமூமலமமர்மழுமலிபடை
யதிருறுகழலடிகளதடிதொழுமறிவலதறிவியமே. (எ)

கடலெனநிறகெடமுடியவனடிதலைதறவடிசரணென
வடனிறைபடையருளியபுகழரவசையினனணிகிளர்பிறை
விடனிறைமிடறுடையவன்விரிசடையவன்விடைபுடையவனுமை
யுடனுறைபதிகடன்மறுருடையுயர்கமூமலவியனகரதே. (அ)

கொமூமலருறைபதியுடையவனெடியவனெனவிவர்தருமவன்
விமூமையையளவறிகிலரிறைவிரைபுனர்பொழிலணிவிழவமர்
கமூமலமமர்கனலுருவினனடியிணைதொமூமவரருவினை
யெமூமையுமிலகிலவகைதனிலெளிதிமையவர்வியனுலகமே. (கூ)

அமைனதுவிரிமூகியதுகிலணியுடையினரமணுருவர்கள்
சமையமுமொருபொருளெனுமவைசலநெறியனவறவுரைகளு
மிமையவர்தொமூகமூமலமமரிறைவனதடிபரவுவர்தமை
நமையலவினைநலனடைதலிலுயர்நெறிநனிநணுகுவர்களே. (கo)

பெருகியதமிழ்விரகினன்மலிபெயரவனுறைபிணர்திரையொடு
கருகியநிறவிரிகடலடைகமூமலமுறைவிடமெனநனி
பெருகியசிவனடிபரவியபிணைமொழியனவொருபதுமுடன்
மருவியமனமுடையவர்மதியுடையவர்விதியுடையவர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கமூமலம் என்பதும் - சோழிகமூமலம்.

திருவீழிமிழலை - திருவிராகம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

தடகிலவியமலிறுவிதியார்தமுமிழ்தருபடவரவுகா
டடலசுரர்நாடமரர்களலைகடல்கடைவுழியெமூமிகுசின
விடமடைதருமிடறுடையவன்விடைமிசைவருமவனுறைபதி
திடமலிதருமறைமுறையுணர்மறையவர்நிறைதிருமிழலையே. (க)

தரையொடுதிவிதலநலிதருதருதிறலுறுசலதரனது
வரையனதலைவிசையொடுவருதிகிரியையரிபெறவருளின
னுரைமலிதருசுரநதிமதிபொதிசடையவனுறைபதிமிகு
திரைமலிகடன்மணலணிதருபெறுதிடர்வளர்திருமிழலையே. (உ)

மலைமகடனையிகழ்வதுசெய்தமதியறிசமனவனதுயர்
தலையினுடழலுருவனகரமறமுனிவுசெய்தவனுறைபதி
கலைநிலவியபுலவர்களிடர்களைதருகொடைபயில்பவர்மிகு
சிலைமலிமதிலிடைதழுவியதிகழ்பொழில்வளர்திருமிழலையே. (ஙு)

மருவலர்புரமெரியினின்மடிதரவொருகணைசெலநிறுவிய
பெருவலியினனலமலிதருகரனுமிருபிணமமர்வன
விருளிடையடையுறவொடுநடவிசையுறபரனினிதுறைபதி.
தெருவினில்வருபெருவிழவொலிமலிதரவளர்திருமிழலையே. (ச)

அணிபெறுவடமரநிழலினிலமர்வொடுமடியிணையிருவர்கள்
பணிதரவறநெறிமுறையொடுமருளியபரனுறைவிடமொளி
மணிபொருவருமரகதநிலமலிபுனலணிதருவயலணி
தினிபொழில்தருமணமதுதுகரறுபதமுரைதிருமிழலையே. (ஞ)

வசையறுவலிவனசரவுருவதுகொடுநினைவருதவமுயல்
விசையனதிறன்மலிமகளறிவுறுதிறலமர்மிடல்கொடுசெய்து
வசைவிலபடையருள்புரிதருமவனுறைபதியதுமிகுதரு
திசையினின்மலர்சூலவியசெறிபொழின்மலிதருதிருமிழலையே. (சு)

நலமலிதருமறைமொழியொடுநெதியுறுபுனல்புகையொளிமுதன்
மலரவைகொடுவழிபடுதிறன்மறையவனுயிரதுகொளவரு
சலமலிதருமறலிதனுயிர்கெடவுதைசெய்தவரனுறைபதி
திலதமிதெனவுலகுகள்புகழ்தருபொழிலணிதிருமிழலையே. (எ)

EFEO_TVG_149-021 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அரனுறைதிருகயிலையைநிலைகுலைவதுசெய்ததசமுகனது
கரமிருபதுநெரிதரவிரல்நிறுவியகழலடியுடையவன்
வரன்முறையுலகவைதருமலர்வளர்மறையவன்வழிவழுவிய
சிரமதுகொடுபலிதிரிதருசிவனுறைபதிதிருமிழலையே. (அ)

அயனெடுமெழிலமர்மலர்மகளமகிழ்கணனளவிடலொளியவோர்
பயமுறுவகைதழலெரிகழ்வதோர்படியுருவதுவரவரன்முறை
சயசயவெனமிகுதுதிசெயவெளியருளியவவனுறைபதி
செயிலவியமதினிமதியுதவழ்தரவளர்திருமிழலையே. (கூ)

இகழுருவொடுபறிதலைகொடுமிழிதொழின்மலிசமண்விரகினர்
திகழ்துவருடையுடல்பொதிபவர்கெடவடியவர்மிகவருளிய
புகழுடையிறையுறைபதிபுனலணிகடல்புடைதழுவியபுவி
திகழ்சுரர்தருநிகழ்கொடையினர்செறிவொடுதிகழ்திருமிழலையே. (கo)

சினமலிகரியுரிசெய்தசிவனுறைதருதிருமிழலையைமிகு
தனமனர்சிரபுரநகரிறைதமிழ்விரகனதுரையொருபது
மனமகிழ்வொடுபயில்பவரெழின்மலர்மகள்கலைமகள்சயமக
ளினமலிபுகழ்மகளிசைதரவிருநிலனிடையினிதமர்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரம் - திருவிராகம் - பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

புவம்வளிகனல்புனல்புவிகலையுரைமறைதிரிகுணமமர்நெறி
திவமலிதருசுரர்முதலியர்திகழ்தருமுயிரவையவைதம
பவமலிதொழிலதுநினைவொடுபதுமநன்மலரதுமருவிய
சிவனதுசிவபுரநினைபவர்செழுநிலனினில்நலமெறுவரே. (க)

மலைபலவளர்தருபுவியிடைமறைதருவழிமலிமனிதர்கள்
நிலைமலிசுரர்முதலுலகுகணிலைபெறுவகைநினைவொடுமிகு
மலைகடனடுவறிதுயிலமரியுருவியல்பரனுறைபதி
சிலைமலிமதிதிகழ்சிவபுரநினைபவரிருமகளொடுதிகழ்வரே. (உ)

பழுதிலகடல்புடைதழுவியபடிமுதலியவுலகுகண்மலி
குழுவியசுரர்பிறர்மனிதர்கள்குலமலிதருமுயிரவையவை
முழுவதுமழிவகைநினைவொடுமுதலுருவியலரனுறைபதி
செழுமணியணிசிவபுரநகர்தொழுமவர்புகழ்மிகுமுலகிலே. (ங)

நறைமலிதருமலருடுமுகைநகுமலர்புகைமிகுவளரொளி
நிறைபுனல்கொடுதனைநினைவொடுநியதமுமவ்வழிபடுமடியவர்
குறைவிலபதமணிதரவருள்குணமுடையிறையுறைவனபதி
சிறைபுனலமர்சிவபுரமதுநினைபவர்செயமகடலைவரே. (ச)

சினமலியறுபகைமிகுபொறிசிதைதருவகைவளரிறுவிய
மனனுணர்வொடுமலர்மிசையெழுதருபொருணியதமுமுணர்பவர்
தனதெழிலுருவதுகொடுவடைதகுபரனுறைவதுநகர்மதிள்
கனமருவியசிவபுரநினைபவர்கலைமகடரநிகழ்வரே. (ஞ)

சுருதிகள்பலநலமுதல்கலைதுகளறுவகைபயில்வொடுமிகு
தருவியலுலகவைபுகழ்தரவழியொழுகுமெயுறுபொறியொழி
யருதவமுயல்பவர்தனதடியடைவகைநினையரனுறைபதி
திருவளர்சிவபுரநினைபவர்திகழ்குலநிலனிடைநிகழுமே. (சு)

கதமிகுகருவுருவொடுவெகிரிடைவடவரைகணகனவென
மதமிகுநெடுமுகனமர்வலிமதிதிகழெயிறதனுதிமிசை
யிதமமர்புவியதுநிறுவியவெழிலரிவழிபடவருள்செய்த
பதமுடையவனமர்சிவபுரநினைபவர்நிலவுவர்படியிலே. (எ)

அசைவுறுதவமுயல்விலியனருளினிலவருவலிகொடுசிவ
னிசைகயிலையையெழுதருவகையிருபதுகரமவைநிறுவிய
நிசிசரன்முடியுடைதரவொருவிரல்பணிகொளுமவனுறைபதி
திசைமலிசிவபுரநினைபவர்செழுநிலனினினிகழ்வுடையரே. (அ)

அடன்மலிபடையரியயனெடுமறிவரியதோரழன்மலிதரு
சுடருருவொடுநிகழ்தரவவர்வெருவொடுதுதிய துசெயவெதிர்
விடமலிகளதுதலமர்கணதுடையுருவெளிபடுமவனகர்
திடமலிபொழிலெழில்சிவபுரநினைபவர்வழிபுவிதிகழுமே. (கூ)

குணமறிவுகணிலையிலபொருளுரைமருவியபொருள்களுமில
தினமெனுமவரொடுசெதுமதிமிகுசமணருமலிதமதுகை
யுணலுடையவருணர்வருபரனுறைதருபதியுலகினிலில
கணமருவியசிவபுரநினைபவரெழிலுருவுடையவர்களே. (கo)

திகழ்சிவபுரநகர்மருவியசிவனடியினைபணிசிரபுர
நகரிறைதமிழ்விரகனதுரைகலமலியொருபதிநவில்பவர்
நிகழ்குலநிலநிறைதிருவருநிகரிலகொடைமிகுசயமகள்
புகழ்புவிவளர்வழியடிமையின்மிகைபுணர்தரநலமிகுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பிரமபுரிநாயகர்-தேவியார்-பெரியநாயகியம்மை.

திருமறைக்காடு-திருவிராகம்-பண்-நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

சிலைகனைகடுவிடைநிறுவியோர்சினமலியரவதுகொடுதிவி
தலமலிசுரரசுரர்களொல்லிசலசலகடல்கடைவுழிமிகு

கொலைமலிவிடமெழவவருடல்குலைதரவதுதுகர்பவனெழின்
மலைமலிமதிள்புடைதழுவியமறைவனமமர்தருபரமனே. (க)

கரமுதலியவவயமவைகடுவிடவரவதுகொடுவரு
வரன்முறையணிதருமவனடல்வலிமிகுபுலியதளுடையின
னிரவலர்துயர்கெடுவகைகினையிமையவர்புரமெழில்பெறவளர்
மரநிகர்கொடைமனிதர்கள்பயின்மறைவனமமர்தருபரமனே. (உ)

இழைவளர்தருமுலைமலைமகளினிதுறைதருமெழிலுருவினன்
முழையினின்மிகுதுயிலுமரிமுழைவொடுமெழுளியொடெழு
கழைநுகர்தருகரியிரிதருகயிலையின்மலிபவனிருளுறு
மழைதவழ்தருபொழினிலவியமறைவனமமர்தருபரமனே. (ஊ)

நலமிகுதிருவிதழியின்மலர்நகுதலையொடுகனகியின்முகை
பலசுரநதிபடவரவொடுமதிபொதிசடைமுடியினன்மிகு
தலசிலவியமனிதர்களொடுதவமுயல்பெருமுனிவர்கடம
மலமறுவகைமனகினைதருமறைவனமமர்தருபரமனே. (எ)

கதிமலிகளிறதுபிளிறிடவுரிசெய்தவதிருணுயர்பசு
பதியதன்மிசைவருபசுபதிபலகலையவைமுறைமுறையுணர்
விதியறிதருநெறியமர்முனிகணஞெடுமிகுதவமுயல்பெரு
மதிநிபுணர்கள்வழிபடவளர்மறைவனமமர்தருபரமனே. (டு)

கறைமலிதிரிசிகைபடையடல்கணமழுவெழுதரவெறிமறி
முறைமுறையொலிதமருகமுடைதலைமுகிழ்மலிகணவடமுக
முறைதருகானுலகினிலுயரொளிபெருவகைகினைவொடுமலர்
மறையவன்மறைவழிவழிபடுமறைவனமமர்தருபரமனே. (சு)

இருநிலனதுபுனலிடைமடிதரவெரிபுகவெரியதுமிகு
பெருவெளியினிலவிதரவளிகெடவியனிடைமுழுவதுகெட
விருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவனினமலர்
மருவியவறுபதமிசைமுரன்மறைவனமமர்தருபரமனே. (எ)

சனம்வெருவுறவருதசமுகனெருபதுமுடியொடுமிருபது
கனமருவியபுயநெரிவகைகழலடியிலார்விரனிறுவின
னினமலிகணநிசரன்மகிழ்வுறவருள்செய்தகருணையனென
மனமகிழ்வொடுமறைமுறையுணர்மறைவனமமர்தருபரமனே. (அ)

அணிமலர்மகடலைமகனயனறிவரியதோர்பரிசினிலெரி
திணிதருதிரளுருவளர்தரவவர்வெருவுறலொடுதுதிசெய்து
பணியுறவெளியுருவியபரனவனுரைமலிகடவிரலெழு
மணிவளரொளிவெயின்மிகுதருமறைவனமமர்தருபரமனே. (கூ)

இயல்வழிதரவிதுசெலவுறவினமயிலிறகுறுதழையொடு
செயன்மருவியசிறுகடமுடியடைகயர்தலைபறிசெய்துதவ

முயல்பவர்துவர்பட்மூடல்பொதிபவரறிவருபரனவனணி
வயலினில்வளவளமருவியமறைவனமமர்தருபரமனே. (கo)

வசையறுமலர்மகணிலவியமறைவனமமர்பரமனகினை
பசைகொடுமிகுகலைபலபயில்புலவர்கள்புகழ்வழிவளர்தரு
விசையமர்கமுமலகரிறைதமிழ்விரகனதுரையியல்வல
விசைமலிதமிழொருபதும்வலவவருலகினிலெழில்பெறுவரே. (கக)

ஸ்ரீ காவேரிக்கீழ்க்கரைமயிலை (திருச்சிற்றம்பலம்.
சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மறைக்காட்டீசுவரர் - தேவியார் - யாழைப்பழித்தமொழியம்மை.
திருமைந்தன்பது வேதாரணியம்.

திருக்கோலக்கா - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மடையில்வாளைபாயமாதரார்
குடையும்பொய்கைக்கோலக்காவுளான்
சடையும்பிறையுஞ்சாம்பற்பூச்சுங்கீ
முடையுங்கொண்டவுருவமென்கொலோ. (க)

பெண்டான்பாகமாகப்பிறைச்சென்னிக்
கொண்டான்கோலக்காவுகோயிலாக்
கண்டான்பாதங்கையாற்கூப்பவே
யுண்டானஞ்சையுலகமுய்யவே. (உ)

பூணற்பொறிகொளரவம்புன்சடைக்
கோணற்பிறையன்குழகன்கோலக்கா
மாணப்பாடிமறைவல்லானையே
பேணப்பறையும்பிணிகளானவே. (ஈ)

தமூக்கொள்பாவந்தளரவேண்டுவீர்
மமூக்கொள்செல்வன்மறிசேரங்கையான்
குமூக்கொள்பூதப்படையான்கோலக்கா
விமூக்காவண்ணமேத்திவாழ்மினே. (ச)

மயிலார்சாயன்மாதோர்பாகமா
வெயிலார்சாயவெரித்தவெந்தைதன்
குயிலார்சோலைக்கோலக்காவையே
பயிலாநிற்கப்பறையும்பாவமே. (டு)

வெடிகொள்வீனையைவிட்டவேண்டுவீர்
கடிகொள்கொன்றைகலந்தசென்னியான்
கொடிகொள்விழவார்கோலக்காவுளெம்
மடிகள்பாதமடைந்துவாழ்மினே. (சு)

EFEO_TVG_149-023 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நிழலார்சோலைநீலவண்டினம்
குழலார்பண்செய்கோலக்காவுளான்
கழலான்மொய்த்தபாதங்கைகளாற்
றொழலார்பக்கற்றுயரமில்லையே. (எ)

எறியார்கடல்சூழிலங்கைக்கோன்றன்னை
முறியார்தடக்கையடர்த்தமூர்த்திதன்
குறியார்பண்செய்கோலக்காவையே
நெறியாற்றொழுவார்வினைகணீங்குமே. (அ)

நாற்றமலர்மேலயனுநாகத்தி
லாற்றலணைமேலவனுங்காண்கிலாக்
கூற்றமுதைத்தகுழகன்கோலக்கா
வேற்றுரன்பாதமேத்திவாழ்மினே. (கூ)

பெற்றமாசுபிறக்குஞ்சமணரு
மூற்றதுவர்தோயுருவிலாளரும்
சூற்றநெறியார்கொள்ளார்கோலக்காப்
பற்றிப்பரவப்பறையும்பாவமே. (கo)

நலங்கொள்காழிஞானசம்பந்தன்
குலங்கொள்கோலக்காவுளானையே
வலங்கொள்பாடல்வல்லவாய்மையா
குலங்கொள்வீனைபோயோங்கிவாழ்வரே. (ககூ)

திருச்சிற்றம்பலம்.

கோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சத்தபுரீசர்-தேவியார் - ஓசைகொடுத்தநாயகியம்மை.

சீகாழி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூவார்கொன்றைப்புரிபுன்சடையீர்
காவாயெனின்றேத்துங்காழியார்
மேவார்புரமூன்றட்டாரவர்போலாம்
பாவாரின்சொற்பயிலும்பரமரே. (க)

எந்தையென்றங்கிமையோர்புகுந்தீண்டிக்
கந்தமாலைகொடுசேர்காழியார்
வெந்தநீற்றர்விமலரவர்போலா
மந்திரட்டமாடுமெடிகளே. (உ)

தேனைவென்றமொழியாளொருபாகங்
கானமான்கைக்கொண்டகாழியார்

வானமோங்குகோபிலவர்போலா
மானவின்பமாடுமடிகளே. (ஈ)

மாணுவென்றிக்காலன்மடியவே
காணுமாணிக்களித்தகாழியார்
நாணுர்வாளிதொட்டாரவர்போலாம்
பேணுர்புரங்களட்டபெருமானே. (ச)

மாடேயோதமெறியவயற்செந்நெற்
காடேறிச்சங்கினுங்காழியார்
வாடாமலராள்பங்கரவர்போலா
மேடார்புரமூன்றெரித்தவிறைவரே. (டு)

கொங்குசெருந்திகொன்றைமலர்கூடக்
கங்கைபுனைந்தசடையார்காழியா
ரங்கணரவமாட்டுமவர்போலாஞ்
செங்கணரக்கர்புரத்தையெரித்தாரே. (சு)

கொல்லேவிடைமூன்பூதங்குனித்தாடுங்
கல்லவடத்தையுகப்பார்காழியா
ரல்லவிடத்துநடந்தாரவர்போலாம்
பல்லவிடத்தும்பயிலும்பரமரே. (எ)

எடுத்தவரக்கனெரியவிரலூன்றிக்
கடுத்துமூரியவடர்த்தார்காழியா
ரெடுத்தபாடற்கிரங்குமவர்போலாம்
பொடிக்கொணீறுபூசும்புனிதரே. (அ)

ஆற்றலுடையவரியும்பிரமனுந்
தோற்றறங்காணுவென்றிக்காழியா
ரேற்றமேறங்கேறுமவர்போலாங்
கூற்றமறுகக்குமைத்தகுழகரே. (கூ)

பெருக்கப்பிதற்றுஞ்சமணர்சாக்கியர்
கரக்கும்மூரையைவிட்டார்காழியா
ரிருக்கின்மலிந்தவிறைவரவர்போலா
மருப்பின்மூலியாள்பங்கத்தையரே. (கo)

காராரவ்வயல்சூழ்காழிக்கோன்றன்னைச்
சீரார்ஞானசம்பந்தன்சொன்ன
பாரார்புகழப்பரவவல்லவ
ரேரார்வானத்தினிதாவிருப்பாரே. (ககூ)

திருச்சிற்றம்பலம்.

EFEO_TVG_149-024 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருச்செம்பொன்பள்ளி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்குழலிமாதோர்பாகமாய்த்
திருவார்செம்பொன்பள்ளிமேவிய
கருவார்கண்டத்தீசன்கழல்களே
மருவாதவர்மேன்மன்னும்பாவமே. (க)

வாரார்கொங்கைமாதோர்பாகமாய்ச்
சீரார்செம்பொன்பள்ளிமேவிய
வேரார்புரிபுன்சடையெம்மீசனைச்
சேராதவர்மேற்சேரும்வினைகளே. (உ)

வரையார்சந்தோடகிலும்வருபொன்னித்
திரையார்செம்பொன்பள்ளிமேவிய
நரையார்விடையொன்றூரும்பனை
யுரையாதவர்மேலொழியாவூனமே. (ங)

மழுவாளேந்திமாதோர்பாகமாய்ச்
செழுவார்செம்பொன்பள்ளிமேவிய
வெழிலார்புரிபுன்சடையெம்மிறைவனைத்
தொழுவார்தம்மேற்றுயரமில்லையே. (ச)

மலையார்மகளோடனெய்மதிஞெய்த
சிலையார்செம்பொன்பள்ளியானையே
யிலையார்மலர்கொண்டெல்லிநண்பகல்
நிலையாவணங்கநில்லாவினைகளே. (ஞ)

அறையார்புனலோடகிலும்வருபொன்னிச்
சிறையார்செம்பொன்பள்ளிமேவிய
கறையார்கண்டத்தீசன்கழல்களே
நிறையால்வணங்கநில்லாவினைகளே. (சு)

பையாரரவேல்குலாளொடுஞ்
செய்யார்செம்பொன்பள்ளிமேவிய
கையார்சூலமேந்துங்கடவுளே
மெய்யால்வணங்கமேவாவினைகளே. (எ)

வானூர்திங்கள்வளர்புன்சடைவைத்துத்
தேனூர்செம்பொன்பள்ளிமேவிய
வூனூர்தலையிற்பலிகொண்டுழல்வாழ்க்கை
யானுன்கழலேயடைந்துவாழ்மினே. (அ)

காராரர்வண்ணன்கனகமேனியானுந்
தேரார்செம்பொன்பள்ளிமேவிய

ஈரார்நிமிர்புன்சடையெந்நிமலனே
யோராதவர்மேலொழியாவூனமே. (கூ)

மாசாருடம்பர்மண்டைத்தேரரும்
பேசாவண்ணம்பேசித்திரியவே
தேசார்செம்பொன்பள்ளிமேவிய
வீசாவென்னநில்லாவிடர்களே. (கூ)

நறவார்புகலிஞானசம்பந்தன்
செறுவார்செம்பொன்பள்ளிமேயானைப்
பெறுமாறிசையாற்பாடலிவைபத்து
முறுமாசொல்லவோங்கிவாழ்வரே. (கக)

~~ல்காவெரிக்கரைமையி~~ திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

~~சுவாமிகள் - [illegible]பதி - தேவியார் - சுகந்தவனநாயகியம்மை.~~

திருப்புத்தூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கள்விம்முவெறியார்பொழிற்சோலைத்
திங்களோடுதிளைக்குந்திருப்புத்தூர்
கங்கைதங்குசடையாரவர்போலு
மெங்களுச்சியுறையுமிறையாரே. (க)

வேனல்விம்முவெறியார்பொழிற்சோலைத்
தேனும்வண்டுந்திளைக்குந்திருப்புத்தூர்
ஞானமின்றியுறைவாரவர்போலு
மேனமுள்ளுமெயிறும்புனைவாரே. (உ)

பாங்குநல்லவரிவண்டிசைபாடத்
தேங்கொள்கொன்றைதிளைக்குந்திருப்புத்தூர்
ரோங்குகோயிலுறைவாரவர்போலுங்
காங்குதிங்கடவும்புன்சடையாரே. (ங)

காறவிண்டுநறுமாமலர்க்வ்வித்
தேறல்வண்டுதிளைக்குந்திருப்புத்தூர்
ரூறல்வாழ்க்கையுடையாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (ச)

இசைவிளங்குமெழில்சூழ்ந்தியல்பாகத்
திசைவிளங்குபொழில்சூழ்திருப்புத்தூர்ப்
பசைவிளங்கப்படித்தாரவர்போலும்
வசைவிளங்கும்வடிசேர்துதலாரே. (ஞ)

வெண்ணிறத்தவிரையோடலருந்தித்
தெண்ணிறத்தபுனல்பாய்திருப்புத்தூ
ரொண்ணிறத்தவொளியாரவர்போலும்
வெண்ணிறத்தவிடைசேர்கொடியாரே. (ரு)

நெய்தலாம்பல்கழுநீர்மலர்ந்தெங்குஞ்
செய்கள்மல்குசிவனூர்திருப்புத்தூர்த்
தையல்பாகமகிழ்ந்தாரவர்போலு
மையுணஞ்சமருவுமிடற்றரே. (எ)

கருக்கமெல்லாங்கமழும்பொழிற்சோலைத்
திருக்கொள்செம்மைவிழவார்திருப்புத்தூ
ரிருக்கவல்லவிறைவரவர்போலு
மரக்கனெல்கவிரலாலடர்த்தாரே. (அ)

மருவியெங்கும்வளருமடமஞ்ஞை
தெருவுதோறுந்திளைக்குந்திருப்புத்தூர்ப்
பெருகிவாழும்பெருமானவன்போலும்
பிரமன்மாலுமறியாப்பெரியோனே. (கூ)

கூறைபோர்க்குந்தொழிலாரமண்கூறவ
ரேறல்வேண்டாதெளிமின்திருப்புத்தூ
ராறுநான்குமமர்ந்தாரவர்போலு
மேறுகொண்டகொடியெம்மிறையாரே. (கo)

நல்லகேள்விஞானசம்பந்தன்
செல்வர்சேடருறையுந்திருப்புத்தூர்
சொல்லல்பாடல்வல்லார்தமக்கென்று
மல்லற்றீருமவலமடையாவே. (ககூ)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - புத்தூரீசர் - தேவியார் - சிவகாமியம்மை.

திருப்புன்கூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

முந்திநின்றவினைகளவைபோகச்
சிந்திநெஞ்சேசிவனூர்திருப்புன்கூ
ரந்தமில்லாவடிகளவர்போலுங்
கந்தமல்குகமழ்புன்சடையாரே. (க)

மூவராயமுதல்வர்முறையாலே
தேவரெல்லாம்வணங்குந்திருப்புன்கூ

ராவரென்னுமடிகளவர்போலு
மேவினல்லரையிலமூன்றெரித்தாரே. (உ)

பங்கயங்களமலரும்பழனத்துச்
செங்கயல்கள்பாய்திருப்புன்கூர்க்
கங்கைதங்குசடையாரவர்போலு
மெங்களுச்சியுறையும்மிறையாரே. (ங)

கரையுலாவுகதிர்மாமணிமுத்தந்
திரையுலாவுவயல்சூழ்திருப்புன்கூ
ருரையினல்லபெருமானவர்போலும்
விரையினல்லமலர்ச்சேவடியாரே. (ச)

பவளவண்ணப்பரிதிர்திருமேனி
திகழும்வண்ணமுறையுந்திருப்புன்கூ
ரழகரென்னுமடிகளவர்போலும்
புகழுன்றபுரிபுன்சடையாரே. (ஞ)

தெரிந்திலங்குகழுநீர்வயற்செங்கெ
திருந்தின்றவயல்சூழ்திருப்புன்கூர்ப்
பொருந்தின்றவடிகளவர்போலும்
விரிந்திலங்குசடைவெண்பிறையாரே. (ரு)

பாரும்விண்ணும்பரவித்தொழுதேத்துந்
தேர்கொள்வீதிவிழவார்திருப்புன்கூ
ராரன்றவடிகளவர்போலுங்
கூரன்றவெயின்மூன்றெரித்தாரே. (எ)

மலையதனருடையமதின்மூன்றுஞ்
சிலையதனலெரித்தசர்திருப்புன்கூர்த்
தலைவர்வல்லவரக்கன்றருக்கினை
மலையதனலடர்த்தமகிழ்ந்தாரே. (அ)

நாடவல்லமலராலுமாலுமாய்த்
தேடநின்றருளுறையுந்திருப்புன்கூ
ராடவல்லவடிகளவர்போலும்
பாடலாடல்பயிலும்பரமரே. (கூ)

சுண்டமுற்றிக்கூறையின்றியே
பிண்டமுண்ணும்பிராந்தர்சொற்கொள்ளல்
வண்டுபாடமலரார்திருப்புன்கூர்க்
கண்டுதொழுமின்கபாலிவேடமே. (கo)

மாடமல்குமதில்சூழ்காழிமன்
சேடர்செல்வருறையுந்திருப்புன்கூர்

EFEO_TVG_149-026 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நற்டவல்லஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பரவிவாழ்மினே. (கக)

சோழநாட்டிலுள்ள காவேரிக்தென்கரையிலுள்ள திருச்சிற்றம்பலம்.
சுவாமி - சிவலோகநாதர் - தேவி - சொக்கநாயகியம்மை.
திருநாமம்

07 சோற்றுத்துறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

செப்பநெஞ்சேநெறிகொள்சிற்றின்பந்
துப்பனென்னுதருளேதுணையாக
வொப்பரொப்பர்பெருமானெளிவெண்ணீற்
றப்பர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (க)

பாலுநெய்யுந்தயிரும்பயின்றாடித்
தோலுநூலுந்துதைந்தவரைமார்பர்
மாலுஞ்சோலைபுடைசூழ்மடமஞ்ஞை
யாலுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (உ)

செய்யர்செய்யசடையர்விடையூர்வர்
கைகொள்வேலர்கழலர்கரிகாடர்
தையலாளோர்பாகமாயவெம்
மையர்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ங)

பிணிகொளாக்கையொழியப்பிறப்புளீர்
துணிகொள்போரார்தளங்குமழுவாளர்
மணிகொள்கண்டர்மேயவர்பொழி
லணிகொள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ச)

பிறையும்மரவும்புனலுஞ்சடைவைத்து
மறையுமோதிமயானமிடமாக
வுறையுஞ்செல்வமுடையார்காவிரி
யறையுஞ்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ஞ)

அடிகளோடுமுழவம்விம்மவே
பொடிகொள்பூசிப்புறங்காடரங்காகப்
படிகொள்பாணிபாடல்பயின்றாடி
மடிகள்சோற்றுத்துறைசென்றடைவோமே. (ஈ)

சாடிக்காலன்மாளத்தலைமாலை
சூடிமிக்கசுவண்டாய்வருவார்தாம்
பாடியாடிப்பரவுவாருள்ளத்
தாடிசோற்றுத்துறைசென்றடைவோமே. (எ)

பெண்ணேர்பாகமுடையார்பிறைச்சென்னிக்
கண்ணேர்பாகங்கலந்தநுதலினு
ரெண்ணதரக்கனெடுக்கவூன்றிய
வண்ணல்சோற்றுத்துறைசென்றடைவோமே. (அ)

தொழுவாரிருவர்துயரநீங்கவே
யழலாயோங்கியருள்கள்செய்தவன்
விழுவார்மறுகில்விதியாலமிக்க
வெழிலார்சோற்றுத்துறைசென்றடைவோமே. (கூ)

தோதுசாற்றித்திரிவாரமண்குண்ட
ரோதமோத்தையுணராதெழுநெஞ்சே
நீதிநின்றுநினைவார்வேடமா
மாதிசோற்றுத்துறைசென்றடைவோமே. (கஉ)

அந்தண்சோற்றுத்துறையெம்மாதியைச்
சிந்தைசெய்மினடியீராயினீர்
சந்தம்பரவுஞானசம்பந்தன்
வந்தவாறேபுனைதல்வழிபாடே. (கக)

சோழநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.
சுவாமி - தொலியாச்செல்வர் - தேவி - ஒப்பிலாமுலைநாயகியம்மை.
திருநாமம்

07 திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஊருலாவுபலிகொண்டுலகேத்த
நீருலாவுநிமிர்புன்சடையண்ணல்
சீருலாவுமறையோர்நறையூரிற்
சேருஞ்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (க)

காடுநாடுங்கலக்கப்பலிகண்ணி
யோடுங்கங்கையொளிர்புன்சடைதாழ
வீடுமாகமறையோர்நறையூரில்
நீடுஞ்சித்தீச்சரமேகினைநெஞ்சே. (உ)

கல்வியாளர்சனகமுனிமேனி
புல்குகங்கைபுரிபுன்சடையானூர்
மல்குதிங்கட்பொழில்சூழ்நறையூரிற்
செல்வர்சித்தீச்சரஞ்சென்றடைநெஞ்சே. (ங)

EFEO_TVG_149-027 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நிடவல்லநிமிர்புன்சடைதாழ
வாடவல்லவடிகளிடமாகும்
பாடல்வண்டுபயிலுமறையூரிற்
சேடர்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (அ)

உம்பராலுமுலகினவராலுந்
தம்பெருமையளத்தற்கரியானூர்
நண்புலாவுமறையோர்நறையூரிற்
செம்பொன்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (இ)

கூருலாவுபடையான்விடையேறி
பேருலாவுமழுவானனலாடி
பேருலாவுபெருமானறையூரிற்
சேருஞ்சித்தீச்சரமேயிடமாமே. (உ)

* அன்றிநின்றவவுணர்புரமெய்த
வென்றிவில்லிவிமலன்விரும்பூர்
மன்றில்வாசமணமார்நறையூரிற்
சென்றுசித்தீச்சரமேதெளிநெஞ்சே. (எ)

அரக்கனண்மையழியவரைதன்னை
நெருக்கவூன்றுமிவிரலான்விரும்பூர்
பரக்குங்கீர்த்தியுடையார்நறையூரிற்
றிருக்கொள்சித்தீச்சரமேதெளிநெஞ்சே. (அ)

ஆழியானுமலரினுறைவானு
மூழிநாடியுணராதிருந்துமேற்
சூழுநேடவெரியாமொருவன்சிர்
நீழல்சித்தீச்சரமெனினெஞ்சே. (கூ)

மெய்யின்மாசர்விரிதுண்டுகிலினர்
கையிலுண்கெழுமுரைகொள்ளே
யுய்யவேண்டிலிறைவனறையூரிற்
செய்புஞ்சித்தீச்சரமேதவமாமே. (கo)

மெத்துலாவுமறையோர்நறையூரிற்
சித்தன்சித்தீச்சரத்தையுயர்காழி
யத்தன்பாதமணிஞானசம்பந்தன்
பத்தும்பாடப்பறையும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமி - சித்தநாதேசர் - தேவியார் - அழகம்மை.

* அன்றிநின்ற - பகைத்துநின்ற.

திருப்புகலி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விதியாய்விளைவாய்விளைவின்பயனுகிக்
கொதியாவருகூற்றையுதைத்தவர்சேரும்
பதியாவதுபங்கயநின்றலரத்தேன்
பொதியார்பொழில்சூழ்புகலிங்நகர்தானே. (க)

ஒன்னுர்புரமூன்றுமெரித்தவொருவன்
மின்னுரிடையாளொடுங்கூடியவேடந்
தன்னுலுறைவாவதுதண்கடல்சூழ்ந்த
பொன்னுர்வயற்பூம்புகலிங்நகர்தானே. (உ)

வலியின்மதிசெஞ்சடைவைத்தமணுளன்
புலியின்னதள்கொண்டனையார்த்தபுனிதன்
மலியும்பதிமாமறையோர்நிறைந்தீண்டிப்
பொலியும்புனற்பூம்புகலிங்நகர்தானே. (ங)

கயலார்தடங்கண்ணியொடும்மெருதேறி
யயலார்கடையிற்பலிகொண்டவழக
னியலாலுறையும்மிடமெண்டிசையோர்க்கும்
புயலார்கடற்பூம்புகலிங்நகர்தானே. (ச)

காதார்கனபொற்குழைதோடநிலங்கத்
தாதார்மலர்தண்சடையேறமுடித்து
* நாதானுறையும்மிடமாவதுநாளும்
போதார்பொழிற்பூம்புகலிங்நகர்தானே. (ஞ)

வலமார்படைமான்மழுவேந்தியமைந்தன்
கலமார்கடனஞ்சமுதண்டகருத்தன்
குலமார்பதிகொன்றைகள்பொன்சொரியத்தென்
புலமார்வயற்பூம்புகலிங்நகர்தானே. (சு)

கறுத்தான்கனலாமதிமூன்றையும்வேவச்
செறுத்தான்றிகழுங்கடனஞ்சமுதாக
வறுத்தானயன்றன்சிரமைந்திலுமொன்றைப்
பொறுத்தானிடம்பூம்புகலிங்நகர்தானே. (எ)

தொழிலான்மிகுதொண்டர்களேத்திரஞ்சொல்ல
வெழிலார்வரையாலன்றரக்கனீச்செற்ற
கழலானுறையும்மிடங்கண்டல்கண்மிண்டிப்
பொழிலான்மலிபூம்புகலிங்நகர்தானே. (அ)

* நாதன் - நாதான் என நீண்டது.

EFEO_TVG_149-028 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மாண்டார்சுடலைப்பொடிப்பூசிமயானத்
தீண்டாநடமாடியவேந்தன்றன்மேனி
நீண்டானிருவர்க்கெரியாயரவாரம்
பூண்டானகர்பூம்புகலிங்நகர்தானே. (கூ)

உடையார்துகில்போர்த்துழல்வார்சமண்கைய
ரடையாதனசொல்லுவராதர்களோத்தைக்
கிடையாதவன்றன்னகர்நன்மலிபூகம்
புடையார்தருபூம்புகலிங்நகர்தானே. (கூ0)

இரைக்கும்புனல்செஞ்சடைவைத்தவெம்மான்றன்
புரைக்கும்பொழிற்பூம்புகலிங்நகர்தன்மே
லுரைக்குந்தமிழ்ஞானசம்பந்தனெண்மாலை
வரைக்குந்தொழில்வல்லவர்நல்லவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குரங்கணின்முட்டம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

விழுநீர்முழுவாட்படையண்ணல்விளங்குந்
கழுநீர்குவளைம்மலரக்கயல்பாயுந்
கொழுநீர்வயல்சூழ்ந்தகுரங்கணின்முட்டந்
தொழுநீர்மையர்தீதுறுதுன்பமிலரே. (க)

விடைசேர்கொடியண்ணல்விளங்குயர்மாடக்
கடைசேர்கருமென்குளத்தோங்கியகாட்டிற்
குடையார்புனல்மல்குகுரங்கணின்முட்ட
முடையானனையாளுடையெந்தைபிரானே. (உ)

சூலப்படையான்விடையான்சுடுநீற்றன்
காலன்றனையாருயிர்வவ்வியகாலன்
கோலப்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டத்
தேலங்கமழ்புன்சடையெந்தைபிரானே. (ங்)

வாடாவிரிகொன்றைவலத்தொருகாதிற்
றோடார்குழையானலபானலநோக்கி
கூடாதனசெய்தகுரங்கணின்முட்ட
மாடாவருவாரவரன்புடையாரே. (ச)

இறையார்வளையாளையோர்பாகத்தடக்கிக்
கறையார்மிடற்றன்கரிகியகையான்
குறையார்மதிசூடிகுரங்கணின்முட்டத்
துறைவானெமையாளுடையொண்சுடரானே. (ஞ)

பலவும்பயனுள்ளனபற்றுமொழிந்தோங்
கலவம்மயில்காமுறுபேடையோடாடிக்
குலவும்பொழில்சூழ்ந்தகுரங்கணின்முட்டந்
நிலவும்பெருமானடிநித்தல்நீனங்தே. (சு)

மாடார்மலர்க்கொன்றைவளர்சடைவைத்துத்
தோடார்குழைதானொருகாதிலிலங்கக்
கூடார்மதிளெய்துகுரங்கணின்முட்டத்
தாடாரரவம்மையார்த்தமர்வானே. (எ)

மையார்நிறமேனியரக்கர்தங்கோனை
யுய்யாவகையாலடர்த்தின்னருள்செய்த
கொய்யார்மலர்சூடிகுரங்கணின்முட்டங்
கையாற்றொழுவார்வினைகாண்டலரிதே. (அ)

வெறியார்மலர்த்தாமையாளொருபா
லறியாதசைத்தேத்தவோராழலாகுங்
குறியானிமிர்ந்தான்றன்குரங்கணின்முட்டங்
நெறியாற்றொழுவார்வினைநிற்கிலாவே. (க)

கழுவார்துவராடைகலந்துமெய்போர்க்கும்
வழுவாச்சமண்சாக்கியர்வாக்கவைகொள்ளேல்
குழுமின்சடையண்ணல்குரங்கணின்முட்டத்
தெழில்வெண்பிறையானடிசேர்வதியல்வே. (கo)

கல்லார்மதிட்காழியுள்ஞானசம்பந்தன்
கொல்லார்மழுவேந்திகுரங்கணின்முட்டஞ்
சொல்லார்தமிழ்மாலைசெவிக்கினிதாக
வல்லார்க்கெளிதாம்பிறவாவகைவீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வாலீசுவரர் - தேவியார் - இறையார்வளையம்மை.

திரு இடைமருது - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒடேகலனுண்பதுமூரிநெடுச்சை
காடேயிடமாவதுகல்லானிழற்கீழ்
வாடாமுலைமங்கையுந்தானுமகிழ்ந்து
நீடாவுறைகின்றவிடைமருதீதோ. (க)

தடங்கொண்டதோர்தாமரைப்பொன்முடிதன்மேற்
குடங்கொண்டடியார்குளிர்நீர்சுமந்தார்ட்டப்

EFEO_TVG_149-029 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

படங்கொண்டதோர்பாம்பையார்த்தபர
னிடங்கொண்டிருந்தான்றனிடைமருதீதோ. (உ)

வெண்கோவணங்கொண்டொருவெண்டலையேந்தி
யங்கோல்வளையாளையோர்பாகமமர்ந்து
பொங்காவருகாவிரிக்கோலக்கரைமே
லெங்கோனுறைகின்றவிடைமருதீதோ. (ஙு)

அந்தம்மறியாதவருங்கலமுந்திக்
கந்தங்கமழ்காவிரிக்கோலக்கரைமேல்
வெந்தபொடிப்பூசியவேதமுதல்வ
னெந்தையுறைகின்றவிடைமருதீதோ. (ச)

வாசங்கமழ்மாமலர்ச்சோலையில்வண்டே
தேசம்புகுந்தீண்டியோர்செம்மையுடைத்தாய்ப்
பூசம்புகுந்தாடிப்பொலிந்தழகாய
வீசனுறைகின்றவிடைமருதீதோ. (ஞ)

வன்புற்றிளநாகமசைத்தழகாக
வென்பிற்பலமாலையும்பூண்டெருதேறி
யன்பிற்பிரியாதவளோடுமுடனு
யின்புற்றிருந்தான்றனிடைமருதீதோ. (சு)

தேக்குந்திமிலும்பலவுஞ்சுமந்துந்திப்
போக்கிப்புறம்பூசலடிப்பவருமா
லார்க்குந்திரைக்காவிரிக்கோலக்கரைமே
லேற்கவிருந்தான்றனிடைமருதீதோ. (எ)

பூவார்குழலாரகில்கொண்டுபுகைப்ப
வோவாதடியாரடியுள்குளிர்ந்தேத்த
வாவாவரக்கன்றனையாற்றலழித்த
வேவார்சிலையான்றனிடைமருதீதோ. (அ)

மூற்றாதோர்பான்மதிசூடுமுதல்வ
னற்றாமரையாளெடுமால்நயந்தேத்தப்
பொற்றேரியுந்தானும்பொலிந்தழகாக
வெற்றேயுறைகின்றவிடைமருதீதோ. (கூ)

சிறுதேரருஞ்சிலசமணும்புறங்கூற
நெறியேபலபத்தர்கள்கைதொழுதேத்த
வெறியாவருகாவிரிக்கோலக்கரைமே
லெறியார்மழுவாளனிடைமருதீதோ. (கo)

கண்ணார்கமழ்காழியுண்ணானசம்பந்த
னெண்ணூர்புகழ்மைந்தையிடைமருதின்மேற்

பண்ணேடிசைபாடியபத்தும்வல்லார்கள்
விண்ணேருலகத்தினில்வீற்றிருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மருதீசர் - தேவியார் - கற்பூரநாயகியம்மை.

திரு அன்பிலாலந்துறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கணைநீடுமாலரவம்வரைவில்லா
வினையாவெயில்மூன்றுமெரித்தவிறைவர்
பிணையாமயிலுங்குயில்சேர்மடவன்ன
மணையும்பொழிலன்பிலாலந்துறையாரே. (க)

சடையார்சதிரன்முதிராமதிருடி
விடையார்கொடியொன்றுடையெந்தைவிமலன்
கிடையாரொலியோத்தரவத்திசைக்கிள்ளை
யடையார்பொழிலன்பிலாலந்துறையாரே. (உ)

ஊரும்மரவஞ்சடைமேலுறவைத்துப்
பாரும்பலிகொண்டொலிபாடும்பரமர்
நீருண்கயலும்வயல்வாளைவராலோ
டாரும்புனலன்பிலாலந்துறையாரே. (ங)

பிறையும்மரவுமுறவைத்தமுடிமேல்
நிறையுண்டெழுவன்னியுமன்னுசடையார்
மறையும்பலவேதியரோதவொலிசென்
றறையும்புனலன்பிலாலந்துறையாரே. (ச)

நீடும்புனற்கங்கையுந்தங்கமுடிமேற்
கூடும்மலையாளொருபாகமமர்ந்தார்
மாடும்முழவம்மதிரம்மடமாத
ராடும்பதியன்பிலாலந்துறையாரே. (ஞ)

நீரூர்திருமேனியரூனமிலார்பா
லாரூர்சுவையாகியவம்பர்பெருமான்
வேரூரகிலும்மிகுசந்தனமுந்தி
யாரூர்வயலன்பிலாலந்துறையாரே. (சு)

செடியார்தலையிற்பலிகொண்டிரந்துண்
படியார்பரமன்பரமேட்டிதன்சீரைக்
கடியார்மலரும்புனல்தூவிநின்றேத்து
மடியார்தொழுமன்பிலாலந்துறையாரே. (எ)

EFEO_TVG_149-030 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விடத்தார்திகழுமிடற்றன்னட்மாடி
படத்தாரரவம்விரவுஞ்சடையாதி
கொடித்தேரிலங்கைக்குலக்கோன்வரையார
வடர்த்தாரருளன்பிலாலந்துறையாரே. (அ)

வணங்கிம்மலர்மேலயனுநெடுமாலும்
பிணங்கியறிகின்றிலர்மற்றும்பெருமை
சுணங்குமுகத்தம்மூலையாளொருபாக
மணங்குந்திகழன்பிலாலந்துறையாரே. (கூ)

தறியார்துகில்போர்த்துழல்வார்சமண்கையர்
நெறியாவுணராநிலைகேடினர்நித்தல்
வெறியார்மலர்கொண்டடிவீழுமவரை
யறிவாரவரன்பிலாலந்துறையாரே. (கo)

அரவார்புனலன்பிலாலந்துறைதன்மேற்
கரவாதவர்காழியர்ஞானசம்பந்தன்
பரவார்தமிழ்பத்திசைபாடவல்லார்போய்
விரவாகுவர்வானிடைவீடெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சத்திவாகீசர் - தேவியார் - சுவந்தரநாயகியம்மை.

சிகாழி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அடலேறமருங்கொடியண்ணல், மடலார்குழலாளொடுமன்னுங்
கடலார்புடைசூழ்தருகாழி, தொடர்வாரவர்தூநெறியாரே. (க)

நிரையார்புனல்சூடியசெல்வன், வரையார்மக்ளோடுமகிழ்ந்தான்
கரையார்புனல்சூழ்தருகாழி, நிரையார்மலர்தூவுமினின்றே. (உ)

இடியார்குரலேறுடையெந்தை, துடியாரிடையாளொடுதுன்னுங்
கடியார்பொழில்சூழ்தருகாழி, யடியாரறியாரவலம்மே. (ங)

ஒளியார்விடமுண்டவொருவன், னளியார்குழன்மங்கையொடன்பாய்
களியார்பொழில்சூழ்தருகாழி, யெளிதாமதுகண்டவரின்பே. (ச)

பனியரர்மலரார்தருபாதன், முனிதானுமையோடுமுயங்கிக்
கனியார்பொழில்சூழ்தருகாழி, யினிதாமதுகண்டவரீடே. (ஞ)

கொலையார்தருகூற்றமுதைத்து, மலையான்மகளோடுமகிழ்ந்தான்
கலையார்தொழுதேத்தியகாழி, தலையாற்றொழுவார்தலையாரே. (ட)

திருவார்சிலையாலெயிலெய்து, உருவாருமையோடுடனானன்
கருவார்பொழில்சூழ்தருகாழி, மருவாதவர்வான்மருவாரே. (எ)

அரக்கன்வலியொல்கவடர்த்து, வரைக்குமகளோடுமகிழ்ந்தான்
சுரக்கும்புனல்சூழ்தருகாழி, நிரக்குமலர்தூவுநினைந்தே. (அ)

இருவர்க்கெரியாகிநிமிர்ந்தா, னுருவிற்பெரியாளொடுசேரும்
கருநற்பரவைகமழ்காழி, மருவப்பிரியும்வினைமாய்ந்தே. (கூ)

சமண்சாக்கியர்தாமலர்தூற்ற, வமைந்தானுமையோடுடனன்பாய்க்
கமழ்ந்தார்பொழில்சூழ்தருகாழி, சுமந்தார்மலர்தூவுதல்தொண்டே. (கக)

நலமாகியஞானசம்பந்தன், கலமார்கடல்சூழ்தருகாழி
நிலையாகநினைந்தவர்பாடல், வலரானவர்வானடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - பண்- தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரையார்விரிகோவணவாடை, கரையார்விடையூர்தியுகந்தான்
விரையார்பொழில்வீழிம்மிழலை, யுரையாலுணர்வாருயர்வாரே. (க)

புனைதல்புரிபுன்சடைதன்மேற், கனைதல்லொருகங்கைகரந்தான்
வினையில்லவர்வீழிம்மிழலை, நினைவில்லவர்நெஞ்சமுநெஞ்சே. (உ)

அழவல்லவராடியும்பாடி, யெழவல்லவரெந்தையடிமேல்
விழவல்லவர்வீழிம்மிழலை, தொழவல்லவர்நல்லவர்தொண்டே. (ங)

உரவம்புரிபுன்சடைதன்மே, லரவம்மரையார்த்தவழகன்
விரவும்பொழில்வீழிம்மிழலை, பரவும்மடியாரடியாரே. (ச)

கரிதாகியநஞ்சணிகண்டன், வரிதாகியவண்டறைகொன்றை
விரிதார்பொழில்வீழிம்மிழலை, யுரிதாகினைவாருயர்வாரே. (ஞ)

சடையார்பிறையான்சரிபூதப், படையான்கொடிமேலதொர்பைங்கண்
விடையானுறைவீழிம்மிழலை, யடைவாரடியாரவர்தாமே. (ட)

செறியார்கழலுஞ்சிலம்பார்க்க, நெறியார்குழலாளொடுநின்றுன்
வெறியார்பொழில்வீழிம்மிழலை, யறிவாரவலம்மறியாரே. (எ)

வேளையாவலியொல்கவரக்கன், வேளையாவிரலூன்றியமைந்தன்
வேளையார்வயல்வீழிம்மிழலை, யேளையாவருவாரடியாரே. (அ)

மருள்செய்திருவர்மயலாக, வருள்செய்தவனூரமுலாகி
வெருள்செய்தவன்வீழிம்மிழலை, தெருள்செய்தவர்தீவினைதேய்வே.

தளங்கொள்நெறியாரவர்தொன்மை, வளங்கொள்ளன்மின்புல்லமண்டேரை
விளங்கும்பொழில்வீழிம்மிழலை, யுளங்கொள்பவர்தம்வினையோய்வே.

நளிர்காழியுண்ஞானசம்பந்தன், குளிரார்சடையானடிகூற
மிளிரார்பொழில்வீழிம்மிழலை, யிளர்பாடல்வல்லார்க்கில்லைகேடே.

திருச்சிற்றம்பலம்.

EFEO_TVG_149-031 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஷ்யாது - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கலையார்மதியோடுறநீருங், நிலையார்சடையாரிடமாகும்
மலையாரமுமாமணிசந்தோ, டலையார்புனல்சேருமையாறே. (க)

மதியொன்றியகொன்றைவடத்தன், மதியொன்றவுதைத்தவர்வாழ்வும்
மதியின்னெடுசேர்கொடிமாடம், மதியம்பயில்கின்றவையாறே. (உ)

கொக்கின்னிறகின்னெடுவெண்ணி, புக்கசடையார்க்கிடமாகுங்
திக்கின்விசைதேவர்வணங்கும், அக்கின்னரையார்ரதையாறே. (ங)

நிறைகொண்டபுரம்மவைசிந்தக்,கறைகொண்டவர்காதல்செய்கோயில்
மறைகொண்டநல்வானவர்தம்மி,லறையும்மொலிசேருமையாறே.(ச)

உமையாளொருபாகமதாகச், சமைவாரவர்சார்விடமாகும்
மமையாருடல்சோர்தரமுத்தம், மமையாவருமந்தணையாறே. (ஞ)

கலையின்றொடைமாலையணிந்து, கலிகொண்டதோர்கையினர்சேர்வா
நிலைகொண்டமனத்தவர்நித்தம், மலர்கொண்டுவணங்குமையாறே (ட)

வரமொன்றியமாமலரோன்றன், சிரமொன்றையறுத்தவர்சேர்வாம்
வரைநின்றிழிவார்தருபொன்னி, யரவங்கொடுசேருமையாறே. (எ)

வரையொன்றதெடுத்தவரக்கன், சிரமங்கெரித்தவர்சேர்வு
விரையின்மலர்மேதகுபொன்னித், திரைதன்னெடுசேருமையாறே. (அ)

சங்கத்தயனுமறியாமைப், பொங்குஞ்சுடரானவர்கோயில்
கொங்கிற்பொலியும்புனல்கொண்டு, அங்கிக்கெதிர்காட்டுமையாறே. (கூ)

துவராடையர்தோலுடையார்கள், கவர்வாய்மொழிகாதல்செய்யாதே
தவராசர்கடாமரையானே, டவர்தாமணையந்தணையாறே. (க0)

கலையார்கலிக்காழியர்மன்னன், நலமார்தருஞானசம்பந்தன்
னலையார்புனல்சூழுமையாற்றைச், சொலுமாலைவல்லார்துயர்வீடே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - செம்பொன்சோதீசுவரர் - தேவியார் - அறம்வளர்த்தநாயகியம்மை.

திருப்பணையூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரவச்சடைமேல்மதிமத்தம், விரவிப்பொலிகின்றவனூராம்
நிரவிப்பலதொண்டர்கணஞும், பரவிப்பொலியும்பணையூரே. (க)

எண்ணெஞ்நிறிணைந்தவர்தம்பா, லுண்ணின்றுமகிழ்ந்தவனூராங்
கண்ணின்றெழுசோலையில்வண்டு, பண்ணின்றெலிசெய்பணையூரே. (உ)

அலரும்மெறிசெஞ்சடைதன்மேல், மலரும்பிறையொன்றுடையானூர்
நிலரென்றுமிருந்தடிபேணப், பலரும்பரவும்பணையூரே. (ங)

இடியார்கடனஞ்சமுதுண்டு, பொடியாடியமேனியினனூ
ரடியார்தொழமன்னவரேத்தப், படியார்பணியும்பணையூரே. (ச)

அறையார்கழல்மேலரவாட, விறையார்பலிதேர்ந்தவனூராம்
பொறையார்மிகுசீர்விழமல்கப், பறையாரொலிசெய்பணையூரே. (ஞ)

அணியார்தொழவல்லவரேத்த, மணியார்மிடறொன்றுடையானூர்
தணியார்மலர்கொண்டிருபோதும், பணிவார்பயிலும்பணையூரே. (ட)

அடையாதவர்மூவெயில்சீறும், விடையான்விறலார்கரியின்ரோ
லுடையானவனெண்பலபூதப், படையானவனூர்பணையூரே. (எ)

இலகும்முடிபத்துடையானை, யலல்கண்டருள்செய்தவெம்மண்ண
லுலகில்லுயிர்நீர்நிலமற்றும், பலகண்டவனூர்பணையூரே. (அ)

வரமுன்னிமகிழ்ந்தெழுவீர்காள், சிரமுன்னடிதாழவணங்கும்
பிரமன்னெடுமாலறியாத, பரமன்னுறையும்பணையூரே. (கூ)

அழிவில்லமணரொடுதேரர், மொழிவல்லனசொல்லியபோதும்
மிழிவில்லதோர்செம்மையினனூர், பழியில்லவர்சேர்பணையூரே. (க0)

பாரார்விடையான்பணையூர்மேற், சீரார்தமிழ்ஞானசம்பந்தன்
னூரதசொன்மாலைகள்பத்தும், மூரூர்நினைவாருயர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சவுந்தரேசர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

திருமயிலாடுதுறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

கரவின்றிநன்மாமலர்கொண்டே, யிரவும்பகலுந்தொழுவார்கள்
சிரமொன்றியசெஞ்சடையார்வாழ், வரமாமயிலாடுதுறையே. (க)

உரவெங்கரியின்னுரிபோர்த்த, பரமன்னுறையும்பதியென்பர்
சுரவஞ்சுரபுன்னையும்வன்னி, மருவும்மயிலாடுதுறையே. (உ)

ஊனத்திருணீங்கிடவேண்டில், ஞானப்பொருள்கொண்டடிபேணுந்
தேனைத்தினியானமருஞ்சோர், வானம்மயிலாடுதுறையே. (ங)

அஞ்சொண்புலனுமவைசெற்ற, மைஞ்சன்மயிலாடுதுறையை
நெஞ்சொன்றிநினைந்தெழுவார்மேற், றுஞ்சும்பிணியாயின தானே. (ச)

கணியார்மதிசெஞ்சடையான்றன், னணியார்ந்தவருக்கருளென்றும்
பிணியாயினதீர்த்தருள்செய்யும், மணியான்மயிலாடுதுறையே. (ஞ)

EFEO_TVG_149-032 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தொண்டரிசைபாடியுங்கூடிக், கண்டுதிசெய்யவனூராம்
பண்டும்பலவேதியரோத, வண்டார்மயிலாடுதுறையே. (சு)

அணங்கோடொருபாகமமர்ந்து, நிணங்கியருள்செய்தவனூராம்
நுணங்கும்புரிநூலர்கள்கூடி, வணங்கும்மயிலாடுதுறையே. (எ)

சிங்கையினிலேந்தியிரந்த, பரங்கொள்பரமேட்டிவரையா
லரங்கவ்வரக்கன்வலிசெற்ற, வரங்கொண்மயிலாடுதுறையே. (அ)

ஞாலத்தைநுகர்ந்தவன்முனுங், கோலத்தயனுமறியாத
சீலத்தவனூர்சிலர்கூடி, மாலத்தீர்மயிலாடுதுறையே. (கூ)

நின்றுண்சமணுநெடுந்தேரர், றொன்றும்மறியாமையுயர்ந்த
வென்றியருளாம்வனூராம், மன்றன்மயிலாடுதுறையே. (க0)

நயர்காழியுள்ஞானசம்பந்தன், மயல்தீர்மயிலாடுதுறைமேற்
செயலாலுரைசெய்தனபத்தும்,முயர்வாமிவையுற்றுணர்வார்க்கே (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மாயூரநாதர் - தேவியார் - அஞ்சநாயகியம்மை.

திருவேட்களம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமுமாதியுமாகியவண்ணலாரழலங்கையமர்ந்திலங்க
மந்தமுழவமியம்பமலைமகள்காணநின்றுடிச்
சந்தமிலங்குருகுதலைகங்கைதண்மதியம்மயலேததும்ப
வெந்தவெண்ணீறுமெய்பூசும்வேட்களநன்னகராரே. (ச)

சடைதனைத்தாழ்தலுமேறமுடித்துச்சங்கவெண்டோடசரிந்திலங்கப்
புடைதனிற்பாரிடஞ்சூழப்போதருமாரிவர்போல்வர
ருடைதனினுலவிரற்கோவணவாடையுண்பதுமூரிடுபிச்சைவெள்ளே
விடைதனையூர்தியங்தார்வேட்களநன்னகராரே. (உ)

பூதமும்பல்கணமும்புடைசூழப்பூமியும்விண்ணுமுடன்பொருந்தச்
சீதமும்வெம்மையுமாகிச்சிரொடுநின்றவெஞ்செல்வ
ரோதமுங்கானலுஞ்சூழ்தருவேலியுள்ளங்கலந்திசையாலெழுந்த
வேதமும்வேள்வியுமோவாவேட்களநன்னகராரே. (ரு)

அரைபுல்குமைந்தலியாடல்ரவ மமையவெண்கோவணத்தோடசைத்
வரைபுல்குமார்பிலோராமைவாங்கியணிந்தவர்தஞ் [து
திரைபுல்குதெண்கடறண்கழியோதந்தேனலங்கானலில்வண்டுபெண்செ
விரைபுல்குபைம்பொழில்சூழ்ந்தவேட்களநன்னகராரே. [ய்ய
பண்ணுறுவண்டறைகொன்றையலங்கல்பால்புரைநீறுவெண்ணூல்கிட
பெண்ணுறுமார்பினர்பேணுர்மும்மதிளெய்தபெருமான் [ந்த

கண்ணுறுநெற்றிகலந்தவெண்டிங்கட்கண்ணியர்விண்ணவர்கைதொழு
வெண்ணிறமால்விடையண்ணல்வேட்களநன்னகராரே. [தேத்தும்,

கறிவளர்குன்றமெடுத்தவன்காதற்கண்கவரைங்கணையோனுடலம்
பொறிவளராரழலுண்ணப்பொங்கியபூதபுராணர்
மறிவளரங்கையர்மங்கையோர்பங்கர் மைஞ்ஞிறமானுரித்தோலுடை
வெறிவளர்கொன்றையந்தாரார்வேட்களநன்னகராரே. [யாடை

மண்பொடிக்கொண்டெரித்தோர்சுடலைமாமலைவேந்தன்மகண்மகிழ
நுண்பொடிச்சேரநின்றுடிகொய்யன்செய்யலுகந்தார்
கண்பொடிவெண்டலையோடுகையேந்திக்காலனைக்காலால்கடந்துகந்தா
வெண்பொடிச்சேர்திருமார்பர்வேட்களநன்னகராரே. [ர்

ஆழ்தருமால்கடனஞ்சினையுண்டாரமுதமமர்க்கருளிச்
சூழ்தருபாம்பரையார்த்துச்சூலமோடொண்மழுவேந்தித்
தாழ்தருபுன்சடையொன்றினைவாங்கித்தண்மதியம்மயலேததும்ப
வீழ்தருகங்கைகரந்தார்வேட்களநன்னகராரே. (அ)

திருவொளிகாணியபேதுறுகின்றதிசைமுகனுந்திசைமேலளந்த
கருவரையேந்தியமாலுங்கைதொழுகின்றதுமல்லா
லருவரையொல்கவெடுத்தவரக்கனுடெழிற்முள்களாழத்தழுந்த
வெருவுறவூன்றியபெம்மான்வேட்களநன்னகராரே. (கூ)

அத்தமண்டோய்துவராரமண்குண்டர்யாதுமல்லாவுரையேயுரைத்துப்
பொய்த்தவம்பேசுவதல்லாற்புறனுரையாதொன்றுங்கொள்ளேல்
மூத்தனவெண்முறுவல்லுமையஞ்சமூரிவல்லானையினீருரிபோர்த்த
வித்தகவேதமுதல்வர்வேட்களநன்னகராரே. (க0)

விண்ணியலமாடம்விளங்கொளிவீதிவெண்கொடியெங்கும்விரிந்திலங்
நண்ணியசீரவர்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன் [க
பெண்ணினல்லாளொருபாகமமர்ந்துபேணியவேட்களமேன்மொழிந்த
பண்ணியல்பாடல்வல்லார்கள்பழியொடுபாவமிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பசுபதீசுவரர் - தேவியார் - நல்லநாயகியம்மை.

திருவாழ்கொளிபுத்தூர் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பொடியுடைமார்பினர்போர்விடையேறிப்பூதகணம்புடைசூழக்
கொடியுடையூர்திரிதையங்கொண்டுபலபலகூறி
வடிவுடைவாணெடுங்கண்ணுமைபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
கடிகமழ்மாமலரிட்டுக்கறைமிடற்றனடிகாண்போம். (க)

EFEO_TVG_149-033 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அரைகெழுகோவணவாடையின்மேலோராடரவம்மசைத்தையம்
புரைகெழுவெண்டலையேந்திப்போர்விடையேறிப்புகழ
வரைகெழுமங்கையதாகமோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரைகமழ்மாமலர்தூவிவிரிசடையானடிசேர்வாம். (உ)

பூணெடுநாகமசைத்தனலாடிப்புன்றலையங்கையிலேந்தி
யூணிடுபிச்சையுரையமுண்டியென்றுபல்கூறி
வாணெடுங்கண்ணுமைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்ந்
தாணெடுமாமலரிட்டுத்தலைவனதாணிழல்சார்வோம். (ஊ)

தாரிடுகொன்றையோர்வெண்மதிகங்கைதாழ்சடைமேலவைசூடி
யூரிடுபிச்சைகொள்செல்வமுண்டியென்றுபல்கூறி
வாரிடுமென்முலைமாதொருபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்க்
காரிகைமாமலர்தூவிக்கறைமிடற்றனடிகாண்போம். (எ)

கனமலர்கொன்றையலங்கலிலங்கக்காதிலோர்வெண்குழையோடு
புனமலர்மாலைபுனைந்தூர்புகுதியென்றேபலகூறி
வனமுலைமாமலைமங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூ
ரினமலரேய்ந்தனதூவியெம்பெருமானடிசேர்வோம். (ஙு)

அளைவளர்நாகமசைத்தனலாடியலர்மிசையந்தணனுச்சி
கலைதலையிற்பலிகொள்ளுங்கருத்தனேகள்வனேயென்னு
வளைபொலிமுன்கைமடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தளையவிழ்மாமலர்தூவித்தலைவனதாளிணைசார்வோம். (சு)

அட்டசெவிவேழத்தினீருரிபோர்த்தழிதலையங்கையிலேந்தி
யுடலிடுபிச்சையோடையமுண்டியென்றுபல்கூறி
மடல்நெடுமாமலர்க்கண்ணியோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தடமலராயினதூவித்தலைவனதாணிழல்சார்வோம். (ஏ)

உயர்வரையொல்கவெடுத்தவரக்கனுளிர்கடகக்கையடர்த்து
வயலிடுபிச்சையோடையமார்தலையென்றடிபோற்றி
வயல்விரிநீலநெடுங்கணிபாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்ச்
சயவிரிமாமலர்தூவித்தாழ்சடையானடிசார்வோம். (அ)

கரியவனன்முகன்கைதொழுதேத்தக்காணலுஞ்சாரலுமாகா
வெரியுருவாகியுரையமிடபெலியுண்ணியென்றேத்தி
வரியரவல்குன்மடந்தையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்
விரிமலராயினதூவிவிகிர்தனசேவடிசேர்வோம். (கூ)

குண்டமணர்துவர்க்கூறைகண்மெய்யிற்கொள்கையினர்புறங்கூற
வெண்டலையிற்பலிகொண்டல்விரும்பினையென்றுவிளம்பி
வண்டமர்பூங்குழன்மங்கையோர்பாகமாயவன்வாழ்கொளிபுத்தூர்த்
தொண்டர்கள்மாமலர்தூவத்தோன்றின்றுனடிசேர்வோம். (கo)

கல்லுயர்மாக்கடனின்றுமுழங்குங்கானைபொருகாழியமூதூர்
நல்லுயர்நான்மறைஞாவினற்றமிழ்ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும்வெண்மழுவாளும்வல்லவன்வாழ்கொளிபுத்தூர்
சொல்லியபாடல்சவல்லார்துயர்கெடுதல்லெளிதாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாணிக்கவண்ணரீசுரர்-தேவியார்-வண்டார்பூங்குழலம்மை.

திருப்பாம்புரம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

சிரணிதிகழ்திருமார்பில்வெண்ணூலர்திரிபுரமெரிசெய்தசெல்வர்
வாரணிவனமுலைமங்கையோர்பங்கர்மான்மறியேந்தியமைந்தர்
காரணிமணிதிகழ்மிடறுடையண்ணல்கண்ணுதல்விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தருநான்மறையாளர்பாம்புரநன்னகராரே. (க)

கொக்கிறகோடுகூவிளமத்தங்கொன்றையொடெருக்கணிசடைய
ரக்கினெடாமைபூண்டழகாகவனலதுவாடுமெம்மடிகண்
[illegible]

மன்னுமாமலர்க்டிவிடநாளுமாமலையாட்டியுந்தாமும்
பன்னுநான்மறைகள்பாடிடவருவார்பாம்புரநன்னகராரே. (கூ)

துஞ்சுநாடுறந்துதோற்றமுமில்லாச்சுடர்விடுசோதியெம்பெருமா
னஞ்சுசேர்கண்டமூடையவென்னுதர்கள்ளிருண்டஞ்செயுமம்பர்
மஞ்சுதோய்சோலைமாமயிலாடமாளிகைதன்மேலேறிப்
பஞ்சுசேர்மெல்லடிப்பாவையர்பயிலும்பாம்புரநன்னகராரே. (ச)

நதியதனயலேநுதலைமாலைநாண்மதிசடைமிசையணிந்து
கதியதுவாகக்காளிமுன்காணக்கானிடைநடஞ்செய்தகருத்தர்
விதியதுவழுவாவேதியர்வேள்விசெய்தவரோத்தொலியோவாப்
பதியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரநன்னகராரே. (ஙு)

ஓதிநன்குணர்வார்க்குணர்வுடையொருவரொளிதிகழ்மூருவஞ்சேரொருவர்
மாதினையிடமாவைத்தவெம்வள்ளலெமான்மறியேந்தியமைந்தர்
ஆதிமீயருளென்றமரர்கள்பணியவலைகடல்கடையவன்றெழுந்த
பாதிவெண்பிறைசடைவைத்தவெம்பரமர்பாம்புரநன்னகராரே. (சு)

மாலினுக்கன்றுசக்கரமீந்துமலரவற்கொருமுகமொழித்தே
ஆலின்கீழறமோர்நால்வருக்கருளியனலதுவாடுமெம்மடிகள்

காலனைக்காய்ந்துதங்கழலடியாற்காமனைப்பொடிபடநோக்கிப்
பாலனுக்கருள்கள்செய்தவெம்மடிகள்பாம்புரான்னகராரே. (எ)

விடைத்தவல்லரக்கன்வெற்பினெடுக்கமெல்லியதிருவிரலூன்றி
யடர்த்தவன்றனக்கன்றருள்செய்தவடிகளனலதுவாடுமெம்மண்ணல்
மடக்கொடியவர்கள்வருபுனலரவம்வந்திழியரிசிலின்கரைமேற்
படப்பையிற்கொணர்ந்துபருமணிசிதறும்பாம்புரான்னகராரே. (அ)

கடிபடுகமலத்தயனெடுமாலுங்காதலோடடிமுடிதேடச்
செடிபடுவினைகள்தீர்த்தருள்செய்யுந்தீவணரெம்மூடைச்செல்வர்
மூடியுடையமர்முனிகணத்தவர்கள்முறைமுறையடிபணிந்தேத்தப்
படியதுவாகப்பாவையுந்தாமும்பாம்புரான்னகராரே. (கூ)

குண்டர்சாக்கியருங்குணமிலாதாருங்குற்றுவிட்டுடுக்கையர்தாமுங்
கண்டவாறுரைத்துக்காலநிமிர்த்துண்ணுங்கையர்தாமுள்ளவாறறியார்
வண்டுசேர்குழலிமலைமகணடுங்கவாரணமுரிசெய்துபோர்த்தார்
பண்டுகான்செய்தபாவங்கள்தீர்ப்பார்பாம்புரான்னகராரே. (கo)

பார்மலிந்தோங்கிப்பருமதிற்சூழ்ந்தபாம்புரான்னகராரைக்
கார்மலிந்தழகார்கழனிசூழ்மாடக்கழுமலமுதுபதிக்கவுணி
நாமலிந்தோங்குஞானமறைஞானசம்பந்தன்செந்தமிழ்வல்லார்

[illegible]

சுவாமியெயர் - பாம்புரேசர் - தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை.

இருப்பேணுபெருந்துறை - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பைம்மாகம்பன்மலர்க்கொன்றைபன்றிவெண்கொம்பொன்றுபூண்டு
செம்மாந்தையம்பெய்துகென்றுசொல்லிச்செய்தொழில்பேணியோர்செல்வ
ரம்மானேகையந்தளிர்மேனியரிவையோர்பாகமமர்ந்த
பெம்மானல்கியதொல்புகழாளர்பேணுபெருந்துறையாரே. (க)

மூவருமாகியிருவருமாகிமுதல்வனுமாய்நின்றமூர்த்தி
பாவங்கடீர்தருநல்வினைநல்கிப்பலகணநின்றுபணியச்
சாவமதாகியமால்வரைகொண்டுதண்மதிள்மூன்றுமெரித்த
தேவர்கள்தேவரெம்பெருமானர்தீதில்பெருந்துறையாரே. (உ)

செய்பூங்கொன்றைகூவிளமாலைசென்னியுட்சேர்புனல்சேர்த்திக்
கொய்பூங்கோதைமாதுமைபாகங்கூடியோர்பிடிடைவேடர்
கைபோனற்கலிகுலைவாழைக்காய்குலையிற்கமுகினப்
பெய்பூம்பாளைபாய்ந்திழிதேறல்பில்குபெருந்துறையாரே. (ங)

நிலனெடுவானுநீரொடுதீயும்வாயுவுமாகியோரைந்து
புலனெடுவென்றுபொய்ம்மைகடீர்த்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
நலனெடுதிங்குந்தானலதின்றிநன்கெழுசிந்தையராகி
மலனெடுமாசுமில்லவர்வாழுமல்குபெருந்துறையாரே. (ச)

பணிவாயுள்ளநன்கெழுநாவின்பத்தர்கள்பத்திமைசெய்யத்
துணியார்தங்களுள்ளமிலாதசுமடர்கள்சோதிப்பரியா
ரணியார்நீலமாகியகண்டரரிசிலுருஞ்சுகரைமேல்
மணிவாய்நீலம்வாய்கமழ்தேறல்மல்குபெருந்துறையாரே. (ஞ)

எண்ணூர்தங்கள்மும்மதிள்வேவவேவலங்காட்டியவெந்தை
விண்ணோர்சாரத்தன்னருள்செய்தவித்தகர்வேதமுதல்வர்
பண்ணூர்பாடலாடலருதபசுபதியிசனேர்பாகம்
பெண்ணுணையவார்சடையண்ணல்பேணுபெருந்துறையாரே. (கூ)

விழையாருள்ளநன்கெழுநாவில்வினைகெடவேதமாறங்கம்
பிழையாவண்ணம்பண்ணியவாற்றுற்பெரியோரேத்தும்பெருமான்
றழையார்மாவின்றுழ்கனியுந்தித்தண்* அரிசில்புடைசூழ்ந்த
குழையார்சோலைமென்னடையன்னங்கூடுபெருந்துறையாரே. (எ)

பொன்னங்கானல்வெண்டிரைசூழ்ந்தபொருகடல்வேலியிலங்கை
மன்னனெலகமால்வரையூன்றிமாமுரணகமூந்தோளு
முன்னவைவாட்டிப்பின்னருள்செய்தமுவிலேவலுடைமூர்த்தி
யன்னங்கன்னிப்பேடையோடாடியணவுபெருந்துறையாரே. (அ)

புள்வாய்போழ்ந்துமாநிலங்கிண்டபொருகடல்வண்ணனும்பூவி
னுள்வாயல்லிமேலுறைவானுமுணர்வரியானுமைகேள்வன்
முள்வாய்தாளின்றுமரைமொட்டின்முகமலரக்கயல்பாயக்
கள்வாய்நீலங்கண்மலரேய்க்குங்காமர்பெருந்துறையாரே. (கூ)

குண்டுங்தேருங்கூறைகளைந்துங்கூப்பிலர்செப்பிலராகி
மிண்டும்மிண்டர்மிண்டவைகண்டுமிண்டுசெயாதுவிரும்புந்
தண்டும்பாம்பும்வெண்டலைசூலந்தாங்கியதேவர்தலைவர்
வண்டுந்தேனும்வாழ்பொழிற்சோலைமல்குபெருந்துறையாரே. (கo)

கடையார்மாடநன்கெழுவீதிக்கழுமலவூரன்கலந்து
நடையாரின்சொல்ஞானசம்பந்தனல்லபெருந்துறைமேய
படையார்சூலம்வல்லவன்பாதம்பரவியபத்திவைவல்லர்
ருடையாராகியுள்ளமுமொன்றியுலகினில்மன்னுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமியெயர் - சிவாநந்தநாதர் - தேவியார் - மலையரசியம்மை.

* அரிசில் என்பது - ஒருநதி. அது அரிசொல்ல வந்ததினால் அரிசொல் நதியென்னு மும்பகோணபுராணத்திற் சொல்லப்படுகின்றது.

EFEO_TVG_149-035 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருக்கற்குடி - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாகமித்துத்
தடந்திரைசேர்புனல்மாதைத்தாழ்சடைவைத்தசதுர
ரிடந்திகழ்முப்புரிநூலர்துன்பமோடின்பமெல்லாங்
கடந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (க)

அங்கமோராறோடைவேள்வியானவருமறைநான்கும்
பங்கமில்பாடலோடாடல்பரிணபயின்றபடிறர்
சங்கமதார்குறமாதர்தங்கையிற்மைந்தர்கள்தாவிக்
கங்குலின்மாமதிபற்றுங்கற்குடிமாமலையாரே. (உ)

நீரகலந்தருசென்னிநீடியமத்தமும்வைத்துத்
தாரகையின்னெளிசூழ்ந்ததண்மதிசூடியசைவர்
போரகலந்தருவேடர்புனத்திடையிட்டவிறகிற்
காரகிலின்புகையும்முங்கற்குடிமாமலையாரே. (ங)

ஒருங்களிநீயிறைவாவென்றும்பர்களோலமிடக்கண்
டிருங்களமாரவிடத்தையின்னமுதுண்ணியவீசர்
மருங்களியார்பிடிவாயில்வாழ்வெதிரின்மூலைவாரிக்
கருங்களியானைகொடுக்குங்கற்குடிமாமலையாரே. (ச)

போர்மலிதிண்சிலைகொண்டுபூதகணம்புடைசூழப்
பார்மலிவேடருவாகிப்பண்டொருவர்க்கருள்செய்தா
ரேர்மலிகேழல்கிளைத்தவிண்ணெளியாமணியெங்கும்
கார்மலிவேடர்குவிக்குங்கற்குடிமாமலையாரே. (ஞ)

உலந்தவரென்பதணிந்தேபூரிடுபிச்சையராகி
விலங்கல்வில்வெங்கனலாலேமூவெயில்வேவமுனிந்தார்
நலந்தருசிங்தையராகிநாமலிமாலியனூலே
கலந்தவர்காதலில்வாழுங்கற்குடிமாமலையாரே. (ட)

மானிடமார்தருகையர்மாமுவாரும்வலத்தா
ரூனிடையார்தலையோட்டிலுண்கலனதுகந்தார்
தேனிடையார்தருசந்தின்றிண்சிறையாலிதினைவித்திக்
கானிடைவேடர்விளைக்குங்கற்குடிமாமலையாரே. (எ)

வாளமர்வீரரினைந்தவிராவணன்மாமலையின்கீழ்த்
தோளமர்வன்றலைகுன்றத்தொல்விரலூன்றுதுணைவர்
தாளமர்வேய்தலைப்பற்றித்தாழ்கரிவிட்டவிசைபோய்க்
காளமதார்முகில்கீறுங்கற்குடிமாமலையாரே. (அ)

தண்டமர்தாமரையானுந்தாவியிம்மண்ணையளந்து
கொண்டவனும்மறிவொண்ணுக்கொள்கையர்வெள்விடையூர்வர்

வண்டிசையாயினபாடநீடியவார்பொழினீழற்
கண்டமர்மாமயிலாடுங்கற்குடிமாமலையாரே. (கூ)

மூத்தவராடையினுருமூசுகருப்பொடியாரு
நாத்துவர்பொய்ம்மொழியார்கணயமிலராமதிவைத்தா
ரேத்துயர்பத்தர்கள்சித்தரிறைஞ்சவவரிடமெல்லாங்
காத்தவர்காமருசோலைக்கற்குடிமாமலையாரே. (கo)

காமருவார்பொழில்சூழுங்கற்குடிமாமலையானை
நாமருவண்புகழ்காழிநலந்திகழ்ஞானசம்பந்தன்
பாமருசெந்தமிழ்மாலைபத்திவைபாடவல்லார்கள்
பூமலிவானவரோடும்பொன்னுலகிற்பொலிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமியைர் - மூத்தீசர் - தேவியார் - அஞ்சனகுயிமை.

திருப்பாச்சிலாச்சிராமம் - முயலகன்றீர்த்தது-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

துணிவளர்திங்கள்துளங்கிவிளங்கச்சுடர்ச்சடைசுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர்பாரிடஞ்சூழவாரிடமும்பலிதேர்வ
ரணிவளர்கோலமெலாஞ்செய்துபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மணிவளர்கண்டரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே. (க)

கலைபுனைமானுரிதோலுடையாடைகனல்சுடராலிவர்கண்கள்
தலையணிசென்னியர்தாரணிமார்பர்தம்மடிகள்ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில்சூழ்ந்தமர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
விலைபுனைவேலரோவேழையைவாடவிடர்செய்வதோரிவரீடே. (உ)

வெஞ்சுடராதுவர்துஞ்சிருண்மாலைவேண்டுவர்பூண்பதுவெண்ணூல்
நஞ்சடைகண்டர்நெஞ்சிடமாகநண்ணுவர்நம்மைநயந்து
மஞ்சடைமாளிகைசூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோபந்தொடிவாடச்சிதைசெய்வதோவிவர்சிரே.

கனமலர்க்கொன்றையலங்கலிலங்கக்கனல்தருதூமதிக்கண்ணி
புனமலர்மாலையணிந்தழகாய்புனிதர்கொலாமிவரென்ன
வனமலிவண்பொழில்சூழ்தருபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
மனமலிமைந்தரோமங்கையைவாடமயல்செய்வதோவிவர்மாண்பே.

மாந்தர்தம்பாலதுநெய்மகிழ்ந்தாடிவளர்சடைமேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல்தாளமோர்வீணைமுதிரவோர்வாய்முரிபாடி
யாந்தைவிழிச்சிறுபூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சாந்தணிமார்பரோதையலேவாடச்சதுர்செய்வதோவிவர்சார்வே. (டு)

EFEO_TVG_149-036 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நீறுமெய்பூசிநிறைசடைதாழநெற்றிக்கண்ணலுற்றுநோக்கி
யாறதுசூடியாடரவாட்டியைவிரற்கோவணவாடை
பாறருமேனியர்பூதத்தர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
வேறதுவேறியரேழையைவாடவிடர்செய்வதோவிவரீரே. (சு)

பொங்கிளகாகமொரேகவடத்தோடாமைவெண்ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலைபுனைந்தழகாயகுழகர்கொலாமிவரென்ன
வங்கிளமங்கையோர்பங்கினர்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோதாழ்குழல்வாடச்சதிர்செய்வதோவிவர்சார்வே.

ஏவலத்தால்விசயற்கருள்செய்தெயிராவணனையிடபித்து
மூவரிலும்முதலாய்நடுவாயமூர்த்தியையன்றிமொழியாள்
யாவர்களும்பரவும்மெழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
தேவர்கள்தேவரோசேயிழைவாடச்சிதைசெய்வதோவிவர்சார்வே.

மேலதுகான்முகனெய்தியதில்லைக்கீழதுசேவடிதன்னை
நீலதுவண்ணமெய்தியதில்லையெனவிவர்நின்றதுமல்லா
லாலதுமாமதிதோய்பொழிற்பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பாலதுவண்ணரோபைந்தொடிவாடப்பழிசெய்வதோவிவர்பண்பே.

நாணெடுகூடியசாயினரேனுநகுவரவரிருபோது
மூணெடுகூடியவுட்குந்தகையாருரைகளைவைகொளவேண்டா
வாணெடுபெண்வடிவாயினபாச்சிலாச்சிராமத்துறைகின்ற
பூணெடுமார்பரோபூங்கொடிவாடப்புனைசெய்வதோவிவர்பொற்பே.

அகமலியன்பொடுதொண்டர்வணங்கப்பாச்சிராமத்துறைகின்ற
புகைமலிமாலைபுனைந்தழகாயபுனிதர்கொலாமிவரென்ன
நகைமலிதண்பொழில்சூழ்தருகாழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
றகைமலிதண்டமிழ்கொண்டிவையேத்தச்சாரகிலாவினைதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

முயலகன்-என்பது ஒருவிதவலிநோய், இது ஒருராசன்மகளுக்குக்கண்டிருந்து
இந்தத் திருப்பதிகமோதி யருளினவளவில் தீர்ந்தது.
சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-மாற்றறிவரதர்-தேவியார்-பாலசுந்தராயகியம்மை.

திருப்பழையனூர்-திருஆலங்காடு-பண்-தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அஞ்சவருவாருந்தொழுவிப்பாரும்வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னைநினைவிப்பாருமுனைநட்பாய்
வஞ்சப்படித்தொருத்திவாளுள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (க)

கேடும்பிறவியுமாக்கினருங்கேடிலா
வீடுமாகெறிவிளம்பினரெம்விகிர்தனர்
காடுஞ்சுடலையுங்கைக்கொண்டல்லிற்கணப்பேயோ
டாடும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (உ)

கந்தங்கமழ்கொன்றைக்கண்ணிசூடிகனலாடி
வெந்தபொடிநீற்றைவிளங்கப்பூசும்விகிர்தனர்
கொந்தண்பொழிற்சோலையரவிற்முன்றிக்கொடல்பூத்
தந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ஊ)

பாலவெண்மதிசென்னிபடரச்சூடிப்பழியோராக்
காலனுயிர்செற்றகாலனுயகருத்தனர்
கோலம்பொழிற்சோலைப்பெடையோடாடிமட்மஞ்ஞை
யாலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (ச)

ஈர்க்கும்புனல்சூடியிளவெண்டிங்கள்முதிரவே
பார்க்குமரவம்பூண்டாடிவேடம்பயின்முருங்
கார்க்கொள்கொடிமுல்லைகுருந்தமேறிக்கருந்தேன்மொய்த்
தார்க்குஞ்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (டு)

[redacted]

நுணங்குமறைபாடியாடிவேடம்பயின்முருு
மிணங்குமலைமகளோடிருகூருறைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர்வைகலேத்தும்வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (எ)

கணையும்வரிசிலையுமெரியுங்கூடிக்கவர்ந்துண்ண
விணையிலெயில்மூன்றுமெரித்திட்டாரெம்மிறைவனூர்
பிணையுஞ்சிறுமறியுங்கலையுமெல்லாங்கங்குல்சேர்ந்
தணையும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (அ)

கவிழமலைதளரக்கடகக்கையாலெடுத்தான்முருள்
பவழநுனைவிரலாற்பையவூன்றிப்பரிந்தாருந்
தவழுங்கொடிமுல்லைபுறவஞ்சேரநறவம்பூத்
தவிழும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கூ)

பகலுமிரவுஞ்சேர்பண்பினருருண்போரா
திகலுமிருவர்க்குமெரியாய்த்தோன்றிநிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடுவல்லார்க்கென்றுந்தியபோ
யகலும்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கூ)

EFEO_TVG_149-037 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

போழம்பலபேசிப்போதுசாத்தித்திரிவாரும்
வேழம்வருமளவும்வெயிலேதுற்றித்திரிவாரும்
கேழல்வீணைபோகக்கேட்பிப்பாருங்கேடிலா
வாழ்வர்பழையனூராலங்காட்டெம்மடிகளே. (கக)

சாந்தங்கமழ்மறுகிற்சண்பைஞானசம்பந்த
னந்தண்பழையனூராலங்காட்டெம்மடிகளே
வேந்தனருளாலேவிரித்தபாடலிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந்தீர்த்தமாகச்சேர்வாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஊர்த்தாண்டவேசுரர் - தேவியார் - வண்டார்குழலியம்மை.

திரு அதிகை - வீரட்டானம் - பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

குண்டைக்குறட்பூதங்குழுமவனலேந்திக்
கெண்டைப்பிறழ்தெண்ணீர்க்கெடிலவடபக்கம்
[redacted]
சுரும்புண்விரிகொன்றைச்சுடர்பொற்சடைதாழ
விரும்புமதிகையுளாடும்வீரட்டானத்தே. (உ)

ஆடலழகமரைக்கிட்டசைத்தாடப்
பாடன்மறைவல்லான்படுதம்பலிபெயர்வான்
மாடமுகட்டின்மேன்மதிதோயதிகையுள்
வேடம்பலவல்லானும்வீரட்டானத்தே. (ஊ)

எண்ணரியிலெய்தானிறைவனனலேந்தி
மண்ணுர்முழவதிரமுதிராமதிரூடிப்
பண்ணுர்மறைபாடப்பரமனதிகையுள்
விண்ணுர்பரவநின்றுடும்வீரட்டானத்தே. (எ)

கரிபுன்புறமாயகழிந்தாரிடுகாட்டிற்
றிரிநின்றுருகையாற்றிருவாமதிகையு
ளெரியேந்தியபெருமானெரிபுன்சடைதாழ
விரியும்புனல்சூடியாடும்வீரட்டானத்தே. (டு)

துளங்குஞ்சுடரங்கைத்துதையவிளாயாடி
இளங்கொம்பனசாயலுமையோடிசைபாடி

வளங்கொள்புனல்சூழ்ந்தவயலாரதிகையுள்
விளங்கும்பிறைசூடியாடும்வீரட்டானத்தே. (கூ)

பாதம்பலரேத்தப்பரமன்பரமேட்டி
பூதம்புடைசூழப்புலித்தோலுடையாகக்
கீதமுமைபாடக்கெடிலவடபக்கம்
வேதமுதல்வனின்றுடும்வீரட்டானத்தே. (எ)

கல்லார்வரையரக்கன்றடந்தோள்கவின்வாட
வொல்லையடர்த்தவனுக்கருள்செய்ததிகையுட்
பல்லார்பருவாயகுவெண்டலைசூடி
வில்லாலெயிலெய்தானுடும்வீரட்டானத்தே. (அ)

நெடியானுன்முகனுநிமிர்ந்தானைக்காண்கிலார்
பொடியாடுமார்பானைப்புரிநூலுடையானைக்
கடியார்கழுநீலம்மலருமதிகையுள்
வெடியார்தலையேந்தியாடும்வீரட்டானத்தே. (கூ)

அரையோடலர்பிண்டிமருவிக்குண்டிகை
சுரையோடுடனேந்தியுடைவிட்டுழல்வார்க
ளுரையோடுரையொவ்வாதுமையோடனுகி
விரைதோயலர்தாராளுடும்வீரட்டானத்தே. (கஎ)

ஞாழல்கமழ்காழிஞானசம்பந்தன்
வேழம்பொருதெண்ணீரதிகைவீரட்டானத்துச்
சூழுங்கழலானைச்சொன்னதமிழ்மாலை
வாழுந்துணையாகநினைவார்வினையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுகாட்டில் - கெடிலநதிக்கு வடபக்கத்திலிருக்கின்றது.

திரிபுரவிசயஞ்செய்த வீரட்டானம்.

சுவாமிபெயர் - அதிகைநாதர் வீரட்டானேசுவரர் - தேவியார் - திருவதிகைநாயகி.

திருச்சிரபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பல்லடைந்தவெண்டலையிற்பலிகொள்வதன்றியும்போய்
வில்லடைந்தபுருவநல்லாள்மேனியில்வைத்தலென்னே
சொல்லடைந்ததொன்மறையோடங்கங்கலைகளெல்லாம்
செல்லடைந்தசெல்வர்வாழுஞ்சிரபுரமேயவனே. (க)

கொல்லைமுல்லைநகையினுளோர்கூறதுவன்றியும்போ
யல்லல்வாழ்க்கைப்பலிகொண்டுண்ணுமாதரவென்னைகொலாஞ்

EFEO_TVG_149-038 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சொல்லரீண்டபெருமையாளர்தொல்கலிகற்றவல்லார்
செல்லரீண்டசெல்வமல்குசிரபுரமேயவனே. (உ)

நீரடைந்தசடையின்மேலோர்நிகழ்மதியன்றியும்போ
யூரடைந்தவேறதேறியுண்பலிகொள்வதென்னே
காரடைந்தசோலைசூழ்ந்தகாமரம்வண்டிசைப்பச்
சீரடைந்தசெல்வமோங்குசிரபுரமேயவனே. (ஊ)

கையடைந்தமானினேகொரரவன்றியும்போய்
மெய்யடைந்தவேட்கையோடுமெல்லியல்வைத்ததென்னே
கையடைந்தகளைகளாகச்செங்கழுநீர்மலர்கள்
செய்யடைந்தவயல்கள்சூழ்ந்தசிரபுரமேயவனே. (ரு)

புரமெரித்தபெற்றியோடும்போர்மதயானைதன்னைக்
கரமெடித்துத்தோலுரித்தகாரணமாவதென்னே
மரமுரித்ததோலுடுத்தமாதவர்தேவரோடுஞ்
சிரமெடுத்தகைகள்கூப்புஞ்சிரபுரமேயவனே. (டு)

கண்ணுமூன்றுமுடையதன்றிக்கையினில்வெம்மழுவும்
பண்ணுமூன்றுவீணையோடுபாம்புடன்வைத்ததென்னே
எண்ணுமூன்றுகனலுமோம்பியெழுமையும்விழுமியராய்த்
திண்ணமூன்றுவேள்வியாளர்சிரபுரமேயவனே. (சு)

குறைபடாதவேட்கையோடுகோல்வளையாளொருபாற்
பொறைபடாதவின்பமோடுபுணர்தருமெய்ம்மையென்னே
இறைபடாதமென்முலையார்மாளிகைமேலிருந்து
சிறைபடாதபாடலோங்குசிரபுரமேயவனே. (எ)

மலையெடுத்தவாளரக்கன்ஞ்சவொருவிரலால்
நிலையடுத்தகொள்கையானேநின்மலனேநினைவார்
துலையடுத்தசொற்பயில்வார்மேதகுவீதிதோறுஞ்
சிலையெடுத்ததோளினனேசிரபுரமேயவனே. (அ)

மாலினேடுமலரினுயும்வந்தவர்காணாது
சாலுமஞ்சப்பண்ணிரீண்டதத்துவமேயதென்னே
நாலுவேதமோதலர்கள்நந்துணையென்றிறைஞ்சச்
சேலுமேயுங்கழனிசூழ்ந்தசிரபுரமேயவனே. (க)

புத்தரோசெமணர்சொற்கள்புறனுரையென்றிருக்கும்
பத்தர்வந்துபணியவைத்தபான்மையதென்னைகொலாம்
மத்தயானையுரியும்போர்த்துமங்கையொடும்மூடனே
சித்தர்வந்துபணியுஞ்செல்வச்சிரபுரமேயவனே. (கக)

தெங்கரீண்டசோலைசூழ்ந்தசிரபுரமேயவனை
யங்கரீண்டமறைகள்வல்லவணிகொள்சம்பந்தனுரை

பங்கரீங்கப்பாடவல்லபத்தர்கள்பாரிதன்மேற்
சங்கமோடுவீடிவாழ்வர்தன்மையினுலவரே. (ககூ)

திருச்சிற்றம்பலம்.

சிரபுரமென்பதனுஞ் சேர்த்துக்கொருபெயர்.

திருச்சேய்ஞலூர் -பண் -பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நூலடைந்தகொள்கையாலேநுன்னடிகூடுதற்கு
மாலடைந்தநால்வர்கேட்கநல்கியாலறத்தை
யாலடைந்தரீழல்மேவியருமறைசொன்னதென்னே
சேலடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. (க)

நீறடைந்தமேனியின்கணேரிழையாளொருபாற்
கூறடைந்தகொள்கையன்றிக்கோலவளர்சடைமே
லாறடைந்தகங்கள்சூடியரவமணிந்ததென்னே
சேறடைந்ததண்கழனிச்சேய்ஞலூர்மேயவனே. (உ)

ஊனடைந்தவெண்டலையினேபலிதிரிந்து
கானடைந்தபேய்களோடுபூதங்கலந்துடனே
மானடைந்தநோக்கிகாணமகிழ்ந்தெரியாடலென்னே
தேனடைந்தசோலைமல்குசேய்ஞலூர்மேயவனே. (ரு)

வீணடைந்தமும்மதிஞம்மின்மலையாவரவி
ணுணடைந்தவெஞ்சரத்தால்நல்லெரியூட்டலென்னே
பாணடைந்தவண்டுபாடும்பைம்பொழில்சூழ்ந்தழகார்
சேணடைந்தமாடமல்குசேய்ஞலூர்மேயவனே. (சு)

பேயடைந்தகாடிடமாப்பேணுவதன்றியும்போய்
வேயடைந்ததோளியஞ்சவேழமுரித்ததென்னே
வாயடைந்தநான்மறையாறங்கமோடைவேள்வி
தியடைந்தசெங்கையாளர்சேய்ஞலூர்மேயவனே. (எ)

காடடைந்தவேனமொன்றின்காரணமாகிவந்து
வேடடைந்தவேடனுகிவிசயனெடெய்ததென்னே
கோடடைந்தமால்களிற்றுக்கோச்செங்கணுற்கருள்செய்
சேடடைந்தசெல்வர்வாழுஞ்சேய்ஞலூர்மேயவனே. (அ)

பிரடைந்தபாலதாட்டப்பேணுதவன்றுதை
வேரடைந்துபாய்ந்ததாளைவேர்தடிந்தான்றனக்குத்
தாரடைந்தமாலைசூட்டித்தலைமைவருத்ததென்னே
சிரடைந்தகோயில்மல்குசேய்ஞலூர்மேயவனே. (க)

மாவடைந்தேரரக்கன்வலிதொலைவித்தவன்ற
னுவடைந்தபாடல்கேட்டுநயந்தருள்செய்ததென்னே
பூவடைந்தநான்முகன்போற்பூசுரர்போற்றிசெய்யுஞ்
சேவடைந்தவூர்தியானேசேய்ஞலூர்மேயவனே. (அ)

காரடைந்தவண்ணனேடுகனகமலினயானும்
பாரிடந்தும்விண்பறந்தும்பரந்தமுடிகாணர்
சீரடைந்துவந்துபோற்றச்சென்றருள்செய்ததென்னே
தேரடைந்தமாமறுகிற்சேய்ஞலூர்மேயவனே. (கூ)

மாசடைந்தமேனியாருமனந்திரியாதகஞ்சி
நேசடைந்தவுணனருநேசமிலாததென்னே
வீசடைந்ததோகையாடவிரைகமழும்பொழில்வாய்
தேசடைந்தவண்டுபாடுஞ்சேய்ஞலூர்மேயவனே.

சேயடைந்தசேய்ஞலூரிற்செல்வன்சிர்பரவித்
தோயடைந்ததண்வயல்சூழ்தோணிபுரத்தலிவன்
சாயடைந்தஞானமல்குசம்பந்தனின்னுரைகள்
வாயடைந்துபாடவல்லார்வானுலகாள்பவரே.

திருச்சிற்

சோழநாட்டில்- சுப்பிரமணியசுவாமியினுண்டானதலம்.

சுவாமிபெயர்-சத்தகிரீசுவரர்-தேவியார்-சகிதேவிநாயகியம்மை.

திருநள்ளாறு - பண் - பழந்தக்கராகம்.

பச்சைத்திருப்பதிகம்.

இது- சமணர்கள் வாதின்பொருட்டுத்தீயிலிட்டபோது வேகாதிருந்தது.

திருச்சிற்றம்பலம்.

போகமார்த்தபூண்முலையாள்தன்னுடம்பொன்னகலம்
பாகமார்த்தபைங்கண்வெள்ளேற்றண்ணல்பரமேட்டி
யாகமார்த்ததோலுடையன்கோவணவாடையின்மேல்
நாகமார்த்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (க)

தோடுடையகாதுடையன்றேலுடையன்தொலையாப்
பீடுடையபோர்விடையன்பெண்ணுமோர்பாலுடைய
னேடுடையமேலுலகோடேழ்கடலுஞ்சூழ்ந்த
நாடுடையநம்பெருமான்மேயதுநள்ளாறே. (உ)

ஆன்முறையாலாற்றவெண்ணீருடியணியிழையோர்
பான்முறையால்வைத்தபாதம்பத்தர்பணிந்தேத்த
மான்மறியும்வெண்மழுவுஞ்சூலமும்பற்றியகை
நான்மறையானம்பெருமான்மேயதுநள்ளாறே. (ஈ)

புல்கவல்லவார்சடைமேற்பூம்புனல்பெய்தயலே
மல்கவல்லகொன்றைமாலைமதியோடுடன்சூடிப்
பல்கவல்லதொண்டர்தம்பொற்பாதநிழற்சேர
நல்கவல்லநம்பெருமான்மேயதுநள்ளாறே. (ச)

ஏறுதாங்கியூர்திபேணியேர்கொளிளமதிய
மாறுதாங்குஞ்சென்னிமேலோராடரவஞ்சூடி
நீறுதாங்கிநூல்கிடந்தமார்பினிரைகொன்றை
நாறுதாங்குநம்பெருமான்மேயதுநள்ளாறே. (டு)

திங்களுச்சிமேல்விளங்குந்தேவனிமையோர்க
ளெங்களுச்சியெம்மிறைவனென்றடியேயிறைஞ்சத்
தங்களுச்சியால்வணங்குந்தன்னடியார்கட்கெல்லா
நங்களுச்சிநம்பெருமான்மேயதுநள்ளாறே. (சு)

வெஞ்சுடர்த்தீயங்கையேந்திவிண்கொள்முழவதிர
வஞ்சிடத்தோராடல்பாடல்பேணுவதன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர்திங்கள்சூடித்திகழ்தருகண்டத்துள்ளே
நஞ்சடைந்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (எ)

சிட்டமார்ந்தமும்மதிலுஞ்சிலைவரைதீயம்பினற்
சுட்டுமாட்டிச்சுண்ணவெண்ணீறுடுவதன்றியும்போய்ப்
பட்டமார்ந்தசென்னிமேலோர்பான்மதியஞ்சூடி
நட்டமாடுநம்பெருமான்மேயதுநள்ளாறே. (அ)

உண்ணலாகாநஞ்சுகண்டத்துண்டிடனேயொடுக்கி
யண்ணலாகாவண்ணனீழலாரழல்போலுருவ
மெண்ணலாகாவுள்வினையென்றெள்கவலித்திருவர்
நண்ணலாகாநம்பெருமான்மேயதுநள்ளாறே. (கூ)

மாசுமெய்யர்மண்டைத்தேரர்குண்டர்குணமிலிகள்
பேசும்பேச்சைமெய்யென்றெண்ணியந்நெறிசெல்லன்மின்
மூசுவண்டார்கொன்றைசூடிமும்மதிலும்மூடனே
நாசஞ்செய்தநம்பெருமான்மேயதுநள்ளாறே. (கo)

தண்புனலும்வெண்பிறையுந்தாங்கியதாழ்சடையன்
நண்புநல்லார்மல்குகாழிஞான்சம்பந்தனல்ல
பண்புநள்ளாறேத்துபாடல்பத்துமிவைவல்லா
ருண்புநீங்கிவானவரோடுலகிலுறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ள சப்தவியாகர் தலங்களிலொன்று.

சுவாமிபெயர்-தெர்ப்பாரணியர்-தேவியார்-போகமார்த்தபூண்முலையம்மை.

EFEO_TVG_149-040 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருவலிவலம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒல்லையாறியுள்ளமொன்றிக்கள்ளமொழிந்துவெய்ய
சொல்லையாறித்தூய்மைசெய்துகாமவினையகற்றி
நல்லவாறேபுன்றலைமாலினவின்றேத்த
வல்லவாறேவந்துநல்காய்வலிவலமேயவனே. (க)

இயங்குகின்றவிரவிதிங்கள்மற்றுநற்றேவரெல்லாம்
பயங்களாலேபற்றிநின்பாற்சித்தந்தெளிகின்றிலர்
தயங்குசோதிசாமவேதாகாமனைக்காய்ந்தவனே
மயங்குகின்றேன்வந்துநல்காய்வலிவலமேயவனே. (உ)

பெண்டிர்மக்கள்சுற்றமென்னும்பேதைப்பெருங்கடலை
விண்டுபண்டேவாழமாட்டேன்வேதனோய்நலியக்
கண்டுகண்டேயுன்றனைமங்காதலிக்கின்றதுள்ளம்
வண்டுகிண்டிப்பாடுஞ்சோலைவலிவலமேயவனே. (ங)

மெய்யராகிப்பொய்மைநீக்கிவேதனையைத்துறந்து
செய்யரானுஞ்சிந்தையானேதேவர்குலக்கொழுந்தே
கையனையேனுன்றனைமங்காதுகவிற்றுகின்றேன்
வையமுன்னேவந்துநல்காய்வலிவலமேயவனே. (ச)

துஞ்சும்போதுந்தும்போதுஞ்சொல்லுவனுன்றிறமே
தஞ்சமில்லாத்தேவர்வந்துன்றாளிணைக்கீழ்ப்பணிய
நஞ்சையுண்டாய்க்கென்செய்கேனெனாளுநினைந்தடியேன்
வஞ்சமுண்டென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (ஞ)

புரிசடையாய்புண்ணியனேநண்ணலார்மூவெயிலு
மெரியவெய்தாயெம்பெருமானென்றிமையோர்பரவுங்
கரியுரியாய்காலகாலாநீலமணிமிடற்று
வரியரவாவந்துநல்காய்வலிவலமேயவனே. (ட)

தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியே
னுயுகின்பாலன்புசெய்வானுதரிக்கின்றதுள்ள
மாயமாயகாயந்தன்னுளோர்நின்றொன்றலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (எ)

நீரொடுங்குஞ்செஞ்சடையாய்நின்னுடையபொன்மலையை
வேரொடும்பிழுந்தேந்தலுற்றவேந்தனிராவணனைத்
தேரொடும்போய்வீழ்ந்தலறத்திருவிரலாலடர்த்த
வாரொடுங்குங்கொங்கைபங்காவலிவலமேயவனே. (அ)

ஆதியாயநான்முகனுமாலுமறிவரிய
சோதியானேநீதியிலேனென்சொல்லுவதுன்றிறமே
யோதிநாளுமுன்னியேத்துமென்னினையவலம்
வாதியாமேவந்துநல்காய்வலிவலமேயவனே. (ஈ)

பொதியிலானேபூவணத்தாய்பெரும்பிறங்குயிலைப்
பதியிலானேபத்தர்சித்தம்பற்றுவிடாதவனே
விதியிலாதார்வெஞ்சமணர்சாக்கியரென்றிவர்கண்
மதியிலாதரென்செய்வாரோவலிவலமேயவனே. (கஅ)

வன்னிகொன்றைமத்தஞ்சூடும்வலிவலமேயவனைப்
பொன்னிகாடன்புகலிவேந்த[illegible]சம்பந்தன்சொன்ன
பன்னுபாடல்பத்தும்வல்லார்மெய்த்தவத்தோர்விரும்பு
மன்னுசோதியடிசேடமன்னியிருப்பரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டில் காவேரிக்குத் தென்கரையிலுள்ளது.

சுவாமிதிருநாமம் - மனத்துணைநாதர் - தேவிதிருநாமம் - மாலையங்கண்ணியம்மை.

திருச்சோபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கணானையீருரிவைபோர்த்துவிளங்குமொழி
மங்கைபாகம்வைத்தமைந்தமான்பதுவென்னைகொலாங்
கங்கையோடுதிங்கள்சூடிக்கடிகமழுங்கொன்றைத்
தொங்கலானதூபநீற்றுச்சோபுரமேயவனே.

விடையமர்ந்துவெண்மழுவொன்றேந்திவிரிந்திலங்கு
சடையொடுங்கத்தன்புனலைத்தாங்கியதென்னைகொலாங்
கடையுயர்ந்தமும்மதிலுங்காய்ந்தனலுள்ளழுந்தத்
தொடைநெகிழ்ந்தவெஞ்சிலையாய்சோபுரமேயவனே.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருளிச்செய்த

தாயுநீயேதந்தைநீயேசங்கரனேயடியே
னுயுகின்பாலன்புசெய்வானுதரிக்கின்றதுள்ள
மாயமாயகாயந்தன்னுளோர்நின்றொன்றலொட்டார்
மாயமேயென்றஞ்சுகின்றேன்வலிவலமேயவனே. (எ)

நீரொடுங்குஞ்செஞ்சடையாய்நின்னுடையபொன்மலையை
வேரொடும்பிழுந்தேந்தலுற்றவேந்தனிராவணனைத்
தேரொடும்போய்வீழ்ந்தலறத்திருவிரலாலடர்த்த
வாரொடுங்குங்கொங்கைபங்காவலிவலமேயவனே. (அ)

ஆதியாயநான்முகனுமாலுமறிவரிய
சோதியானேநீதியிலேனென்சொல்லுவதுன்றிறமே
யோதிநாளுமுன்னியேத்துமென்னினையவலம்
வாதியாமேவந்துநல்காய்வலிவலமேயவனே. (ஈ)

பொதியிலானேபூவணத்தாய்பெரும்பிறங்குயிலைப்
பதியிலானேபத்தர்சித்தம்பற்றுவிடாதவனே
விதியிலாதார்வெஞ்சமணர்சாக்கியரென்றிவர்கண்
மதியிலாதரென்செய்வாரோவலிவலமேயவனே. (கஅ)

வன்னிகொன்றைமத்தஞ்சூடும்வலிவலமேயவனைப்
பொன்னிகாடன்புகலிவேந்த[illegible]சம்பந்தன்சொன்ன
பன்னுபாடல்பத்தும்வல்லார்மெய்த்தவத்தோர்விரும்பு
மன்னுசோதியடிசேடமன்னியிருப்பரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டில் காவேரிக்குத் தென்கரையிலுள்ளது.

சுவாமிதிருநாமம் - மனத்துணைநாதர் - தேவிதிருநாமம் - மாலையங்கண்ணியம்மை.

திருச்சோபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வெங்கணானையீருரிவைபோர்த்துவிளங்குமொழி
மங்கைபாகம்வைத்தமைந்தமான்பதுவென்னைகொலாங்
கங்கையோடுதிங்கள்சூடிக்கடிகமழுங்கொன்றைத்
தொங்கலானதூபநீற்றுச்சோபுரமேயவனே.

விடையமர்ந்துவெண்மழுவொன்றேந்திவிரிந்திலங்கு
சடையொடுங்கத்தன்புனலைத்தாங்கியதென்னைகொலாங்
கடையுயர்ந்தமும்மதிலுங்காய்ந்தனலுள்ளழுந்தத்
தொடைநெகிழ்ந்தவெஞ்சிலையாய்சோபுரமேயவனே.

EFEO_TVG_149-041 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தீயராய்வல்லரக்கர்செற்றமதனுள்ளழுந்தச்
சாயவெய்துவானவரைத்தாங்கியதென்னேகொலாம்
பாயும்வெள்ளோயேற்றையேறிப்பாய்புலித்தோலுடுத்துத்
தூயவெள்ளோநீற்றினானேசோபுரமேயவனே.

பல்லிலோடுகையிலேந்திப்பல்கடையும்பலிதேர்ந்
தல்லலவாழ்க்கைமேலதானவராகவென்னேகொலாம்
வில்லிவென்றதுண்புருவவெங்கண்ணிமையோடுக்
கொல்லையூழியாகின்றாய்சோபுரமேயவனே.

நாற்றமிக்கதொன்றைதன்றுசெஞ்சடைமேன்மதிய
மேற்றமாகவைத்துகந்தகாரணமென்னேகொலா
மூற்றமிக்கதாலன்றன்னேயொல்கவுதைத்தருளித்
தோற்றமீறுமாகின்றாய்சோபுரமேயவனே.

கொன்னவின்றமூவிலைவேற்கூர்மழுவாட்படையாற்
பொன்னெவென்றகொன்றைமாலைசூழும்பொற்
மன்னமன்னமென்னடையாள்பாகமமர்ந்தரைசோ
தன்னவண்ணவாடையினாய்சோபுரமேயவனே.

குற்றமின்மையுண்மைநீயென்றுன்னடியார்பணிவார்
கற்றகேள்விஞானமானகாரணமென்னேகொலாம்
வற்றலாமைமவாளரவம்பூண்டயன்வெண்டலையிற்
றுற்றலானகொள்கையாதானேசோபுரமேயவனே.

விலங்கலொன்றுவெஞ்சிலையாக்கொண்டுவிறலரக்கர்
குலங்கள்வாழ்மூமெரித்தகொள்கைதெரிந்தென்னேகொலா
மிலங்கைமன்னுவாளவுணர்கோனெழிலிராவ
ணலங்கலூன்றிவைத்துகந்தாய்சோபுரமேயவனே.

மிடங்கொணகமால்வரையைச்சுற்றிவிரிதிரைநீர்
கடைந்தஞ்சையுண்டுகந்தகாரணமென்னேகொலா
மிடந்தமண்ணீயுண்டமாலுமின்மலர்மேலயனும்
தொடர்ந்துமுன்னங்காணமாட்டாச்சோபுரமேயவனே.

புத்தரோடுபுன்சமணர்பொய்யுரையேயுரைத்துப்
பித்தராகக்கண்டுகந்தபெற்றிமையென்னேகொலா
மத்தயானையீருரிவைபோர்த்துவளர்சடைமேற்
றுத்திநாகஞ்சூடினானேசோபுரமேயவனே.

சோலைமிக்கதண்வயல்சூழ்சோபுரமேயவனைச்
சீலமிக்கதொல்புகழார்சிரபுரக்கோனலத்தான்
ஞாலமிக்கதண்டமிழான்ஞானசம்பந்தன்சொன்ன
கோலமிக்கமாலைவல்லார்கூடுவர்வானுலகே.

திருச்சிற்றம்பலம்.

69

ஏடி திருஞானசம்பந்தமூர்த்திநாய்னாருருளிச்செய்த

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிதிருநாமம் - சோபுரநாதர் - தேவிதிருநாமம் - சோபுரநாயகியம்மை.

திருநெடுங்களம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

1 நிறையுடையாய்தோலுடையாய்வார்சடைமேல்வளரும்
பிறையுடையாய்பிஞ்ஞகனேபென்னுன்னேப்பேசினல்லாற்
குறையுடையார்குற்றமோராய்கொள்கையினலுயர்ந்த
நிறையுடையாரிடர்களேயாய்நெடுங்களமேயவனே.

2 கனைத்தெழுந்தவெண்டிரைசூழ்கடலிடைநஞ்சுதன்னைத்
தினைத்தனையாமிடற்றில்வைத்தருத்தியதேவரின்னே
மனத்தகத்தோர்பாடலாடல்பேணியிராப்பகலு
நினைத்தெழுவாரிடர்களேயாய்நெடுங்களமேயவனே. (2)

3 பின்னடியேவழிபடுவானிமலாரினக்கருத
வென்னடியானுயிரைவவ்வேலென்றடர்கூற்றுறைத்த
பொன்னடியேபரவிநாளும்பூவொடுநீர்சுமக்கு
நின்னடியாரிடர்களேயாய்நெடுங்களமேயவனே.

4 மலைபுரிந்தமன்னவன்றன்மகளேயோர்பாலுமகிழ்ந்தா
யலைபுரிந்தகங்கைதங்குமவிர்சடையாயரூரா
தலைபுரிந்தபலிமகிழ்வாய்தலைவனல்லாவெனுமிழற்கீழ்
நிலைபுரிந்தாரிடர்களேயாய்நெடுங்களமேயவனே.

5 பாங்கினல்லார்படிமஞ்செய்வார்பாரிடமும்பலிசேர்
தூங்கினல்லார்பாடலோடுதொழுகழலேவணங்கித்
தாங்கில்லாவல்வினைநீங்கத்தலைவனின்றுணிழற்கீழ்
நீங்கில்லாரிடர்களேயாய்நெடுங்களமேயவனே.

6 விருத்தனுகிப்பாலனுகிவேதமோர்நான்குணர்ந்து
கருத்தனுகிக்கங்கையாளைக்கமழ்சடைமேற்கரந்தாய்
யிருத்தனுயவாதிதேவனடியினேயேபரவு
நிருத்தாகீதரிடர்களேயாய்நெடுங்களமேயவனே.

7 கூறுகொண்டாய்மூன்றுமொன்றுக்கூட்டியொர்வெங்கணையா
லாறுகொண்டார்புரமெரித்தமன்னவனேகொடிமே
லேறுகொண்டாய்சாந்தமீதென்றெம்பெருமானணித்த
நீறுகொண்டாரிடர்களேயாய்நெடுங்களமேயவனே.

8 சூன்றிணுச்சிமேல்விளங்குங்கொடிமதில்சூழிலங்கை
யன்றிகின்றவரக்கர்கோனையருவரைக்கீழடர்த்தா
யென்றுநல்லவாய்மொழியாலேத்தியிராப்பகலு
நின்றுணைவாரிடர்களேயாய்நெடுங்களமேயவனே.

வேழவெண்கொம்பொசித்தமாலும்விளங்கியநான்முகனுஞ்
சூழவெங்குநேடவாங்கோர்சோதியுளாகின்றாய்
கேழல்வெண்கொம்பணிந்தபெம்மான்கேடிலாப்பொன்னடியி
னீழல்வாழ்வாரிடர்களையாய்நெடுங்களமேயவனே.

வெஞ்சொற்றஞ்சொலாக்கின்றவேடமிலாச்சமணுந்
தஞ்சமில்லாச்சாக்கியருந்தத்துவமொன்றறியார்
துஞ்சலில்லாவாய்மொழியாற்றூத்திரின்னடியே
நெஞ்சில்வைப்பாரிடர்களையாய்நெடுங்களமேயவனே. (கo)

நீடவல்லவார்சடையான்மேயநெடுங்களத்தைச்
சேடர்வாழுமாமறுகிற்சிரபுரக்கோனலத்தா
னுடவல்லபனுவன்மாலைஞானசம்பந்தன்சொன்ன
பாடல்பத்தும்பாடவல்லார்பாவம்பறையுமே. (க

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டில் காவேரிக்குத் தென்கரையிலுள்ளது.

சுவாமிதிருநாமம் - நிந்தியசுந்தரர் - தேவிதிருநாமம் - ஒப்பிலாநாயகியம்மன்

திருமுதுகுன்றம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

தேவுசாயுமசுரசாயுஞ்சித்தர்செழுமறைசேர்
காவுசாயுநண்ணுபாரும்விண்ணினீரானீரு
மேவராயவிரைமலரோன்செங்கண்மாலீசனென்னு
மூவராயமுதலொருவன்மேயதுமுதுகுன்றே.

பந்துமரகிவானுளோர்க்குப்பல்கதிரோன்மதிபா
லெற்றுநீர்தீக்காலுமேலைவிண்ணியமானனெடு
மற்றுமாதேர்பல்லூழியீர்ம்மாலப்பினும்மறைகண்
முற்றுமாகிவேறுமானன்மேயதுமுதுகுன்றே.

வாரிமாகம்வைகுதிங்கள்வாளரவஞ்சூடி
நாரிபாகமாயதூபமேனன்முகன்றன்றலையிற்
சிரிதாகப்பலிகொள்செல்வன்செற்றலுந்தோன்றியதேர்
மூரிநாகத்தாலிவைபோர்த்தான்மேயதுமுதுகுன்றே.

பாடுவாருக்கருளுமெந்தைபனிமுதுபௌவமூன்றி
னீடுபாருமூழிதோறுமோடியண்டர்நிலைகெடலு
நாடுதானுமூடுமோடிஞாலமுநான்முகனு
மூடுகாணமூடும்வெள்ளத்துயர்ந்ததுமுதுகுன்றே.

வழங்குநிங்கள்வன்னிமத்தமாசுணமீசனவிச்
செழுங்கல்வேந்தன்செல்விகாணத்தேவார்திசைவணங்கத்
தழங்குமொர்தைதக்கைமிக்கபேய்க்கணம்பூதஞ்சூழ
முழங்குசெந்தீயேந்தியாடிமேயதுமுதுகுன்றே.

சுழிந்தகங்கைதோய்ந்தநிங்கட்டொல்லராகல்லிதழி
சழிந்தசென்னிச்சைவவேடந்தாளிணைத்தம்புனை
மழிந்தசிந்தையந்தணாளர்க்கறம்பொருளின்பம்வீடு
பொழிந்தவாயான்மூக்கணாதிமேயதுமுதுகுன்றே.

மயங்குமாயம்வல்லராகிவானினெடுநீரு
மியங்குவோருக்கிறைவனுபிராவணன்றேரினைந்த
புயங்காகமார்க்டத்தன்புனர்முலைமாதுமையாண்
முயங்குமார்பன்முன்னிவரேத்தமேயதுமுதுகுன்றே.

ஞாலமுண்டமாலுமற்றைநான்முகனும்மறியாக்
கோலமண்டர்சிந்தைகொள்ளாராயினுங்கொய்மலர
லேலவிண்டைகட்டிகாமவிசையமெப்போதுமேத்து
மூலமுண்டீற்றார்வாயான்மேயதுமுதுகுன்றே.

உறிகொள்கையர்சீவரத்தருண்டுழன்மிண்டர்சொல்லே
கெறிகளென்னினீவுராதேநித்தலுங்கைதொழுமின்
மறிகொள்கையன்வங்கமுந்நீர்ப்பொங்குவிடத்தையுண்ட
முறிகொண்மேனிமங்கைபங்கன்மேயதுமுதுகுன்றே.

மொய்த்தவானேர்பல்கணங்கள்வணங்குமுதுகுன்றைப்
பித்தர்வேடம்பெருமையென்னும்பிரமபுரத்தலிவன்

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றர் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

பூத்தேர்ந்தாயனைகொண்டுநின்பொன்னடி
யேத்தாதாரிலலியெண்ணுங்கா
லோத்தூர்மேயவொளிமழுவாளங்கைக்
கூத்தீரும்மகுணங்களே.

இடையீர்போகாவிளமுலையாரேயோர்
புடையீரேபுள்ளிமானுரி
புடையீரேயுமையேத்துமோத்தூர்க்
கடையீரேயுமதாலே.

ஒன்வேர்போலகொடிமையினர்திறம்
கொள்வீரல்குலோர்கோவண
மொள்வாழைக்கனிதேன்சொரிபூத்தூர்க்
கள்ளியேயுமகாதலே. (க)

தோட்டூரேதுதிலையத்தலைநாதத்தை
யாட்டூரேயடியார்வினை
யோட்டூரேயும்மையேத்துதுமோத்தூர்
காட்டூரேயருணல்குமே. (உ)

குழையார்காதர்கொடுமழுவாட்படை
யுழையாள்கீர்திருவோத்தூர்
பிழையாவண்ணங்கள்பாடிநின்றூவொ
ழையாமேயருணல்குமே. (ங)

மிக்கார்வத்தலிரும்பிப்பலியிடத்
தக்கார்தம்மக்களீரென்
றுட்காதாருளரோதிருவோத்தூர்
நக்கீரேயருணல்குமே. (சு)

தாதார்கொன்றைசடைமுடியுடை
காதாவென்றுலம்புதம்
போதாதாருளரோதிருவோத்தூ
ராதீரேயருணல்குமே. (எ)

என்றுனிம்மலியென்றவரக்கனை
வென்றூர்போலும்வீரலி
லொன்றூர்மும்மதிலெய்தவனேத்தூ
ரென்றூர்மேல்வினையேகுமே. (அ)

நன்றுகான்மறையாலெடுமாலுமாய்ச்
சென்றூர்போலுக்திசையெலா
மொன்றுயொள்ளெரியாய்மிகவோத்தூ
ரின்றீரேயுமைகேடியே. (க)

காரமண்கலிங்கத்துவராடையர்
தேரர்சொல்லைவைதேறன்மி
னேரம்பாலெயிலெய்தவர்பூத்தூர்க்
சிரவன்கழல்சேர்மினே. (கo)

குரும்பையாண்பனைமீன்குலையோத்தூ
ரரும்புகொன்றையடிகளைப்
பெரும்புகலியுண்ஞானசம்பந்தன்சொல்
விரும்புவார்வினைவீடே. (கக)

திருச்சித்தம்பலம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரருளிச்செய்த

தொண்டைநாட்டிலுள்ளது.

அருள்மிகு திருவாலம் - வேதநாதர் - தேவிதிருவாலம் - இளமுலைநாயகியம்மை.

திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் சோழிபையன்று, திருக்கச்சித் திருவே
ம்பத்தைத்தரிசிக்கத் திருவுளங்கொண்டு, கூடவிருந்த அடியார்களுக்குத் தெரிவி
து, திருத்தோணிபுரத்தர் திருவருள்பெற்று, தொண்டைமண்டலத்தை நோக்கி புறப்ப
த் கண்ட தவத்தாதையார் பின்தொடர; அவரை அப்பரே! நீர் இங்குதானே வேத
ல்வியோடு, சிவதரிசனம் செய்து இருத்தல் வேண்டுமென்று நிறுத்தி, மற்றையர்க்கு
ன விடைகொடுத் தெழுந்தருளி, திருக்கில்லையாதிய திருப்பதிகளைப் பணிந்து தொ
ண்டைமண்டலத்திலுள்ள திருவோத்தூரில் அடியார்கள் எதிர்கொள்ளத் திருக்கோ
யிலை யடைந்து, வணங்கிப் பதிகம்பாடித் திருமடஞ்செய்திருக்கும் காளில், ஒரு வென
டியவர் வந்துநமஸ்காரஞ்செய்து அழுது, தொழுது, எம்முடையீர்! அடியேன் இங்கு
திருப்பணிக்காக வைத்த பனைமரமுழுவதும் ஆண்பனையாகவே, சமணர்கண்டு, " அ
னுக்கு இபெனை ஆண்பனை ஆயிற்றே ,, என்று இழிவுரைகின்றார்கள். ஆதலால் அதனை
ழித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தார். அது கேட்டு ஆளுடையபிள்ளை
யார், அவரது பரிவைநோக்கி, கருணையோடும் ஆலயத்திற்குச் சென்று, வேதாரணியா
வணங்கி, " பூத்தோர்த்தாயன ,, என்னும் திருமறைபாடி அத்திருமறையின் திருக்கடை
க்காப்பிலே, " குரும்பையாண் பனையின் குலையோத்தூர் ,, என்று அருளிச்செய்தனர்.
உடனே, அவ்வாண்பனை, பெண்பனையாய்க் குலையிட்டுக் காய்த்தமைகண்டு யாவ
ரும் பெருவியப்படைந்தனர். அதுகண்டுரையாடிய சமணரிற்சிலர் அவ்விடம் விட்டுப்
போயினர்; சிலர் சைவராயினர்கள். பனைமரங்களெல்லாம் ஓரறிவுயிரே யாயினும் பிள்
ளையார் திருவாக்கிற்றோன்றிய படியால் முன் பாசங் கழன்று, இனிவரும் பிற
யெல்லாம் ஒழித்து முத்திபெற்றன. இது ஆசிரியர் வாசகலீலையைப்
புனர்த்தியது.

திருமாற்பேறு - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வாரியார் திருஞ்சீரேயுண்டெமை
யீறுகோ திருமேனியர்
சேறுசேர்வயற்றென்றிருமாற்பேற்றின்
மாறிலாமணிகண்டரே. (க)

தொடையார்மாமலர்கொண்டிருபோதுமை
யடைவாராமடிகள்ளென
மடையார்நீர்மல்குமன்னியமாற்பே
றுடையீரேயுமையுள்கியே. (உ)

பையாரும்மரவங்கொடுவாட்டிய
கையானென்றுவணங்குவர்
மையார்நஞ்சுண்டுமாற்பேற்றிருக்கின்ற
வையாரின்னடியார்களே. (க)

தேவாரப்பதிகங்கள்.

சாலமாமலர்கொண்டுசரணென்று
மேலையார்கள்விரும்புவர்
மாலினார்வழிபாடுசெய்மாற்பேற்று
மீளமார்கண்டகின்னையே. (க)

மாறிலாமணியேயென்றுவானவர்
றேறவேமிகவேத்துவர்
கூறனேகுலவுந்திருமாற்பேற்றி
னீறனேயென்றுகின்னையே. (ங)

உரையாதாரில்லையொன்றுமின்றன்மை
பரவாதாரில்லைகாள்களுந்
திரையார்பாலியின்றென்கரைமாற்பே
றுரையானேயருணல்கிடே. (சு)

அரசரிக்குமரக்கனவன்றனை
யுரைகெடுத்தவனெல்கிட
வரமிகுத்தவெம்மாற்பேற்றடிகளைப்
பரவிடக்கெடும்பாவமே. (ஞ)

இருவர்தேவருந்தேடித்திரிந்தினி
யொருவராலறிவொண்ணிலன்
மருவினீள்கழன்மாற்பேற்றடிகளைப்
பரவுவார்வினைபாறுமே. (ட)

தூசுபோர்த்தழல்வார்கையிற்றுற்றுணு
நீசர்தம்முரைகொள்ளெலுந்
தேசமல்கியதென்றிருமாற்பேற்றி
னீசனென்றெடுத்தேத்துமே.

மன்னிமாலொடுசோமன்பணிசெய்
மன்னுமாற்பேற்றடிகளை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்சொற்
பன்னவேவினைபாறுமே.

திருச்சித்தீச்சரம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

மிருகாமம் - மால்வணங்குமீசர் = தேவிதிருகாமம் - கருணைநாயகியம்மை.

திருப்பாற்றுறை - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

காரார்கொன்றைகலந்தமுடியினர், சீரார்சிந்தைசெலச்செய்தார்
பாரார்நாளும்பரவியபாற்றுறை, யாராராதிமுதல்வரே. (க)

நல்லாரும்வர்தியரெனப்படுஞ், சொல்லார்நன்மலர்சூடினர்
பல்லாரவெண்டலைச்செல்வரெம்பாற்றுறை, யெல்லாருந்தொழுமீசரே. (உ)

விண்ணூர்திங்கள்விளங்குநுதலின, ரெண்ணூர்வந்தெனைழில்கொண்டார்
பண்ணூர்வண்டினம்பாடல்செய்பாற்றுறை, புண்ணுணுமுறைவரே. (ங)

பூவுந்திங்கள்புனைந்தமுடியின, ரேவினல்லாரெயிலெய்தார்
பாவந்தீர்புனன்மல்கியபாற்றுறை, யோவென்சிந்தையொருவரே. (ச)

மாகந்தோய்மதிசூடிமகிழ்ந்தென, தாகம்பொன்னிறமாக்கினர்
பாகம்பெண்ணுமுடையவர்பாற்றுறை, நாகம்பூண்டநயவரே. (ஞ)

போதுபொன்றிகழ்கொன்றைபுனைமுடி, நாதர்வந்தெனலங்கொண்டார்
பாதந்தொண்டர்பரவியபாற்றுறை, வேதமோதும்விகிர்தரே. (ரு)

வாடல்வெண்டலைசூடினர்மால்விடை, கோடல்செய்தகுறிப்பினர்
பாடல்வண்டினம்பண்செயும்பாற்றுறை, யாடல்நாகமசைத்தாரே. (எ)

வெவ்வமேனியராய்வெள்ளேற்றின, ரெவ்வஞ்செய்தெனைழில்கொண்டார்
பவ்வநஞ்சடைகண்டரெம்பாற்றுறை, மவ்வல்சூடியமைந்தரே. (அ)

ஏனமன்னமுமானவருக்கெரி, யானவண்ணத்தெமண்ணலார்
பானலம்மலர்விம்மியபாற்றுறை, வானவெண்பிறைமைந்தரே. (கூ)

வெந்தநீற்றினர்வேலினர்நூலினர், வந்தெனன்னலம்வவ்வினர்
பைந்தண்மாதவிசூழ்தருபாற்றுறை, மைந்தர்தாமோர்மணளரே. (கo)

பத்தர்மன்னியபாற்றுறைமேவிய, பத்துநூறுபெயரினப்
பத்தன்ஞானசம்பந்தனதின்றமிழ், பத்தும்பாடிப்பரவுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமியார் - திருமூலநாதர் - தேவியார் - மோகாம்பிகையம்மை.

திருவேற்காடு - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஒள்ளிதுள்ளக்கதிக்காமிவனெளி, வெள்ளியானுறைவேற்கா
டெள்ளியாருயர்ந்தாரிவ்வுலகினிற், றெள்ளியாரவர்தேவரே. (க)

ஆடல்நாகம்சைத்தளவில்லதோர், வேடங்கொண்டவன்வேற்காடு
பாடியும்பணிந்தாரிவ்வுலகினிற், சேடராகியசெல்வரே. (உ)

EFEO_TVG_149-049 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பூதம்பாடப்புறங்காட்டிடையாடி, வேதவித்தகன்வேற்காடு
போதுசார்ந்தும்புகையுங்கொடுத்தவர்க், கேதமெய்துதலில்லையே.

ஆழ்கடலெனக்கங்கைகரந்தவன், வீழ்சடையினன்வேற்காடு
தாழ்வுடைமனத்தாற்பணிந்தேத்திடப், பாழ்படும்மவர்பாவமே.

காட்டினுலுமயர்த்திடக்காலனை, வீட்டினுனுறைவேற்காடு
பாட்டினும்பணிந்தேத்திடவல்லவ, ரோட்டினுர்வினையொல்லையே.

தோலினுலுடைமேவவல்லான்சுடர், வேலினுனுறைவேற்காடு
நூலினும்பணிந்தேத்திடவல்லவர், மாலினுர்வினைமாயுமே.

மல்லன்மும்மதின்மாய்தரவெய்ததோர், வில்லினுனுறைவேற்காடு
சொல்லவல்லசுருங்காமனத்தவர், செல்லவல்லவர்திக்கமே.

மூரல்வெண்மதிசூடுமுடியுடை, வீரன்மேவியவேற்காடு
வாரமாய்வழிபாடுநினைந்தவர், சேர்வர்செய்கழறிண்ணமே.

பரக்கினுர்படுவெண்டலையிற்பலி, விரக்கினுனுறைவேற்காட்டே
ரரக்கனுண்மையடரப்பட்டானிறை, நெருக்கினுனினினைமினே.

மாறிலாமலரானெடுமாலவன், வேறலானுறைவேற்காடு
நூறிலாமொழியேமொழியாவெழில், கூறினுர்க்கில்லைகுற்றமே.

விண்டமாம்பொழில்சூழ்தருவேற்காடு, கண்டுநம்பன்கழல்பேணிச்
சண்பைஞானசம்பந்தனசெந்தமிழ், கொண்டுபாடக்குணமாமே.

திருச்சிற்றம்

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேற்காட்டீசுவரர் - தேவியார் - வேற்கண்ணியம்மை.

திருக்கரவீரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

அரியுநான்முகனினையுள்ளனவாசத், வரிதொடுமாமணிபோற்கண்டங்
கரியவன்றிகழுங்கரவீரத்தெம், பெரியவன்கழல்பேணுவே.

தங்குமோவினைதாழ்சடைமேலவன், திங்களோடுடன்சூடிய
கங்கையான்றிகழுங்கரவீரத்தெஞ், சங்கரன்கழல்சாரவே.

ஏதம்வந்தடையாவினிநல்லன, பூதம்பல்படையாக்கிய
காதலான்றிகழுங்கரவீரத்தெம், நாதன்பாதநணுகவே.

பறையுநம்வினையுள்ளனபாழ்பட, மறையுமாமணிபோல்கண்டங்
கறையவன்றிகழுங்கரவீரத்தெம், மிறையவன்கழலேத்தவே.

பண்ணினுர்மறைபாடலனுடலன், விண்ணினுர்மதிளெய்தமுக்
கண்ணினுனுறையுங்கரவீரத்தை, நண்ணுவார்வினைநாசமே.

நிழலினுர்மதிசூடினனீள்சடை, யழலினுரனலேந்திய
கழலினுனுறையுங்கரவீரத்தைத், தொழவல்லார்க்கில்லைதுக்கமே. (சு)

வண்டர்மும்மதிண்மாய்தரவெய்தவ, னண்டனுரழலபோலொளி
கண்டனுருறையுங்கரவீரத்துத், தொண்டர்மேற்றுயர்தூரமே. (எ)

புனலிலங்கையர்கோன்முடிபத்திறச், சினவலாண்மைசெகுத்தவன்
கனலவனுறைகின்றகரவீர, மெனவல்லார்க்கிடரில்லையே. (அ)

வெள்ளத்தாமரையானெடுமாலுமாய்த், தெள்ளத்தித்திரளாகிய
கள்ளத்தானுறையுங்கரவீரத்தை, யுள்ளத்தான்வினையோயுமே. (கூ)

செடியமணெடுசீவரத்தாரவர், கொடியவெவ்வுரைகொள்ளன்மின்
கடியவன்னுறைகின்றகரவீரத், தடியவர்க்கில்லையல்லலே. (கo)

வீடிலான்விளங்குங்கரவீரத்தெஞ், சேடன்மேற்கசிவாற்றமிழ்
நாடிஞானசம்பந்தனசொல்லிவை, பாடுவார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கரவீரேசுவரர் - தேவியார் - பிரத்தியங்கிரா தேவியம்மை.

திருத்தூங்கானைமாடம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓடுங்கும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மடங்குமிடங்கருதின்றீசெல்லாமடிகளடிநிழற்கீழாளாம்வண்ணங்
கிடங்குமதிளுஞ்சுலாவியெங்குங்கெழுமனைகடோறுமறையின்னொலி
தொடங்குங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (க)

பிணிநீரசாதல்பிறத்தலிவைபிரியப்பிரியாதபேரின்பத்தோ
டணிநீரமேலுலகமெய்தலுறுமின்குறைவில்லையானேறுடை
மணிநீலகண்டமுடையபிரான்மலைமகளுந்தானுமகிழ்ந்துவாழுந்
துணிநீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (உ)

சாராளும்வாழ்நாளுந்தோற்றமிவைசலிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மாமாறறியாதலமந்துநீரயர்ந்துங்குறைவில்லையானேறுடைப்
பூமாணலங்கலிலங்குகொன்றைபுனல்பொதிந்தபுன்சடையினனுறையுந்
தூமாண்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (ங)

ஊன்றும்பிணிபிறவிகேடென்றிவையுடைத்தாயவாழ்க்கையொழியத்தவ
மான்றுமனங்கருதின்றீசெல்லாமனந்திரிந்துமண்ணினீர்மையங்காதுநீர்
மூன்றுமதிளெய்தமூவாச்சிலைமுதல்வர்க்கிடம்போலுமுகிரேய்கொடி
தோன்றுங்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (ச)

மயறீர்மையில்லாததோற்றம்மிவைமரணத்தொடொத்தழியுமாறுதலாற்
வியறீரமேலுகமெய்தலுறின்மிக்கொன்றும்வேண்டாவிமலனிட
மூயர்தீரவோங்கியகாமங்களாலோவாதுநாளுமடிபரவல்செய்
துயர்தீர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.

பன்னீர்மைகுன்றிச் செவிகேட்பில்படர்நோக்கிற்கண்பவளந்நிற,
நன்னீர்மைகுன்றித் திரைதோலொடுநரைதோன்றுங்காலநமக்காதல்
முன், பொன்னீர்மைதுன்றப் புறந்தோன்றுநற் புனல் பொதிந்தபுன்
சடையினுறையுங், தொன்னீர்க்கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்
கானைமாடந்தொழுமின்களே. (க)

இறையூண்டகேளோடிடுக்கணெய்தியிழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
நிறையூணறிகருதிநின்றீரெல்லாநீள்கழலேநாளு நினைமின்சென்னிப்
பிறைசூழலங்கலிலங்குகொன்றைபிணையும்பெருமான்பிரியாதநீர்த்
துறைசூழ்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே.

பல்லீழ்ந்துராத்தளர்ந்து மெய்யில்வாடிப்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
மில்சூழிடங்கருதி நின்றீரெல்லாமிறையேபிரியாதெழுந்துபோதுங்
கல்சூழரக்கன்கதறச்செய்தான்காதலியுந்தானுங்கருதிவாழுங்
தொல்சீர்க்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (உ)

நோயும்பிணியுமருந்துயரமூ துகருடையவாழ்க்கையொழியத்தவ
ம், வாயுமனங்கருதிநின்றீரெல்லா மலர்மிசையானூகனு மண்ணும்
விண்ணுங், தாயவடியளந்தான்காணமாட்டாத் தலைவர்க்கிடம்போலுந்
தண்சோலைவிண், டோயுங்கடந்தைத் தடங்கோயில்சேர்தூங்கானைமா
டந்தொழுமின்களே. (சு)

பகடூர்பசிநலியநோய்வருதலாற்பழிப்பாயவாழ்க்கையொழியத்தவ
முகடூர்மயிர்கடிந்தசெய்கையாருமூடுதுவராடையருநாடிச்சொன்ன
திகடூர்ந்தபொய்மொழிகடேறவேண்டாதிருந்திழையுந்தானும்பொருந்திவாழுந்
துகடூர்கடந்தைத்தடங்கோயில்சேர்தூங்கானைமாடந்தொழுமின்களே. (எ)

மண்ணூர்முழவதிருமாடவீதி வயற்காழிஞானசம்பந்தனல்ல, பெ
ண்ணுகடத்துப்பெருங்கோயில்சேர் பிறையுரிஞ்சுந்தூங்கானைமாடமே
யான், கண்ணூர்கழல்பரவுபாடல்பத்துங் கருத்துணரக்கற்றுருங்கேட்
டாரும்போய், விண்ணூருலகத்துமேவிவாழும் விதியதுவே யாகும்
வினைமாயுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிகள் - சுடர்க்கொழுந்தீசர் - தேவியார் - கடந்தைநாயகியம்மை.

திருத்தோணிபுரம் - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வண்டரங்கப்புனற்கமலமதுமாந்திப்பெடையினெடு
மொண்டரங்கவிசைபாடுமலியரசேயொளிமதியத்
தண்டரங்கப்பூண்மார்பர்திருத்தோணிபுரத்துறையும்
பண்டரங்கர்க்கென்னிலைமைபரிந்தொருகாற்பகராயே. (க)

எறிசுறவங்கழிக்கானலிளங்குருகேயென்பயலை
யறிவுரைதொழிவதுவுமருவினைகள்பயனன்றே
செறிசிறார்பதமோதுந்திருத்தோணிபுரத்துறையும்
வெறிநிறார்மலர்க்கண்ணிவேதியர்க்குவிளம்பாயே. (உ)

பண்பழனக்கோட்டகத்துவாட்டமிலாச்செஞ்சுட்டுக்
கண்பகத்தின்வாரணமேகடிவினையேனுறுபயலை
செண்பகஞ்சேர்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்துறையும்
பண்பனுக்கென்பரிசுரைத்தாற்பழியாமோமொழியாயே. (ஊ)

காண்டகையசெங்காலொண்கழிநாராய்காதலாற்
பூண்டகையமூலமெலிந்துபொன்பயந்தாளென்றுவளர்
சேண்டகையமணிமாடத்திருத்தோணிபுரத்துறையு
மாண்டகையாற்கின்றேசென்றடியறியவுணர்த்தாயே. (சு)

பாராரேயினையொருகாரிருமூங்கின்றேன்பாங்கமைந்த
காராருஞ்செழுநிறத்துப்பவளக்காற்கபோதங்காள்
தேராருநெடுவிதித்திருத்தோணிபுரத்துறையும்
நீராருஞ்சடையாருக்கென்னிலைமைநிகழ்த்தீரே. (எ)

சேற்றெழுந்தமலர்க்கமலச்செஞ்சாலிகதிர்வீச
வீற்றிருந்தவன்னங்காள்விண்ணேமண்மறைகள்
தேற்றுவித்ததிருத்தோணிபுரத்தீசன்றாளங்காத
கூற்றுதைத்தகுருவடியேகூடுமாகூறீரே. (கூ)

முன்றில்வாழ்மடற்பெண்ணைக்குரம்பைவாழ்முயங்குசிறை
யன்றில்காள்பிரிவுறுநோயறியாதீர்மிகவல்லீர்
தென்றலார்புகுந்துலவுதிருத்தோணிபுரத்துறைபுங்
கொன்றைவார்சடையார்க்கென்கூர்பயலைகூறீரே. (எ)

பானறுமலர்ச்சுரபல்லவங்களைகோதி
யேனோர்க்குமினிதாகமொழியுமெழிலிளங்குயிலே
தேனுரும்பொழில்புடைசூழ்திருத்தோணிபுரத்தமரர்
கோனுரையென்னிடத்தேவரவொருகாற்கூவாயே. (அ)

நற்பதங்களாமிகவறிவாய்நானுன்னேவேண்டுகின்றேன்
பொற்பமைந்தவாயலகிற்பூவைகல்லாய்போற்றுகின்றேன்
சொற்பதஞ்சேர்மறையாளர்திருத்தோணிபுரத்துறையும்
விற்பொலிதோள்விகிர்தனுக்கென்மெய்ப்பயலேவிளம்பாயே. (க)

சிறையாருமடக்கிளியேயிங்கேவாதெனதுபால்
முறையாலேயுணத்தருவேன்மொய்பவளத்தொடுதாளம்
துறையாருங்கடற்றோணிபுரத்தீசன்றுளங்குமிளம்
பிறையாளன்றிருநாமமெனக்கொருகாற்பேசாயே. (கக)

போர்மிகுத்தவயற்றோணிபுரத்துறையும்புரிசடையெங்
கார்மிகுத்தகறைக்கண்டத்திறையவனேவண்கமலத்
தார்மிகுத்தவரைமார்பன்சம்பந்தனுரைசெய்த
சீர்மிகுத்ததமிழ்வல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்

திருச்செங்காட்டங்குடி - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நறைகொண்டமலர்தூவிவிரையளிப்பகாடோறு
முறைகொண்டுநின்றடியார்முட்டாமேபணிசெய்யச்
சிறைகொண்டவண்டறையுஞ்செங்காட்டங்குடியதனுட்
கறைகொண்டகண்டத்தான்கணபதீச்சரத்தானே. (க)

வாரேற்றபறைபொலியுஞ்சங்கொலியும்வந்தியமிப
வூரேற்றசெலவத்தோடோங்கியசீர்விழவோவாச்
சிரேற்றமுடைத்தாயசெங்காட்டங்குடியதனுட்
காரேற்றகொன்றையான்கணபதீச்சரத்தானே. (உ)

வரந்தையான்சோபுரத்தான்மந்திரத்தான்றந்திரத்தான்
கிரந்தையான்கோவணத்தான்கிங்கிணியான்கையதோர்
சிரந்தையான்செங்காட்டங்குடியான்செஞ்சடைசேருங்
கரந்தையான்வெண்ணீற்றான்கணபதீச்சரத்தானே. (ஙு)

தொங்கலுங்கமழ்சாந்துமகிற்புகையுந்தொண்டர்கொண்
டங்கையாற்றொழுதேத்தவருச்சனைகன்றருள்செய்தான்
செங்கயலபாய்வயலுடுத்தசெங்காட்டங்குடியதனுட்
கங்கைசேர்வார்சடையான்கணபதீச்சரத்தானே. (ச)

பாலினைநுநெய்யாற்பழத்தினுற்பயின்றூட்டி
நூலினன்மணமாலைகொணர்ந்தடியார்புரிந்தேத்தச்
சேலினர்வயல்புடைசூழ்செங்காட்டங்குடியதனுட்
காலினற்கூற்றுதைத்தான்கணபதீச்சரத்தானே. (ஞ)

நுண்ணியான்மிகப்பெரியானெவுளார்வாயுளான்
விண்ணியான்வெய்யானந்தலைமேலான்மனத்துளான்
றிண்ணியான்செங்காட்டங்குடியான்செஞ்சடைமதியக்
கண்ணியான்கண்ணுதலான்கணபதீச்சரத்தானே. (சு)

மையினர்மலர்நெடுங்கண்மலைமகளோர்பாகமா
மெய்யினன்பையரவமரைக்கசைத்தான்மீன்பிறழச்
செய்யினன்னகழனிச்செங்காட்டங்குடியதனுட்
கையினர்கூரெரியான்கணபதீச்சரத்தானே. (எ)

தோடுடையான்குழையுடையானரக்கன்றன்றோள்பீத்த
பீடுடையான்போர்விடையான்பெண்பாகமிகப்பெரியான்
சேடுடையான்செங்காட்டங்குடியுடையான்சேர்ந்தாடுங்
காடுடையானுடையான்கணபதீச்சரத்தானே. (அ)

ஆனாராவுழிதருவானன்றிருவர்தேர்ந்துணரா
வானூரான்வையகத்தான்வாழ்த்துவார்மனத்துளான்
றேனூரான்செங்காட்டங்குடியான்சிற்றம்பலத்தான்
கானூரான்கழுமலத்தான்கணபதீச்சரத்தானே. (கூ)

செடிநுகருஞ்சமணர்களுஞ்சீவரச்சாக்கியரும்
படிநுகராதயருழப்பார்க்கருளாதபண்பினன்
பொடிநுகருஞ்சிறுத்தொண்டர்க்கருள்செய்யும்பொருட்டாகக்
கடிநகராய்வீற்றிருந்தான்கணபதீச்சரத்தானே. (கo)

கறையிலங்குமலர்க்குவளைகண்காட்டக்கடிபொழிலின்
னறையிலங்குவயற்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
சிறையிலங்குபுனற்படப்பைச்செங்காட்டங்குடிசேர்த்து
மறையிலங்குதமிழ்வல்லார்வானுலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமி - கணபதீசுவரர் - தேவி - திருக்குழன்மாதம்மை.

திருக்கோளிலி - பண் - பழந்தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

நாளான்போகாமேநஞ்சணியுங்கண்டனுக்கே
யாளாய்வன்புசெய்வோமடநெஞ்சேயரனுமங்
கேளாய்நங்கிளைகிளைக்குங்கேடுபடாத்திறமருளி
கோளாயகற்குமவன்கோளிலியெம்பெருமானே. (க)

ஆடரவத்தழகாமையணிகேழற்கொம்பார்த்தி
தோடரவத்தொருகாதன்றுணைமலர்நற்சேவடிக்கே

பாடரவத்திசையின்றுபணிந்தெழுவார்தம்மனத்திற்
கோடரவந்தீர்க்குமவன்கோளிலியெம்பெருமானே. (ஏ)

நன்றுநகுநான்மலாரல்லிருக்குமந்திரங்கொண்
டொன்றிவழிபாடுசெயலுற்றவன்றனுங்குயிர்மேற்
கன்றிவருகாலனுயிர்கண்டவனுக்கன்றளித்தான்
கொன்றைமலர்பொன்றிகழுங்கோளிலியெம்பெருமானே. (ஐ)

வந்தமணலாலிலிங்கமண்ணியின்கட்பாலாட்டுஞ்
சிந்தைசெய்வோன்றன்கருமந்தேர்ந்துசிதைப்பான்வருமத்
தந்தைதனைச்சாடுதலுஞ்சண்டீசனென்றருளிக்
கொந்தணவுமலர்கொடுத்தான்கோளிலியெம்பெருமானே. (ஒ)

வஞ்சமனத்தஞ்சொடுக்கிவைகலுநற்பூசனையால்
நஞ்சமுதுசெய்தருளுநம்பியெனவேநினையும்
பஞ்சவிற்பார்த்தனுக்குப்பாசுபதமீந்துகந்தான்
கொஞ்சுகிளிமஞ்சணவுங்கோளிலியெம்பெருமானே. (ஓ)

தாவியவனலிருந்துங்காணுதற்பரனே
யாவிதனிலஞ்சொடுக்கியங்கணனென்றுரிக்கு
நாவியல்சீர்நமிநந்தியடிகளுக்குரல்குமவன்
கோவியலும்பூவெழுகோற்கோளிலியெம்பெருமானே. (ஔ)

கன்னவிலுமால்வரையான்கார்திகழுமாமிடற்றான்
சொன்னவிலுமாமறையான்மூத்திரஞ்சேர்வாயினுளான்
மின்னவிலுஞ்செஞ்சடையான்வெண்பொடியானங்கையினிற்
கொன்னவிலுஞ்சூலத்தான்கோளிலியெம்பெருமானே. (எ)

அந்தரத்திற்றேரூருமரக்கன்மலையன்றெடுப்பச்
சுந்தரத்தன்றிருவிரலாலூன்றவவனுடல்நெரிந்து
மந்திரத்தமறைபாடவாளவனுக்கிந்தானுங்
கொந்தரத்தமதிச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (அ)

நாணுமுடைவேதியனுநாரணனுண்ணவொணாத்
தாணுவெனையாளுடையான்றன்னடியார்க்கன்புடைமை
பாணனிசைபத்திமையாற்பாடுதலும்பரிந்தளித்தான்
கோணவிளம்பிறைச்சென்னிக்கோளிலியெம்பெருமானே. (கூ)

தடுக்கமருஞ்சமணரொடுதக்கசாத்திரத்தவர்சொல்
லிடுக்கண்வருமொழிகேளாதீசனேயேத்துமின்க
ணடுக்கமிலரவமருலகுண்ணவுமாமண்ணல்கழல்
கொடுக்கிலாவரங்கொடுக்குங்கோளிலியெம்பெருமானே. (கo)

நம்பனைநல்லடியார்கள்நாமுடைமாடென்றிருக்குங்
கொம்பனையாள்பாகனெழிற்கோளிலியெம்பெருமானே

வம்பமருந்தண்காழிச்சம்பந்தன்வண்டமிழ்கொண்
டின்பமரவல்லார்களெய்துவர்களிசானையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமி - கோளிலி - தேவியார் - வண்டமர்பூங்குழலம்மை.

திருப்பிரமபுரம் - பல்பெயர்ப்பத்து - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

எரியார்மழுவொன்றேந்தியங்கையிடதலையேகலனா
வரியார்வரிவளையாளம்மைவாய்மாநலம்வவ்வுதியே
சரியாகாவின்வேதகீதன்முமரைநான்முகத்தன்
பெரியான்பிரமன்பேணியாண்டபிரமபுரத்தானே. (க)

பெயலார்சடைங்கோர்திங்கள்சூடிப்பெய்பலிக்கென்றில்லே
கயலார்தடங்கண்ணஞ்சொல்லாள்கண்டுயில்வவ்வுதியே
இயலானடாவியின்பமெய்தியிந்திரனைமண்மேல்
வியலார்முசுரசமோங்குசெம்மைவேணுபுரத்தானே. (உ)

நகலார்தலையுமெண்பிறையுகளிர்சடைமாட்டயலே
பகலாப்பலிதேர்ந்தையம்மைவாய்பாய்கலைவவ்வுதியே
யகலாதுறையுமாநிலத்தியலின்மையாலமரர்
புகலாமலிந்தபூம்புகலிமேவியபுண்ணியனே. (ங)

சங்கோடிலங்கத்தோடுபெய்துகாதிலோர்தாழ்குழைய
னங்கோல்வளையாரையம்மைவாயானலம்வவ்வுதியே
செங்கோல்நடாவிப்பல்லுயிர்க்குஞ்செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன்மேவியாண்டவெங்குருமேயவனே. (ச)

தணிநீர்மதியஞ்சூடிநீடுதாங்கியதாழ்சடையன்
பிணிநீர்மடவாரையம்மைவாய்பெய்கலைவவ்வுதியே
யணிநீருலகமாகியெங்குமாழ்கடலாலமூழ்குத்
துணிநீர்பணியுத்தான்மிதந்ததோணிபுரத்தானே. (ஞ)

கவர்பூம்புனலுந்தண்மதியுங்கமழ்சடைமாட்டயலே
யவர்பூம்பலியோடையம்மைவாயானலம்வவ்வுதியே
யவர்பூணரையர்க்காதியாயவடன்மன்னனுமண்மேற்
றவர்பூம்பதிகளெங்குமிங்குந்தங்குதராயவனே. (சு)

மூலையாள்கெழுமமொந்தைகொட்டமுன்கடைமாட்டயலே
நிலையாப்பலிதேர்ந்தையம்மைவாய்நிலம்வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ்வையமெல்லாந்தன்னதாராணைகடாய்ச்
சிலையாலமலிந்தசீர்ச்சிலம்பன்சிரபுரமேயவனே. (எ)

EFEO_TVG_149-053 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

எருதேகொணர்கெனீறேறியங்கையிடதலையேகலனுக்
கருதேர்மடவாரையம்வவ்வாய்கண்டெயில்வவ்வுதியே
பொருதேர்கடாவியாரமருளோர்புரமூன்றெரியப்
பொருதேர்வலவன்மேவியாண்டபுறவம்பர்புண்ணியனே. (அ)

னவர்சேர்கலிங்கப்போர்வையரூர்தூய்மைசிஞ்சமணுங்
கவர்செய்துழலக்கண்டவண்ணங்கரிகைவார்குழலா
ரவர்பூம்பலியோடையம்வவ்வாயானலம்வவ்வுதியே
தவர்செய்கெடுவேற்சண்டனுளச்சண்பையமர்ந்தவனே. (க)

நிழலாமலிந்தகொன்றைசூடிநீறுமெய்பூசிநல்ல
குழலார்மடவாரையம்வவ்வாய்கோல்வளைவவ்வுதியே
யழலாயுலகங்கவ்வைதீரவைந்தலைநீண்முடிய
கழலாகரையன்காவலாகக்காழியமர்ந்தவனே. (கஎ)

கட்டார்துவராயன்மையானென்றிவர்காண்பரிய
சிட்டார்பலிதேர்ந்தையம்வவ்வாய்செய்கலைவவ்வுதியே
நட்டார்நடுவேநங்களைகல்வினையாலுயர்ந்த
கொட்டாறுடித்ததண்வயல்சூழ்கொச்சையமர்ந்தவனே. (கஅ)

கடையார்கொடிநன்மாடவீதிக்கமழ்மலர்க்கவுணி
நடையார்பனுவன்மாலையாகஞானசம்பந்தனல்ல
படையார்மழுவன்றன்மேல்மொழிந்தபல்பெயர்ப்பத்தும்வல்லார்க்
கடையாவினைகளுலகிலுமமருலகாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பூவணம் - பண் - சக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அறையார்புனலுமாமலருமாடரவார்சடைமேற்
குறையார்மதியஞ்சூடிமாதோர்கூறுடையானிடமா
முறையாலமுடிசேர்தென்னர்சேரர்சோழர்கடம்மணங்குந்
திறையாரொளிசேர்செம்மையோங்குதென்திருப்பூவணமே. (க)

மருவார்மதில்மூன்றெறிவித்துமாமலையான்மடந்தை
யொருபாலாகமாகச்செய்தவும்பர்பிரானவனூர்
கருவார்சரவியாலைமல்கிக்கழனிமன்னர்காத்தளித்த
திருவாலமர்ந்தசேடர்வாழுந்தென்திருப்பூவணமே. (உ)

போரார்மதமாவுரிவைபோர்த்துப்பொடியணிமேனியனுய்க்
காரார்கடலினஞ்சமுண்டகண்ணுதல்விண்ணவனூர்
பாரார்வைகைப்புனல்வாய்ப்பவளப்பன்மணிபொன்கொழித்துச்
சீரார்வாரிசேர்ந்தசெந்தீருப்பூவணமே. (ஙு)

கடியாரலங்கற்கொன்றைசூடிக்காதிலோர்வார்குழையன்
கொடியார்வெள்ளோயேறுகந்தகோவணவன்னிடமாம்
படியார்கூடிநீடியோங்குபல்புகழாற்பரவச்
செடியார்வைகைசூழ்ந்தநின்றதென்திருப்பூவணமே. (ச)

கூரார்வாளிசிலையிற்கோத்துக்கொடிமதிலைக்கூட்டழித்த
போரார்வில்லிமெல்லியலாளோர்பாகமகிழ்ந்தானிடமா
மாராவன்பிற்றென்னர்சேரர்சோழர்கள்போற்றிசைப்பத்
தேராவீதிமாடநீடுதென்திருப்பூவணமே. (ஞ)

நன்றுதீதென்றுன்றிலாதநான்மறையோன்கழலே
சென்றுபேணியேத்தநின்றதேவர்பிரானிடமாம்
குன்றிலொன்றியேங்கமல்குசுனிர்பொழில்சூழ்மலர்மேற்
றென்றலொன்றிமுன்றிலாருந்தென்திருப்பூவணமே. (ஞ)

பைவாயரவமரையிற்சாத்திப்பாரிடம்போற்றிசைப்ப
மெய்வாய்மேனிநீறுபூசியேறுகந்தானிடமாம்
கைவாழ்வளையார்மைந்தரோடுங்கலவியினல்லிருங்கிச்
செய்வாதொழிலின்பாடலோவாத்தென்திருப்பூவணமே. (ஙு)

மாடவீதிமன்னிலங்கைமன்னனீமாண்பழித்துக்
கூடவென்றிவாள்கொடுத்தாள்கொள்கையினர்க்கிடமாம்
பாடலோடுமாடலோங்கிப்பன்மணிபொன்கொழித்து
நீடநீரால்வைகைசூழுமூயர்திருப்பூவணமே. (அ)

பொய்யாவேதநாவினனும்பூமகள்காதலனுங்
கையாற்றொழுதுகழல்கள்போற்றக்கனலெரியானவனூர்
மையார்பெழிலின்வண்டுபாடவைகைமணிகொழித்துச்
செய்யார்கமலந்தேனரும்புந்தென்திருப்பூவணமே. (கூ)

அலையார்புனலோடத்தவருந்தேரருமன்புசெய்யா
நிலையாவண்ணமாயவைத்தநின்மலன்றன்னிடமா
மலைபோற்றுன்னிவென்றியோங்குமாளிகைசூழ்ந்தயலே
சிலையார்புரிசைபரிசுபண்ணுந்தென்திருப்பூவணமே. (கூ)

திண்ணார்புரிசைமாடமோங்குதென்திருப்பூவனத்துப்
பெண்ணார்மேனியெம்மிறையைப்பேரியலின்றமிழாற்
பண்ணாருட்கக்காழிமல்குஞானசம்பந்தன்சொன்ன
பண்ணார்பாடல்பத்தும்வல்லார்பயில்வதுவானிடையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமி - பூவணநாதர் - தேவியார் - மின்னுமுமையம்மை.

திருநாமம்.

EFEO_TVG_149-054 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அச திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

காவிரிப்பூம்பட்டினத்துப்பல்லவனீச்சரம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அடையாதார்தம்புரங்கண்மூன்றுமாரழலில்லழுந்த
விடையார்மேனியராய்ச்சீறும்வித்தகர்மேயவிடங்
கடையார்மாடமீடியெங்குங்கங்குல்புறந்தடவப்
படையார்புரிசைப்பட்டினஞ்சேர்பல்லவனீச்சரமே. (க)

எண்ணெயில்கள்மூன்றுஞ்சிறுமெந்தைபிரானிமையோர்
கண்ணுபுலகங்காக்கின்றகண்ணுதனண்ணுமிடம்
மண்ணுர்சோலைக்கோலவண்டுவைகலுந்தேனருந்திப்
பண்ணுர்செய்யும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (உ)

மங்கையங்கோர்பாகமாகவானிலவார்சடைமேற்
கங்கையங்கேவாழவைத்தகள்வனிருந்தவிடம்
பொங்கயஞ்சேர்புணரியோதமீதுயர்பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (ங)

தாரார்கொன்றைபொன்றயங்கச்சாத்தியமார்பகலம்
நீரார்நீறுசாந்தம்வைத்தநின்மலன்மன்னுமிடம்
போரார்வேற்கண்மாதர்மைந்தர்புக்கிசைபாடலினற்
பாரார்ந்றபட்டினத்துப்பல்லவனீச்சரமே. (ச)

மைசேர்கண்டரண்டவாணர்வானவருந்துதிப்ப
மெய்சேர்கொடியரடியாரேத்தமேவியிருந்தவிடங்
கைசேர்வளையார்விளைவினேடுகாதன்மையாற்கழலே
பைசேரரவாரல்குலார்சேர்பல்லவனீச்சரமே. (ஞ)

சூழலினேசைவீணைமொந்தைகொட்டமுழவதிரக்
கழலினேசையார்க்கவாடுங்கடவுளிருந்தவிடஞ்
சுழியிலாருங்கடலிலோதந்தெண்டிரைமொண்டெறியப்
பழியிலார்கள்புயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (ஈ)

வெந்தலாயவேந்தன்வேள்விவேரறச்சாடிவிண்ணோர்
வந்தெலாமுன்பேணினின்றமைந்தன்மகிழ்ந்தவிட
மந்தலாயமல்லிகையும்புன்னைவளர்சுரவின்
பந்தலாரும்பட்டினத்துப்பல்லவனீச்சரமே. (எ)

தேரரக்கன்மால்வரையைத்தெற்றியெடுக்கவவன்
முரரக்குந்திண்முடிகளுன்றியசங்கரனூர்
காரரக்குங்கடலிளிர்ந்தகாலமெலாமுணரா
பாரரக்கம்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (அ)

அங்கமாறும்வேதமோதுமயனெடுமாற்
றங்கணுநேடநின்றசங்கரனமருமிடம்

வங்கமாருமுத்தமிப்பிவார்கடலூடலைப்பப்
பங்கமில்லார்பயில்புகாரிற்பல்லவனீச்சரமே. (கூ)

உண்டுடுக்கையின்றியேயின்றூர்நகவேதிரிவார்
கண்டுடுக்கைமெய்யிற்போர்த்தார்கண்டறியாதவிடங்
தண்டுடுக்கைதோள்தங்கைசாரநடம்பயிலவார்
பண்டிடுக்கணூரல்லும்பல்லவனீச்சரமே. (கூ)

பத்தரேத்தும்பட்டினத்துப்பல்லவனீச்சரத்தெந்
தித்தன்றன்னையணிகொள்காழிஞானசம்பந்தன்சொற்
சித்தஞ்சேரச்செப்புமிந்தர்திவினோயிலரா
யொத்தமைந்தவும்பர்வானிலுயர்வினேடோங்குவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பல்லவனேசர் - தேவியார் - சவுந்தராம்பிகையம்மை.

திருச்சண்பைநகர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பங்கமேறுமதிசேர்சடையார்விடையார்பலவேத
மங்கமாறுமறைநான்கவையுமானர்மீனுரும்
வங்கமேவுங்கடல்வாழ்பரதர்மானேக்கேதுனைமுக்கின்
சங்கமேறிமுத்தமீனுஞ்சண்பைநகராரே. (க)

சூதகஞ்சேர்கொங்கையாளோர்பங்கர்சுடர்க்கமலப்
போதகஞ்சேர்புண்ணியனுர்பூதகணநாதர்
மேதகஞ்சேர்மேகமந்தன்சேரலியில்விண்ணூர்ந்த
சாதகஞ்சேர்பாளைநீர்சேர்சண்பைநகராரே. (உ)

மகரத்தாடுகொடியோனுடலம்பொடிசெய்தவனுடைய
நிகரொப்பிலாத்தேவிக்கருள்செய்நீலகண்டனுர்
பகரத்தராவன்னம்பகன்றில்பாதம்பணிந்தேத்தத்
தகரப்புன்னைதாழைப்பொழில்சேர்சண்பைநகராரே. (ங)

மொயவல்லசுரர்தேவர்கடைந்தமுமுஞ்சதுவண்ட
தெய்வர்செய்யவுருவர்கரியகண்டர்திகழ்சுத்திக்
கையர்கட்டங்கத்தர்கரியினுரியர்காதலாற்
சைவர்பாசுபதர்கள்வணங்குஞ்சண்பைநகராரே. (ச)

கலமார்கடலுள்விடமுண்டமரர்க்கமுதமருள்செய்த
குலமார்கயிலைக்குன்றதுடையகொல்லையெருதேறி
நலமார்வெள்ளைநாளிகேரம்விரியாநறும்பாளை
சலமார்கரியின்மருப்புக்காட்டுஞ்சண்பைநகராரே. (ஞ)

EFEO_TVG_149-055 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மாகரஞ்சேரத்தியின்மேல்போர்த்துமெய்ம்மாலான்
ஞகரஞ்சேரெயிறுபூண்டசோதியன்மேதக்க
வாகரஞ்சேரிப்பிமுத்தையந்தண்வயலுக்கே
சாகரஞ்சேர்திரைகளுந்துஞ்சண்பைநகராரே. (கூஎ)

இருளைப்புரையுநிறத்திலரக்கன்றன்னையீடழிவித்
திருளைச்செய்யுமம்மானேராரந்தங்கந்தத்தின்
மருளைச்சுரும்புபாடியுளக்கர்வரையார்திரைக்கையாற்
றரளத்தோடெவளமீனுஞ்சண்பைநகராரே. (கூஅ)

மண்டான்முழுதுமுண்டமாலுமலர்மிசைமேலோனு
மெண்டானலியாவண்ணநின்றவிறைவன்மறையோதி
தண்டார்குவளைகள்ளருந்தித்தாமரைத்தண்பழனவிளைவயல்
பண்டான்கொண்டுவண்டுபொருஞ்சண்பைநகராரே. (கூ)

போதியாரும்பிண்டியாரும்புகழலசொன்னலு
நீதியாகக்கொண்டங்கருளுநிமலனீருன்னினை
மாதிசித்தர்மாமறையின்மன்னியதொன்னூலர்
சாதிதர்வர்த்தமானர்சண்பைநகராரே. (கூ)

வந்தியோடுபூசையல்லாப்போழ்தின்மறைபேசிச்
சந்திபோற்சமாதிசெய்யுஞ்சண்பைநகர்மேய
வந்திவண்ணன்றன்னையழகார்ஞானசம்பந்தன்சொற்
சிந்தைசெய்துபாடவல்லார்சிவகதிசேர்வாரே. (கூக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பழனம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வேதமோதிவெண்ணூல்பூண்டுவெள்ளெருதேறிப்
பூதஞ்சூழப்பொலியவருவார்புலியினிதோலார்
நாதாவெனவுருக்காவெனவுநம்பாவெனின்று
பாதந்தொழுவார்பாவந்தீர்ப்பார்பழனநகராரே. (க)

கண்மேற்கண்ணுஞ்சடைமேற்பிறையுமுடையார்காலனைப்
புண்ணுறுதிரமெதிராரூடப்பொன்றப்புறந்தாள
ணெண்ணுதலைத்தவெந்தைபெருமானிமவான்மகளோடும்
பண்ணுர்களிவண்டறைபூஞ்சோலைப்பழனநகராரே. (உ)

பிறையும்புனலுஞ்சடைமேலுடையார்பிறைபோல்விழிகீட்பே
யுறையுமயானமிடமாவுடையாருலகர்தலைமக
னறையுமலர்கொண்டடியார்பரவியாடலபாடல்செய்
பறையுஞ்சங்குமபலியுமோவாப்பழனநகராரே. (ஊ)

உரமன்னுயர்கோட்டிலறுகையலறுமயாகத்தி
லிரவிற்பூதம்பாடவாடியெழிலாரலர்மேலைப்
பிரமன்றலையினறவமேற்றபெம்மானெமையாளும்
பரமன்பகவன்பரமேச்சுவரன்பழனநகராரே. (ச)

குலவெஞ்சிலையால்மதின்மூன்றெரித்தகொல்லேறுடையண்ணல்
கலவமயிலுங்குயிலும்பயிலுங்கடல்போற்காவேரி
நலமஞ்சுடையநறுமாங்கனிகள்குதிகொண்டெதிருந்திப்
பலவின்கனிகளிரைமுன்சேர்க்கும்பழனநகராரே. (ஞ)

வீளைக்குரலும்விளிசங்கொலியும்விழவின்னெலியோவா
மூளைத்தலைகொண்டடியாரேத்தப்பொடியாமதிளெய்தா
னீளப்படுகிலியிலையார்தெங்கிற்குலையார்வாழையின்
பாளைக்கமுகின்பழம்வீழ்சோலைப்பழனநகராரே. (கூ)

பொய்யாமொழியார்முறையாலேத்திப்புகழ்வார்திருமேனி
செய்யார்கரியமிடற்றரூர்வெண்ணூல்சேர்ந்தவகலத்தார்
கையாடலினர்புலாலிமல்குசடைமேற்பிறையோடும்
பையாடரவமுடனேவைத்தார்பழனநகராரே. (எ)

மஞ்சோங்குயரமுடையான்மலையைமாரூபெடுத்தான்மே
ளஞ்சோடஞ்சுமாறுநான்குமடரவுன்றினர்
நஞ்சார்சுடலைப்பொடிநீறணிந்தநம்பான்வம்பாரும்
பைந்தாமரைகள்கழனிசூழ்ந்தபழனநகராரே. (அ)

கடியார்கொன்றைச்சுரும்பின்மாலைகமழ்புன்சடையார்விண்
ணெடியோர்படிமூவடியாலுலகமுருத்தாவிய
நெடியானீடாமரைமேலயனுநேடிக்காணுத
படியார்பொடியாடகலமுடையார்பழனநகராரே. (கூ)

கண்டான்கமுவாமுன்னேயோடிக்கரவைக்கஞ்சியை
யுண்டாங்கவர்களுரைக்குஞ்சிறுசொல்லோரார்பர்ராட்ட
வண்டாமரையின்மலர்மேனறவமதுவாய்மிகவுண்டு
பண்டான்கெழுமவண்டியாழ்செய்யும்பழனநகராரே. (கூ)

வேய்முத்தோங்கிவிரைமுன்பரக்கும்வேணுபுரந்தன்னு
ணுவய்த்தனையதிறலாலிக்களுனசம்பந்தன்
பேசற்கினியபாடல்பயிலும்பெருமான்பழனத்தை
வாயிற்பொலிந்தமாலைபத்தும்வல்லார்நல்லாரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிகள் - ஆபத்சகாயர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

ஸ்ரீகயிலாயம் - பண் - தக்கேசி.

திருச்சித்தம்பலம்.

பொடிகொளுருவர்புலியினதளர்புரிநூறிகழ்மார்பிற்
கடிகொள்கொன்றைகலந்தநீற்றர்கறைசேர்கண்டத்த
ரிடியகுரலாலிரியுமடங்கலுருடங்குமூனைச்சாரற்
கடியவிடைமேற்கொடியொன்றுடையார்கயிலைமலையாரே. (க)

புரிகொள்சடையரடியர்க்கெளியார்கிளிசேர்மொழிமங்கை
தெரியவருவில்வைத்துகந்ததேவர்பெருமானர்
பரியகளிற்றையரவுமுரிமுழங்கவிருள்கூர்ந்த
கரியமிடற்றர்செய்யமேனிக்கயிலைமலையாரே. (உ)

மாவினுரிவைமங்கைவெருவமூடிமுடிதன்மேல்
மேவுமதியுநதியும்வைத்தவிளாவர்கழலுன்னுந்
தேவதேவர்திருமுலத்தர்திரங்கள்முகவன்சேர்
காவும்பொழிலுங்கடுங்கற்சுனைசூழ்கயிலைமலையாரே. (ங)

மூங்நீர்சூழ்ந்தநஞ்சமுண்டமுதல்வர்மதனன்றன்
முன்னீருருவமழியத்திருக்கண்சிவந்ததுதலினர்
மன்னீர்மதிவம்படுகல்லறையினுமுவைசினங்கொண்டு
கன்னீர்வரைமேலிரைமுன்றேடுங்கயிலைமலையாரே. (ச)

ஒன்றும்பலவுமாயவேடத்தொருவர்கழல்சேர்வார்
நன்றுநினைந்துநாடற்குரியார்கூடித்திரண்டெங்கும்
தென்றியிருளிற்றிகைத்தகரிதண்சாரலிறியோடிக்
கன்றும்பிடியுமடிவாரஞ்சேர்கயிலைமலையாரே. (ஞ)

தாதார்கொன்றையங்குமுடியர்மூயங்குமடவாளைப்
போதார்பாகமாகவைத்தபுனிதர்பனிமல்கு
மூதாருலகிற்முனிவருடனுபதேசான்கருள்செய்த
காதார்குழையர்வேதத்திரளர்கயிலைமலையாரே. (கூ)

தொடித்தார்புரமூன்றெரியச்சிலைமேலெரியொண்பகழியா
லெடித்தான்றிரடோளமுடிகள்பத்துமிடியவிரல்வைத்தார்
கொடித்தார்படைகள்கொண்டராளாக்குறிவெருங்கூற்றைக்
கடித்தாங்கவனைக்கழலாலுதைத்தார்கயிலைமலையாரே. (அ)

ஊணுப்பலிகொண்டுலகிலேற்றூரிலகுமணிநாகம்
பூணுரமாகப்பூண்டார்புகழும்மிருவர்தாமம்
பேணுவோடிநேடவெங்கும்பிறங்குமெரியாகிக்
காணவண்ணமுயர்ந்தார்போலுங்கயிலைமலையாரே. (சு)

விருதுபகரும்வெஞ்சொற்சமணர்வஞ்சச்சாக்கியர்
பொருதுபகருமொழியைக்கொள்ளார்புகழ்வார்க்கணியரா
யெருதொன்றுகைத்திங்கிடுவார்தம்பாலிரந்துண்டிகழ்வார்கள்
கருதும்வண்ணமூடையார்போலுங்கயிலைமலையாரே (கo)

போரார்கடலிற்புனல்சூழ்காழிப்புகழார்சம்பந்தன்
காரார்மேகங்குடிகொள்சாரற்கயிலைமலையார்மேற்
றேராதுரைத்தசெஞ்சொன்மாலைசெப்புமடியார்மேல்
வாராபிணிகள்வானோருலகிற்மருவுமனத்தாரே. (கக)

திருச்சித்தம்பலம்.

திருவண்ணாமலை - பண் - தக்கேசி.

திருச்சித்தம்பலம்.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார்புகழ்வார்வானோர்கள்
மூவர்புரங்களெரித்தவன்றுமூவர்க்கருள்செய்தார்
தூமாமழைபின்றகிரவெருவித்தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (க)

மஞ்சைப்போழ்ந்தமதியஞ்சூடும்வானோர்பெருமானர்
நஞ்சைக்கண்டத்தடக்குமதுவுநன்மைப்பொருள்போலும்
வெஞ்சொற்பேசும்வேடர்மடவாரிதணமதுவேறி
யஞ்சொற்கிளிகளாயோவென்னுமண்ணாமலையாரே. (உ)

ஞானத்திரளாய்நின்றபெருமானல்லவடியார்மே
லூனத்திரளோநீக்குமதுவுமுண்மைப்பொருள்போலு
மேனத்திரளோடினமான்கரடியிழியுமிரவின்க
ணூனத்திரள்வந்தணையுஞ்சாரலண்ணாமலையாரே. (ங)

இமைத்தவிடையாளுமையாள்பங்கரிமையோர்பெருமானர்
கமைத்தகடையார்விடையொன்றேறித்தரியார்புரமெய்தார்
மிமைத்தபிடியைக்காணுதோறுப்பெருங்கைமதவேழ
மமைத்துத்திரிந்துருங்குஞ்சாரலண்ணாமலையாரே. (ச)

உருவிற்றிகழுமுமையாள்பங்கரிமையோர்பெருமானர்
செருவிலொருகால்வேளையுன்றிச்செந்தீயெழுவித்தார்
பருவிக்குறவர்புனத்திற்குவித்தபருமாமணிமுத்த
மருவித்திரளோடிழியுஞ்சாரலண்ணாமலையாரே. (ஞ)

எனத்தோழுழியடியாரேத்தவிமையோர்பெருமானர்
நினைத்துத்தொழுவார்பாவந்தீர்க்குநிமலருறைகோயில்

கனைத்தமேகாணுதாயன்கைமேற்குழலாத
வனைத்துஞ்சென்றுதிரளுஞ்சாரலண்ணுமலையாரே. (சு)

வந்தித்திருக்குமடியார்தங்கள்வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும்பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினுசைமுதுகல்வரைகளதிர்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரலண்ணுமலையாரே. (எ)

மறந்தான்கருதிவலியைநினைந்துமாருயெடுத்தான்றே
னிறந்தான்மூரியுநெரியவூன்றிநிறையவருள்செய்தார்
திறந்தான்காட்டியருளாயென்றுதேவரவர்வேண்ட
வறந்தான்காட்டியருளிச்செய்தாரண்ணுமலையாரே. (அ)

தேடிக்காணர்திருமால்பிரமன்றேவர்பெருமானை
மூடியோங்கிமுதுவேயுருத்தமுத்தம்பலகொண்டு
கூடிக்குறவர்மடவார்குவித்துக்கொள்ளவம்மினென்
றூடிப்பாடியளக்குஞ்சாரலண்ணுமலையாரே. (கூ)

தட்டையிடுகித்தலையைப்பறித்துச்சமணேநின்றுண்ணும்
பிட்டர்சொல்லுக்கொள்ளவேண்டாபேணித்தொழுமின்கள்
வட்டமூலையாளுமையாள்பங்கர்மன்னியுறைகோயி
லட்டமாளித்திரள்வந்தணையுமண்ணுமலையாரே. (கo)

அல்லாடரவமியங்குஞ்சாரலண்ணுமலையானை
நல்லார்பரவப்படுவான்காழிஞானசம்பந்தன்
சொல்லாரம்மிந்தபாடலானபத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்கமன்னிவாழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஈங்கோய்மலை-பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானத்துயர்தண்மதிதோய்சடைமேல்மத்தமலர்சூடித்
தேனைத்தனமென்மொழிமான்விழியாளொடுபாகமாக்
கானத்திரவிலிரைகொண்டாடுங்கடவுளுலகேத்த
வேனத்திரள்வந்திழியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (க)

சூலப்படையொன்றேந்தியிரவிற்சுடுகொடிடமாக
கோலச்சடைகடாழக்குழல்யாழ்மொந்தைகொட்டவே
பாலொத்தனையமொழியாள்காணவாடும்பரமனு
லேலத்தொடுநல்லிலவங்கமூழீங்கோய்மலையாரே. (உ)

கண்கொணுதலார்கறைகொண்மிடற்றார்கரியினுரிதோலார்
விண்கொண்மதிசேர்சடையார்விடையார்கொடியார்வெண்ணீறு

பெண்கொடிருமார்பதனிற்பூசும்பெம்மானெமையாள்வா
ரெண்குமரியுந்திரியுஞ்சாரலீங்கோய்மலையாரே. (ரு)

மறையின்னிசையார்நெறிமென்கூந்தன்மலையான்மகளோடுங்
குறைவெண்பிறையும்புனலுங்கிலவுங்குளிர்புன்சடைதாழப்
பறையுங்குழலுங்கழலுமார்ப்பப்படுகாட்டெரியாடு
மிறைவர்சிறைவண்டறையூஞ்சாரலீங்கோய்மலையாரே. (ச)

கொந்தகுடலைப்பொடிநீறணிவார்நுதல்சேர்கண்ணினர்
கந்தமலர்கள்பலவுநிலவுகமழ்புன்சடைதாழப்
பந்தொண்விரலாள்பாகமாகப்படுகாட்டெரியாடு
மெந்தமடிகள்கடிகொள்சாரலீங்கோய்மலையாரே. (டு)

நீரூரகலமுடையார்நிரையார்கொன்றையரவோடு
மாரூர்சடையாரயில்வெங்கணையாலவுணர்புரமூன்றுஞ்
சீரூவெரிசெய்தேவர்பெருமான்செங்கணடல்வெள்ளே
யேரூர்கொடியாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (சு)

வினையாயினதீர்த்தருளேபுரியும்விகிர்தன்விரிகொன்றை
நனையார்முடிமேன்மதியஞ்சூடுநம்பர்நலமல்கு
தனையார்கமலமலர்மேலுறைவான்றலையோடனலேந்து
மெனையாளுடையானுமையாளோடுமீங்கோய்மலையாரே. (எ)

பரக்கும்பெருமையிலங்கையென்னும்பதியிற்பொலிவாய
வரக்கர்க்கிறைவன்முடியுந்தோளுமணியார்விரல்தன்னு
னெருக்கியடர்த்துநிலாபோற்றியென்றுன்றேத்த
விரக்கம்புரிந்தாருமையாளோடுமீங்கோய்மலையாரே. (அ)

வரியார்புலியினுரிதோலுடையான்மலையான்மகளோடும்
பிரியாதுடனுயாடல்பேணும்பெம்மான்றிருமேனி
யரியோடயனுமறியாவண்ணமளவில்பெருமையோ
டெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானீங்கோய்மலையாரே. (கூ)

பிண்டியென்றுபெயராகிற்கும்பிணங்குஞ்சமணரு
மண்டைகலனுக்கொண்டுகிரியுமதியிலதேரரு
முண்டிவயிறுருளைகள்கொள்ளாதுமையோடினனி
ரண்டைச்சடையானிமையோர்பெருமானீங்கோய்மலையாரே. (கo)

விழவாரொலியுமுழவுமோவாவேணுபுரந்தன்னு
ளழலார்வண்ணத்தடிகளருள்சேரணிகொள்சம்பந்த
னெழிலார்சுனையும்பொழிலும்புடைசூழீங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல்பத்தும்வல்லார்கவலைகழல்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருநறையூர்ச்சித்தீச்சரம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

பிறைகொள்சடையர்புலியினுரியர்பேழ்வாய்நாகத்தர்
கறைகொள்கண்டர்கபாலமேந்துங்கையர்கங்காளர்
மறைகொள்கீதம்பாடச்சேடர்மனையில்மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டுதேனுர்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (க)

பொங்கார்சடையர்புனலரனலர்பூதம்பாடவே
தங்காதலியுந்தாமுமுடனுய்த்தனியோர்விடையேறிக்
கொங்கார்கொன்றைவன்னிமத்தஞ்சூடிக்குளிர்பொய்கைச்
செங்காலன்னம்பெடையுஞ்சேருஞ்சித்தீச்சரத்தாரே. (உ)

முடிகொள்சடையர்மூனவெண்மதியர்மூவர்மேனிமேற்
பொடிகொணூலர்புலியினதளர்புரிபுன்சடைதாழக்
கடிகொள்சோலைவயல்சூழ்மதிவிற்கயலாரினம்பாயக்
கொடிகொள்மாடக்குழாமார்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ங)

பின்முழ்சடைமேனகுவெண்டலையர்பிரமன்றலையேந்தி
மின்முருவிற்சங்கார்குழைதான்மிளிருமொருகாதர்
பொன்முழ்கொன்றைசெருந்திபுன்னைபொருந்துசெண்பகஞ்
சென்முர்செல்வத்திருவார்நறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ச)

நீரார்முடியர்கறைகொள்கண்டர்மறைகணிறைநாவர்
பாரார்புகழாற்பத்தர்சித்தர்பாடியாடவே
தேரார்வீதிமுழவர்விழவினொலியுந்திசைசெல்லச்
சீரார்கோலம்பொலியுநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ஞ)

நீண்டசடையர்நிரைகொள்கொன்றைவிரைகொள்மலர்மாலை
தூண்டுசுடர்பொன்னெளிகொள்மேனிப்பவளத்தெழிலார்வந்
தீண்டுமாடமெழிலார்சோலையிலங்குங்கோபுரந்
தீண்டுமதியந்திகழுநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (ட)

குழலார்சடையர்கொக்கினிறகர்கோலநிறமத்தந்
தழலார்மேனித்தவளநீற்றர்சரிகோவணக்கிள
மொழிலார்நாகம்புலியினுடைமேலிசைத்துவிடையேறிக்
கழலார்சிலம்புபுலம்பவருவார்சித்தீச்சரத்தாரே. (எ)

கையார்கடல்சூழிலங்கைமன்னன்கயிலைமலைதன்னை
வையார்தோளாலெடுக்கமுடிகணெரிந்துமனமொன்றி
யுரையார்தீந்தமிழ்பாடநல்லவுவப்பிலருள்செய்தார்
நிரையார்புனல்சூழ்செல்வநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (அ)

நெடியான்பிரமனேடிக்காணர்நினைப்பார்மகத்தாரா
யடியாரவருமருமாமறையுமண்டத்தமரரு

முடியால்வணங்கிக்குணங்களேத்திமுதல்வாவருளென்னச்
செடியார்செங்நெற்றிகமூநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (கூ)

நின்றுண்சமணரிருந்துண்டேரர்தீண்டபோர்வையா
ரொன்றுமுணராவுமர்வாயிலுரைகேட்டுழல்வீர்காள்
கன்றுண்பயப்பாலுண்ணமுலையிற்கபாலமயல்பொழியச்
சென்றுண்டார்ந்துசேருநறையூர்ச்சித்தீச்சரத்தாரே. (கo)

குயிலார்கோலமாதவிகள்குளிர்பூஞ்சுரபுன்னை
செயிலார்பொய்கைசேருநறையூர்ச்சித்தீச்சரத்தாரை
மயிலார்சோலைசூழ்ந்தகாழிமல்குசம்பந்தன்
பயில்வார்க்கினியபாடல்வல்லார்பாவநாசமே. (கக)

திருச்சிற்றமபலம.

திருக்குடந்தைக் காரோணம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வாரார்கொங்கைமாதோர்பாகமாகவார்சடை
நீரார்கங்கைதிங்கள்சூடிநெற்றியொற்றைக்கண்
கூரார்மழுவொன்றேந்தியந்தண்குழகன்குடமூக்கிற்
காரார்கண்டத்தெண்டோளெந்தைகாரோணத்தாரே. (க)

முடியார்மன்னர்மடமான்விழியார்மூவுலகும்மேத்தும்
படியார்பவளவாயார்பலரும்பரவிப்பணிந்தேத்தக்
கொடியார்விடையார்மாடவீதிக்குடந்தைக்குழகாருங்
கடியார்சோலைக்கலவமயிலார்காரோணத்தாரே. (உ)

மலியார்மங்கைபங்கரங்கையனலர்மடலாருங்
குலையார்தெங்குகுளிர்கொள்வாழையழகார்குடமூக்கின்
முலையாரணிபொன்முனைவெண்ணகையார்மூவாமதியினர்
கலையார்மொழியார்காதல்செய்புங்காரோணத்தாரே. (ங)

போதார்புனல்சேர்கந்தமுந்திப்பொலியவழகாருந்
தாதார்பொழில்சூழ்ந்தெழிலார்புறவிலந்தண்குடமூக்கில்
மாதார்மங்கைபாகமாகமனைகள்பலிதேர்வார்
காதார்குழையர்காளகண்டர்காரோணத்தாரே. (ச)

பூவார்பொய்கையலர்தாமரைசெங்கழுநீர்புறவெல்லாந்
தேவார்சிந்தையன்தனுளர்சீராலடிபோற்றக்
கூவார்குயில்களாலுமயில்களின்சொற்கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந்தழகார்குடந்தைக்காரோணத்தாரே. (ஞ)

மூப்பூர்நலியதெதியார்விதியாய்முன்னேயனல்வாளி
கோப்பார்பார்த்தனிலைகண்டருளுங்குழகர்குடமூக்கில்

நீர்ப்பாருடலிலடினேயவலம்வினைகளையாமைக்
காப்பார்காலனடையாவண்ணங்காரோணத்தாரே. (கூ)

ஊனுர்தலிகையேந்தியுலகம்பலிதேர்ந்துழல்வாழ்க்கை
மானுர்தோலார்புலியினுடையார்கரியினுரிபோர்வை
தேனுர்மொழியார்திளைத்தங்காடித்திகழுங்குடமூக்கிற்
கானுர்கட்டமுடையார்செல்வக்காரோணத்தாரே. (எ)

வனையார்திரடோள்மதவாளரக்கனெடுப்பமலைசேரும்
வினையார்பாதநுதியாலூன்றநெரிந்துசிரம்பத்து
முனையார்கீதம்பாடக்கேட்டங்கொளிவாள்கொடுத்தாருங்
கனையார்பொன்னிசூழ்தண்குடந்தைக்காரோணத்தாரே. (அ)

கரியமாலுஞ்செய்யபூமேலயனுங்கழறிப்போ
யரியவண்டந்தேடிப்புக்குமளக்கவொண்கிலார்
தெரியவரியதேவர்செல்வந்திகழுங்குடமூக்கிற்
கரியகண்டர்காலகாலர்காரோணத்தாரே. (கூ)

நாணுரமணர்நல்லதறியார்நாளுங்குரத்திகள்
பேணுர்தூமெய்மாசுகழியார்பேசேலவரோடுஞ்
சேணுர்மதிதோய்மாடமல்குசெல்வநெடுவீதிக்
கோணுகரமென்றுடையார்குடந்தைக்காரோணத்தாரே. (கo)

கருவார்பொழில்சூழ்ந்தழகார்செல்வக்காரோணத்தானைத்
திருவார்செல்வமல்குசண்பைத்திகழுஞ்சம்பந்த
னுருவார்செஞ்சொன்மாலையிவைபத்துரைப்பாருலகத்துக்
கருவாரிடும்பைப்பிறப்பதறத்துக்கவலைகழிவாரே. (க்க)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமி-சோமநாதர்-தேவி-தேனுர்மொழியம்மை.

திருக்கானுர் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

வானுர்சோதிமன்னுசென்னிவன்னிபுனங்கொன்றைத்
தேனுர்போதுதானுர்கங்கைதிங்களொடுசூடி
மானேர்நோக்கிகண்டங்குவப்பமாலையாடுவார்
கானுர்மேயகண்ணுர்நெற்றியானுர்செல்வரே. (க)

நீந்தலாகாவெள்ளமூழ்குநீள்சடைதன்மேலோ
ரேய்ந்தகோணற்பிறையோடரவுகொன்றையெழிலாரப்
போந்தமென்சொலின்பம்பயந்தமைந்தரவர்போலாங்
காந்தள்விம்முகானுர்மேயசாந்தநீற்றரே (உ)

நிறையார்வண்டுந்தேனும்விம்முசெய்யமலர்க்கொன்றை
மறையார்பாடலாடலோடுமல்விடைமேல்வருவா
ரிறையார்வந்தெனில்புகுந்தெனெழிலழுங்கொண்டார்
கறையார்சோலைக்கானுர்மேயபிறையார்சடையாரே. (ங)

விண்ணுர்திங்கட்கண்ணிவெள்ளைமாலையதுசூடித்
தண்ணுரக்கோடாமைபூண்டதழைபுன்சடைதாழ
வெண்ணுவந்தெனில்புகுந்தங்கெவ்வநோய்செய்தான்
கண்ணுர்சோலைக்கானுர்மேயவிண்ணுர்பெருமானே. (ச)

தார்கொள்கொன்றைக்கண்ணியோடுந்தண்மதியஞ்சூடி
சீர்கொள்பாடலாடலோடுசேடராய்வந்து
ஊர்கடோறுமையமேற்றென்னுள்வெங்நோய்செய்தார்
கார்கொள்சோலைக்கானுர்மேயகறைக்கண்டத்தாரே. (ஞ)

முளிவெள்ளெலும்புநீறுதானுமூழ்குமார்பரா
யெளிவந்தார்போலையமென்றெனில்லேபுகுந்துள்ளத்
தெளிவுகானுங்கொண்டகள்வர்தேறலார்பூவிற்
களிவண்டியாழ்செய்கானுர்மேயவொளிவெண்பிறையாரே. (ஞ)

மூவாவண்ணர்மூவெண்பிறையர்முறுவல்செய்திங்கே
பூவார்கொன்றைபுனைந்துவந்தார்பொக்கம்பலபேசிப்
போவார்போலமால்செய்துள்ளம்புக்கபுரிதாலர்
தேவார்சோலைக்கானுர்மேயதேவதேவரே. (எ)

தமிழினீர்மைபேசித்தாளம்வீணைபண்ணிநல்ல
முழவமொந்தைமல்குபாடல்செய்கையிடமோவரர்
குமிழின்மேனிதங்குகோலநீர்மையதுகொண்டார்
கமழுஞ்சோலைக்கானுர்மேயபவளவண்ணரே. (அ)

அந்தமாதியயனுமாலுமார்க்குமறிவரியான்
சிந்தையுள்ளுராவின்மேலுஞ்சென்னியுமன்னினுன்
வந்தென்னுள்ளம்புகுந்துமாலிகாலையாடுவான்
கந்தமல்குகானுர்மேயவெந்தைபெம்மானே. (கூ)

ஆமையரவோடினவெண்கொம்பக்குமாலைபூண்
தீமோர்கள்வர்வெள்ளரிபோலவுள்வெங்நோய்செய்தா
ரோமவேதநான்முகனுங்கோணகேணையானுஞ்
சேமமாயசெல்வர்கானுர்மேயசேடரே. (கo)

கழுதுதுஞ்சுங்கங்குலாதுங்கானுர்மேயானைப்
பழுதிலீஞானசம்பந்தன்சொற்பத்தும்பாடியே

தொழுதுபொழுதுதோத்திரங்கள்சொல்லித்துதித்துநின்
றழுதுதக்குமன்புசெய்வாரல்லலறுப்பாரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செம்மேனிநாதர்-தேவியார்-சிவயோகநாயகியம்மை.

திருப்புறவம் - பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

நறவநிறைவண்டறைதார்க்கொன்றைநயந்துசயகத்தாற்
சுறவஞ்செறிவண்கொடியோனுடலம்பொடியாவிழிசெய்தான்
புறவமுறைவண்பதியாமதியார்புரமூன்றெரிசெய்த
விறைவனறவனிமையோரேத்தவமையோடிருந்தானே. (க)

உரவன்புலியினுரிதோலாடையுடைமேற்படநாகம்
விரவிவிரிபூங்கச்சாவசைத்தவிகிர்தனுகிர்தன்னூர்
பொருவெங்களிறுபிளிறவுரித்துப்புறவம்பதியாக
விரவும்பகலுமிமையோரேத்தவமையோடிருந்தானே. (உ)

பந்தமுடையபூதம்பாடப்பாதஞ்சிலம்பார்க்க
கந்தமல்குகுழலிகாணக்கரிகாட்டெரியாடி
யந்தண்கடல்சூழ்ந்தழகார்புறவம்பதியாவமர்வெய்தி
யெந்தம்பெருமானிமையோரேத்தவமையோடிருந்தானே. (ங)

நினைவார்நினையவினியான்பனியார்மலர்தூய்நித்தலுங்
கனையரர்விடையொன்றுடையான்கங்கைதிங்கள்கமழ்கொன்றை
புனைவார்சடையின்முடியான்கடல்சூழ்புறவம்பதியாக
வெனையாளுடையானிமையோரேத்தவமையோடிருந்தானே. (ச)

செங்கணரவகருவெண்டலையுமுகிழ்வெண்டிங்களுந்
கங்கைதனைக்கரந்தகறைக்கண்டன்கருதுமிடஞ்
செங்கயல்வார்கழனிதிகழும்புகலிதனைச்சென்றுத
மங்கையினற்றொழுவாரவலம்மறியாரே. (எ)

வல்லியதுண்ணிடையாளுமையாள்விருப்பனவனண்ணு
நல்லிடமென்றறியானலியும்விறலரக்கன்
பல்லொடுதோணெரியவிரலூன்றிப்பாடலுமேகைவா
ளொல்லையருள்புரிந்தாணையும்புகலியதே. (அ)

தாதலர்தாமரைமேலயனுந்திருமாலுந்தேடி
யோதியுங்காண்பரியவுமைகோனுறையுமிடம்
மாதவிவான்வகுளமலர்ந்தெங்கும்விரைதோயவாய்ந்த
போதலர்சோலைகள்சூழ்புகலிப்பதிதானே. (கூ)

வெந்துவர்மேனியினர்விரிகோவணஞ்சாத்தார்சொல்லும்
மந்தரஞானமெல்லாமவையோர்பொருளென்னேல்
வந்தெதிரும்புரமூன்றெரித்தாணைகொயில்வாய்ந்த
புந்தியினர்பயிலும்புகலிப்பதிதானே. (கo)

வேதமோர்நான்குமூணர்வாணர்தொழுதேத்தமிகுவாசப்
போதனைப்போன்மறையோர்பயிலும்புகலிதன்னுள்
நாதனைஞானமிகுசம்பந்தன்றமிழ்மாலைநாவி
லோதவல்லாருலகிலுறுநோய்களைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவூர் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பாடலனன்மறையன்படிபட்டகோலத்தன்றிங்கள்
சூடலனமூவிலையசூலம்வலனேந்திக்
கூடலர்மூவெயிலுமெரியுண்ணக்கூரெரிகொண்டெல்லி
யாடலனிரையனூரமர்ந்தானே. (க)

சோலையில்வண்டினங்கள்சுரும்போடிசைமுரலச்சூழ்ந்த
வாலியின்வெம்புகைபோய்முகிரேயுமாரூரிற்
பாலொடுநெய்தயிரும்பயினறுநம்பரமேட்டிபாதங்
காலையுமாலையும்போய்ப்பணிதல்கருமமே. (உ)

உள்ளமோரிச்சையினுகந்தேத்தித்தொழுமின்னுண்டூர்மெய்ப்பே
கள்ளமொழிந்திடுமின்கரவாதிருபொழுதும்
வெள்ளமோர்வார்சடைமேற்கரந்திட்டவெள்ளேற்றுன்மேய
வள்ளலகன்கழனியாரூரடைவோமே. (ஊ)

வெந்துறுவெண்மழுவாட்படையான்மணிமிடற்றினரையி
னந்தலையாடரவமசைத்தானணியாரூர்ப்
பைந்தளிர்க்கொன்றையந்தார்ப்பரமன்னடிபரவப்பாவ
நைந்தறும்வந்தணையுநாடொறுநல்லனவே. (எ)

வீடுபற்றப்பெளிதாமதனினவுதிரல்வெய்ய
காடிடமாகின்றுகனலேந்திக்கைவீசி
யாடுமவிர்சடையானவன்மேயவாரூரைச்சென்று
பாடுதல்கைதொழுதல்பணிதல்கருமமே. (ஏ)

கங்கையோர்வார்சடைமேற்கரந்தான்கிளிமழலைக்கேடில்
மங்கையோர்கூறுடையான்மறையான்மழுவேந்து
மங்கையினனடியேபரவியவன்மேயவாரூர்
தங்கையினற்றொழுவார்தமமாற்றறுப்பாரே. (ஐ)

நீறணிமேனியனுய்நிரம்பாமதிசூடிநீண்ட
வாறணிவார்சடையானுரினிதமர்ந்தான்
சேறணிமாமலர்மேற்பிரமன்சிரமரிந்தசெங்க
ணேறணிவெல்கொடியானவனெம்பெருமானே. (எஅ)

வல்லியந்தோலுடையான்வளர்திங்கட்கண்ணியினன்வாய்ந்த
நல்லியனன்முகத்தோன்றலையின்னறவேற்று
னல்லியங்கோதைதன்னேயாகத்தமர்ந்தருள்யாரூர்ப்
புல்லியபுண்ணியனைத்தொழுவாரும்புண்ணியரே. (கூ)

செந்துவராடையினருடைவிட்டுநின்றுழல்வார்சொன்ன
விந்திரஞாலமொழிந்தின்புறவேண்டுதிரே
லந்தரமூவெயிலுமரணம்மெரியூட்டியாரூர்த்
தந்திரமாவுடையானவனெந்தலைமையனே. (கo)

நல்லபுனற்புகலித்தமிழ்ஞானசம்பந்தனல்ல
வல்லிமலர்க்கழனியாரூரமர்ந்தானை
வல்லதோரிச்சையினல்வழிபாடிவைபத்தும்வாய்க்கச்
சொல்லுதல்கேட்டல்வல்லார்துன்பந்துடைப்பாரே. திருச்சிற்றம்பலம்.

EFEO_TVG_149-080 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

* திரு ஊறல் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மாறிலவுணரரணம்மவைமாயவோர்வெங்கணியாலன்று
நீறெழவெய்தவெங்கணிமலனிடம்வினவிற்
றேறலிரும்பொழிலுந்திகழ்செங்கயல்பாய்வயலுஞ்சூழ்ந்த
ஊறலமர்ந்தபிரானெலியார்கழலுள்குதுமே. (க)

மத்தமதக்கரியைமலையான்மகளஞ்சவன்றுகையால்
மெத்தவுரித்தவெங்கள்விமலன்விரும்புமிடம்
தொத்தலரும்பொழில்சூழ்வயல்சேர்ந்தொளிநீலகாளுங்கயல
மொத்தலருங்கழனித்திருவூறலையுள்குதுமே. (உ)

ஏனமருப்பினெமிழிலாமையும்பூண்டழகார்ந்நன்றும்
கானமர்மான்மறிக்கைக்கடவுள்கருதுமிடம்
வானமதிதடவும்வளர்சோலைகள்சூழ்ந்தழகார்ந்மை
யூனமறுத்தபிரான்றிருவூறலையுள்குதுமே. (ங)

நெய்யணிமூவிலைவேனிறைவெண்மழுவும்மனலுமன்று
கையணிகொள்கையினன்கடவுள்ளிடம்வினவின்
மையணிகண்மடவாரவர்தாம்பலர்வந்திறைஞ்சமன்னிநம்மை
யுய்யும்வகைபுரிந்தான்றிருவூறலையுள்குதுமே. (ச)

எண்டிசையோர்மகிழவெழின்மாலையும்போனகமும்பண்டு
தண்டிதொழவளித்தானவன்றூமிடம்வினவிற்
கொண்டல்கடங்குபொழிற்குளிர்பொய்கைகள்சூழ்ந்துநஞ்சை
யுண்டபிரானமருந்திருவூறலையுள்குதுமே. (ஞ-சூ-எ)

கறுத்தமனத்தினெடுங்கடுங்காலன்வந்தெய்ததலுங்கலங்கி
மறுக்குமுமாணிக்கருளமகிழ்ந்தானிடம்வினவிற்
செறுத்தெழுவாளரக்கன்சிரந்தோளுமெய்யுநெரியவன்று
ஊறுத்தருள்செய்தபிரான்றிருவூறலையுள்குதுமே. (அ)

நீரின்மிசைத்துயின்றோனிறைகான்முகனுமறியாதன்று
தேரும்வகைநிமிர்ந்தானவன்சேருமிடம்வினவிற்
பாரின்மிசையடியார்பலர்வந்திறைஞ்சமகிழ்ந்தாக
மூருமரவசைத்தான்றிருவூறலையுள்குதுமே. (கூ)

பொன்னியல்வேரத்தார்புனைத்தட்டையர்மோட்டமணர்குண்ட
ரென்னுமிவர்க்கருளாவீசனிடம்வினவிற்
றென்னெனவண்டினங்கள்செறியார்பொழில்சூழ்ந்தழகார்ந்நன்னீ
புன்னவிலைகெடுப்பான்றிருவூறலையுள்குதுமே. (கஎ)

* இது ஊறலனன்பது தக்கேசலம்.

கோடலிரும்புறவிற்கொடிமாடக்கொச்சையர்மன்மெச்ச
வோடுபுனல்சடைமேற்கறந்தான்றிருவூறல்
நீடலரும்புகழான்மிகுஞானசம்பந்தன்சொன்னகல்ல
பாடல்கள்பத்தும்வல்லார்பரலோகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது - தக்கேசலமென வழங்குகின்றது. தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - உமாபதிசுவரர் - தெலியாரு - உமையம்மை.

திருவாலம்

திருக்கொடிமாடச்செங்குன்றூர் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்ணீறணிந்துவிரிநூறிகழ்மார்பினல்ல
பந்தணவும்விரலாளொருபாகமமர்ந்தருளிக்
கொந்தணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்கின்ற
வந்தணனேத்தொழுவாரவலம்மறுப்பாரே. (க)

அலைமலிதண்புனலோடரவஞ்சடைக்கணிந்தாக
மலைமகள்கூறுடையான்மலையாரிளவாழைக்
குலைமலிதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்கின்ற
தலைமகனேத்தொழுவார்தமொற்றறுப்பாரே. (உ)

பாலனநீறுபூசிநிகழ்மார்பிற்பல்வளைக்கைகல்ல
வேலமலர்க்குழலாளொருபாகமமர்ந்தருளிக்
கோலமலர்ப்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மல்கு
நீலகண்மாமிடற்றுறைகழலேத்தல்நீதியே. (ங)

வாருறுகொங்கைகல்லமடவாளிகழ்மார்பினண்ணு
காருறுகொன்றையொடுங்கதகம்பூண்டருளிச்
சீருறுமந்தணர்வாழ்கொடிமாடச்செங்குன்றூர்கின்ற
நீருறுசெஞ்சடையான்கழலேத்தல்நீதியே. (ச)

பொன்றிகழ்மாமையொடுபுரிநூறிகழ்மார்பினல்ல
பன்றியின்கொம்பணிந்துபவளத்தோளியோர்பாகமாகக்
குன்றனமாளிகைசூழ்கொடிமாடச்செங்குன்றூர்வானின்
மின்றிகழ்செஞ்சடையான்கழலேத்தல்மெய்ப்பொருளே. (ஞ)

ஓங்கியமூவிலைநற்சூலமொருகையன்சென்னி
தாங்கியகங்கையொடுமதியஞ்சடைக்கணிந்து
கோங்கணவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்வாய்ந்த
பாங்கனதாடொழுவார்வினையாயபற்றறுமே. (அ)

நீடலர்கொன்றையொடுநிமிர்புன்சடைதாழவெள்ளை
வாடலுடைதலையிற்பலிகொள்ளும்வாழ்க்கையனுய்க்

EFEO_TVG_149-081 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கோடல்வளம்புறவிற்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
சேடனதாள்தொழுவார்வினையாயதெயுமே. (எ)

மத்தஞ்மாமலரும்மதியும்வளர்கொன்றையுடன்றுன்று
தொத்தலர்செஞ்சடைமேற்றுதையவுடன்சூடிக்
கொத்தலர்தண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
தத்துலனைத்தொழுவார்தமைற்றறுப்பாரே. (அ)

செம்பொனின்மேனியனும்பிரமன்திருமாலுந்தேடநின்ற
வம்பவளத்திரள்போலொளியாயவரதிபிரான்
கொம்பனவும்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்மேய
நம்பனதாடொழுவார்வினையாயநாசமே. (கூ)

போதியர்பிண்டியரென்றிவர்கள்புறங்கூறும்பொய்ந்நூ
லோதியகட்டுரைகேட்டுழல்வீர்வரிக்குயில்கள்
கோதியதண்பொழில்சூழ்கொடிமாடச்செங்குன்றூர்நின்ற
வேதியனைத்தொழுமின்வினையானவிடுமே. (கூ)

அலைமலிதண்புனல்சூழ்ந்தழகார்புகலிங்கர்பெனுங்
தலைமகனுகிந்றதமிழ்ஞானசம்பந்தன்
கொலைமலிமுவிலையால்கொடிமாடச்செங்குன்றூரைத்து
நலமலிபாடல்வல்லார்வினையானநாசமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

இது - திருச்செங்கோடு என வழங்குகின்றது.

திருப்பாதாளீச்சுரம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மின்னியல்செஞ்சடைமேல்விளங்கும்மதிமத்தமொடுகல்ல
பொன்னியல்கொன்றையினன்புனல்சூடிப்பொற்பமரு
மன்னமனடையாளொருபாகத்தமர்ந்தருளிநாளும்
பன்னியபாடலினுறைகோயில்பாதாளே. (எ)

நீடலர்கொன்றையொடுநிரம்பாமதிசூடிவெள்ளைத்
தோடமர்காதினல்லகுழையனசுடுநீற்று
னுடரவம்பெருகவனலேந்திக்கைவிசிவேதம்
பாடலினுலினியாறைகோயில்பாதாளே. (உ)

நாகமும்வான்மதியுலவுசெஞ்சடையான்சாமம்
போகநல்வில்வரையாற்புரமூன்றெரித்துகந்தான்
மேருகைனன்மாமயில்போல்வளர்சாயற்றூமொழியைக்கூடப்
பாகமும்வைத்துகந்தாறைகோயில்பாதாளே. (ஊ)

அங்கமுநான்மறையுமருள்செய்தழகார்ந்தவஞ்சொன்
மங்கையோர்கூறுடையான்மறையாறைகோயில்

செங்கயனின்றுகளுஞ்செறுவிற்றிகழ்கின்றசோதிப்
பங்கயனின்றலரும்வயல்சூழ்ந்தபாதாளே. (ச)

பேய்பலவுந்நிலவப்பெருங்காடரங்காகவுன்னிநின்று
தியொடுமான்மறியுமமுவுந்திகழ்வித்துத்
தேய்பிறையும்மரவும்பொலிகொன்றைச்சடைதன்மேற்சேரப்
பாய்புனலுமுடையாறைகோயில்பாதாளே. (ஞ)

கண்ணமர்நெற்றியினன்கமழ்கொன்றைச்சடைதன்மேனின்றும்
விண்ணியன்மாமதியுமுடன்வைத்தவன்விரும்பும்
பெண்ணமர்மேனியினன்பெருங்காடரங்காகவாடும்
பண்ணியல்பாடலினுறைகோயில்பாதாளே. (சு)

விண்டலர்மத்தமொடுமிளிரும்மிளாகமன்னிதிகழ்
வண்டலர்கொன்றைசுமதிபுல்சுவார்சடையான்
விண்டவர்தம்புரமூன்றெரிசெய்தவைவேதநான்குமவை
பண்டிசைபாடலினுறைகோயில்பாதாளே. (எ)

மல்கியநுண்ணிடையாளுமைநங்கைமறுகவன்றுசையாற்
றெல்லிலமீலியெடுத்தவரக்கன்றலைதாளைரித்தான்
கொல்லிவிடைபுகந்தான்குளிர்திங்கள்சடைக்கணிந்தோனலி
பல்லிசைபாடலினுறைகோயில்பாதாளே. (அ)

தாமரைமேலயனுமரியுந்தமதாள்வினையாற்றேடிக்
காமனைவீடுவித்தான்கழல்காண்பிலராயகன்றூர்
பூமருவுஞ்சுழலாளுமைநங்கைபொருந்தியிட்டநல்
பாமருவுங்குணத்தானுறைகோயில்பாதாளே. (கூ)

காலியிலுண்பவருஞ்சமண்கையருங்கட்டுரைவிட்டன்
றூலவிடதுகர்ந்தானவன்றன்னடியேபரவி
மாலியல்வண்டினங்கண்மதுவுண்டிசைமுரலவாய்த்த
பாலியாழ்ப்பாட்டுகந்தானுறைகோயில்பாதாளே. (கஉ)

பன்மலர்வைகுபொழில்புடைசூழ்ந்தபாதாளைச்சேரப்
பொன்னியன்மாடமல்குபுகலிங்கர்மன்னன்
றன்னெளிமிக்குயர்ந்ததமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
வின்னிசைபத்தும்வல்லாரெழில்வானத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிரபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வாருறுவனமுலைமங்கைபங்க, னீருறுசடைமுடிமிலனிடங்
காருறுகடிபொழில்சூழ்ந்தழகார், சீருறுவளவயற்சிரபுரமே. (க)

அங்கமொடருமறையருள்புரிந்தான், றிங்களொடரவணிதிகழ்முடியன
மங்கையொடினிதுறைவளருகரஞ், செங்கயன் மிளிர்வயற்சிரபுரமே. (உ)

பரிந்தவன்பன்முடியமரர்க்காகித், திரிந்தவர்புரமவைதியின்வேவ
வரிந்தவெஞ்சிலைபிடித்தடுசரத்தைத், தெரிந்தவன்வளருகர்சிரபுரமே. (ஈ)

றீறணிமேனியனீண்மதியோ, டாறணிசடையினனணியிழையோர்
கூறணிந்தினிதுறைருளிர்ருகரஞ், சேறணிவளவயற்சிரபுரமே. (ச)

அருந்திறலவுணர்களரணழியச், சரந்துரந்தெரிசெய்தசங்கரனூர்
குருந்தொடுகொடிவிடுமாதவிக, டிருந்தியபுறவணிசிரபுரமே. (டு)

கலியவன்மறையவன்காற்றொடுதீ, மலியவன்விண்ணெடுமண்ணுமவன்
கொலியவன்கொடிமதில்கூட்டழித்த, சிலியவன்வளருகர்சிரபுரமே. (சூ)

வானமர்மதியொடுமத்தஞ்சூடித், தானவர்புரமெய்தசைவனிடங்
கானமர்மடமயில்பெடைபயிலுங், தேனமர்பொழிலணிசிரபுரமே. (எ)

மறுத்தவர்திரிபுரமாய்ந்தழியக், கறுத்தவன்காரரக்கன்முடிதோ
ளிறுத்தவனிருஞ்சினக்காலீனமூன், செறுத்தவன்வளருகர்சிரபுரமே. (அ)

வண்ணருன்மலருறைமறையவனுங், கண்ணனுங்கழறொழுக்கனலுருவாய்
விண்ணுறவோங்கியவிமலனிடங், திண்ணருனமதிளணிசிரபுரமே. (க)

வெற்றரையுழல்பவர்விரிதுகிலார், கற்றிலரறவுரைபுறனுரைக்கப்
பற்றலர்திரிபுரமூன்றுமவேவச், செற்றவன்வளருகர்சிரபுரமே. (கூ)

அருமறைஞானசம்பந்தனந்தண், சிரபுரருகருறைசிவனடியைப்
பரவியசெந்தமிழ்பத்துமல்லார், திருவொடுபுகழ்மல்குதேசினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மருந்தவன்வானவர்தானவர்க்கும்
பெருந்தகைபிறவினெடிறவுமாஞ
னருந்தவமுனிவரோடானிழற்கீ
ழிருந்தவன்வளருகரிடைமருதே. (க)

தோற்றவன்கேடவன்றுணைமுலையாள்
கூற்றவன்கொல்புலித்தோலசைத்த
நீற்றவனிறைபுனனீள்சடைமே
லேற்றவன்வளருகரிடைமருதே. (உ)

படையுடைமூவினன்பால்வெண்ணீற்ற
னடைகவிலேற்றினன்ஞாலமெல்லா
மூடைதலையிடுபலிகொண்டுழல்வா
னிடைமருதினிதுறையெம்மிறையே. (ஈ)

பணமுலையுமையொருபங்கனெனனூர்
துணைமதிதின்மூன்றையுஞ்சுடரின்மூழ்கக்
கணைதுரந்தடுதிறற்காலற்செற்ற
விணையிலிவளருகரிடைமருதே. (ச)

பொழிலவன்புயலவன்புயலியக்குந்
தொழிலவன்றுயரவன்றுயரகற்றுங்
கழலவன்கரியுரிபோர்த்துகந்த
வெழிலவன்வளருகரிடைமருதே. (டு)

நிறையவன்புனலொடுமதியும்வைத்த
பொறையவன்புகழவன்புகழுநின்ற
மறையவன்மறிகடனஞ்சையுண்ட
விறையவன்வளருகரிடைமருதே. (சூ)

ணிவளர்மதியொடுநாகம்வைத்த
பனிமலர்க்கொன்றையம்படர்சடையன்
முனிவரோடமரர்கண்முறைவணங்க
வினிதுறைவளருகரிடைமருதே. (எ)

தருக்கினவரக்கனதாளுந்தோளு
நெரித்தவனெடுங்கைமாமதகரியன்
றூரித்தவனென்னலர்புரங்கண்மூன்று
மெரித்தவன்வளருகரிடைமருதே. (அ)

பெரியவன்பெண்ணினேடாணுமானன்
வரியரவணைமறிகடற்றுயின்ற
கரியவனலரவன்காண்பரிய
வெரியவன்வளருகரிடைமருதே. (கூ)

சிந்தையில்சமணுடுதேரர்சொன்ன
புந்தியிலுரையவைபொருள்கொளாதே
யந்தணர் *ஓத்தினோடரவமோவா
வெந்தைதன்வளருகரிடைமருதே. (கூ)

இலைமலிபொழிலிடைமருதிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
பலமிகுதமிழ்வைபத்தும்வல்லா
ருலகுறுபுகழினோடோங்குவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

*ஓத்து என்பது - வேதம்.

EFEO_TVG_149-083 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அன்றடற்காலனைப்பாலனுக்காய்ப்
பொன்றிடவதைசெய்தபுனிதனகர்
வென்றிகொளெயிற்றுவெண்பன்றிமுன்னட்
சென்றடிவிழ்த்தருசிவபுரமே. (உ)

மலைமகண்மறுகிடமதகரியைக்
கொலைமல்கவுரிசெய்தருழகனக
ரலைமல்கும் * அரிசிலினதனயலே
சிலைமல்குமதிலணிசிவபுரமே. (ஊ)

மண்புனலனலொடுமாருதமும்
விண்புனைமருவியவிகிர்தனகர்
பண்புனைகுரல்வழிவண்டுகிண்டிச்
செண்பகமலர்பொழிற்சிவபுரமே. (எ)

வீறுகன்குடையவண்மேனிபாகங்
கூறுகன்குடையவன்குவிர்ங்கர்தா
னூறுகன்குரவிரிவண்டுகிண்டித்
தேறலுண்டெழுதருசிவபுரமே. (ஏ)

மாறெதிர்வருதிரிபுரமெரித்து
நீறதுவாக்கியநிமலகர்
நாறுடைநடுபவருழவரொடுஞ்
சேறுடைவயலணிசிவபுரமே. (ஐ)

ஆவிலேந்தமர்ந்தவனரிவையொடு
மேவிநன்கிருந்தீதார்வியனகர்தான்
பூவிலவண்டமர்தருபொய்கையன்னச்
சேவற்பெடைபுல்குசிவபுரமே. (ஒ)

எழின்மலையெடுத்தவல்லிராவணன்றன்
மூழுவலியடக்கியமுதல்வனகர்
விழவினிலெடுத்தவெண்கொடிமிடைந்து
செழுமுகிலடுக்கும்வண்சிவபுரமே. (ஓ)

சங்கவியகையன்சதுமுகனு
மங்கவமறிவரியவனகர்தான்
கங்குலும்பறவைகள்கமுகுதொறுஞ்
செங்கனிதருசிவபுரமே. (ஔ)

மண்டையிற்குண்டிகைமாசுதரு
மிண்டரைவிலக்கியவிமலனகர்
பண்டமர்தருபழங்காவிரியின்
றென்டிரைபொருதெழுசிவபுரமே. (கஂ)

*அசிலெனபது - ஒருநதி.

திருக்கடைமுடி - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அருத்தனையறவனையமுதனீர், விருத்தனைப்பாலனைவினவுதிரே
லொருத்தனையல்லதிங்குலகமேத்தும், கருத்தவன்வளநகர்கடைமுடியே. (க)

திரைபொருதிருமுடிதிங்கள்விம்மு, மரைபொருபுலியதளடிகளிடந்
திரைபொடுநுரைபொருதெண்சுனீர், கரைபொருவளநகர்கடைமுடியே()

ஆலிளமதியினோடரவுகங்கை, கோலவெண்ணீற்றனைத்தொழுதிறைஞ்சி
யேலவன்மலரொடுவிரைகமழும், காலனவளநகர்கடைமுடியே. (கூ)

கொய்யணிநறுமலர்க்கொன்றையந்தார், மையணிமிடறுடைமறையவனூர்
பையணியரவொடுமான்மழுவாட், கையணிபவனிடங்கடைமுடியே. (ச)

மறையவனுலகவன்மாயமவன், பிறையவன்புனலவனனலுமவ
னிறையவனெனவுலகேத்துங்கண்டங், கறையவன்வளநகர்கடைமுடியே. ()

படவரவேரல்குற்பல்வளைக்கை, மடவரலாளையோர்பாகம்வைத்துக்
குடதிசைமதியதுசூடிசென்னிக், கடவுடன்வளநகர்கடைமுடியே. (சு)

பொடிபுல்குமார்பினிற்புரிபுல்குசூ, லடிபுல்குபைங்கழலடிகளிடங்
கொடிபுல்குமலரொடுகுளிர்சுனீர், கடிபுல்குவளநகர்கடைமுடியே. (எ)

கோதல்செய்தரக்கனைநோக்கழியச், சாதல்செய்தவனடிசரணெனலு
மாதரவருள்செய்தவடிகளவர், காதல்செய்வளநகர்கடைமுடியே. (அ)

அடிமுடிகாண்கிலரோரிருவர், புடைபுல்கியருளென்றுபோற்றிசைப்பச்
சடையிடைப்புனல்வைத்தசதுரனிடங், கடைமுடியதனயல்காவிரியே. (கூ)

மண்ணுதல்பறித்தலுமாயமிவை, யெண்ணியகாலவையின்பமல்ல [யே.
வொண்ணுதலுமையையோர்பாகம்வைத்த, கண்ணுதல்வளநகர்கடைமுடி

பொன்றிகழ்காவிரிப்பொருபுனல்சீர், சென்றடைகடைமுடிச்சிவனடியை
நன்றுணர்ஞானசம்பந்தன்சொன்ன, வின்றமிழிவைசொலவின்பமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

கோராட்டிலுள்ளது.

சனாபிபெயர் - கடைமுடியீசுவரர் - தேவியார் - அபிராமியம்மை.

திருச்சிவபுரம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

இன்குரலிசைகெழுமியாழ்முரலத்
தன்கரமருவியசதுரனகர்
பொன்கைபொருபழங்காவிரியின்
றென்கரைமருவியசிவபுரமே. (க)

15-2
கசச திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

சிவனுறைதருசிவபுரஞகரைக்
கவணியர்குலபதிகாழியர்கோன்
றவமல்குதமிழிவைசொல்லவல்லார்
நவமொடுசிவகதிநண்ணுவரே. (டுக)

திருச்சிற்றம்பலம்.

1012

திருவல்லம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எரித்தவன்முப்புரமெரியின்மூழ்கத்
தரித்தவன்கங்கையைத்தாழ்சடைமேல்
விரித்தவன்வேதங்கள்வேறுவேறு
தெரித்தவனுறைவிடந்திருவல்லமே. (க)

தாயவனுலகுக்குத்தன்னெப்பிலாத்
தூயவன்றூமதிசூடியெல்லா
மாயவனமரர்க்குமுவிவர்கட்குஞ்
சேயவனுறைவிடந்திருவல்லமே. (உ)

பார்த்தவன்காமனைப்பண்பழியப்
போர்த்தவன்போதகத்தின்னுரிவை
யார்த்தவனன்முகன்றலையையன்று
சேர்த்தவனுறைவிடந்திருவல்லமே. (கூ)

கொய்தவமலரடிகூடுவார்தம்
மைதவழ்திருமகள்வணங்கவைத்துப்
பெய்தவன்பெருமழையுலகமுய்யச்
செய்தவனுறைவிடந்திருவல்லமே. (ச)

சார்ந்தவர்க்கின்பங்கடழைக்கும்வண்ண
நோர்ந்தவனேரிழையோடுங்கூடித்
தேர்ந்தவர்தேடுவார்தேடச்செய்தே
சேர்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (டு)

பத்தத்தெழுகாலனைப்பாதமொன்றூ
லுதைத்தெழுமாமுனிக்குண்மைநின்று
விதிர்த்தெழுதக்கன்றன்வேள்வியன்று
சிதைத்தவனுறைவிடந்திருவல்லமே. (கூ-எ)

இகழ்ந்தருவாயினையெடுக்கலுற்றூங்
ககழ்ந்தவல்லரக்கனையடர்த்தபாத
நிகழ்ந்தவர்நேடுவார்நேடச்செய்தே
திகழ்ந்தவனுறைவிடந்திருவல்லமே. (அ)

பெரியவன்சிறியவர்சிந்தைசெய்ய
வரியவனருமறையங்கமானன்
கரியவனன்முகன்காணவொண்ணாத்
தெரியவன்வளநகர்திருவல்லமே. (கூ)

அன்றியவமணர்கள்சாக்கியர்கள்
குன்றியவறவுரைகூறுவண்ணம்
வென்றவன்புலனைந்தும்விளங்கவெங்குஞ்
சென்றவனுறைவிடந்திருவல்லமே. (கo)

கற்றவர்திருவல்லங்கண்டுசென்று
நற்றமிழ்ஞானசம்பந்தன்சொன்ன
குற்றமில்செந்தமிழ்கூறவல்லார்
பற்றுவரீசன்பொற்பாதங்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வல்லநாதர்-தேவியார்-வல்லாம்பிகையம்மை.

திருமாற்பேறு - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

குருந்தவன்குருகவன்கூர்மையவன்
பெருந்தகைபெண்ணவனனுமவன்
கருந்தடமலர்க்கண்ணிகாதல்செய்யு
மருந்தவன்வளநகர்மாற்பேறே. (க)

பாறணிவெண்டலைகையினேந்தி
வேறணிபலிகொளும்வேட்கையனுய்
நீறணிந்துமையொருபாகமைவைத்த
மாறிலிவளநகர்மாற்பேறே. (உ)

கருவுடையாருலகங்கள்வேவச்
செருவிடையேறியுஞ்சென்றுநின்
றுருவுடையாளுமையாளுந்தானும்
மருவியவளநகர்மாற்பேறே. (கூ)

தலையவன்றலையணிமாலைபூண்டு
கொலைசெவில்கூற்றினைக்கொன்றுகந்தான்
கலைசெவின்முன்கையிலாயமென்னும்
மலையவன்வளநகர்மாற்பேறே. (ச)

துறையவன்றொழிலவன்றுலலுயிர்க்கும்
பிறையணிசடைமுடிப்பெண்ணேர்பாகன்

EFEO_TVG_149-085 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகள்ருளிச்செய்த

கறையணிமிடற்றண்ணல்காலற்செற்ற
மறையவன்வளநகர்மாற்பேறே. (டு)

பெண்ணினல்லாளேயோர்பாகம்வைத்துக்
கண்ணினுற்காமனைக்காய்ந்தவன்றன்
விண்ணவர்தானவர்முனிவரோடு
மண்ணவர்வணங்குநன்மாற்பேறே. (கூ-எ)

திதிலாமலியெடுத்தவ்வரக்க
னீதியால்வேதகீதங்கள்பாட
வாதியானுகியவண்ணலங்கண்
மாதிதன்வளநகர்மாற்பேறே. (அ)

செய்யதண்டாமரைக்கண்ணனேடுங்
கொய்யணிநறுமலர்மேலயனு
மையனன்சேவடியதனையுள்க
மையலசெய்வளநகர்மாற்பேறே. (கூ)

குளித்துணவமணர்குண்டாக்கரென்றுங்
களித்துநன்கழலடிகாணலுறூர்
மூளைத்தவெண்மதியினேடரவஞ்சென்னி
வளைத்தவன்வளநகர்மாற்பேறே. (கo)

அந்தமில்ஞானசம்பந்தனல்ல
செந்திசைபாடல்செய்திருமாற்பேற்றைச்
சந்தமின்றமிழ்கள்கொண்டேத்தவல்லா
ரெந்தைதன்கழலடியெய்துவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திரு இராமனதீச்சரம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சங்கொளிர்முன்கையர்தம்மிடையே
யங்கிடபலிகொளுமவன்கோபப்
பொங்கரவாடலோன்புவனியோங்க
வெங்குமனிராமனதீச்சரமே. (க)

சந்தநன்மலரணிதாழ்சடையன்
றந்தமதத்தவன்முதையோதா
னந்தமில்பாட்டலோனழகனல்ல
வெந்தவனிராமனதீச்சரமே. (உ)

தழைமயிலேரவன்முதையோதான்
மழைபொழிசடையவன்மன்னுகாதிற்

சூழையதுவிலங்கியகோலமார்பி
னிழையவனிராமனதீச்சரமே. (ஊ)

சத்தியுளாதியோர்தையல்பங்கன்
முத்தியதாகியமூர்த்தியோதா
னத்தியங்கையினிலழகுசூலம்
வைத்தவனிராமனதீச்சரமே. (ச)

தாழ்ந்தசுழற்சடைமுடியதன்மேற்
சூழ்ந்தவிளம்பிறைதுளங்குசென்னிப்
பாய்ந்தகங்கையொடுபடவரவ
மேய்ந்தவனிராமனதீச்சரமே. (டு)

சரிகுழலிலங்கியதையல்காணும்
பெரியவன்காளிதன்பெரியகூத்தை
யரியவனுடலோனங்கையோந்து
மெரியவனிராமனதீச்சரமே. (சு)

மாறிலாமாதொருபங்கன்மேனி
நீறதுவாட்லோனீள்சடைமே
லாறதுசூடுவானழகன்விடை
யேறவனிராமனதீச்சரமே. (எ)

தடவரையரக்கனைத்தலைநெரித்தோன்
படவரவாட்டியபடர்சடைய
னடமதுவாடலானுன்மறைக்கு
மிடமவனிராமனதீச்சரமே. (அ)

தனமணிதையறன்பாகன்றன்னை
யனமணியனணிமுடியுங்காணன்
பனமணிவரிபாதங்காணு
னினமணியிராமனதீச்சரமே. (கூ)

தறிபோலாஞ்சமணர்சாக்கியர்சொற்கொளே
லறிவோரானுமமறிந்துரைமின்
மறிகையோன்றன்முடிமணியார்கங்கை
யெறிபவனிராமனதீச்சரமே. (கo)

தேன்மலர்க்கொன்றையோன்
மூன்தமக்கூனமன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது - சிதலமானபதிகங்களி லொன்று.

சோழநாட்டிலுள்ளது

சுவாமிபெயர் - இராமநாதேசுவரர் - தேவியார் - கருவார்குழலியம்மை.

EFEO_TVG_149-086 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருநீலகண்டம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அவ்வினைக்கிவ்வினையாமென்றுசொல்லுமீதறிவி
ருய்வினைகாடாதிருப்பதுமுந்தமக்கூனமன்றே
கைவினைசெய்தெம்பிரான்கழல்போற்றுதுகாமடியோஞ்
செய்வினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம். (க)

காவினையிட்டுங்குளம்பலதொட்டுங்கனிமனத்தா
லேவினையாலெயின்மூன்றெரித்திரென்றிருபொழுதும்
பூவினைக்கொய்தும்மலரடிபோற்றுதுகாமடியோங்
தீவினைவந்தெமைத்தீண்டப்பெறுதிருநீலகண்டம். (உ)

முலைத்தடமூழ்கியபோகங்களுமற்றெவையுமெல்லாம்
வீலைத்தலையாவணங்கொண்டெமையாண்டவிரிசடையீ
ரிலைத்தலைச்சூலமுந்தண்டுமழுவுமிவையுடையீர்
சிலைத்தெமைத்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ஙு)

விண்ணுலகாள்கின்றவிச்சாதரர்களும்வேதியரும்
புண்ணியரென்றிருபோதுந்தொழப்படும்புண்ணியரே
கண்ணிமையாதனமூன்றுடையீருங்கழலடைந்தோங்
திண்ணியதீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ச)

மற்றிணையில்லாமலைதிரண்டன்னதிண்டோளுடையீர்
கிற்றெமையாட்கொண்டுகேளாதொழிவதுந்தன்மைகொலோ
சொற்றுணைவாழ்க்கைதுறந்துன்றிருவடியேயடைந்தோஞ்
செற்றெமைத்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (ஞ)

மறக்குமனத்தினைமாற்றியெம்மாவியைவற்புறுத்திப்
பிறப்பில்பெருமான்றிருந்தடிக்கீழ்ப்பிழையாதவண்ணம்
பறித்தமலர்கொடுவந்துமையேத்தும்பணியடியோஞ்
சிறப்பிலித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (சு-எ)

கருவைக்கழித்திட்டுவாழ்க்கைகடிந்துங்கழலடிக்கே
யுருகிமலர்கொடுவந்துமையேத்துதுகாமடியோஞ்
செருவிலரக்கனைச்சீரிலடர்த்தருள்செய்தவரே
திருவிலித்தீவினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (அ)

நாற்றமலர்மிசைநான்முகனரணன்வாதுசெய்து
தோற்றமுடையவடியுமுடியுந்தொடர்வரியீர்
தோற்றினுந்தோற்றுந்தொழுதுவணங்குதுகாமடியோஞ்
சீற்றமதாம்வினைதீண்டப்பெறுதிருநீலகண்டம். (கூ)

சாக்கியப்பட்டுஞ்சமணுருவாகியுடையொழிந்தும்
பாக்கியமின்றியிருதலைப்போகமும்பற்றுமிவிட்டார்

நோய்புல்குதோல்தினையாரைவருந்துகருடம்பி
னீபுல்குதோற்றமெல்லாநினையுள்குமடநெஞ்சே
வாய்புல்குதோத்திரத்தால்வலஞ்செய்துதலைவணங்கிப்
பாய்புலித்தோலுடையான்பருப்பதம்பரவுதுமே. (உ)

துனியுறுதுயர்தீரத்தோன்றியோர்நல்வினையா
லினியுறுபயனதலிரண்டுமனம்வையேற்
கனியுறுமரமேறிக்கருமுசுக்கழையுகளும்
பனியுறுகதிர்மதியான்பருப்பதம்பரவுதுமே. (ஙு)

கொங்கணிருறுங்கொன்றைத்தொங்கலர்குளிர்சடையா
னெங்கணெயகலநின்றுனெனவருவீசனிட
மைங்கணெவரிசிலேயானங்கணெயழகழித்த
பைங்கண்வெள்ளேறுடையான்பருப்பதம்பரவுதுமே. (ச)

துறைபலசுனைமூழ்கித்தூமலர்சுமந்தோடி
மறையொலிவாய்மொழியாலவானவர்மகிழ்ந்தேத்தச்
சிறையொலிகிளிபயிலுந்தேனினமொலியோவாப்
பறைபடுவிளங்கருவிப்பருப்பதம்பரவுதுமே. (ஞ)

சிர்கெழுசிறப்போவாச்செய்தவநெறிவேண்டி
லேர்கெழுமடநெஞ்சேயிரண்டுறமனம்வையேற்
கார்கெழுநறுங்கொன்றைக்கடவுளதிடம்வகையாற்
பார்கெழுபுகழோவாப்பருப்பதம்பரவுதுமே. (சு)

புடைபுல்குபடர்கமலம்புகையொடுவிரைகமழத்
தொடைபுல்குதுறுமாலைதிருமுடிமிசையேற
விடைபுல்குகொடியேந்திவெந்தவெண்ணீறணிவான்
படைபுல்குமழுவாளன்பருப்பதம்பரவுதுமே. (எ)

நினைப்பெனுநெடுங்கிணற்றைநின்றுநின்றயராதே
மனத்தினைவலித்தொழிந்தெனவலம்வந்தடையாமைக்
கனைத்தெழுதிரள்கங்கைகமழ்சடைக்கரந்தான்றன்
பணைத்திரள்பாயருவிப்பருப்பதம்பரவுதுமே. (அ)

மருவியவல்வினைநோயவலம்வந்தடையாமற்
றிருவுருவமர்ந்தானுந்திசைமுகமுடையானு
மிருவருமறியாமலெழுந்ததோரெரிகடுவே
பருவரையுறைமிர்ந்தான்பருப்பதம்பரவுதுமே. (கூ)

சடங்கொண்டசாத்திரத்தார்சாக்கியர்சமண்குண்டர்
மடங்கொண்டவிரும்பியராய்மயங்கியோர்பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டுநீர்க்குச்செல்வார்போதுமின்குஞ்சரத்தின்
படங்கொண்டபோர்வையினன் பருப்பதம்பரவுதுமே. (கo)

EFEO_TVG_149-087 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கடு2 திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

வெண்செநெல்வீனெகழனிவிழவொலிகமூமலத்தான்
பண்செலப்பலபாடலிசைமுரல்பருப்பதத்தை
நன்சொலினற்பரவுஞானசம்பந்தனல்ல
வொண்சொலினிவைமாலையுருவெணத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது-ஸ்ரீசைலமென்றும், மல்லிகார்ச்சுனமென்றும் வழங்குகின்றது.
வடதேசத்திலுள்ளது.
சுவாமிபெயர் - பருப்பதேசுவரர் - தேவியார் - பருப்பதமங்கையம்மை.

திருக்கள்ளில் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

முள்ளின்மென்முதுகூகைமுரலுஞ்சோலை
வெள்ளின்மேல்விடுகூரைக்கொடிவிளேந்த
கள்ளின்மேயவண்ணல்கழல்கணுளு
முள்ளுமேலுயர்வெய்தலொருகலியே. (க)

ஆடலான்பாடலானரவக்கள்பூண்டா
னேடலாற்கலனில்லானுறைபதியாற்
காடலாற்கருதாதகள்ளின்மேயான்
பாடலாம்பெரியார்கள்பரசுவாரே. (உ)

எண்ணூர்மும்மதிலெய்தவிமையாமுக்கண்
பண்ணூர்நான்மறைபாடும்பரமயோகி
கண்ணூர்நீறணிமார்பன்கள்ளின்மேயான்
பெண்ணுணும்பெருமானெம்பிஞ்ஞகனே. (ங)

பிறைபெற்றசடையண்ணல்பெடைவண்டாலுங
நறைபெற்றவிரிகொன்றைத்தார்நயந்த
கறைபெற்றமிடற்றண்ணல்கள்ளின்மேயா
னிறைபெற்றவடியார்தநெஞ்சுளானே. (ச)

விரையாலுமலராலும்விழுமைகுன்று
வுரையாலுமெதிர்கொள்ளவூராரம்மாக்
கரையார்பொன்புனல்வேலிக்கள்ளின்மேயா
னரையார்வெண்கோவணத்தண்ணலுனே. (ஞ)

நலனுயபலகொள்கைநம்பானல்ல
வலனுயமழுவாளும்வேலும்வல்லான்
கலனுயதலையோட்டான்கள்ளின்மேயான்
மலனுயதீர்த்தெய்துமாதவத்தோர்க்கே. (சு)

பொடியார்மெய்பூசினும்புறவினறவர்
குடியாவூர்திரியினுங்கூப்பிடினும்

கடியார்பூம்பொழிற்சோலைக்கள்ளின்மேயா
னடியார்பண்பிகழ்வார்களாதர்களே. (எ)

திருநீலமலரொண்கண்டேவிபாகம்
புரிநூலுந்திருநீறும்புல்குமார்பிற்
கருநீலமலர்விம்முகள்ளிலென்றும்
பெருநீலமிடற்றண்ணல்பேணுவதே. (அ)

வரியாயமலராலும்வையந்தனோ
யுரிதாயவளந்தானுமுள்ளுதற்கங்
கரியானுமரியாதகள்ளின்மேயான்
பெரியானென்றறிவார்கள்பேசுவரே. (சு)

ஆச்சியப்பேய்களோடமணர்குண்டர்
பேச்சிவைநெறியல்லபேணுமின்கள்
மாச்செய்தவளவயன்மல்குகள்ளி
நீச்செய்தசடையண்ணலிருந்தடியே. (கo)

திகைநான்கும்புகழ்சூழ்செல்வமல்கு
பகல்போலும்பேரொளியான்பந்தனல்ல
முகைமேவுமுதிர்சடையான்கள்ளிலேத்து
புகழோடுமெபெரின்பம்புகுதுமன்றே (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - சிவாநந்தேசுவரர் - தேவியார் - ஞானவல்லியம்மை.

திருவையாறு-திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பணிந்தவரருவினைபற்றறுத்தருள்செய்
துணிந்தவன்றேரொடுநூறுதைமார்பினிற்
பிணிந்தவனரவொடுபேழிலாமைகொண்
டணிந்தவன்வளநகரந்தணையாறே. (க)

கீர்த்திமிக்கவனகர்கிளரொளியுடன்டப்
பார்த்தவன்பனிமதிபடர்சடைவைத்துப்
போர்த்தவன்கரியுரிபுலியதளினை
யார்த்தவன்வளநகரந்தணையாறே. (உ)

வரிந்தவெஞ்சிலைபிடித்தவுணர்தம்வளநக
ரெரிந்தறவெய்தவனெழிறிகழ்மலர்மே
லிருந்தவன்சிரமதுவிமையவர்குறைகொள
வரிந்தவன்வளநகரந்தணையாறே. (ங)

EFEO_TVG_149-088 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வாய்ந்தவல்லவுணர்தம்வளகரெரியிடை
மாய்ந்தறவெய்தவன்வளர்பிறைவிரிபுன
றோய்ந்தெழுசடையினன்றொன்மறையறங்க
மாய்ந்தவன்வளகரந்தணையாறே. (ச)

வானமர்மதிபுல்குசடையிடையரவொடு
தேனமர்கொன்றையன்றிகழ்தருமார்பினன்
மானினமர்விழிமங்கையோர்பாகமு
மானவன்வளகரந்தணையாறே. (டு)

முன்பனைமுனிவரோடமரர்கணமெழு
மின்பனையிணையிலவிறைவனையெழுதிக
ழென்பொனையேதமில்வேதியர்தாந்தொழு
மன்பனவன்வளகரந்தணையூறே. (சு)

வன்றிறலவுணர்தம்வளகரெரியிடை
வெந்தறவெய்தவன்விளங்கியமார்பினிற்
பந்தமர்மெல்விரல்பாகமதாகிய
னந்தமில்வளகரந்தணையாறே. (எ)

விடைத்தவல்லரக்கனல்வெற்பினெடுத்தலு
மடித்தலத்தாலிறையூன்றிமற்றவனது
முடித்தலைதோளவைநெரிதரமுறைமுறை
யடர்த்தவன்வளகரந்தணையாறே. (அ)

விண்ணவர்தம்மொடுவெங்கதிரோனல
வெண்ணிலிதேவர்களிந்திரன்வழிபடக்
கண்ணனும்பிரமனுங்காண்பரிதாகிய
வண்ணன்வளகரந்தணையாறே. (க)

மருளுடைமனத்துவன்சமணர்கண்மாசரு
விருளுடையிணத்துவர்ப்போர்வையினர்களுந்
தெருளுடைமனத்தவர்தேறுமின்றிண்ணமா
வருளுடையடிகடமந்தணையாறே. (கo)

நலமலிஞானசம்பந்தனின்றமி
ழலைமலிபுனன்மல்குமந்தணையாற்றினைக்
கலைமலிதமிழிவைகற்றுவல்லார்மிக
நலமலிபுகழ்மிகுநன்மையர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்

திருவிடைமருதூர்-திருவிராகம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நடைமருநிரிபுரமெரியுணநகைசெய்த
படைமருதழலெழமழுவலபகவன்
புடைமருதிளமுகில்வளமமர்பொதுளிய
விடைமருதடையகமிடர்கெடலெளிதே. (க)

மழைநுழைமதியமொடழிதலைமடமஞ்ஞை
கழைநுழைபுனல்பெய்தகமழ்சடைமுடியன்
குழைநுழைதிகழ்செவியழகொடுமிளிர்வதோ
ரிழைநுழைபுரியணலிடமிடைமருதே. (உ)

அருமையனெளிமையனமுல்விடமிடறினன்
கருமையினெளிபெறுகமழ்சடைமுடியன்
பெருமையன்சிறுமையன்பிணபெணைடொருமைய
னிருமையுமுடையணலிடமிடைமருதே. (கூ)

பொரிபடமுழுகுறமுளிகளிபுடைபுல்கு
நரிவளர்சுடலையுணடமெனகவில்வோன்
வரிவளர்குளிர்மதியொளிபெறமிளிர்வதோ
ரெரிவளர்சடையணலிடமிடைமருதே. (ச)

வருகலமயிலனமடகுடைமலைமகள்
பெருகலமுலையிணபிணசெய்தபெருமான்
செருகலமதிலெய்தசிவனுறைசெழுநக
ரிருகலுகழல்சுமிடமிடைமருதே. (டு)

தலையுடைவிரிதுகில்கமழ்குழலகில்புகை
மலையுடைமடமகடனையிடமுடையோன்
விலையுடையணிகலனிலனெனமுழுவிணை
டிலையுடைபடையவனிடமிடைமருதே. (சு)

வளமெனவளர்வனவிரிமுரல்பறவைக
ளிளமணலணகையிசைசெயுமிடைமரு
துளமெனநினைபவரொலிகழலிணையடி
குளமணலுறமுழுகிவழிபடல்குணமே. (எ)

மறையவனுலகவன்மதியவன்மதிபுல்கு
நிறையவனெனவலவடியவர்துயரிலர்
கறையவன்மிடறதுகனல்செய்தகமழ்சடை
யிறையவனுறைதருமிடமிடைமருதே. (அ)

மருகிடைநடவியமணிவணர்பிரமரு
மிருதுடையகலமோடிகலினரினதெனக்

கருதிட்லரியதோருருவொடுபெரியதோ
ருருதுடையடிகடமிடமிடைமருதே. (கூ)

துவருறுவிரிதுகிலுடையருமமணரு
மவருறுசிறுசொலேயவன்மினிமிணல்
கவருறுபுனலிடைமருதுகைதொழுதெழு
மவருறுவினைகெடலணுகுதல்குணமே. (கஅ)

தடமலிபுகலியர்தமிழ்கெழுவிரகின
னிடமலிபொழிலிடைமருதினையிசைசெய்த
படமலிதமிழ்வைபரவவல்லவர்வினை
கெடமலிபுகழொடுகிளரொளியினரே. (ககூ)

திருச்சிற்றம்பலம்.

திருவிடைமருதூர் - திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

விரிதருபுலியுரிவிரவியவரையினர்
திரிதருமெயிலவைபுனைகணியினிலெய்த
வெரிதருசடையினரிடைமருதடைவுனல்
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. (க)

மறிதிரைபகெடல்விடமிடைமிடறின
ரெறிதிரைகரைபொருமிடைமருதெனுமவர்
செறிதிரைநரையொடுசெலவிலருலகினிற்
பிறிதிரைபெறுமுடல்பெறுகுவதரிதே. (உ)

சலசல்சொரிபுனல்சடையினர்மலைமக
ணிலவியவுட்லினர்நிறைமறைமொழியின
ரிலரென்விடுபலியவரிடைமருதினை
வலமிட்வுடனலிவிலதுளவினையே. (ஙூ)

விடையினர்வெளியதோர்தலைகலனெனநனி
கடைகடைதொறுபலியிடுகெனமுடிகுவ
ரிடைவிடலரியவரிடைமருதெனுமக
ருடையவரடியிணைதொழுவதெம்முயர்வே. (ச)

உரையருமுருவினருணர்வருவகையின
ரரைபொருபுலியதளுடையினர்தன்மிசை
யிரைமருமரவினரிடைமருதெனவுள
முரைகளுடையவர்புகழ்மிகவுளதே. (ஞ)

ஒழுகியபுனன்மதியரவமோடிறைதரு
மழகியமுடியுடையடிகளதறைகழ

லெழிலினருறையிடைமருதினைமலர்கொடு
தொழுதல்செய்தெழுமவர்துயருறவிலரே. (கூ)

கலைமலிவிரலினர்கடியதோர்மழுவொடு
நிலையினர்சலமகளுலவியசடையினர்
மலைமகண்முலையிணைமருவியவடிவின
ரிலைமலிபடையவரிடைமருதே. (எ)

செருவடையிலவலசெயல்செயத்திறலொடு
மருவரையினிலொருபதுமுடிநெரிதர
விருவகைவிரனிறியவரிடைமருதினு
பரவுவரருவினையொருவுதல்பெரிதே. (அ)

அரியொடுமலரவனெனவிவரடிமுடி
தெரிவகையரியவர்திருவடிதொழுதெழ
வெரிதருமுருவர்தமிடைமருதடைவுறல்
புரிதருமனனவர்புகழ்மிகவுளதே. (கூ)

குடைமயிலினதழைமருவியவுருவின
ருடைமருதுவரினர்பலசொலவுறவிலை
யடைமருதிருவினர்தொழுதெழுகழலவ
ரிடைமருதென்மனினைவதுமெழிலே. (கஅ)

பொருகடலடைதருபுகலியர்தமிழொடு
விரகினன்விரிதருபொழிலிடைமருதினைப்
பரவியவொருபதுபயிலவலவரிடர்
விரவிலர்வினையொடியனுலகுறவே. (ககூ)

திருச்சிற்றம்பலம்.

திருவலிவலம் - திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பூவியல்புரிகுழல்வரிசிலைகிகர்நுத
லேவியல்கணபிணையெதிர்விழியுமையவண்
மேவியதிருவுருவுடையவன்விரைமலர்
மாவியல்பொழில்வலிவலமுறையிறையே. (க)

இட்டமதமர்பொடியிசைதலினசைபெறு
பட்டவிர்பவளநன்மணியெனவணிபெறு
விட்டொளிர்திருவுருவுடையவன்விரைமலர்
மட்டமர்பொழில்வலிவலமுறையிறையே. (உ)

EFEO_TVG_149-090 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

உருமலிகடல்கடைவுழியுலகமருயிர்
வெருவுறுவகையெழுவிடம்வெளிமலையணி
கருமணிகிளர்சடைமுடையவன்மிடைதரு
மருமலிபொழில்வலிவலமுறையிறையே. (கூ)

அனலிகிளர்சடையழலியுறவெனவரு
புனலிகழ்வதுமதிகண்ணிபொறியரவமு
மெனகினொடுவருமிதுமெலமுடிமிசை
மனமுடையவர்வலிவலமுறையிறையே. (ச)

பிடியதனுருவுமைகொளமிகுகரியது
வடிகொடுதனதடிவழிபடுமவரிடர்
கடிகணபதிவரருளினன்மிகுகொடை
வடிவினர்பயில்வலிவலமுறையிறையே. (டு)

தனைமுதலுலகினிலுயிர்புனர்தகைமிக
வினைமலிசுழலுமையொடுவிரவுசெய்து
நனைதினைகெடிதகவதுவருளினனெழில்
வனைதிகழ்மதில்வலிவலமுறையிறையே. (சு)

நலிதருதனைவரநடைவருமிடையவர்
பொலிதருமுடவரலியர்மனையதுபுகு
பலிகொளவருபவனெழின்மிகுதொழில்வளர்
வலிவருமதில்வலிவலமுறையிறையே. (எ)

இரவணனிருபதுகரமெழின்மலைதனி
னிரவணனினைதரவன்முடிபொடிசெய்து
வீரவணமமர்பெயரருளினனகெதி
யிரவணிகர்வலிவலமுறையிறையே. (அ)

தெனமர்தருமலரணையவன்வலிமிகு
மெனமதாய்நிலமகழியடிமுடி
தானணையாவுருவுடையவன்மிடைகொடி
வானணைமதில்வலிவலமுறையிறையே. (கூ)

இலைமலிதரமிகுதவருடையவர்களு
நிலைமையிலுணவுடையவர்களுநினைவது
தொலைவலிகெடுமறைதொடர்வகையுருவினன்
மலைமலிமதில்வலிவலமுறையிறையே. (கo)

மன்னியவலிவலகருறையிறைவனை
யின்னியல்கழுமலகரிறையெழின்மறை
தன்னியல்கலிவலதமிழ்விரகனதுரை
யன்னியவொருபதுமுயர்பொருடருமே. (திருச்சிற்றம்பலம்.)

திருவீழிமிழலை-திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

அலர்மகண்மலிதரவவனியினிகழ்பவர்
மலர்மலிசுழலுமைதனையிடமகிழ்பவர்
நலமலியுருவுடையவர்நகர்மிகுபுகழ்
நிலமலிமிழலையைநினையவல்லவரே. (க)

இருநிலமிதன்மிசையெழில்பெறுமுருவினர்
கருமலிதருமிருபுவிமுதலுலகினி
லிருளறுமதியினரிமையவர்தொழுதெழு
நிருபமன்மிழலையைநினையவல்லவரே. (உ)

கலைமகடலைமகனிவனெனவருபவ
ரலைமலிதருபுனலரவொடுகுதலை
யிலைமலியிதழியுமிசைதருசடையினர்
நிலைமலிமிழலையைநினையவல்லவரே. (கூ)

மாடமர்சனமகிழ்தரமனமுடையவர்
காடமர்கழுதுகளவைமுழவொடுமிசை
பாடலினவில்பவர்மிருதருமுலகினி
னீடமர்மிழலையைநினையவல்லவரே. (ச)

புகழ்மகடனையினர்புரிசுழலுமைதனை
யிகழ்வுசெய்தவனுடையெழின்முறைவழிவளர்
முகமதுசிதைதரமுனிவுசெய்தவன்மிகு
நிகழ்தருமிழலையைநினையவல்லவரே. (டு)

அன்றினரெரியெனவருபவரிதினி
லென்றியதிரிபுரமொருகொடியினிலெரி
சென்றுகொள்வகைசிறுமுறுவல்கொடொளிபெற
நின்றவர்மிழலையைநினையவல்லவரே. (சு)

கரம்பயில்கொடையினர்கடிமலரயனதோர்
சிரம்பயில்வறவெறிசிவனுறைசெழுநகர்
வரம்பயில்கலைபலமறைமுறையறநெறி
நிரம்பினர்மிழலையைநினையவல்லவரே. (எ)

ஒருக்கியவுணர்வினைடொளிகெறிசெலுமவ
ரரக்கனன்மணிமுடியொருபதுமிருபது
கரக்கனெரிதரமலரடிவிரல்கொடு
நெருக்கினன்மிழலையைநினையவல்லவரே. (அ)

அடியவர்குழுமிடவவனியினிகழ்பவர்
கடிமலரயனரிகருதருவகைதழல்

வடிவுருவியல்பினெலருகணிறைதரு
நெடியவன்மிழலையைநினையவல்லவரே. (கூ)

மன்மதனெனவொளிபெறுமவர்மருதமர்
வன்மலர்துவருடையவர்களுமதியிலர்
துன்மதியமணர்கடொடர்வருமிருபுகழ்
நின்மலன்மிழலையைநினையவல்லவரே. (கூ)

நித்திலன்மிழலையைகிரிலிபுகலியுள்
வித்தகமறைமலிதமிழ்விரகன்மொழி
பத்தியில்வருவனபத்திவைபயில்வொடு
கற்றுவல்லவருலகினிலடியவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிவபுரம் - திருவிராகம் - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கலைமலியகலல்குலிவைதனுருவினன்
முலைமலிதருதிருவுருவமதுடையவன்
சிலைமலிமதில்பொதிசிவபுரநகர்தொழ
விலைகலிவினையிருமையுமிடர்கெடுமே. (க)

படரொளிசடையினன்விடையினன்மதிலவை
சுடரெரிகொளுவியசிவனவனுறைபதி
திடலிடுபுனல்வயல்சிவபுரமடையநம்
மிடர்கெடுமுயர்கதிபெறுவதுதிடனே. (உ)

வளைதிரிதரவரவகடழலெழவரு
நுரைதருகடல்விடதுகர்பவனெழிறிகழ்
திரைபொருபுனலரிசிலதடைசிவபுர
முரைதருமடியவருயர்கதியினரே. (ங)

துணிவுடையவர்சுடுபொடியினருடலடு
பிணியடைவிலர்பிறவியுமறவிசுறுவர்
தணிவுடையவர்பயில்சிவபுரமருவிய
மணிமிடறனதடியிணைதொழுமவரே. (ச)

மறையவன்மதியவன்மலியவனிலையவ
னிறையவனுமையவண்மகிழ்நடநவில்பவ
னிறையவனிமையவர்பணிகொடுசிவபுர
முறைவெனவுடையவனெமையுடையவனே. (ஞ)

முதிர்சடையிளமதிநதிபுனல்பதிவுசெய்
தெதிர்கழலொலிசெயவருநடநவில்வோ

னெதிர்பவர்புரமெய்தவிணையிலியணைபதி
சதிர்பெறுமுனமுடையவர்சிவபுரமே. (சு)

வடிவுடைமலைமகள்சலமகளுடனமர்
பொடிபடுமிழையதள்பொலிதிருவுருவினன்
செடிபடுபலிதிரிசிவனுறைசிவபுர
மடைதருமடியவரருவினையிலரே. (ஏ)

கரமிருபதுமுடிபொருபதுமுடையவ
னுரகெரிதரவரையடர்புசெய்தவனுறை
பரனெனவடியவர்பணிதருசிவபுர
நகரதுபுருதனம்முயர்கதியதுவே. (அ)

அன்றியனுருவுகொளரியயனெனுமவர்
சென்றளவிடலரியவனுறைசிவபுர
மென்றிருபொழுதுமுன்வழிபடுமவர்துய
ரொன்றிலர்புகழொடுமுடையரிவ்வுலகே. (கூ)

புத்தரோடமணர்களறவுரைபுறவுரை
வித்தகமொழிகிலவிடையுடையடிகட
மித்தவமுயல்வுறிலிறைவனசிவபுர
மெய்த்தகவழிபடல்விரும்பியருணமே. (கூ)

புந்தியர்மறைகவில்புகலிமன்ஞானசம்
பந்தனதமிழ்கொடுசிவபுரகருறை
யெந்தையையுரைசெய்தவிசைமொழிபவர்வீன
சிந்திழுறவுயர்கதிபெறுவர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம் - திருத்தாளச்சதி - பண் - வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பங்தத்தால்வந்தெப்பால்பயின்றுன்றவும்பரப்
பாலேசேர்வாயேனேர்காண்பயில்கணமுனிவர்களுஞ்
சிந்தித்தேவர்திப்பச்சிலம்பின்மன்கைதன்னெஞ்சுஞ்
சேர்வார்நாணுணீள்கயிலத்திகழ்தருபரிசதெவான்
சந்தித்தேயிந்தப்பார்சனங்கணின்முதங்களுற்
றுமேகாணுவாழ்வாரத்தகவுசெய்தவனிடம்
கந்தத்தாலெண்டிக்குங்கமழ்ந்திலங்குசந்தனக்
காடார்பூவார்சிர்மேவுங்கழுமலவளநகரே. (க)

பிச்சைக்கேயிச்சித்துப் பிசைந்தணிந்தவெண்பொடிப்
பிடார்தீடார்மாடாரும்பிறைநுதலரிவையொடு

EFEO_TVG_149-092 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

முச்சந்காலுந்சிப்போருடர்ந்தவெங்கணை
றாவூராவீள்விதிப் பயில்வொடுமொலிசெயிசை
வச்சத்தானச்சுச்சேர் வடங்கொள்கொங்கைமங்கைமார்
வாராகேமோலாகும் வசுவலவனதிடங்
கச்சத்தான்மெச்சிப்பூக் கலந்திலங்குவண்டினங்
காரார்காரார்வீள்சோலைக் கழுமலவளாகரே. (உ)

திங்கட்கேதும்பைக்கே திகழ்ந்திலங்குமத்தையின்
சேரேசேரோரோகச் செறிதருசுராதியோ
டங்கைச்சேர்வின்றிக்கே யடைந்துடைத்தவெண்டலைப்
பாலேமேலோலேயப் படர்புறுமவனிறரும்
பொங்கப்பேர்கஞ்சைச்சேர் புயங்கமங்கள்கொன்றையின்
போதார்தாரேதாமேவிப் புரிதருசடையனிடங்
கங்கைக்கேயும்பொற்பார் கலந்துவந்தபொன்னியின்
காலேவாராமேலேபாய் கழுமலவளாகரே. (ங)

அண்டத்தாலெண்டிக்கு மமைந்தடங்குமண்டலத்
தாறேவேறேவானுள்வா ரவரவரிடமதெலா
மண்டிப்போய்வென்றிப்போர் மலைந்தலைந்தவும்பரு
மாறேலாதார்தாமேவும் வலிமிகுபுரமெரிய
முண்டத்தேவெந்திட்டே முடிந்திடிந்தவிஞ்சிருழ்
மூவாமூதார்மூதாரா முனிவுசெய்தவனிடங்
கண்டிட்டேசெஞ்சொற்சேர் கவின்சிறந்தமந்திரக்
காலேயோவாதார்மேவுங்கழுமலவளாகரே. (ச)

திக்கிற்றேவற்றற்றே திகழ்ந்திலங்குமண்டலச்
சிரூர்வீரூர்போரார்காருகனுடலவனெதிரே
புக்கிட்டேவெட்டிட்டே புகைந்தெழுந்தசண்டத்திப்
போலேபூர்திகான்மீப் புணர்தருமுயிர்கடிறஞ்
சொக்கத்தெரிர்த்தத்தேதொடர்ந்தமங்கைசெங்கதத்
தோடேயாமேமாலோகத் துயர்தீளவனதிடங்
கைக்கப்போயுக்கத்தே கனன்முமிண்டதண்டலைக்
காடேயோடாவுரோசேர் கழுமலவளாகரே. (ஞ)

செற்றிட்டேவெற்றிச்சேர் திகழ்ந்ததும்பிமொய்ம்புருஞ்
சேரோவாராவீள்கோதைத் தெரியிழைபிடியதுவா
யொற்றைச்சேர்மூற்றற்கொம் புடைத்தடக்கைமுக்கண்மிக்
கோவாதேபாய்மாதானத் தமுதுகர்முகவிறையைப்
பெற்றிட்டேமற்றிப்பார் பெருத்துமிக்கதுக்கமும்
பேராநோய்தாமேயாமை பிரிவுசெய்தவனிடங்
கற்றிட்டேயெட்டெட்டுக் கலைத்துறைக்கரைச்செல்
காணுகாவேசோமெய்க் கழுமலவளாகரே. (ஃ)

பத்திப்போர்வித்திட்டே பரந்தவைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகாமேகாவாப் பகையறுவகைகினேயா
முத்திக்கேவிக்கந்தே முடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடாநாலந்தக் கரணமுமொருநெறியாய்ச்
சித்திக்கேயுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப்பரம்பொருள்
சேர்வார்தாமேதானைச் செபுமவறைபுமிடங்
கத்திட்டோர் சட்டங்கலந்திலங்குநற்பொருள்
காலேபோவாதார்மேவுங்கழுமலவளாகரே. (எ)

செம்பைச்சேரிஞ்சிச்சூழ் செறிந்திலங்குபைம்பொழிற்
சேரோவாராவாரிசத் தினையெறிகரிறைவ
னிம்பர்க்கேதஞ்செய்திட் டிருந்தான்பயின்றவெற்
பேரார்பூகேரோர்பாதத் தெழில்விரலவணிறுவிட்
டம்பொற்பூண்வென்றித்தோ ளழிந்துவந்தனஞ்செய்தாற்
காரார்கூர்வாள்வானுனன் றருள்புரிபவனிடங்
கம்பத்தார்தும்பித்திண்கவுட்சொரிந்தமும்மதக்
காரார்சேரும்மாவீதிக் கழுமலவளாகரே. (அ)

பன்றிக்கோலங்கொண்டிப் படித்தடம்பயின்றிடப்
பானுமாருனுமேபப் பறவையிவுருவுகொள
வொன்றிட்டேயம்புசே ருயர்ந்தபங்கயத்தவ
னேதானேதானல்துணரா துருவினதடிமுடியுஞ்
சென்றிட்டேவந்திப்பத் திருக்கனங்கொள்பைங்கணின்
றேசால்வேரோராகரந் தெரிவுசெய்தவனிடங்
கன்றுக்கேமுன்றிற்கே கலந்திலங்கிறைக்கவுங்
காலேவாராமேலேபாய் கழுமலவளாகரே. (ஈ)

தட்டிட்டேமுட்டிக்கத் தடுக்கிடுக்கிடின்முணைத்
தாமேபேணுதேநாளுஞ் சமஞ்செமுழல்பவரு
மிட்டத்தாலத்தந்தா னிதன்றிதென்றுணின்றவர்க்
கேயாமேவாயேதுச்சொல் லிலைமலிமருதம்பூப்
புட்டத்தேயட்டிட்டிப்புதைக்குமெய்க்கொள்புத்தரும்
போல்வார்தாமோராமேபோய்ப் புணர்வுசெய்தவனிடங்
கட்டிக்கால்வெட்டித்திங்கரும்புதந்தபைம்புனற்
காலேவாராமேலேபாய் கழுமலவளாகரே. (கo)

கஞ்சத்தேனுண்டிட்டே களித்துவண்டினெண்பகக்
கானேதேனேபோராருங் கழுமலகரிறையைத்
தஞ்சச்சார்சண்பைக்கோன்சமைத்தந்தகலைத்துறை
தாமேபோல்வார்தேனேசார் தமிழ்விசகன்மொழிக

ளெஞ்சத்தேய்வின்றிக்கே யிமைத்திசைத்தமைத்தகொண்
டேழேயேழோலேமூன் றியலிசையிசையியல்வா
வஞ்சத்தேய்வின்றிக்கே மனங்கொளப்பயிற்றுவோர்
மார்பேசேர்வாள்வானோர்சிர் மதிநுதன்மடவரலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சகாழி-திருஏகபாதம்-பண்-வியாழக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான்
பிரமபுரத்துறைபெம்மானெம்மான். (க)

விண்டவர்பொழிலணிவேணுபுரத்தரன்
விண்டவர்பொழிலணிவேணுபுரத்தரன்
விண்டவர்பொழில்ணிவேணுபுரத்தரன்
விண்டவர்பொழிலணிவேணுபுரத்தரன். (உ)

புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே
புண்டரிகத்தவன்மேவியபுகலியே. (ங)

விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன்
விளங்கொளிதிகழ்தருவெங்குருமேவினன். (ச)

சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன்
சுடர்மணிமாளிகைத்தோணிபுரத்தவன். (ஞ)

பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி
பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி. (ட)

செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னிற்
செருக்குவாய்ப்புடையான்சிரபுரமென்னில். (ண)

பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்
பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன். (அ)

தசமுகனெரிதரவுன்றுசண்பையான்
றசமுகனெரிதரவுன்றுசண்பையான்
றசமுகனெரிதரவுன்றுசண்பையான்
றசமுகனெரிதரவுன்றுசண்பையான். (க)

காழியானையுள்ளவாகாண்பரே
காழியானையுள்ளவாகாண்பரே
காழியானையுள்ளவாகாண்பரே
காழியானையுள்ளவாகாண்பரே. (கo)

கொச்சையண்ணலேக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலேக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலேக்கூடகிலாருடன்மூடரே
கொச்சையண்ணலேக்கூடகிலாருடன்மூடரே. (கக)

கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை
கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருஏகபாதத் திருவுள்ளக்கருத்து.

(க) பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(இதன் பதப்பொருள்.)

பிரமம்-ஞானகாசமாகியபராசத்தியை, புரத்துறை-அந்தப் பரிபூரணத்தைமிகு தியாக வியக்கப்பட்டது, பெம்மான்-பெருமான், எம்மான்-எந்தப்பெரியோனெனக.

(பொழிப்பு.)

ஞான காசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகுதியாகவியந்து அந்தப்ப ராசத்திக் சதிதமாகிய சுகமே வடிவாய் முதல்நடுவிறுதி காணப்படாதவஸ்து எந்த ப்பெரியோன்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(பதப்பொருள்.) பிரமபுரத்து-மேல்நிலத்து, உறை-தண்ணீர், பெம்-விருப்பம், மான்-மான்போலும் விழியையுடையபெண், எம்-எம்முடைய, ஆன்-ஆன்மா எனக.

(பொழிப்பு.) மேல்நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே யோடாநிலற கங்காதே வியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையையுடைய எமதுயிர்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(பதப்பொருள்.) பிரமம்-பிரமத்துவம், புரம்-சரீரம், உறை-எண்ணுதல், பெ ம்-ஆசை, ஆன்-அமையாமை, எம்மான்-என்னே யொக்கவந்தவன் எனக.

(பொழிப்பு.) பிரமருபத்திலே யெண்ணப்பட்ட என்னே முத்தியிலே விடுகை க்கு அமையாத விருப்பமுள்ளவனு யென்னே யொக்கவந்தவன்.

பிரமபுரத்துறை பெம்மானெம்மான்.

(பதப்பொருள்.) பிரமபுரத்துறை-பிரமபுரமென்கிற சகாழிப்பதியிலே வீற்றி ராநின்ற, பெம்மான்-சுத்தாவானவன், எம்மான்-என்னுடையசுவாமி எனக.

EFEO_TVG_149-094 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

(பொழிப்பு.) பிரமபுரமென்கிற சிகாழிப்பதியிலே வீற்றிராநின்ற கர்த்தாவாகவன் என்னுடையசுவாமி: பெரியோனும் எனக்குயிரானவனும் என்னை யொக்கவந்தவனும் சிகாழிப்பதியில் வீற்றிருக்குங கடவுளெனக்கூட்டிப் பொருள்கொள்க.

(உ) விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்.) விண்டி-மலே, அலர்-ஒலி, பொழில்-உலகம், அணிவு-அகப்படித்தல், ஏண்-பெருமை, துபுரம்-சிலம்பு, தரன்-தரித்துள்ளவன் என்க.

(பொழிப்பு.) அஷ்டகுலபர்வதங்களும் ஒலிகிறந்த தரிசுமணியாகவும், அகில லோகங்களையும் உள்ளேயகப்படித்துந் தன்மயவாயும், பெரிதாயுமுள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன்.—நூபுரம் எனற்பாலது-துபுரம் எனக்குறுகிநின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்.) விண்டி-விஷ்ணு, அலர்-புறனுரை, பொழில்-அரசினிழல், அணி-பொருந்தி, வேணு-விருப்பம், புரத்துஅரன்-புரத்தையரித்தவன் என்க.

(பொழிப்பு.) விஷ்ணுவின் புறனுரையாகிய செவ்தாஷணத்தை அரசமரத்தினிழலில் அவனுடனிருந்து விரும்பியுள்ள மூப்புரங்களைச் சங்காரித்துள்ளவன்.—அணணியெனற்பாலது - அணியென இடைக்குறையாய் நின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்.) விண்டலர்-மேதவர்கள், பொழில்-கற்பகப்பூஞ்சோலே, அணி வுறுதல், ஏணு-எண்ணும், புரத்தரன்-தேவேந்திரன் என்க.

(பொழிப்பு.) தேவர்கள் கற்பகப்பூஞ்சோலே மலர்களால் அர்ச்சிக்கப்படுகின்ற தேவேந்திரனுடைய. ஏணு எனற்பாலது-ஏணு எனநீண்டது. புரந்தரன் எனற்பாலது-புரத்தரனென வலித்துநின்றது.

விண்டலர்பொழிலணி வேணுபுரத்தரன்.

(பதப்பொருள்.) விண்டி-இதழ்கள்விண்டி, அலர்-மலர்கின்ற, பொழில் அணி-சோலேசூழ்ந்த, வேணுபுரத்து அரன்-வேணுபுரமென்று மொருபெயருள்ள சிகாழிப்பதிக்குக் கத்தா என்க.

(பொழிப்பு.) இசழ்கள் விண்மலர்கின்ற சோலேசூழ்ந்த சிகாழிப்பதிக்குக் கத்தாவாயுள்ளவன்.—தேவேந்திரன் மூங்கில்வழியாகவந்து பூசித்ததால் வேணுபுரமெனனும் பெயர்பெற்றது.—சிலம்பினைத் தரித்துள்ளவரும், முப்புரத்தை யெரித்தவரும், தேவேந்திரனுடைய சோலேசூழ்ந்த வேணுபுரத்தில் வீற்றிருக்கும் இறைவரெனக்கூட்டியுரைத்துகொள்க.

(ஊ) புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகத்தவன் - இதயகமலத்திலுள்ளவன், மேவியபுகலியே-எனக் கின்பத்தருவாணுமாய் மீளாவழியாகிய புகலிடமாயு முள்ளவன் என்க.

(பொழிப்பு.) இதயகமலத்திலிருந் திடையருத வானந்தம்பொழியப்பட்டென்னை மலபோதத்தில் தள்ளாமல் எனக்கடைக்கலப் பொருளாயுள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகம்-திரிபுண்டரம், தவன்-மிக்க பெருமையை யுடையவன், மேவிய-பொருந்திய, புகலி-சொல்லப்பட்டவன், ஏ-என்பதிற்றசை எனக.

(பொழிப்பு.) ஆன்மாக்களுக்கு இலகூடாயாக முண்டம்போலிருந்த திருநீற்றையணியப்பட்ட மிக்க கருணையாளனே யான்பாடிய பாடலே யுவந்துள்ளவன்.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகம்-புலி, தவன்-தவமுனி, மே-கூத்து, வியம்-பொன், பு-பொது, கலி-கற்றவன் என்க.

(பொழிப்பு.) புலிக்காலும், புலிக்கையும் பெற்றுள்ள வியாக்கிரபாத முனிவருக்கு ஞானனந்தமாகிய நாடகத்தைக் கனகசபையிலே யாடல்செய்யும் பரதவித்தையைக் கற்றுள்ளான். வியம் எனற்பாலது-வியவெனக் கடைகுறைந்துநின்றது.

புண்டரிகத்தவன் மேவியபுகலியே.

(பதப்பொருள்.) புண்டரிகத்தவன்-பிரமதேவன், மேவிய-தனது போதத்தாலே பணியலுற்ற, புகலியே-புகலியென்னுஞ் சிகாழிப்பதியே யென்க.

(பொழிப்பு.) கீழ்ச்சொன்ன லீலைகளெல்லாஞ்செய்கின்ற சிவன் தனதிச்சையால் பொருந்தியிருக்குமூர் பிரமாவானவன் பூசித்தபுகலியென்னுந் திருப்பதி.

(ஈ) விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(பதப்பொருள்.) விள-விளாம்பழத்தை, கொள்-கனறுகுணிலாக எறிந்துகொண்டவனுகிய விஷ்ணு, நி-விட்டு வினங்காதின்ற, கற்தரு-நின்மலநீடிய, எங்கு-எவ்விடத்தில், உருமேவினன்-தனது திருமேனிபிலே மேவினன் என்க.

(பொழிப்பு.) கன்றுகுணிலாக எறிந்து விளவின்கனியைக்கொண்ட நாரணனைப் பிரகாசஞ்செய்யப்பட்டு நின்மலமாயிருந்துள்ள தனது பெரியதிருமேனியிலே ஒன்றுபாதியாக வைத்துள்ளான் என்க.—நீளனற்பாலது-நி எனக்குறுகிநின்றது. கழுதரு எனற்பாலது-கழ்தரு எனநின்றது.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(பதப்பொருள்.) விலங்கு எனற்பாலது-விளங்கு எனவும், ஒலிஎனற்பாலது-ஒளி எனவுந் திரிந்துநின்றது. விலங்கு-மாறுபட்டாய், ஒலி-கதறப்பட்ட பௌத்தனதுதலையிலே, நி-அக்கினியைச்சொரிந்து, கற்தரு - மிக்கபயத்தோடும் விழுகின்ற, எங்கு-ஒலிக்கும், உருமு-இடியை, ஏவினன்-விழும்படியேவினன என்க.

(பொழிப்பு.) மாறுபாடாய்க் கதறப்பட்ட பௌத்தனது தலையிலே அக்கினியைச்சொரிந்து மிக்க பயத்தோடும் விழுகின்ற இடியை விழும்படி யேவிப் பௌத்தரை வேறறுத்தானுந் தானேயன்றி யானன்றுகும்.

நீ எனற்பாலது-நி எனவும்,—காழ்தரு எனற்பாலது-கழ்தரு எனவும்,—எங்கு எனற்பாலது-எங்கு எனவுங் குறுகிநின்றன.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(பதப்பொருள்.) விள்-நீங்குதல், அங்கு-அவ்விடத்தில், ஒளி-ஒள்ளியது, திகழ்தரு-திகழப்படும், எங்குரு-எம்முடையகுரு, மேவினன்-கலந்தனன் என்க.

(பொழிப்பு.) தனது பரிபூரணத்திலே தன்னியிழந்து இரண்டாய் விசுவமுருகித் தான் விஷமாகத் தூஷணப்பட்டு நிற்கின்ற எனக்கும் குருமூர்த்தியாய்வந்த என்பிறவியை யொழித்துத் தனதுபேரின்பமாகிய பரிபூரணத்திலே எனதடிமைகுலேயாம லிரண்டறவைத்தவன்.

விளங்கொளிதிகழ்தரு வெங்குருமேவினன்.

(பதப்பொருள்.) விளங்கு ஒளி-எங்கும் பிரகாசியாநின்ற கீர்த்தி, திகழ்தரு-சிறத்தல், வெங்குரு - இயமனற்பூசிக்கப்பட்ட திருப்பதி, மேவினன் - விரும்பினன் என்க.

(பொழிப்பு.) கீழ்ச்சொல்லிப்போந்த செம்திகளெல்லாமுடைய னெதன்

மையனேவென்னில், எங்கும் பிரகாசியாதினற கீர்த்தியினும் சிறக்கப்பட்டுள்ள இயமனும்பூசிக்கப்பட்ட வெங்குருவென்னும் திருப்பதியை விரும்பியுள்ளான். வெங்குரு என்பதும்-சோழி.

(இ) சுடர்மணிமாலிகைத் தோணிபுரத்தவன்.

(பதப்பொருள்.) சுடர்மண்-சூடார்மண், இம்-ஈமம், ஆளி-ஆளப்பட்டவன், கைத்தோணி-போர்தொலைத்த தும்பைமாலே, புரத்து-திரிபுரங்களையும், அவன்-அவம் பண்ணினவன் என்க.

(பொழிப்பு.) சுடநிலமாகிய மயானத்தை நடமாடு மிடமாகக்கொண்டும், மூப்புரங்களையும் நகைசெய்து சுடப்பட்ட வெற்றிப்போரையுடைய தும்பைமாலேக்கடவுள்.—சூடார் எனற்பாலது-சுடரெனவும், ஈமம் எனற்பாலது-இம் எனவும் குறுகினறன.—தோணமெனற்பாலது-தோணியெனமருவிற்று.

சுடர்மணிமாலிகைத் தோணிபுரத்தவன்.

(பதப்பொருள்.) சுடர்மணி-சூடாமணி, மாளி-மாலி, கைத்தோள்-துதிக்கையினையுடையயானையை, நிபுரத்தவன்-வடிவில்லாமற்செய்தோன் என்க.

(பொழிப்பு.) என்னுச்சிக்குச் சூடாமணியுமாய் என்மேல்வைத்த மாலினையுடையனுமாய் யாகத்தின்கண்வந்த யானையை வடிவொழித்துப் போர்க்குந்தன்மையையுடையவன்.

சூடாமணியெனற்பாலது-சுடர்மணியெனவும், மாலியெனற்பாலது-மாளி எனவும், தோல் எனற்பாலது-தோள் எனவும் நின்றன.—மாலையுடையவன்-மாலி-தோல்-யானை.

சுடர்மணிமாலிகைத் தோணிபுரத்தவன்.

(பதப்பொருள்.) சுடர்-சூரியன், மணி-கழுவு, மாளி-கெட்டவன், கைத்தோணி-தெப்பம், புரத்தவன்-புரிந்தவன் என்க.

(பொழிப்பு.) சூரியனுடைய களங்கத்தைக் கழுவப்பட்ட சமுத்திரம்போன்ற செண்ணக்கடலிலே தேற்பட்டமூழ்கிக்கிடாநினற ஆன்மாக்களுக்கும் கைப்பற்றிக்கரையேறுதெப்பமாகப் பிரணவமென்கிற மந்திரத்தை அவரது செவியின்கண்ணேயுண்டாக்காநின்றவன்.

மண்ணி என்பது-மணியென இடைகுறைந்து நின்றது.—புரந்தவன் எனற்பாலது-புரத்தவன் என வலித்தல் விகாரமாயிற்று.

சுடர்மணிமாலிகைத் தோணிபுரத்தவன்.

(பதப்பொருள்.) சுடர்-விளக்கத்தையுடைய, மணி-நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட, மாளிகை-மாளிகைகள்சூழ்ந்த, தோணிபுரத்தவன்-திருத்தோணிபுரத்தின்கண்ணே வாழ்கின்றவன என்க.

(பொழிப்பு.) விளக்கத்தையுடைய நவரத்தினங்களாலே அலங்கரிக்கப்பட்ட மாளிகைசூழ்ந்த திருத்தோணிபுரத்திலே வீற்றிருக்குஞ் சிவன் இத்தன்மையன்.

(சு) பூசுரர்சேர்பூந்தராயவன்பொன்னடி.

(பதப்பொருள்.) பூ-பூமியிலுள்ளோர்—சுரர்-தேவர்கள், சேர்-தோன்றுதல்,பூ-இதயகமலம், தராயவன்-தரித்தவன், பொன்-பொலிவு, அடி-கண்ணுடி என்க.

(பொழிப்பு.) பூமியிலுள்ளாரையுந் தேவகணங்களாயுள்ளாரையுந் தனதுநார்க்கமலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பிரமா விஷ்ணுவினது போதத்திலே கண்ணுமையும் நிழலும்போலப் பிரதிவிம்பியா நின்றவன்.—அடி என்பது-அடியெனக்குறுகினறது.

பூசுரர்சேர்பூந்தராயவன் பொன்னடி.

(பதப்பொருள்.) பூசுரர்-மலத்தைக்கழுவிய சிவஞானிகள், சேர்-திரட்சி, பூபொலிவு, தராய்-பெறப்பட்ட, அவன்-அக்கடவுள், பொன்-வனப்பு, நடி-தாடகமாடப்பட்டவன் என்க

(பொழிப்பு.) மலத்திரயங்களைக் கழுவப்பட்ட சிவஞானிகள் கூட்டம் பொலிவுபெறத்தக்க வனப்பையுடைய ஆனந்தநிருத்தஞ் செய்தருள்பவன்.

பூசுரர்சேர்பூந்தராயவன் பொன்னடி.

(பதப்பொருள்.) பூசு-திருநீற்றை யுத்தூளிக்கப்பட்ட, உரர்-மார்பையுடையவர், சேர்பு-அரிதல், ஊந்தராய்-தள்ளுதல், யவன்-யௌவனம், பொன்-அழகு, அடி-மூலம் என்க.

(பொழிப்பு.) சர்வாங்கமும் முத்தூளனம்பண்ணின மார்பையுடைய சிவஞானிகளும், புண்ணியபாவக் கட்டையரிந்து விசுவத்தைத் தள்ளப்பட்ட நிறப்பையுடையருமாயிராநின்றவர்களுக்கு மிருதியான மூலமாயுள்ளவன்.—ஊந்தராய் என்பது-ஊந்தராயென நீண்டது.

பூசுரர்சேர்பூந்தராயவன் பொன்னடி.

(பதப்பொருள்.) பூசுரர்-மறையோர், சேர்-திரட்சி, பூந்தராயவன்-பூந்தராயென்னுந் திருப்பதியிலேயுள்ளவன், பொன்னடி-அழகிய திருவடித்தாமரை என்க.

(பொழிப்பு.) மறவிலா மறையோர்வாழ்கின்ற திருப்பூந்தராயென்னுந் திருப்பதியின்கண்வீற்றிராநின்ற சிவனது அழகியதிருவடித்தாமரையென்னையாண்டிடுவதாக.—பூந்தராயென்பதுஞ் சோழி.

(எ) செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(பதப்பொருள்.) செருக்கு-மயக்கம், வாய்ப்பு-மேலீடு, உடையான்-கேடுசெய்யான், சிரபுரம்-மேலாகிய இருப்பு, என்னில்-என்னுடையபோதமே ஏன்க.

(பொழிப்பு.) தனது திருவடிப்பிரசாத மில்லாதார்க்கு மலமயக்கத்தின் மேலீட்டைக்கெடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் எனது சைதனியமே.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்

(பதப்பொருள்) செர்-சத்தாதிகளஞ்சுஞ்சேரப்பட்ட, உக்கு-அந்தப்பூமி, வாய்ப்புடையான்-தன் வாயினிடமாகவுள்ள விஷ்ணு, சிர்-சிறப்பு, அபுரம்-உயிர்போனகளேபரம், என்னில்-மேனிலே என்க.

(பொழிப்பு.) சத்தாதிகளஞ்சுஞ்சேரப்பட்ட உலகத்தைத் தன்வாயினிடமாகவுடைய விஷ்ணுவின் களேபரத்தைத் திருமேனியிலே தரித்துள்ளான்.—சேர் எனற்பாலது-செர் எனவும், சிர் எனற்பாலது-சிர் எனவும் குறுகினறன.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(பதப்பொருள்.) செருக்கு-ஆத்துமவிகாரமாகிய கர்வம், வாய்-இந்திரியம், புடையான-இடத்தான், சிரம்-மேல், புரம்-சரீரம், என்னில்-சத்தியம் என்க.

(பொழிப்பு.) ஆத்துமவிகாரமாகிய கர்மத்தினுலே இந்திரியங்களுக்கு விடயமாகிய சுவர்க்கத்திலிச்சையையுடையானுக்கு அந்தச்சுவர்க்கம் மெய்யாக விசேஷித்திருக்குமன்றே.

செருக்குவாய்ப்புடையான் சிரபுரமென்னில்.

(பதப்பொருள்.) செருக்கு-இந்திரியயுத்தத்திற்கு, ஆய்ப்பு-இனைப்பு, உள்ளையான்-உள்ளதைக்கப்படான், சிரபுரமென்னில்-சிரபுரமென்றுரைக்கில் என்க.

EFEO_TVG_149-096 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

(பொழிப்பு.) இந்திரியவன்மையாகிய யுத்தத்துக்கு இளையாமல் அந்த இந்திரியமாகிய பாணங்கள் தனதறிவுக்குள் தைக்கப்படான்.—(தாற்பரியம்.) ஒருகாற் சிரபுரமென்று சொன்னவிடத்துப் பஞ்சேந்திரியங்களையும் அவியப்பொருது சிவனுடையதிருவடியிலே அடையாநிற்பன் என்பதாம்.

(அ) பொன்னடிமாதவர் சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-பொலிவு, நடி-கூத்தனையான், மாது-பத்திரகாளி, அவர்-பூதகணங்கள், சேர்-தங்குதல், புறவத்தவன்-சுடுகாட்டிலுள்ளவன் என்க.

(பொழிப்பு) பொலிவினையுடைய மாயாதிருத்தம் புரிகின்ற பத்திரகாளியும், பூதபசாசும்பொருந்திய மயானமே திருக்கோயிலாகவுள்ளவன்.

பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-தூய்மை, அடி-வழி, மாதவர்-தபோதனர், சேர்-நிரட்சி, புறவம்-முல்லைநிலம், தவன்-தவம்புரிந்துள்ளான் என்க.

(பொழிப்பு.) சுத்தமான வழியைத்தரப்பட்ட மகா இருஷிகள் நிரண்டு தவம் பண்ணுதற்கும் ஆரணியத்தில் தனித்துத் தவம்புரியாநிற்குந் தபோதனன்.

பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-இலக்குமி, அடி-ஆபரணத்தொகுதி, மாது அவர்-இருடபத்தினிகள், சேர்புறு-பிச்சையிடவந் தணைதல், அவத்தவன்-கலேசோர்தலைச் செய்த திருவாணி என்க.

(பொழிப்பு.) அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இலக்குமியையொத்த இருடபத்தினிகள் பிச்சையிடவந் தணைபுமிடத்துத் தனக்குள்ள திருவாணத்தை அவர்களுக்குக் கொடுத்தவன்.

பொன்னடிமாதவர்சேர்புறவத்தவன்.

(பதப்பொருள்.) பொன்-பொன்னூற்செய்யப்பட்ட பாடகனூபுர காலாழிகள் முதலியவுமிடப்பட்ட, அடி-பாதர், மாதவர்-கன்னியர், சேர்-இனமாய்விளையாடுதல், புறவத்தவன்-திருப்புறவமென்கின்ற திருப்பதியில்வாழ்கின்றவன் என்க.

(பொழிப்பு.) பொன்னூற்செய்யப்பட்ட பாடகனூபுராதிகளைப் பாதங்களிலேயணிந்துள்ள கன்னியர்திரண்டு விளையாடும் புறவமென்னுந் திருப்பதியில் வாழ்கின்ற சிவன்.—புறவம் என்பதுஞ் சோலி-

(கூ) தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(பதப்பொருள்.) தசமுகன்-தயவையுடையான, எரிதர-எரிவீசு, ஊன்ற-அழுத்தி, சண்-வேகம், பையான்-படம்பொருந்திய பாம்பையுடையான என்க.

(பொழிப்பு.) ஆத்தமாக்களிடத்துக் கருணைபிறக்கு மிடமாயுள்ளவன். அக்கினிவீசப்பட்டுத் திருவரையிலே அழுந்தச் சாத்தியுள்ள விரிந்த படத்தினையுடைய பாம்பை அரைஞாணாக வுடையான.

தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(பதப்பொருள்.) ச-அதி, சமுகம்-திரட்சி, நெரி-நேரானவன், தர-புலி, ஊன்-மாமிசம், துசு-தூசு, அண்பையான-விரித்துடுத்தான் என்க.

(பொழிப்பு.) எல்லாமிறைத்து அற்சமாயுள்ள சிவஞானிகள் சூழாத்துக்கு நேரிதாகிய சூரியமாயுள்ள பொருளைத் தோற்றவித்தலானுமாப்புலியினது ஊன்பொருந்திய தோலாடையைத் திருவரையிலே விரித்துடுத்தவன்—நேரி எனற்பாலது-நெரி எனக் குறுகிநின்றது. தசக்கு எனற்பாலது-தச எனக் குறைந்தது

தூசு எனற்பாலது-துசு எனக் குறுகிநின்றது. பாயான் எனற்பாலது-பையான எனக் குறுகிப் போலியாயிற்று.

தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(பதப்பொருள்.) தசம்-தைசதம், உக-கெட, நெரி-எதிர்ப்பட்டவன், தரம்-மலை, ஊன்-திருவுளத்தடைத்தல், சு-விசேஷஞானமுள்ளவன், சண்-சட்சமயம், பையான்-பயனுள்ளவன் என்க.

(பொழிப்பு.) ஆத்துமவிகாரமான அகங்காரம் போம்படி என்னறிவிலெதிர்ப்பட்டவன் கயிலாயமலையைத் திருவுள்ளத் தடைத்தெழுந் தருளியிருந்து ஆத்துமாக்களோ யிரசூியாநின்ற விசேஷத்தையுடையவனென றேத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர்கொண்டபயனுள்ளவன். நேரி எனற்பாலது-நெரியெனக் குறுகிநின்றது.

தசமுகனெரிதர வூன்றுசண்பையான்.

(பதப்பொருள்.) தசமுகன்-பத்துத்தலைகளையுடைய இராவணன், நெரிதர-முறிய, ஊன்று-அமுக்கிய, சண்பையான்-சண்பையென்னுந் திருப்பதியில் வீற்றிருப்பவன் என்க.

(பொழிப்பு.) பத்துத்தலையுள்ள இராவணன் முறியும்படி திருவிரலாலடர்த்தவன் யாரென்னில் சண்பையென்னுந் திருப்பதியிலே வீற்றிருக்குங் கடவுள்.

(கo) காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான-நிலைபெற்று நின்மலமான, சித்தத்தையுடைய, யன்-பத்திரிடத்து, உள்ளவா-சத்தியம், காண்பரே-நோக்குவர் என்க.

(பொழிப்பு.) நிலைபெற்றநின்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்திரிடத்துச் சத்தியப்பொருள் விளையும்பொருட்டு ஞானநாட்டத்தினாலே அவர்களோக் கடாக்ஷிக்கின்றவன்.

காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான்-களங்கமுள்ளவன், நயனுள்ளவா-ஞானக்கண்ணுள்ளவாறு, காண்பரே-நிலைமையாக நினைப்பரே என்க.

(பொழிப்பு.) திருமிடற்றிற் களங்கமுடையானது கருணையை நினைத்து ஞானநாட்டத்தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை தன்னடியார்க்கே ஆங்காரத்தைத்தடுக்குமதேபணியெனத் தமதறிவிலே கருதாநிற்பர்.

காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான்-விஷ்ணு, அயன்-பிரமா, உள்ள-நினைக்க, ஆ-அதிசயம், கண்-கருதுதல், பரே-அன்னியம் என்க.

(பொழிப்பு.) விஷ்ணுவும்-பிரமாவும் திருமுடியுந் திருவடியுங் காணும்பொருட்டு வராகமும் மன்னமுமாகக்கருதி வடிவுகொண்டார் ஐயோ உள்ளபடி கருதிச் சிவனைப்பெருமல அவர் கருதியதேதென்னில், அன்னியமேகண்டனர். கண் எனற்பாலது-காண் எனநீண்டது.

காழியானயனுள்ளவாகாண்பரே.

(பதப்பொருள்.) காழியான்-காழிப்பதியிலுள்ளான், அயன்-ஐயன், உள்-என்னறிவிலுண்டான, அவா-ஆசை, காண்பரே-தரிசிப்பரே என்க.

(பொழிப்பு.) என்பொருட்டாற் காழியென்னுந் திருப்பதியைப் படைத்தானே என்னையனே எனதாசையை நீக்கிச்சொன்ன விருவர்களும் தாங்கள்தேடிந் தேட்டப்பிரிவின் மயக்கத்திலே தேட்டமழித்துத் தோன்றுதிற்பவனே தேடி மறத்தலொழிந் தெவ்வாறுகாண்பர்

EFEO_TVG_149-097 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

(கக) கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(பதப்பொருள்.) கொச்சை-அறியாமையைப் பொருந்தியுள்ள ஆணவமலம், அண்ணலை-பொருந்ததலே, கூடகிலார்-மாறுபட்டார், உடல் - உடலாலே, மூடரே மூடாரே என்க.

(பொழிப்பு.) ஆணவமலத்தோடுகூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள் மாயாதனுவாலு மந்திரதனுவாலுமறைக்கப்படார்கள். மூடார் எனற்பாலது - மூடர் எனக்குறுகிநின்றது.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(பதப்பொருள்.) கொச்சை-புலால்நாற்றம், அண்ணல்- அணுகுதல், கூடகிலார்- மனம்பொருந்தமாட்டாதார், உடல்மூடரே-சரீரத்தைப் புதைப்பரே என்க.

(பொழிப்பு.) புலால்நாற்றத்தைப் பொருந்திய வழுக்கு மெய்யைப்பொய்யென்று மனங்கொள்ளமாட்டாமல் அதுவே தமதுநிலேபெற்றவுருவாக நினைத்துத் துவராடையாலே யுடம்பைச் சூழப்பட்டபௌத்தரும்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(பதப்பொருள்.) கொச்சையள்-பேதைத்தன்மையையுடைய மச்சியகந்தி, தலே-புலப்படாநின்ற அவளது நலத்தைக்கருதி, கூடி-சரீரம், அகில்ஆர்-அகிலமும்பொருந்திய, உடன் - அத்தன்மையாளுடன், மூடரே-மொய்க்குமாறுபண்ணினது அது பொருந்ததல் என்க.

(பொழிப்பு.) பேதைத் தன்மையையுடைய மச்சியகந்தியினுடைய நலத்தைக்கொள்ளும்பொருட்டு அவளது சரீரமெல்லாம் சுகந்தமொய்க்கும்படி யவளுடனேபொருந்திய பராசரனுகிய மகாவிருடிவந்து சிவனைப்பொருந்தி யருச்சிக்கப்பதலால்.

கொச்சையண்ணலைக் கூடகிலாருடன்மூடரே.

(பதப்பொருள்.) கொச்சை - கொச்சையாகிய பராசரன் பேராலுள்ள கொச்சையென்னுந் திருப்பதி, அண்ணலை-கத்தாவை, கூடகிலார்-நேர்படமாட்டார், உள்தல்-உள்ளுதல், மூடரே-அந்தகாரநிறைந்த போகத்தையுடையவரே என்க.

(பொழிப்பு.) பராசர முனிவனும் பூசிக்கப்பட்டு அவன் பெயரால் பெயர்பெற்றுள்ள கொச்சை நகரென்னுந் திருப்பதியிலே எழுந்தருளியிராநின்ற தலைமையோனே உள்ளபடி தரிசனம்பண்ணி வழிபடமாட்டார்களது நினைவு எவ்வாறிருக்குமென்னில், மழைக்காலிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தையுடைய ஆணவபோதமாயிருக்கும்.

(கஉ) கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழுமல்-மிகுநிப்பட்டகுற்றம், அமுது-செலம், பதிக்க-விளைவிக்க, உள்நீ-உள்ளநீ, கட்டு-வடிவாகக் கட்டினேடல், உரை-தேற்றல் என்க.

(பொழிப்பு.) மிகுநிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரின்கண்பதிந்து விளைதற்குள்ள நீயுமாயந்தக் கருப்பாசய நீரின்கண்ணே சிறுதலாகிய அவயவமாகத்தோற்றிப் பூமியின்கண்செனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்துமரிக்கின்ற சென்மத்தையும். பரிணமித்தல்-வேறுபடுதல்.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழு-கழுவப்படும், மலம்உது-ஆணவமலமு மற்றதனுடன் சுட்டிச் சொல்லப்பட்ட மாயாமலத்தையுங் கன்மமலத்தையும், பதி-பாதி, கவுணி-உள்

ளே அகப்படுத்திக் கவுளிகரித்துக்கொள்ளுதல், அன்கண்-ஆத்துமாவினிடத்து, துரை-இறைவர் என்க.

(பொழிப்பு.) மேற்சொல்லிப்போந்த சென்மத்தையுங் கழுவி மலத்திரயங்களையுங் கழுவாநிற்கும். (என்ற பதம்நிற்க. இனிச் சிவனது நாமமுரைக்கற்பாற்று.) தன துபாதியாகிய திருவருளிலே எண்ணேயகப்படுத்திக் கவுளிகரித்துக்கொண் டந்த அருள்வழியாக எனதிடத்தி லிடையறுமல் வாழுந் தன்னே யெனக்குத்தந் தடிமைகு லேயாமலெக்கண்ணுமவிட்டு விளங்குங்கத்தர். பாதி எனற்பாலது-பதியெனக்குறுகிநின்றது.

கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழும்-மயக்கம், அலம்-அலக்கண்படுதல், அமுது-அமுதம், பதி-கர்த்தர், க-சிரசு, உணியன்-உண்ணப்பட்டவர், கட்டு-விளக்கம், உரை-பொன் என்க.

(பொழிப்பு.) மாயாமயக்கத்தின்கண்ணே மயங்கிப் பெற்றமுத்தி யிரண்டுந்தெரியாமல் திண்டாடப்பட்ட மலபோதர்க்கு அமுதம்போன்று அரிதாயுள்ளவனுமாய்விட்டு விளங்கப்பட்டநின்ற பொன்னுருவையுடையவனுய்ச் சிருஷ்டிக்கும் கர்த்தாவாகிய பிரமனது சிரக்கபாலத்திலே பிச்சைகொண்டு நகரும் கருணையாளனே.

கழுமலமுதுபதிக்கவுணியன்கட்டுரை.

(பதப்பொருள்.) கழுமலமுதுபதி-மேற்சொன்ன பதியின்கண், கவுணியன்-கவுணியகோத்திரத்துவந்த மறையோனகிய யான், கட்டு-காட்டு, உரை-உரைப்பீராக என்க.

(பொழிப்பு.) திருக்கழுமலமென்னும் மூவாப்பழங்கிழமைப் பன்னிருபெயர் பெற்ற அனாதிமூலமாகிய பதியிடத்துக் கவுணியகோத்திரத்திலே தோன்றப்பட்ட யான் விவேகிக்கப்படும் காட்டாகிய இப்பாடலேக் கேட்டுமேற்சொன்னவற்றிலு மலத்திரயங்களிலும் அழுந்தாநின்ற ஒருத்தராகிலும் பலராகிலும் உரைசெய்வார் உயர்ந்தாரே யாதலாலிப்பாடலே யிடைவிடாம லுரைசெய்வீராக. காட்டு என்பது-காட்டெனக் குறுகிநின்றது.

திருச்சிற்றம்பலம்.

உரை-முற்றியது.

திருவெழுகூற்றிருக்கை.

திருச்சிற்றம்பலம்.

ஒருருவாயினேமானுங்காரத்திரியல்பாயொரு விண்முதல்பூதலமொன்றியவிருசுட ரும்பர்கள்பிறவும்படைத்தளித்தழிப்பமும் மூர்த்திகளாயினேயிருவரோடொருவ னுகிநின்றனே-யோரானீழ லின்கழலிரண்டு-முப்பொழுதேத்தியநால்வர்க் கொளிநெறிகாட்டினே-நாட்டமூன்றுகக் கோட்டினே-யிருதியரவமோ டொருமதிசூடினே-யொருதாளீரயின் மூவிலைச்சூல-நாற்கான்மான்மறி யைந்தலேபரவ-மேந்தினே காய்ந்தநால்வாய் மும்மதத்திருகோட்டொருகரியீடழித்துரித்தனே - யொருதலவிருகால்வளையவாங்கி - மூப்புரத்தோடு ஞானிலமஞ்சக்-கொன்றுதலத்துற வவுணையையுத்தனே-யம்புலனுலா மந்தக்கரண-முக்குணமிருவலியொருங்கியவானே சேத்தின்றனே யொருங்கியமுந்தோ - டிருபிறப்போர்ந்துமுப் பொழுதுகுறைமுடித்து-ஞான்ம

EFEO_TVG_149-098 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

றையோதி யைவகைவேள்வி-யமைத்தாறங்க முதலெழுத்தோதி-வரன்மு
றையின்றெழுவான்றனைவளர்க்கும் பிரமபுரம்பேணினே - யறுபதமூரலும்
வேணுபுரம்விரும்பினே யிகலியமைந்துணர்புகலியமர்ந்தனே - பொங்குநாற்க
டல்சூழ் வெங்குருவிளங்கினே-பாணிமூவுலகும்புதையமேன்மிதந்த-தோணி
புரத்துறைந்தனே தொலையாவிருந்தி- வாய்ந்தபுந்தராயேய்ந்தனே-வரபுரமெ
ன்றுனர் சிரபுரத்துறைந்தனே-யொருமலியெடுத்த விருதிறலரக்கன்- வீற
ல்கெடுத்தருளினே புறவம்புரிந்தனே-முந்நீர்த்துயின்றோ னுமுகனறியாப்-
பண்பொடுநின்றனே சண்பையமர்ந்தனே-யையுறுமுமணரும்மவகைத்தேரரு-
மூழியுமுணராக் காழியமர்ந்தனே- யெச்சனேழிசையோன் கொச்சையைமெ
ச்சினே-யாறுபதமு மைந்தமர்கல்வியு - மறைமுதலனைத்து மூன்றுகாலமுங்-
தோன்றின்றனே யிருமையினெருமையு - மொருமைதன்பெருமையு மறுவி
லாமறையோர்-கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டினை - கழுமலமுதுபதிக் க
வுணியனறியு - மனையதன்மையை யாதலினின்னே-நினையவல்லவ ரில்லீ
னிலத்தே.

திருவெழுகூற்றிருக்கைத்-திருவுள்ளக்கருத்து.

ஒருநுவாயினே–என்றது. எல்லாத்தத்துவங்களையுங் கடந்து வாக்குமனாதிகளுக்
குமெட்டாமலிருந்துள்ள தற்சுருபந்தான் பஞ்சகிர்த்தியங்களையும் நிகழ்த்தவேண்டி
னதிச்சையாலெடுத்துக்கொண்டிருக்குந் திருமேனியை என்றவாறு.

மானுங்காரத்தீரியல்பாய்-என்றது. மானென்பது - சத்தி - யாங்காரத்தீரியல்
பாய்-தற்சத்தியைக்கொண்டு சர்வானுக்கிரகமான பஞ்ச கிர்த்தியங்களை நடத்த
வேண்டிச் சத்திவிகாசிய விரண்டிருவாயினை எ-று.

ஒரு – என்றது, அந்தச்சத்தியுடனேகூடி யொன்றுகின்றனை எ-று.

விண்முதல்பூதல மொன்றியவிருசுடரும்பர்கள் பிறவும் படைத்தளித்தழிப்ப
மும்மூர்த்திகளாயினை-என்றது. ஆகாசமுதலாகப் பூமியீறுகவுள்ள பஞ்சபூதங்களை
யுஞ் சந்திராதித்தர்களையுந் தேவர்களையு மற்றுமுள்ள ஆத்மாக்களையும் படைக்
கைதற்கும், காக்கைக்கும், அழிக்கைக்கும், பிரமா-விஷ்ணு-ருத்திரரென்கின்ற திரிமூ
ர்த்திகளுமாயினை எ-று.

இருவரோ டொருவனுநின்றனே-என்றது. பிரமாவையும் விஷ்ணுவையுமிட
த்தினும் வலத்தினும் அடக்கிக்கொண்டு ஏகமாய்த் திரிமூர்த்தியாகி நின்றனை எ-று

ஓரால்நீழலுன் கழலிரண்டு மூப்பொழுதேத்திய நால்வர்க்கொளி நெறிகாட்
டினை-என்றது. விருக்ஷங்களுங்கெல்லாந் தலைமையாயிருப்பதொரு வடவிருக்ஷத்தி
னீழலிலே யெழுந்தருளியிருந்து தின்னழகிய ஸ்ரீபாதங்களை புதய-மத்தியான-மத்
தமனமென்கின்ற மூன்றுகாலமுந் தோத்திரஞ் செய்யாநின்ற அந்தியர்–புலத்தியன்
–ஜனகன்–சனற்குமாரனென்னும் நால்வகையிருடிகளுக்குந் தற்சொரூபமான திரு
மேனியைக்காட்டியருளினை எ-று.

நாட்டமூன்றுகக்கோட்டினை-என்றது. பிரமா முதலாயிருந்துள்ள ஆத்மாக்
கள் சுயமென்னும் புலனிலே சர்வ பதார்த்தங்களையுங் காணுதபடியாலே சந்தி

ராதித்தர்களையு மக்கினியையு மூன்றுகண்ணுகக் கொண்டருளி அந்தகாரமான
விருளையோட்டினை எ-று.

இருதியரவமோடொருமதிசூடினை-என்றது. பெரிதாகிய கங்கையையு மொ
ப்பில்லாத பாம்பினையு மொருகாலத்தினுமுதிராத பிறைக்கண்ணியையுஞ் சூடிய
ருளினை எ-று.

ஒருதாளீரயின்மூலிலேச்சூல நாற்கான்மான் மறியைத்தலை யரவமேத்தினை-
என்றது. பிரணவமாயிருந்துள்ள ஒருகாம்பினையும், ஈருகின்ற கூர்மையினையும்,
பிரமா-விஷ்ணு-ருத்திரனென்கின்ற மூன்றிலையினையுமுடையதொரு சூலத்தினையு
ம், இருக்கு-யசுர்-சாமம்-அதர்வணமென்கின்ற நாலுவேதங்களையும் நாலுகாலாயி
ருந்துள்ள தொரு மான்கன்றினையுர், ஸ்ரீபஞ்சாக்ஷரங்களையும், மஞ்சுதலையாகவு
டையதொரு மகாநாகத்தினையும் அஸ்தங்களிலேதரித்தருளினை எ-று.

காய்ந்தநால்வாய் மூன்மதத்திருகோட் டொருகரியீடழித்துரித்தனை-என்றது.
தன்னிழலேக்காயத்தக்க கோபத்தினையும் தொங்குவாயினையு மிரண்டு கொம்
பினையுமுடைய தொரு ஒப்பில்லாத ஆனையினுடைய பலங்களையெல்லாங்
கெடுத்து உரித்துப்போர்த்தனை எ-று.

ஒருதனுவிருகால்வளையவாங்கி மூப்புரத்தோடு தானிலமஞ்சக் கொன்று த
லத்துறு மவுணரையறுத்தனை-என்றது. ஒப்பில்லாத பொன்மலையாகிய வில்லை
யிருதலையும் வளையவாங்கி அஸ்திரத்தைத்தொடுத்து, மூன்றுபுராதிகளாகிய அவு
ணரையறுத்தனை எ-று.

ஐம்புலநாலா மந்தக்கரண மூக்குணமிருவளி யொருங்கியவானே ரேத்த
நின்றனை-என்றது. சத்த-பரிச-ரூப-ரச-கந்தமென்னப்பட்ட ஐம்புலங்களையு, மன
ம்-புத்தி-யாங்கார-சித்தமென்கின்ற அந்தக்கரணங்கள் தான்கினையும், ராசத-தா
மத-சாத்துவிதமென்கின்ற மூன்றுகுணங்களையும், பிராணன்-அபானனென்கின்றவி
ரண்டுவாயுவையும், மூலாதாரத்திலே யொடுக்கிக்கொண்டு ஏகாக்கிரசித்தராயிருந்
துள்ள தேவர்களேத்தநின்றனை எ-று.

ஒருங்கிய மனத்தோடிருபிறப்போர்ந்து மூப்பொழுது குறைமுடித்து நான்ம
றையோதி ஐவகைவேள்வியமைத்தாறங்க முதலெழுத்தோதிவரன்முறையின்றெ
ழு வான்றனைவளர்க்கும் பிரமபுரம்பேணினை-என்றது. ஆகாரம்-நித்திரை-பயம்-
மைதுன மிவற்றில் செல்லுகின்ற மனத்தைப் பரமேசுவரனுடைய ஸ்ரீபாதங்
களிலே யொருக்கி மூன்பு தாம் மாதாவின் உதரத்திலே பிறந்த பிறப்பும், உபநய
நத்தின்பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்து மூன்று சந்தி
யும், செபதர்ப்பண-அனுட்டான-ஓமங்களையுமுடித்து, இருக்கு-யசுர்-சாம-அதர்வ
ணமென்கின்ற நாலுவேதங்களையுமோதி, சிவபூசை-குருபூசை-மகேசுரபூசை-
பிராமணபோசனம்-அதிதி பூசிப்பு என்கின்ற வைந்துவேள்வியு முடித்து, ஓதல்-
ஓதுவித்தல்-வேட்டல்-வேட்பித்தல்-ஈதல்-ஏற்றல்-என்னு மாறங்கங்களையும் நட்த்தி
இவைகளுக்கு மூலமாயிருந்துள்ள பிரணவத்தையு முச்சரித்துத் தேவலோகத்
திலுள்ள தேவர்களுக்கு மலிகொடித்து மழையைப்பெய்விக்கும் பிராமணரால
பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக வெழுந்தருளியிருந்தனை என்றவாறு.—
ஆறங்கமாவன-மந்திரம்-வியாகரணம்-நிகண்டு-சந்தோபிதம்-நிருத்தம்-சோதிடம்-
இவ்வாறு வழங்கப்படுகின்ற முறையொன்று.

அறுபதமூரலும்வேணுபுரம் விரும்பினை-என்றது, அறுகாலுடைய வண்டுக
ளிசைபாடும் பொழில்சூழ்ந்த வேணுபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளி

EFEO_TVG_149-099 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

னே என்றவாறு.—வேணுபுரமென்பதற்கும் காரணம்-வேணுவென்பானொரு இந்திர னுடன் கைமுகனென்பானொரு வசுரன்வந்து யுத்தம்பண்ண வவனுடனே பொருது அபசெயப்பட்டுப் பிரமபுரமென்னு முன்சொன்ன பதியிலேவந்து பரமேசுவரன் திருவடிகளிலே தம்பிரானே யடியேனுக்கமைத்தருளின சுவர்க்கலோகத்தைக் கசமுகன் சங்கரிக்க அவனுடன் யுத்தம்பண்ணி அபசெயப்பட்டுப் போந்தேனென்று விண்ணப்பஞ்செய்து பூசிக்கையாலே தம்பிரானுங் கணேசுரனைத் திருவுளத்தடைத்து வாராய் கணேசுரனே கசமுகன் வரப்பிரசாதமுடையவன் ஒரு வராலு மவனைச் செயிக்கப்போகாது நீயு மவன் வடிவாகச்சென்று உன் வலக்கொம்பை முறித்தெறிந்து அவனைக்கொன்று வேணுவென்கின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட்டுவாவென்று திருவுளம்பற்றக் கணேசுரனு மவன்வடிவாகச்சென்று தன்வலக்கொம்பை முறித்தெறிந்து அவனையுங்கொன்று வேணுவென்கின்ற இந்திரனையும் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட உண்டானதென்க.

இகலியமைத்துணர்புகலியமர்ந்தனே-என்றது. தேவர்கள் முன்பு புகலிடமென்று புகுதலால் திருப்புகலியென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.—தேவலோகமான வமராபதியைச் சூரபத்மா என்பானொரு வசுரன்வந்து சங்காரம்பண்ண அவனுடனே தேவேந்திரன் முதலாயுள்ளார் பொருது அபசெயப்பட்டு யுத்தத்தையொழிந்து இனி நமக்குப் பரமேசுவரன் ஸ்ரீபாதமொழிய, புகலிடமில்லையென்று வேணுபுரத்திலேவந்து பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி யவனுண்டான நலிகையை விண்ணப்பஞ்செய்து எங்களை ரகூஷித்தருளவேண்டுமென்னப் பரமேசுவரனும்-சப்பிரமணியனைத் திருவுளத்தடைத்து வாராய் சுப்ரமணியனே நீ - ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாகப்போய்ச் சூரபத்மாவையுஞ்செயித்துத் தேவலோகத்திலே தேவர்களையும் குடிபுகுதவிட்டுவாவென வதுகாரணம்.

பொங்குநீர்க்கடல்சூழ்வெங்குருவிளங்கினை-என்றது. மிகவும் கோபிக்கப்பட்ட கடல்சூழ்ந்த வெங்குருவென்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு.—லோகங்களுக்கெல்லாந் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் எனனையொழிந்து கர்த்நாவுண்டோவென்று மனுகொவஞ் சொல்லுகையாலே பரமேசுவரனும் இவன் மகாகொவியாயிருந்தா னிவனுடைய கொவத்தையடக்கவேண்டுமென்று திருவுளத்தடைத்தருளித் தேவர்க்குக் குருவாகிய அதிகாரத்தை மாற்றியருளப் பயப்பட்டுப் புகலியென்கின்ற திருப்பதியிலேபோய்ப் பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி அடியேன்செய்த அபராதங்களைப் பொறுத்தருளி யடியேனை ரகூஷித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் தம்பிரானும் நீமகாவேகியாயிருந்தாயென்று திருவுள்ளமாய் முன்புபோலே தேவர்களுக்குக் குருவாகிய அதிகாரத்தைபுங்கொடுத்தகாரணத்தால் வெங்குரு என்கின்ற பெயருண்டாயது.

பாணிமுவலும்புதையமேல்மிதந்த தோணிபுரத்துறைந்தனை-என்றது. பாணியென்கின்ற செலம் பிரளயமாய்ப் பூமி - அந்தர-சுவர்க்க-மூன்று லோகங்களையும் புதைப்ப அதைச் சங்காரம்பண்ணி யநுளியதின்மேலே தோணிபோல மிதந்த வெங்குருவாகியதோணிபுரமென்றதே திருப்பதியாகவெழுந்தருளியிருந்தனை எ-று.

தொலையாவிருநிதிவாய்ந்த பூந்தாராயெய்ந்தனை - என்றது. வேண்டினோர் வேண்டியதுகொடுத்துத் தொலைவறச் சங்கநிதி - பத்மநிதியென்று சொல்லப்பட்ட இரண்டுநிதிகளும் பூவும் தாராயும் பூசிக்கையாலே திருப்பூந்தாரா யென்னப்பட்ட திருப்பதியிலே எழுந்தருளியிருந்தனை எ-று.—ஒருகாலத்துத் தொலையாதவரத்தைப்பெறுவது காரணமாகத் திருத்தோணிபுரத்திலேவந்து தம்பிரானைப்பூசித்தலா

லுங்களுக்கு வேண்டுவதென்னென்றுகேட்டருள, தம்பிரானே அடியோங்களுக்கு எல்லாக்காலங்களுந் தொலையாமல் கொடுக்கத்தக்க வரத்தை பிரசாதித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அவ்வாறே தொலையாத வரத்தைபுங்கொடுத்தருளி மகாசங்காரத்தினுந் தம்முடைய ஸ்ரீ அஸ்தங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமுங் கொடுத்தருளினதால் பூந்தாராயெனப் பெயருண்டாயது.

வரபுரமென்றணர் சிரபுரத்தறைந்தனை-என்றது. வரத்தைத்தருவதான புரமென்றணர்த்தக்க சிரபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை எ-று தேவர்களும்-பிர்ம்மா-விஷ்ணுக்களுமாகக்கூடி அமிர்தத்தையுண்டாக்கித் தேவர்களையிருத்தி விஷ்ணுபகவான் அமிர்தம்படைத்துக்கொண்டு வருகிறவேளையில் ராகு கேதுவென்கின்ற இரண்டு பாம்பும்கூடிக் காந்திருந்து அமிர்தபானம்பண்ணுவதாக இருப்பதகண்டு விஷ்ணுபகவான் அமிர்தம்படைத்துவருகின்ற சட்டுவத்தைக்கொண்டு தலையுறவெட்டுகையா லுட்லிழந்து நாகுமிரண்டும் நம்முடல்தரக்கடவான் பரமேசுவரனுழிய வேறையில்லையென்ற திருப்பூந்தாராயிலேவந்து பரமேசுவரனைநோக்கி யிரண்டுசிரங்களும் பூசித்தலால் சிரபுரமென்ற பெயருண்டாயது.

ஒருமலையெடுத்த விருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினை-என்றது. பெருமையுள்ள கயிலாயமென்னும் பேரையுடைத்தாய் உனக்கே ஆலயமாயிருப்பதொரு வெள்ளிமலையையெடுத்த பெரிய புசபலங்கொண்ட ராவணனுடைய கர்வத்தைக்கெடுத்தருளினை எ-று.

புறவம்புரிந்தனை - என்றது. பிரசாபதியென்கின்ற பிர்மவிருஷி - கவுதமரிஷியைநோக்கி நீ ஸ்திரிபோகத்தைக் கைவிடாமலிருக்கிறவனல்லோவென்று தூஷிணிக்கையாலே கவுதமரிஷியும் பிரசாபதி பதவானேப்பார்த்து நீ புருவென்னும் ஒரு பகூஷியாய் நரமாமிசம் புசிப்பாயாகவென்று சபிக்கப் பிரசாபதியும் ஒரு புருவாய்ப்போய்ப் பலவிடத்தினும் நரமாமிசம் புசிக்கையிலே யொருநாள் மாமிசந்தேடிச் சோழவமிலத்திலே யொருராசா தினசரிதனுபிருக்கிறவிடத்திலே யிந்தப் புருவாகிய ரிஷியும்போய் ராசாவைப்பார்த்து எனக்கு அதிக தாகமாயிருக்கின்றது சற்று நரமாமிசம் இட வல்லீயோவென்ன ராசாவு முனக்கு எவ்வளவு மாமிசம் வேண்டுமென்னப் புருவு முன் சரீரத்திலே ஒன்று பாதிதரவேண்டுமென்ன ராசாவுந் தன் சரீரத்திலே யொன்று பாதி யரிந்திடப் புருவுக்கு நிறையப் போதாமல் சர்வ மாமிசத்தையு மரிந்திட்டு ராசாவுஞ் சோர்ந்துவிழ, இந்தப் புருவாகிய பகூஷியும் நமக்குத் தன் சரீரத்தை யரிந்திட்டுப் பிழைப்பித்த ராசா சரீரம் பெறும்படியெங்ஙனேயென்று விசாரிக்குமளவில் பரமேசுவரனுழிய வேறில்லையென்று சிரபுரத்திலேவந்து பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனுத் திருவுளத் தடைத்தருளித் தம்பிரானே யடியேன் தாகந்தீரத் தன் சரீரத்தை யரிந்திட்ட ராசாவுக்கு முன்புபோலே யுடலும் பிரசாதித்து அடியேனுக்கு மிந்தச் சாபதோஷம் நீக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய ராசாவுக்குச் சரீரமுங்கொடுத்துப் புருவுக்கு வேண்டும் வரப்பிரசாதங்களையும் பிரசாதித்துச் சாபதோஷமு மாற்றியருளிப் புருவும் பூசிக்கையாலே புறவமென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனை எ-று.

முந்நீர்த்துயின்ரோ னுகனறியாப் பண்பொடுநின்றனை - என்றது. ஆற்று நீர் வேற்றுநீர் ஊற்றுநீர் என்று சொல்லப்பட்ட முந்நீராகிய சமுத்திரத்திலே துயிலாநின்ற நாராயணனும் நாலுமுகத்தினையுடைய பிர்மாவு மடியு முடியுந் தேடற்கரிதாய் நின்ற பண்பினையுடையையா யெழுந்தருளி யிருந்தனை எ-று.

EFEO_TVG_149-100 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சண்பையமர்ந்தனே-என்றது. தூர்வாசமகாரிஷிசாபத்தே கிருஷ்ணவதாரத்திலுள்ள கோபாலப்பிள்ளைகளெல்லாமித்த இருஷியை அசங்கதித்துத் தங்களிலே யொருவனைக் கொப்பிணியாகப் பாவித்துச்சென்று இவள் பெறுவது ஆணே பெண்ணேவென்ற அந்த இருஷியைக் கேட்கையாலே அவர் கோபித்து இவள் பெறுவது ஆணுமல்ல பெண்ணுமல்ல வுங்கள் வமிசத்தாரையெல்லாஞ் சங்கரிக்கைக்கு ஒரு இருப்புலக்கை பிறக்கக் கடவதென்று சபிக்கையாலே அவன் வயிற்றிலிருந்து ஒரு இருப்புலக்கைவிழ அந்தச் சேதியைக் கிருஷ்ணன்கேட்டுத் தூர்வாசமகாரிஷி சாபம் கேவல மல்லவென்று அந்த இருப்புலக்கையைப் பொடியாக அராவி அந்தப் பொடியைச் சமுத்திரத்திலே போட அராவதுக்குப் பிடிபடாத ஒரு வேப்பம்மிளைப் பிரமாணமுள்ள விருப்பை ஒருமீன் விழுங்கி ஒரு வலிக்காரனகையிலேயகப்பட்டது. அதின் வயிற்றில் கிடந்த இரும்பைத்தன னம்புக்கலையிலேவைத்தான் மற்றுஞ் சமுத்திரத்திற்போட்ட இரும்புப் பொடிகளெல்லாம் அலையுடனே வந்து கரைசேர்ந்து சண்பையாக மூனைத்துக் கதிராய் நின்றவிடத்திலே கோபாலகுமாரர்கள் வீளையாடி வருவோமென்று இரண்டுகையாகப் பிரிந்து சென்று அந்தச் சண்பைக்கதிரைப் பிடுங்கி யெறிந்துகொண்டு அசனுலே பட்டினிமூந்தாகள். இதைக் கிருஷ்ணன் கேட்டு இதனுலே நமக்கு மரணமாயிருக்குமென்று விசாரித்து ஆலின்மேலே யொரு இலையிலே யேகாசனமாக வொரு பாதத்தை மடித்து ஒருபாதத்தைத் தூக்கி யமர்ந்திருக்கிறவிடத்திலே அந்த மீன்வேடன் பகூறி சாலங்கவைத்தேடி வருகிறபோது தூக்கிய பாதத்தை யொரு செம்பருந்திருக்கிறதாகப் பாவித்து அந்த அமபைத் தொடுத்தெய்யக் கிருஷ்ணனும் பட்டுப் பரமபதத்தை யடைந்தானித்தச் சாபதோஷம் தூர்வாசமகாரிஷியைச்சென்று தலிக்கையாலேயிந்தத் தோஷத்தை நீக்கப் பரமேசுவரனேதோக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனுந் திருவுளந்தைத்தருள இருஷியுந் தென்டன்பண்ணித் தம்பிரானே அமபேனுடைய சாபத்தாலே கிருஷ்ணனுடைய வமிசத்திலுள்ள கோபாலரெல்லாருஞ் சண்பைக்கதிர்களால் சங்காரப்படுகையாலே அந்தத்தோஷ மடியேனேவந்து நலியாதபடி திருவுளத் தடைத்தருளி ரகூஷிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யத் தூர்வாசமகாரிஷிக்குச் சண்பைச்சாபத்தினுலுள தோஷத்தை நீக்கிச் சண்பைமுனியென்கின்ற நாமத்தையுந் தரித்தருளிச் சண்பையென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனே எ - று.

ஐயுறுமமனரு மறுவகைத்தோரு முழியுமுணராக் காழியமர்ந்தனே- என்றது. வேதாகம புராணசாத்திரங்களிலுள்ள பலத்தையில்லையென்று ஐயமுற்றிருக்கின்ற அமணருங் கைப்புப்-புளிப்புக்-கார்ப்புத்-துவர்ப்பு-சூர்ப்புத்-திக்திப்பு என்கின்ற அறுவகை ரசங்களையு முச்சிக்குமுன்னே புளிக்கிறதே பொருளென்றிருக்கிற புத்தரு முழிகாலத்து மறியாமல் மிகவுங் காளிதமான விஷத்தையுடைய காளியென்கின்ற நாகம் பூசிக்கையாலே சீகாழியென்கின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனே எ - று.

எச்சனேழிசையோன் கொச்சையை மெச்சினே-என்றது. குரல்-துத்தம்-கைக்கிளை-உழை-யிளி-விளரி-தாரம் எனவேழிசை.—குரலாவது-சங்கதொனி, துத்தமாவது-ஆண்மீன்பிளிறு, கைக்கிளையாவது-குதிரையின்குரல், உழையாவது-மானின்குரல், இளியாவது-மயிலின்குரல், விளரிபாவது-கடலோசை, தாரமாவது-காடையின்குரல் என்னும் நாதங்களையு மெச்சினே. மகத்தான இருடிகள் எல்லாரினும் விருத்தராயுள்ள பராசரப்பிரமரிஷியானவர் மற்ற ரிஷிகளெல்லாரையும்

நோக்கி நீங்கள் சமுசாரிகளைபோலிய விரதத்தை யனுஷ்டிப்பாரில்லையென்று அவர்களைத் தூஷிக்க அவர்களும் நீ மச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்தமு முண்ணப்பற்றி விடாமலனுபவிப்பாயென்று சபிக்கையாலே அந்தச் சாபத்தின்படிபோய் மச்சகந்தியைப் புணர்ந்து அந்தத் தூர்க்கந்த மிவரைப்பற்றி யொரு யோசனைதூரம் தூர்க்கந்தித்தபடியாலே யிது போக்கவல்லவர் பரமேசுவரனையொழிய விலலையெனறு சீகாழியிலேவந்து பரமேசுவரனை அர்ச்சிக்கப் பரமேசுவரன உனக்கு வேண்டினதெனனனறு கேட்கத் தம்பிரானே அடியேனைப்பற்றின தூர்க்கந்தத்தை விடுவிக்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, தம்பிரானு மிவனென்ன கொச்சை முனியாவென்று திருவுளமா யிவனமேற்பற்றின தூர்கந்தத்தையும் போக்கிச் சுகந்தத்தையும் பிரசாதித்தருளிக் கொச்சையெனகின்ற சந்தானநாமத்தையுந் தரித்தருளிக் கொச்சையெனகின்றதே திருப்பதியாக வெழுந்தருளி யிருந்தனே எ - று.

ஆறுபதமு மைமந்தவர்வேள்வியு மறைமுதல்நான்கு மூன்றுகாலமுந் தோன்ற நின்றனே-என்றது. பிரத்தி-பிரத்தியாகாரம்-தல்லியம் - தல்லியாதீதம்-வித்தை-அவித்தையென்கின்ற ஆறுபதங்களும், ஆசு-மதுரஞ்-சித்திரம் - சித்தாரம்-விஸ்தரம்-என்கின்ற வைந்தும், இருக்கு-யசுர்-சாமம-அதர்வணமென்கின்ற நாலுவேதங்களுஞ், செலகாலம்-வருகாலம - நிகழ்காலமென்கின்ற மூன்றகாலமுந் தோன்றநிலை மூர்த்திபாயினே எ - று.

இருமையி னொருமையும்-என்றது. சத்திசிவங்களாயிருந்துள்ள இரண்டுமொனருப் அர்த்தநாரீசுவரமாயிருந் துள்ளதை எ - று.

ஒருமையின்பெருமை என்றது. தானேயொரு எல்லையில்லாத சிவமாயிருந்துள்ளதை எ - று.

மறிவிலாமறையோர் கழுமலமுதுபதிக் கவுணியன்கட்டுரை கழுமலமுதுபதிக் கவுணியனறியும்-என்றது. மறுவற்ற பிரமவமிசத்தில் தோன்றித் தீக்கைகளாலே மலத்தைக் கழுவப்பட்ட கவுணியர் கோத்திரத்திலேவந்த சீகாழிப்பிள்ளைகடுணையை விரும்பிக் கழுமலமென்கின்ற முதபதியிலே யெழுந்தருளினே. கமமென்கின்ற பிரமரிஷிலே உண்கின்றவனே அறியுமெ எ - று.

அணையதனலையாதலின்-என்றது. அத்தன்மையாகிய வியல்பினுடையையாதலின எ - று.

நின்னேநினையவல்லவரில்லே நீணிலத்தே-என்றது. நின்னேநினைக்க வல்லார்களுக்குப் பிறப்பில்லே என்றவாறு.

திருச்சிற்றம்பலம்.

உரை - முற்றியது.

திருக்கழுமலம் - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சேவுயருந்திண்கொடியான்திருவடியேசரணென்றுசிறந்தவன்பா
னுவியலுமங்கையொடுநான்முகன்முன்வழிபட்டநலங்கொள்கோயில்
வாவிதொறும்வண்கமலமுகங்காட்டச்செங்குமுதம்வாய்கள்காட்டக்
காவிபிரங்கருங்குவளைகருநெய்தல்கண்காட்டுங்கழுமலமே. (க)

பெருந்தடங்கண்செந்துவர்வாயப்பீடிடையமலச்செல்வியிரியாமேனி
யருந் தையசுண்ணவெண்ணீறலங்கரித்தானமரர்தொழவமருங்கோயி

றருந்தடக்கைமுத்தழலோர்மனேகடொறுமிறைவனதுதன்மைபாடிக்
கருந்தடங்கண்ணர்கழல்பந்தம்மானேப்பாட்டயருங்கழுமலமே. (உ)

அலங்கன்மலிவானவருந்தானவருமலைகடலைக்கடையப்பூதந்
கலங்கவெழுகடுவிடமுண்டிருண்டமணிகண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர்புயன்மறந்துமீன்சனிபுக்கூன்சலிக்குங்காலந்தானுங்
கலங்கலிலாமனப்பெருவண்கையுடையமெய்யர்வாழ்கழுமலமே. (ஊ)

பாரிதனோலிந்தமர்பயமெய்தச்சயமெய்தும்பரிசுவெம்மைப்
போரிசையும்புரமூன்றும்பொன்றவொருசிலவீளத்தோன்பொருந்துங்கோயில்
வாரிசைமென்முலைவடவார்மாளிகையின்சூளிகைமேன்மகப்பாராட்டக்
காரிகையும்விசும்பியங்குகணங்கேட்டமெழிவெய்துங்கழுமலமே. (சு)

ஊர்கின்றவரவமொளிவிடுதிங்களொடுவன்னிமத்தமன்னு
நீர்நின்றகங்கைசுருவெண்டலைசேர்செஞ்சடையோனிகழுங்கோயி
லேர்தங்குமலர்நிலவியிசைவெள்ளிமலையென்னநிலவிநின்ற
கார்வண்டின்கணங்களாற்கவின்பெருகுசுதைமாடக்கழுமலமே. (டு)

21 தருஞ்சதந்தந்தருளென்றடிநினைந்துழலுணந்துதவங்கள்செய்த 91
பெருஞ்சதுரர்பெயலாக்கும்பிடார்தோழமையளித்தபெருமான்கோயி
லிருந்தவயலரவிந்தமதுவுகுப்பவதுகுடித்துக்களித்துவாளை
கருஞ்சகடமிளகவளர்கரும்பிரியவகம்பாயுங்கழுமலமே. (சு)

புவிமுதலைம்பூதமாய்ப்புலனைந்தாய்நிலனைந்தாய்க்கரணநான்கா
யவையவைசேர்பயனுருவாயல்லவுருவாய்நின்றுனமருங்கோயி
றவமுயல்வோர்மலர்பறிப்பத்தாழவிடுகொம்புதைப்பக்கொக்கின்காய்கள்
கவணெறிகற்போற்சுனையிற்கரைசேரப்புள்ளிரியுங்கழுமலமே. (எ)

அடல்வந்தவானவரையழித்துலகுதெழித்தழலுமரக்கர்கோமான்
மிடல்வந்தவிருபதுதோணெரியவிரற்பணிகொண்டோன்மேவுங்கோயில்
நடவந்தவுழவரிதுகூடொழுவகைபாலாய்த்தென்றுதன்று
கடல்வந்தசங்கினறமுத்தவயற்கரைகுவிக்குங்கழுமலமே. (அ)

பூமகடன்கோனயனும்புள்ளினுடுகேழலுருவாகிப்புக்கிட்
டாமளவுஞ்சென்றுமுடியடிகாணுவகைகின்றுனமருங்கோயில்
பாமருவுங்கலிப்புலவோர்பன்மலர்கள்கொண்டணிந்துபரிசினுலே
காமனைகள்பூரித்துக்களிகூர்ந்துதின்றேத்துங்கழுமலமே. (கூ)

குணமின்றிப்புத்தர்களும்பொய்த்தவத்தைமெய்த்தவமாகின்றுகையி
லுணன்மருவுஞ்சமணர்களுமுணராதவகைகின்றுறையுங்கோயின்
மணமருவும்வதுவையொலிவிழவினெலியிவையிசையமண்மேற்றேவர்
கணமருவுமறையினெலிகிழ்ப்படுக்கமேற்படுக்குங்கழுமலமே. (கo)

கற்றவர்கள்பணிந்தேத்துங்கழுமலத்துளீசன்றன்கழன்மேனல்லோர்
நற்றுணையாம்பெருந்தன்மைஞானசம்பந்தன்றுனையந்துசொன்ன
சொற்றுணையோரைந்தினுடைந்திவைவல்லார்தூமலராடுணைவராகி
முற்றுலகமதுவாண்டுமுக்கணனடிசேரமுயல்கின்றுரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவையாறு - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

புலனைந்தும்பொறிகலங்கிநெறிமயங்கியறிவழிந்திட்டைமேலுந்தி
யலமந்தபோதாகவஞ்சேலென்றருள்செய்வானமருங்கோயில்
வலம்வந்தமடவார்கடைமாடமுழவதிரமழையென்றஞ்சிச்
சிலமந்தியலம்துமரமேறிமுகில்பார்க்குந்திருவையாறே. (க)

விடலேறுபடநாகமரைக்கசைத்துவெற்பரையன்பாவையோடு
மடலேறுன்றதுவேறியஞ்சொலீர்பலியென்னுமடிகள்கோயில்
கடலேறித்திரைமோதிக்காவிரியுடன்வந்துகங்குல்வைகித்
திடலேறிச்சுரிசங்குசெழுமுத்தங்கின்றலைக்குந்திருவையாறே. (உ)

கங்காளர்கயிலாயமலையாளர்கானப்பேராளர்மங்கை
பங்காளர்திருச்சூலப்படையாளர்வீடையாளர்பயிலுங்கோயில்
கொங்காளப்பொழிலழைந்துகூர்வாயாலிறகுலர்த்திக்கூதனீங்கிச்
செங்கானல்வெண்குருகுபைங்கானலிரைதேருந்திருவையாறே. (ஈ)

ஊன்பாயுமுடைதலைகொண்டுரூரின்பலிக்குழல்வாருமையாள்பங்கர்
தான்பாயும்விடையேறுசங்கானூர்தழலுருவர்தங்குகோயின்
மான்பாயவயலருகேமரமேறிமந்திபாய்மடுக்கடோறுந்
தேன்பாயமீன்பாயச்செங்கமலமொட்டலருந்திருவையாறே. (சு)

நீரோகூவிளமுநிலாமதியும்வெள்ளெருக்குநிறைந்தகொன்றைத்
தாரோடுதண்கரந்தைசடைக்கணிந்ததத்துவனூர்தங்குங்கோயில்
காரோடிவிசும்பளந்துகடிநாறும்பொழிலணிந்தகமழ்தார்வீதித்
தேரோடுமரங்கேறிச்சேயிழையார்நடம்பயிலுந்திருவையாறே. (டு)

வேந்தாகிவிண்ணவர்க்குமண்ணவர்க்குநெறிகாட்டும்விகிர்தனுகிப்
பூந்தாமநறுங்கொன்றைச்சடைக்கணிந்தபுண்ணியனூர்நண்ணுங்கோயில்
காந்தாரமிசையமைத்துக்காரிகையார்பண்பாடக்கவினூர்வீதித்
தேந்தாமென்றரங்கேறிச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (சு)

நின்றுலாவெடுவிசும்பினெருங்கிவருபுரமூன்றுமீள்வாயம்பு
சென்றுலாம்படிதொட்டசிலையாளிமலையாளிசேருங்கோயில்
குன்றெலாங்குயில்கூவக்கொழும்பிரசமலர்பாய்ந்துவாசமல்கு
தென்றலாரடிவருடச்செழுங்கரும்புகண்வளருந்திருவையாறே. (எ)

EFEO_TVG_149-102 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

அஞ்சாதேகயிலாயமலையெடுத்தவரக்கர்கோன்றலைகள்பத்து
மைஞ்சாடுதோணெரியவடர்த்தவனுக்கருள்புரிந்தமைந்தர்கோயி
லிஞ்சாயலிளந்தெங்கின்பழம்வீழ்வினமேதியிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக்கதிருமுக்கிச்செங்கமலவயல்படியுந்திருவையாறே. (அ)

மேலோடிவிசும்பணவிவியனிலத்தைமிகவகழ்ந்துமிக்குநாடு
மாலோடுகான்முகனுமறியாதவகைநின்றுன்மன்னுகோயில்
கோலோடக்கோல்வளையார்கூத்தாடக்குவிமுலையார்முகத்தினின்று
சேலோடச்சிலையாடச்சேயிழையார்நடமாடுந்திருவையாறே. (கூ)

குண்டாடுகூற்றுடுக்கைச்சமணரொடுசாக்கியருங்குணமொன்றில்லா
மிண்டாடுமிண்டருரைகேளாதேபாளாமின்மேவித்தொண்டீ
ரெண்டோளர்முக்கண்ணரெம்மீசரிறைவரினிதமருங்கோயில்
செண்டாடுபுனற்பொன்னிச்செழுமணிகள்வந்தலைக்குந்திருவையாறே.(கo)

அன்னமலிபொழில்புடைசூழையாற்றெம்பெருமானேயந்தண்காழி
மன்னியசீர்மறைநாவன்வளர்ஞானசம்பந்தன்மருவுபாட
லின்னிசையாலிவைபத்துமிசையுங்காலீசனடியேத்துவார்க
டன்னிசையோடமருலகிற்றவறெறிசென்றெய்துவர்தாழாதன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றம் - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

மெய்த்தாறுசுவையுமேழிசையுமெண்குணங்களும்விரும்பும்நால்வே
தத்தாலுமறிவொண்ணாநடைதெளியப்பளிங்கேபோலிவைபாக
மொத்தாறுசமயங்கட்கொருகலிவன்கருதுமூருலவுதெண்ணீர்
முத்தாறுவெதிருதிரைத்திலம்வாரிக்கொழிக்குமுதுகுன்றமே. (க)

வேரிமிகுசுழலியொடுவேதிவனுப்வெங்கானில்விசைபன்மேவு
போரின்மிகுபொற்றையளந்துபாசுபதம்புரிந்தளித்தபுராணர்கோயில்
காரின்மலிகடிபொழில்கள்கனிகள்பலமலருதிர்த்துக்கயமுயங்கி
மூரிவளங்கிளர்தென்றிருமுன்றிற்புகுதலவுமுதுகுன்றமே. (உ)

தக்கனதுபெருவேள்விச்சந்திரனிந்திரனெச்சனருக்கனங்கி
மிக்கவிதாதாவினெடும்விதிவழியேதண்டித்தவிமலர்கோயில்
கொக்கினிபகொழும்வருங்கைதலிகமுகுபர்தெங்கின்குவைகொள்சோலை
முக்கனியின்சாறுறைகிச்சேறுலராவீள்வயல்சூழ்முதுகுன்றமே. (ங)

வெம்மைமிகுபுரவாணர்மிகைசெய்யவிறலழித்துவிண்ணுளோர்கள்
செம்மலரோனிந்திரன்மால்சென்றிரப்பத்தேவர்களேதேரதாக
மைம்மருவுமேருவிலுமாசுணநாணரிபெருகால்வாளியாக
மும்மதிலுமொடியளவிற்பொடிசெய்தமுதல்வனிடமுதுகுன்றமே. (ச)

இழைமேவுகலையல்குலேந்திழையாளொருபாலாயொருபர்வெள்கா
துழைமேவுமுரியுடுத்தவொருவனிருப்பிடமென்பரும்பரோங்கு
கழைமேவுமடமந்திமழைகண்டுமகவினெடுபுகவொண்கல்லின்
முழைமேவுமாலானையினைதேரும்வளர்சாரன்முதுகுன்றமே. (டு)

நகையார்வெண்டலைமாலைமுடிக்கணிந்தநாதனிடநன்முத்தா
வகையாரும்வனைப்பண்டங்கொண்டிரண்டுகையருகுமறியமோதித்
தகையாரும்வரம்பிடரிச்சாலிகழூர்குவளைசாயப்பாய்ந்து
முகையார்செந்தாமரைகண்முகமலரவயறமுவுமுதுகுன்றமே. (சு)

அறங்கிளருநால்வேதமாலின்கீழிருந்தருளியமரர்வேண்ட
நிறங்கிளர்செந்தாமரையோன்சிரமைந்தினொன்றறுத்தநிமலர்கோயில்
திறங்கொண்மணித்தாளங்கள்வரத்திரண்டங்கெழிற்சூறைவர்சிறுமிமார்கண்
முறங்களினுற்கொழித்துமணிசெலவிலகிமுத்துலைப்பெய்முதுகுன்றமே(எ)

கதிரொளியெடுமுடிபத்துடையகடலிலங்கையர்கோன்கண்ணும்வாயும்
பிதிரொளியகனல்பிறங்கப்பெருங்கயிலைமலையினிலேபெயர்த்தனான்று
மதிலளகைக்கிறைமூரலமலரடியொன்றூன்றிமறைபாடவாங்கே
முதிரொளியசுடர்நெடுவாண்முன்னீந்தான்வாய்ந்தபதிமுதுகுன்றமே. (அ)

பூவார்பொற்றவிசின்மிசையிருந்தவனும்பூந்துழாய்புனைந்தமாலு
மோவாதகழுகேனமாயுயர்ந்தாழ்ந்துதேடியுண்மைகாணாத்
தேவாருந்திருவுருவன்சேருமலைசெழுநிலத்தைமூடவந்த
மூவாதமுழங்கொலிநீர்கிழ்தாழமேலுயர்ந்தமுதுகுன்றமே. (கூ)

மேனியிற்சிவரத்தாரும்விரிதருதட்டுடையாரும்விரவலாகா
வூனிகளாயுள்ளார்சொற்கொள்ளாதுமுள்ளுணர்ந்தங்குப்மின்றெண்டீர்
ஞானிகளாயுள்ளார்கணன்மறையைமுழுதுணர்ந்தைம்புலன்கள்செற்று
மோனிகளாய்முனிச்செல்வர்தனித்திருந்துதவம்புரியுமுதுகுன்றமே. (கo)

முழங்கொலிநீர்முத்தாறுவலஞ்செய்முதுகுன்றத்திறையைமூவாப்
பழங்கிழமைப்பன்னிருபேர்படைத்துடையகுமுலமேபதியாக்கொண்டு
தழங்கெரிமூன்றுறும்புதொழிற்றமிழ்ஞானசம்பந்தன்சமைத்தபாடல்
வழங்குமிசைகூடும்வகைபாடுமவர்நீலகமாள்வர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

ஏரிசையும்வடவாலின்கீழிருந்தங்கிருவர்க்கிறங்கிநின்று
கோரியனன்மறைப்பொருளையுரைத்தொளிசேர்நெறியளித்தகோயில்
பாரிசையும்பண்டிதர்கள்பன்னுமும்பயின்றுமோசைகேட்டு
வேரிமலிபொழிற்கிள்ளைவேதங்கள்பொருட்சொல்லுமிழலையாமே. (க)

EFEO_TVG_149-103 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பொறியரவமதுசுற்றிப்பொருப்பேமத்தாகப்புத்தேளிர்கூடி
மறிகடலைக்கடைந்திட்டவிடமுண்டகண்டத்தோன்மன்னுங்கோயில்[ங்கெல்
செறியிதழ்த்தாமரைத்தவிசிற்றிகழ்ந்தோங்குமிலக்குடைக்கீழ்செய்யார்செ
வெறிகதிர்ச்சாமரையிரட்டவிளவன்னம்வீற்றிருக்குமிழலையாமே. (உ)

எழுந்துலகைகலிந்தமுதமுமவுணர்கடம்புரமூன்று மெழிற்கணுடி [யில்
யுழுந்துருளுமலையினெள்ளெரிகொளவெஞ்சிலைவளைத்தோன்றையுங்கோயில்
கொழுந்தரளநகைகாட்டக்கோகநகமுகங்காட்டக்குதித்துநீர்மேல்
விழுந்தகயல்விழிகாட்டவிற்பவளம்வாய்காட்டுமிழலையாமே. (ஙு)

உரைச்சேருமெண்பத்துநான்குநூறுயிரமாம்யோனிபேத
நி ரச்சேரப்படைத்தவற்றி யுயிர்க்குயிராயங்கங்கேகின்றான்கோயில்
வரைச்சேருமுகின்முழவமயில்கள்பலநடமாடவண்டுபாட
விரைச்சேர்பொன்னிதழிதரமென்காந்தள்கையேற்குமிழலையாமே. (ச)

காணுமாறரியபெருமானுகிக்காலமாய்க்குணங்கணமூன்றுய்ப்
பேணுமூன்றுருவாகிப்பேரூலகம்படைத்தளிக்கும்பெருமான்கோயி
றூணுவாய்நின்றபரதத்துவனீயுத்தமனீயிறைஞ்சிநின்று
வேணுவார்கொடிவிண்ணோர்தமைவிளிப்பபோலொங்குமிழலையாமே. (ஞ)

அகனமர்ந்தவனபினராயறுபகைசெற்றைம்புலனுமடக்கிஞானப்
புகலுடையோர்தம்முள்ளப்புண்டரிகத்துள்ளிருக்கும்புராணர்கோயி
றகவுடைநீர்மணித்தலத்துச்சங்குளவர்க்கந்திகழச்சலசத்தியுண்
மிகவுடையபுன்குமலர்ப்பொரியட்டமணஞ்செய்புமிழலையாமே. (சு)

ஆறுசடைமுடியனனலாடுமலர்க்கையனியப்பாவை
கூறுதிருவுருவன்கூத்தாடுங்சுணமுடையோன்குளிருங்கோயில்
சேறுசெங்கழுநீர்த்தாதாடிமதுவுண்டுசிவந்தவண்டு
வேறுயவுருவாகிச்செவ்வழிநற்பண்பாடுமிழலையாமே. (எ)

கருப்பமிகுமுடலடர்த்துக்காலான்றிக்கைமறித்துத்தகயிலையென்னும்
பொருப்பெடுக்கலுமரக்கன்பொன்முடிதோணெரித்தவிரற்புனிதர்கோயி
றருப்பமிகுசலந்தரன்றன்னுடறடிந்தசக்கரத்தைவேண்டியீண்டு
விருப்பொடுமால்வழிபாடுசெய்யவிழிவிமானஞ்சேர்மிழலையாமே. (அ)

செந்தளிர்மாமலரோனுந்திருமாலுமேனமோடன்னமாகி
யந்தமடிகாணுதேயவரேத்தவெளிப்பட்டோனமருங்கோயில்
புந்தியினன்மறைவழியேபுற்பரப்பிநெய்சமிதைகையிற்கொண்டு
வெந்தழலின்வேட்டிலகின்மிகவளிப்போர்சேருமூர்மிழலையாமே. (க)

எண்ணிறந்தவமனர்களுமிழிதொழில்சேர்சாக்கியருமென்றுந்தன்னை
நண்ணரியவகையமக்கித்தன்னடியார்க்கருள்புரியுநாதன்கோயில்
பண்ணமருமென்மொழியார்பலர்களிப்பாராட்டுமோசைகேட்டு
விண்ணவர்கள்வியப்பெய்திவிமானத்தோடும்மிழியுமிழலையாமே. (கo)

மின்னியலுமணிமாட்மிடைவீழிமிழலையான்விரையார்பாதஞ்
சென்னிமிசைகொண்டொழுகுஞ்சிரபுரக்கோன்செழுமறைகள்பயிலுநாவன்
பன்னியசீர்மிகுஞானசம்பந்தன்பரிந்துரைத்தபத்துமேத்தி
யின்னிசையாற்பாட்வல்லாரிருநிலத்திலீசனெனுமியல்பினரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம் - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

வெந்தவெண்பொடிப்பூசுமார்பின்விரிநூலொருபால்பொருந்தக்
கந்தமல்குகுழலியொடுங்கடிபொழிற்கச்சிதன்னு
ளந்தமில்குணத்தாரவர்போற்றவணங்கினேட்டடல்புரி
யெந்தைமேவியவேகம்பந்தொழுதேத்தவிடர்கெடுமே. (க)

வரந்திகழுமவுணர்மாநகர்மூன்றுடன்மாய்ந்தவியச்சரந்
துரந்தெரிசெய்தகோழ்சடைச்சங்கரன்மேயவிடங்
குருந்தமல்லிகைகோங்குமாதவிநல்லகுராமரவந்
திருந்துபைம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (உ)

வண்ணவெண்பொடிப்பூசுமார்பின்வரியரவம்புனைந்து
பெண்ணமர்ந்தெரியாடல்பேணியபிஞ்ஞகன்மேயவிடம்
விண்ணமர்மெடமோங்கிவிளங்கியகச்சிதன்னுட்
டிண்ணமாம்பொழில்சூழ்ந்தவேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (ங)

தோலுநூலுந்துதைந்தவரைமார்பிற்சுடலைவெண்ணீறணிந்து
காலன்மாள்வுறக்காலாற்காய்ந்தகடவுள்கருதுமிட
மாலைவெண்மதிதோயுமாமதிற்கச்சிமாநகரு
ளேலகாதியசோலைசூழேகம்பமேத்தவிடர்கெடுமே. (ச)

தோடணிமலர்க்கொன்றைசேர்சடைதூமதியம்புனைந்து
பாடலனுன்மறையாகப்பல்கணப்பேய்களவைசூழ
வாடலவெண்டலையோடனலேந்திமகிழ்ந்துடனுடல்புரி
சேடர்சேர்கலிக்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (டு)

சாக்கியம்பொன்வரையாகத்தானவர்மும்மதில்சாயவெய்
தாகம்பெண்ணொருபாகமாகவரவொடுநாலணிந்து
மாக்கந்தோய்மணிமாடமாமதிற்கச்சிமாநகரு
ளேகம்பத்தமைபிசன்சேவடியேத்தவிடர்கெடுமே. (சு-எ)

வாணிலாமதிபுல்குசெஞ்சடைவாளரவம்மணிந்து
நாணிடத்தினில்வாழ்க்கைபேணிநகுதலையிற்பலிதேர்ந்
தேணிலாவரக்கன்றனீண்முடிபத்துமிறுத்தவனூர்
சேணுலாம்பொழிற்கச்சியேகம்பஞ்சேரவிடர்கெடுமே. (அ)

EFEO_TVG_149-104 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பிரமனுந்திருமாலுங்கைதொழப்பேரழலாயபெம்மா
னரவஞ்சேர்சடையந்தணனணங்கினோடமருமிடங்
கரவில்வண்கையினர்கள்வாழ்கலிக்கச்சிமாகருண்
மரவஞ்சூழ்பொழிலேகம்பந்தொழவல்வினைமாய்ந்தறுமே. (கூ)

குண்டுபட்டமணுயவரோடுங்கூறைதம்மெய்போர்க்கு
மிண்டர்கட்டியகட்டுரையைகொண்டுவிரும்பேன்மின்
விண்டவர்புரமூன்றும்வெங்கணையொன்றினலவியக்
கண்டவன்கலிக்கச்சியேகம்பங்காணவிடர்கெடுமே. (கo)

ஏரினர்பொழில்சூழ்ந்தகச்சியேகம்பமேயவனைக்
காரினர்மணிமாடமோங்குகழுமலவன்னகருட்
பாரினர்தமிழ்ஞானசம்பந்தன்பரவியபத்தும்வல்லார்
சீரினர்புகழோங்கிவிண்ணவரொடுசேர்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பறியலூர் - திருவீரட்டம் - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கருத்தன்கடவுள்கனவேந்தியாடி
நிருத்தன்சடைமேனிரம்பாமதியன்
றிருத்தமுடையார்திருப்பறியலூரில்
விருத்தனெனத்தகும்வீரட்டத்தானே. (க)

மருந்தனமுதன்மயானத்துண்மைந்தன்
பெருந்தண்புனற்சென்னிவைத்தபெருமான்
றிருந்துமறையோர்திருப்பறியலூரில்
விரிந்தமலர்ச்சோலைவீரட்டத்தானே. (உ)

குளிர்ந்தார்சடையன்கொடுஞ்சிலைவிற்காமன்
விளிந்தானடங்கவீந்தெய்தச்செற்றான்
றெளிந்தார்மறையோர்திருப்பறியலூரில்
மிளிர்ந்தார்மலர்ச்சோலைவீரட்டத்தானே. (ங)

பிறப்பாதியில்லான்பிறப்பார்பிறப்புச்
செறப்பாதியந்தஞ்செலச்செய்புந்தேசன்
சிறப்பாடையார்திருப்பறியலூரில்
விறற்பாரிடஞ்சூழ்ந்தவீரட்டத்தானே. (ச)

கரிந்தாரிடுகாட்டிலாடுங்கபாலி
புரிந்தார்படுதம்புறங்காட்டிலாடுந்
தெரிந்தார்மறையோர்திருப்பறியலூரில்
விரிந்தார்பொழிற்சோலைவீரட்டத்தானே. (ஞ)

அரவுற்றரணுவனலம்பதாகச்
செருவுற்றவர்புரந்தீயெழச்செற்றான்
றெருவிற்கொடிசூழ்திருப்பறியலூரில்
வெருவுற்றவர்தொழும்வீரட்டத்தானே. (ரு)

நரையார்விடையானலங்கொள்பெருமா
னரையாரரவம்மழகாவசைத்தான்
றிரையார்புனல்சூழ்திருப்பறியலூரில்
விரையார்மலர்ச்சோலைவீரட்டத்தானே. (எ)

வளைக்குமெயிற்றினரக்கன்வரைக்கீ
ழிளைக்கும்படிதானிருந்தேழையன்னந்
திளைக்கும்படிகற்றிருப்பறியலூரில்
விளைக்கும்வயல்சூழ்ந்தவீரட்டத்தானே. (அ)

வளங்கொண்மலர்மேலயனேதவண்ணன்
முளங்குமனத்தார்தொழத்தழலாய்நின்ற
னிளங்கொம்பனாளோடிணங்கும்பிணங்கும்
விளங்குந்திருப்பறியல்வீரட்டத்தானே. (கூ)

சடையன்பிறையன்சமண்சாக்கியரோ
டுடையன்புலியினுரிதோலரைமேல்
விடையன்றிருப்பறியல்வீரட்டத்தானே. (கo)

நறுநீருகுங்காழிஞானசம்பந்தன்
வெறிநீர்த்திருப்பறியல்வீரட்டத்தானைப்
பொறிநீடரவன்புனைபாடல்வல்லார்க்
கறுநீடவலமறும்பிறப்புத்தானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பராய்த்துறை - பண் - மேகராகக்குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

நீறுசேர்வதோர்மேனியர்நேரிழை, கூறுசேர்வதோர்கோலமாய்ப்
பாறுசேர்தலைக்கையர்பராய்த்துறை, யாறுசேர்சடையண்ணலே. (க)

கந்தமாமலர்க்கொன்றைகமழ்சடை, வந்தபூம்புனல்வைத்தவர்
பைந்தண்மாதவிசூழ்ந்தபராய்த்துறை, யந்தமில்லவடிகளே. (உ)

வேதர்வேதமெல்லாமுறையால்விரித், தோதநின்றவொருவனர்
பாதிபெண்ணுருவாவர்பராய்த்துறை, யாதியாயவடிகளே. (ங)

தோலுந்தம்மரையாடைசுடர்விடு, நூலுந்தாமணிமார்பினர்
பாலுநெய்பயின்றுபராய்த்துறை, யால்நிழலடிகளே. (ச)

EFEO_TVG_149-105 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விரவிநீறுமெய்பூசுவர்மேனிமே, லிரவினில்நெரியாடுவர்
பரவினரவர்வேதம்பராய்த்துறை, யரவமார்த்தவடிகளே. (டு)

மறையுமோதுவர்மான்மறிக்கையினர், கறைகொள்கண்டமுடையவர்
பறையுஞ்சங்குமொலிசெய்பராய்த்துறை, யறையகின்றவடிகளே. (சு)

விடையுமேறுவர்வெண்பொடிப்பூசுவர், சடையிற்கங்கைதரித்தவர்
படைகொள்வெண்மழுவாளர்பராய்த்துறை, யடையகின்றவடிகளே. (எ)

தருக்கின்மிக்கதசக்கிரிவன்றனை, நெருக்கினூர்விரலொன்றினும்
பருக்கினூரவர்போலும்பராய்த்துறை, யருக்கன்றன்னடிகளே. (அ)

நாற்றமாமலராளெடுமாலுமாய்த், தோற்றமுமறியாதவர்
பாற்றினூர்வினையானபராய்த்துறை, யாற்றன்மிக்கவடிகளே. (கூ)

திருவிலிச்சிலதேரமணுதர்க, ளருவிலாவுரைகொள்ளேலும்
பருவிலாலெயிலெய்துபராய்த்துறை, மருவினன்றனிவாழ்த்துமே. (கo)

செல்வமல்கியசெல்வர்பராய்த்துறை, செல்வமேற்சிதையாதன
செல்வன்ஞானசம்பந்தனசெந்தமிழ், செல்வமாமிவைசெப்பவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பராய்த்துறைநாதேசுவரர்-தேவியார்-மொன்மலர்ப்பிகையம்மை

திருத்தருமபுரம் - பண் - யாழ்மூரி.

திருச்சிற்றம்பலம்.

மாதர்மடப்பிடியு-மடலன்மூமன்னதோர்-நடையுடைம்மலிமக
ணேயெனமகிழ்வர், பூதவினப்படைகின்றிசை-பாடலமாடுவரவர்ப
டர்சடைநெடுமுடியதோர்புனலர், வேதமோடேழிசைபா-டுவராழ்க
டல்வெண்டிரை-யினைந்துகைகளைபொருது-விம்மிகின்றயலே, காதவிற்
புன்னைதயங்-கும-லர்ச்சிறைவண்டறை - யெழில்பொழில்சூயில்பயில்-
தருமபுரம்பதியே. (க)

பொங்குநடைப்புகலில்-விடை-யாமவரூர்திவெண்-பொடியணிதட
ங்கொண்மார்பு-பூணநூல்புரள, மங்குலிடைத்தவழு-மதி-சூடுவராடுவ
ர்-வளங்கிளர்புனலரவம்-வைகியசடையர், சங்குகடற்றிரையா-லுதை-
யுண்டெரிந்திரிந் - தொசிந்தசைந்திசைந்துசேரும்-வெண்மணற்சுவை
மேற், றங்குகதிர்ம்மணிநித்-தில-மெல்லிருளொல்கின்-றிலங்கொளிக்
கலங்கெழிற்-தருமபுரம்பதியே. (உ)

விண்ணுமமால்வரைபோல் - விடை-யேறுவராறுசூ-டுவர்விரிசுரி
யொளிகொள்-தோடுகின்றிலங்கக்,கண்ணுறநின்றெரிளரும்-கதிர்-வெண்
மதிக்கண்ணியர்-கழிந்தவரழிந்திடு-மூடைதலைகலனுப், பெண்ணுறநின்
றவர்கம்-முருவம்மயன்மால்தொழு-வரிவையைப்பிணைத்தினைத்-தினை

ந்ததும்பியார், தண்ணிதழ்முல்லையொடெண்-ணிதழ்-மவ்வன்மருங்க
லர்-கருங்கழிந்நெருங்குநற்-தருமபுரம்பதியே. (கூ)

வாருறுமென்முலைநன்-னுதலேழையோடாடுவர்-வளங்கிளர்விள
ங்குதிங்கள்-வைகியசடையர், காருறநின்றலரும்-மலர்க்-கொன்றையங்க
ணினியர்-கடுவிடைகொடிவெடிகொள்-காடுறைபதியர், பாருறவின்னு
லகம்-பர-வப்படுவோரவர்-படுதலைப்பலிகொளல-பரிபவங்கினையார், தா
ருறுநல்லரவம்-மலர் - துன்னியதாதுதிர்-தழைபொழில்மழைந்துழை-த
ருமபுரம்பதியே. (சு)

நேருமவர்க்குணரப்-புகி- லில்லெடுஞ்சடைக்-கடும்புனல்படர்ந்
திடப்-படுவதோர்கிலேயர், பேருமவர்க்கெனேயா - யிர-முன்னைப்பிறப்பி
றப்-பிலாதவருடற்றடாத - பெற்றியாரறிவா, ராரமவர்க்கழல்வா - ய
தோர்-நாகமழுங்குற-வெழுங்கொளுமலர்கொள்பொன்-னிதழிநல்லல
ங்கல், தாரமவர்க்கிமவான்-மக-ளூர்வதுபோர்விடை-கடிபடுசெடிபொ
ழிற்-தருமபுரம்பதியே. (டு)

கூழையங்கோதைகுலா - யவ-டம்பிணைபுல்கமல்-குமென்மூலைப்
பொறிகொள்பொற்-கொடியிடைதுவர்வாய், மாழையொண்கண்மடவா-
ளோயோர்-பாகமகிழ்ந்தவர்-வலம்மலிபடைவிடை-கொடிகொடும்மழுவா
ள், யாழையுமெள்கிடவே-ழிசை - வண்டுமுரன்றினங்-துவன்றிமென்சி
றுங்கறை-யுறங்குறவ்விரியுநற், குழையுளூழலுரீ - டிய-கானலிலள்ளலி-
சைபுள்ளினங்துயில்பயில-தருமபுரம்பதியே. (கூ)

தேமருவார்குழ-லன்ன - நடைப்பெடைமான்விழித் - திருந்திழை
பொருந்துமேனி-செங்கதிர்விரியத், தூமருசெஞ்சடையிற்-றுதை-வெ
ண்மதிதுன்றுகொன்றை-தொலபுனல்கிரங்கரங் - துரிந்ததோலுடையர்,
காமருதண்கழிநீ-டிய-கானல்கண்டகங்-கடல்லடைகழியிழிய-மூண்டகத்
தயலே, தாமரைசேர்குவளைப்-படு-கிற்கமழுநீர்மலர்-வெறிகமழ்செறிவய
ற்-தருமபுரம்பதியே. (எ)

தூவணநீறகலம்-பொலி- யவ்விரைபுல்கமல் - குமென்மலர்வைபு
ரை-திரள்புயம்மணிவர், கோவணமும்முழையின்-னத - னும்முடையா
டையர்-கொலைமலிபடையோர்சூல-மேந்தியகுழகர்,பாவணமாவலறத்-
தலை-பத்துடையவ்வரக்க-னவ்வலியோர்கவ்வைசெய்- தருள்புரிகலைவர்,
தாவணவேறுடையெம்-மடி-கட்கிடம்வன்றடங் - கடல்லிடுந்தடங்கரை
க்-தருமபுரம்பதியே. (அ)

வார்மலிமென்முலைமா-தொரு-பாகமதாகுவர்- வளங்கிளர்மதியர
வம்-வைகியசடையர்,கூர்மலிசூலமும்வெண்-மழு-வும்மவர்வெல்படை-
குளிசிலைகனிமலைய-தேந்தியகுழகர், ஆர்மலியாழிகொள்செல்-வனு-மல்

EFEO_TVG_149-106 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

லிகொடாமரைம்-பிசையவனடிம்முடி - யளவுதாமறியார், தார்மலிகொன்றையலங்-கலு-கந்தவர்தங்கிடங்- தடங்கடல்லிடங்திரைத்-தருமபுரம் பதியே. (கூ)

புத்தர்கடத்துவர்மொய்த்-துறி - புல்கியகையர்பொய்-மொழிந்தழிவில்பெற்றியுற்ற-நற்றவர்புலவோர், பத்தர்களத்தவமெய்ப்-பய-னுகவுகந்தவர்-நிகழ்ந்தவர்சவந்தவர்-சுடலைப்பொடியணிவர், முத்தனவெண்ணகையொண்-மலை-மாதுமைபொன்னணி-புணர்முலையிணைதுணை-யினைவதும்பிரியார், தத்தருவித்திரளுந்-திய-மால்கடலோதம்வந்-தடர்ந்திடுந்தடம்பொழிற்-தருமபுரம்பதியே. (கo)

பொன்னெடுகன்மணிமா-ளிகை-சூழவிழவம்மலி - பொருபுனல்திருவமர்-புகலியென்றுலகிற், றன்னெடுகேர்பிறவில்-பதி-ஞானசம்பந்தனஃ - துசெந்தமிழ்த்தடங்கடற்-தருமபுரம்பதியைப், பின்னெடுவார்சடையிற்-பிறை-யும்மரவம்முடை - யவன்பிணைதுணைகழல்கள்-பேணுதலுரியா, ரின்னெடுநன்னுலகெய்-துவ-ரெய்தியபோகமு-முறுவர்களிடர்பிணி-துயரணைவிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

முத்தமிழ்விரகர்-முதற்றிருமுறைபோற்றி.

ஆக-திருக்கடைக்காப்பு-ாகூ.

முதற்றிருமுறை முற்றிற்று.

திருவெழுகூற்றிருக்கையில் - வெங்குருவிளங்கினே என்பதற்கு தேவகுருவினுல் பூசிக்கப்பட்டதென்று உரையிலிருக்கின்றது. சிகாழிப்புராணத்தில் - வெங்குருவான அத்தியாயத்தில், அசுரகுருபூசித்ததாக சொல்லப்படுகின்றது. இங்ஙனமிருக்கின்றமையால் உரைகாரர் புராணத்தின்படியெழுதியிருந்தது பிற்கால மொன்றைப்பார்த்த தொன்றெழுதினவர்களால் பிறழ்ந்துவிட்டதோ யாதோ தெரியவில்லை.

உ

சிவமயம்.

திருஞானசம்பந்த ~~சுவாமிகள்~~ மூர்த்திநாயனார் அருளிச்செய்த ~~அடங்கன்முறைத்~~ 01

தேவாரப்பதிகங்கள்.

இரண்டாந்திருமுறை.

திருப்பூந்தராய் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

செங்கலங்கழனிப்பழனத்தயலேசெழும்
புன்னைவெண்கிழியிற்பவளம்புரைபூந்தராய்
துன்னிநல்லிமையோர்முடிதோய்கழலீர்சொலீர்
பின்னுசெஞ்சடையிற்பிறைபாம்புடன்வைத்ததே. (க)

எற்றுதெண்டிரையேறியசங்கினெடிப்பிகள்
பொற்றிகழ்கமலப்பழனம்புகுபூந்தராய்
சுற்றிநல்லிமையோர்தொழுபொற்கழலீர்சொலீர்
பெற்றமேறுதல்பெற்றிமையோபெருமானீரே. (உ)

சங்குசெம்பவளத்திரண்முத்தவைதாங்கொடு
பொங்குதெண்டிரைவந்தலைக்கும்புனற்பூந்தராய்
துங்கமால்களிற்றின்னுரிபோர்த்துகந்தீர்சொலீர்
மங்கைபங்கமுமங்கத்தொடொன்றியமாண்பதே. (ஊ)

சேமவன்மதில்பொன்னணிமாளிகைசேணுயர்
பூமணங்கமழும்பொழில்சூழ்தருபூந்தராய்
சோமனும்மரவுந்தொடர்செஞ்சடையீர்சொலீர்
காமன்வெண்பொடியாகக்கடைக்கண்சிவந்ததே. (ச)

பள்ளமீனிரைதேர்ந்துழலும்பருவாயன
புள்ளுநாடொறுஞ்சேர்பொழில்சூழ்தருபூந்தராய்த்
துள்ளுமான்மறியேந்தியசெங்கையினீர்சொலீர்
வெள்ளநீரொருசெஞ்சடைவைத்தவியப்பதே. (டு)

மாதிலங்கியமங்கையராடமருங்கெலாம்
போதிலங்கமலமதுவார்புனற்பூந்தராய்ச்

சோதியஞ்சுடர்மேனிவெண்ணீறணிவீர்சொலீர்
காதிலங்குழைசங்கவெண்டோடுடன்வைத்ததே. (சு-எ)

வருக்கமார்தருவான்கடுவன்னெமெந்திகள்
தருக்கொள்சோலைதருங்கனிமாந்தியபூந்தராய்
துரக்குமால்விடைமேல்வருவீரடிகேள்சொலீ
ரரக்கனற்றலழித்தருளாக்கியவாக்கமே. (அ)

வரிகொள்செங்கயல்பாய்புனல்சூழ்ந்தமருங்கெலாம்
புரிசைநீடியர்மாடநிலாவியபூந்தராய்ச்
சுருதிபாடியபாணியனூமொழியீர்சொலீர்
கரியமாலயனேடியுமைக்கண்டிலாமையே. (கூ)

வண்டலங்கழனிம்மடவாளைகள்பாய்புனற்
புண்டரீகமலர்ந்துமதுத்தருபூந்தராய்த்
தொண்டர்வந்தடிபோற்றிசெய்தொல்கழலீர்சொலீர்
குண்டர்சாக்கியர்கூறியதாங்குறியின்மையே. (கo)

மகரவார்கடல்வந்தணவும்மணற்கானல்வாய்
புகலிஞானசம்பந்தனெழின்மிகுபூந்தராய்ப்
பகவனுரைப்பவுசொனமாலைபத்தும்வல்லா
ரகல்வர்தீவினைநல்வினையோடெனவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவலஞ்சுழி - பண் - இந்தளம்.

திருசிற்றம்பலம்.

விண்டெலாமலரவ்விளாறுதண்டேன்விம்மி
வண்டெலாநசையாலிசைபாடும்வலஞ்சுழித்
தொண்டெலாம்பரவுஞ்சுடர்பேரொளியீர்சொலீர்
பண்டெலாம்பலிதேர்ந்தெலிபாடல்பயின்றதே. (க)

பாரல்வெண்குருகும்பகுவாயனநாரையும்
வாரல்வெண்டிரைவாயிரைதேரும்வலஞ்சுழி
மூரல்வெண்முறுவன்னகுமொய்யொளியீர்சொலீ
ரூரல்வெண்டலைகொண்டுலகொக்கவுழன்றதே. (உ)

கிண்ணவண்ணமல்குங்கிளாதாமரைத்தாதளாய்
வண்ணருண்மணன்மேலன்னம்வைகும்வலஞ்சுழிச்
சுண்ணவெண்பொடிக்கொண்டுமெய்பூச்வல்லீர்சொலீர்
விண்ணவர்தொழவெண்டலையிற்பலிகொண்டதே. (ங)

கோடெலாநிறையக்குவளைம்மலருங்குழி
மாடெலாமலிநீர்மணநாறும்வலஞ்சுழிச்

சேடெலாமுடையீர்சிறுமான்மறியீர்சொலீர்
நாடெலாமறியத்தலையின்னறவேற்றதே. (ச)

கொல்லவேனற்புனத்திற்குருமாமணிகொண்டுபோய்
வல்லதண்மணன்மேலன்னம்வைகும்வலஞ்சுழி
முல்லைவெண்முறுவன்னகையாளொளியீர்சொலீர
சில்லைவெண்டலையிற்பலிகொண்டுழல்செல்வமே. (ஞ)

பூசநீர்பொழியும்புனற்பொன்னியிற்பன்மலர்
வாசநீர்குடைவாரிடர்நீர்க்கும்வலஞ்சுழித்
தேசநீர்திருநீர்சிறுமான்மறியீர்சொலீ
ரேசவெண்டலையிற்பலிகொள்வதிலாமையே. (ட)

கந்தமாமலர்ச்சந்தொடுகாரகிலுந்தழீ
வந்தநீர்குடைவாரிடர்நீர்க்கும்வலஞ்சுழி
யந்தநீர்முதனீர்நடுவாமடிகேள்சொலீர்
பந்தநீர்கருதாதுலகிற்பலிகொள்வதே. (எ)

தேனுற்றநுமாமலர்ச்சோலையில்வண்டினம்
வானுற்றநசையாலிசைபாடும்வலஞ்சுழிக்
கானுற்றகளிற்றின்னுரிபோர்க்கவல்லீர்சொலீ
ரூனுற்றதலைகொண்டுலகொக்கவுழன்றதே. (அ)

நீர்த்தநீர்வந்திழிபுனற்பொன்னியிற்பன்மலர்
வார்த்தநீர்குடைவாரிடர்நீர்க்கும்வலஞ்சுழி
யார்த்துவந்தவரக்கனையன்றடர்த்தீர்சொலீர்
சீர்த்தவெண்டலையிற்பலிகொள்வதுஞ்சிர்மையே. (கூ)

உரமனுஞ்சடையீர்விடையீருமதின்னருள்
வரமனும்பெறலாவதுமெந்தைவலஞ்சுழிப்
பிரமனுந்திருமாலுமளப்பரியீர்சொலீர்
சிரமெனுங்கலனிற்பலிவேண்டியசெலவமே. (கo)

விடுஞானமும்வேண்டுதிரேல்விரதங்களால்
வாடிஞானமென்னவதுமெந்தைவலஞ்சுழி
நாடிஞானசம்பந்தனசெந்தமிழ்கொண்டிசை
பாடுஞானம்வல்லாரடிசேர்வதுஞானமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கற்பகத்தீசுவரர்-தேவியார்-மங்களாம்பிகையம்மை.

EFEO_TVG_149-108 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருத்தெளிச்சேரி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பூவலர்ந்தனகொண்டுமுப்போதுமும்பொற்கழ
றேவர்வந்துவணங்குமிகுதெளிச்சேரியீர்
மேவருந்தொழிலாளொடுகேழற்பின்வேடனும்
பாவகங்கொடுநின்றதுபோலுதும்பான்மையே. (க)

வீளக்கும்பத்திக்குவிண்ணவர்மண்ணவரேத்தவே
நீளக்குந்தீர்த்தமுறுதிகழ்தெளிச்சேரியீர்
வீளக்குந்திண்சிலைமேலங்துபாணமுந்தானெய்து
களிக்குங்காமனையெங்ஙனநீர்கண்ணிற்காய்ந்ததே. (உ)

வம்படுத்தமலர்ப்பொழில்சூழமதிதவழ்
செம்படுத்தசெழும்புரிசைத்தெளிச்சேரியீர
கொம்படுத்ததோர்கோலவிடைமிசைக்கூர்மையோ
டம்படுத்தகண்ணுளொடுமேவலழகிதே. (ங)

காருலாங்கடலிப்பிகண்முத்தங்கரைப்பெயுங்
தேருலாநெடுவீதியார்தெளிச்சேரியீ
ரோருலாம்பலிக்கேகிடவைப்பிடமின்றியே
வாருலாமுலையாளையோர்பாகத்துவைத்ததே. (ச)

பக்கலுக்தமைப்பார்ப்பதியேத்திமுன்பாவிக்குஞ்
செக்கர்மாமதிசேர்மதில்சூழ்தெளிச்சேரியீரா
மைக்கொள்கண்ணியர்கைவளைமால்செய்துவௌவவே
நக்கராயுலகெங்கும்பலிக்குநடப்பதே. (ஞ)

தவளவெண்பிறைதோய்தருதாழ்பொழில் முகற்
றிவளமாமணிமாடந்திகழ்தெளிச்சேரியீர்
குவளைபோற்கண்ணிதண்ணெனவந்துகுறுகிய
கவளமால்கரியெங்ஙனநீகையிற்காய்ந்ததே. (ஈ)

கோடுடுத்தபொழிலின்மிசைக்குயில்கூவிடுஞ்
சேடுடுத்ததொழிலின்மிகுதெளிச்சேரியீர்
மாடுடுத்தமலர்க்கண்ணினுளங்கைகங்கையைத்
தோடுடுத்தமலர்ச்சடையென்கொனீர்சூடிற்றே (எ)

கொத்திரைத்தமலர்க்குழலாள்குயிலகோலஞ்சேர்
சித்திரக்கொடிமாளிகைசூழ்தெளிச்சேரியீர்
வித்தகப்படைவல்லவரக்கன்விறற்றலை
பத்திரட்டிக்கரமெரித்திட்டதும்பாதமே (அ)

காலெடுத்ததிரைக்கைகரைக்கெறிகானல்சூழ்
சேலடுத்தவயற்பழனத்தெளிச்சேரியீர்

மாலடித்தலமாமலரான்முடிதேடியே
யோலமிட்டிடவெங்ஙனமோருருக்கொண்டதே. (கூ)

மந்திரந்தருமாமறையோர்கடவத்தவர்
செந்திலங்குமொழியவர்சேர்தெளிச்சேரியீர்
வெந்தலாகியசாக்கியரோடுசமணர்கள்
தந்திறத்தனநீக்குவித்தீரோர்சதிரரே. (கூ)

திக்குலாம்பொழில்சூழ்தெளிச்சேரியெஞ்செல்வனே
மிக்ககாழியுள்ஞானசம்பந்தன்விளம்பிய
தக்கபாடல்கள்பத்தும்வல்லார்கடமுடி-
தொக்கவானவர்சூழவிருப்பவர்சொல்லிலே. (கக

திருச்சிற்றம்பலம்.

சோமநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-பார்வதீசுவரர்-தேவியார்-சத்தியம்மாளம்மை.

திருவான்மியூர் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கையுலாங்கடலிற்பொலிசங்கம்வெள்ளிப்பிவன்
றிரையுலாங்கழிமீனுகளுந்திருவான்மியூ
ருரையுலாம்பொருளாயுலகாளுடையீர்சொலீர்
வரையுலாமடமாதுடனுகியமாண்பதே. (க)

சந்துயர்ந்தெழுகாரகிறண்புனல்கொண்டுதஞ்
சிந்தைசெய்தடியார்பரவுந்திருவான்மியூர்ச்
சுந்தரக்கழன்மேற்சிலம்பார்க்கவல்லீர்சொலீ
ரந்தியின்ஞெலியின்னிறமாக்கியவண்ணமே. (உ)

கானயங்கியதண்கழிசூழ்கடலின்புறந்
தேனயங்கியபைம்பொழில்சூழ்திருவான்மியூர்த்
தோனயங்கமராடையினீரடிகேள்சொலீ
ராணையங்கவ்வுரிபோர்த்தனலாடவுகந்ததே. (ங

மஞ்சுலாவியமாடமதிற்பொலிமாளிகைச்
செஞ்சொலாளர்கடாம்பயிலுந்திருவான்மியூர்த்
துஞ்சவஞ்சிருளாடலுகக்கவல்லீர்சொலீர்
வஞ்சனஞ்சுண்டுவானவர்க்கின்னருள்வைத்ததே. (ச)

மண்ணினிற்புகழ்பெற்றவர்மங்கையர்தாம்பயி
றிண்ணனப்புரிசைத்தொழிலார்திருவான்மியூர்த்
துண்ணெனத்திரியுஞ்சரிதைத்தொழிலீர்சொலீர்
விண்ணினிற்பிறைசெஞ்சடைவைத்தவியப்பதே. (ஞ)

EFEO_TVG_149-109 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

போதுலாவியதண்பொழில்சூழ்புரிசைப்புறங்
தீதிலந்தணரோத்தொழியாத்திருவான்மியூர்ச்
சூதுலாவியகொங்கையோர்பங்குடையீர்சொலீர்
மூதெயில்லொருமூன்றெரியூட்டியமொய்ம்பதே. (க)

வண்டிரைத்ததடம்பொழிலின்னிழற்கானல்வாய்த்
தெண்டிரைக்கடலோதமல்குந்திருவான்மியூர்த்
தொண்டிரைத்தெழுந்தேத்தியதொல்கழலீர்சொலீர்
பண்டிருக்கொருநால்வர்க்குநீரருளைசெய்ததே. (எ)

தக்கில்வந்ததசக்கிரிவன்றலைபத்திறத்
திக்கில்வந்தலறவ்வடர்த்திர்திருவான்மியூர்த்
தொக்கமாதொடுமவீற்றிருந்தீரருளென்சொலீர்
பக்கமேபலபாரிடம்பேய்கள்பயின்றதே. (அ)

பொருதுவார்கடலெண்டிசையுந்தருவாரியாற்
றிரிதருபுகழ்செல்வமல்குந்திருவான்மியூர்ச்
சுருதிமாரிருவர்க்குமறிவரியீர்சொலீ
ரொருதுமேல்கொடுமென்றுகந்தில்பலியேற்றதே. (கூ)

மைதழைத்தெழுசோலையின்மாலைசேர்வண்டினஞ்
செய்தவத்தொழிலாரிசைசேர்திருவான்மியூர்
மெய்தவப்பொடிபூசியமேனியினீர்சொலீர்
கைதவச்சமணச்சாக்கியர்கட்டுரைக்கின்றதே. (கூ)

மாதொர்கூறுடைநற்றவனேத்திருவான்மியூ
ராதியெம்பெருமானருள்செய்யவினவுரை
யோதியன்றெழுகாழியுள்ஞானசம்பந்தன்சொன்
னீதியானிவைவார்கெடுவாயுலகாள்வரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மருந்தீசுவரர்-தேவியார்-சுந்தரமாது-அல்லது-சொக்காயி.

திருவனேகதங்காபதம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீடன்மேவுநிமிர்புன்சடைமேலோர்நிலாமுளை
சூடன்மேவுமறையின்முறையாலோர்சுலாவழ
லாடன்மேவுமவர்மேயவனேகதங்காபதம்
பாடன்மேவுமதத்தார்வினைபற்றறுப்பார்களே. (க)

சூலமுண்டுமழுவுண்டவர்தொல்படைசூழ்கட
லாலமுண்டபெருமான்றனனேகதங்காபத

நீலமுண்டதடங்கண்ணுமைபாகநிலாயதோர்
கோலமுண்டளவில்லேசுலாவியகொள்கையே, (உ)

செம்பினுருமதின்மூன்றெரியச்சினவாயதோ
ரம்பினலெய்தருள்வில்லியனேகதங்காபதங்
கொம்பினேரிடையாயொடுங்கூடிக்கொல்லேறுடை
நம்பனமரவிலாதனாவெனலாகுமே. (ஊ)

தந்தத்தித்தத்தடமென்றருவித்திரள்பாய்ந்துபோய்ச்
சிந்தவெந்தகதிரோனெறுமாசறுதிங்களா
ரந்தமீல்லவளவில்லவனேகதங்காபத
மெந்தைவெந்தபொடிநீறணிவார்க்கிடமாவதே. (ச)

பிறையுமாசில்கதிரோனறியாமைப்பெயர்ந்துபோ
யுறையுங்கோயில்பசும்பொன்னணியாரசும்பார்புன
லறையுமோசைபறைபோலுமனேகதங்காபத
மிறையெம்மீசனெம்மானிடமாகவுகந்ததே. (டு)

தேனேயேறுகுமாமலர்கொண்டடிசேர்த்துவி
ரானேயேறுமணிசாரலனேகதங்காபதம்
வானேயேறுநெறிசென்றுணருந்தீனவல்லீரே
லானேயேறுமுடியானருள்செய்வதும்வானையே. (கூ)

வெருவிவேழமிரியக்கதிர்முத்தொடுவெண்பளிங்
குருவிவீழவயிரங்கொழியாவகிலுந்திவெள்
ளருவிபாயுமணிசாரலனேகதங்காபத
மருவிவாழும்பெருமான்கழல்சேர்வதுவாய்மையே. (எ)

ரமேதுமிலனுகியெழுந்தவிராவணன்
வீரமேதுமிலனுகவீழ்த்தவிலங்கலா
னரம்பாம்பதணிவான்றனனேகதங்காபதம்
வாரமாகினைவார்வினையாயினமாயுமே. (அ)

கண்ணன்வண்ணமலரானுடுங்கூடியோர்கையமா
யெண்ணும்வண்ணமறியாமையெழுந்தோராரழ
லண்ணனண்ணுமணிசாரலனேகதங்காபத
நண்ணும்வண்ணமுடையார்வினையாயினநாசமே. (கூ)

மாபதம்மறியாதவர்சாவகர்சாக்கிய
ரேபதம்படநின்றுமாந்துழல்வார்கடா
மாபதம்மறிவிருளிராகிலனேகதங்
காபதமமர்ந்தான்கழல்சேர்தலகருமமே. (கூ)

EFEO_TVG_149-110 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தொல்லையுழிப்பெயர்தோன்றியதோணிபுரத்திறை
நல்லகேள்வித்தமிழ்ஞானசம்பந்தனல்லார்கண்மூ
னல்லநீரவுரைசெய்தவனேகதங்காபதஞ்
சொல்லகல்லவடையும்மடையாசுதுன்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வடதேசத்திலுள்ளது.
சுவாமிபெயர்-அருள்மன்னர்-தேவியார்-மனோன்மணியம்மை.

திருவையாறு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோடல்கோங்கங்குளிர்கூவிளமாலைகுலாயசீ
ரோடுகங்கையொளிவெண்பிறைசூடுமொருவனர்
பாடல்வீணைமுழவங்குமுன்மொந்தைபண்ணுகவே
யாடுமாறுவல்லானுமையாறுடையையனே. (க)

தன்மையாருமறிவாரில்லைதாம்பிறரெள்கவே
பின்னுமுன்னுஞ்சிலபேய்க்கணஞ்சூழத்திரிதர்வர்
துன்னவாடையடுப்பர்சுடலைப்பொடிபூசுவ
ரன்னமாலுந்துறையானுமையாறுடையையனே. (உ)

கூறுபெண்ணுடைகோவணமுண்பதும்வெண்டலை
மாறிலாருங்கொள்வாரில்லைமார்பிலணிகல
மேறுமேறித்திரிவரிமையோர்தொழுதேத்தவே
யாறுசான்குஞ்சொன்னுமையாறுடையையனே. (ங)

பண்ணினல்லமொழியார்பவளத்துவர்வாயினு
ணெண்ணினல்லகுணத்தாரிணைவேல்வென்றகண்ணினர்
வண்ணம்பாடிவலிபாடித்தம்வாய்மொழிபாடவே
யண்ணல்கேட்டுகந்தானுமையாறுடையையனே. (ச)

வேனலானைவெருவவுரிபோர்த்துமையஞ்சவே
வானையூடுக்கும்மதிசூடியமைந்தனர்
தேனெய்பாறையிர்தெங்கிளநீர்கரும்பின்றெளி
யானஞ்சாடுமுடியானுமையாறுடையையனே. (ஞ)

எங்குமாகிநின்றானுமியல்வறியப்படா
மங்கைபாகங்கொண்டானுமதிசூடுமைந்தனும்
பங்கமில்பதினெட்டொடுகான்குக்குணர்வுமா
யங்கமாறுஞ்சொன்னுமையாறுடையையனே. (ஃ)

ஓதியாருமறிவாரில்லையோதியுலகெலாஞ்
சோதியாய்நிறைந்தான்சுடர்ச்சோதியுட்சோதியான்

வேதியாகிவிண்ணுகிமண்ணுடெரிகாற்றுமா
யாதியாகிநின்றானுமையாறுடையையனே. (எ)

சுரவகாண்மலர்கொண்டடியார்வழிபாடுசெய்
விரவுநீறணிவார்சிலதொண்டர்வியப்பவே
பரவிநாடொறும்பாடகம்பாவம்பறைதலா
லரவமார்த்துகந்தானுமையாறுடையையனே. (அ)

உரைசெய்தொல்வழிசெய்தறியாவிலங்கைக்குமன்
வரைசெய்தோளடர்த்துமதிசூடியமைந்தனர்
கரைசெய்காவிரியின்வடபாலதுகாதலா
னரைசெய்மேகலையானுமையாறுடையையனே. (கூ)

மாலுஞ்சோதிமலரானுமறிகிலாவாய்மையான்
காலங்காம்புவயிரங்கடிகையன்பொற்கழல்
கோலமாய்க்கொழுந்தின்றுபவளந்திரண்டதோ
ராலநீழலுளானுமையாறுடையையனே. (கo)

கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையான்
மெய்யைப்போர்த்துழல்வாருமூரைப்பனமெய்யல
மெகொள்கண்டத்தெண்டோண்முக்கணனுகழல்வாழ்த்தவே
யையந்தேர்ந்தளிப்பானுமையாறுடையையனே. (கக)

பலதிரிந்துழல்பண்டங்கன்மேயவையாற்றினைக்
கலிகடந்தகையான்கடற்காழியர்காவல
னெலிகொள்சம்பந்தனெண்டமிழ்பத்தும்வல்லார்கள்போய்
மலிகொள்விண்ணிடைமன்னியசீரபெறுவார்களே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவாஞ்சியம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வன்னிகொன்றைமதமத்தமெருக்கொடுகூவிளம்
பொன்னியனஞ்சடையிற்பொலிவித்தபுராணனர்
தென்னவென்றுவரிவண்டிசைசெய்திருவாஞ்சிய
மென்னையாள்வுடையானிடமாகவுகந்ததே. (க)

காலகாலர்கரிகாளிடைமாநடமாடுவர்
மேலர்வேலைவிடமுண்டிருள்கின்றமிடற்றினர்
மாலைகோலமதிமாடமன்னுந்திருவாஞ்சிய
ஞாலம்வந்துபணியப்பொலிகோயினயந்ததே. (உ)

மேவிலொன்றர்விரிவுற்றவிரண்டினர்மூன்றுமாய்
நாவினலருடலஞ்சினராறமோழைசையர்

EFEO_TVG_149-111 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தேவிலெட்டர்திருவாஞ்சியமேவியசெல்வனர்
பாவந்தீர்ப்பர்பழிபோக்குவர்தம்மடியார்கட்கே. (ங)

சூலமேந்திவளர்கையினர்மெய்சுவண்டாகவே
சாலநல்லபொடிப்பூசுவர்பேசுவர்மாமறை
சீலமேவுபுகழாற்பெருகுந்திருவாஞ்சிய
மாலமூண்டவடிகள்ளிடமாகவமர்ந்ததே. (ச)

கையிலங்குமறியேந்துவர்கூந்தலம்மெல்விரற்
றையல்பாகமுடையாரடையார்புரஞ்செற்றவர்
செய்யமேனிக்கரியமிடற்றூர்திருவாஞ்சியத்
தையர்பாதமடைவார்க்கடையாவருநோய்களே. (ஞ)

அரவம்பூண்பரணியுஞ்சிலம்பார்க்கவகந்தொறு
மிரவினல்லபலிபேணுவர்காணிலர்நாமமே
பரவுவார்வினைதீர்க்கநின்றூர்திருவாஞ்சிய
மருவியேத்தமடமாதொடுநின்றவெம்மைந்தரே. (ஃ)

விண்ணிலானபிறைசூடிவர்தாழ்ந்துவிளங்கவே
கண்ணிஞலனங்கன்ஞடலம்பொடியாக்கினர்
பண்ணிலானவிசைபாடன்மல்குந்திருவாஞ்சியத்
தண்ணலார்தம்மடிபோற்றவல்லார்க்கில்லையல்லலே. (எ)

மாடநீடுகொடிமன்னியதென்னிலங்கைக்குமன்
வாடியூடவனையாலடர்த்தன்றருள்செய்தவர்
வேடவேடர்திருவாஞ்சியமேவியவேந்தனைப்
பாடநீடுமநத்தார்வினைபற்றறுப்பார்களே. (அ)

செடிகொணெயினடையார்திறம்பார்செறுதீவினை
கடியகூற்றமுங்கண்டகலும்புகழ்வரு
நெடியமாலோடயனேத்தநின்றூர்திருவாஞ்சியத்
தடிகள்பாதமடைந்தாரடியாரடியார்கட்கே. (கூ)

பிண்டமூண்டுதிரிவார்பிரியுந்துவராடையார்
மிண்டர்மிண்டுமொழிமெய்யலபொய்யீலையெம்மிறை
வண்டுகிண்டிமருவும்பொழில்சூழ்திருவாஞ்சியத்
தண்டவாணனடிகைதொழுவார்க்கில்லையல்லலே. (கo)

தென்றமுன்றுபொழில்சென்றணையுந்திருவாஞ்சியத்
தென்றுநின்றவிறையானையுணர்ந்தடியேத்தலா
னன்றுகாழிமறைஞானசம்பந்தனசெந்தமி
ழொன்றுமுள்ளமுடையாரடைவாருயர்வானமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமியெயர்-வாஞ்சியநாதர் தேவியார்-வாழவந்தாயகியம்மை.

திருச்சிக்கல் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

வானுலாவுமதிவந்துலவும்மதின்மாளிகை
தேனுலாவுமலர்ச்சோலைமல்குந்திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்டவெண்ணெய்ப்பெருமானடி
ஞானமாகநினைவார்வினையாயினகையுமே. (க)

மடங்கொள்வாளைகுதிகொள்ளுமணமலர்ப்பொய்கைசூழ்
திடங்கொண்மாமறையோரவர்மல்கியசிக்கலுள்
விடங்கொள்கண்டத்துவெண்ணெய்ப்பெருமானடிமேவியே
யடைந்துவாழுமடியாரவரல்லலறுப்பரே. (உ)

நிலகெய்தனிலவிம்மலருஞ்சுனைநீடிய
சேலுமாலுங்கழனிவ்வளமல்கியசிக்கலுள்
வேலொண்கண்ணியினுமையோர்பாகன்வெண்ணெய்ப்பிரான்
பாலவண்ணன்கழலேத்தநம்பாவம்பறையுமே. (ங)

கந்தமுந்தக்கைதையூத்துக்கமழ்ந்துசேருமபொழிற்
செந்துவண்டின்னிசைபாடன்மல்குந்திகழ்சிக்கலுள்
வெந்தவெண்ணீற்றண்ணல்வெண்ணெய்ப்பிரான்விரையார்கழல
சிந்தைசெய்வார்வினையாயினதேயவதுதிண்ணமே. (ச)

மங்குறங்குமறையோர்கண்மாடத்தயலேமிகு
தெங்குதுங்கப்பொழில்செல்வமல்குந்திகழ்சிக்கலுள்
வெங்கண்வெள்ளேறுடைவெண்ணெய்ப்பிரானடிமேவவே
தங்குமேற்சரதந்திருநாளுந்தகையுமே. (ஞ)

வண்டிரைத்துமதுவிம்மியமர்மலர்ப்பொய்கைசூழ்
தெண்டிரைக்கொள்புனலவ்கொழுகும்வயற்சிக்கலுள்
விண்டிரைத்தமலராற்றிகழ்வெண்ணெய்ப்பிரானடி
கண்டிரைத்துமனமேமதியரசகதியாகவே. (ஃ)

முன்னுமாடம்மதின்மூன்றுடனேயெரியாய்விழத்
துன்னுவார்வெங்கணையொன்றுசெலுத்தியசோதியான
செந்நெலாரும்வயற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுன்னிநீடமனமேநினையாய்வினையோயவே. (எ)

தெற்றலாகியதென்னிலங்கைக்கிறைவன்மலை
பற்றினன்முடிபத்தொடுதோள்கணெரியவே
செற்றதேவனஞ்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடி
யுற்றுநீநினையாய்வினையாயினவோயவே. (அ)

மாலினோடருமாமறைவல்லமுனிவனுங்
கோலினூர்குமுகச்சிவன்சேவடிகோலியுஞ்

EFEO_TVG_149-112 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ஓலந்தாமமியார்திகழ்சிக்கல்வெண்ணெய்ப்பிரான்
பாலும்பன்மலர்தூவப்பறையுநம்பாவமே. (கூ)

பட்டைநற்றுவராடையினொடும்பாங்கிலாக்
கட்டமண்கமூக்கள்சொல்லினைக்கருதாதுநீர்
சிட்டன்சிக்கலவெண்ணெய்ப்பெருமான்செழுமாமறைப
பட்டன்சேவடியேபணிமின்பிணிபோகவே. (கo)

கந்தமார்பொழிற்காழியுள்ஞானசம்பந்தனற்
செந்தண்பூம்பொழிற்சிக்கல்வெண்ணெய்ப்பெருமானடிச்
சந்தமாச்சொன்னசெந்தமிழ்வல்லவர்வானிடை
வெந்தீறணியும்பெருமானடிமேவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நவநீதநாதர்-தேவியார்-வேனெடுங்கண்ணியம்மை.

திருமழபாடி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கோளும்வல்வினையஞ்சனெஞ்சேகருதார்புர
மூளையும்பூசல்செய்தானுபர்மால்வரைநல்வில
வாளையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதுத்தும்பிவண்
டாளையுங்கொன்றையந்தார்மழபாடியுளண்ணலே. (க)

காச்சிலாதபொன்னெக்குங்கனவயிரத்திர
ளாச்சிலாதபளிங்கினனஞ்சுமூடினன்
பேச்சினலுமக்காவதென்பேதைகாள்பேணுமின்
வாச்சமாளிகைசூழ்மழபாடியைவாழ்த்துமே. (உ)

உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப்
பரங்கெடுப்பவனஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்முப்புரந்தியெழச்செற்றமுன்
வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. (ங)

பள்ளமார்சடையிற்புடையேயடையப்புனல்
வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்
வள்ளன்மாமழபாடியுண்மேயமருந்தினை
யுள்ளமாதரிமின்வினையாயினவோயவே. (ச)

தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள்
பானையஞ்சுடனட்டமுன்னடியபால்வண்ணன்
வானநாடர்கள்கைதொழுமாமழபாடியெங்
கோனைநாடொறுங்கும்பிடவேகுறிகூடுமே. (ஞ)

தெரிந்தவன்புரமூன்றுடன்மாட்டியசேவகன்
பரிந்துகைதொழுவாரவர்தம்மகம்பாவினன்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையான்மழபாடியைப்
புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே. (கூ)

கந்தவார்குழலாளுமைதன்னொருகூறுடை
யெந்தையானிமையாதமுக்கண்ணினனெம்பிரான்
மைந்தன்வார்பொழிலூழ்மழபாடிமருந்தினைச்
சிந்தியாவெழுவார்வினையாயினதேயுமே. (எ)

இரக்கமொன்றுமிலானிறையான்றிருமாமலை
யுரக்கையாலெடுத்தான்றனதோண்முடிபத்திற
விரற்றலைந்நிறுவியுமையாளொடுமேயவன்
வரத்தையேகொடுக்கும்மழபாடியுள்வள்ளலே. (அ)

ஆலமுண்டமுதமமரர்க்கருளண்ணலார்
காலனுருயிர்வீட்டியமாமணிகண்டனர்
சாலநல்லடியார்தவத்தார்களுஞ்சார்விட
மாலயன்வணங்குமழபாடியெமைந்தனே. (கூ)

கலியின்வல்லமணுங்கருஞ்சாக்கியப்பேய்களு
நலியுநாள்கெடுத்தாண்டவென்னுதனுர்வாழ்பதி
பலியுமபாட்டொடுபண்முழவும்பலவோசையு
மலியுமாமழபாடியைவாழ்த்திவணங்குமே. (கo)

மலியுமாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக்
கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன். திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வச்சிரத்தம்பேசுவரர்-தேவியார்-அழகாம்பிகையம்மை.

திருமங்கலக்குடி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரினர்மணியும்மகில்சந்துஞ்செழுவரை
வாரிநீர்வருபொன்னிவடமங்கலக்குடி
நீரின்மாமுனிவன்னெடுங்கைகூடுநீர்தனைப்
பூரித்தாட்டியர்ச்சிக்கவிருந்தபுராணனே. (க)

பணங்கொளாடரவல்குனல்லார்பயின்றேத்தவே
மணங்கொண்மாமயிலாலுமபொழிலூழ்மங்கலக்குடி
யிணங்கிலாமறையோனிமையோர்தொழுதேத்திட
வணங்கினேடிருந்தானடியேசரணுமே. (உ)

கருங்கையானையினீருரிபோர்த்திடுகள்வனர்
மருங்கெலாமணமார்பொழில்சூழ்மங்கலக்குடி

EFEO_TVG_149-113 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

யரும்புசேர்மலர்க்கொன்றையினனடியன்பொடு
விரும்பியேத்தவல்லார்வினையாயினவீடுமே. (கூ)

பறையினோடொலிபாடலுமாடலும்பாரிட
மறையினோடியன்மல்கிடுவார்மங்கலக்குடிக்
குறைவிலாநிறைவேகுணமிலகுணமேயென்று
முறையினுல்வணங்கும்மவர்முன்னெழிகாண்பரே. (ச)

ஆனிலங்கிளைசாந்தமவிர்முடியாடியோர்
மானிலங்கையினன்மணமார்மங்கலக்குடி
யூனில்வெண்டலைக்கையுடையானுயர்பாதமே
ஞானமாகநின்றேத்தவல்லார்வினைநாசமே. (ஞ)

தேனுமாயமுதாகிநின்முன்றெளிசிந்தையுள்
வானுமாய்மதிசூடவல்லான்மங்கலக்குடிக்
கோனைநாடொறுமேத்திக்குணங்கொடுகூறுவா
ரூனமானவைபோயறுமுய்யும்வகையதே. (கூ)

வேள்படுத்திடுகண்ணினன்மேருவிலாகவே
வாளரக்கர்புரமெரித்தான்மங்கலக்குடி
யாளுமாதிப்பிரானடிகளடைந்தேத்தவே
கோளுநாளவைபோயறுங்குற்றமில்லார்களே. (எ)

பொலியுமால்வரைபுக்கெடுத்தான்புகழ்ந்தேத்திட
வலியும்வாளொடுநாள்கொடுத்தான்மங்கலக்குடிப்
புலியினுடையினுடியேத்திடும்புண்ணியர்
மலியுமவானுலகம்புகவல்லவர்காண்மினே. (அ)

ஞாலமுன்படைத்தானிரும்மாமலர்மேலயன்
மாலுங்காணவொணவெரியான்மங்கலக்குடி
யேலவார்குழலாளொருபாகமிடங்கொடு
கோலமாகிநின்முன்குணங்கூறுங்குணமதே. (கூ)

மெய்யின்மாசினர்மேனிவிரிதுகிலாடையர்
பொய்யைவிட்டிடும்புண்ணியர்சேர்மங்கலக்குடிச்
செய்யமேனிச்செழும்புனற்கங்கைசெறிசடை
யையன்சேவடியேத்தவல்லார்க்கழகாகுமே. (கo)

மந்தமாம்பொழில்சூழ்மங்கலக்குடிமன்னிய
வெந்தையையெழிலார்பொழிற்காழியர்காவலன்
சிந்தைசெய்தடிசேர்த்திடுஞானசம்பந்தன்சொன்
முந்தியேத்தவல்லாரிமையோர்முதலாவரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-புராணவரதேசுவரர்-தேவியார்-மங்களாம்பிகையம்மை.

சீகாழி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நல்லானைநான்மறையோடியலாறங்கம்
வல்லானைவல்லவர்பான்மலிந்தோங்கிய
சொல்லானைத்தொன்மதிற்காழியேகோயிலா
மில்லானையேத்தநின்மூர்க்குளதின்பமே. (க)

நம்மானமாற்றிநமக்கருளாய்நின்ற
பெம்மானைப்பேயுடனுடல்புரிந்தானை
யம்மானையந்தணசேரூமணிகாழி
யெம்மானையேத்தவல்லார்க்கிடரில்லையே. (உ)

அருந்தானையன்புசெய்தேத்தகில்லார்பாற்
பொருந்தானைப்பொய்யடிமைத்தொழிலைசெய்வாருள்
விருந்தானைவேதியரோதிமிடைகாழி
யிருந்தானையேத்துமினுமவினையிலவே. (ங)

புற்றூனைபுற்றரவமரையின்மிசை
சுற்றூனைத்தொண்டுசெய்வாரவர்தமொடு
மற்றூனையந்தணர்காழியமாகோயில்
பற்றூனைப்பற்றிநின்மூர்க்கில்லைபாவமே. (ச)

நெதியானைநெஞ்சிடங்கொள்ளநினைவார்தம்
விதியானைவிண்ணவர்தாம்வியந்தேத்திய
கதியானைக்காருலவும்பொழிற்காழியாம்
பதியானைப்பாடுமினும்வினைபாறவே. (ஞ)

செப்பானமென்முலையாளைத்திகழ்மேனி
வைப்பானைவார்கழலேத்தினைவார்த
மொப்பரானையோதமுலாவுகடற்காழிமே
யப்பானைமேவியமாந்தாரோவியந்தாரோ. (கூ)

துன்பானைத்துன்பமழித்தருளாக்கிய
வின்பானையேழிசையின்னிலைபேணுவர
ரன்பானையணிபொழிற்காழிநகர்மேய
நம்பானைநண்ணவல்லார்வினைநாசமே. (எ)

குன்றூனைக்குன்றெடுத்தான்புயநாலைந்தும
வென்றூனைமென்மலராளொடுமாதேட
நின்றூனைநேரிழையாளொடுங்காழியு
ணன்றூனைநம்பெருமானைநணுகுமே. (அ)

சாவாயும்வாதுசெய்சாவகர்சாக்கியர்
மேவாதசொல்லவைகேட்டுவெகுளேன்மின்

EFEO_TVG_149-114 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பூவாயகொன்றையினானைப்புனற்காழிக்
கோவாயகொள்கையினனடிகூறுமே. (கூ-கo)

கழியார்சிரோதமல்குங்கடற்காழியு
ளொழியாதுகோயில்கொண்டானையுகந்துள்கித்
தழியார்சொல்ஞானசம்பந்தன்றமிழ்ஞான
மொழிவார்கண்மூவுலகும்பெறுவார்களே. (ககூ)

திருச்சிற்றம்பலம்

திருவேகம்பம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறையானைமாசிலாப்புன்சடைமல்குவெண்
பிறையானைப்பெண்ணோடாணுகியபெம்மானை
யிறையானையேர்கொள்கச்சித்திருவேகம்பத்
துறைவானையல்லதுள்காதெனதுள்ளமே. (க)

நொச்சியேவன்னிகொன்றைமதிகூவிள
முச்சியேபுனைதல்வேடம்விடையூர்தியான்
கச்சியேகம்பமேயகறைக்கண்டனை
நச்சியேதொழுமினும்மேல்வினைநையுமே. (உ)

பாராருமுழவமொந்தைகுழலியாழொலி
சீராலேபாடலாடல்சிதைவில்லதோ
சோராப்பூங்கச்சியேகம்பனேயெம்மானைச்
சேராதாரின்பமாயந்நெறிசேராரே. (ங)

குன்றேய்க்குநெடுவெண்மாடக்கொடிகூடிப்போய்
மின்றேய்க்குமுகில்கடோயும்வியன்கச்சியுண்
மன்றேய்க்குமல்குசீரான்மலியேகம்பஞ்
சென்றேய்க்குஞ்சிந்தையார்மேல்வினைசேராவே. (ச)

சடையானைத்தலைகையேந்திப்பலிதருவார்தங்
கடையேபோய்மூன்றுங்கொண்டான்கலிக்கச்சியுட்
புடையேபொன்மலருங்கம்பைக்கரையேகம்ப
முடையானையல்லதுள்காதெனதுள்ளமே. (ஞ)

மழுவாளோடெழில்கொள்சூலப்படைவல்லார்தங்
கெழுவாளோரிமையாருச்சியுமையாள்கங்கை
வழுவாமேல்குசீரால்வளரேகம்பந்
தொழுவாரேவிபூமியார்மேல்வினைதுன்னுவே. (சு)

விண்ணுளார்மறைகள்வேதம்விரித்தோதுவார்
கண்ணுளார்கழலின்வெல்வார்கரிகாலனை

கண்ணுவாரெழில்கொள்கச்சிநகரேகம்பத்
தண்ணலாராடுகின்றவலங்காரமே. (எ)

தூயானைத்தூயவாயம்மறையோதிய
வாயானைவாளரக்கன்வலிவாட்டிய
நீயானைத்தீதில்கச்சித்திருவேகம்ப
மேயானைமேவுவாரென்றலைமேலாரே. (அ)

நாகம்பூணைநதேறனறுங்கொன்றைத்தார்
பாகம்பெண்பலியுமேற்பர்மறைபாடுவ
ரேகம்பமேவியாடுமிறையிருவர்க்கு
மாகம்பமறியும்வண்ணத்தவனல்லனே. (கூ)

போதியார்பிண்டியாரென்றிவர்பொய்ந்நூல
வாதியாவம்மினம்மாவெனுங்கச்சியு
ளாதியார்மேவியாடுந்திருவேகம்ப
நீதியாற்றொழுமினும்மேல்வினைநில்லாவே. (கo)

அந்தண்பூங்கச்சியேகம்பனையம்மானைக்
கந்தண்பூங்காழியூரன்கலிக்கோவையாற்
சந்தமேபாடவல்லதமிழ்ஞானசம்
பந்தன்சொற்பாடியாடக்கெடும்பாவமே. (ககூ)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோழம்பம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீற்றானைநீள்சடைமேனிறைவுள்ளதோ
ராற்றானையழகமர்மென்முலையாளையோர்
கூற்றானைக்குளிர்பொழிற்கோழம்பமேவிய
வேற்றானையேத்துமினும்மிடரேகவே. (க)

மையானகண்டனைமான்மறியேந்திய
கையானைக்கடிபொழிற்கோழம்பமேவிய
செய்யானைத்தெனெய்பாலுந்திகழ்ந்தாடிய
மெய்யானைமேவுவார்மேல்வினைமேவாவே. (உ)

ஏதனேயேதமிலாவிமையோர்தொழும்
வேதனைவெண்குழைதோடுவிளங்கிய
காதனைக்கடிபொழிற்கோழம்பமேவிய
நாதனையேத்துமினும்வினையவே. (ங)

சடையானைத்தண்மலரான்சிரமேந்திய
விடையானைவேதமும்வேள்வியுமாயவன்

EFEO_TVG_149-115 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

குடையானேக்குளிர்பொழில்சூழ்திருக்கோழம்ப
முடையானேயுள்குமினுள்ளங்குளிரவே. (சு)

காராணேக்கடிகமழ்கொன்றையம்போதணி
தாராணேத்தையலோர்பான்மகிழ்ந்தோங்கிய
சிராணேச்செறிபொழிற்கோழம்பமேவிய
ஊராணையேத்துமினும்மிடரொல்கவே. (டு)

பண்டாலினிழலாணேப்பரஞ்சோதியை
விண்டார்கடம்புரமூன்றுடனேவேவக்
கண்டாணேக்கடிகமழ்கோழம்பங்கோயிலாக்
கொண்டாணேக்கூறுமினுள்ளங்குளிரவே. (கூ)

சொல்லாணேச்சுடுகணையாற்புரமூன்றெய்த
வில்லாணேவேதமும்வேள்வியுமானேக்
கொல்லாணேயுரியாணேக்கோழம்பமேவிய
நல்லாணேயேத்துமினும்மிடர்கையவே. (எ)

விற்றூணேவல்லரக்கர்விறல்வேந்தனேக்
குற்றூணேத்திருவிரலாற்கொடுங்காலனேச்
செற்றூணேச்சீர்திகழ்ந்திருக்கோழம்பம்
பற்றூணேப்பற்றுவார்மேல்வினைபற்றுவே. (அ)

நெடியானுடையனறியாவகைநின்றதோர்
படியானேப்பண்டரங்கவேடம்பயின்றூனேக்
கடியாருங்கோழம்பமேவியவெள்ளேற்றின்
கொடியானேக்கூறுமினுள்ளங்குளிரவே. (கூ)

புத்தருந்தோகையம்பீலிகொள்பொய்ம்மொழிப்
பித்தரும்பேசுவபேச்சல்லபிடைக்
கொத்தலர்தண்பொழிற்கோழம்பமேவிய
வத்தனேயேத்துமினல்லலறுக்கவே. (கo)

தண்புனலோங்குதண்ணந்தராய்மாநகர்
நண்புடைஞானசம்பந்தனம்பானுறை
விண்பொழிற்கோழம்பமேவியபத்திவை
பண்கொளப்பாடவல்லார்க்கில்லைப்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கோகுலேசுவரர் - தேவியார் - சவுந்தரியம்மை.

திருவெண்ணி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சடையானேச்சந்திரனேடுசெங்கண்ணரா
வுடையானேயுடைதலையிற்பலிகொண்டுரும்
விடையானேவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியை
யுடையானேயல்லதுள்காதெனதுள்ளமே. (சு)

சோதியைச்சுண்ணவெண்ணீறணிந்திட்டவெம்
மாதியையாதியுமந்தமுமில்லாத
வேதியைவேதியர்தாந்தொழும்வெண்ணியி
னீதியைநினையவல்லார்வினைகில்லாவே. (உ)

கனிதனேக்கனிந்தவரைக்கலந்தாட்கொள்ளு
முனிதனேமூவுலகுக்கொருமூர்த்தியை
னனிதனேநல்லவர்தாந்தொழும்வெண்ணியி
லினிதனேயேத்துவரேதமிலாதாரே. (ஈ)

மூத்தானேமூவுலகுக்கொருமூர்த்தியாய்க்
காத்தானேக்கனிந்தவரைக்கலந்தாளாக
யார்த்தானேயழகமர்வெண்ணியம்மான்றன்னை
யேத்தாதாரென்செய்வாரேழையப்பேய்களே. (ச)

நீரானேநிறைபுனல்சூழ்தருநீள்கொன்றைத்
தாராளேத்தையலோர்பாகமுடையானைச்
சிரானேத்திகழ்தருவெண்ணியமர்ந்துறை
யூரானேயுள்கவல்லார்வினையோயுமே. (டு)

முத்தினேமுழுவயிரத்திரண்மாணிக்கத்
தொத்தினேத்துளக்கமில்லாதவிளக்காய
வித்தினேவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
லத்தனேயடையவல்லார்க்கில்லையல்லலே. (கூ)

காய்ந்தானேக்காமனேயுஞ்செறுகாலனைப்
பாய்ந்தானேப்பரியகைமாவுரித்தோன்மெய்யின்
மேய்ந்தானேவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
னீய்ந்தானேநினையவல்லார்வினைநில்லாவே. (எ)

மறுத்தானேமாமலையைமதியாதோடிச்
செறுத்தானேத்தேசழியத்திகழ்தோண்முடி
யிறுத்தானேயெழிலமர்வெண்ணியெம்மானைப்
பொறுத்தானேப்போற்றுவாராற்றலுடையாரே. (அ)

மண்ணினேவானவரோடுமனிதர்க்குங்
கண்ணினேக்கண்ணனுநான்முகனுங்காணு

EFEO_TVG_149-116 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விண்ணினைவிண்ணவர்தாந்தொழும்வெண்ணியி
லண்ணலேயடையவல்லார்க்கில்லையல்லலே. (கூ)

குண்டருங்குணமிலாச்சமண்சாக்கிய
மிண்டர்கண்மிண்டவைகேட்டுவெகுளன்மின்
விண்டவர்தம்புரமெய்தவன்வெண்ணியிற்
றொண்டராயேத்தவல்லார் துயர்தோன்றுவே. (கo)

மருவாருமல்குகாழித்திகழ்சம்பந்தன்
றிருவாருந்திகழ்தருவெண்ணியமர்தானை
யுருவாருமொண்டமிழ்மாலையிவைவல்லார்
பொருவாகப்புக்கிருப்பார்புவலோகத்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வெண்ணிநாயகர்-தேவியார்-அழகியநாயகியம்மை.

திருக்காறாயில் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நீரானேநீள்சடைமேலொருநிரைகொன்றைத்
தாரானேதாமரைமேலயன்றன்றொழுஞ்
சீரானேசீர்திகழுந்திருக்காறாயி
லூரானேயென்பவருனமிலாதாரே. (க)

மதியானேவரியரவோடுடன்மத்தஞ்சேர்
விதியானேவிதியுடைவேதியர்தாந்தொழு
நெதியானேநீர்வயல்சூழ்திருக்காறாயிற்
பதியானேயென்பவர்பாவமிலாதாரே. (உ)

விண்ணானேவிண்ணவரேத்திவிரும்புஞ்சீர்
மண்ணானேமண்ணிடைவாழுமுயிர்க்கெல்லாங்
கண்ணானேகடிபொழில்சூழ்திருக்காறாயி
லெண்ணானேயென்பவரேதமிலாதாரே. (ங)

தாயானேதந்தையுமாகியதன்மைக
ளாயானேயாயஞலன்பர்க்கணியானே
சேயானேசீர்திகழுந்திருக்காறாயின்
மேயானேயென்பவர்மேல்வினைமேவாவே. (ச)

கலையானேகலைமலிசெம்பொற்கயிலாய
மலையானேமலைபவர்மும்மதின்மாய்வித்த
சிலையானேசீர்திகழுந்திருக்காறாயி
னிலையானேயென்பவர்மேல்வினைநில்லாவே. (ஞ)

ஆற்றானேயாறணிசெஞ்சடையாடர
வேற்றானேயேபூலகும்மிமையோர்களும்
போற்றானேபொழிறிகழுந்திருக்காறாயி
னீற்றானேயென்பவர்மேல்வினைநில்லாவே. (ஈ)

சேர்த்தானேதீவினைதேய்ந்தறத்தேவர்க
ளேத்தானேயேத்தநன்மாமுனிவர்க்கிடர்
காத்தானேகார்வயல்சூழ்திருக்காறாயி
லார்த்தானேயென்பவர்மேல்வினையாடாவே. (எ)

கடித்தானேகாலனைக்காலாற்கயிலாய
மெடுத்தானேயேதமாகம்முனிவர்க்கிடர்
கெடுத்தானேகேழிளருந்திருக்காறாயி
லடித்தானேயென்பவர்மேல்வினையாடாவே. (அ)

பிறையானேபேணியபாடலோடின்னிசை
மறையானேமாலொடுநான்முகன்காணாத
விறையானேயெழிறிகழுந்திருக்காறாயி
லுறைவானேயென்பவர்மேல்வினையோடுமே. (கூ)

செடியாரும்புன்சமண்சிவரத்தார்களும்
படியாரும்பாவிகள்பேச்சுப்பயனில்லை
கடியாரும்பூம்பொழில்சூழ்திருக்காறாயில்
குடியாருங்கொள்கையினுற்கில்லைகுற்றமே. (கo)

ஏய்ந்தசிரெழிறிகழுந்திருக்காறாயி
லாய்ந்தசிரானடியேத்தியருள்பெற்ற
பாய்ந்தநீர்க்காழியுள்ஞானசம்பந்தன்சொல்
வாய்ந்தவாறேத்துவார்வானுலகாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கண்ணுயிரானதர்-தேவியார்-கயிலாயநாயகியம்மை.

திருமணஞ்சேரி - பண் - இந்தளம்

திருச்சிற்றம்பலம்.

அயிலாருமம்பதனுற்புரமூன்றெய்து
குயிலாருமென்மொழியாளொருகூறுகி
மயிலாருமல்கியசோலைமணஞ்சேரி
பயில்வானைப்பற்றிநின்றூர்க்கில்லைபாவமே. (க)

விதியானைவிண்ணவர்தாந்தொழுதேத்திய
நெதியானைநீள்சடைமேனிகழ்வித்தவான்

EFEO_TVG_149-117 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மதியானேவண்பொழில்சூழ்ந்தமணஞ்சேரிப்
பதியானேப்பாடவல்லார்வினைபாறுமே. (உ)

எய்ப்பானுர்க்கின்புறுதேனளித்தூறிய
விப்பாலாயென்னேயுமாளவுரியானே
வைப்பானமாடங்கள்சூழ்ந்தமணஞ்சேரி
மெய்ப்பானேமேவிநின்றூர்வினைவீடுமே. (ஈ)

விடையானேமேலுலகேழுமிப்பாரெலா
முடையானேயூழிதோறூழியுளதாய
படையானேப்பண்ணிசைபாடுமணஞ்சேரி
யடவானேயடையவல்லார்க்கில்லையல்லலே. (ச)

எறியார்பூங்கொன்றையினேடுமிளமத்தம்
வெறியாருஞ்செஞ்சடையாரமிலைத்தானே
மறியாருங்கங்கையுடையானேமணஞ்சேரிச்
செறிவானேச்செப்பவல்லார்க்கிடர்சேராவே. (ரு)

மொழியானேமூன்னெருநான்மறையாறங்கம்
பழியாமைபண்ணிசையானபகர்வானே
வழியானேவானவரேத்துமணஞ்சேரி
யிழியாமையேத்தவல்லார்க்கெய்துமின்பமே. (சு)

கண்ணானேயெண்ணமர்சிரிமையோர்கட்குக்
கண்ணானேக்கண்ணெருமூன்றுமுடையானே
மண்ணானேமாவயல்சூழ்ந்தமணஞ்சேரிப்
பெண்ணானேப்பேசநின்றூர்பெரியோர்களே. (எ)

எடுத்தானேயிழின்முடியெட்டுமிரண்டுந்தோள்
கெடுத்தானேக்கேடிலாச்செம்மையுடையானே
மடுத்தாரவண்டிசைபாடுமணஞ்சேரி
பிடித்தாரப்பேணவல்லார்பெரியோர்களே. (அ)

சொல்லானேத்தோற்றங்கண்டானுநெடுமாலுங்
கல்லானேக்கற்றனசொல்லித்தொழுதேத்தக
வல்லார்நன்மாதவரேத்துமணஞ்சேரி
யெல்லாமாமெம்பெருமான்கழலேத்துமே. (கூ)

சற்றேயுந்தாமறிவில்சமண்சாக்கியர்
சொற்றேயும்வண்ணமோர்செம்மையுடையானே
வற்றாதவாவிகள்சூழ்ந்தமணஞ்சேரி
பற்றாகவாழ்பவர்மேல்வினைபற்றுவே. (கo)

கண்ணாருங்காழியர்கோன்கருத்தார்வித்த
தண்ணார்சீர்ஞானசம்பந்தன்தமிழ்மாலை
மண்ணாருமாவயல்சூழ்ந்தமணஞ்சேரி
பண்ணாரப்பாடவல்லார்க்கில்லைபாவமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-மணவாளநாயகர்-தேவியார்-யாழ்மொழியம்மை.

திருவேணுபுரம் - பண் - இந்தளம்.

(67)

திருச்சிற்றம்பலம்.

நிலவும்புனலுங்நிறைவாளரவு, மிலகுஞ்சடையார்க்கிடமாமெழிலா
ருலவும்வயலுக்கொளியார்முத்தம், விலகுங்கடலார்வேணுபுரமே. (க)

அரவார்காலன்னமையார்திரடோட், குரவார்குழலாளொருகூறனிடங்
கரவாதகொடைக்கலந்தாரவர்க்கு, விரவாகவல்லார்வேணுபுரமே. (உ)

ஆகம்மழகாயவடான்வெருவ, நாகமுரிபோர்த்தவனண்ணுமிடம்
போகந்தருசீர்வயல்சூழ்பொழில்கண், மேகந்தவழும்வேணுபுரமே. (ஈ)

காசக்கடலில்விடமுண்டகண்டத், தீசர்க்கிடமாவதுவின்னறவ
வாசக்கமலத்தனமன்றிரைகள், வீசத்துயிலும்வேணுபுரமே. (ச)

அரையார்கலிசொன்மென்னடையை, யுரையாவுகந்தானுறையுமிட
நிரையார்கமுகின்னிகழ்பாளையுடை, விரையார்பொழில்சூழ்வேணுபுரமே (ரு)

ஒளிரும்பிறையுமுனுகூவிளவின், றளிருஞ்சடைமேலுடையானிடமா
நளிரும்புனலின்னலசெங்கயல்கண், மிளிரும்வயல்சூழ்வேணுபுரமே. (சு-எ)

எவும்படைவேந்தனிராவணனே, யாவென்றலறவட்டித்தானிடமாந்
தாவும்மறிமானெறிதன்மதிய, மேவும்பொழில்சூழ்வேணுபுரமே. (அ)

கண்ணன்கடிமாமலர்ற்றிகழு, மண்ணலிருவரறியாவிறைபூர்
வண்ணச்சுதைமாளிகைமேற்கொடிகள், விண்ணிற்றிகழும்வேணுபுரமே. ()

போகம்மறியார்துவர்போர்த்துழல்வா, ராகம்மறியாவடியாரிறையூர்
மூகம்மறிவார்கலிமுத்தமிழ்நூன், மீகம்மறிவார்வேணுபுரமே. (கo)

கலமார்கடல்போல்வளமார்தருநற், புலமார்தருவேணுபுரத்திறையை
கலமார்தருஞானசம்பந்தன்சொன்ன, குலமார்தமிழ்கூறுவர்கூர்மையரே. ()

திருச்சிற்றம்பலம்.

திருமருகல் - விடததீர்த்ததிருப்பதிகம் - பண் - இந்தளம்.

(622)

திருச்சிற்றம்பலம்.

சடையாயெனுமால்சரணீயெனுமால்
விடையாயெனுமால்வெருவாவிழுமால்
மடையார்குவளைம்மலரும்மருக
னுடையாய்தகுமோவிவளுண்மெலிவே. (க)

சிந்தாயெனுமால்சிவனேயெனுமான்
முந்தாயெனுமான்முதல்வாவெனுமால்
கொந்தார்குவளைகுலவும்மருக
லெந்தாய்தருமோவிவளேசறவே. (உ)

அறையார்கழலுமழல்வாயரவும்
பிறையார்சடையுமுடையாய்பெரிய
மறையார்மருகன்மகிழ்வாயிவளே
யிறையார்வளைகொண்டெழில்வவ்வினையே. (ஈ)

ஒலிநீர்சடையிற்கரந்தாயுலகம்
பலிநீதிரிவாய்பழியில்புகழாய்
மலிநீர்மருகன்மகிழ்வாயிவளே
மெலிநீர்மையளாக்கவும்வேண்டினையே. (ச)

துணிநீலவண்ணம்முகிழ்ன்றியன்ன
மணிநீலகண்டமுடையாய்மருகற்
கணிநீலவண்டார்குழலாளிவடன்
னணிநீலவொண்கண்ணயர்வாக்கினையே. (டு)

பலரும்பரவப்படுவாய்சடைமேன்
மலரும்பிறையொன்றுடையாய்மருகற்
புலருந்தினைபுந்துயிலாள்புடைபோந்
தலரும்படிமோவடியாளிவளே. (ஊ)

வழுவாள்பெருமான்கழல்வாழ்கவெனு
மெழுவாணினைவாளிரவுப்பகலு
மழுவாளுடையாய்மருகற்பெருமான்
றெழுவாளிவளைத்துயராக்கினையே. (எ)

இலங்கைக்கிறைவன்விலங்கலெடுப்பத்
துலங்கல்விரலான்றலந்தோன்றலனுய்
வலங்கொண்மதில்சூழ்மருகற்பெருமா
னலங்கல்லிவளையலராக்கினையே. (அ)

எரியார்சடையும்மடியும்மிருவர்
தெரியாததோர்தீத்திரளாயவனே
மரியார்பிரியாமருகற்பெருமா
னரிபாளிவளையயர்வாக்கினையே. (கூ)

அறிவில்சமணும்மலர்சாக்கியருங்
நெறியல்லனசெய்தனர்நின்றுழல்வார்
மறியேந்துகையாய்மருகற்பெருமா
னெறியார்குழலிநிறைகீக்கினையே. (கo)

வபஞானம்வல்லார்மருகற்பெருமா
னுயர்ஞானமுணர்ந்தடியுள்ளுதலா
லியன்ஞானசம்பந்தனபாடல்வல்லார்
வியன்ஞாலமெல்லாம்விளங்கூம்புகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்லிக்கா - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

அறத்தாலுயிர்காவலமர்ந்தருளி
மறத்தான்மதின்மூன்றுடன்மாண்பழித்த
திறத்தாற்றெரிவெய்திபதீவெண்டிங்க
ணிறத்தானெல்லிக்காவுணிலாயவனே. (க)

பதிதானிடுகொடுபைங்கொன்றைதொங்கன்
மதிதானதுசூடியமைந்தனுந்தான்
விதிதான்வினைதான்விழுப்பம்பயக்கு
நெதிதானெல்லிக்காவுணிலாயவனே. (உ)

நலந்தானவனுன்முகன்றன்றலையைக்
கலந்தானதுகொண்டகவாலியுந்தான்
புலந்தான்புகழாலெரிவிண்புகழுந்
நிலந்தானெல்லிக்காவுணிலாயவனே. (ஈ)

தலைதானதுவேந்தியதம்மடிகள்
கலைதான்றிரிகாட்டிடநாடிடமா
மலைதானெடுத்தானமதின்மூன்றுடைய
நிலைதானெல்லிக்காவுணிலாயவனே. (ச)

தவந்தான்கதிதான்மதிவார்சடைமே
லுவந்தான்சுறவேந்தனுருவழியச்
சிவந்தான்செயச்செய்துசெறுத்துலகி
னிவந்தானெல்லிக்காவுணிலாயவனே. (டு)

வெறியார்கொன்றையந்தார்விரும்பி
மறியார்மலிமங்கைமகிழ்ந்தவன்றன்
குறியார்குறிகொண்டவர்போய்க்குறுகுங்
நெறியாநெல்லிக்காவுணிலாயவனே. (ஊ)

பிறைதான்சடைசேர்த்தியவெந்தைபெம்மா
னிறைதானிறவாக்கயிலைமலையான்
மறைதான்புனலொண்மதிமல்குசென்னி
நிறைதானெல்லிக்காவுணிலாயவனே. (எ)

EFEO_TVG_149-119 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மறைத்தான்பிணிமாதொருபாகந்தன்னை
மிறைத்தான்வரையாலரக்கன்மிகையைக்
குறைத்தான்சடைமேற்குளிர்கோல்வளையை
நிறைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (அ)

தழுமுமரையான்வையந்தாயவனுங்
கழுருன்முடிகாணியனுளெரிரும்
மழுருனடியார்க்கருளாய்ப்பயக்கு
நிழுருனெல்லிக்காவுணிலாயவனே. (கூ)

கனத்தார்திரைமாண்டழற்கான்றநஞ்சை
யெனத்தாவெனவாங்கியதுண்டகண்டன்
மனத்தாற்சமண்சாக்கியர்மாண்பழிய
நினைத்தானெல்லிக்காவுணிலாயவனே. (கo)

புகரேதுமில்லாதபுத்தேளுலகி
னிகரார்நெல்லிக்காவுணிலாயவனை
நகரார்நலஞானசம்பந்தன்றொன்ன
பகர்வாரவர்பாவமிலாதவரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-நெல்லிவனேசுவரர்.தேவியார்-மங்களாம்பிகையம்மை.

(464)

திருஅழுந்தூர் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொழுமாறுவல்லார்துயர்தீரநினைந், தெழுமாறுவல்லாரிசைபாடவிம்மி
யழுமாறுவல்லாரழுந்தைமறையோர், வழிபாடுசெய்மாமடமன்னினையே.(க)

கடலேறியநஞ்சமுதுண்டவனே, யுடலேயுயிரேயுணர்வேயெழிலே
யடலேறுடையாயழுந்தைமறையோர், விடலேதொழுமாமடமேவினையே.

கழிகாடலனேகனல்லாடலினுப், பழிபாடிலனேயவையேபயிலும்
மழிபாடிலராயழுந்தைமறையோர், வழிபாடுசெய்மாமடமன்னினையே. (ங)

வானேமலியேயென்மனுயிரே, தானேதொழுவர்தொழுதாண்மணியே
யானேசிவனேயழுந்தையவரெம், மானேயெனமாமடமன்னினையே. (ச)

அலையார்புனல்சூழழுந்தைப்பெருமா, னிலையார்மறியுந்நிறைவெண்மழுவும்
மிலையார்படையும்மிவையேந்துசெல்வ, நிலையாவதுகொள்கெனநீநினையே.

நறவார்தலையின்னயவாவுலகிற், பிறவாதவனேபிணியில்லவனே
யறையார்கழலாயழுந்தைமறையோர், மறவாதெழுமாமடமன்னினையே. (ஞ)

தமிமாறுவல்லாய்தலைவாமதியஞ், சுமிமாறுவல்லாய்சுடராரசடையில்
லமிமாறுவல்லாயழுந்தைமறையோர், நெமிமாகர்கைதொழுன்றனினையே.(எ)

பெரியாய்சிறியாய்பிறையாய்மிடறு, கரியாய்கரிகாடெரிவீடையா
யரியாயெளியாயழுந்தைமறையோர், வெரியார்தொழுமாமடமேவினையே. (அ)

மணிநீண்முடியான்மலையையரக்கன், றணியாதெடுத்தானுடலங்நெரித்த
வணியார்விரலாயழுந்தைமறையோர், மணிமாமடமன்னியிருந்தனையே. (கூ)

முடியார்சடையாய்முனநாளிருவர், நெடியான்மலரானிகழ்வாலிவர்க
ளடிமேலறியாரழுந்தைமறையோர், படியாற்றொழுமாமடம்பற்றினையே(கo)

அருஞானம்வல்லாரழுந்தைமறையோர், பெருஞானமுடைப்பெருமானவனைத்
திருஞானசம்பந்தனசெந்தமிழ்க, ளிருஞானமுண்டாமுணர்ந்தார்தமக்கே.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேதபுரீசுவரர் - தேவியார் - சவுந்தராம்பிகையம்மை.

தேரமுர்தூரெனபதமிதுவே.

திருக்கழிப்பாலை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புனலாடியபுன்சடையாயரண
மனலாகவிழித்தவனேயழகார்
கனலாடலினுய்கழிப்பாலையுளா
யுனவார்தழல்கைதொழுதுள்குதுமே. (க)

துணையாகவோர்தூவளமாதினையும்
மிணையாகவுகந்தவனேயிறைவா
கணையாலெயிலெய்கழிப்பாலையுளா
யிணையார்கழலேத்தவிடர்கெடுமே. (உ)

நெடியாய்குறியாய்நிமிர்புன்சடையின்
முடியாய்சுடுவெண்பொடிமுற்றணிவாய்
கடியார்பொழில்சூழ்கழிப்பாலையுளா
யடியார்க்கடையாவவலம்மவையே. (கூ)

எளியாயரியாய்நிலநீரொடுதீ
வளிகாயமெனவெளிமன்னியதூ
வொளியாயுனையேதொழுதுன்னுமவர்க்
களியாய்கழிப்பாலையமர்ந்தவனே. (ச)

நடநண்ணியோர்நாகமசைத்தவனே
விடநண்ணியதுமிடறுவிகிர்தா
கடனண்ணுகழிப்பதிகாவலனே
யுடனண்ணிவணங்குவனுன்னடியே. (ஞ)

பிறையார்சடையாய்பெரியாய்பெரிய
மறையார்தருவாய்மையினுயுலகிற்

EFEO_TVG_149-120 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கறையார்பொழில்சூழ்கழிப்பாலியுளா
யிறையார்கழலேத்தவிடர்கெடுமே. (கூ)

முதிருஞ்சடையின்முடிமேல்விளங்குங்
கதிர்வெண்பிறையாய்கழிப்பாலியுளா
யெதிர்கொண்மொழியாலிர்ந்தேத்துமவர்க்
கதிரும்வினையாயினவாசறுமே. (எ)

எரியார்க்ணையாலெயிலெய்தவனே
விரியார்தருவிழ்சடையாயிரவிற்
கரிகாடலினுய்கழிப்பாலியுளா
யுரிதாகிவணங்குவனுன்னடியே. (அ)

நலகாரணனுன்முகனண்ணலுறக்
கனலானவனேகழிப்பாலியுளா
யுனவார்கழலேதொழுதுன்னுமவர்க்
கிலவாம்வினைதானெயிலெய்தவனே. (கூ)

தவர்கொண்டதொழிற்சமண்வேடரொடுங்
துவர்கொண்டனர்நுண்டுகிலாடையரு
மிவர்கொண்டனவிட்டடிகளுறைபு
முவர்கொண்டகழிப்பதியுள்குதுமே. (கo)

கழியார்பதிகாவலனீப்புகலிப்
பழியாமறைஞானசம்பந்தனசொல்
வழிபாடிவைகொண்டடிவாழ்த்தவல்லார்
கெழியாரிமையோரொடுகேடிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பால்வண்ணநாதர்-தேவியார்-வேதநாயகியம்மை.

திருக்குடவாயில் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திகழுந்திருமாலொடுநான்முகனும்
புகழும்பெருமானடியார்புகல
மகிழும்பெருமான்குடவாயின்மன்னி
நிகழும்பெருங்கோயினிலாயவனே. (க)

ஓடுங்நதியும்மதியோடரகஞ்
சூடுஞ்சடையான்விடைதொல்கொடிமேற்
கூடுங்குழகன்குடவாயிறனி
னீடும்பெருங்கோயினிலாயவனே. (உ)

கலையான்மறையான்கனலேந்துகையான்
மலையாளவள்பாகமகிழ்ந்தபிரான்
கொலையார்கிலையான்குடவாயிறனி
னிலையார்பெருங்கோயினிலாயவனே. (ஈ)

சுலவுஞ்சடையான்சுடுகாடிடமா
நலமென்முலையாணகைசெய்பநடங்
குலவுங்குழகன்குடவாயிறனி
னிலவும்பெருங்கோயினிலாயவனே. (உ)

என்றன்னுளமேவியிருந்தபிரான்
கன்றன்மணிபோன்மிடறன்கயிலைக்
குன்றன்குழகன்குடவாயிறனி
னின்றபெருங்கோயினிலாயவனே. (ரு)

அலைசேர்புனலனனலன்னமலன்
றலைசேர்பலியன்சதுரன்விதிருங்
கொலைசேர்படையன்குடவாயிறனி
னிலைசேர்பெருங்கோயினிலாயவனே. (சு)

அறையார்கழலன்னமலன்னியலிற்
பறையாழ்முழவும்மறைபாடநடங்
குறையாவழகன்குடவாயிறனி
னிறையார்பெருங்கோயினிலாயவனே. (எ)

வரையார்திரடோளரக்கன்மடியவ்
வரையாரவோர்கால்விரல்வைத்தபிரான்
வரையார்மதில்சூழ்குடவாயின்மன்னும்
வரையார்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (அ)

பொன்னெப்பவனும்புயலொப்பவனுந்
தன்னெப்பரியாத்தழலாய்நிமிர்ந்தான்
கொன்னற்படையான்குடவாயிறனின்
மன்னும்பெருங்கோயின்மகிழ்ந்தவனே. (கூ)

வெயிலின்னிலையார்விரிபோர்வையினர்
பயிலும்முரையேபகர்பாவிகள்பாற்
குயிலன்குழகன்குடவாயிறனி
னுயரும்பெருங்கோயினுயர்ந்தவனே. (கo)

கடிவாய்மலிநீர்குடவாயிறனி
னெடுமாபெருங்கோயினிலாயவனைத்
தடமார்புகலித்தமிழார்விரகன்
வடமார்தமிழ்வல்லவர்நல்லவரே.

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோணேசுவரர்-தேவியார்-பெரியநாயகியம்மை.

EFEO_TVG_149-121 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருவானேக்கா - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மழையார்மிடறுமழுவாளுடையா
யுழையார்கரவாவுமையாள்கணவா
விழவாரும்வெண்ணவலின்மேவியவெம்
மழகாவெனுமாயிழையாளவளே. (சு)

கொலையார்கரியின்னுரிமூடியனே
மலையார்சிலையாவளைவித்தவனே
விலையாலெனையாளும்வெண்ணவலுளாய்
நிலையாவருளாயெனுநேரிழையே. (உ)

காலாலுயிர்காலனைவீடுசெய்தாய்
பாலோடுநெய்யாடியபால்வண்ணனே
வேலாடுகையாயெம்வெண்ணவலுளாய்
யாலாநிழலாயெனுமாயிழையே. (கூ)

சுறவக்கொடிகொண்டவனீறுதுவா
யுறநெற்றிவிழித்தவெமுத்தமனே
விறன்மிக்கரிக்கருள்செய்தவனே
யறமிக்கதுவென்னுமெனுயிழையே. (சு)

செங்கட்பெயர்கொண்டவன்செம்பியர்கோ
னங்கட்கருணைபெரிதாயவனே
வெங்கண்விடையாயெம்வெண்ணவலுளா
யங்கத்தயர்வாயினளாயிழையே. (டு)

குன்றேயமர்வாய்கொலையார்புலியின்
றன்றோலுடையாய்சடையாய்பிறையாய்
வென்றிப்புரமூன்றைவெண்ணவலுளே
நின்றியருளாயெனுநேரிழையே. (சு - எ)

மலையன்றெடுத்தவரக்கன்முடிதோ
டொலையவ்விரலூன்றியதுமழுவா
விலையில்லெனையாளும்வெண்ணவலுளா
யலசாமனல்காயெனுமாயிழையே. (அ)

திருவார்தருநாரணனுன்முகனு
மருவாவொருவாவழலாய்நிமிர்ந்தாய்
விரையாரும்வெண்ணவலுண்மேவியவெம்
மரவாவெனுமாயிழையாளவளே. (கூ)

புத்தர்பலரோடமண்பொய்த்தவர்க
ளொத்தவ்வுரைசொல்லிவையோரகிலார்

மெய்த்தேவர்வணங்கும்வெண்ணவலுளா
யத்தாவருளாயெனுமாயிழையே. (சு)

வெண்ணவலமர்ந்துறைவேதியனைக்
கண்ணார்கமழ்காழியர்தந்தலைவன்
பண்ணேடிவைபாடியபத்தும்வல்லார்
விண்ணோரவரேத்தவிரும்புவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநாகேச்சரம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பொன்னேர்தருமேனியனேபுரியு, மின்னேர்சடையாய்விரிகாவிரியி
ன்னீர்வயனாகேச்சரநகரின், மன்னேயெனவல்வினைமாய்ந்தறுமே.

சிறவார்புரமூன்றெரியச்சிலையில், லுறவார்கணையுய்த்தவனேயுருக்
நறவார்பொழினாகேச்சரநகரு, ளறவாவெனவல்வினையாசறுமே. (உ)

கல்லானிழன்மேயவனேகரும்பின், வில்லானெழில்வேவவிழித்தவனே
நல்லார்தொழுநாகேச்சரநகரிற், செல்வாவெனவல்வினைதேய்ந்தறுமே.

நகுவான்மதியோடரவும்புனலுந், தகுவார்சடையின்முடியாய்தவளக்
நகுவார்பொழினாகேச்சரநகருட், பகவாவெனவல்வினைபற்றறுமே.(ச)

கலிமான்மறியுங்கனலும்மழுவுந், நிலையாகியகையினனேநிகழுங்
நலமாகியநாகேச்சரநகருட், டலிவாவெனவல்வினைதான்றுமே. (டு)

குரையார்கழலாடநடங்குலவி, வரையான்மகள்காணமகிழ்ந்தவனே
நரையார்விடையேறுநாகேச்சரத்தெ, மரசேயெனநீங்குமருந்துயரே.

முடையார்தருவெண்டலைகொண்டுலகிற், கடையார்பலிகொண்மெல்காரணனே
நடையார்தருநாகேச்சரநகருட், சடையாவெனவல்வினைதானறுமே(எ)

ஓதாதவரக்கனெடுத்தலற, நீயாரருள்செய்துகழ்ந்தவனே
வாயாரவழுத்துவர்நாகேச்சரத், தாயேயெனவல்வினைதானறுமே. (அ)

நெடியானெடுநான்முகனேடலுறச், சுடுமாலெரியாய்நிமிர்சோதியனே
நடுமாவயனாகேச்சரநகரே, யிடமாவுறைவாயெனவின்புறுமே. (கூ)

மலம்பாவியகையொடுமண்டையதுண், கலம்பாவியர்கட்டுரைவிட்டுலகி
னலம்பாவியநாகேச்சரநகருட், சிலம்பாவெனத்தீவினைதேய்ந்தறுமே.

கலமார்கடல்சூழ்தருகாழியர்கோன், றலமார்தருசெந்தமிழின்விரக [யே
னலமார்தருநாகேச்சரத்தானைச், சொலன்மாலைகள்சொல்லநில்லாவினை

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செண்பகாரணியேசுவரர்-தேவியார்-குன்றமுலைநாயகியம்மை.

திருப்புகலி - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

கலியாழ்கடலோங்குபாருளீர், கலியாவினையல்லல்போயறுமிக்
கலியார்புரமெய்தவனுறைபு, கலியாகர்போற்றிவாழ்மினே.

பண்ணியாள்வதோற்றற்பான்மதிக், கண்ணியார்கமழ்கொன்றைசேர்
புண்ணியன்னுறையும்புகலியை,நண்ணுமின்னலமானவேண்டிலே.[முடிப்

வீசுமின்புகைதான்மேதகு, பாசவல்வினைதீர்த்தபண்பினன்
பூசுநீற்றினன்பூம்புகலியைப், பேசுமின்பெரிதின்பமாகவே. [ன்

கடிகொள்கூவிளமத்தம்வைத்தவன், படிகொள்பாரிடம்பேசும்பான்மைய
பொடிகொண்மேனியன்பூம்புகலியுள், எடிகளையடைந்தன்புசெய்யுமே.

பாதத்தாரொலிபல்சிலம்பின, னேதத்தார்விடமுண்டவன்படை
பூதத்தான்புகலிங்நகர்தொழ, வேதத்தார்க்கிடமில்லையென்பரே. (நி)

மறையினனெலிமல்குவீணைய, னிறையினர்நிமிர்புன்சடையனெம்
பொறையினனுறையும்புகலியை, நிறையினர்தொழநேசமாகுமே. (சு)

கரவிடைமநத்தாரைக்காண்கிலா, னிரவிகடப்பலிகொள்ளுமெம்மிறை
பொருவிடையுயர்த்தான்புகலியைப், பரவிடப்பயில்பாவம்பாறுமே.

அருப்பினர்முலைமங்கைபங்கினன், விருப்பினனரக்கன்னுரஞ்செகும்
பொருப்பினன்பொழிலார்புகலியு, நிருப்பினனடியேத்திவாழ்த்துமே.

மாலுநான்முகன்முனும்வார்கழற், சிலமும்முடிதேடநீண்டெரி
போலுமேனியன்பூம்புகலியுட், பாலதாடியபண்பனல்லனே. (சு)

நின்றுதுய்ப்பவர்நீசர்தேரர்சொல், லொன்றதாகவையாவுணர்வினு
ணின்றவன்னிகழும்புகலியைச், சென்றுகைதொழச்செல்வமாகுமே.

புல்லமேறிதன்பூம்புகலியை, நல்லஞானசம்பந்தனவினற்
சொல்லுமாலையிரைந்தும்வல்லவர்க், கில்லையாம்வினையிருநிலத்துளே.

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வாயில் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

புடையினர்புள்ளிகால்பொருந்திய, மடையினர்மணிநீர்நெல்வாயிலார்
நடையினல்விரற்கோவணங்நயந், துடையினரெமதுச்சியாரே. (க)

வாங்கினர்மதின்மேற்கணைவெள்ளந், தாங்கினர்தலையாயதன்மையர்
நீங்குநீர்நெல்வாயிலார்தொழ, வோங்கினரெமதுச்சியாரே. (உ)

நிச்சலேத்துநெல்வாயிலார்தொழ, விச்சையாலுறைவாரெமீசனர்
கச்சையாவதோர்பாம்பினர்கவி, னிச்சையாரெமதுச்சியாரே. (ரு)

மறையினர்மழுவாளினர்மல்கு, பிறையினர்பிறையோடிலங்கிய
நிறையினர்நெல்வாயிலார்தொழு, மிறைவனெமதுச்சியாரே. (சு)

விருத்தனுகிவெண்ணீறுபூசிய, கருத்தனர்கனலாட்டுகந்தவர்
நிருத்தனர்நெல்வாயின்மேவிய, வீசருத்தனெமதுச்சியாரே. (நி)

காரினர்கொன்றைக்கண்ணியார்மல்கு, பேரினர்பிறையோடிலங்கிய
நீரினர்நெல்வாயிலார்தொழு, மேரினரெமதுச்சியாரே. (சு)

ஆதியாரந்தமாயினர்வினை, கோதியார்மதில்கூட்டழித்தவர்
நீதியார்நெல்வாயிலார்மறை, யோதியாரெமதுச்சியாரே. (எ)

பற்றினனரக்கன்கயிலையை, யொற்றினனொருகால்விரலுற
நெற்றியார்நெல்வாயிலார்தொழும், பெற்றியாரெமதுச்சியாரே. (அ)

நாடினர்மணிவண்ணனன்முகன், கூடினர்குறுகாதகொள்கையர்
நீடினர்நெல்வாயிலார்தலை, யோடினரெமதுச்சியாரே. (கூ)

குண்டமண்டுவர்க்கூறைமூடர்சொற், பண்டமாகவையாதபண்பினர்
விண்டயங்குநெல்வாயிலார்நஞ்சை, யுண்டகண்டரெம்முச்சியாரே.(கo)

நெண்பயங்குநெல்வாயிலீசனைச், சண்பைஞானசம்பந்தன்சொல்லிலை
பண்பயன்கொளப்பாடவல்லவர், விண்பயன்கொளும்வேட்கையாளரே.

திருச்சிற்றம்பலம்.

திருஇந்திரநீலபருப்பதம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

குலவுபாரிடம்போற்றவிற்றிருந், திலகுமான்மழுவேந்துமங்கையர்
நிலவுமிந்திரநீலபர்ப்பதத், துலவினனடியுள்கல்குமே. (க)

குலறவிலார்மதிசூடியாடல்வண், டறையுமாமலர்க்கொன்றைசென்னிசே
ரிறைவனிந்திரநீலபர்ப்பதத், துறைவினுன்றனையோதியுய்மினே. (உ)

என்பொனென்மணியென்னவேத்துவார், நம்பனன்மறைபாடுநாவினு
னின்பனிந்திரநீலபர்ப்பதத், தன்பன்பாதமேயடைந்துவாழ்மினே. (ரு)

நாசமாம்வினைநன்மைதான்வரும், தேசமார்புகழாயசெம்மையெம்
மீசனிந்திரநீலபர்ப்பதந், கூசிவாழ்த்துதுங்குணமதாகவே. (சு)

மருவுமான்மடமாதொர்பாகமாப், பரவுவார்வினைதீர்த்தபண்பினு
னிரவனிந்திரநீலபர்ப்பதத், தருவிசூடுமடிகள்வண்ணமே. (நி)

வெண்ணிலாமதிசூடும்வேணிய, னெண்ணிலார்மதிலெய்தவில்லின
னண்ணிலிந்திரநீலபர்ப்பதத், துண்ணிலாவுமொருவனல்லனே. (சு)

EFEO_TVG_149-123 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கொடியவேற்றினர்கூற்றுதைத்தவர், பொடிகொண்மேனியிற்பூண்டபா
ம்பின, ரடிகளிந்திரநீலபர்ப்பத,முடையவாணுகந்தகொள்கையே.(எ)

எடுத்தவல்லரக்கன்கரம்புய, மடர்த்ததோர்ஷிரலானவனேயாட்
படுத்தவிந்திரநீலபர்ப்பத, முடித்தலம்முறமுய்துமின்பமே. (அ)

பூவினெமொலும்போற்றுறுந், தேவனிந்திரநீலபர்ப்பதம்
பாவியாவெழுவாளாத்தம்வினை, கோவியாவருங்கொல்லுங்கூற்றமே(கூ)

கட்டர்குண்டமண்டேரர்சிரிலர், விட்டரிந்திரநீலபர்ப்பத
மெட்டனினையாததென்கொலோ, சிட்டதாயுறையாதிசிர்களே. (கo)

கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியா, லிந்திரன்முழுநீலபர்ப்பதத் [னே.
தந்தமில்லியையேத்துஞானசம், பந்தன்பாடல்கொண்டோதிவாழ்மி

திருச்சிற்றம்பலம்.

வடதேசத்திலுள்ளது.

சுவாமிபெயர் - நீலாசலநாதர் - தேவியார் - நீலாம்பிகையம்மை.

திருக்கருவூர்த்திருஆனிலை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

தொண்டெலாமலர்தூவியேத்தநஞ், சுண்டலாருயிராயதன்மையர்
கண்டனர்கருவூருளானிலை, யண்டரருளியுமன்பரே (க)

நீதியார்நினைந்தாயநான்மறை, யோதியாரொடுங்கூடிலார்குழைக்
காதினர்கருவூருளானிலை, யாதியாரடியார்தமன்பரே. (உ)

விண்ணுலாமதிசூடிவேதமே, பண்ணுளார்பரமாயபண்பினர்
கண்ணுளார்கருவூருளானிலை, யண்ணலாரடியார்க்குநல்லரே. (ங)

முடியர்மும்மதயானையிருரி, பொடியர்பூங்கணிவேளைச்செற்றவர்
கடியுளார்கருவூளானிலை, யடிகள்யாவையுமாயவீசரே. (ச)

பங்கயம்மலர்ப்பாதர்பாதியோர், மங்கையர்மணிநீலகண்டர்வான்
கங்கையர்கருவூருளானிலை, யங்கையோடரவத்தமண்ணலே. (ஞ)

தேவர்திங்களும்பாம்புஞ்சென்னியின், மேவர்மும்மதிலெய்தவேட்கை
காவலர்கருவூருளானிலை, மூவராகியமொய்ம்பரல்லரே. [யர்

பண்ணினுர்படியேற்றர்நீற்றர்மெய்ப், பெண்ணினுர்பிறைதாங்குநெற்றி
கண்ணினுர்கருவூருளானிலை, நண்ணினுர்நமையாளுநாதரே. [யார்

கடுத்தவாளரக்கன்கயிலையை, யெடுத்தவன்றலைதோளுந்தாளினு
லடர்த்தவன்கருவூருளானிலை,கொடுத்தவன்னருள்கூத்தனல்லனே.(அ)

உழுதுமாநிலத்தேனமாகிமா, முழுதுமாமலரோனுங்காண்கிலார்
கழுதினன்கருவூருளானிலை, முழுதுமாகியமூர்த்திபாதமே. (ஙு)

புத்தர்புன்சமணர்பொய்யுரைப், பித்தர்பேசியபேச்சைவிட்டுமெய்ப்
பத்தர்சேர்கருவூருளானிலை, யத்தர்பாதமடைந்துவாழ்மினே. (கo)

கந்தமார்பொழிற்காழிஞானசம், பந்தன்சேர்கருவூருளானிலை
யெந்தையைச்சொன்னபத்துமல்லவர், சிந்தையிற்றுயராயதீர்வரே.

திருச்சிற்றம்பலம்.

கொங்குநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பசுபதீசுவரர் - தேவியார் - திருபாகாயகியம்மை.

திருப்புகலி - திருவிராகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னியகலிப்பொருளுமூவுலகில்வாழ்வும்
பன்னியவொருத்தர்பழவூர்வினவின்ஞாலந்
துன்னியிமையோர்கடிதிசெய்துமுன்வணங்குஞ்
சென்னியர்விருப்புறுதிருப்புகலியாமே. (க)

வண்டிரைமதிச்சடைமிலைத்தபுனல்சூடிப்
பண்டெரிகையாடுபரமன்பதியதென்பர்
புண்டரிகவாசமதுவீசுமலர்ச்சோலைத்
தெண்டிரைகடற்பொலிதிருப்புகலியாமே. (உ)

பாவணவுசிந்தையவர்பத்தொடுகூடி
நாவணவுமந்தனன்விரும்பிடமதென்பர்
பூவணவுசோலையிருண்மாலையெதிர்கூரத்
தேவணர்விழாவளர்திருப்புகலியாமே. (ங)

மைதவழுமாமிடறன்மாநடமதாடிக்
கைவளையினொடுகலந்தபதியென்பர்
செய்பணிபெருந்தெழுமுருத்திரர்கள்கூடித்
தெய்வமணக்குறுதிருப்புகலியாமே. (ச)

முன்னமிருமூன்றுசமயங்களையாகிப்
பின்னையருள்செய்தபிறையாளனுறைகோயில்
புன்னையமலர்ப்பொழில்களுக்கினெளிகாட்டச்
செந்நெலவயலார்தருதிருப்புகலியாமே. (ஞ)

வங்கமலியுங்கடல்விடத்தினைநுகர்ந்த
வங்கணனருத்திசெய்திருக்குமிடமென்பர்
கொங்கணவியன்பொழிலின்மாசுபனிமூசத்
தெங்கணவுதேன்மலிதிருப்புகலியாமே. (சு)

நல்குரவுமின்பமுநலங்களையாகி
வலவினைகடீர்த்தருளுமைந்தனிடமென்பர்

EFEO_TVG_149-124 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மல்குமடியார்கள்படியாரவிசைபாடிச்
செல்வமறையோருறைதிருப்புகலியாமே. (எ)

பரப்புறுபுகழ்ப்பெருமையாளன்வரைதன்னை
லரக்கனெயடர்த்தருளுமண்ணலிடமென்பர்
நெருக்குறுகடற்றிரைகண்முத்தமணிசிந்தச்
செருக்குறுபொழிற்பொலிதிருப்புகலியாமே. (அ)

கோடலொடுகூன்மதிகுலாயசடைதன்மே
லாடரவமைத்தருளுமப்பனிருவாசகரும்
கேடவெளியாகியிருபாலுமடிபேணித்
தேடவுறையுங்கர்திருப்புகலியாமே. (ஈ)

கற்றமனருற்றுலவுதேரருரைசெய்த
குற்றமொழிகொள்கையிலாதபெருமானார்
பொற்றெடிமடந்தையருமைந்தர்புலனைந்துஞ்
செற்றவர்வனப்புறுதிருப்புகலியாமே. (உ)

செந்தமிழ்பரப்புறுதிருப்புகலிதன்மே
லந்தமுதலாகியவாயபெருமானைப்
பந்தனுரைசெய்தமிழ்கள்பத்துமிசைகூர
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. (ஊ)

திருச்சிற்றம்பலம்.

திருப்புறம்பயம் - திருவிராகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

மறம்பயமலைந்தவர்மதிற்பரிசழித்தனை
நிறம்பசுமைசெம்மையொடிசைந்தனதுநீர்மை
திறம்பயனுமும்பொருடெரிந்துணருநால்வர்க்
கறம்பயனுரைத்தனைபுறம்பயமமர்ந்தோய். (க)

விரித்தனைதிருச்சடையர்த்தொழுகுவெள்ளந்
தரித்தனையதன்றியுமிகப்பெரியகாலன்
னெருத்திறவுதைத்தனையிலங்கிழையோர்பாகம்
பொருத்துதல்கருத்தினைபுறம்பயமமர்ந்தோய். (உ)

விரிந்தனைகுவிந்தனைவிழுங்குயிருமிழ்ந்தனை
திரிந்தனைகுருந்தொசிபெருந்தகையுநீயும்
பிரிந்தனைபுணர்ந்தனைபிணம்புகுமயானம்
புரிந்தனைமகிழ்ந்தனைபுறம்பயம்மர்ந்தோய். (ங)

வளங்கெழுகதும்புனலொடுஞ்சடையொடுங்கத்
தளங்கமரிளம்பிறைசுமந்ததுவிளங்க

வளங்கொளவளைந்தவர்சுடுஞ்சூலநீறு
புளங்கொளவிளங்கினைபுறம்பயம்மர்ந்தோய். (ச)

பெரும்பிணிபிறப்பினெடிறப்பிலியோர்பாகங்
கரும்பொடுபடுஞ்சொலின்மடந்தையைமகிழ்ந்தோய்
சுரும்புணவரும்பவிழ்திருந்தியெழுகொன்றை
விரும்பினைபுறம்பயமமர்ந்தவிறையோனே. (ஞ)

அனற்படுதடக்கையவரெத்தொழிலோனு
நினைப்புடைமனத்தவர்வினைப்பகையுநீயே
தனற்படுசுடர்ச்சடைதனிப்பிறையொடொன்ற
புனற்படுகிடக்கையைபுறம்பயமமர்ந்தோய். (ட)

மறத்துறைமறுத்தவர்தவத்தடியருள்ளம்
மறத்துறையொறுத்துனதருட்கிழமைபெற்றிரு
திறத்துளதிறத்தினைமதித்தகலகின்றும்
புறத்துளதிறத்தினைபுறம்பயமமர்ந்தோய். (ண)

இலங்கையரிறைஞ்சிறைவிலங்கலின்முழங்க
வுலங்கெழுதடக்கைகளடர்த்திடலுமஞ்சி
வலங்கொளவெழுந்தவனலங்கினவஞ்சு
புலன்களைவிலங்கினைபுறம்பயமமர்ந்தோய். (அ)

வடங்கெடதுடங்குணவிடந்தவிடையல்விக்
கிடந்தவனிருந்தவனளந்தனரலாகார்
தொடர்ந்தவருடம்பொடுநிமிர்ந்துடன்வணங்கப்
புடங்கருள்செய்தொன்றினைபுறம்பயமமர்ந்தோய். (கூ)

விடக்கொருவர்நன்றெனவிடக்கொருவர்தீதென்
வுடற்குடைகளேந்தவருடம்பினைமறைக்கும்
படக்கர்கள்பிடக்குரைபடுத்துமையோர்பாக
மடக்கினைபுறம்பயமமர்ந்தவரவோனே. (கூ)

கருங்கழிபொருந்திகைகரைக்குலவுமுத்தந்
தருங்கமழுமலத்திறைதமிழ்க்கிழமைஞான
சுரும்பவிழ்புறம்பயமமர்ந்ததமிழ்வல்லார்
பெரும்பிணிமருங்கறவொருங்குவர்பிறப்பே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சாக்ஷிவ்ரதநாதர்-தேவியார்-கரும்பன்னசொல்லம்மை.

EFEO_TVG_149-125 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருக்கருப்பறியலூர் - திருவிராகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சுற்றமொடுபற்றவைதுயக்கறவுறுத்துக்
குற்றமில்குணங்களொடுகூடுமடியார்கண்
மற்றவரைவானவர்தம்வானுலகமேற்றக்
கற்றவனிருப்பதுகருப்பறியலூரே. (க)

வண்டணைசெய்கொன்றையுவர்ச்சடைகண்மேலே
கொண்டணைசெய்கோலமதுகோளரவினோடும்
விண்டணைசெய்மும்மதிலும்வீழ்தரவோரம்பாற்
கண்டவனிருப்பதுகருப்பறியலூரே. (உ)

வேதமொடுவேதியர்கள்வேள்விமுதலாகப்
போதினொடுபோதுமலர்கொண்டுபுனைகின்ற
நாதனெனநள்ளிருண்முனுகுழைதாழுங்
காதவனிருப்பதுகருப்பறியலூரே. (ங)

மடம்படுமலைக்கிறைவன்மங்கையொருபங்கன்
னுடம்பினைவிடக்கருதிநின்றமறையோனைத்
தொடர்ந்தணவுகாலனுயிர்காலவொருகாலாற்
கடந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (ச)

ஒருத்தியுமையோடுமொருபாகமதுவாய
நிருத்தனவனீதியவனித்தனெறியாய
விருத்தனவன்வேதமெனவங்கமவையோதுங்
கருத்தவனிருப்பதுகருப்பறியலூரே. (ஞ)

விண்ணவர்கள்வெற்பரசுபெற்றமகண்மெய்த்தேன்
பண்ணமருமென்மொழியினுமையவிப்பா
னெண்ணிவருகாமனுடல்வேவவெரிதாலுங்
கண்ணவனிருப்பதுகருப்பறியலூரே. (ட)

ஆதியடியைப்பணியவப்பொடுமலர்ச்சேர்
சோதியொளிநற்புகைவளர்க்குவடுபுக்குத்
தீதுசெயவந்தணையுமந்தகனரங்கக்
காதினனிருப்பதுகருப்பறியலூரே. (எ)

வாய்ந்தபுகழ்விண்ணவருமண்ணவருமஞ்சப்
பாய்ந்தமர்செயுந்தொழிலிலங்கைகுகர்வேந்தற்
கேய்ந்தபுயமத்தனையுமிற்றுவிழுமேனட்
காய்ந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (அ)

பரந்தநிரந்துவருபாய்திரையகங்கை
சுரந்தொர்சடைமேன்மிசையுகந்தவனைவைத்து

நிரந்தரநிரந்திருவர்நேடியறியாமற்
கரந்தவனிருப்பதுகருப்பறியலூரே. (ஙு)

அற்றமறையாவமணராதமிலிபுத்தர்
சொற்றமறியாதவர்கள்சொன்னசொலைவிட்டுக்
குற்றமறியாதபெருமான்கொருடிக்கோயிற்
கற்றெனவிருப்பதுகருப்பறியலூரே. (கூ)

நலந்தருபுனற்புகலிஞானசம்பந்தன்
கலந்தவர்கருப்பறியன்மேயகடவுள்மேற்
பலந்தருதமிழ்க்கிளவிபத்துமிவைகற்று
வலந்தருமவர்க்குவினைவாடலெளிதாமே. (கஎ)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-குற்றம்பொறுத்தநாதர்-தேவியார்-கோல்வளையம்மை.

திருவையாறு - திருவிராகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

திருத்திகழ்மலைச்சிறுமியோடுமிகுதேச
ருருத்திகழ்முழுதகயிலைவெற்பிலுறைதற்கே
விருப்புடையவற்புதரிருக்குமிடமேரார்
மருத்திகழ்பொழிற்குலவுவண்டிருவையாறே. (க)

கந்தமரவந்துபுகையுந்தலில்விளக்கே
ரிந்திரனுணர்ந்துபணியெந்தையிடமெங்குஞ்
சந்தமலியுந்தருமிடைந்தபொழில்சாரா
வந்தவனினேந்தணவுவண்டிருவையாறே. (உ)

கட்டும்வடமெட்டுமுறுவட்டமுழுவத்திற்
கொட்டுகரமிட்டவொலிதட்டும்வகைகந்திக்
கிட்டமிகநட்டமவையிட்டவரிடஞ்சீர்
வட்டமதிலுட்டிகழும்வண்டிருவையாறே. (ங)

நண்ணியோர்வடத்தினிழலுல்வர்முனிவர்க்கன்
றெண்ணிலிமறைப்பொருள்விரித்தவரிடஞ்சீர்த்
தண்ணின்மலிசந்தகிலொடுந்திவருபொன்னி
மண்ணினமிசைவந்தணவுவண்டிருவையாறே. (ச)

வென்றிமிகுதாருகல தாருயிர்மடங்கக்
கன்றிவருகோபமிகுகாளிகதமோவ
நின்றுநடமாடியிடநீடுமலர்மேலான்
மன்றன்மலியும்பொழில்கொள்வண்டிருவையாறே. (ஞ)

EFEO_TVG_149-126 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பூதமொடுபேய்கள்பலபாடநடமாடிப்
பாதமுதல்பையரவுகொண்டணிபெறுத்திக்
கோதையரிடும்பலிகொளும்பரனிடம்பூ
மாதவிமணங்கமழும்வண்டிருவையாறே. (சு)

துன்னுகுழன்மங்கையுமைநங்கைசுளிவெய்தப்
பின்னொருதவஞ்செய்துழல்பிஞ்ஞகனுமங்கே
யென்னசதியென்றுரைசெயங்கணனிடஞ்சீர்
மன்னுகொடையாளர்பயில்வண்டிருவையாறே. (எ)

இரக்கமில்குணத்தொடுலகெங்குநலிவெம்போ
ரரக்கன்முடியத்தலைபுயத்தொடுமடங்கத்
துரக்கவிரலிற்சிறிதுவைத்தவரிடஞ்சீர்
வரக்கருணையாளர்பயில்வண்டிருவையாறே. (அ)

பருத்துருவதாகிவிணடைந்தவனேர்பன்றிப்
பெருத்துருவதாயுலகிடந்தவனுமென்றுங்
கருத்துருவொணவகைநிமிர்ந்தவரிடங்கார்
வருத்துவகைநீர்கொள்பொழில்வண்டிருவையாறே. (கூ)

பாக்கியமதொன்றுமில்சமண்பதகர்புத்தர்
சாக்கியர்களென்றுடல்பொதிந்துகிரிவார்தா
நோக்கியதத்துவனிடம்படியின்மேலான்
மாக்கமுறநீடுபொழில்வண்டிருவையாறே. (கo)

வாசமலியும்பொழில்கொள்வண்டிருவையாற்று
ளீசனெழிற்புகலிமன்னவன்மெய்ஞ்ஞானப்
பூசுரனுரைத்ததமிழ்பத்துமிவைவலலார்
நேசமலிபத்தரவர்நின்மலனடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநள்ளாறு - திருவிராகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஏடுமலிகொன்றையரவிந்துவிளவன்னி
மாடவலஞ்சடையெமைந்தனிடமென்பர்
கோடுமலிஞாழல்குரவேறுசுரபுன்னை
நாடுமலிவாசமதுவீசியநள்ளாறே. (க)

விண்ணியல்பிறைப்பிளவறைப்புனன்முடித்த
புண்ணியனிருக்குமிடமென்பர்புவிதன்மேற்
பண்ணியநடத்தொடிசைபாடுமடியார்க
ணண்ணியமந்நின்வழிபாடுசெய்நள்ளாறே. (உ)

விளங்கிழைமடந்தைமலைமங்கையொருபாகத்
துளங்கொளிருத்தியொருத்தனிடமென்பர்
வளங்கெழுவுதீபமொடுதூபமலர்தூவி
நளன்கெழுவிநாளுமவழிபாடுசெய்நள்ளாறே. (ஊ)

கொக்கரவர்கூன்மதியர்கோபர்திருமேனிச்
செக்கரவர்சேருமிடமென்பர்தடமூழ்கிப்
புக்கரவிஞ்சையருமம்விண்ணவருநண்ணி
நக்கரவர்நாமநினைவெய்தியநள்ளாறே. (ச)

நெஞ்சமிதுகண்டுகொளுனக்கெனினைந்தார்
வஞ்சமதுதீர்ந்தருளுமற்றவனைவானோ
ரஞ்சமுதுசாகியவர்கைதொழவெழுந்த
நஞ்சமுதுசெய்தவனிருப்பிடநள்ளாறே. (டு)

பாலனடிபேணவனலுயிர்குறைக்குங்
காலனுடன்மாளமுனுதைத்தவரனூராங்
கோலமலர்நீர்குடமெடுத்துமறையாளர்
நாலின்வழிநின்றுதொழில்பேணியநள்ளாறே. (சு)

நீதியர்நெடுந்தகையர்நீண்மலியர்பாவை
பாதியர்பராபரர்பரம்பரரிருக்கை
வேதியர்கள்வேள்வியொழியாதுமறைநாளு
மோதியரனமமுமுணர்த்திநிகள்ளாறே. (எ)

தடுத்தவலரக்கன்முனெருக்கிவைதன்னை
யெடுத்தவன்முடித்தலைகள்பத்துமிருதோளு
மடர்த்தவர்தமக்கிடமதென்பரளிபாட
நடத்தகலவைத்திரள்கள்வையியநள்ளாறே. (அ)

உயர்ந்தவனுருக்கொடுதிரிந்துலகமெல்லாம்
பயந்தவனினைப்பரியபண்பனிடமென்பர்
வியந்தமரர்மெச்சமலர்மல்குபொழிலெங்கு
நயந்தருமவேதவொலியார்திருநள்ளாறே. (கூ)

கிந்தைதிருகற்சமணர்தேரர்தவமென்னும்
பந்தனையறுத்தருளுகின்றபரமன்னூர்
மந்தமுழவந்தருவிழாவொலியுமவேதச்
சந்தமலிவீப்பொழின்முழங்கியநள்ளாறே. (கo)

ஆடலரவார்சடையனுயிழைதனோடுங்
காடுமலிவெய்திடவிருந்தவனள்ளாற்றை
மாடமலிகாழிவளர்பந்தனதுசெஞ்சொற்
பாடலுடையாரையடையாபழிகளையே.

திருச்சிற்றம்பலம்.

EFEO_TVG_149-127 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருப்பழுவூர் - திருவிராகம் - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

முத்தன்மிகுமூவிலைகல்வேலன்விரிநூல
னத்தனெமையாளுடையவண்ணலிடமென்பர்
மைத்தழைபெரும்பொழிலின்வாசமதுவீசப்
பத்தரொடுசித்தர்பயில்கின்றபழுவூரே. (க)

கோடலொடுகோங்கவைகுலாவுமுடிதன்மே
லாடரவம்வைத்தபெருமானதிடமென்பர்
மாடமலிசூளிகையிலேறிமடவார்கள்
பாடலொலிசெய்யமலிகின்றபழுவூரே. (உ)

வரலியபுரத்திலவர்வேவவிழிசெய்த
போலியவொருத்தர்புரிநூலரிடமென்பர்
வேலியின்விரைக்கமலமன்னமுகமாதர்
பாலெனமிழற்றிநடமாடுபழுவூரே. (ங)

எண்ணுமொருமூத்துமிசையின்கிளவிதேர்வார்
கண்ணுமுதலாயகடவுட்கிடமதென்பர்
மண்ணின்மிசையாடிமலியாளர்தொழுதேத்திப்
பண்ணினிலிகொண்டுபயில்கின்றபழுவூரே. (ச)

சாதல்புரிவார்சுடலைதன்னினடமாடு
நாதனமையாளுடையநம்பனிடமென்பர்
வேதமொழிசொல்லிமறையாளரிறைவன்றன்
பாதமவையேத்தநிகழ்கின்றபழுவூரே. (ஞ)

மேவியருமும்மதிலும்வெந்தழல்விளைத்து
மாவியரவன்றுரிசெய்மைந்தனிடமென்பர்
பூவையைமடந்தையர்கள்கொண்டுபுகழ்சொல்லிப்
பாவையர்கள்கற்பொடுபொலிந்தபழுவூரே. (ட)

மந்தணமிருந்துபுரிமாமடிதன்வேள்வி
சிந்தவிளையாடுசிவலோகனிடமென்ப
ரந்தணர்களாகுதியிலிட்டவகின்மட்டார்
பைந்தொடிநன்மாதர்சுவடொற்றுபழுவூரே. (எ)

உரக்கடல்விடத்தினைமிடற்றிலுறவைத்தன்
றரக்கனையடர்த்தருளுமப்பனிடமென்பர்
குரக்கினம்விரைப்பொழிலின்மீதுகனியுண்டு
பரக்குமுணர்ச்செய்விளையாடுபழுவூரே. (அ)

நின்றகெடுமாலுமொருநான்முகனுமேட
வன்றுதழலாய்நிமிருமாதியிடமென்ப
ரொன்றுமிருமூன்றுமொருகாலுமுணர்வார்கண்
மன்றினிலிருக்குடன்மகிழ்ந்தபழுவூரே. (கூ)

மொட்டையமணுதர்துகின்மூடுவிரிதேரர்
முட்டைகண்மொழிந்தமுனிவான்றனிடமென்பர்
மட்டைமலிதாழையிளநீர்திசைபூகம்
பட்டையொடுதாழ்விரிகின்றபழுவூரே. (கo)

அந்தணர்களானமலியாளரவர்போற்றும்
பந்தமலிகின்றபழுவூரரனையாரச
ந்தமிகுஞானசம்பந்தனுரைபேணி
வந்தவணமேத்துமவர்வானமுடையாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வடவனேசுரர் - தேவியார் - அருந்தவகாயகியம்மை.

திருக்குரங்காடுதுறை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

பரவக்கெடும்வல்வினைபாரிடஞ்சூழ
விரவிற்புறங்காட்டிடைநின்றெரியாடி
யரவச்சடையந்தணன்மேயவழகார்
குரவப்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (க)

விண்டார்புரமூன்றுமெரித்தவிமல
னிண்டார்புறங்காட்டிடைநின்றெரியாடி
வண்டார்சருமென்குழன்மங்கையோர்பாகங்
கொண்டானகர்போல்குரங்காடுதுறையே. (உ)

நிறைவில்புறங்காட்டிடைநேரிழையோடு
மிறைவில்லெரியான்முழுவேந்திநின்றாடி
மறையின்னொலிவானவர்தானவரேத்துங்
குறைவில்லவனூர்குரங்காடுதுறையே. (ங)

விழிக்குந்தன்மேலொருவெண்பிறைசூடித்
தெழிக்கும்புறங்காட்டிடைச்சேர்ந்தெரியாடிப்
பழிக்கும்பரிசேபலிதேர்ந்தவனூர்போன்
கொழிக்கும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (ச)

நீரூர்தருமேனியனெற்றியோர்கண்ண
னேரூர்கொடியெம்மிறையீண்டெரியாடி

EFEO_TVG_149-128 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

யாழூர்சடையந்தணனுயிழைபாலோர்
கூழுனகர்போல்குரங்காடுதுறையே. (நி)

கனிரும்மலர்க்கொன்றையுநாறுகரந்தைத்
துளிருஞ்சுலவிச்சுடுகாட்டெரியாடி
மிளிரும்மரவார்த்தவன்மேவியகோயில்
குளிரும்புனல்சூழ்குரங்காடுதுறையே. (கூ)

பழகும்வினைதீர்ப்பவன்பார்ப்பதியோடும்
முழவங்குமுன்மொந்தைமுழங்கெரியாடும்
மழகன்னபின்மூவிலைவேல்வலனேந்தும்
குழகன்னகர்போல்குரங்காடுதுறையே. (எ)

வரையார்த்தெடுத்தவரக்கன்வலியொல்க
நிரையார்விரலானெரித்திட்டவனூராங்
கரையார்ந்திழிகாவிரிக்கோலக்கரைமேற்
குரையார்பொழில்சூழ்குரங்காடுதுறையே. (அ)

நெடியானொடுநான்முகனுங்நினைவொண்ணாப்
படியாகியபண்டங்கனின்றெரியாடி
செடியார்தலையேந்தியசெங்கண்வெள்ளேற்றின்
கொடியானகர்போல்குரங்காடுதுறையே. (கூ)

துவராடையர்வேடமலாச்சமண்கையர்
கவர்வாய்மொழிகாதல்செய்யாதவனூரா
நவையார்மணிபொன்னலில்சந்தனமுந்திக்
குவையார்கரைசேர்குரங்காடுதுறையே. (கo)

நல்லார்பயில்காழியுண்ஞானசம்பந்தன்
கொல்லேறுடையான்குரங்காடுதுறைமேற்
சொல்லார்தமிழ்மாலைபத்துந்தொழுதேத்த
வல்லாரவர்வானவரோடுறைவாரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - குலவணங்குகாதர் - தேவியார் - அழகுசடைமுடியம்மை.

திரு இரும்பூளை - வினவுரை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சீரார்கழலேதொழுவீரிதுசெப்பீர்
வாரார்முலைமங்கையொடும்முடனே
யேராரிரும்பூளையிடங்கொண்டவீசன்
காரார்கடனஞ்சமுதுண்டகருத்தே. (க)

தொழலார்கழலேதொழுதொண்டர்கள்சொல்லீர்
குழலார்மொழிக்கோல்வளையோடுடனே

யெழிலாரிரும்பூளையிடங்கொண்டவீசன்
கழலுன்கரிகானிடையாடுகருத்தே. (உ)

அன்பாலடிகைதொழுவீரறியீரோ
மின்போன்மருங்குன்மடவாளொடுமேவி
யின்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
பொன்போற்சடையிற்புனல்வைத்தபொருளே. (ங)

நச்சித்தொழுவீர்நுமக்கிதுசொல்லீர்
கச்சிப்பொலிகாமக்கொடியுடன்கூடி
யிச்சித்திரும்பூளையிடங்கொண்டவீச
னுச்சித்தலையிற்பலிகொண்டுழலூனே. (ச)

சுற்றுராந்தடியேதொழுவீரிதுசொல்லீர்
நற்றுழ்குழனங்கையொடும்முடனே
யெற்றேயிரும்பூளையிடங்கொண்டவீசன்
புற்றுடரவோடென்புபூண்டபொருளே. (ஞ)

தோடார்மலர்தூய்த்தொழுதொண்டர்கள்சொல்லீர்
சேடார்குழற்சேயிழையோடுடனே
யிடாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
காடார்கடுவேடுவனுனகருத்தே. (ஞ-எ)

ஓருக்கும்மனத்தன்பருள்ளீரிதுசொல்லீர்
பருக்கைமதவேழமுரித்துமையோடு
மிருக்கையிரும்பூளையிடங்கொண்டவீச
னரக்கன்னுரந்தீர்த்தருளாக்கியவாறே. (அ)

துயராயினநீங்கித்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
கயலார்கருங்கண்ணியொடும்முடனே
யியல்பாயிரும்பூளையிடங்கொண்டவீசன்
முயலவாரிருவாக்கெரியாகியமொய்ம்பே. (கூ)

துணைகல்மலர்தூய்த்தொழுந்தொண்டர்கள்சொல்லீர்
பணைமென்முலைப்பார்ப்பதியோடுடனே
யிணையில்லிரும்பூளையிடங்கொண்டவீச
னணைவில்சமணச்சாக்கியமாக்கியவாறே. (கo)

எந்தையிரும்பூளையிடங்கொண்டவீசன்
சந்தம்பயில்சண்பையுண்ஞானசம்பந்தன்
செந்தண்டமிழ்செப்பியபத்திவைவல்லார்
பந்தம்மறுத்தேங்குவர்பான்மையினாலே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - காயாரண்ணியேசுவரர் - தேவியார் - ஏலவார்குழலம்மை.

EFEO_TVG_149-129 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருமறைக்காடு - கதவடைக்கப்பாடியது - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

சதுரம்மறைதான்முதிசெய்துவணங்கும்
மதுரம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
விதுநன்கிறைவைத்தருள்செய்தவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (க)

சங்கந்தரளம்மவைதான்கரைக்கெற்றும்
வங்கக்கடல்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
மங்கையுமைபாகமுமாகவிதென்கொல்
கங்கைசடைமேலடைவித்தகருத்தே. (உ)

சுரவங்குருக்கத்திகள்புன்னகண்ணாழன்
மருவும்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
சிரமும்மலருந்திகழ்செஞ்சடைதன்மே
லரவம்மதியோடடைவித்தவழகே. (ங)

படர்செம்பவளத்தொடுபன்மலர்முத்தம்
மடலம்பொழில்சூழ்மறைக்காட்டுறைமைந்தா
வுடலம்முமைபங்கமதாகியுமென்கொல்
கடனஞ்சமுதாவதுவுண்டகருத்தே. (ச)

வானோர்மறைமாதவத்தோர்வழிபட்ட
தேனார்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா
வேனோர்தொழுதேத்தவிருந்தீயென்கொல்
கானார்கடிவேடுவனாகருத்தே. (ஞ)

பலகாலங்கள்வேதங்கள்பாதங்கள்போற்றி
மலரால்வழிபாடுசெய்மாமறைக்காடா
வுலகேழுடையாயகடைதோறுமுன்னென்கொ
றலைசேர்பலிகொண்டதிலுண்டதுதானே. (ட)

வேலாவலயத்தயலேமிளிர்வெய்துஞ்
சேலார்திருமாமறைக்காட்டுறைசெல்வா
மாலோடயனிந்திரனஞ்சமுனென்கொல்
காலார்சிலைக்காமனைக்காய்ந்தகருத்தே. (ண)

கலங்கொள்கடலோதமுலாவுகரைமேல்
வலங்கொள்பவர்வாழ்த்திசைக்கும்மறைக்காடா
விலங்கையுடையானடர்ப்பட்டிடரெய்த
வலங்கல்விரலூன்றிபருள்செய்தவாறே. (அ)

கோனென்றுபல்கோடியுருத்திரர்போற்றுந்
தேனம்பொழில்சூழ்மறைக்காட்டுறைசெல்வா

வேனங்கமுகானவருன்னைமுனென்கொல்
வானந்தலைமண்டியுங்கண்டிலாவாறே. (கூ)

வேதம்பலவோமம்வியந்தடிபோற்ற
வோதம்முலவும்மறைக்காட்டிலுறைவா
யேதில்சமண்சாக்கியர்வாக்கிலையென்கொ
லாதரொடுதாமலர்தூற்றிபவாறே. (கூ)

காழிங்கராண்கலிஞானசம்பந்தன்
வாழிம்மறைக்காடனைவாய்ந்தறிவித்த
வேழின்னிசைமாலையிரைத்திவைவல்லார்
வாழியுலகோர்தொழவானடைவாறே. (கஅ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்தலுங்கியமஞ்செய்துநீர்மலர்தூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவன்கோயின்
மத்தகபானையின்கோடும்வெண்பிளியும்வாரித்
தத்துநீர்ப்பொன்னிசாகரமேவுசாய்க்காடே. (க)

பண்டலைக்கொண்டுபூதங்கள்பாடின்றூடும்
வெண்டலைக்கருங்காடுறைவதியன்கோயில்
கொண்டலைத்திகழ்பேரிழுங்கக்சூலாவித்
தண்டலைத்தடமாமயிலாடுசாய்க்காடே. (உ)

நாறுகூவிளநாகிளவெண்மதியத்தோ
டாறுசூடுமமரர்பிரானுறைகோயி
லூறுதேங்கனிமாங்கனியோங்கியசோலைத்
தாறுதண்கதலிப்புதன்மேவுசாய்க்காடே. (ங)

வரங்கள்வண்புகழ்மன்னியவெந்தைமருவார்
புரங்கண்மூன்றும்பொடிபடவெய்தவன்கோயி
லிரங்கலோசையுமீட்டியர்சாத்தொடுமீண்டித்
தரங்கநீள்கழித்தண்கரைவைகுசாய்க்காடே. (ச)

ழைமாதர்கடைதோறுமிடபலிக்கென்று
கூழைவாளரவாட்டும்பிரானுறைகோயின்
மாழையொண்கண்வளைக்கைதுளைச்சியர்வண்டூ
தாழைவெண்மடற்கொய்துகொண்டாடுசாய்க்காடே. (ஞ)

தங்கவானவர்சூழ்கடற்சங்கடைபோதி
லங்கோர்நீழலளித்தவெம்மானுறைகோயில்

EFEO_TVG_149-130 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வங்கமங்கொளிரிப்பியுமுத்துமாழணியுஞ்
சங்கும்வாரித்தடங்கடலுந்துசாய்க்காடே. (சு)

வேதகாவினர்வெண்பளிங்கின்குழைக்காத
ரோதநஞ்சணிகண்டருகந்துறைகோயின்
மாதர்வண்டுதன்காதல்வண்டாடியபுன்னைத்
தாதுகண்டுபொழிலின்மறைந்தூடுசாய்க்காடே. (எ)

இருக்குநீள்வரைபற்றியடர்த்தன்றெடுத்த
வரக்கனகெரித்தருள்செய்தவன்கோயின
மருக்குலாவியமல்லிகைசெண்பகம்வண்பூங்
தருக்குலாவியதண்பொழினீடுசாய்க்காடே. (அ)

மாலினோடயன்காண்டற்கரியவர்வாய்ந்த
வேலையார்விடமுண்டவர்மேவியகோயில்
சேலினேர்விழியார்மயிலாலச்செருந்தி
காலியேகனகம்மலர்கின்றசாய்க்காடே. (கூ)

ஊத்தைவாய்ச்சமண்கையர்கள்சாக்கியர்க்கென்று
மாத்தமாகவறிவரிதாயவன்கோயில்
வாய்த்தமாளிகைசூழ்தருவண்புகார்மாடே
பூத்தவாவிகள்சூழ்ந்துபொலிந்தசாய்க்காடே. (கo)

ஏனையோர்புகழ்ந்தேத்திபவெந்தைசாய்க்காட்டை
ஞானசம்பந்தனகாழியர்கோனவில்பத்து
மூனமின்றியுரைசெய்யவல்லவர்தாம்போய்
வானநாடினிதாள்வரிம்மானிலத்தோரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுயம்புவனேசுவரர் - தேவியார் - குயிலுமானமொழியம்மை.

திருக்கேதாரக்கோவை - பண் - இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

ஆரூர்தில்லையம்பலம்வல்லம்நல்லம் - வடகச்சியுமச்சிறுபாக்கநல்ல, கூரூர்குடவாயில்குடந்தைவெண்ணி - கடல்சூழ்கழிப்பாலிதென்கோடிபீடார், நீரூர்வயலின்றிபூர்குன்றியூருங் - குருகாவையூர்காழையூர்நீடுகானப், பேரூர்கன்னீள்வயனெய்த்தானமும் - பிதற்றுயபிறைசூடிதன்பேரிடமே. (க)

அண்ணாமலையிங்கோயுமத்திமுத்தா - றகலாமுதுகுன்றங்கொடுங்குன்றமூங், கண்ணார்கழுக்குன்றங்கயிலைகோணம் பயில்கற்குடிகாளத்திவாட்போக்கியும், பண்ணார்மொழிமங்கையோர்பங்குடையான் - பரங்குன்றம்பருப்பதம்பேணினின்றே, யெண்ணாயிரவும்பகலு-மிடும்பைக்கடனீந்தலாங்காரணமே.

அட்டானமென்றேதியநாலிரண்டு - மழகாவுறைகாவனைத்துந்துறைக, ளெட்டாந்திருமூர்த்தியின்காடொன்பதுங் - குளமூன்றுங்களமஞ்சும்பாடி நான்கு, மட்டார்குழலாண்மலைமங்கைபங்கன் - மதிக்குமிடமாகியபாழிமூன்றுஞ், சிட்டானவன்பாருரென்றேவிரும்பா - யரும்பாவங்களாயினதேய்ந்தறுமே. (கூ)

அறப்பள்ளியகத்தியான்பள்ளிவெள்ளைப் - பொடிப்பூசிறணிவானமர் காட்டுப்பள்ளி, சிறப்பள்ளிசிராப்பள்ளிசெம்பொன்பள்ளி - திருநனிபள்ளி சிர்மயேந்திரத்துப், பிறப்பில்லவன்பள்ளிவெள்ளைச்சடையான் - விரும்புமிடைப்பள்ளிவண்சக்கரமா, றுறைப்பாலடிபோற்றக்கொடுத்தபள்ளி - யுணராய்மடநெஞ்சமேபுன்னிகின்றே. (ச)

ஆறைவடமாகறலம்பரையா - றணியார்பெருவேளூர்விளமர்தெங்கூர் சேறைதுலைபுகலூரகலாதிவை - காதலித்தானவன்சேர்பதியே. (ஞ)

மனவஞ்சர்மற்றோடமுன்மாதராரு-மதிகூர்திருக்கூடலிலாலவாயு மினவஞ்சொலிலாவிடைமாமருது - மிரும்பைப்பதிமாகாளம்வெற்றியூருங் கனமஞ்சினமால்விடையான்விரும்புங் - கருகாவூர்நல்லூர்பெரும்புலியூர் தனமென்சொலிற்றஞ்சமென்றேநினைமின் - றவமாமலமாயினதானறுமே. (சு)

மாட்டூர்மடப்பாச்சிலாச்சிராமம் - முண்டீச்சரம்வாதவூர்வாரணாசி, காட்டூர்கடம்பூர்படம்பக்கங்கொட்டுங் - கடலொற்றியூர்மற்றுறையூரவையுங், கோட்டூர்திருவாமாத்தூர்கோழம்பமுங் - கொடுங்கோவலூர்திருக்குணவாயில் (எ)

குலாவுதிங்கட்சடையான்குளிரும்பருதியமம்,
போற்றுராடியார்வழிபாடொழியாத்தென் - புறம்பயம்பூவணம்பூழியூரும், காற்றூர்வையன்றெடுத்தான்முடிதோ - னெரித்தானுறைகோயிலென்றென்றுநீகருதே. (அ)

நெற்குன்றமோத்தூர்நிறைநீர்மருக - னெடுவாயில்குறும்பலாநீடுதிரு, நற்குன்றம்வலம்புரநரகேச்சர - னளிர்சோலையுஞ்சேனைமாகாளம்வாய்மூர், கற்குன்றமொன்றேந்திமழைதடுத்த - கடல்வண்ணனுமாமலரோனுங்காணாச், சொற்கென்றுந்தொலிவிலாதானுறையுங் - குடமூக்கென்றுசொல்லிக்குலாவுமினே. (கூ)

குத்தங்குடிவேதிகுடிபுனல்சூழ் - சூருந்தங்குடிதேவன்குடிமருவு மத்தங்குடிதண்டிருவண்குடியு - மலம்புஞ்சலந்தண்சடைவைத்தகந்த நித்தனிமலனுமையோடுங்கூட - நெடுங்காலமுறைவிடமென்றுசொல்லாப் புத்தர்புறங்கூறியபுன்சமணர்-நெடும்பொய்கலிவிட்டுநினைந்துய்ம்மினே (கo)

அம்மானையருந்தவமாகின்ற-வமரர்பெருமானதியானவனனிக்,கொய் ம்மாமலர்ச்சோலைசூலாவுகொச்சைக்-கிறைவன்சிவஞானசம்பந்தன்சொன்ன,

EFEO_TVG_149-131 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விம்மாலியிரைத்துமிருலத்தி லிரவுழ்வகலுங்கினங்தேத்திநின்று, விம்மாவெ
ருவாவிரும்பும்மடியார்-வியார்பிரியார்சென்சேவடிக்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இ - வதில் - இரண்சரணமும், எ - வதில் - மூன்றுசரணமும், அ - வதில் - இரண்டரைசரணமும் இருக்கின்றன.

குன்றியூர் - இடைப்பள்ளி - மாட்டேர் - வாதவூர் - வாரணாசி - கோட்டேர் - குணவாயில் - கொருகுன்றம் - சற்குன்றம் - கெடிலவாயில் - உஞ்சேனமாகாளம் - குக்குடாசலம் - குருந்தவன்குடி - மத்தவன்குடி - திருவன்குடி - இவைகட்குத் தனித்தனி தேவாரமில்லாமையால் வைப்புத்தலமென்றுசொல்லப்படும்.

திருப்பிரமபுரம் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

எம்பிரானெனக்கமுதமாவானுந்தன்னடைந்தார்
தம்பிரானுவானுந்தமுலகேழுந்தகையானும்
கம்பமாகரியுரித்தகாபாலிகறைக்கண்டன்
வம்புலாம்பொழிற்பிரமபுரத்துறையும்வானவனே. (க)

தாமென்றுமனந்தளராத்தருகியாயுலகத்துந்
காமென்றுசரண்புகுந்தார்தமைக்காக்குங்கருணையி
னேமென்றுமறையில்வார்பிரமபுரத்துறைகின்ற
காமன்றனுடலெரியக்கனல்சேர்ந்தகண்ணானே. (உ)

நன்னெஞ்சேயுனையிரந்தேதனம்பெருமான்றிருவடியே
யுன்னெஞ்செய்திருகண்டாயுய்வதனேவேண்டுதியே
லன்னஞ்சேர்பிரமபுரத்தாரமுதையெப்போதும்
பன்னுஞ்சிர்வாயதுவேபார்க்கண்ணேபரிந்திடவே. (ங)

சாகாவின்றிம்மனமேசங்கைதனைத்தவிர்ப்பிக்கும்
கோணுஞ்திருவடிக்கேகொழுமலர்தூவெத்தனையுந்
தேனுலும்பொழிற்பிரமபுரத்துறையுந்தீவணனே
நாகாளுநன்னியமஞ்செய்தவன்சிர்வின்றேத்தே. (ச)

கண்ணுதலான்வெண்ணீற்றான்கமழ்சடையான்விடையேறி
பெண்ணினமாமுருவத்தான்பிஞ்ஞகன்பேர்பலவுடையான்
விண்ணுதலாய்த்தோன்றியசிர்ப்பிரமபுரந்தொழவிரும்பி
யெண்ணுதலாஞ்செல்வத்தையியல்பாகவுறிந்தோமே. (டு)

எங்கெனுமியாதாகிப்பிறந்திடினுந்தன்னடியார்க்
கிங்கேயென்றருள்புரியுமெம்பெருமானெருதேறிக்
கொங்கேயுமலர்ச்சோலைக்குளிர்பிரமபுரத்துறையுஞ்
சங்கேயொத்தொளிர்மேனிச்சங்கரன்றன்றன்மைகளே. (சு)

சிலையதுவெஞ்சிலையாகத்திரிபுரமூன்றெரிசெய்த
விலைநுனைவேற்றடக்கையனேந்திழையாளொருகூற
னலைபுனல்சூழ்பிரமபுரத்தருமணியையடிபணிந்தா
னிலையுடையபெருஞ்செல்வமீடுகிற்பெறலாமே. (எ)

எரித்தமயிர்வாளரக்கன்வெற்பெடுக்கத்தோளொடுதா
ளெரித்தருளுஞ்சிவமூர்த்திகீறணிந்தமேனியனு
ளுரித்தவரித்தோலுடையானுறைபிரமபுரந்தன்னைத்
தரித்தமனமெப்போதும்பெறுவார்தாந்தக்காரே. (அ)

கரியானுநான்முகனுங்காணுமைக்கனலுருவா
யரியானும்பரமேட்டியரவஞ்சேரகலித்தான்
றெரியாதானிருந்துறையுந்திகழ்பிரமபுரஞ்சேர
வுரியார்தாமேழுலகுமுடனுளவுரியாரே. (கூ)

உடையிலார்சிவரத்தார்தன்பெருமையுணர்வரியான்
முடையிலார்வெண்டலைக்கைமூர்த்தியாந்திருவுருவன்
பெடையிலார்வண்டாடும்பொழிற்பிரமபுரத்துறையுஞ்
சடையிலார்வெண்பிறையான்றாள்பணிவார்தக்காரே. (கo)

தன்னடைந்தார்க்கின்பங்கடருவானேத்தத்துவனைக்
கன்னடைந்தமதிற்பிரமபுரத்துறையுங்காவலனை
முன்னடைந்தான்சம்பந்தன்மொழிபத்துமிவைவல்லார்
பொன்னடைந்தார்போகங்கள்பலவடைந்தார்புண்ணியரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சாய்க்காடு - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிலாயார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடமெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. (க)

போய்க்காடேம்றைந்துறைதல்புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாகவுடையானுமிடையானும்
வாய்க்காடுமுதுமரமேயிடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும்பெரியோர்கள்பெருமானே. (உ)

நாகாளுநன்னெஞ்சேநினகண்டாயாரறிவார்
சாகாளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூகாளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாகாளுநவின்றேத்தப்பெறலாமேலவினையே. (ங)

EFEO_TVG_149-132 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கட்டலர்த்தமலர்தூவிக்கைதொழுமின்பொன்னியன்ற
தட்டலர்த்தபூஞ்செருந்திகோங்கமருந்தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்ததடந்தாழைமுருகுயிர்க்குங்காவிரிப்பூம்
பட்டினத்துச்சாய்க்காட்டெம்பரமேட்டிபாதமே. (ச)

கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையைப்
பாங்கென்னவைத்துகந்தான்படர்சடைமேற்பான்மதியந்
தாங்கினன்பூம்புகார்ச்சாய்க்காட்டான்முணிழற்கீ
ழோங்கினரோங்கினரெனவுரைக்குமுலகமே. (டு)

சாந்தாகநீறணிந்தான்சாய்க்காட்டான்காமனைமுன்
நீந்தாகமெரிகொளுவச்செற்றுகந்தான்றிருமுடிமே
லோய்ந்தாரமதிசூடியொளிதிகழ்மூமலைமகடோ
டோய்ந்தாகம்பாகமாவுடையானும்விடையானே. (கூ)

மங்குலேய்மணிமாடமதிதவழுகெடிலவீரச்
சங்கெலாங்கணைபொருதுதிரைபுலம்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவிவண்டினிசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே. (எ)

தொடலரியதொருகணையாற்புரமூன்றுமெரியுண்ணப்
படவரவத்தெழிலாரம்பூண்டான்பண்டரக்கனையுந்
தடைவரையாற்றடைவரைத்தோளுன்றினன்சாய்க்காட்டை
யிடவகையாலடைவோமென்றெண்ணுவார்க்கிடரிலையே. (அ)

வையமேற்றனுமலருறையுநான்முகனு
மையன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானே
தெய்வமாப்பேணுதார்தெளிவுடைமைதேறுமே. (க)

குறங்காட்டுநால்விரற்கோவணத்துக்கோலோவிப்போ
யுறங்காட்டுஞ்சமணருஞ்சாக்கியருமலர்தூற்றுந்
திறங்காட்டல்கேளாதேதெளிவுடையீர்சென்றடைமின்
புறங்காட்டிலாடலான்பூம்புகார்ச்சாய்க்காடே. (கo)

கொம்பைந்துபுடைத்தொல்குதூபுரஞ்சேர்மெல்லடியா
ரம்பந்தும்வரிக்கழலுமரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்தினையு
மெம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஆக்கூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

அக்கிருந்தவாரமுமாட்டரவுமாமையுந்
தொக்கிருந்தமார்பினன்றேலுடையான்வெண்ணீற்றன்
புக்கிருந்தறைகோயில்பொய்யிலாமெய்கெறிக்கே
தக்கிருந்தாராக்கூற்றன்றேன்றிமாடமே. (க)

நீராரவார்சடையானீருடையானேறுடையான்
காராரும்பூங்கொன்றையினன்காதலித்ததோல்கோயில்
கூராரல்வாய்கிறையக்கொண்டயலேகோட்டகத்திற்
றாராமாடாக்கூற்றன்றேன்றிமாடமே. (உ)

வாளார்கண்செந்துவர்வாய்மாமலையான்றன்மடந்தை
தோளாகம்பாகமாப்புல்கினன்றெல்கோயில்
வேளாளரென்றவர்கள்வள்ளன்மையான்மிக்கிருக்குந்
தாளாளராக்கூற்றன்றேன்றிமாடமே. (ங)

கொங்குசேர்தண்கொன்றைமாலையினன்கூற்றடரப்
பொங்கினன்பொங்கொளிசேர்வெண்ணீற்றன்பூங்கோயி
லங்கமாறேமெருமறைகளேவேள்வி
தங்கினராக்கூற்றன்றேன்றிமாடமே. (ச)

வீக்கினனுடரவம்வீந்தழிந்தார்வெண்டலையென்
பாக்கினன்பலகலன்களாதரித்துப்பாகம்பெ
ணூக்கினன்றெல்கோயிலாம்பலம்பூம்பொய்கைபுடைத்
தாக்கினராக்கூற்றன்றேன்றிமாடமே. (டு)

பண்ணெளிசேர்நான்மறையான்பாடலினோடாடலினன்
கண்ணெளிசேர்நெற்றியினன்காதலித்ததோல்கோயில்
விண்ணெளிசேர்மாமதியந்தீண்டியகால்வெண்மாடந்
தண்ணெளிசேராக்கூற்றன்றேன்றிமாடமே. (கூ)

வீங்கினர்மும்மதிலும்வில்வையால்வெந்தவிய
வாங்கினர்வானவர்கள்வந்திறைஞ்சுந்தோல்கோயில்
பாங்கினர்நான்மறையோடாறங்கம்பலகலைக
டாங்கினராக்கூற்றன்றேன்றிமாடமே. (எ)

கன்னெடியகுன்றெடுத்தான்றேரடரக்காலூன்றி
யின்னருளாலாட்கொண்டவெம்பெருமான்றெல்கோயில்
பொன்னடிக்கேகாடோறும்பூவோடுநீர்சுமக்குந்
தன்னடியாராக்கூற்றன்றேன்றிமாடமே. (அ)

நன்மையராநாரணனுநான்முகனுங்காண்பரிய
தொன்மையான்றேற்றங்கேடில்லாதான்றெல்கோயி

EFEO_TVG_149-133 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

லின்மையாற்சென்றிரந்தார்க்கில்லையென்னுந்துவக்குந்
தன்மையாராக்கூரிற்றுன்றுன்றிமாடமே. (கூ)

நாமருவுபுன்மைகவிற்றச்சமண்டேரர்
பூமருவுகொன்றையினன்புக்கமருந்தொல்கோயில்
சேன்மருவுபங்கயத்துச்செங்கழுநீர்பைங்குவளை
தாமருவுமாக்கூரிற்றுன்றுன்றிமாடமே. (கo)

ஆட்டமர்ந்தானையாக்கூரிற்றுன்றுன்றி
மாட்டமர்ந்தானைமாடஞ்சேர்தண்காழி
நாட்கரியசீர்ஞானசம்பந்தன்சொற்
பாட்டிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுயம்புநாதேசுவரர் - தேவியார் - கட்கநேத்திரவம்மை.

திருப்புள்ளிருக்கும்வேளூர் - பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளார்ந்தபூங்கொன்றைமதமத்தங்கதிர்மதிய
முள்ளார்ந்தசடைமுடியெம்பெருமானுறையுமிடம்
தள்ளாயசம்பாதிசடாயென்பார்தாமிருவர்
புள்ளானர்க்கரையனிடம்புள்ளிருக்கும்வேளூரே. (க)

தையலாளொருபாகஞ்சடைமேலாளவளோடு
மையந்தேர்ந்துழல்வானேரந்தணருறையுமிட
மெய்செல்லாவிராவணனேமேலோடியிடழித்துப்
பொய்சொல்லாதுயிர்போனுன்புள்ளிருக்கும்வேளூரே. (உ)

வாசநலஞ்செய்திமையோர்நாடோறுமலர்தூவ
வீசனெம்பெருமானுரினிதாகவுறையுமிடம்
யோசனைபோய்ப்பூக்கொணர்ந்தங்கொருநாளுமொழியாமே
பூசனைசெய்தினிதிருந்தான்புள்ளிருக்கும்வேளூரே. (ங)

மாகாயம்பெரியதொருமானுரித்தோலுடையாடை
யேகாயமிட்டுகந்தவெரியாடியுறையுமிட
மாகாயந்தேரோடுமிராவணனேயமின்கட்
போகாமேபொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே. (ச)

கீதத்தைமிகப்பாடுமடியார்கள்குடியாகப்
பாதத்தைத்தொழுன்றபரஞ்சோதிபயிலுமிடம்
வேதத்தின்மந்திரத்தால்வெண்மணலேசிவமாகப்
போதத்தால்வழிபட்டான்புள்ளிருக்கும்வேளூரே. (ஞ)

திறங்கொண்டவடியார்மேற்றீவினைநோய்வாராமே
யறங்கொண்டுசிவதன்மமுரைத்தபிரானமருமிட
மறங்கொண்டங்கிராவணன்றன்வலிகருதிவந்தானைப்
புறங்கண்டசடாயென்பான்புள்ளிருக்கும்வேளூரே. (சு)

அத்தியினீருரிமூடிவழகாகவனலேந்திப்
பித்தனைப்போல்பலிதிரியும்பெருமானுர்பேணுமிடம்
பத்தியினல்வழிபட்டுப்பலகாலந்தவஞ்செய்து
புத்தியொன்றவைத்திருந்தான்புள்ளிருக்கும்வேளூரே. (எ)

பண்ணொன்றவிசைபாடுமடியார்கள்குடியாக
மண்ணின்றிவிண்கொடுக்கும்மணிகண்டன்மருவுமிட
மெண்ணின்றிமுக்கோடிவாணுளதுடையானைப்
புண்ணொன்றப்பொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே. (அ)

வேதித்தார்புரமூன்றும்வெங்கணையால்வெந்தவியச்
சாதித்தவில்லாளிகண்ணுளன்சாருமிட
மாதித்தன்மகனென்னவகன்ஞாலத்தவரோடும்
போதித்தசடாயென்பான்புள்ளிருக்கும்வேளூரே. (க)

கடித்துவருங்கங்கைதனைக்கமழ்சடையொன்றுடாமே
தடித்தவரெம்பெருமானுர்தாமினிதாயுறையுமிடம்
விடைத்துவருமிலங்கைக்கோன்மலங்கச்சென்றிராமற்காப்
புடைத்தவனைப்பொருதழித்தான்புள்ளிருக்கும்வேளூரே. (கo)

செடியாயவுடற்றீப்பான்தீவினைக்கோர்மருந்தாவான்
பொடியாடிக்கடிமைசெய்தபுள்ளிருக்கும்வேளூரைக்
கடியார்ந்தபொழிற்காழிக்கவுணியன்சம்பந்தன்சொன்
மடியாதுசொல்லவல்லார்க்கில்லையாமறுபிறப்பே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஆமாத்தூர் - பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

துன்னம்பெய்கோவணமுந்தோலுமுடையாடை
பின்னஞ்சடைமேலோர்பிள்ளைமதிசூடி
யன்னஞ்சேர்தண்கானலாமாத்தூரம்மான்றன்
பொன்னங்கழல்பரவாப்பொக்கமும்பொக்கமே. (க)

கைமாவின்றோல்போர்த்தகாவாலிவானுலகின்
மும்மாமதிலெய்தான்முக்கணன்பேர்பாடி
யம்மாமலர்ச்சோலையாமாத்தூரம்மானெம்
பெம்மானென்றேத்தாதார்பேயரிற்பேயரே. (உ)

EFEO_TVG_149-134 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பாம்பரைச்சாத்தியோர்பண்டரங்கன்விண்டதோர்
தேம்பலிளமதியஞ்சூடியசென்னியா
னும்பலம்பூம்பொய்கையாமாத்தூரம்மான்றன்
சாம்பலகலத்தார்சார்பல்லாற்சார்பிலமே. (கூ)

கோணுகப்பேரல்குற்கோல்வளைக்கைமாதராள்
பூணுகம்பாகமாப்புல்கியவளோடு
மாணுகங்காதல்செயாமாத்தூரம்மானைக்
காணுதகண்ணெல்லாங்காணுதகண்களே. (உ)

பாடனெறிகின்றுன்பைங்கொன்றைத்தண்டாரே
சூடனெறிகின்றுன்சூலஞ்சேர்கையினு
னுடனெறிகின்றுனுமாத்தூரம்மான்றன்
வேடனெறிகில்லாவேடமும்வேடமே. (ஙி)

சாமவனைவில்லாகச்சந்தித்தவெங்கணையாற்
காவன்மதிலெய்தான்கண்ணுடைநெற்றியான்
யாவருஞ்சென்றேத்துமாமாத்தூரம்மானத்
தேவர்தலைவணங்குந்தேவர்க்குந்தேவனே. (சு)

மாறுதவெங்கூற்றைமாற்றிமலைமகளை
வேறுகநில்லாதவேடமேகாட்டினு
னூறுதியாடியாமாத்தூரம்மானைக்
கூறுதநாவெல்லாங்கூறுதற்கனே. (எ)

தாளாலரக்கன்றோள்சாய்த்ததலைமகன்ற
னுளாதிரையென்றேநம்பன்றனுமத்தா
லாளானுர்சென்றேத்துமாமாத்தூரம்மானைக்
கேளாச்செவியெல்லாங்கேளாச்செவிகளே. (அ)

புள்ளுங்கமலமுங்கைக்கொண்டார்தாமிருவ
ருள்ளுமவன்பேருமையொப்பளக்குந்தன்மையதே
யள்ளல்விளைகழனியாமாத்தூரம்மானெம்
வள்ளல்கழல்பரவாவாழ்க்கையும்வாழ்க்கையே. (கூ)

பிச்சைபிறர்பெய்யப்பின்சாரக்கோசாரக்
கொச்சைபுலானுறவீரிருவைபோர்த்துகந்தா
னச்சந்தன்மாதேவிக்கீந்தான்றனுமாத்தூர்
நிச்சனினையாதார்நெஞ்சமுநெஞ்சமே. (கo)

ஆடலரவசைத்தவாமாத்தூரம்மானைக்
கோடலிரும்புறவிற்கொச்சைவயத்தலைவ
னுடலரியசிர்ஞானசம்பந்தன்றன்
பாடலிவைவல்லார்க்கில்லையாம்பாவமே. திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-அழகியநாதேசுவரர்-தேவியார்-அழகியநாயகியம்மை.

திருக்கைச்சினம் - பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

தையலோர்கூறுடையான்றண்மதிசேர்செஞ்சடையான்
மையுலாமணிமிடற்றுன்மறைவிளங்குபாடலா
னெய்யுலாமுவிலேவேலேந்திவந்தொளிசேர்
கையுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. (க)

விடமல்குகண்டத்தான்வெள்வளையோர்கூறுடையான்
படமல்குபாம்பரையான்பற்றுர்புரமெரித்தா
னடமல்குமாடலினனன்மறையோர்பாடலினன்
கடமல்குமாவுரியானுறைகோயில்கைச்சினமே. (உ)

பாடலார்நான்மறையான்பைங்கொன்றைபாம்பினுடுஞ்
சூடலான்வெண்மதியந்துன்றுகரந்தையொடு
மாடலானங்கையனலேந்தியாடரவக்
காடலான்மேவியுறைகோயில்கைச்சினமே. (ஙி)

பண்டமரர்கூடிக்கடைந்தபடுகடனஞ்
கண்டபிரானென்றிறைஞ்சியும்பர்தொழுதேத்த
விண்டவர்கடொன்னகரமூன்றுடனேவெந்தவியக்
கண்டபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. (ச)

தேய்ந்தமலிவெண்பிறையான்செய்யதிருமேனியினன்
வாய்ந்திலங்குவெண்ணீற்றுன்மாதினையோர்கூறுடையான்
சாய்ந்தமராவேண்டத்தடங்கட * னஞ்சுண்டனங்கைக
காய்ந்தபிரான்மேவியுறைகோயில்கைச்சினமே. (ஞ)

மங்கையோர்கூறுடையான்மன்னுமறையினு
னங்கையோர்வெண்டலையானுடரவம்பூண்டுகந்தான்
றிங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேற்
கங்கையினன்மேவியுறைகோயில்கைச்சினமே. (சு)

வரியரவேநாணுகமால்வரையேவில்லாக
வெரிகணையான்மூப்புரங்களெய்துகந்தவெம்பெருமான்
பொருசுடலியமப்புறங்காட்டான்போர்த்ததோ
கரியுரியான்மேவியுறைகோயில்கைச்சினமே. (எ)

போதுலவுகொன்றைபுனைந்தான்றிருமுடிமேன்
மாதுமையாளஞ்சமலையெடுத்தவாளரக்க
னீதியினலேத்தநிகழ்வித்துகின்றுகு
காதலினன்மேவியுறைகோயில்கைச்சினமே. (அ)

*நஞ்சுண்டு-அனங்கை எனப்பிரித்து - அனங்கை என்பதனுக்கு-அனங்கனெனப் பொருள்கொள்க.

மண்ணினைமுன்சென்றிரக்தமாஅமறையவனு
மெண்ணரியவண்ணமெரியுருவமாயபிரான்
பண்ணிசையாலேத்தப்படுவான்றன்னெற்றியின்மேற்
கண்ணுடையான்மேவியுறைகோயில்கைச்சினமே. (க-கo)

தண்வயல்சூழ்காழித்தமிழ்ஞானசம்பந்தன்
கண்ணுதலான்மேவியுறைகோயில்கைச்சினத்தைப்
பண்ணிசையாலேத்திப்பயின்றவிவைவல்லார்
விண்ணவராயோங்கியவுலகமாள்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கைச்சினாதர் - தேவியார் - வேல்வளையம்மை.

திருநாலூர்த்திருமயானம் – பண் - சிகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பாலூருமலைப்பாம்பும்பனிமதியுமத்தமு
மேலூருஞ்செஞ்சடையான்வெண்ணூல்சேர்மார்பினு
ளாலூர்மயானத்தும்பான்றனடிநினைந்து
மாலூருஞ்சிந்தையர்பால்வந்தூராமறுபிறப்பே. (க)

சூடும்பிறைச்சென்னிச்சுழ்காடிடமாக
வாடும்பறைசங்கொலியோடழகாக
நாடுஞ்சிறப்போடாநாலூர்மயானத்தைப்
பாடுஞ்சிறப்போர்பாற்பற்றுவாம்பாவமே. (உ)

கல்லாணிழன்மேவிக்காமுறுசிற்நூல்வர்க்கன்
றெல்லாவறனுரையுமின்னருளர்ற்சொல்லினு
னல்லார்தொழுதேத்துநாலூர்மயானத்தைச்
சொல்லாதவெல்லாஞ்சொல்லாதார்தொன்னெறிக்கே. (ஙு)

கோலத்தார்கொன்றையான்கொல்புலித்தோலாடையா
னீலத்தார்கண்டத்தானெற்றியோர்கண்ணினுன்
ஞாலத்தார்சென்றேத்துநாலூர்மயானத்திற்
சூலத்தானென்பார்பாற்சூழாவாந்தொல்வினையே. (ச)

கறையார்மணிமிடற்றுன்காபாலிகட்டங்கன்
பிறையார்வளர்சடையான்பெண்பாகனண்பாய
நறையார்பொழில்புடைசூழ்நாலூர்மயானத்தெம்
மிறையானென்றேத்துவார்க்கெய்துமாமின்பமே. (ஞ)

கண்ணார்நுதலான்கனலாடிடமாகப்
பண்ணார்மறைபாடியாடும்பரஞ்சோதி

நண்ணார்புரமெய்தானூர்மயானத்தை
நண்ணாதவெல்லாநண்ணாதார்நன்னெறியே. (ஙு)

கண்பாவுவேகத்தார்காமனைமுன்காய்ந்துகந்தான்
பெண்பாவுபாகத்தானகத்தோலாகத்தா
னண்பார்குணத்தோர்கணூர்மயானத்தை
யெண்பாவுசிந்தையார்க்கேலாவிடர்தானே. (எ)

பத்துத்தலையோனைப்பாதத்தொருவிரலால்
வைத்துமலையடர்த்துவாளோடுநாள்கொடுத்தா
னத்திருவியோவாநாலூர்மயானத்தெ
னத்தனடிநினைவார்க்கல்லலடையாவே. (அ)

மாலோடுநான்முகனுமேடவளரியாய்
மேலோடுகீழ்காணுமேனமையான்வேதங்க
ளோலோடுமாறங்கநாலூர்மயானத்தெம்
பாலோடுநெய்யாடிபாதம்பணிவோமே. (க)

துன்பரயமாசார்துவராயபோர்வையார்
புன்பேச்சுக்கேளாதேபுண்ணியனைநண்ணுமின்க
ணண்பாற்சிவாயவெனுநாலூர்மயானத்தே
யின்பாயிருந்தானேயேத்துவார்க்கின்பமே. (கo)

ஞாலம்புகழ்காழிஞானசம்பந்தன்ரு
னுமறையோதுநாலூர்மயானத்தைச்
சீலம்புகழாற்சிறந்தேத்தவல்லாருக்
கேலும்புகழ்வானத்தின்பாயிருப்பாரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பலாசவனேசுவரர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

திருமயிலாப்பூர் - பூம்பாவைத்திருப்பதிகம் – பண் - சிகாமரம்

திருச்சிற்றம்பலம்.

மட்டிட்டபுன்னையங்கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டூன்கபாலீச்சரமமர்ந்தா
னெட்டிட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க்
கட்டிட்டல்காணுதேபோதியோபூம்பாவாய. (க)

மைப்பயந்தவொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பயந்தநீற்றுன்கபாலீச்சரமமர்ந்தா
னைப்பசியோணவிழாவமருந்தவர்க
டெய்ப்பனவுங்காணுதேபோதியோபூம்பாவாய. (உ)

வளைக்கைமடநல்லார்மாமயிலைவண்மறுகிற்
குளக்கில்கபாலீச்சரத்தான்றெல்காத்திகைநாட்

EFEO_TVG_149-136 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

டளத்தேந்திளமுலையார்தையலார்கொண்டாடும்
விளக்கீடுகாணுதேபோதியோபூம்பாவாய். (ரு)

ஊர்திரைவேலையுலாவுமுயர்மயிலைக்
கூர்தருவேல்வல்லார்கொற்றங்கொள்சேரிதனிற்
கார்தருசோலைக்கபாலீச்சரமமர்ந்தா
னுதிரைநாள்காணுதேபோதியோபூம்பாவாய். (ச)

மைப்பூசுமொண்கண்மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்முன்கபாலீச்சரமமர்ந்தா
னெய்ப்பூசுமொண்புழுக்கனேரிழையார்கொண்டாடுந்
தைப்பூசங்காணுதேபோதியோபூம்பாவாய். (டு)

மடலார்ந்ததெங்கின்மயிலையார்மாசிக்
கடலாட்டுக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தா
னடலானேறூருமடிகளடிபரவி
நடமாடல்காணுதேபோதியோபூம்பாவாய். (கு)

மலிவிழாவீதிமடநல்லார்மாமயிலைக்
கலிவிழாக்கண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
பலிவிழாப்பாடல்செய்பங்குனியுத்திரநா
ளொலிவிழாக்காணுதேபோதியோபூம்பாவாய். (எ)

தண்ணுவரக்கன்முருள்சாய்த்துகந்ததாளினன்
கண்ணுர்மயிலைக்கபாலீச்சரமமர்ந்தான்
பண்ணுர்பதினெண்கணங்கடம்மட்டமிநாட்
கண்ணுரக்காணுதேபோதியோபூம்பாவாய். (அ)

நற்முமாமலர்மேனன்முகனுநாரணனு
முற்முங்குணர்கிலாமூர்த்திதிருவடியைக்
கற்முர்களேத்துங்கபாலீச்சரமமர்ந்தான்
பொற்முப்புக்காணுதேபோதியோபூம்பாவாய். (கூ)

உரிஞ்சாயவாழ்க்கையமணுடையைப்போர்க்கு
மிருஞ்சாக்கியர்களெடுத்துரைப்பநாட்டிற்
கருஞ்சோலைசூழ்ந்தகபாலீச்சரத்தான்றன்
பெருஞ்சாந்திகாணுதேபோதியோபூம்பாவாய். (கo)

ஞானமார்சோலைக்கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப்பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம்புகழ்ந்தபத்துமவல்லார்
வானசம்பந்தத்தவரோடும்வாழ்வாரே. திருச்சிற்றம்பலம்.

இது - எலும்பு பெண்ணுக்கோதியருளியபதிகம்.
தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-கபாலீசுவரர்-தேவியார்-கற்பகவல்லியம்மை.

திருவெண்காடு - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்காட்டுதலானுங்கனல்காட்டுங்கையானும்
பெண்காட்டுமுருவானும்பிறைகாட்டுஞ்சடையானும்
பண்காட்டுமிசையானும்பயிர்காட்டும்புயலானும்
வெண்காட்டிலுறைவானும்விடைகாட்டுங்கொடியானே. (க)

யேயடையாபிரிவெய்தும்பிள்ளையினோடுள்ளநினை
வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும்
வேயனதோளுமைபங்கன்வெண்காட்டுமுக்குளநீர்
தோய்வினையாரவர்தம்மைத்தோயாவாந்தீவினையே. (உ)

மண்ணுடுநீரனல்காலோடாகாயமதியிரவி
யெண்ணில்வருயிரானனிகரமுமெண்டிசையும்
பெண்ணினொடாண்பெருமையொடுசிறுமையுமாம்பேராளன்
விண்ணவர்கோன்வழிபடவெண்காடிடமாவிரும்பினனே. (ங)

விடமுண்டமிடற்றண்ணல்வெண்காட்டின்றண்புறவின்
மடல்விண்டமுடத்தாழைமலர்நிழலைக்குருகென்று
தடமண்டுதுறைக்கெண்டைதாமரையின்பூமறையக்
கடல்விண்டகதிர்முத்தநகைகாட்டுங்காட்சியதே. (ச)

வேலைமலிதண்கானல்வெண்காட்டான்றிருவடிக்கீழ்
மாலைமலிவண்சாந்தாலவழிபடுநன்மறையவன்றன
மேலடர்வெங்காலனுயிர்விண்டபினைநமன்றூத
ராலமிடற்முனடியாரென்றடரவஞ்சுவரோ. (டு)

தண்மதியும்வெய்யரவுந்தாங்கினஞ்சடையினிட
னெண்மதியதுதலுமையோர்கூறுகந்தானுறைகோயில்
பண்மொழியாலவனுமம்பலவோதப்பசுங்கிள்ளை
வெண்முதில்சேர்கரும்பெணைமேல்வீற்றிருக்கும்வெண்காடே. (சு)

சக்கரமாற்கீந்தானுஞ்சலந்தரனைப்பிளந்தானு
மக்கைமேலசைத்தானுமடைந்தயிராபதம்பணிய
மிக்கதனுக்கருள்சுரக்கும்வெண்காடும்வினைதுரக்கு
முக்குளநன்குடையானுமுக்கணுடையிறையவனே. (எ)

பண்மொய்த்தவின்மொழியாள்பயமெய்தமலியெடுத்த
வுன்மத்தனுரநெரித்தன்றருள்செய்தானுறைகோயில
கண்மொய்த்தகருமஞ்ஞைநடமாடக்கடன்முழங்க
விண்மொய்த்தபொழில்வரிவண்டிசைமுரலுமெவ்வெண்காடே. (அ)

கள்ளார்செங்கமலத்தான்கடற்கிடந்தானெனவிவர்க
ளொள்ளாண்மைகொளற்கோடியுயர்ந்தாழ்ந்துமுணர்வரியான்

EFEO_TVG_149-137 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வெள்ளாணைதவஞ் செய்யுமேதகுவெண்காட்டானென்
றுள்ளாடியுருகாதாருணர்வுடைமையுணரோமே. (கூ)

போதியர்கள்பிண்டியர்கண்மிண்டுமொழிபொருளென்னும்
பேதையர்களவர்பிறிமினறிவுடையீரிதுகேண்மின்
வேதியர்கள்விரும்பியசீர்வியன்றிருவெண்காட்டானென்
றோதியவர்யாதுமொருதீதிலரொன்றுணருமினே. (கo)

தண்பொழில்சூழ்சண்பையர்கோன்றமிழ்ஞானசம்பந்தன்
விண்பொலிவெண்பிறைச்சென்னிவிகிர்தனுறைவெண்காட்டைப்
பண்பொலிசெந்தமிழ்மாலைபாடியபத்திவைவல்லார்
மண்பொலியவாழ்ந்தவர்போய்வான்பொலியப்புகுவாரே. (கக)

திருச்சிறம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சுவேதாரணியேசுவரர்-தேவியார்-பிரமவித்தியாநாயகியம்மை.

சீகாழி - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழிமங்கைமார்பலர்பாடியாடியவோசைகாடொறுங்
கண்ணினேரயலேபொலியுங்கடற்காழிப் [ன்னு
பெண்ணினேரொருபங்குடைப்பெருமானெம்பெருமானென்றென்று
மண்ணலானடியாரருளாலுங்குறைவிலரே. (க)

மொண்டலம்பியவார்திரைக்கடன்மோதிமீதெறிசங்கவங்கமுங்
கண்டலம்புடைசூழ்வயல்சேர்கலிக்காழி
வண்டலம்பியகொன்றையானடிவாழ்த்தியேத்தியுமாந்தர்தம்வினை
விண்டலங்கெளிதாமதுகல்விதியாமே. (உ)

காடெலாமொளியெய்தகலவர்கன்றுமேத்திவணங்குவார்பொழிற்
காடெலாமலர்தேன்றுளிக்குங்கடற்காழித்
தோடுலாவியகாதுளார்சுரிசங்கவெண்குழையரெனென்றுன்னும்
வேடங்கொண்டவர்கள்வினைநீங்கவுற்றாரே. (ங)

மையினார்பொழில்சூழ்நீழலில்வாசமார்மதுமல்கநாடொறுங்
கையினார்மலர்கொண்டெழுவார்கலிக்காழி
யையனேயரனேயென்றுதரித்தோதிநீதியுளேநினைப்பவ
ரெய்யுமாலுலகில்லுயர்ந்தாரினுள்ளாரே. (ச)

மலிகடுந்திரைமேனிமிர்ந்தெதிர்வந்துவந்தொளிராநித்திலம்விழக்
கலிகடிந்தகையாமருவுங்கலிக்காழி
வலியகாலனைவீட்டிமாணிதனின்னுயிரளித்தானைவாழ்த்திட
மெலியுந்தீவினைநோயவைமேவுவர்வீடே. (ஞ)

மற்றுமிவ்வுலகத்துளோர்களும்வானுளோர்களும்வந்துவைகலுங்
கற்றசிந்தையராய்க்கருதுங்கலிக்காழி
நெற்றிமேலமர்கண்ணினானிணைந்திருந்திசைபாடுவார்வினை
செற்றமாந்தரெனத்தெளிமின்கள்சிந்தையுளே. (சு)

தானலம்புரைவேதியரொடுதக்கமாதவர்தாந்தொழப்பயில்
கானலின்விரைசேரவிம்முங்கலிக்காழி
யூனுளாருயிர்வாழ்க்கையாயுறவாகிநின்றவொருவனேயென்
றூனலங்கொடுப்பாருள்வேகதராவாரே. (எ)

மைத்தவண்டெழுசோலையாலைகள்சாலிசேர்வயலாரவைகலுங்
கத்துவார்கடல்சென்றுலவுங்கலிக்காழி
யத்தனேயரனேயரக்கனையன்றடர்த்துகந்தாயுனகழல்
பத்தராய்ப்பரவும்பயனீங்குநல்காயே. (அ)

பருமராமொடுதெங்குபைங்கதலிப்பருங்கனியுண்ணமந்திகள்
கருவராலுகளும்வயல்சூழ்கலிக்காழித்
திருவினாயகனாயமாலொடுசெய்யமாமலர்ச்செல்வனுகிய
விருவர்காண்பரியானெனவேத்துதலின்பமே. (கூ)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரியாதுவண்டுகிலாடைபோர்த்தவர்
கண்டுசேர்கிலராழகார்கலிக்காழித்
தொண்டைவாயுமையோடுங்கூடியவேடனேசுடலைப்பொடியணி
யண்டவாணனென்பார்க்கடையாவல்லரூனே. (கo)

பெயரெனும்மிவைபன்னிரண்டினு முண்டெனப்பெயர்பெற்றவூர்திகழ்
கயலுலாம்வயல்சூழ்ந்தழகார்கலிக்காழி
நயனடன்கழலேத்திவாழ்த்தியஞானசம்பந்தன்செந்தமிழ்மாலை
யுயருமாமொழிவாருலகத்துயர்ந்தாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஆமாத்தூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

குன்றவார்சிலைகாணராவரிவாளிகூரெரிகாற்றின்மும்மதில்
வென்றவாறெங்ஙனேவிடையேறுமேதியனே
தென்றலார்மணிமாடமாளிகைசூளிகைக்கெதிர்நீண்டபெண்ணைமே
லன்றில்வந்தணையுமாமாத்தூரம்மானே. (க)

பரவிவானவர்தானவர்பலருங்கலங்கிடவந்தகார்விடம்
வெருவவுண்டுகந்தவருளென்கொல்விண்ணவனே
கரவின்மாமணிபொன்கொழித்திழிசந்துகாரகிறந்து * பம்பைநீ
ரருவிவந்தலைக்குமாமாத்தூரம்மானே. (உ)

---

* பம்பை என்பது - ஒருநதி.

EFEO_TVG_149-138 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நீண்டவார்சடைதாழநேரிழைபாட்டீறுமெய்பூசிமாலயன்
மாண்டவார்சுடலேநடமாடுமாண்பதுவென்
பூண்டகேழன்மருப்பராவிரிகொன்றைவாள்வரியாமைபூனைன
வாண்டநாயகனேயாமாத்தூரம்மானே. (கூ)

சேலினேரனகண்ணிவெண்ணகைமான்விழித்திருமாதைப்பாகம்வைத்
தேலமாதவநீமுயல்கின்றவேடமிதென்
பாலினேர்மொழிமங்கைமார்நடமாடியின்னிசைபாடீள்பதி
யாலேசூழ்கழனியாமாத்தூரம்மானே. (சு)

தொண்டர்வந்துவணங்கிமாமலர்தூவிநின்கழலேத்துவாரவ
ருண்டியால்வருந்தலிரங்காததென்னேகொலாம்
வண்டலார்கழனிக்கலந்துமலர்ந்ததாமரைமாதர்வாண்முக
மண்டவாணர்தொழுமாமாத்தூரம்மானே. (டு)

ஓதியாரணமாயதுண்பொருளன்றுநால்வர்மூன்கேட்கநன்னெறி
நீதியாலநீழலுரைக்கின்றநீர்மையதென்
சோதியேசுடரேசுரும்பமர்கொன்றையாய்திருநின்றியூருறை
யாதியேயரனேயாமாத்தூரம்மானே. (சு)

மங்கைவாணுதன்மான்மருத்திடைவாடியூடமணங்கமழ்சடைக்
கங்கையாளிருந்தகருத்தாயதென்னேகொலாம்
பங்கயமதுவுண்டுவண்டிசைபாடமாமயிலாடவிண்முழ
வங்கையாலதிர்க்குமாமாத்தூரம்மானே. (எ)

நின்றடர்த்திடுமைம்புலன்னிலையாதவண்ணநினைந்துளத்திடை
வென்றடர்த்தொருபான்மடமாதைவிரும்புதலென்
குன்றெடுத்தநிசாசரன்றிரடோளிருபதுதாளெரிதர
வன்றடர்த்தருகந்தாயாமாத்தூரம்மானே. (அ)

செய்யதாமரைமேலிருந்தவனேடுமாலடிதேடநீண்முடி
வெய்யவாரழலாய்நிமிர்கின்றவேற்றுமையென்
றையலாளொடுபிச்சைக்கிச்சையயங்குதோலையார்த்தவேடங்கொண்
டையமேற்றுகந்தாயாமாத்தூரம்மானே. (கூ)

புத்தர்புன்சமணர்தர்பொய்மொழிதூற்பிடித்தலர்தூற்றநின்னடி
பத்தர்பேணுன்றபரமாயபான்மையதென்
முத்தைவென்றமுறுவலாளுமைபங்கனென்றிமையோர்பரவிடு
மத்தனேயரியாயாமாத்தூரம்மானே. (கூ)

வாடல்வெண்டலைமாலையார்த்துமயங்கிருள்ளெரியேந்திமாநட
மாடன்மேயதென்னென்றுமாத்தூரம்மானைக்
கோடனுகமரும்புபைம்பொழிற்கொச்சையாரிறைஞானசம்பந்தன்
பாடல்பத்தும்வல்லார்பரலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஆமாத்தூர் என்பது - பசுக்களுக்குத் தாயகமானவூர் என்றும், ஆமாதாவூர் எனற்பாலது - ஆமாத்தூர் என மருவிநின்றதென்றும் பெரியோர்களாற் கேள்வி. ஆ - பசு. சமஸ்கிருதத்தில் - கோமா திருபுரம் எனப்பெயராம்.

திருக்களர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

நீருளார்கயல்வாவிசூழ்பொழினீண்டமாவயலீண்டுமாமதிற்
றேரினார்மறுகில்விழாமல்குதிருக்கள
ரூருளாரிடுபிச்சைபேணுமொருவனேயெளிர்செஞ்சடைம்மதி
யாரநின்றவனேயடைந்தார்க்கருளாயே. (க)

தோளின்மேலொளிநீறுதாங்கியதொண்டர்வந்தடிபோற்றமிண்டிய
தாளினார்வளருந்தவமல்குதிருக்களருள்
வேளினேர்விசயற்கருள்புரிவித்தகாவிரும்பும்மடியரை
யாளுகந்தவனேயடைந்தார்க்கருளாயே. (உ)

பாடவல்லநன்மைந்தரோடுபனிமலர்பலகொண்டுபோற்றிசெய்
சேடர்வாழ்பொழில்சூழ்செழுமாடத்திருக்களரு
ணீடவல்லநிமலனேயடிநினைகழல்நிலம்பார்க்கமாநட
மாடவல்லவனேயடைந்தார்க்கருளாயே. (ஙு)

அம்பிவேர்தடங்கண்ணினருடனைவர்பயின்மாடமாளிகைச்
செம்பொனார்பொழில்சூழ்ந்தழகாயதிருக்களரு
ளென்புபூண்டதோர்மேனியெம்மிறைவாவிணையடிபேரற்றிநின்றவர்க்
கன்புசெய்தவனேயடைந்தார்க்கருளாயே. (ச)

கொங்குலாமலர்ச்சோலைவண்டினங்கிண்டிமாமதுவுண்டிசைசெயத்
தெங்குபைங்கமுகம்புடைசூழ்ந்ததிருக்களருண்
மங்கைதன்னெடுங்கூடியமணவாளனேபிணைகொண்டோர்கைத்தலத்
தங்கையிற்படையாயடைந்தார்க்கருளாயே. (ஞ)

கோலமாமயிலாலக்கொண்டல்கள்சேர்பொழிற்குலவும்வயலிடைச்
சேலிளங்கயலார்புனல்சூழ்ந்ததிருக்களரு
ணீலமேவியகண்டனேநிமிர்புன்சடைப்பெருமானெனப்பொலி
யாலநீழலுளாயடைந்தார்க்கருளாயே. (சு)

தம்பலம்மறியாதவர்மதிரும்குமால்வரையாலழலெழத்
திண்பலங்கெடுத்தாய்திகழ்கின்றதிருக்களருள்

EFEO_TVG_149-139 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வம்பலர்மலர்தூவிநின்னடிவானவர்தொழக்கூத்துகந்தபே
ரம்பலத்துறைவாயடைந்தார்க்கருளாயே. (எ)

குன்றடுத்தகன்மாளிகைக்கொடிமாடநீடுயர்கோபுரங்கண்மேற்
சென்றடுத்துயர்வான்மதிதோய்திருக்களரு
ணின்றடுத்துயர்மால்வரைத்திரடோளிலைதெத்தான்றனீண்முடி
யன்றடர்த்துகந்தாயடைந்தார்க்கருளாயே. (அ)

பண்ணியாழ்பயில்கின்றமங்கையர்பாடலாடலோடாரவாழ்பதி
தெண்ணிலாமதியம்பொழில்சேருந்திருக்களரு
ணுண்ணிலாவியவொருவனேயிருவர்க்குநின்கழல்காட்சியாரழ
லண்ணலாயவெம்மானடைந்தார்க்கருளாயே. (கூ)

பாக்கியம்பலசெய்தபத்தர்கள்பாட்டொடும்பலபணிகள்பேணிய
தீக்கியல்குணத்தார்சிறந்தாருந்திருக்களருள்
வாக்கினுன்மறையோதினியமண்டேரர்சொல்லியசொற்களானபொய்
யாக்கினின்றவனேயடைந்தார்க்கருளாயே. (கo)

இந்துவந்தெழுமாடவீதியெழில்கொள்காழிநகர்க்கவுணியன்
*செந்துநேர்மொழியாரவர்சேருந்திருக்களரூ
ளந்தியன்னதோர்மேனியானேயமர்தம்பெருமானேஞானசம்
பந்தன்சொல்லிவைபத்தும்பாடத்தவமாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-களர்மூலேசுவரர்-தேவியார்-அழகேசுவரியம்மை.

திருக்கோட்டாறு - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

கருந்தடங்கண்ணினின்மாதாரிசைசெய்யக்காரிகின்றபூம்பொழிற்
குருந்தமாதவியின்விரைமல்குகோட்டாற்றி
லிருந்தவெம்பெருமானேபுள்கியினேயடிதொழுதேத்துமாந்தர்கள்
வருந்துமாறறியார்நெறிசோவர்வானுடே. (க)

நின்றுமேய்ந்துநினைந்துமாகரிநீரொடும்மலர்வேண்டிவான்மழை
குன்றினேர்ந்துசுரத்திப்பணிசெய்யுங்கோட்டாற்று
ளென்றுமன்னியவெம்பிரான்கழலேத்திவானரசாளவல்லவர்
பொன்றுமாறறியார்புகழார்ந்தபுண்ணியரே. (உ)

விரிகாஞ்சிழாவிடைப்பொலிதொண்டர்வந்துவியந்துபணிசெயக்
குரவமாருழற்பொழின்மல்குகோட்டாற்றி
லரவநீள்சடையானேபுள்கிநின்றுரைத்துமுனன்புசெய்தடி
பரவுமாறுவல்லார்பழிபற்றறுப்பாரே. (ங)

அம்பினேர்விழிமங்கைமார்பலராடகம்பெறுமாடமாளிகைக்
கொம்பினேர்துகிலின்கொடியாடுகோட்டாற்றி
னம்பனேநடனேகலந்திகழ்காதனேயென்றுகாதல்செய்தவர்
தம்பினேர்ந்தறியார்தடுமாற்றவல்வினையே. (ச)

பழையதம்மடியார்துதிசெயப்பாருளோர்களும்விண்ணுளோர்தொழக்
குழலுமொந்தைவிழாவொலிசெய்யுங்கோட்டாற்றிற்
கழலும்வண்சிலம்பும்மொலிசெயக்கானிடைக்கணமேத்தவாடிய
வழகனென்றெழுவாரணியாவர்வானவர்க்கே. (டு)

பஞ்சின்மெல்லடிமாதராடவர்பத்தர்சித்தர்கள்பண்புவைகலுங்
கொஞ்சியின்மொழியாற்றொழின்மல்குகோட்டாற்றின்
மஞ்சனேமணியேமணிமிடற்றண்ணலேயெனவுண்ணெகிழ்ந்தவர்
துஞ்சுமாறறியார்பிறவாரித்தோன்னிலத்தே. (சு)

கலவமாமயிலாலேர்பங்கனேக்கண்டுகண்மிசைநீர்நெகிழ்த்திசை
குலவுமாறுவல்லார்குடிகொண்டகோட்டாற்றி
னிலவுமாமதிசேர்சடையுடைநின்மலாவெனவுன்னுவாரவ
ருலவுவானவரினுயர்வாகுவதுண்மையதே. (எ)

வண்டலார்வயற்சாலியாலிவளம்பொலிந்திடவார்புனற்றிரை
கொண்டலார்கொணர்ந்தங்குலவுந்திகழ்கோட்டாற்றிற்
றெண்டலாந்துதிசெய்யநின்றதொழிலனேகழலாலரக்கனை
மிண்டெலர்ந்தவிர்த்தென்னுகந்திட்டவெற்றிழையே. (அ)

கருதிவந்தடியார்தொழுதெழக்கண்ணெடையன்றேடவானினின்
குருதிமெய்கலப்பவரிகொண்டுகோட்டாற்றில்
விருதினன்மடமாதுதீயும்வியப்பொடுமுயாகோயின்மேவிவெள்
ளெருதுகந்தவனேயிரங்காயுனதின்னருளே. (கூ)

உடையிலாதுழல்கின்றகுண்டருமூணருந்தவத்தாயசாக்கியர்
கொடையிலார்மனத்தார்குறையாருங்கோட்டாற்றிற்
படையிலார்மழுவேந்தியாடியபண்பனேயிவரென்கொலோதுனை
யடைகிலாதவண்ணமருளாயுன்னடியவர்க்கே. (கo)

காலனைக்கழலாலுதைத்தொருகாமனைக்கனலாகச்சீறிமெய்
கோலவார்குழலார்குடிகொண்டகோட்டாற்றின்
மூலனைமுடிவொன்றிலாதவெம்முத்தனைப்பயில்பந்தன்சொல்லிய
மாலைபத்தும்வல்லார்க்கெளிதாகும்வானகமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழாநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஐராபதேசுவரர்-தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

EFEO_TVG_149-140 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருப்புறவார் - பனங்காட்டூர் - பண் - சீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணமர்ந்தும்மதில்களோவிழவெங்கணீயாலெய்தாயவிரி
பண்ணமர்ந்தொலிசேர்புறவார்பனங்காட்டூர்ப்
பெண்ணமர்ந்தொருபாகமாகியபிஞ்ஞகாபிறைசேர்தலிடைக்
கண்ணமர்ந்தவனேகலந்தார்க்கருளாயே. (க)

நீடல்கோடலலர்வெண்முல்லைநீர்மலர்நிரைத்தாதளஞ்செய்யப்
பாடல்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்த்
தோடிலங்கியகாதயன்மின்னுளங்கவெண்குழைதுள்ளநள்ளிரு
ளாடுஞ்சங்கரனேயடைந்தார்க்கருளாயே. (உ)

வாளையுங்கயலும்மிளிர்பொய்கைவார்புனற்கரையருகெலாம்வயற்
பாளையொண்கமுகம்புறவார்பனங்காட்டூர்ப்
பூளையுங்கறுங்கொன்றையுமதமத்தமும்புனைவாய்கழலிணைத்
தாளையேபரவுந்தவத்தார்க்கருளாயே. (ங)

மேய்ந்திளஞ்செங்நென்மென்கதிர்கவ்விமேற்படுகலின்மேநிலைகறை
பாய்ந்ததண்பழனப்புறவார்பனங்காட்டூர்
ராய்ந்தநான்மறைபாடியாடுமடிகளென்றென்றரற்றிநன்மலர்
சாய்ந்தடிபரவுந்தவத்தார்க்கருளாயே. (ச)

செங்கயல்லொடுசேல்செருச்செயச்சீறியாழ்முரறேனினத்தொடு
பங்கயம்மலரும்புறவார்பனங்காட்டூர்க்
கங்கையுமதியுங்கமழ்சடைக்கேண்மையரளொடுங்கூடிமான்மறி
யங்கையாடலென்னேயடியார்க்கருளாயே. (ஞ)

நீரினுர்வரைகோலிமால்கடனீடியபொழில்சூழ்ந்துவைகலும்
பாரினுர்பிரியாப்புறவார்பனங்காட்டூர்க்
கார்னர்மலர்க்கொன்றைதாங்குகடவுளென்றுகைகூப்பிநாடொறுஞ்
சீரினலவணங்குந்திறத்தார்க்கருளாயே. (ட)

கையிரைவையர்மெல்விரல்லவைகாட்டியும்மலர்க்காந்தளங்கூறி
பையராவிரியும்புறவார்பனங்காட்டூர்
மெய்யரிவையோர்பாகமாகவுமேவினுய்கழலேத்திநாடொறும்
பொய்யிலாவடிமைபுரிந்தார்க்கருளாயே. (எ)

தூவியஞ்சிறைமென்னடையனமல்கியொல்கியதூமலர்ப்பொய்கைப்
பாவில்வண்டறையும்புறவார்பனங்காட்டூர்
மேவியந்நிலையாயரக்கன்முடியடர்த்தவன்பாடல்கேட்டரு
ளேவியம்பெருமானென்பவர்க்கருளாயே. (அ)

அந்தண்மாதவிபுன்னைநல்லவசோகமுமரவிந்தமல்லிகை
பைந்தணுழலகள்சூழ்புறவார்பனங்காட்டூ

ரெந்திளம்முகில்வண்ணனுன்முகனென்றிவர்க்கரிதாய்நிமிர்ந்ததோர்
சந்தமாயவனேதவத்தார்க்கருளாயே. (கூ)

நீணமார்முருகுண்டுவெண்டினநீலமாமலர்கவ்விநேரிசை
பாணில்யாழ்முரலும்புறவார்பனங்காட்டூர்
நாணழிந்துழல்வார்சமணருநம்பில்சாக்கியருநகத்தலை
யூணுரியவனேயுகப்பார்க்கருளாயே. (கூ)

மையினுர்மணிபோன்மிடற்றனைமாசில்வெண்பொடிப்பூசுமார்பினைப்
பையதேன்பொழில்சூழ்புறவார்பனங்காட்டூ
ரையனைப்புகழானகாழியுளரய்ந்தநான்மறைஞானசம்பந்தன்
செய்யுள்பாடவல்லார்சிவலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது:

சுவாமிபெயர்-பனங்காட்டீசுவரர்-தேவியார்-திருப்புருவமின்னம்மை.

ஸ்ரீபுகலி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உருவார்ந்தமெல்லியலோர்பாகமுடையிரடைவோர்க்குக்
கருவார்ந்தவானுலகங்காட்டிக்கொடுத்தல்கருத்தானீர்
பொருவார்ந்ததெண்கடலொண்சங்கந்திளைக்கும்பூம்புகலித்
திருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (க)

நீரார்ந்தசெஞ்சடையிர்நிரையார்கழல்சேர்பாதத்தீ
ரூரார்ந்தசில்பலியீருமைமானுரிதோலாடையிர்
போரார்ந்ததெண்டிரைசென்றணையுங்கானற்பூம்புகலிச்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (உ)

அழிமல்குபூம்புனலுமரவுஞ்சடைமேலடைவெய்த
மொழிமல்குமாமறையிர்கறையார்கண்டத்தெண்டோளீர்
பொழின்மல்குவண்டினங்களையுங்கானற்பூம்புகலி
யெழின்மல்குகோயிலேகோயிலாகவிருந்தீரே. (ங)

கையிலார்ந்தவெண்மழுவொன்றுடையிர்கரியகரியின்ரோல்
மயிலார்ந்தசாயன்மடமங்கைவெருவமெய்போர்த்தீர்
பயிலார்ந்தவேதியர்கள்பதியாய்விளங்கும்பைம்புகலி
யெயிலார்ந்தகோயிலேகோயிலாகவிசைந்தீரே. (ச)

நாவார்ந்தபாடலீராடலரவமைக்கார்த்தீர்
பாவார்ந்தபல்பொருளின்பயன்களானீரயன்பேணும்
பூவார்ந்தபொய்கைகளும்வயலுஞ்சூழ்ந்தபொழிற்புகலித்
தேவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (ஞ)

EFEO_TVG_149-141 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மண்ணுர்ந்தமணமுழுவந்ததும்பமலியான்மகளென்னும்
பெண்ணுர்ந்தமெய்ம்மகிழப்பேணியெரிகொண்டாடினீர்
விண்ணுர்ந்தமதியமிடைமாடத்தாரும்வியன்புகலிக்
கண்ணுர்ந்தகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (கூ)

களிபுல்குவல்லவுணரூர்மூன்றெரியக்கணைதொட்டீ
ரளிபுல்குபூமுடியிரமரேத்தவருள்செய்தீர்
தெளிபுல்குதேனினமுமலருள்வினைசேர்திண்புகலி
யொளிபுல்குகோயிலேகோயிலாகவுகந்தீரே. (எ)

பரந்தோங்குபல்புகழ்சேரரக்கர்கோனைவரைக்கீழிட்
டுரந்தோன்றும்பாடல்கேட்டுகவையளித்தருளவாதார்
புரந்தோன்றுமும்மதிலுமெரியச்செற்றீர்பூம்புகலி
வரந்தோன்றுகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (அ)

சலந்தாங்குதாமரைமேலயனுந்தரணியளந்தானுங்
கலந்தோங்கிவந்திழிந்துங்காணவண்ணங்கனலானீர்
புலந்தாங்கியைம்புலனுஞ்செற்றூர்வாழும்பூம்புகலி
நலந்தாங்குகோயிலேகோயிலாகநயந்தீரே. (கூ)

நெடிதாயவன்சமணுநிறைவொன்றிலாச்சாக்கியருங்
கடிதாயகட்டுரையாற்கழறமேலோர்பொருளானீர்
பொடியாருமேனியினீர்புகலிமறையோர்புரிந்தேத்த
வடிவாருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (கo)

ஒப்பரியபூம்புகலியோங்குகோயின்மேயானை
யப்பரிசிற்பதியானவணிகொண்ஞானசம்பந்தன்
செப்பரியதண்டமிழாற்றெரிந்தபாடலிவைவல்லா
ரெப்பரிசிலிடர்நீங்கியிமையோருலகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தலைச்சங்காடு - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

நலச்சங்கவெண்குழையுந்தோடும்பெய்தோர்நால்வேதஞ்
சொலச்சங்கையில்லாதீர்சுடுகாடல்லாற்சுருதாதீர்
குலைச்செங்காயபைங்கமுகின்குளிர்கொள்சோலைக்குயிலாலுந்
தலைச்சங்கைக்கோயிலேகோயிலாகத்தாழ்ந்தீரே. (க)

அணிமல்குகோவணமுந்தோலுங்காட்டித்தொண்டாண்டீர்
மணிமல்குகண்டத்தீரண்டர்க்கெலாமாண்பானீர்
* பிணிமல்குதான்மார்பர்பெரியோர்வாழுந்தலைச்சங்கை
யணிமல்குகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (உ)

* பிணி - பிணித்தல்.

ரீர்கொண்டபாடலீர்செங்கண்வெள்ளேறூர்தியீர்
நீர்கொண்டும்பூக்கொண்டுநீங்காத்தொண்டர்நின்றேத்தத்
தார்கொண்டதான்மார்பர்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
யேர்கொண்டகோயிலேகோயிலாகவிருந்தீரே. (கூ)

வேடஞ்சூழ்கொள்கையீர்வேண்டிநீண்டவெண்டிங்க
ளோடஞ்சூழ்கங்கையுமுச்சிவைத்தீர்தலைச்சங்கைக்
கூடஞ்சூழ்மண்டபமுங்குலாயவாசற்கொடித்தோன்று
மாடஞ்சூழ்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

சூலஞ்சேர்கையினீர்சுண்ணவெண்ணீரூடலீர்
நீலஞ்சேர்கண்டத்தீர்நீண்டசடைமேனீரேற்றீ
ராலஞ்சேர்தண்கானலன்னமன்னுந்தலைச்சங்கைக்
கோலஞ்சேர்கோயிலேகோயிலாகக்கொண்டீரே. (ரி)

நிலநீரோடாகாசமனல்காலாகிநின்றைந்து
புலனீர்மைபுறங்கண்டார்பொக்கஞ்செய்யார்போற்றுவார்
சலநீரதரல்லாதார்தக்கோர்வாழுந்தலைச்சங்கை
கலநீரகோயிலேகோயிலாகநயந்தீரே. (சு)

அடிபுல்குபைங்கழல்களார்ப்பப்பெயர்ந்தோரனலேந்திக்
கொடிபுல்குமென்சாயலுமையோர்பாகங்கூடினீர்
பொடிபுல்குநான்மார்பர்புரிநூலாளர்தலைச்சங்கைக்
கடிபுல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (எ)

திரையார்ந்தமர்கடல்சூழ்தென்னிலங்கைக்கோமானை
வரையார்ந்ததோளடரவிரலாலூன்றுமாண்பினீ
ரரையார்ந்தமேகலையீரந்தணர்தலைச்சங்கை
நிரையார்ந்தகோயிலேகோயிலாகநினைந்தீரே. (அ)

பாயோங்குபாம்பணைமேலானும்பைந்தாமரையானும்
பேயோங்கிக்காண்கிலார்புறகின்றேரார்போற்றுவார்
தீயோங்குமறையாளர்திகழுஞ்செலவத்தலைச்சங்கைச்
சேயோங்குகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (கூ)

அலையாரும்புனலுறந்தவமனர்சுண்டர்சாக்கியர்
தொலையாதங்கவர்தூற்றத்தோற்றங்காட்டியாட்கொண்டீர்
தலையானநால்வேதந்தரித்தார்வாழுந்தலைச்சங்கை
நிலையார்ந்தகோயிலேகோயிலாகநின்றீரே. (கo)

நளிரும்புனற்காழிநல்லஞானசம்பந்தன்
குளிருந்தலைச்சங்கையோங்குகோயின்மேயானை
யொளிரும்பிறையானையுரைத்தபாடலிவைவல்லார்
மிளிருந்திரைசூழ்ந்தவையத்தார்க்குமேலாரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-செங்கணையகேசுவரர்-தேவியார்-சௌந்தரியம்மை.

EFEO_TVG_149-142 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருவிடைமருது - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குதூன்மார்பினீர்பூதப்படையினீர்பூங்கங்கை
தங்குசெஞ்சடையினீர்சாமவேதமோதினீ
ரெங்குமெழிலார்மறையோர்கண்முறையாலேத்தவிடைமருதின்
மங்குமேற்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

நீரார்ந்தசெஞ்சடையீர்நெற்றித்திருக்கணிகழ்வித்தீர்
போரார்ந்தவெண்மழுவொன்றுடையீர்பூதம்பாடலீ
ரோரார்ந்தமேகலையாள்பாகங்கொண்டூரிடைமருதிற்
சீரார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (உ)

அழன்மல்குமங்கையிலேந்திப்பூதமவைபாடச்
சூழன்மல்குபாடலீர்சுடுகாடல்லாற்கருதாதீ
ரெழின்மல்குஞான்மறையோர்முறையாலேத்தவிடைமருதிற்
பொழின்மல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (ங)

பொல்லாப்பதலையொன்றேந்திப்புறங்காட்டாடலீர்
வில்லாற்புரமூன்றுமெரித்தீர்விடையார்கொடியினீ
ரெல்லாக்கணங்களுமுறையாலேத்தவிடைமருதிற்
செல்வாய்கோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (ச)

வருந்தியமாதவத்தோர்வானோரேனோர்வந்திண்டிப்
பொருந்தியதைப்பூசமாடியுலகம்பொலிவெய்தத்
திருந்தியஞான்மறையோர்சீராலேத்தவிடைமருதிற்
பொருந்தியகோயிலேகோயிலாகப்புக்கீரே. (ஞ)

சலமல்குசெஞ்சடையீர்சாந்தநீறுபூசினீர்
வலமல்குவெண்மழுவொன்றேந்திமயானத்தாடலீ
ரிலமல்குஞான்மறையோரினிதாயேத்தவிடைமருதிற்
புலமல்குகோயிலேகோயிலாகப்பொலிந்தீரே. (ட)

புனமல்குகொன்றையீர்புலியினதளீர்பொலிவார்ந்த
சினமல்குமால்விடையீர்செய்யீர்கரியகண்டத்தீ
ரினமல்குஞான்மறையோரேத்தஞ்சீர்கொளிடைமருதிற
கனமல்குகோயிலேகோயிலாகக்கலந்தீரே. (எ)

சிலையுய்த்தவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்திறலரக்கன்
றலைபத்துந்திண்டோளுநெரித்தீர்தையலபாகத்தீ
ரிலைமொய்த்ததண்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தவிடைமருதி
னிலைமொய்த்தகோயிலேகோயிலாகநயந்தீரே. (அ)

மறைமல்குஞான்முகனும்மாலுமறியாவண்ணத்தீர்
கறைமல்குகண்டத்தீர்கபாலமேந்துகையினீ

ரறைமல்குவண்டினங்களார்ஞ்சோலையிடைமருதி
னிறைமல்குகோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (கூ)

றின்போர்வைச்சாக்கியருமாசுசேருஞ்சமணருந்
துன்பாயகட்டுரைகள்சொல்லியல்லலுறாத்தவே
யின்பாயவந்தணர்களேத்துமேர்கொளிடைமருதி
னின்பாயகோயிலேகோயிலாகவமர்ந்தீரே. (கூ)

கல்லின்மணிமாடக்கழுமலத்தார்காவலவ
னல்லவருமறையானற்றமிழ்ஞானசம்பந்த
னெல்லியிடைமருதிலேத்துபாடலிவைபத்துஞ்
சொல்லுவார்க்குங்கேட்பார்க்குந்துயரமில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநல்லூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பெண்ணமருந்திருமேனியுடையீர்பிறங்குசடைதாழப்
பண்ணமருநான்மறையேபாடியாடல்பயில்கின்றீர்
திண்ணமரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தநல்லூர்
மண்ணமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (க)

அலைமல்குதண்புனலும்பிறையுஞ்சூடியங்கையிற்
கொலைமல்குவெண்மழுவுமனலுமேந்துங்கொள்கையீர்
சிலைமல்குவெங்கணையாற்புரமூன்றெரித்தீர்நல்லூர்
மலைமல்குகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (உ)

குறைகிரம்பாவெண்மதியஞ்சூடிக்குளிர்புன்சடைதாழப்
பறைகவின்றபாடலோடாடல்பேணிப்பயில்கின்றீர்
சிறைகவின்றதண்புனலும்வயலுஞ்சூழ்ந்தநல்லூர்
மறைகவின்றகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ங)

கூனமரும்வெண்பிறையும்புனலுஞ்சூடுங்கொள்கையீர்
மானமருமென்னைவிழியாள்பாகமாகுமாண்பினீர்
தேனமரும்பைம்பொழிலின்வண்டுபாடுந்நல்லூர்
வானமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ச)

மிணங்கவருமூவிலையுமனலுமேந்திநெறிகுழலா
ளணங்கமரும்பாடலோடாடன்மேவுமழகினீர்
திணங்கவருமாடரவும்பிறையுஞ்சூடித்நல்லூர்
மணங்கமழுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (ஞ)

கார்மருவுபூங்கொன்றைசூடிக்கமழ்புன்சடைதாழ
வீர்மருவுமென்முலையாள்பாகமாகுமாண்பினீர்

EFEO_TVG_149-143 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தேர்மருவுநெடுவீதிக்கொடிகளாடுந்திருநல்லூர்
சேர்மருவுகோயிலேகோயிலாகவிருந்தீரே. (சு)

ஊன்றோயும்வெண்மழுவுமனலுமேந்தியுமைகாண
மீன்றோயுந்திசைநிறையவோங்கியாடும்வேடத்தீர்
தேன்றோயும்பைம்பொழிலின்வண்டுபாடுந்திருநல்லூர்
வான்றோயுங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (எ)

காதமரும்வெண்குழையீர்கறுத்தவரக்கன்மலையெடுப்ப
மாதமருமென்மொழியாண்மறுகும்வண்ணங்கண்டகந்தீர்
நீதமராவந்தணர்கள்பரவியேத்துந்திருநல்லூர்
மாதமருங்கோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (அ)

போதின்மேலயன்றிருமால்போற்றியும்மைக்காணாது
நாதனேயிவனென்றுநயந்தேத்தமகிழ்ந்தளித்தீர்
நீதிலாவந்தணர்கடமூன்றும்பும்புந்திருநல்லூர்
மாதராளவளோடுமன்னுகோயின்மகிழ்ந்தீரே. (கூ)

பொல்லாதசமணரொடுபுறங்கூறுஞ்சாக்கியரொன்
றல்லாதாறவுரைவிட்டடியார்கள்போற்றேவா
ரல்லார்களந்தணர்கணஞ்சூழ்ந்துந்திருநல்லூர்
மல்லார்ந்தகோயிலேகோயிலாகமகிழ்ந்தீரே. (கo)

கொந்தணவும்பொழில்புடைசூழ்கொச்சைமேவுகுலவேந்தன்
செந்தமிழின்சம்பந்தன்சிறைவண்புனல்சூழ்திருநல்லூர்ப்
பந்தணவுமெல்விரலாள்பங்கன்றன்னீனப்பயில்பாடல்
சிந்தனையாலுரைசெய்வார்சிவலோகஞ்சேர்ந்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்குடவாயில் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கலைவாழுமங்கையீர்கொங்கையாருங்கருங்கூந்த
லலைவாழுஞ்செஞ்சடையிலரவும்பிறையுமமர்வித்தீர்
குலைவாழைகமுகம்பொன்பவளம்பழுக்குங்குடவாயி
னிலைவாழுங்கோயிலேகோயிலாகநின்றீரே. (க)

அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமார்ப்பவங்கையிற்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயிற்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (உ)

கழலார்பூம்பாதத்தீரோதக்கடலில்விடமுண்டன்
றழலாருங்கண்டத்தீரண்டர்போற்றுமனவினீர்

தழ[illegible]கள்கீதத்தொலிசெய்குடவாயி
னிழலார்ந்தகோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (ஙு)

மறியாருங்கைத்தலத்தீர்மங்கைபாகமாகச்சேர்ந்
தெறியாருமாமழுவுமெரியுமேந்துங்கொள்கையீர்
குறியார்ந்தவண்டினங்கடேன்மிழற்றுங்குடவாயி
னெறியாருங்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (ச)

இழையார்ந்தகோவணமுங்கீளுமெழிலாருடையாகப்
பிழையாதசூலம்பெய்தாடல்பாடல்பேணினீர்
குழையாரும்பைம்பொழிலும்வயலுஞ்சூழ்ந்தகுடவாயில்
விழவார்ந்தகோயிலேகோயிலாகமிக்கீரே. (ஞ)

அரவார்ந்தசிறுமேனியானவெண்ணீறுடினீ
ரிரவார்ந்தபெய்பலிகொண்டிமையோரேத்தநஞ்சுண்டீர்
குரவார்ந்தபூஞ்சோலைவாசம்வீசுங்குடவாயிற்
றிருவார்ந்தகோயிலேகோயிலாகத்திகழ்ந்தீரே. (சு)

பாடலார்வாய்மொழியீர்பைங்கண்வெள்ளேறூர்தியீ
ராடலார்மாநடத்தீரரிவைபோற்றுமாற்றலீர்
கோடலார்தும்பிமுரன்றிசைமிழற்றுங்குடவாயி
னீடலார்கோயிலேகோயிலாகநிகழ்ந்தீரே. (எ)

கொங்கார்ந்தபைங்கமலத்தயனுஞ்மளாய்நிமிர்ந்தானு
மங்காந்தள்ளாடவழலாய்நிமிர்ந்தீரிலங்கைக்கோன்
றங்காதன்மாமுடியுந்தாளுமடர்த்தீர்குடவாயிற்
பங்கார்ந்தகோயிலேகோயிலாகப்பரிந்தீரே. (அ-க)

தூசார்ந்தசாக்கியருந்தூய்மையில்லாச்சமணரு
மேசார்ந்தபுன்மொழிகேட்டெழில்கொண்மடக்குடவாயி
லாசாரஞ்செய்மறையோரளவிற்குன்றுதடிபோற்றத்
தேசார்ந்தகோயிலேகோயிலாகச்சேர்ந்தீரே. (கo)

களிர்பூந்திரைமல்குகாழிஞானசம்பந்தன்
குளிர்பூங்குடவாயிற்கோயின்மேயகோமானை
யொளிர்பூந்தமிழ்மாலையுரைத்தபாடலிவைவல்லார்
தளர்வானதானெழியத்தகுசீர்வானத்திருப்பாரே. திருச்சிற்றம்பலம்.

சீகாழி - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கலங்கொண்முத்தும்மணியுமணியுந்திரளோதக்
கலங்கடன்னிற்கொண்டுகரைசேர்கலிக்காழி
வலங்கொண்மழுவொன்றுடையாயவிடையாயெனவேத்தி
யலங்கல்சூட்டவல்லார்க்கடையாவருநோயே. (க)

EFEO_TVG_149-144 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ஊராருவரிச்சங்கம்வங்கங்கொடுவந்து
காராரோதங்கரைமேலுயர்த்துங்கலிக்காழி
நீரார்சடையாய்நெற்றிக்கண்ணுவென்றென்று
பேராயிரமும்பிதற்றத்தீரும்பினிதானே. (உ)

வடிகொள்பொழிலின்மழலைவரிவண்டிசைசெய்யக்
கடிகொள்போதிற்றென்றலணையுங்கலிக்காழி
முடிகொள்சடையாய்முதல்வாவென்றுமுயன்றேத்தி
யடிகைதொழுவார்க்கில்லையல்லலவலமே. (ஙு)

மனைக்கேயேறவளஞ்செய்பவளம்வளர்முத்தங்
கனைக்குங்கடலோதமேறுங்கலிக்காழிப்
பனைக்கைப்பகட்டூரியாய்பெரியாயெனப்பேணி
நினைக்கவல்லவடியார்நெஞ்சினல்லரே. (ஞ)

பருதியியங்கும்பாரிற்சீரார்பணியாலே
கருதிவிண்ணோர்மண்ணோர்விரும்புங்கலிக்காழிச்
சுருதிமறைநான்கானசெம்மைதருவானைக்
கருதியெழுமின்வழுவாவண்ணந்துயர்போமே. (ஞ)

மந்தம்மருவும்பொழிலிலெழிலார்மதுவுண்டு
கந்தமருவவரிவண்டிசைசெய்கலிக்காழிப்
பந்தமீங்கவருளும்பரனேயெனவேத்திச்
சிந்தைசெய்வார்செம்மைநீங்காதிருப்பாரே. (சு)

புயலார்பூமிநாமமோதிப்புகழ்மல்கக்
கயலார்கண்ணார்பண்ணுரொலிசெய்கலிக்காழிப்
பயில்வான்றன்னீப்பத்தியாரத்தொழுதேத்த
முயல்வார்தம்மேல்வெம்மைக்கூற்றமுடிகாதே. (எ)

அரக்கன்முடிதோணெரியவடர்த்தானடியார்க்குக்
கரக்கில்லாதருள்செய்பெருமான்கலிக்காழிப்
பரக்கும்புகழான்றன்னையேத்திப்பணிவார்மேற்
பெருக்குமின்பந்துன்பமானபிணிபோமே. (அ)

மாணுயுலகங்கொண்டமாலுமலரோனுங்
காணவண்ணமெரியாய்நிமிர்ந்தான்கலிக்காழிப்
பூணூர்முலையாள்பங்கத்தானைப்புகழ்ந்தேத்திக்
கோணுநெஞ்சமுடையார்க்கில்லைகுற்றமே. (கூ)

அஞ்சியல்லன்மொழிந்துதிரிவாரமணுதர்
கஞ்சிகாலையுண்பார்க்கரியான்கலிக்காழித்
தஞ்சமாயதலைவன்றன்னைநினைவார்க
டஞ்சலில்லாநல்லவுலகம்பெறுவாரே. (கூ)

ஊழியாயபாரிலோங்குமூயர்செல்வக்
காழியீசன்கழலேபேணுஞ்சம்பந்தன்
சூழுமந்தாவுரைத்ததமிழ்களிவைவல்லார்
வாழிநீங்காவானுருவகின்மகிழ்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பாசூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார்தலையின்மிசையார்செஞ்சொல்லார்
வந்தமாலைவையும்போழ்தென்மனத்துள்ளார்
மைந்தாமணாளாவென்னமிழ்வாரூர்போலும்
பைந்தண்மாதவிசோலைசூழ்ந்தபாசூரே. (க)

பேரும்பொழுதும்பெயரும்பொழுதும்பெம்மானென்
றூருந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ரூருமரவமுடையார்வாழூர்போலும்
பாரின்மிசையார்பாடலோவாப்பாசூரே. (உ)

கையாற்றொழுதுதலைசாய்த்துள்ளங்கிவார்கண்
மெய்யார்நுறைபுந்துயருந்தீர்க்கும்விகிர்தனர்
நெய்யாடுதலைஞ்சுடையார்நிலாவுமூர்போலும்
பைவாய்நாகங்கோடலீனும்பாசூரே. (ஙு)

பொங்காடரவம்புனலுஞ்சடைமேற்பொலிவெய்தக்
கொங்கார்கொன்றைசூடியெழிலுள்ளங்குளிர்வித்தார்
தங்காதலியுந்தாமும்வாழூர்போலும்
பைங்கான்முல்லைபல்லரும்பீனும்பாசூரே. (ஞ)

ஆடற்புரிபுமைவாயரவொன்றரைச்சாத்துஞ்
சேடச்செல்வர்சிந்தைபுளென்றும்பிரியாதார்
வாடற்றலையிற்பலிதேர்கையாரூர்போலும்
பாடக்குயில்கள்பயில்பூஞ்சோலைப்பாசூரே. (ஞ)

கானின்றகிரக்கனல்வாய்நாகங்கச்சாகத்
தோலொன்றுடையார்விடையார்தம்மைத்தொழுவார்கண்
மால்கொண்டோடமையறீர்ப்பாரூர்போலும்
பால்வெண்மதிதோய்மாடஞ்சூழ்ந்தபாசூரே. (சு)

கண்ணினையலேகண்ணொன்றுடையார்கழலுன்னி
யெண்ணுந்தனையுமடியாரேத்தவருள்செய்வா
ருண்ணின்றுருகவுகவைதருவாரூர்போலும்
பண்ணின்மொழியார்பாடலோவாப்பாசூரே. (எ)

EFEO_TVG_149-145 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தேசுகுன்றுத்தெண்ணீரிலங்கைக்கோமானைக்
கூசவடர்த்துக்கூர்வாள்கொடுப்பார்தம்மையே
பேசிப்பிதற்றப்பெருமைதருவாரூர்போலும்
பாசித்தடமும்வயலுஞ்சூழ்ந்தபாசூரே. (அ)

நகுவாய்மலர்மேலயனாகத்தணையானும்
புகுவாய்றியார்புறநின்றேரார்போற்றேவார்
செகுவாயுகுபற்றலைசேர்கையாரூர்போலும்
பகுவாய்நாயையாரல்வாரும்பாசூரே. (கூ)

தூயவெயினின்றுழல்வார்துவர்தோயாடையார்
நாவில்வெய்யசொல்லித்திரிவார்நயமில்லார்
காவல்வேவக்கணியொன்றெய்தானூர்போலும்
பாவைக்குரவம்பயில்பூஞ்சோலைப்பாசூரே. (கo)

ஞானமுணர்வான்காழிஞானசம்பந்தன்
றேனும்வண்டுமின்னிசைபாடுந்திருப்பாசூர்க்
கானம்முறைவார்கழல்சேர்பாடலிவைவல்லார்
ஞானமிலராயும்பர்வானத்துறைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பாசூர்நாதர்-தேவியார்-பசுபதிநாயகியம்மை.

திருவெண்காடு - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

உண்டாய்நஞ்சையுமையோர்பங்காவென்றுள்கித்
தொண்டாயத்திரியுமடியார்தங்கடியரங்க
ளண்டாவண்ணமறப்பானெந்தையூர்போலும்
வெண்டாமரைமேற்கருவண்டியாழ்செய்வெண்காடே. (க)

நாதனம்மையாள்வானென்றுநவின்றேத்திப்
பாதம்பணிவுள்பணியுமடியார்தங்கண்மே
லேதந்தீரவிருந்தான்வாழ்மூர்போலும்
வேதத்தொலியாற்கிளிசொற்பயிலும்வெண்காடே. (உ)

தண்முத்தரும்பத்தடமூன்றுடையான்றனையுன்னிக்
கண்முத்தரும்பக்கழற்சேவடிகைதொழுவார்க
ளுண்முத்தரும்பவுவகைதருவானூர்போலும்
வெண்முத்தரும்பிப்புனல்வந்தலைக்கும்வெண்காடே. (ங)

நாயார்வந்துநாளுங்குறுகுணுகாமுன்
னாயால்வேறுவுள்குவார்களுள்ளத்தே

கையாவண்ணங்கண்டான்மேவுமூர்போலும்
விளையார்கமலத்தன்னமருவும்வெண்காடே. (ச)

பிள்ளைப்பிறையும்புனலுஞ்சூடும்பெம்மானென்
றுள்ளத்துள்ளித்தொழுவார்தங்களுறுநோய்க
டள்ளிப்போகுவருளுங்கலிவெணூர்போலும்
வெள்ளைச்சுரிசங்குலவித்திரியும்வெண்காடே. (ஞ)

ஒளிகொண்மேனியுடையாயும்பராளியென்
றளியராகியழுதுற்றாருமடியார்கட்
கெளியானமரர்க்கரியான்வாழுமூர்போலும்
வளியவருவிலானைவணங்கும்வெண்காடே. (சு)

கோள்வித்தனையகூற்றந்தன்னைக்குறிப்பினுன்
மாள்வித்தவனைமகிழ்ந்தங்கேத்தமாணிக்கா
யாள்வித்தமரருலகமளிப்பானூர்போலும்
வேள்விப்புகையால்வானமிருள்கூர்வெண்காடே. (எ)

வளையார்முன்கைமலையாள்வெருவவரையூன்றி
மூளையார்மதியஞ்சூடியென்றுமுப்போதும்
மிளையாதேத்தவிருந்தானெந்தையூர்போலும்
விளையார்கழனிப்பழனஞ்சூழ்ந்தவெண்காடே. (அ)

கரியானெடுகமலமலரான்காணுமை
யெரியாய்நிமிர்ந்தவெங்கள்பெருமானென்பார்கட்
குரியானமரர்க்கரியான்வாழுமூர்போலும்
விரியார்பொழிலின்வண்டுபாடும்வெண்காடே. (கூ)

பாடும்மடியார்பலருங்கூடிப்பரிந்தேத்த
வாடுமரவமசைத்தபெருமானறிவின்றி
மூடமுடையசமண்சாக்கியர்களுணராத
வேடமுடையபெருமான்பதியாம்வெண்காடே. (கo)

விடையார்கொடியான்மேவியுறையும்வெண்காட்டைக்
கடையார்மாடங்கலந்துதோன்றுங்காழியா
னடையாரின்சொன்ஞானசம்பந்தன்றமிழ்வல்லார்க்
கடையாவினைகளமரலோகமாள்வாரே. திருச்சிற்றம்பலம்

திருமீயச்சூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

காயச்செவ்விக்காமற்காய்ந்துகங்கையைப்
பாயப்படர்புன்சடையிற்பதித்தபரமேட்டி
மாயச்சூரன்றனுத்தமைந்தன்முதைதன்
மீயச்சூரேதொழுதும்வினையைவீட்டுமே. (க)

பூவார்சடையின்முடிமேற்புனலானல்கொள்வார்
நாவார்மறையர்பிறையர்நறவெண்டலையேந்தி
யேவார்மலையேசிலையாக்கழியம்பெரிவாங்கி
மேவார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (உ)

பொன்னேர்கொன்றைமாமலர்புரளுமகலத்தான்
மின்னேர்சடைகளுடையான்மீயச்சூரானைத்
தன்னேர்பிறரில்லானைத்தலையால்வணங்குவார்க்
கன்னேரிமையோருலகமெய்தற்கரிதன்றே. (ஙு)

வேகமதகல்லியானைவெருவவுரிபோர்த்துப்
பாகமுமையோடாகப்படிதம்பலபாட
நாகமணைமேலசைத்துநடமாடியநம்பன்
மேகமுரிஞ்சுபொழில்சூழ்மீயச்சூரானே. (ச)

விடையார்கொடியார்சடைமேல்விளங்கும்பிறைவேடம்
படையார்பூதஞ்சூழப்பாடலாடலார்
பெடையார்வரிவண்டணையும்பிணைசேர்கொன்றையார்
விடையார்நடையொன்றுடையார்மீயச்சூராரே. (ஞ)

குளிருஞ்சடைகொண்முடிமேற்கோலமார்கொன்றை
யொளிரும்பிறையொன்றுடையானெருவன்கைகோடி
களிரும்மணிசூழ்மாலைகட்டகவினம்பன்
மிளிரும்மரவமுடையான்மீயச்சூரானே. (ங)

நீலவடிவாமிடறுகெடியர்நிகரில்லார்
கோலவடிவுதமதாங்கொள்கையறிவொண்ணூர்
காலார்கழலர்கரியினுரியர்மழுவாளர்
மேலர்மதிபர்விதியர்மீயச்சூராரே. (எ)

புலியினுரிதோலாடைபூசும்பொடிநீற்ற
ரொலிகொள்புனலோர்சடைமேற்கரந்தாருமையஞ்ச
வலியதிரடோள்வன்கணரக்கர்கோன்றன்னை
மெலியவரைக்கீழடர்த்தார்மீயச்சூராரே. (அ)

காதின்மிளிருங்குழையர்கரியகண்டத்தார்
போதிலவனுமாலுந்தொழப்பொங்கெரியானார்
கோதிவரிவண்டறைபூம்பொய்கைப்புனன்மூழ்கி
மேதிபடியும்வயல்சூழ்மீயச்சூராரே. (கூ)

கண்டார்நாணும்படியார்கலிங்கமுடைபட்டை
கொண்டோர்சொல்லைக்குறுகாருயர்ந்தகொள்கையார்
பெண்டான்பாகமுடையார்பெரியவரைவில்லால்
விண்டார்புரமூன்றெரித்தார்மீயச்சூராரே. (கo)

வேடமுடையபெருமானுறையுமீயச்சூர்
நாடும்புகழார்புகலிஞானசம்பந்தன்
பாடலாயதமிழ்மாலைபத்துமொழிந்துள்கி
யாடுமடியாரகல்வானுலகமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-முயற்சிநாதேசுவரர்-தேவியார்-சுந்தரநாயகியம்மை.

அரிசிற்கரைத்திருப்புத்தூர் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுஞ்சடைமேலிளவெண்டிங்கள்விளங்கவே
தன்னுங்கடனஞ்சிருடோய்கண்டர்தென்மூதூர
ரன்னம்படியும்புனலாரரிசிலலிகொண்டு
பொன்னும்மணியும்பொருதென்கரைமேற்புத்தூரே. (க)

மேவாவசுரர்மேவெயிலெவ்வமலிவில்லா
லேவாரெரிவெங்கணையாலெய்தானெய்துமூர்
நாவானுதனமோதிநாடோறும்
பூவானீராற்பூசுரர்போற்றும்புத்தூரே. (உ)

பல்லார்தலைசேர்மாலைசூடிப்பாம்பும்பூண்
டெல்லாவிடமும்வெண்ணீறணிந்தோரேறேறி
கல்லார்மங்கைபங்கனூங்காணுங்காற்
பொல்லாரல்லரழகியர்புத்தூர்ப்புரிதரே. (ங)

வரியேர்வளையாளரிவையஞ்சவருகின்ற
கரியேருரிவைபோர்த்ததடவுள்கருதுமூ
ரரியேர்கழனிப்பழனஞ்சூழ்ந்தங்கழகாய
பொரியேர்புன்குசொரிபூஞ்சோலைப்புத்தூரே. (ச)

என்போடரவமெனத்தெயிறேடெழிலாமை
மின்போற்புரிநூல்விரவிப்பூண்டமணிமார்ப
ரன்போடுருகுமடியார்க்கன்பரமருமூர்
பொன்போதலர்கோங்கோங்குசோலைப்புத்தூரே. (ஞ)

வள்ளிமுலைதோய்சுமரன்முதைவான்றேயும்
வெள்ளிமலைபோல்விடையொன்றுடையான்மேவுமூர்
தெள்ளிவருநீரரிசிற்றென்பாற்சிறைவண்டும்
புள்ளுமலிபும்பொய்கைசூழ்ந்தபுத்தூரே. (சு)

நிலந்தணீரோடனல்காலிசும்பினீர்மையான்
சிலந்திசெங்கட்சோழனாகச்செய்தானூ

EFEO_TVG_149-147 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ரல்ந்தவடியானற்றைக்கன்றேர்காசெய்திப்
புலர்ந்தகாலைமாலைபோற்றும்புத்தூரே. (எ)

இத்தேரேகவிம்மலேபேர்ப்பனென்றேந்தும்
பத்தோர்வாயான்வரைத்தோழலறப்பாதந்தான்
வைத்தாரருள்செய்வர்தன்மருவும்மூரான
புத்தூர்காணப்புகுவார்வினைகள்போருமே. (அ)

முள்ளார்கமலத்தயன்மான்முடியோடடிதேட
வொள்ளாரெரியாயுணர்தற்கரியானூர்போலுங்
கள்ளார்கெய்தல்கழுநீராம்பல்கமலங்கள்
புள்ளார்பொய்கைப்பூப்பலதோன்றும்புத்தூரே. (க)

கையார்கோறகவர்குண்டர்களுந்துவருண்ட
மெய்யார்போர்வைமண்டையர்சொல்லுமெய்யல்ல
பொய்யாமொழியரலந்தணர்போற்றும்புத்தூரி
லையாவென்பார்க்கையுறவின்றியழகாமே. (கo)

நறவங்கமழ்பூங்காழிஞானசம்பந்தன்
பொறிகொளரவம்பூண்டானுண்டான்புத்தூர்மேற்
செறிவண்டமிழ்செய்மாலைசெப்பவல்லார்க
ளறவன்கழல்சேர்ந்தன்போடின்பமடைவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-படிக்காசளித்தவீசுவரர்-தேவியார்-அழகம்மை.

திருமுதுகுன்றம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

தேவாசிறியோம்பிழையைப்பொறுப்பாய்பெரியோனே
யாவாவென்றங்கடியார்தங்கட்கருள்செய்வா
யோவாவுரிகொள்ளவுயர்ந்தாயென்றேத்தி
மூவாமுனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றே. (க)

எந்தையிவனென்றிரவிமுதலாவிறைஞ்சுவார்
சிந்தையுள்ளேகோயிலாகத்திகழ்வானே
மந்தியேறியினமாய்மலர்கள்பலகொண்டு
முந்தித்தொழுதுவணங்குங்கோயின்முதுகுன்றே. (உ)

ஈடுமலரும்புனலுங்கொண்டுநிரந்தரந்
தேடுமடியார்சிந்தையுள்ளேதிகழ்வானைப்
பாடுங்குயிலினமலிகிள்ளைபயின்றேத்த
மூடுஞ்சோலைமுகிறோய்கோயின்முதுகுன்றே. (ங)

தெரிந்தவடியார்சிவனேயென்றுதிசைதோறுங்
குருந்தமலருங்குரவினலருங்கொண்டேத்தி
யிருந்துதின்றுமிரவும்பகலுமேத்துஞ்சீர்
முரிந்துமேகந்தவழுஞ்சோலைமுதுகுன்றே. (ச)

வைத்தநிதியேமணியேயென்றுவருந்தித்தஞ்
சித்தகைந்துசிவனேயென்பார்சிந்தையார்
கொத்தார்சந்துங்குரவும்வாரிக்கொணர்ந்துந்து
முத்தாறுடையமுதல்வர்கோயின்முதுகுன்றே. (ஞ)

வம்பார்கொன்றைவன்னிமத்தமலர்தூவி
நம்பாவென்னநல்கும்பெருமானுறைகோயில்
கொம்பார்குரவுகொகுடிமுல்லைகுவிந்தெங்கு
மொய்ம்பார்சோலைவண்டுபாடுமுதுகுன்றே. (ஞ-எ)

வாசங்கமழும்பொழில்சூழிலங்கைவாழ்வேந்தை
நாசஞ்செய்தநங்கள்பெருமானமர்கோயில்
பூசைசெய்தவடியார்தின்றுபுகழ்ந்தேத்த
மூசிவண்டுபாடுஞ்சோலைமுதுகுன்றே. (அ)

அல்லிமலர்மேலயனுமரவினணையானுஞ்
சொல்லிப்பரவித்தொடரவொண்ணாச்சோதிபுர்
கொல்லேவேடர்கூடிநின்றுகும்பிட
முல்லையயலேமுறுவல்செய்யுமுதுகுன்றே. (கூ)

கருகுமுடலார்கஞ்சியுண்டுகடுவேதின்
றருகுசிந்தையில்லார்க்கயலானுறைசோயி
றிருகல்வேய்கள்சிறிதேவளையச்சிறுமந்தி
முருகின்பணைமேலிருந்துகடஞ்செய்முதுகுன்றே. (கo)

அரையார்கடல்சூழ்ந்தண்காழிச்சம்பந்தன்
முரையான்முனிவர்வணங்குங்கோயின்முதுகுன்றைக்
குரையாப்பனுவல்கூடிப்பாடவல்லார்கள்
பிரையார்சடையெம்பெருமான்கழல்கள்பிரியாரே. (ஞக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

கரையணிவேலிலர்போலுங்கபாலந்தரித்திலர்போலு
மரையுரவின்றிலர்போலுமாசுணமார்த்திலர்போலும்
பரையுங்கரத்திலர்போலும்பாசம்பிடித்திலர்போலும்
பிரையுஞ்சடைக்கிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (க)

கூரம்பதுவிலர்போலுங்கொக்கினிறகிலர்போலு
மாரமும்பூண்டிலர்போலுமாமையனிந்திலர்போலுந்
தாருஞ்சடைக்கிலர்போலுந்தண்டிக்கருளிலர்போலும்
பேரும்பலவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (உ)

சித்தவடிவிலர்போலுந்தேசந்திரிந்திலர்போலுங்
கத்திவருங்கடுங்காளிகதங்கடவித்திலர்போலு
மெய்த்தநயனமிடந்தார்க்காழியளித்திலர்போலும்
பித்தவடிவிலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (ஈ)

நச்சரவாட்டிலர்போலுஞ்சமிடற்றிலர்போலுங்
கச்சுதரித்திலர்போலுங்கங்கைதரித்திலர்போலு
மொய்ச்சவன்பேயிலர்போலுமுப்புரமெய்திலர்போலும்
பிச்சையிரந்திலர்போலும்பிரமபுரமமர்ந்தாரே. (ச)

தோடுசெவிக்கிலர்போலுஞ்சூலம்பிடித்திலர்போலு
மாடுதடக்கைவலியயானையுரித்திலர்போலு
மோடுகரத்திலர்போலுமொள்ளழல்கையிலர்போலும்
பீடுமிருத்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (டு)

விண்ணவர்கண்டிலர்போலும்வேள்வியழித்திலர்போலு
மண்ணலயன்றலைவீழவன்றுமமுத்திலர்போலும்
வண்ணவெலும்பினெடுக்குவடங்கடரித்திலர்போலும்
பெண்ணினமொய்த்தெழுசெல்வப்பிரமபுரமமர்ந்தாரே. (கூ)

பன்றியின்கொம்பிலர்போலும்பார்த்தற்கருளிலர்போலு
கன்றியகாலனைவீழக்கால்கொடுய்ந்திலர்போலுந்
துன்றுபிணஞ்சுடுகாட்டிலாடித்துதைந்திலர்போலு
பின்றியும்பிடம்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (எ)

பரசுதரித்திலர்போலும்படலைபூண்டிலர்போலு
மரசனிலங்கையர்கோனையன்றுமடர்த்திலர்போலும்
புரைசெய்புனத்திளமானும்புலியினதளிலர்போலும்
பிரசமலர்ப்பொழில்சூழ்ந்தபிரமபுரமமர்ந்தாரே. (அ)

அடிமுடிமாலயன்றேடவன்றுமளப்பிலர்போலுங்
கடிமலைங்கணைவேளைக்கனலவிழித்திலர்போலும்
படிமலர்ப்பாலனுக்காகப்பாற்கடலீந்திலர்போலும்
பிடிநடைமாதர்பெருகும்பிரமபுரமமர்ந்தாரே. (கூ)

வெற்றரைச்சீவரத்தார்க்குவெளிப்படின்றிலர்போலு
மற்றவரானிழனல்வர்க்கறங்களுரைத்திலர்போலு
முற்றவொன்றிலர்போலுமோடுமுடிக்கிலர்போலும்
பெற்றமுமூர்திலர்போர்ப்லும்பிரமபுரமமர்ந்தாரே. (கஎ)

பெண்ணுருவாணருவல்லாப்பிரமபுரகர்மேய
வண்ணல்செய்யாதனவெல்லாமறிந்துவகைவ : கபாலே
கண்ணிபகுஞானசம்பந்தனின்றனபத்தும்வல்லார்கள்
விண்ணவரோடினிதாகவீற்றிருப்பாரவர்தாமே. (ஙக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - திருநீற்றுப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
சுண்ணத்தர்தோலொடுநூல்சேர்மார்பினர்துன்னியபூதக
கண்ணத்தர்வெங்கனலேந்திக்கங்குனின்றுடுவர்கெடி
லெண்ணத்தர்கேள்விகல்வேள்வியருதவர்மாலெரியோம்பும்
வண்ணத்தவந்தணர்வாழுங்கொச்சைவயமமர்ந்தாரே. (உ)

பாலியன்னவெண்ணீறுபூசுவர்பல்சடைதாழ
மாலியாடுவர்கீதமாமறைபாடுதன்மகிழ்வர்
வேலைமால்கடலோதம்வெண்டிரைகளைமிசைவிளங்குங்
கோலமாமணிசிந்துங்கொச்சைவயமமர்ந்தாரே. (ங)

கடிகொள்கூவிளமத்தங்கமழ்சடைநெடுமுடிக்கணிவர்
பொடிகள்பூசியமார்பிற்பூனைவர்நன்மங்கையோர்பங்கர்
கடிகொணீடொலிசங்கினெலியொடுகீலையொலிதுதைந்து
கொடிகளோங்கியமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (ச)

ஆடன்மாமதியுடையாராயினபாரிடஞ்சூழ
வாடலெண்டலையேந்திவையகமிடுபலிக்குழல்வ

ராடன்மாமடமஞ்ஞையணிதிகழ்பேடையோடாடிக்
கூடுதண்பொழில்சூழ்ந்தகொச்சைவயம்மமர்ந்தாரே. (டு)

மண்டுகங்கையுமரவுமல்கியவளர்சடைதன்மேற்
றுண்டவெண்பிறையணிவர்தொல்வினைவில்லதுவாக
விண்டதானவரரணம்வெவ்வழலெரிகொளவிடைபேற்
கொண்டகோலமதடையார்கொச்சைவயமமர்ந்தாரே. (கூ எ)

அன்றவானிழலமர்ந்துவாறுவுணைநல்வர்க்கருளிப்
பொன்றினர்தலையோட்டிலுண்பதுபொருகடலிலங்கை
வென்றிவேந்தனையெல்கவூன்றியவிரலினர்வான்றோய்
சுன்றமன்னபொன்மாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (அ)

சீர்கொண்மாமலராலுஞ்செங்கண்மாலென்றிவரேத்த
வேர்கொள்வெவ்வழலாகியெங்குமிறையிர்ந்தார்தும்
பார்கொள்விண்ணழல்கானீர்ப்பன்பினர்பான்மொழியோடுங்
கூர்கொள்வேல்வலனேந்திக்கொச்சைவயமமர்ந்தாரே. (க)

சுண்டர்வண்டுவராடைபோர்த்ததோர்கொள்கையினர்கண்
டிண்டர்பேசியபேச்சுமெய்யலமையணிதண்டன
பண்டைநம்வினைதீர்க்கும்பண்பினரொண்கொடியோடுங்
கொண்டல்சேர்மணிமாடக்கொச்சைவயமமர்ந்தாரே. (கo)

கொந்தணிபொழில்சூழ்ந்தகொச்சைவயநகர்மேய
வந்தணனடியேத்தமருமறைஞானசம்பந்தன்
சந்தமார்ந்தழகாயதண்டமிழ்மாலைவல்லோர்பேரய்
முந்திவானவரோடும்புகவலர்முனைகெடவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருநெல்வாயில்திருஅரத்துறை - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

எந்தையிசனெம்பெருமானேறமர்கடவுளென்றேத்திச்
சிந்தைசெய்பவர்க்கல்லால்சென்றுகைகூடுவதன்றுற்
கந்தமாமலருந்திக்கடம்புனலிவாமல்சூகைமே
லந்தண்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (க)

ஈரவார்சடைதன்மேலிளம்பிறையணிந்தவெம்பெருமான்
சிருஞ்செல்வமேத்தாச்சித்தர்கடொழச்செல்வதன்றுல்
வாரிமாமலருந்திவருபுனலிவாமல்குகைமே
லாருஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (உ)

* பிணிகலந்தபுன்சடைமேற்பிறையணிசிவனெனப்பேணிப்
பணிகலந்துசெய்யாதபாவிகடொழச்செல்வதன்றுன்
மணிகலந்துபொன்னுந்திவருபுனலிவாமல்சூகைமே
லணிகலந்தநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (கூ)

துன்னவாடையொன்றுடுத்துத்தூயவெண்ணீற்றினராகி
யுன்னிகைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றுற்
பொன்னுமாமணியுந்திப்பொருபுனலிவாமல்சூகைமே
லன்னமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (ச)

வெருகுரிஞ்சுவெங்காட்டிலாடியவிமலனென்றுள்கி
யுருகுகைபவர்க்கல்லாலொன்றுங்கைகூடுவதன்றுன்
முருகுரிஞ்சுபூஞ்சோலைமொய்ம்மலர்சுமந்திழிந்திவாவந்
தருகுரிஞ்சுநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (டு)

உரவுநீர்ச்சடைக்கரந்தவொருவனென்றுள்குளிர்ந்தேத்திப்
பரவுகைபவர்க்கல்லாற்பரிந்துகைகூடுவதன்றுற்
சுரவுநீடியர்சோலைக்குளிர்புனலிவாமல்சுகைமே
லரவமாருநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (கூ)

நீலமாமணிமிடற்றுநீறணிசிவனெனப்பேணுந்
சிலமாந்தர்கட்கல்லாற்சென்றுகைகூடுவதன்றுற்
கோலமாமலருந்திக்குளிர்புனலிவாமல்குகைமே
லாலுஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (எ)

செழுந்தண்மால்வரையெடுத்தசெருவலியிராவணனலற
வழுந்தவுன்றியவிரலான்போற்றியென்பார்க்கல்லதருளான்
கொழுங்கனிசுமந்துந்திக்குளிர்புனலிவாமல்குகைமே
லழுந்துஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (அ)

றுணங்குதாலயன்மாலுமிருவருநோக்கரியானை
வணங்குகைபவர்க்கல்லால்வந்துகைகூடுவதன்றுன்
மணஞ்சுமந்துபொன்னுந்திவருபுனலிவாமல்குகைமே
லணங்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (கூ)

சாக்கியப்படுவாருஞ்சமண்படுவார்களுமற்றும்
பாக்கியப்படுதில்லாப்பாவிகடொழச்செல்வதன்றுற்
பூக்கமழ்ந்துபொன்னுந்திப்பொருபுனலிவாமல்குகைமே
லார்க்குஞ்சோலைநெல்வாயிலரத்துறையடிகடம்மருளே. (கo)

---

* பிணி - கட்டுதல்.

EFEO_TVG_149-166 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கறையினர்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்த
னறையும்பூம்புனல்பரந்தவரத்துறையடிகடம்மருளே
முறைமையாற்சொன்னபாடன்மொழியுமாந்தர்தம்வினைபோய்ப்
பறையுமையுறவில்லைப்பாட்டிவைபத்தும்வல்லார்க்கே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அரத்துறைநாதர் - தேவியார் - ஆனந்தநாயகியம்மை.
நிவாவென்பது ஒருநதி—புனல் - நிவாவெனப்பதம்பிரிக்க.
இது - மூத்துச்சிவிகை, முத்துச்சின்னமுதலியவைபெற்றபோதருளிச்செய்தது.

திருமறைக்காடு - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்

பொங்குவெண்மணற்கானற்பொருகடற்றிரைதவழ்முத்தங்
கங்குலாரிருள்போழுங்கலிமறைக்காடமர்ந்தார்தாம்
திங்கள்சூடினரேனுந்திரிபுரமெரித்தனரேனு
மெங்குமெங்கள்பிரானர்புகழலதிகழ்பழியிலரே. (க)

கூவிளம்பிறைசூடிக்கொடுவரித்தோலுடையாடை
யானிலங்கிளைநாந்துமாடுவர்பூண்பதுமரவம்
கானலங்கழியோதங்கரையொதுகதிர்மணிதாம்பத்
தேனலங்கமழ்சோலைத்திருமறைக்காடமர்ந்தாரே. (உ)

நூணிணாய்வெளிதாகிநூல்கிடந்திலங்குபொன்மார்பிற்
பணியாமெனமுரலும்பனிமொழியுமையொருபாகன்
றணிணிதாயவெள்ளருவிசலசலதுணைமணிதாம்பக்
கணிணிதானுமோர்பிறையர்கலிமறைக்காடமர்ந்தாரே. (ஊ)

ஏழைவெண்குருகயலேயிளம்பெடைதனதெனக்கருதித்
தாழைவெண்மடற்புல்குந்தண்மறைக்காடமர்ந்தார்தா
மாழையங்கயலொண்கண்மலைமகள்கணவனதடியின்
னீழலேசரணுக்கினேபவர்வினைகலிவிலரே. (ச)

அரவம்வீக்கியவரையமதிர்கழறமுழியவடியும்
பரவகாஞ்செய்தபாவம்பறைதரவருளுவர்பதிதான்
மரவனீயர்சோலைமழலைவண்டியாழ்செயுமறைக்காட்
டிரவுமெல்லியும்பகலுமேத்துதல்குணமெனலாமே. (டு)

பல்லிலோடுகையேந்திப்பாடியுமாடியும்பலிதே
ரல்லல்வாழ்க்கையரேனுமழகியதிவரெமடிகள்
புல்லமேறுவர்பூதம்புடைசெலவுழிதர்வர்க்கிடமா
மல்குவெண்டிரையோதமாமறைக்காடதுதானே. (ரு)

நாகந்தான்கயிறுகளிர்வரையதற்குமத்தர்கப்
பாகத்தேவரோடசுரர்படுகடலளறெழக்கடைய
வேகஞ்செழுவங்கேவெருவொடுமிரிந்தெங்குமோட
வாகந்தன்னில்வைத்தமிர்தமாக்குவித்தான்மறைக்காடே. (எ)

தக்கன்வேள்வியைத்தகர்த்தோன்றனதொருபெருமையையோரான்
மிக்குமேற்சென்றமலையையெடுத்தலுமலைமகணடுங்க
நக்குத்தன்றிருவிரலாலூன்றலுநெடுத்தரக்கன்
பக்கவாயும்விட்டலறப்பரிந்தவன்பதிமறைக்காடே. (அ)

விண்டமாமலரோனும்விளங்கொளியரவணையானும்
பண்டுங்காண்பரிதாயபரிசினனவனுறைபதிதான்
கண்டலங்கழியோதங்கரையொதுகதிர்மணிதழும்ப
வண்டலங்கமழ்சோலைமாமறைக்காடதுதானே. (கூ)

பெரியவாகியசுடையும்பிலியுமவைவெயிற்கரவாக்
கரியமண்டைகையேந்திக்கல்லெனவுழிதருங்கழுக்க
ளரியவாகவுண்டோதுமவர்திறமொழிந்துநம்மடிகள்
பெரியசீர்மறைக்காடேபேணுமின்மனமுடையீரே. (கo)

மையலாம்பொழில்சூழ்ந்தமாமறைக்காடமர்ந்தாரைக்
கையினாற்றொழுதெழுவான்காழியுண்ஞானசம்பந்தன்
செய்தசெந்தமிழ்பத்துஞ்சிந்தையுட்சேர்க்கவல்லார்போய்ப்
பொய்யில்வானவரோடும்புகவலர்கொளவலர்புகழே. (கக)

சுவாமிபெயர்-வேதாரணியேசுவரர்-தேவியார்-யாழைப்பழித்தமொழியம்மை.

திருச்சிற்றம்பலம்.

திருப்புகலூர்வர்த்தமானீச்சரம் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டம்பாணிறமதியம்படர்சடைச்சுடர்விடுபாணி
நட்டங்களிருளாடுநாதனூர்நவின்றுறைகோயில்
புட்டன்பேடையோடாடும்பூம்புகலூர்த்தொண்டர்போற்றி
வட்டஞ்சூழ்ந்தடிபரவும்வர்த்தமானீச்சரத்தாரே. (க)

மூயல்வளாவியதிங்கள்வாண்முகத்தரிவையிற்றெரிவை
யியல்வளாவியதுடையவின்னமிர்தெத்தையெம்பெருமான்
கயல்வளாவியகழனிக்கருநிறக்குவளைகண்மலரும்
வயல்வளாவியபுகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (உ)

தொண்டர்தண்கயமூழ்கித்துணையலுஞ்சாந்தமும்புகையுங்
கொண்டுகொண்டடிபரவிக்குறிப்பறிமுருகன்செய்கோலங்
கண்டகண்டுகண்குளிரக்களிபரந்தெளிமல்குகள்ளார்
வண்டுபண்செயும்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (ரு)

EFEO_TVG_149-167 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பண்ணவண்ணத்தராகிப்பாடலோடாடலுந
விண்ணவண்ணத்தாயவிரிபுகலூரரோர்பாகம்
பெண்ணவண்ணத்தராகும்பெற்றியோடாணிணைபிணைந்த
வண்ணவண்ணத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. (ச)

ஈசனேறமர்கடவுளின்னமிர்தெந்தையெம்பெருமான்
பூசுமாசில்வெண்ணீற்றர்பொலிவுடைப்பூம்புகலூரின்
மூசுவண்டறைகொன்றைமுருகன்முப்போதுஞ்செய்முடிமேல்
வாசமாமலருடையார்வர்த்தமானீச்சரத்தாரே. (டு)

தளிரிளங்கொடிவளரத்தண்கயமிரியவண்டேறிக்
கிளரிளம்முழைதுழையக்கிழிதருபூம்புகலூரி
லுளரிளஞ்சுனைமலருமோலிதருசடைமுடியதன்மேல்
வளரிளம்பிறையுடையார்வர்த்தமானீச்சரத்தாரே. (கூ)

தென்கொலவிஞ்சமர்வடசொற்றிசைமொழியெழினரம்படுத்துத்
தஞ்சுகெஞ்சிருணீங்கத்தொழுதெழுதோல்புகலூரி
லஞ்சனம்பிதிர்ந்தனையவலிகடல்கடையவன்றெழுந்த
வஞ்சகஞ்சனிகண்டர்வர்த்தமானீச்சரத்தாரே. (எ)

சாமவேதமோர்த்தமோதியத்தசமூகன்பரவு
நாமதேயமுடையார்நன்குணர்ந்தடிகளென்றேத்தக்
காமதேவனவேவக்கனலெரிகொளுவியகண்ணர்
வாமதேவர்தண்புகலூர்வர்த்தமானீச்சரத்தாரே. (அ)

சீரணங்குநின்றசெருவுறுதிசைமுகனுமி
ராரணன்கருத்தழியவகைசெய்தசடைமுடிநம்ப
ராரணங்குமுமையையஞ்சுவித்தருளுதல்பொருட்டால்
வாரணத்துரிபோர்த்தார்வர்த்தமானீச்சரத்தாரே. (கூ)

கையிலுண்டுழல்வாருங்கமழ்துவராடையினூற்றம்
மெய்யைப்போர்த்துழல்வாருமுரைப்பனமெய்யெனவிரும்பேற்
செய்யிலைவாளைகளோடுசெங்கயல்குதிகொளும்புகலூர்
மையிலங்கண்டத்தெம்பெருமான்வர்த்தமானீச்சரத்தாரே. (கஎ)

பொங்குதண்புனல்சூழ்ந்தபோதணிபொழிற்புகலூரின்
மங்குன்மாமதிதவழும்வர்த்தமானீச்சரத்தாரைத்
தங்குசீர்திகழ்ஞானசம்பந்தன்றண்டமிழ்பத்து
மெங்குமேத்தவல்லார்களெய்துவரிமையவருலகே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வர்த்தமானீசுவரர் - தேவியார் - சருத்தார்க்குழலியம்மை.

திருத்தெங்கூர்ப் - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

புரைசெய்வல்வினைதீர்க்கும்புண்ணியர்விண்ணவர்போற்றக்
கரைசெய்மால்கடனஞ்சையுண்டவர்கருதலர்புரங்க
ளிரைசெய்தாரழலூட்டியபுலவரிபலிக்கெழிலிசேர்
விரைசெய்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (க)

சித்தந்தன்னடிநினைவார்செடிபடுகொடுவினைதீர்க்குங்
கொத்தின்முழ்சடைமுடிமேற்கோளெயிற்றரவொடுபிறையன்
பத்தர்தாம்பணிந்தேத்தும்பரம்பரன்பைம்புனல்பதித்த
வித்தன்முழ்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (உ)

அடையும்வல்வினையகலவருள்பவரனலுடைமூவாட்
படையர்பாய்புலித்தோலர்பைம்புனற்கொன்றையர்படர்புன்
சடையில்வெண்பிறைசூடித்தார்மணியனிதருகறுகண்
விடையர்வின்கெழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ங)

பண்டுநான்செய்தவினைகள்பறையவோர்நெறிபருள்பயப்பார்
கொண்டல்வான்மதிசூடிக்குரைகடல்விடமணிகண்டர்
வண்டுமரமலருமிமதுவுணவிதழ்மறிவெய்தி
விண்டவர்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ச)

சுழித்தவார்புனற்கங்கைசூடியோர்காலனைக்காலாற்
றெழித்துவானவர்நடுங்கச்செற்றவர்சிறையணிபறவை
கழித்தவெண்டலையேந்திக்காமனதுடல்பொடியாக
விழித்தவர்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ஞ)

தொல்லைவல்வினைதீர்ப்பார்சுடலைவெண்பொடியணிசுவண்ட
செல்லிசூடினர்நடுமிறையவரிமையவரேத்தச்
சில்லைமால்விடையேறித்திரிபுரந்தியெழச்செற்ற
வில்லினர்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ஈ)

நெறிகொள்சிந்தையராகிநினைபவர்வினைகெடநின்றூர்
முறிகொண்மேனிமுக்கண்ணர்முனைமதிநடுநடுத்திலங்கப்
பொறிகொள்வாளரவணிந்தபுண்ணியர்வெண்பொடிப்பூசி
வெறிகொள்பூம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (ஏ)

எண்ணிலாவிறலரக்கனெழிறிகழ்மால்வரையெடுக்கக்
கண்ணெலாம்பொடிந்தலறக்கால்விரலான்றியகருத்தர்
தண்ணுலாம்புனற்கண்ணிதயங்கியசடைமுடிச்சதுரர்
விண்ணுலாம்பொழிற்றெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (அ)

தேடித்தானயன்மாலுந்திருமுடியடியிணைகாணர்
பாடத்தான்பலபூதப்படையினர்சுடலையிற்பலகா

EFEO_TVG_149-168 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ஓடத்தான்மிகவல்லரருச்சுனற்கருள்செயக்கருதும்
வேடத்தார்திருத்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (கூ)

சடங்கொள்சிவரப்போர்வைச்சாக்கியர்சமணர்சொற்றவிர
விடங்கொள்வல்வினதீர்க்குமேத்துமினிருமருப்பொருகைக்
கடங்கொண்மால்களிற்றுரியர்கடல்கடைந்திடக்கனன்றெழுந்த
விடங்கொள்கண்டத்தர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரே. (கo)

வெந்தநீற்றினர்தெங்கூர்வெள்ளியங்குன்றமர்ந்தாரைக்
கந்தமார்பொழில்சூழ்ந்தகாழியுண்ஞானசம்பந்தன்
சந்தமாயினபாடற்றண்டமிழ்ப்பத்தும்வல்லார்மேல்
பந்தமாயினபாவம்பாறுதறேறுதல்பயனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வெள்ளிமலேயீஸ்வரர்-தேவியார்-பெரியாம்பிகையம்மை.

திருவாழ்கொளிபுத்தூர்-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சாகையாயிரமுடையார்சாமமுமோதுவதுடையா
நீகையார்கடைநோக்கியிரப்பதும்பலபலவுடையார்
தோகைமாமயிலனையதுடியிடைபாகமுமுடையார்
வாகைதுண்டுளிவீசும்வாழ்கொளிபுத்தூருளாரே. (க)

எண்ணிலீரமுமுடையாரெத்தனேயோரிவரறங்கள்
கண்ணுமாயிரமுடையார்கையுமோராயிரமுடையார்
பெண்ணுமாயிரமுடையார்பெருமையோராயிரமுடையார்
வண்ணமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (உ)

கொடியோராயிரமுடையார்துண்ணியராமவர்நோக்கும்
வடிவுமாயிரமுடையார்வண்ணமுமாயிரமுடையார்
முடியுமாயிரமுடையார்மொய்குழலாளையுமுடையார்
வடிவுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ங)

பஞ்சிதுண்டுகிலன்னபைங்கழற்சேவடியுடையார்
குஞ்சிமேகலையுடையார்கொந்தணிவேல்வலனுடையா
ரஞ்சும்வென்றவர்க்கணியாராணையினீரூரியுடையார்
வஞ்சிதுண்ணிடையுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ச)

பரவுவாளையுமுடையார்பழித்திகழ்வாளையுமுடையார்
விரவுவாளையுமுடையார்வெண்டலைப்பலிகொள்வதுடையா
ரரவம்பூண்பதுமுடையாராயிரம்பேர்மிகவுடையார்
வரமுமாயிரமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (ஞ)

தண்டிங்கள்தாளமுங்குழலுந்தண்ணுமைக்கருவியும்புறவிற்
கொண்டபூதமுமுடையார்கோலமும்பலபலவுடையார்
கண்டுகோடலுமரியார்காட்சியுமரியதோர்கரந்தை
வண்டுவாழ்பதியுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (சு)

மானவாழ்க்கையதுடையார்மலைந்தவர்மதிற்பரிசழித்தார்
தானவாழ்க்கையதுடையார்தவத்தொடுநாம்புகழ்ந்தேத்த
ஞானவாழ்க்கையதுடையார்நள்ளிருண்மகளிர்மின்றேத்த
வானவாழ்க்கையதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (எ)

ஏழுமூன்றுமோர்தலைகளுடையவனிடர்பட்டவடர்த்து
வேழவிசெற்றதும்விரும்பிவிருப்பவர்பலபலவுடையார்
கேழல்வெண்பிறையன்னகெழுமணிமிடறுகின்றிலங்க
வாழிசாந்தமுமுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (அ)

வென்றிமாமலரோனும்விரிகடற்றுயின்றவன்றானு
மென்றுமேத்துகையுடையாரிமையவர்துதிசெயவிரும்பி
முன்றின்மாமலர்வாசமுதுமதிதவழ்பொழிற்றில்லை
மன்றிலாடலதுடையார்வாழ்கொளிபுத்தூருளாரே. (கூ)

மண்டைகொண்டுழறேரர்மாசுடைமேனிவன்சமணர்
சூண்டர்பேசியபேச்சுக்கொள்ளன்மின்றிகழொளிகல்ல
துண்டவெண்பிறைசூடிச்சுண்ணவெண்பொடியணிந்தெங்கும்
வண்டுவாழ்பொழில்சூழ்ந்தவாழ்கொளிபுத்தூருளாரே. (கo)

நலங்கொள்பூம்பொழிற்காழிநற்றமிழ்ஞானசம்பந்தன்
வலங்கொள்வெண்மழுவாளன்வாழ்கொளிபுத்தூருளானை
யிலங்குவெண்பிறையானையேத்தியதமிழிவைவல்லார்
நலங்கொள்சிந்தையராகிநன்னெறியெய்துவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மாணிக்கவண்ணநாதர்-தேவியார்-வண்டமர்பூங்குழலம்மை.

திருஅரைசிலி-பண்-பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பாடல்வண்டறைகொன்றைபான்மதிபாய்புனற்கங்கை
கோடல்கூவிளமாலைமத்தமுஞ்செஞ்சடைக்குலவி
வாடல்வெண்டலைமாலைமருவிடவல்லியந்தோண்மே
லாடன்மாசுணமசைத்தவடிகளுக்கிடமரைசிலியே. (க)

ஏறுபேணியதேறியிளமதக்களிற்றினையெற்றி
வேறுசெய்ததனுரிவைவெண்புலால்கலக்கமெய்போர்த்த

EFEO_TVG_149-169 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ஆறுதேனவனும்பர்க்கொருவனல்லொளிகொளொண்சுடரா
றாறுசேர்தருசென்னியடிகளுக்கிடமாசிலியே. (உ)

கங்கைநிர்சடைமேலெதமிக்கதிளவனமென்
கொங்கையாளெருபாகமருவியகொல்லிவெள்ளேற்றன்
சங்கையாய்த்திரியாமேதன்னடியார்க்கருள்செய்து
வங்கையாலனலேந்துமடிகளுக்கிடமாசிலியே. (ஊ)

மிக்ககாலனைவீட்டிமெய்கெடக்காமனைவிழித்துப்
புக்கவூரிடுபிச்சையுண்பதுபொன்றிகழ்கொன்றை
தக்கதூறிகழ்மார்பிற்றவளவெண்ணீறணிந்தமை
யக்கினரும்பூண்டவடிகளுக்கிடமாசிலியே. (எ)

மானஞ்சும்மடநோக்கிமலைமகள்பாகமுமருவித்
தானஞ்சாவரண்மூன்றுந்தழலெழச்சரமதுரந்து
வானஞ்சும்பெருவிடத்தையுண்டவன்மாமறையோதி
யானஞ்சாடியசென்னியடிகளுக்கிடமாசிலியே. (டு)

பரியமாசுணங்கயிறுப்பரும்பதமதற்குமத்தாகப்
பெரியவேலையைக்கலங்கப்பேணியவானவர்கடையக்
கரியநஞ்சதுதோன்றக்கலங்கியவவர்தமைக்கண்டு
வரியவாரமிர்தாக்குமடிகளுக்கிடமாசிலியே. (ஊ-எ)

வண்ணமால்வரைதன்னைமறித்திடலுற்றவல்லரக்கன்
கண்ணுந்தோளுநல்வாயுநெரிதரக்கால்விரலூன்றிப்
பண்ணின்பாடல்கைகரம்பாற்பாடியபாடலைக்கேட்டு
அண்ணலாரருள்செய்தவடிகளுக்கிடமாசிலியே. (அ)

சூரியமாலுருவாகிக்குவலயமளந்தவன்றானும்
வெறிகொடாமைமேலேவிரும்பியமெய்த்தவத்தோனுஞ்
செறிவொணவகையெங்குந்தேடியுந்திருவடிகாண
வறிவொணவுருவத்தெம்மடிகளுக்கிடமாசிலியே. (க)

சூரனையெய்தியமடவார்நிற்பவேசூழ்சியைப்பறித்துங்
கிரனைகையிலுண்பவருந்தேரருஞ்சொல்லியதேற்றப்
பொருளைப்பெய்யிலிமெய்யெனாதனைப்பொன்னடிவணங்கு
மருளையார்தரநல்குமடிகளுக்கிடமாசிலியே. (க0)

அல்லிநீள்வயல்சூழ்ந்தவரைசிலியடிகளைக்காழி
நல்லஞானசம்பந்தனற்றமிழ்பத்திவைகாளுஞ்
சொல்லவல்லவர்தம்மைச்சூழ்ந்தமர்தொழுதேத்த
வல்லவாலுலகெய்திவைகலுமகிழ்ந்திருப்பாரே. திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அரசிலிநாதர-தேவியார்-பெரியம்மை.

ஸ்ரீகாழி - பண் - பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

பொங்குவெண்புரிவளரும்பொற்புடைமார்பனெம்பெருமான்
செங்கணாடரவாட்டுஞ்செல்வனெஞ்சிவனுறைகோயில்
பங்கமில்பலமறைகள்வல்லவர்பத்தர்கள்பரவுந்
தங்குவெண்டிரைக்கானற்றண்வயற்காழிநன்னகரே. (க)

தேவர்தானவர்பரந்துதிண்வரைமால்கடனிறுவி
நாவதாயமிர்தண்ணயந்தவரிருந்திடக்கண்டு
ஆவவென்றருநஞ்சமுண்டவனமர்தருமூதூர்
காவலார்மதில்சூழ்ந்தகடிபொழிற்காழிநன்னகரே. (உ)

கரியின்மாமுகமுடையகணபதிதாதைபல்பூதந்
திரியவில்பலிக்கேகுஞ்செழுஞ்சுடர்சேர்தருமூதூர்
சரியின்முன்கைகன்மாதர்சதிர்படமாடமாடி
யுரியகாமங்களேத்துமொலிபுனற்காழிநன்னகரே. (ஊ)

சங்கவெண்சுழைச்செவியன்றண்மதிசூடியசென்னி
யங்கம்பூணெனவுடையவப்பனுக்கழகியவூராங்
துங்கமாளிகையுயர்ந்ததொகுகொடிவானிடைமிடைந்து
அங்கவான்மதிதடவுமணிபொழிற்காழிநன்னகரே. (எ)

மங்கைகூறமர்மெய்யான்மான்மறியேந்தியகையா
னெங்களீசனென்றெழுவாரிடர்வினைகெடுப்பவற்கூராஞ்
சங்கையின்றிநன்னியமந்தாஞ்செய்துதருகியின்மிக்க
கங்கைநாடுவர்கீர்த்திமறையவர்காழிநன்னகரே. (டு)

நாறுகூவிளமத்தநாகமுஞ்சூடியநம்ப
னேறுமேறியவீசனிருந்தினிதமர்தருமூதூர்
நீறுபூசியவுருவர்நெஞ்சினுள்வஞ்சமொன்றின்றித்
தேறுவார்கள்சென்றேத்துஞ்சீர்திகழ்காழிநன்னகரே. (சு)

நடமதாடியநாதனந்திதன்முழவிடைக்காட்டில்
விடமமர்ந்தொருகாலம்விரித்தறமுரைத்தவற்கூரா
மிடமதாமறைபயில்வாரிருந்தவர்திருந்தியம்போதிற்
குடமதார்மணிமாடங்குலாவியகாழிநன்னகரே. (எ)

கார்கொண்மேனியவ்வரக்கன்றன்கடுந்திறலினைக்கருதி
யேர்கொண்மங்கையுமஞ்சவெழின்மலையெடுத்தவனெரியச்
சீர்கொள்பாதத்தோர்விரலாற்செறுத்தவெஞ்சிவனுறைகோயி
னீர்கொள்வண்டினஞ்சூழ்ந்ததண்வயற்காழிநன்னகரே. (அ)

மாலுமாமலரானுமருவிநின்றியலியமனத்தாற்
பாலுங்காண்பரிதாயபரஞ்சுடர்தன்பதியாகுஞ்

சேலும்வாளையுங்கயலுஞ்செறிந்துதன்கீளையொடுமேய
வாலுஞ்சாலிநற்கதிர்களணிவயற்காழிநன்னகரே. (கூ)

புத்தர்பொய்மிகுசமணர்பொலிகுழலடியிணைகாணுஞ்
சித்தமற்றவர்க்கிலாமைத்திகழ்ந்தநற்செழுஞ்சுடர்க்கூராஞ்
சித்தரோடுநல்லமரர்செறிந்தன்மாமலர்கொண்டு
முத்தனேயருளென்றுமுறைமைசெய்காழிநன்னகரே. (கo)

ஊழியானவைபலவுமொழித்திடுங்காலத்திலோங்கு. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகாழி - திருவிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்

நம்பொருணமக்களென்றுநச்சியிச்சைசெய்துநீ
ரம்பரமடைந்துசாலவல்லலுய்ப்பதன்முன
மும்பர்காதனுத்தமனெளிம்மிகுத்தசெஞ்சடை
நம்பன்மேவுநன்னகர்நலங்கொள்காழிசேர்மினே. (க)

பாவமேவுமுள்ளமோடுபத்தியின்றிநித்தலு
மேவமானசெய்துசாவதன்முனம்மிசைந்துநீர்
தீபமாலைதூபமுஞ்செறிந்தகையராகிநந்
தேவதேவன்மன்னுமூர்திருந்துகாழிசேர்மினே, (உ)

சோறுகூறையின்றியேதுவண்டுதூரமாய்நுமக்
கேறுசுற்றமெள்கவேயிடுக்கணுய்ப்பதன்முன
மாறுமோர்சடையினனுகியானசெற்றவ
னூறுதேன்மலர்ப்பொழினலங்கொள்காழிசேர்மினே. (ங)

நச்சிநீர்பிறன்கடைநடந்துசெல்லாளேபு
முச்சிமேனும்மூளையுமுணர்ந்துகேட்பதன்முனம்
பிச்சர்நச்சரவரைப்பெரியசோதிபேணுவா
ரிச்சைசெய்யுமெம்பிரானெழில்கொள்காழிசேர்மினே. (ச)

கண்கள்காண்பரிழந்துமேனிகன்றியொன்றலாதநோ
யுண்கிலாதசெய்துநும்மையுய்த்தழிப்பதன்முனம்
விண்குலாவுதேவருய்யவேலுநஞ்சமுதுசெய்
கண்கண்மூன்றுடையவெங்கருத்தர்காழிசேர்மினே. (ஞ)

அல்லல்வாழ்க்கையுய்ப்பதற்கவத்தமேபிறந்துநீ
ரெல்லையில்பிணக்கினிற்கிடந்திடாதெழும்மினே
பல்லில்வெண்டலையினிற்பலிக்கியங்குபான்மையான்
கொல்லையேறதேறுவான்கோலக்காழிசேர்மினே. (ஞ-எ)

பொய்மிகுத்தவாயசாய்ப்பொருமையோடுசொல்லுநீ
மைமிகுத்தகண்டராயடித்துரைப்பதன்முன

மைமிகுத்தமேனிவாளரக்கனெரித்தவன்
பைமிகுத்தபாம்பரைப்பரமர்காழிசேர்மினே. (அ)

காலினேடுகைகளுந்தளர்ந்துகாமநோய்தனு
லேலவார்குழலினரிகழ்ந்துரைப்பதன்முன
மாலினேடுநான்முகன்மதித்தவர்கள்காண்கிலா
நீலமேவுகண்டனர்நிகழ்ந்தகாழிசேர்மினே. (கூ)

நிலைவெறுத்தநெஞ்சமோடுநேசமில்புதல்வர்கண்
மூலைவெறுத்தபேர்தொடங்கியேமுனிவதன்முனந்
தலைபறித்தகையர்தேரர்தாந்தரிப்பரியவன்
சிலைபிடித்துவெய்யிலெய்தான்பிருந்துகாழிசேர்மினே. (கo)

தக்கனுர்தலையரிந்தசங்கரன்றனதரை
யத்கினேடரவசைத்தவந்திவண்ணர்காழியை
யொக்கஞானசம்பந்தனுரைத்தபாடல்வல்லவர்
மிக்கவின்பமெய்திவீற்றிருந்துவாழ்தன்மெய்மையே (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தி - திருவிராகம் - பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வரைத்தலைப்பசும்பொனேடருங்கலனருந்திவந்
திரைத்தலைச்சுமந்துகொண்டெறிந்திலங்குகாவிரிக்
கரைத்தலைத்துருத்திபுக்கிருப்பதேகருத்தினு
யுரைத்தலைப்பொலிந்தனக்குணர்த்துமாறுவல்லமே. (க)

அடித்தடுத்தகத்தியோடுவன்னிகொன்றைகூவிளந்
தொடுத்துடன்சடைப்பெய்தாய்துருத்தியாயோர்காலனைக்
கடுத்தடிப்புறத்தினுனிறத்துதைத்தகாரண
மெடுத்தெடுத்துரைக்குமாறுவல்லமாகினல்லமே. (உ)

கங்குல்கொண்டதிங்களோடுகந்தைதங்குசெஞ்சடைச்
சங்கிலங்குவெண்குழைசரிந்திலங்குகாதினுப்
பொங்கிலங்குபூணதாலுருத்திராதுருத்திபுக்
கெங்குநின்னிடங்களாவடங்கிவாழ்வதென்கொலோ. (ங)

கருத்தினுலோர்காணியில்விருத்தியில்லைகொண்டர்த
மருத்தியாற்றம்வல்லசொல்லியையமேற்பதன்றியும்
மொருத்திபால்பொருத்திவைத்துடம்புவிட்டியோகியா
யிருத்திநீதுருத்திபுக்கிதென்னமாயமென்பதே. (ச)

துறக்குமாசொலப்படாய்துருத்தியாய்திருந்தடி
மறக்குமாறிலாதவென்னைமையல்செய்திம்மண்ணின்மேற்

EFEO_TVG_149-171 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பிறக்குமாறுகாட்டினுய்ப்பினிப்படுமுடம்புவிட்
டிறக்குமாறுகாட்டினுய்க்கிழுக்குகின்றதென்னீயே. (இ)

வெயிற்கெதிர்ந்திடங்கொடாதகங்குளிர்ந்தபைம்பொழிற்
றுயிற்கெதிர்ந்தபுள்ளினங்கண்மல்குதண்டுருத்தியாய்
மயிற்கெதிர்ந்தணங்குசாயன்மாதொர்பாகமாகமூ
வெயிற்கெதிர்ந்தோரம்பினுலெரித்தவில்லியல்லியே. (கூ)

கணிச்சியம்படைச்செல்வர்கழிந்தவர்க்கொழிந்தசீர்
துணிச்சிரக்கிரந்தையாய்கரந்தையாய்துருத்தியா
யணிப்படுந்தனிப்பிறைப்பனிக்கதிர்க்கவாவுநன்
மணிப்படும்பைகாகமிகுந்தவண்ணலல்லியே (எ)

சுடப்பொடிந்துடம்பிழந்தனங்கனுயமன்மத
னிடர்ப்படக்கடந்திடந்துருத்தியாகவெண்ணினுய்
கடற்படையுடையவக்கடலிலங்கைமன்னனை
யடற்படவடுக்கலிலடர்த்தவண்ணலல்லியே. (அ)

களங்குளிர்ந்திலங்குபோதுகாதலானுமாலுமாய்
வளங்கிளம்பொனங்கழல்வணங்கிவந்துகாண்கிலார்
தளங்கிளம்பிறைச்செனித்துருத்தியாயிருந்தடி
யுளங்குளிர்ந்தபோதெலாமுகந்துகந்துரைப்பனே. (கூ)

புத்தர்தத்துவமில்லாச்சமணுரைத்தபொய்தனை
யுத்தமமெனக்கொளாதுகந்தெழுந்துவண்டினங்
குத்தநின்றுபண்செயுஞ்சூழ்பொழிற்றுருத்தியெம்
பித்தன்பித்தனைத்தொழப்பிறப்பறுதல்பெற்றியே. (கo)

கற்றுமுற்றினர்தொழுங்கழுமலத்தருந்தமிழ்
சுற்றுமுற்றுமாயினனவன்பகர்ந்தசொற்களாற்
பெற்றமொன்றுயர்த்தவன்பெருந்துருத்திபேணவே
குற்றமுற்றுமின்மையிற்குணங்கள்வந்துகூடுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேதேசுவரர் - தேவியார் - முகிழாம்பிகையம்மை.

திருக்கோடிகாத் - திருவிராகம் - பண் - நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

இன்றுநன்றுநாளைநன்றென்றுநின்றவிச்சையாற்
பொன்றுநின்றவாழ்க்கையைப்போகவிட்டுப்போதுமின்
மின்றயங்குசோதியான்வெண்மதிவிரிபுனற்
கொன்றைசூடியசென்னியான்கோடிகாவுசேர்மினே. (க)

அல்லன்மிக்கவாழ்க்கையையாதரித்திராதுநீர்
நல்லதோர்நெறியினோடுதுங்கடம்மினே
வில்லையன்னவாணுதல்வெள்வளையோர்பாகமாங்
கொல்லிவெள்ளேறேற்றினுன்கோடிகாவுசேர்மினே. (உ)

துக்கமிக்கவாழ்க்கையின்சோர்வினைத்துறந்துநீர்
தக்கதோர்நெறியினேச்சார்தல்செய்யப்போதுமி
னக்கணிந்தசைமிசையாறணிந்தசென்னிமேற்
கொக்கிறகணிந்தவன்கோடிகாவுசேர்மினே. (ஊ)

பண்டுசெய்தவல்வினைபற்றறக்கெடும்வகை
யுண்டுமக்குரைப்பனுனல்லதீதொழிமினே
மண்டுகங்கைசெஞ்சடைவைத்துமாதோர்பாகமாக்
கொண்டுகந்தமார்பினுன்கோடிகாவுசேர்மினே. (ச)

மூன்றுநீர்செய்பாவத்தான்மூர்த்திபாதஞ்சிந்தியா
தின்னநீரிடும்பையின்மூழ்கிநீரெழும்மினே
பொன்னுவென்றகொன்றையான்பூதம்பாடவாடலான்
கொன்னவிலும்வேலினுன்கோடிகாவுசேர்மினே. (ஞ)

ஏவமிக்கசிந்தையோடின்பமெய்தலாமெனப்
பாவமெத்தனையுநீர்செய்தொருபயனிலைக்
காவன்மிக்கமாநகர்க்காய்ந்துவெங்கனல்படக்
கோவமிக்கநெற்றியான்கோடிகாவுசேர்மினே. (எ)

ஏணழிந்தவாழ்க்கையையின்பமென்றிருந்துநீர்
மாணழிந்தமூப்பினுல்வருந்தன்முன்னம்வம்மினே
பூணல்வெள்ளெலும்பினுன்பொன்றிகழ்சடைமுடிக்
கோணல்வெண்பிறையினுன்கோடிகாவுசேர்மினே. (அ)

மற்றிவாழ்க்கைமெய்யெனும்மருத்தினேததவிர்ந்துநீர்
பற்றிவாழ்மின்சேவடிபணிந்துவந்தெழுமினே
வெற்றிகொடசமுகன்விறல்கெடவிருந்தசேர்
குற்றமில்வையினுன்கோடிகாவுசேர்மினே. (அ)

மங்குநோயுறும்பிணிமாயுமவ்வண்ணஞ்சொல்லுவன்
செங்கண்மாறிசைமுகன்சென்றளந்துங்காண்கிலா
வெங்கண்மால்விடையுடைவேதியன்விரும்புமூர்
கொங்குலாம்வளம்பொழிற்கோடிகாவுசேர்மினே. (கூ)

தட்டொடுதழைமயிற்பிலிகொள்சமணரும்
பட்டுடைவிரிதுகிலினுர்கள்சொற்பயனிலை
விட்டபுன்சடையினுன்மேதகுமுழவொடு
கொட்டமைந்தவாடலான்கோடிகாவுசேர்மினே. (கo)

EFEO_TVG_149-172 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கொங்கணிகுளிர்பொழிற்கோடிகாவுமேவிய
செந்தழலுருவனேச்சிர்மிகுநிறலுடை
யந்தணர்புகலியுளாயகேள்விஞானசம்
பந்தனதமிழ்வல்லார்பாவமானபாறுமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கோடீசுவரர்-தேவியார்-வடிவாம்பிகையம்மை.

திருக்கோவலூர்வீரட்டம்-திருவிராகம்--பண்ணைட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

படைகொள்கூற்றம்வந்துமெய்ப்பாசம்விட்டபோதின்க
னிடைகொள்வாமெக்கிலியெழுகபோதுநெஞ்சமே
குடைகொள்வேந்தன்மூதாதைகுமுகன்கோவலூர்தனுள்
விடையதேறுங்கொடியினன்வீரட்டானஞ்சேர்துமே (க)

கரவலாளர்தம்மனைக்கடைகடோறுங்காலிமிர்த்
திரவலாழிநெஞ்சமேயினியதெய்தவேண்டினீர்
குரவமேறிவண்டினங்குழலோடியாழ்செய்கோவலூர்
விரவிநாறுகொன்றையான்வீரட்டானஞ்சேர்துமே. (உ)

உள்ளத்தீரோபோதுமின்னுறுதியானதறிதிரோ
லள்ளற்சேற்றிற்காலிட்டங்கவலத்துள்ளமுந்தாதே
கொள்ளப்பாடுகித்தான்குழகன்கோவலூர்தனில்
வெள்ளந்தாங்குசடையினன்வீரட்டானஞ்சேர்துமே. (ங)

கனைகொளிருமல்சூலகோப்கம்பதாளிகுன்மமு
மினையபலவுமூப்பினெடெய்திவந்துகலியாமுன்
பனைகளுலவுபைம்பொழிற்பழனஞ்சூழ்ந்தகோவலூர்
வினையைவென்றவேடத்தான்வீரட்டானஞ்சேர்துமே. (ச)

உளங்கொள்போகமுய்த்திடாருடம்பிழந்தபோதின்கட்
டுளங்கினின்றுநாடொறுந்துயரலாழிநெஞ்சமே
வளங்கொள்பெண்ணைவந்துலாவயற்கள்சூழ்ந்தகோவலூர்
விளங்குகோவணத்தினன்வீரட்டானஞ்சேர்துமே. (ஞ)

கேடுமூப்புச்சாக்காடுகெழுமிவந்துநாடொறு
மாடுபோனைகளாயாக்கைபோக்கதன்றியுங்
கூடிநின்றுபைம்பொழிற்குழகன்கோவலூர்தனுள்
வீடுகாட்டுநெறியினன்வீரட்டானஞ்சேர்துமே. (ட)

உரையும்பாட்டுந்தளர்வெய்தியுடம்புமூத்தபோதின்க
ணரையுந்நிரையுங்கண்டெள்கிநகுவர்நமர்களாதலால்
வரைகொள்பெண்ணைவந்துலாவயல்கள்சூழ்ந்தகோவலூர்
விரைகொள்சேர்வெண்ணீற்றினன்வீரட்டானஞ்சேர்துமே. (ண)

ஏதமிக்கமூப்பினோடிருமலீரோயென்றிவை
யூதலாக்கையோம்புவீருறுதியாவதறிதிரோற்
போதில்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனுள்
வேதமோதுநெறியினன்வீரட்டானஞ்சேர்துமே. (அ)

ஆறுபட்டபுன்சடையமகனையிழைக்கொரு
கூறுபட்டமேனியான்குழகன்கோவலூர்தனி
னீறுபட்டகோலத்தானீலகண்டனிருவர்க்கும்
வேறுபட்டசிந்தையான்வீரட்டானஞ்சேர்துமே. (கூ)

சூலிகொளாழிநெஞ்சமேகுறைதுவரிட்டார்களும்
மறிவிலாதவமணர்சொல்லவத்தமாவதறிதிரோற்
பொறிகொள்வண்டுபண்செயும்பூந்தண்கோவலூர்தனில்
வெறிகொள்கங்கைதாங்கினன்வீரட்டானஞ்சேர்துமே. (கூ)

கழியோடிலவுகானல்சூழ்காழிஞானசம்பந்தன்
பழிகடீரச்சொன்னசொற்பாவநாசமாதலா
லழிவிலீர்கொண்டேத்துமினந்தண்கோவலூர்தனில்
விழிகொள்பூதப்படையினன்வீரட்டானஞ்சேர்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டானேசுவரர்-தேவியார்-சிவானந்தவல்லியம்மை.

திருவாரூர்த்-திருவிராகம்-பண்ணைட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

பருக்கையானைமத்தகத்தரிக்குலத்துகிர்ப்புகந்
தெருக்கிலாயநித்திலந்நிரக்குநீள்பொருப்பனூர்
கருக்கொள்சோலைசூழநீடுமாடமாளிகைக்கொடி
யருக்கன்மண்டலத்தணாவுமந்தணாருரென்பதே. (க)

விண்டவெள்ளெருக்கலர்ந்தவன்னிகொன்றைமத்தமு
மிண்டைகொண்டசெஞ்சடைமுடிச்சிவனிருந்தவூர்
கெண்டைகொண்டலர்ந்தகண்ணினார்கள்கீதவோசைபோ
யண்டரண்டமூடறுக்குமந்தணாருரென்பதே. (உ)

கறுத்தகஞ்சமுண்டிருண்டகண்டர்காலனின்னுயிர்
மறுத்தமாணிதன்றனகம்வண்மைசெய்தமைந்தனூர்
வெறித்துமேதியோடிமூசுவள்ளைவெள்ளநீள்கொடி
யுறுத்துமண்டியாவிபாயுமந்தணாருரென்பதே. (ங)

அஞ்சுமொன்றியாறுவீசிநீறுபூசுமேனியிற்
குஞ்சியாரவந்திசெய்யவஞ்சலென்னுமன்னுரூர்

EFEO_TVG_149-173 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பஞ்சியாருமெல்லடிப்பணைத்தகொங்கைதுண்ணிடை
யஞ்சொலாரரங்கெடுக்குமந்தணூரென்பதே. (ச)
சங்குலாவுதிங்கள்சூடிதன்னேயன்னுவார்மநத்
தங்குலாவினின்றவெங்களாதிதேவன்மன்னுமூர்
தெங்குலாவுசோலைநீடுதேனுலாவுசெண்பக
மங்குலாவியண்டகாறுமந்தணூரென்பதே. (ஞ)

கள்ளநெஞ்சவஞ்சகக்கருத்தைவிட்டருத்தியோ
டுள்ளமொன்றியுள்குவாருளத்துளானுகந்தவூர்
துள்ளிவாளைபாய்வயற்சுரும்புலாவுநெய்தல்வா
யள்ளனையாரல்வாருமந்தணூரென்பதே. (ஞ)

கய்கைபொங்குசெஞ்சடைக்கரந்தகண்டர்காமனை
மங்கவெங்கணல்விழித்தமங்கைபங்கன்மன்னுமூர்
தெங்கினூடுபோகிவாழைகொத்திறுத்துமாவின்மே
லங்கண்மந்திமூங்கியேறுமந்தணூரென்பதே. (எ)

வரைத்தலமெடுத்தவன்முடித்தலம்முரத்தொடு
நெரித்தவன்புரத்தைமுன்னெரித்தவனிருந்தவூர்
நிரைத்தமாளிகைத்திருவினேரனர்கள்வெண்ணகை
யரத்தவாய்மடந்தைமார்களாடுமாரூரென்பதே. (அ)

இருந்தவன்கிடந்தவனிடந்துவிண்பறந்துமெய்
வருந்தியுமளப்பொணாதவானவன்மகிழ்ந்தவூர்
செருந்திஞாழல்புன்னைவன்னிசெண்பகஞ்செழுங்குரா
வரும்புசோலைவாசநாறுமந்தணூரென்பதே. (கூ)

பறித்தவெண்டலைக்கடிப்படுத்தமேனியார்தவம்
வெறித்தவேடன்வேலைநஞ்சமுண்டகண்டன்மேவுமூர்
மறித்துமண்டுவண்டல்வாரிமின்நிரீவயற்செழு
லறுத்துவாயசும்புபாயுமந்தணூரென்பதே. (கo)

வல்லிசோலைநீடுமன்னுவீதிபொன்னுலா
வல்லிமாதமர்ந்திருந்தவந்தணூராதியை
நல்லசொல்லுஞானசம்பந்தனுவிலின்னுரை
வல்லதொண்டர்வானமாளவல்லர்வாய்மையாகவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிரபுரம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

அன்னமென்னடையரிவையோடினிதுறையமர்தம்பெருமானூர்
மின்னுசெஞ்சடைவெள்ளெருக்கம்மலர்வைத்தவர்வேதந்தாம்
பன்னுநன்பொருள்பயந்தவர்பருமதிற்சிரபுரத்தார்சீரார்
பொன்னின்மாமலரடிதொழுமடியவர்வினையொடும்பொருந்தாரே. (க)

கோலமாகரியுரித்தவரரவொடுமேனக்கொம்பிளவரமை
சாலப்பூண்டுதண்மதியதுசூடியசங்கரனூர்தம்மைப்
போலத்தம்மடியார்க்குமின்பளிப்பவர்பொருகடல்விடமுண்ட
நீலத்தார்மிடற்றண்ணலார்சிரபுரந்தொழுவினைநில்லாவே. (உ)

மானத்திண்புயவரிசிலைப்பார்த்தனைத்தவங்கெடமெய்த்தன்று
கானத்தேதிரிவேடனுயர்செயக்கண்டருள்புரிந்தார்பூந்
தேனத்தேர்ந்துசேர்வண்டுகடிரிதருஞ்சிரபுரத்துறையெங்கள்
கோனைக்கும்பிடுமடியரைக்கொடுவினைகுற்றங்களுறுகாவே. (ஙு)

மாணிதன்னுயிர்மதித்துணவந்தவக்காலனையுதைசெய்தார்
பேணியுள்குமெய்யடியவர்பெருந்துயர்ப்பிணக்கறுத்தருள்செய்வார்
வேணிவெண்பிறையுடையவர்வியன்புகழ்ச்சிரபுரத்தமர்கின்ற
வாணிப்பொன்னினையடிதொழுமடியவர்க்கருவினையடையாவே. (ச)

பாருநீரொடுபல்கதிரிரவியும்பனிமதியாகாசம்
ஓரும்வாயுவும்மொண்கனல்வேள்வியிற்றலைவனுமாய்நின்றூர்
சேருஞ்சந்தனமகிலொடுவந்திழிசெழும்புனற்கோட்டாறு
வாருந்தண்புனல்சூழ்சிரபுரந்தொழுமடியவர்வருந்தாரே. (டு)

ஊழியந்தத்நிலொலிகடலோட்டந்திவ்வுலகங்களவைமூட
வாழியெந்தையென்றமரர்கள்சரண்புகவந்தரத்துயர்ந்தார்தாம்
யாழினேர்மொழியேழையோடினிதுறையின்பனெம்பெருமானூர்
வாழிமாநகர்ச்சிரபுரந்தொழுதெழவல்வினையடையாவே. (கூ)

பேய்கள்பாடப்பல்பூதங்கடுதிசெயப்பிணமிடுகாட்டில்
வேய்கொடோளிதான்வெள்கிடமாநடமாடும்வித்தகனுரொண்
சாய்கடான்மிகவுடையதண்மறையவர்தருசிரபுரத்தார்தாந்
தாய்களாயினர்பலலுயிர்க்குந்தமைத்தொழுமவர்தளராரே. (எ)

இலங்குபூண்வரைமார்புடையிராவணனெழில்கொள்வெற்பெடுத்தனு
கலங்கச்செய்தலுங்கண்டிதங்கழலடிநெரியவைத்தருள்செய்தார்
புலங்கொள்செங்கமூநீர்மலர்த்தெவ்றன்மன்றதனிடைப்புகுந்தாருங்
குலங்கொண்மாமறையவர்சிரபுரந்தொழுதெழவினைகுறுகாவே. (அ)

வண்டுசென்றணைமலர்மிசைநான்முகன்மாயனென்றிவரன்று
கண்டுகொள்ளவோரேனமோடன்னமாய்க்கிளரியும்பறந்துந்தாம்
பண்டுகண்டதுகாணவேநீண்டவெம்பசுபதிபரமேட்டி
கொண்டசெல்வத்துச்சிரபுரந்தொழுதெழவினையவைகூடாவே. (கூ)

பறித்தபுன்தலைக்குண்டிகைச்சமணரும்பார்மிசைத்துவர்தோய்ந்த
செறித்தசிவரத்தேரருந்தேர்கிலாத்தேவர்கள்பெருமானூர்
மூறித்துமேதிகள்கரும்புகின்றுவியின்மூழ்கிடவிளவாளை
வெறித்துப்பாய்வயற்சிரபுரந்தொழுவினைவிட்டிடுமிகத்தானே. (கo)

EFEO_TVG_149-174 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பாசுபாணியைப்பத்தர்களத்தனைப்பையரவோடக்கு
நிரைசெய்பூண்டிருமார்புடைநிமலனேத்திலப்பெருந்தொத்தை
விரைசெய்பூம்பொழிற்சிரபுரத்தண்ணலேவிண்ணவர்பெருமானைப்
பரவசம்பந்தன்செந்தமிழ்வல்லவர்பரமனைப்பணிவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஅம்பர்த்திருமாகாளம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

புல்குபொன்னிறம்புரிசடைநெடுமுடிப்போழிளமதிசூடிப்
பில்குதேனுடைநறுமலர்க்கொன்றையும்பிணையல்செய்தவர்மேய
மல்குதண்டுறையரிசிலின்வடகரைவருபுனன்மாகாள
மல்லுரண்பகலுந்தொழுமடியவர்க்கருவினையடையாவே. (க)

அரவமாட்டுவரந்துகிலுடையதளங்கையிலனலேந்தி
யிரவுமாடுவரிவையிவர்சரிதைகளிசைவனபலபூத
மரவுந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பரவியும்பணிந்தேத்தவல்லாரவர்பயன்றலைப்படுவாரே. (உ)

குணங்கள்கூறியுங்குற்றங்கள்பரவியுங்குரைகழலடிசேரக்
கணங்கள்பாடவுங்கண்டவர்பரவவுங்கருத்தறிந்தவர்மேய
மணங்கொள்பூம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
வணங்குமுள்ளமோடணையவல்லார்க்கலவல்வினையடையாவே. (ங)

எங்குமேதுமோர்பிணியிலர்கேடிலரிழைவளர்நறுங்கொன்றை
தங்குதொங்கலுந்தாமமுங்கண்ணியுந்தாமகிழ்ந்தவர்மேய
மங்குரேய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
கங்குலும்பகலுந்தொழுமடியவர்காதன்மையுடையாரே. (ச)

நெதியமென்னுளபோகமற்றென்னுளநிலமிசைநலமாய
கதியமென்னுளவானவரென்னுளர்கருதியபொருள்கூடின்
மதியந்தோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
புதியபூவொடுசாந்தமும்புகையுங்கொண்டேத்துதல்புரிந்தோர்க்கே. (ஞ)

கண்ணுலாவியகதிரொளிமுடிமிசைக்கனல்விடுசுடர்நாகந்
தெண்ணிலாவொடுதிலதமுநகுதலைதிகழவைத்தவர்மேய
மண்ணுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாள
முண்ணிலாகினைப்புடையவரியாவரிவ்வுலகினிலுயர்வாரே. (ட)

தூசுதானைத்தோலுடைக்கண்ணியஞ்சுடர்விடுநறுங்கொன்றை
பூசுவெண்பொடிபூசுவதன்றியும்புகழ்புரிந்தவர்மேய
மாசுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பேசுமீர்மையரியாவரிவ்வுலகினிற்பெருமையைப்பெறுவாரே. (ண)

பௌவமார்கடலிலங்கையர்கோன்றனைப்பருவரைக்கீழ்ன்றி
யெவ்வந்தீரவன்றிமையவர்க்கருள்செய்தவிறையவனுறைகோயின்
மவ்வன்றோய்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கவ்வையாற்றொழுமடியவர்மேல்வினைகனலிடைச்செதிளன்றே. (அ)

உய்யுங்காரணமுண்டென்றுகருதுமினெளிகிளர்மலரோனும்
பைகொள்பாம்பணைப்பள்ளிகொளண்ணலும்பரவரின்றவர்மேய
மையுலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளங்
கையினுற்றொழுதவலமும்பிணியுந்தங்கவலையுங்களைவாரே. (கூ)

பிண்டிபாலருமண்டைகொடேரரும்பீலிகொண்டுழல்வாருங்
கண்டநூலருங்கடுந்தொழிலாளருங்கழறின்றவர்மேய
வண்டலாம்பொழிலரிசிலின்வடகரைவருபுனன்மாகாளம்
பண்டுநாஞ்செய்தபாவங்கள்பற்றறப்பரவுதல்செய்வோமே. (கo)

மாறுதன்னெமண்மிசையில்லதுவருபுனன்மாகாளத்
தீறுமாதியுமாகியசோதியையேறமர்பெருமானை
நாறுபூம்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனதமிழ்மாலை
கூறுவாரையுங்கேட்கவல்லாரையுங்குற்றங்களுறுகாவே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் — காளகண்டேசுவரர். தேவியார் — பகுரகாயகியம்மை.

திருக்கடிக்குளம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்

பொடிகொண்மேனிவெண்ணூலினர்தோலினர்புலியுரியதளாடை
கொடிகொளேற்றினர்மணிகினினெனவருகுரைகழல்சிலம்பார்க்கக்
கடிகொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தைத்தம்
முடிகள்சாய்த்தடிவீழ்தருமடியரைமுன்வினைமூடாவே. (க)

விண்களார்தொழும்விளக்கினைத்துளக்கிலாவிகிர்தனைவிழவாரு
மண்களார்துதித்தன்பராயின்புறும்வள்ளலைமருவித்தம்
கண்களார்தரக்கண்டுநங்கடிக்குளத்துறைதருகற்பகத்தைப்
பண்களார்தரப்பாடுவார்கேடிலர்பழியிலர்புகழாமே. (உ)

பொங்குநற்கரியுரியதுபோர்ப்பதுபுலியதளழனுகந்
தங்கமங்கையைப்பாகமதுடையவர்தழல்புரைதிருமேனிக்
கங்கைசேர்தருசடையினர்கடிக்குளத்துறைதருகற்பகத்தை
யெங்குமேத்திநின்றிறும்புறுமடியரையிடும்பைவந்தடையாவே. (ங)

நீர்கொணீள்சடைமுடியனைநிலத்திலத்தொத்தினைகிரில்லாப்
பார்கொள்பாரிடத்தவர்தொழும்பவளத்தைப்பசும்பொனேவிசும்பாரும்
கார்கொள்பூம்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தன்னைச்
சீர்கொள்செல்வங்களேத்தவல்லார்வினைதேய்வதுதிணமாமே. (ச)

EFEO_TVG_149-175 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சூரும்புசேர்சடைமுடியினன்மதியொடுதன்னியதழனுக
மரும்புதாதவிழ்ந்தலர்ந்தனமலர்பலகொண்டடியவர்போற்றக்
கரும்புகார்மலிகொடிமிடைகடிக்குளத்துறைதருசுற்பகத்தை
விரும்புவேட்கையோடுளமகிழ்ந்துனைப்பவர்விதியுடையவர்தாமே. (கூ)

மாதிலங்கியபாகத்தன்மதியமொடலைபுனலழனுகம்
போதிலங்கியகொன்றையுமத்தமும்புரிசடைக்கழகாகக்
காதிலங்கியகுழையினன்கடிக்குளத்துறைதருகற்பகத்தின்
பாதங்கைதொழுதேத்தவல்லார்வினைபற்றறக்கெடுமன்றே. (கூ)

குலவுகோலத்தகொடிநெடுமாடங்கள்குழாம்பலகுளிர்பொய்கை
யுலவுபுள்ளினமன்னங்களாலிடும்பூவைசேருங்கூந்தற்
கலவைசேர்தருகண்ணியன்கடிக்குளத்துறையுங்கற்பகத்தைச்சிர்
நிலவினின்றுகின்றேத்துவார்மேல்வினைநிற்ககில்லாதானே. (எ)

மதித்தவாளரக்கன்னவன்மலைதன்மேன்மதியிலாமையிலோடி
யெடுத்தவுமுடிதோள்கரநெரிந்திறவிறையவன்விரலூன்றக்
கடுத்துவாயொடுகையெடுத்தலறிடக்கடிக்குளந்தனின்மேவிக்
கொடுத்தபேரருட்கூத்தனீயெத்துவார்குணமுடையவர்தாமே. (அ)

கீரினூர்கடற்றுயின்றவனயனெடுங்கழடிமுடிகாணர்
பாரினூர்விசும்புறப்பரந்தெழுந்ததோர்பவளத்தின்படியாகிக்
சாரினூர்பொழில்சூழ்தருகடிக்குளத்துறையுங்கற்பகத்தின்றன்
சீரினூர்கழலேத்தவல்லார்களேத்தீவினையடையாவே. (கூ)

குண்டர்தம்மொடுசாக்கியர்சமணருங்குறியினெறிநில்லா
மிண்டர்மிண்டுரைகேட்டவை மெய்யெனக்கொள்ளன்மின்விடமுண்ட
கண்டர்முண்டநன்மேனியர்கடிக்குளத்துறைதருமெம்மீசர்
தொண்டர்தொண்டனைத்தொழுதடிபணிமின்கடுநெறியெளிதாமே. (கூ)

தனமலிபுகழ்தயங்குபூந்தராயவர்மன்னனற்சம்பந்தன்
மனமலிபுகழ்வண்டமிழ்மாலைகண்மாலதர்மகிழ்வோடுங்
கனமலிகடலோதம்வந்துலவியகடிக்குளத்தமர்வானை
யினமலிந்திசைபாடவல்லார்கள்போயிறைவனோடிறைவாரே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-கற்பகேசுவரர்-தேவியார்-சவுந்தராம்பிகையம்மை.

திருக்கிழ்வேளூர் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

மின்னுலாவியசடையினர்விடையினர்மிளிர்தருமரவோடும்
பன்னுலாவியமறையொலிநாவினர்கறையணிகண்டத்தர்
பொன்னுலாவியகொன்றையந்தாரினர்புகழ்மிகுகீழ்வேளூ
ருன்னுலாவியசிந்தையர்மேல்வினையோடிடவீடாமே. (க)

நீருலாவியசடையிடையரவொடுமதிசிரநிரைமாலை
வாருலாவியவனமுலையவளொடுமணிநிலம்பவையார்க்க
வேருலாவியவிறைவனதுறைவிடமெழிறிகழ்கீழ்வேளூர்
சீருலாவியசிந்தைசெய்தணிபவர்பிணியொடுவினைபோமே. (உ)

வெண்ணிலாமிருவிரிசடையரவொடுவெள்ளெருக்கலர்மத்தம்
பண்ணிலாவியபாடலோடாடலர்பயில்வுறுகீழ்வேளூர்ப்
பெண்ணிலாவியபாகனேப்பெருந்திருக்கோயிலெம்பெருமானை
யுண்ணிலாவிநின்றுள்கியசிந்தையாருலகினிலுள்ளாரே. (கூ)

சேடுலாவியகங்கையைச்சடையிடைத்தொங்கவைத்தழகாக
நாடுலாவியபலிகொளுநாதனர்நலமிகுகீழ்வேளூர்ப்
பீடுலாவியபெருமையர்பெருந்திருக்கோயிலுட்பிரியாது
நீடுலாவியநிமலனேப்பணிபவர்நீலமிகப்பெறுவாரே. (ச)

துன்றுவார்சடைச்சுடர்மதிநகுதலைவடமணிசிரமாலை
மன்றுலாவியமாதவரினிதியன்மணிமிகுகீழ்வேளூர்
நின்றுநீடியபெருந்திருக்கோயிலினிமலனைநினைவோடுஞ்
சென்றுலாவிநின்றேத்தவல்லார்வினைதேய்வதுதிணமாமே. (கூ)

கொத்துலாவியகுழறிகழ்சடையனைக்கூத்தனைமகிழ்ந்துள்கித்
தொத்துலாவியதூலணிமார்பினர்தொழுதெழுகீழ்வேளூர்ப்
பித்துலாவியபத்தர்கள்பேணியபெருந்திருக்கோயின்மன்னு
முத்துலாவியவித்தினையேத்துமின்முடுகியவிடர்போமே. (கூ)

பிறைநிலாவியசடையிடைப்பின்னலும்வன்னியுந்துன்னுருங்
கறைநிலாவியகண்டனொண்டோளினர்காதல்செய்கீழ்வேளூர்
மறையுலாவியவந்தணர்மலிதருபெருந்திருக்கோயின்மன்னு
நிறையுலாவியவீசனேநேசத்தானினைபவர்வினைபோமே. (எ)

மலைநிலாவியமைந்தனம்மலையினையெடுத்தலுமரக்கன்றன்
றலையெலாநெரிந்தலறிடலூன்றினனுறைதருகீழ்வேளூர்க்
கலைநிலாவியநாவினர்காதல்செய்பெருந்திருக்கோயிலுண்
ணிலைநிலாவியவீசனேநேசத்தானினையவல்வினைபோமே. (அ)

மஞ்சுலாவியகடற்கிடந்தவனெடுமலரவன்காண்பொண்ணுப்
பஞ்சுலாவியமெல்லடிப்பார்ப்பதிபாகனேப்பரிவோடுஞ்
செஞ்சொலார்பலர்பரவியதொல்புகழ்மல்கியகீழ்வேளூர்
நஞ்சுலாவியகண்டனேநணுகுமின்னடலைகணணுகாவே. (கூ)

சிறுலாவியதலையினர்நிலையிலாவமணர்கள்சீவரத்தார்
வீறிலாதவெஞ்சொற்பலவிரும்பன்மின்சுரும்பமர்கீழ்வேளூ
ரேறுலாவியகொடியனேயேதமில்பெருந்திருக்கோயின்மன்னு
பேறுலாவியபெருமையன்றிருவடிபேணுமின்றவமாமே. (கூ)

EFEO_TVG_149-176 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சூருண்டவார்குழற்சடையுடைக்குழகனீயழகமர்கிழ்வேளூர்த்
திரண்டமாமறையவர்தொழும்பெருந்திருக்கோயிலெம்பெருமானே
யிருண்டமேதியினமிகுவயன்மல்குபுகலிமன்சம்பந்தன்
றெருண்டபாடல்வல்லாரவர்சிவகதிபெறுவதுதிடமாமே (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - அக்ஷயலிங்கநாதர் - தேவியார் - வனமுலைநாயகியம்மை.

திருவலஞ்சுழி – பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

என்னபுண்ணியஞ்செய்தனெஞ்சமேயிருங்கடல்வையத்து
முன்னைநீபுரிநல்வினைப்பயனிடைமுழுமணித்தரளங்கண்
மன்னுகாவிரிசூழ்திருவலஞ்சுழிவாணனேவாயாரப்
பன்னியாதரித்தேத்தியும்பாடியும்வழிபடுமதனாலே. (க)

விண்டொழிந்தனம்முடைவல்வினைவிரிகடல்வருநஞ்ச
முண்டிறைஞ்சுவானவர்தமைத்தாங்கியவிறைவனேயுலகத்தில்
வண்டுவார்குழன்மங்கையோர்பங்கனேவலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன்மெய்த்தொழில்புரிதொண்டரோடினிதிருந்தமையாலே (உ)

திருந்தலார்புரந்தீயெழச்செறுவனவிறலின்கணடியாரைப்
பரிந்துகாப்பனபத்தியில்வருவனமத்தமாம்பிணிநோய்க்கு
மருந்துமாவனமந்திரமாவனவலஞ்சுழியிடமாக
விருந்தாயகனிமையவரேத்தியவினையடித்தலந்தானே. (ங)

கறைகொள்கண்டத்தர்காய்கதிர்நிறத்தினரறத்திறமுனிவர்க்கன்
றிறைவராலிடைநிழலிலிருந்துகந்தினிதருள்பெருமானூர்
மறைகளோதுவர்வருபுனல்வலஞ்சுழியிடமகிழ்ந்தருங்கானத்
தறைகழல்சிலம்பார்க்கநின்றுடியவற்புதமறியோமே. (ச)

மண்ணீர்தீர்விண்காற்றினராற்றலாமெரியுருவொருபாகம்
பெண்ணராணனைத்தெரிவரும்வடிவினர்பெருங்கடற்பவளம்போல்
வண்ணராகிலும்வலஞ்சுழிபிரிகிலார்பரிபவர்மனம்புக்க
வெண்ணராகிலுமெனீப்பலவியம்புவரிணையடிதொழுவாரே. (ஞ)

ஒருவராலுவமிப்பதையரியதோர்மேனியர்மட்மாத
ரிருவராதரிப்பார்பலபூதமும்பேய்களுமடையாள
மருவராததோர்வெண்டலைகப்பிடித்தகந்தொறும்பலிக்கென்று
வருவரேலவர்வலஞ்சுழியடிகளேவரிவளைகவர்ந்தாரே. (ட)

குன்றியூர்குட்மூக்கிடம்வலம்புரங்குலவியநெய்த்தான
மென்றிவ்வூர்களிலோமென்றுமியம்புவரிறையுவர்பணிகேட்பா

ரன்றியூர்தமக்குள்ளனவறிகிலோம்வலஞ்சுழியரனூர்பாற்
சென்றவூர்தனிற்றலைப்படலாமென்றுசேயிழைதளர்வாமே. (ண)

சூமிலினேர்மொழிக்கொடியிடைவெருவுறக்குலவரைபார்ப்பாய
கயிலையைப்பிடித்தெடுத்தவன்கதிர்முடிதோளிருபதுமூன்றி
மயிலினேரனசாயலோடமர்ந்தவன்வலஞ்சுழியெம்மானைப்
பயிலவல்லவர்பரகதிகாண்பவரல்லவர்காணாரே. (அ)

அழலுதாம்பியவலர்மிசையண்ணலுமரவணைத்துயின்றுலங்
கழலுஞ்சென்னியுஞ்சாண்பரிதாயவர்மாண்பமர்தடக்கையின்
மழலைவீணையர்மகிழ்திருவலஞ்சுழிவலங்கொடுபாதத்தாற்
சுழலுமாந்தர்கடொல்வினையதனெடுதன்பங்கள்களைவாரே. (கூ)

அறிவிலாதவன்சமணர்கள்சாக்கியர்தவம்புரிந்தவஞ்செய்வார்
நெறியலாதனகூறுவர்மற்றவைதேறன்மின்மாருநீர்
மறியுலாந்திரைக்காவிரிவலஞ்சுழிமருவியபெருமானைப்
பிறிவிலாதவர்பெறுகதிபேசிடிலளவுறப்பொண்ணுதே. (கo)

மாதொர்கூறனைவலஞ்சுழிமருவியமருந்தினைவயற்காழி
நாதன்வேதியன்ஞானசம்பந்தன்வாய்நவிற்றியதமிழ்மாலை
யாதரித்திசைகற்றுவல்லார்சொலக்கேட்டுகந்தவர்தம்மை
வாதிபாவினைமறுமைக்கும்மிம்மைக்கும்வருத்தம்வந்ததடையாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சித்தீசுரநாதர் - தேவியார் – பெரியநாயகியம்மை.

திருக்கேதிச்சரம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

விருதுகுன்றமாமேருவினரவாவனலெரியம்பாற்
பொருதமூவெயில்செற்றவன்பற்றிநின்றுறைபதியெங்ஙானும்
கருதுகின்றவூர்கனைகடற்கடிகமழ்பொழிலணிமாதோட்டங்
கருதிநின்றகேதிச்சரங்கைதொழக்கடவினையடையாவே. (க)

பாடல்வீணையர்பலபலசரிதையொருதுகைத்தருநட்ட
மாடல்பேணுவரமரர்கள்வேண்டநஞ்சுண்டிருள்கண்டத்த
ரீடமாவதுவிருங்கடற்கரையினிலெழிறிகழ்மாதோட்டங்
கேடிலாதகேதிச்சரந்தொழுதெழக்கெடுமிடர்வினைதானே. (உ)

பெண்ணொர்பாகத்தர்பிறைதவழ்சடையினரறைகழல்சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித்தாடுவர்பாடுவரகந்தொறுமிடுபிச்சைக்
குண்ணலாவதோரிச்சையினுழல்பவருயர்தருமாதோட்டத்
தீண்ணனண்ணுகேதிச்சரமடைபவர்க்கருவினையடையாவே. (ங)

EFEO_TVG_149-177 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பொடிகொண்மேனியர்புலியதளையினர்விரிதருகரத்தேந்தும்
வீடிகொண்முவிலைவேலினர்நூலினர்மறிகடன்மாதோட்டத்
தடிகளாதரித்திருந்தகேதீச்சரம்பரிந்தசிந்தையராகி
முடிகள்சாய்த்தடிபேணவல்லார்தம்மேன் மொய்த்தெழும்வினைபோமே

நல்லராற்றவுஞானநன்குடையர்தம்மடைந்தவர்க்கருளிய
வல்லர்பார்மிசைவான்பிறப்பிறப்பிலர்மலிகடன்மாதோட்டத்
தெல்லையில்புகழெந்தைகேதீச்சரமிராப்பகலினேந்தேத்தி
யல்லலாசறுத்தரனடியிணைதொழுமன்பராமடியாரே (சு)

பேழைவார்சடைப்பெருந்திருமகடனைப்பொருந்தவைத்தொருபாக
மாழையங்கயற்கண்ணிபாலருளியபொருளினர்குடிவாழ்க்கை
வாழையம்பொழின்மந்திகள்களிப்புறமருவியமாதோட்டக்
கேழல்வெண்மருப்பணிந்தநீண்மார்பர்கேதீச்சரம்பிரியாரே. (சூ)

பண்டுகால்வருக்கறமுனைத்தருளிப்பல்லுலகினிலுயிர்வாழ்க்கை
கண்டநாதனர்கடலிடங்கைதொழக்காதலித்துறைகோயில்
வண்டுபண்செயுமாமலர்ப்பொழின்மஞ்ஞைநடமிடுமாதோட்டந்
தொண்டர்நாடொறுந்துதிசெயவருள்செய்கேதீச்சரமதுதானே. (எ)

தென்னிலங்கையர்குலபதிமலைநலிந்தெடுத்தவன்முடிதிண்டோ
டன்னலங்கெடவடர்த்தவற்கருள்செய்ததலைவனர்கடல்வாயப்
பொன்னிலங்கியமுத்துமாமணிகளும்பொருந்தியமாதோட்டத்
துன்னியன்பொடுமடியவரிறைஞ்சுகேதீச்சரத்துள்ளாரே. (அ)

பூவுளானுமப்பொருகடல்வண்ணனும்புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிதுன்னடியிணைகாண்கிலாவித்தகமென்னுகு
மாவும்பூகமுங்கதலியுகெருங்குமாதோட்டனன்னகர்மன்னித்
தேவிதன்னெடுந்திருந்துகேதீச்சரத்திருந்தவெம்பெருமானே. (கூ)

புத்தராய்ச்சிலபுனைதுகிலுடையவர்புறனுரைச்சமணுத
லெத்தராகிநின்றுண்பவர்ய்யம்பியவேழைமைகேளேன்மின்
மத்தயானையைமுறுகிடவுரிசெய்துபோர்த்தவர்மாதோட்டத்
தத்தர்மன்னுபாலாவியின்கரையிற்கேதீச்சரமடைமின்னே. (கo)

மாடெலாமணமுளைசெனக்கடலினதொலிகவர்மாதோட்டத்
தாடலேறுடையண்ணல்கேதீச்சரத்தடிகளேயணிகாழி
நாடுளார்க்கிறைஞானசம்பந்தன்சொனவின்றெழுபாமாலை
பாடலாயினபாடுமின்பத்தர்கள்பரகதிபெறலாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஈழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கேதீச்சுவரர்-தேவியார்-தெளரிநாயகியம்மை.

திருவிற்குடிவீரட்டானம் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

வடிகொண்மேனியர்வானமாமதியினர்நதியினர்மதுவார்ந்த
கடிகொள்கொன்றையஞ்சடையினர்கொடியினருடைபுலியதளார்ப்பர்
விடையதேறுமம்மானமர்ந்தினிதுறைவிற்குடிவீரட்ட
மடியராகிநின்றேத்தவல்லார்தமையருவினையடையாவே. (க)

களங்கொள்கொன்றையுங்கதிர்விரிமதியமுங்கடிகமழ்சடைக்கேற்றி
யுளங்கொள்பத்தர்பாலருளியபெருமையர்பொருகரியுரிபோர்த்து
விளங்குமேனியரொம்பெருமானுறைவிற்குடிவீரட்டம்
வளங்கொண்மாமலரானினைந்தேத்துவார்வருத்தமதறியாரே. (உ)

கரியகண்டத்தர்வெளியவெண்பொடியணிமார்பினர்வலங்கையி
லெரியர்புன்சடையிடம்பெறக்காட்டகத்தாடியவேடத்தர்
விரியுமாமலர்ப்பொய்கைசூழ்மதுமலிவிற்குடிவீரட்டம்
பிரிவிலாதவர்பெருந்தவத்தோனெப்பேணுவருலகத்தே. (ங)

பூதஞ்சேர்ந்திசைபாடலராடலர்பொலிதரநலமார்ந்த
பாதஞ்சேரிணைச்சிலம்பினர்கலம்பெறுகடலெழுவிடமுண்டார்
வேதமோதியநாவுடையானிடம்விற்குடிவீரட்டஞ்
சேருநெஞ்சினர்க்கல்லதுண்டோபிணிதீவினைகெடுமாறே. (ச)

கடியவேற்றினர்கனலனமேனியரனலெழுவர்மூன்று
மிடியமால்வரைகால்வளைத்தான்றனதடியவர்மேலுள்ள
வெடியவல்வினைவீட்டுவிப்பானுறைவிற்குடிவீரட்டம்
படியதாகவேபரவுமின்பரவினற்பற்றறுமருநோயே. (ஞ)

பெண்ணெர்கூறினர்பெருமையர்சிறுமறிக்கையினர்மெய்யார்ந்த
வண்ணலன்புசெய்வாரவர்க்கெளியவரரியவரல்லார்க்கு
விண்ணிலார்பொழின்மல்கியமலர்விரிவிற்குடிவீரட்ட
மெண்ணிலாவியஞ்சிக்கையினுர்தமக்கிடர்கள்வந்தடையாவே. (சு-எ)

இடங்கொண்மால்கடலிலங்கையர்கோன்றனையிகலழிதரவூன்று
கிடங்கொண்மால்வரையானுரையார்தருபொருளினரிருளார்ந்த
விடங்கொண்மாமிடறுடையவனுறைதிருவிற்குடிவீரட்டந்
தொடங்குமாறிசைபாடிநின்றூர்தமைத்துன்பநோயடையாவே. (அ)

செங்கண்மாலொடுநான்முகன்றேடியுந்திருவடியறியாமை
யெங்குமாரெரியாகியவிறைவனெயறைபுனன்முடியார்ந்த
வெங்கண்மால்வரைக்கரியுரித்துகந்தவன்விற்குடிவீரட்டந்
தங்கையாற்றொழுதேத்தவல்லாரவர்தவமல்குகுணத்தாரே. (கூ)

பிண்டமுண்டுழல்வார்களும்பிரிதுவராடையரவர்வார்த்தை
பண்டுமின்னுமோர்பொருளெனக்கருதன்மின்பரிவுறுவீர்கேண்மின்

EFEO_TVG_149-178 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விண்டமாமலர்ச்சடையவனிடமெனில்விற்குடிவீரட்டங்
கண்டுகொண்டடிகாதல்செய்வாரவர்கருத்துறுங்குணத்தாரே. (கo)

விலங்கலேசிலையிடமெனவுடையவன்விற்குடிவீரட்டத்
திலங்குசோதியையெம்பெருமான்றனையெழிலிகழ்கழல்பேணி
நலங்கொள்வாழ்பொழிற்காழியுண்ஞானசம்பந்தனற்றமிழ்மாலை
வலங்கொடேயிசைமொழியுமின்மொழிந்தக்கான்மற்றுவரமாமே(கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வீரட்டானேசுவரர் - தேவியார்-மைவார்குழலியம்மை.

திருக்கோட்டூர் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

நீலமார்தருகண்டனேநெற்றியோர்கண்ணனேயொற்றைவிடைச்
சூலமார்தருகையனேதுன்றுபைம்பொழில்கள்சூழ்ந்தழகாய
கோலமாமலர்மணங்கமழ்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சாலநீள்தலத்திடைப்புகழ்மிகத்தாங்குவர்பாங்காலே. (க)

பங்கயம்மலர்ச்சீறடிப்பஞ்சுறுமெல்விரலரவல்குன்
மங்கைமார்பலர்மயில்குயில்கிளியெனமிழற்றியமொழியார்மென்
கொங்கையார்சூழ்ங்குணலைசெய்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
சங்கையொன்றிலராகின்றசங்கரன்றிருவருள்பெறலெளிதாமே. (உ)

நம்பனூர்நலமலர்கொடுதொழுதெழுமடியவர்தமக்கெல்லாஞ்
செம்பொனூர்தருமெழிறிகழ்மூலியவர்செல்வமல்கியநல்ல
கொம்பனூர்தொழுதாடியகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்க
ளெம்பொனூர்தருமுலகினிலமரரோடமர்ந்தினிதிருப்பாரே. (ங)

பலவுநீள்பொழிற்றீங்கனிதேன்பலாமாங்கனிபயில்வாய
கலவமஞ்ஞைசுனிலவுசொற்கிள்ளைகளன்னஞ்சேர்ந்தழகாய
குலவுநீள்வயற்கயலுகள்கோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்க
ளினிலவுசெல்வத்தராகிநீணிலத்திடைநீடியபுகழாரே. (ச)

உருகுவாருள்ளத்தொண்சுடர்தனக்கென்றுமன்பராமடியார்கள்
பருகுமாரமுதெனநின்றுபரிவொடுபத்திசெய்தெத்திசையுங்
குருகுவாழ்வயல்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்க
ளருகுசேர்தருவினைகளுமகலும்போயவனருள்பெறலாமே (ஞ)

துன்றுவார்சடைத்தாமதிமத்தமுந்துன்னெருக்கார்வன்னி
பொன்றினார்தலைகலனெடுபரிகலம்புலியுரியுடையாடை [ரை
கொன்றைபொன்னெனமலர்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவா
யென்றுமேத்துவார்க்கிடரிலைகேடிலையேதம்மன்தடையாவே. (ரு)

மாடமாளிகைகோபுரங்கூடங்கண்மணியரங்கணிசாலை
பாடுசும்மதிற்பைம்பொன்செய்மண்டபம்பரிசொடுபயில்வாய
கூடுபூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்கள்
கேடதொன்றிலராகிநல்லுலகினில்கெழுவுவர்புகழாலே. (எ)

ஒளிகொள்வாளெயிற்றரக்கனவ்வுயர்வரையெடுத்தலுமுமையஞ்சிச்
சுளியவூன்றலுஞ்சோர்ந்திடவாளொடுநாளவற்கருள்செய்த [ர்க
குளிர்கொள்பூம்பொழில்சூழ்தருகோட்டூர்நற்கொழுந்தினைத் தொழுவா
டளிர்கொடாமரைப்பாதங்களருள்பெறுந்தவமுடையவர்தாமே. (அ)

பாடியாடுமெய்ப்பத்தர்கட்கருள்செயுமூத்தினைப்பவளத்தைத்
தேடிமாலயன்காணவொண்ணுதவத்திருவினைத்தெரிவைமார்
கூடியாடவர்கைதொழுகோட்டூர்நற்கொழுந்தேயென்றெழுவார்க
ணீடுசெல்வத்தராகியிவ்வுலகினினிகழ்தருபுகழாரே. (கூ)

கோணல்வெண்பிறைச்சடையனைங்கோட்டூர்நற்கொழுந்தினைச்செழுந்திரைப்
பூணல்செய்தடிபோற்றுமின்பொய்யிலாமெய்யனல்லருளென்றுங்
காணலொன்றிலாக்காரமண்டேரர்குண்டரக்கர்சொற்கருதாதே
பேணல்செய்தரனைத்தொழுமடியவர்பெருமையைப்பெறுவாரே. (கo)

பந்துலாவிரற்பவளவாய்த்தேன்மொழிப்பாவையோடுருவாருங்
கொந்துலாமலர்விரிபொழிற்கோட்டூர்நற்கொழுந்தினைச் செழும்பவளம்
வந்துலாவியகாழியுண்ஞானசம்பந்தன்வாய்ந்துரைசெய்த
சந்துலாந்தமிழ்மாலைகள்வல்லவர்தாங்குவர்புகழாலே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கொழுந்தீசுவரர்-தேவியார்-மதுரவசனியம்மை.

திருமாந்துறை - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

செம்பொனூர்தருவேங்கையுநாழலுஞ்செருந்திசெண்பகமானைக்
கொம்புமாரமுமாதவிசுரபுன்னைகுருந்தலர்போந்துந்தி
யம்பொனேர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகின்ற
வெம்பிரானிமையோர்தொழுபைங்கழலேத்துதல்செய்வோமே. (க)

விளவுதேனுடைசாதியின்பலங்களும்வேய்மணிகிரந்துந்தி
யளவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானைத்
துளவமான்மகனீங்கணைக்காமனைச்சுடவிழித்தவனெற்றி
யளகவாணுதலரிவைதன்பங்கனையன்றிமற்றறியோமே. (உ)

கோடுதேன்சொரிகுன்றிடைப்பூகமுங்கூந்தலின்குலைவாரி
யோடுநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகம்பன்

வாடினார்தலையிற்பலிகொள்பவன்வானவர்மகிழ்ந்தேத்துங்
கேடிலாமணியைத்தொழலல்லதுகெழுமுதலறியோமே. (கூ)

இலவமாழலுமீஞ்சொடுசுரபுன்னையிளமருதிலவங்கங்
கலவிநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைகண்ட
னலிகொள்வார்புனலம்புலிமத்தமுமாடரவுடன்வைத்த
மலையவானவர்கொழுந்தினையல்லதுவணங்குதலறியோமே. (சு)

கோங்குசெண்பகங்குருந்தொடுபாதிரிகுரவிடைமலருந்தி
யோங்குநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானைப்
பாங்கினலிடுந்தூபமும்நீபமும்பாடலிம்மலர்சேர்த்தித்
தாங்குவாரவர்நாமங்கணவினிற்றலைப்படுந்தவத்தோரே. (ஙி)

பெருகுசந்தனங்காரகிற்பீலியும்பெருமரநிமிர்ந்துந்திப்
பொருதுகாவிரிவடகரைமாந்துறைப்புனிதனெம்பெருமானைப்
பரிவினலிருந்திரவியுமதியமும்பார்மன்னர்பணிந்தேத்த
மருதவானவர்வழிபடுமலரடிவணங்குதல்செய்வோமே. (சு)

நறவமல்லிகைமுல்லையுமௌவலுநாண்மலரவைவாரி
யிறவில்வந்தெறிகாவிரிவடகரைமாந்துறையிறையன்றங்
கறவனுசியகூற்றினைச்சாடியவந்தணன்வரைவில்லா
னிறையவாங்கிவலித்தையிலெய்தவனிரைகழல்பணிவோமே. (எ)

மந்தமார்பொழின்மாங்கனிமாந்திடமந்திகண்மாணிக்க
முந்திநீர்வருகாவிரிவடகரைமாந்துறையுறைவானை
நிந்தியாவெடுத்தார்த்தவல்லரக்கனைநெரித்திடுவிரலானைச்
சிந்தியாமனத்தாரவர்சேர்வதுதிநெறியதுதானே. (அ)

நீலமாமணிநித்திலத்தொத்தொடுநிரைமலர்நிரந்துந்தி
யாலியாவருகாவிரிவடகரைமாந்துறையமர்வானை
மாலுமான்முகன்றேடியுங்காண்கிலாமலரடியிணைநாளுங்
கோலமேத்தினின்றுடுபின்பாடுமின்கூற்றுவனலியானே. (கூ)

நின்றுணுஞ்சமண்டேரருநிலையிலர்நெடுங்கழுமுறவேல
நன்றுமாங்கனிகதலியின்பலங்களுநாணலினுரைவாரி
யொன்றிநேர்தருகாவிரிவடகரைமாந்துறையொருகால
மன்றியுள்ளழிந்தெழும்பரிசழகிதுவதுவர்க்கிடமாமே. (கo)

வரைவளங்கவர்காவிரிவடகரைமாந்துறையுறைவானைச்
சிரபுரம்பதியுடையவன்கவுணியன்செழுமறைநிறைநாவ
னரவெனும்பணிவல்லவன்ஞானசம்பந்தனன்புறுமாலை
பரவிடுந்தொழில்வல்லவரல்லலும்பாவமுமிலர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஸ்ரீவண்ணேசுவரர்-தேவியார்-அழகாயமர்ந்தாயிலம்மை:

திருவாய்மூர் - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளவுமைபாடத்தாளமிடவோர்தழல்வீசிக்
கிளரிளமணியரவரையார்த்தாடும்வேடக்கிறைமையார்
விளரிளமுலையவர்க்கருணல்கிவெண்ணீறணிந்தேர்சென்னிமேல்
வளரிளமதியமொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (கி)

வெந்தழல்வடிவினர்பொடிப்பூசிவிரிதருகோவணவுடைமேலோர்
பந்தஞ்செய்தரவசைத்தொலிபாடிப்பலபலகடைதொறும்பலிதேர்வார்
சிந்தனைபுகுந்தெனக்கருணல்கிச்செஞ்சுடர்வண்ணர்தம்மடிபரவ
வந்தனைபலசெயவிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (உ)

பண்ணிற்பொலிந்தவீணையர்பதினெண்கணமுமுணராஞ்
சுண்ணப்பொலிந்தமிடற்றினருள்ளமுருகிலுடனுவார்
சுண்ணப்பொடிநீறணிமார்பர்சுடர்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வண்ணப்பிறையோடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (கூ)

எரிகிளர்மதியமொடெழிலுதன்மேலெறிபொறியரவினெட்டாறுமூழ்க
விரிகிளர்சடையினர்விடையேறிவெருவவந்திடர்செய்தவிகிர்தனர்
பொரிகிளர்பொடியணிதிருவகலம்பொன்செய்தவாய்மையர்பொன்மிளிரும்
வரியரவரைக்கசைத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (சு)

அஞ்சனமணிவனமெழினிறமாவகமிடறணிகொளவுடறிமில
ரஞ்சினையமரர்களமுதமெனநண்ணியநறுநுதலுமைநடுங்க
வெஞ்சினமால்களியானையின்றோல்வெருவுறப்போர்த்ததனிறமுமீதே
வஞ்சனவடிவினெடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (ரு)

அல்லியமலர்புல்குவிரிருழலார்கழலிணையடிநிழலவைபரவ [லார்
வெல்லியம்போதுகொண்டெரியேந்தி யெழிலொடுதொழிலவை யிசையவல்
சொல்லியவருமறையிசைபாடிச்சூடிளமதியினர்தோடுபெய்து
வல்லியந்தோலுடுத்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (சு)

கடிபடுகொன்றைநன்மலர்திகழுங்கண்ணியர்விண்ணவர்தனமணிசேர்
முடிபில்குபிறையவர்மறுகினல்லார்முறைமுறைபலிபெயமுறுவல்செய்வார்
பொடியணிலடிவொடுதிருவகலம்பொன்னெனமிளிர்வதோரரவினெடும்
வடிதுணமழுவினெடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (எ)

கட்டிணைபுதுமலர்க்கமழ்கொன்றைக்கண்ணியர்வீணையர்தாமுமீதே
எட்டுணைசாந்தமோடுமைதுணையாவிறைவனுருறைவதோரிடம்வினவிற்
பட்டிணையகலல்குல்விரிருழலார் பாவையர்பலியெதிர்கொணர்ந்துபெய்ய
வட்டணையாடலொடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (அ)

எனமருப்பினெடெழிலாமையிசையப்பூண்டோரேறெறிக்
கானமகிடமாவுறைகின்றகள்வர்கனவிற்றுயர்செய்து

EFEO_TVG_149-180 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தேனுணமலர்களுந்திவிம்மித்திகழ்பொற்சடைமேற்றிகழ்கின்ற
வானநன்மதியினேடிவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (கூ)

சூடல்வெண்பிறையினர்சுடர்முடியர் சுண்ணவெண்ணீற்றினர்சுடர்மழுவர்
பாடல்வண்டிசைமுரல்கொன்றையந்தார்பாம்பொடுநூலவைபசைந்திலங்கக்
கோடனன்முகிழ்விரல்கூப்பிநல்லார்குறையுறுபலியெதிர்கொணர்ந்துபெய்ய
வாடல்வெண்டலைபிடித்திவராணீர்வாய்மூரடிகள்வருவாரே. (கo)

திங்களோடருவரைப்பொழிற்சோலைத்தேனலங்கானலந்திருவாய்மூ
ரங்கமோடருமறையொலிபாடலழனிறவண்ணர்தம்மடிபரவி
நங்கடம்வினைகெடமொழியவல்லஞானசம்பந்தன்றமிழ்மாலை
தங்கியமனத்தினற்றெழுதெழுவார்தவநெறியுலகுக்கோர்தவநெறியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வாய்மூரீசுவரர்-தேவியார்-பாலினுன்மொழியம்மை.

திருஆடானை - பண்ணட்டராகம்.

திருச்சிற்றம்பலம்

மாதோர்கூறுகந்தேறதேறிய, வாதியானுறையாடானைப்
போதினற்புனைந்தேத்துவார்தமை, வாதியாவினைமாயுமே. (க)

வாடல்வெண்டலையங்கையேந்திநின், றூடலானுறையாடானைத்
தோடுலாமலர்தூவிக்கைதொழ, வீடுதுங்கள்வினைகளே. (உ)

மங்கைகூறினன்மான்மறியுடை, யங்கையானுறையாடானைத்
தங்கையாற்றெழுதேத்தவல்லவர், மங்குநோய்பிணிமாயுமே. (ங)

சுண்ணநீறணிமார்பிற்றேல்புனை, யண்ணலானுறையாடானை
வண்ணமாமலர்தூவிக்கைதொழ, வெண்ணுவாரிடரேழுமே. (ச)

கொய்யணிம்மலர்க்கொன்றைசூடிய, வையன்மேவியவாடானை
கையணிமலராலவணங்கிட, வெய்யவல்வினைவீடுமே. (ஞ)

வானிளம்மதிமல்குவார்சடை, யானஞ்சாடலானுடானை
தேனணிம்மலர்சேர்த்தமுன்செய்த, வூனமுள்ளவொழியுமே. (சு)

துலங்குவெண்மழுவேந்திச்சூழ்சடை, யலங்கலானுறையாடானை
நலங்கொண்மாமலர்தூவிநாடொறும், வலங்கொள்வார்வினைமாயுமே. (எ)

வெந்தநீறணிமார்பிற்றேல்புனை, யந்தமில்லவனுடானை
கந்தமாமலர்தூவிக்கைதொழுஞ், சிந்தையார்வினைதேயுமே. (அ)

மறைவல்லரொடுவானவர்தொழு, தறைபுனற்றண்புனலாடானை
யுறைபுமீசனையேத்தத்தீவினை, பறைபுநல்வினைபற்றுமே. (க)

மாயனும்மலரானுங்கைதொழ, வாயவந்தணனுடானை
தூயமாமலர்தூவிக்கைதொழத், தீயவல்வினைதீருமே. (கo)

விடினுர்மலிவெங்கட்துகின், றுடலானுறையாடானை
நாடிஞானசம்பந்தன்செந்தமிழ், பாடநோய்பிணிபாறுமே. (கக)

பாண்டிநாட்டிலுள்ளது. திருச்சிற்றம்பலம்.

சுவாமிபெயர்-ஆதித்தேசுவரர்-தேவியார்-அம்பாயிரவல்லியம்மை.

சீகாழி - பண் - செவ்வழி.

திருச்சிற்றம்பலம்.

பொடியிலங்குந்திருமேனியாளர்புலியதளின
ரடியிலங்குங்கழலார்க்கவாடும்மடிகள்விட
மிடியிலங்குஞ்சுரலோதமல்கவ்வெறிவார்திரைக்
கடியிலங்கும்புனன்முத்தலைக்குங்கடற்காழியே. (க)

மயலிலங்குந்துயர்மாசறுப்பானருந்தொண்டர்க
ளயலிலங்கப்பணிசெய்யநின்றவடிகள்விடம்
புயலிலங்குங்கொடையாளரதேத்தொலிபொலியவே
கயலிலங்கும்வயற்கழனிசூழுங்கடற்காழியே. (உ)

கூர்விலங்குந்திரிசூலர்வேலர்குழைக்காதினர்
மார்விலங்கும்புரிநூலுகந்தமணவாளனூர்
நேர்விலங்கல்லனதிரைகண்மோதங்நெடுந்தாரைவாய்க்
கார்விலங்கல்லெனக்கலந்தொழுகுங்கடற்காழியே. (ங)

குற்றமில்லார்குறைபாடுசெய்வார்பழிதீர்ப்பவர்
பெற்றநல்லகொடிமூன்னுயர்த்தபெருமானிட
மற்றுநல்லார்மகத்தாரினியார்மறைகலேயெலாங்
கற்றுநல்லார்பிழைதெரிந்தளிக்குங்கடற்காழியே. (ச)

விருதிலங்குஞ்சரிதைத்தொழிலார்விரிசடையினு
ரொருதிலங்கப்பொலிந்தேறுமெந்தைக்கிடமாவது
பெரிதிலங்கும்மறைகிளைஞரோதப்பிழைகேட்டலாற்
கருதுகிள்ளைக்குலந்தெரிந்துதிர்க்குங்கடற்காழியே. (ஞ)

தோடிலங்குங்குழைக்காதர்வேதர்சுரும்பார்மலர்ப்
பீடிலங்குஞ்சடைப்பெருமையாளர்க்கிடமாவது
கோடிலங்கும்பெரும்பொழில்கண்மல்கப்பெருஞ்செந்நெலின்
காடிலங்கும்வயல்பயிலுமந்தண்கடற்காழியே. (சு)

மலையிலங்குஞ்சிலையாகவேகம்மதின்மூன்றெரித்
தலையிலங்கும்புனற்கங்கைவைத்தவடிகட்கிட
மிலையிலங்கும்மலர்க்கைதைகண்டல்வெறிவிரவலாற்
வறையுறுகழலடியார்க்கவாடுவர்
சிறையுறுவிரிபுனல்சென்னியின்மிசைக்
குறையுறுமதியினர்கொள்ளிக்காடரே. (எ)

எடுத்தனன்கையிலையையியல்வலியினை
லடர்த்தனர்திருவிரலாலலறிடப்
படுத்தனரென்றவன்பாடல்பாடலுங்
கொடுத்தனர்கொற்றவாள்கொள்ளிக்காடரே. (அ)

தேடினரயன்முடிமாலுஞ்சேவடி
நாடினரவரொன்றுணுகிற்றிலர்
பாடினர்பரிவொடுபத்தர்சித்தமுங்
கூடினர்க்கருள்செய்வர்கொள்ளிக்காடரே. (ஈ)

நாடிநின்றறிவினுணிலிகள்சாக்கிய
ரோடிமுன்னேதியவுரைகண்மெய்யல
பாடுவர்நான்மறைபயின்றமாதொடுங்
கூடுவர்திருவுருக்கொள்ளிக்காடரே. (கஅ)

நற்றவர்காழியுண்ஞானசம்பந்தன்
குற்றமில்பெரும்புகழ்க்கொள்ளிக்காடரைச்
சொற்றமிழின்னிசைமாலைசோர்வின்றிக்
கற்றவர்கழலடிகாணவல்லரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-அக்கினீசுவரர்-தேவியார்-பஞ்சினுமெல்லடியம்மை.

திருவிசயமங்கை-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மருவமர்குழலுமைபங்கர்வார்சடை
யாவமர்கொள்கையெம்மடிகள்கோயிலாங்
கூவமர்சுரபுன்னைகோங்குவேங்கைகள்
விரவியபொழிலணிவிசயமங்கையே. (க)

கீதமுனிசைதரக்கிளரும்வீணையர்
பூதமுன்னியல்புடைபபுனிதர்பொன்னகர்
கோதனம்வழிபடக்குலவுநான்மறை
வேதியர்தொழுதெழுவிசயமங்கையே. (உ)

அக்கரவணையினரரிவைபாகமாத்
தொக்கநல்வினையுடைச்சோதிதொன்னகர்

தக்கநல்வானவர்தலைவர்நாடொறு
மிக்கவர்தொழுதெழுவிசயமங்கையே. (ஙூ)

தொடைமலியிதழியுந்துன்னெருக்கொடு
புடைமலிசடைமுடியடிகள்பொன்னகர்
படைமலிமழுவினர்பைங்கண்மூரிவெள்
விடைமலிகொடியணல்விசயமங்கையே. (ச)

தோடமர்காதினன்றுதைந்தநீற்றின
னேடமர்கோதையோடினிதமர்விடங்
காடமர்மாகதபப்போர்த்ததோர்
வேடமுடையணல்விசயமங்கையே. (ஞ)

மைப்புரைகண்ணுமைபங்கன்வண்டழ
லொப்புரைமேனியெம்முடையவன்னக
ரப்பொடுமலர்கொடங்கிறைஞ்சிவானவர்
மெய்ப்படவருள்புரிவிசயமங்கையே. (ஙூ)

இரும்பொனின்மலிவிலினெரிசரத்தினல
வரும்புரங்களைப்பொடிசெய்தமைந்தனார்
சுரும்பமர்கொன்றையுந்தூயமத்தமும்
விரும்பியசடையணல்விசயமங்கையே. (எ)

உளங்கையிலிருபதோடொருபதுங்கொடாங்
களந்தருமவரையெடுத்திடுமரக்கனைத்
தளர்ந்துடனெரிதரவடர்த்ததன்மையன்
விளங்கிழையொடும்புகுவிசயமங்கையே. (அ)

மண்ணினையுண்டவன்மலரின்மேலுறை
யண்ணல்கடமக்களப்பரியவத்தனூர்
தண்ணருஞ்சாந்தமும்பூவுநீர்கொடு
விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையே. (கூ)

கஞ்சியுங்கவளமுண்கவணர்கட்டுரை
நஞ்சினுங்கொடியனநமர்கடேர்இலார்
செஞ்சடைமுடியுடைத்தேவனன்னகர்
விஞ்சையர்தொழுதெழுவிசயமங்கையே. (கஅ)

விண்ணவர்தொழுதெழுவிசயமங்கையை
நண்ணியபுகலியுண்ஞானசம்பந்தன்
பண்ணியசெந்தமிழ்பத்தும்வல்லவர்
புண்ணியர்சிவகதிபுகுதறிண்ணமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-விசயநாதேசுவரர்-தேவியார்-மங்கைநாயகியம்மை.

EFEO_TVG_149-200 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருவைகன்மாடக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துளமகியுடைமறிதோன்றுகையின
ரிளமதியணிசடையெந்தையாரிட
முளமகியுடையவர்ஐவகலோங்கிய
வளமதிதடவியமாடக்கோயிலே (க)

மெய்யகமிளிரும்வெண்ணூல்வேதியர்
மையகண்மலைமகளோடும்வைகிடம்
வையகமகிழ்தரவைகன்மேற்றிசை
செய்யகண்வளவன்முன்செய்தகோயிலே. (உ)

கணியணிமலர்கொடுகாலைமாலையும்
பணியணிபவர்க்கருள்செய்தபான்மையர்
தணியணியுமையொடுதாமுந்தங்கிட
மணியணிகிளர்வைகன்மாடக்கோயிலே (ங)

கொம்பியல்கோதைமுன்னஞ்சக்குஞ்சரத்
தும்பியதுரிசெய்ததுங்கர்தங்கிடம்
வம்பியல்சோலைசூழ்வைகன்மேற்றிசைச்
செம்பியன்கோச்செங்கணன்செய்கோயிலே. (ச)

விடமடைமிடற்றினர்வேதநாவினர்
மடமொழிமலைமகளோடும்வைகிட
மடவனநடைபயில்வைகன்மாநகர்க்
சூடகைசிலையமாடக்கோயிலே. (ஞ)

நிறைபுனல்பிறையொடுநிலவுநீள்சடை
யிறையவருறைவிடமிலஞசூழ்வெளி
மறையொடுவளர்வுசெய்வாணர்வைகலிற்
றிறையுடைநிறைசெல்வன்செய்தகோயிலே. (ட)

எரிசரம்வரிசிலைவேளையவேவிமுன்
றிரிபுரமெரிசெய்தசெல்வர்சேர்விடம்
வரிவளையவர்பயிலைவைகன்மேற்றிசை
வருமுகிலணியமாடக்கோயிலே. (எ)

மலையனவிருபதுதோளிருபதுவலி
தொலைவுசெய்தருள்செய்தசோதியாரிட
மலர்மலிபொழிலணிவைகல்வாழ்வர்கள்
வலம்வருமலையனமாடக்கோயிலே. (அ)

மாலவன்மலரவனேடிமால்கொள
மாலெரியாகியவாதர்வைகிட

மாலிகொடணிமறைவாணர்வைகலின்
மாலனமணியணிமாடக்கோயிலே. (கூ)

கடிவுடைகாயினர்கஞ்சிவாயினர்
பிடருரைபேணிலார்பேணுகோயிலா
மடமுடையவர்பயில்வைகன்மாநகர்
வடமலையனையநன்மாடக்கோயிலே. (கo)

மைந்தனதிடம்வைகன்மாடக்கோயிலைச்
சந்தமர்பொழிலணிசண்பைஞானசம்
பந்தனதமிழ்கெழுபாடல்பத்திவை
சிந்தைசெய்பவர்சிவலோகஞ்சேர்வரே. (கக)

திருசிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வைகனாதேசுவரர்-தேவியார்-வைகலம்பிகையம்மை.

திருஅம்பர்ப்பெருந்திருக்கோயில்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

எரிதரவனல்கையிலேந்தியெல்லியி
னரிதிரிகானிடைநட்டமாடுவா
ரரிசிலம்பொருபுனலம்பர்மாநகர்க்
குரிசில்செங்கண்ணவன்கோயில்சேர்வரே. (க)

மைபகண்மலைமகள்பாகமாயிருள்
கையதோர்கனலெரிகனலவாடுவ
ரையநன்பொருபுனலம்பர்செம்பியர்
செய்பகணிறைசெய்தகோயில்சேர்வரே. (உ)

மறைபுனைபாடலர்சுடர்கைமல்கவோர்
பிறைபுனைசடைமுடிபெயரவாடுவ
ரறைபுனனிறைவயலம்பர்மாநக
ரிறைபுனையெழில்வளரிடமதென்பரே. (ங)

இரவமல்கிளமதிசூடியீடியர்
பரவமல்கருமறைபாடியாடுவ
ரரவமோடியர்செம்மலம்பர்க்கொம்பலர்
மரவமல்கெழினகர்மருவிவாழ்வரே. (ச)

சங்கணிருழையினர்சாமம்பாடுவர்
வெங்கனல்கனரவீசியாடுவ
ரங்கணிவிழவமரம்பர்மாநகர்ச்
செங்கணலிறைசெய்தகோயில்சேர்வரே (ஞ)

EFEO_TVG_149-201 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கழல்வளர்காலினர்சுடர்கைமல்கவோர்
சுழல்வளர்சுரிர்புனல்சூடியாடுவ
ரழல்வளர்மறையவரம்பர்ப்பைம்பொழி
ளிழல்வளர்நெடுநகரிடமதென்பரே. (சு)

இகலுறுசுடரெரியிலங்கவீசியே
பகலிடம்பலிகொளப்பாடியாடுவ
ரகலிடமலிபுகழம்பர்வம்பவிழ்
புகலிடநெடுநகர்புகுவர்போலுமே. (எ)

எரியனமணிமுடியிலங்கைக்கோன்றன
கரியனதடக்கைகளடர்த்தகாலினர்
ரரியவர்வளநகரம்பரின்பொடு
புரியவர்பிரிவிலர்பூதஞ்சூழவே. (அ)

வெறிகிளர்மலர்மிசையவனும்வெந்தொழிற்
பொறிகிளரரவணைப்புல்குசெல்வனு
மறிகிலரரியவரம்பர்ச்செம்பியர்
செறிகழலிறைசெய்தகோயில்சேர்வரே. (கூ)

வழிதலைபறிதலையவர்கள்கட்டிய
மொழிதலைபயனெனமொழியல்வம்மினே
வழிதலைபொருபுனலம்பர்மாநக
ருழிதலையொழிந்துளருமையுந்தாமுமே. (கo)

அழகரையடிகளையம்பர்மேவிய
நிழறிகழ்சடைமுடிநீலகண்டனை
யுமிழ்திரையுலகினிலோதுவீர்கொண்மின்.
றமிழ்கெழுவிரகினன்றமிழ்செய்மாலையே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமியெயர்-பிரம்புரிநாதேசுவரர்-தேவியார்-பூங்குழனாயகியம்மை.

திருப்பூவணம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

மாதமர்மேனியனகிவண்டொடு
போதமர்பொழிலணிபூவணத்துறை
வேதனேவிரவலரணமூன்றெய்த
நாதனேயடிதொழுநன்மையாகுமே. (ச)

வானணிமதிபுல்குசென்னிவண்டொடு
தேனணிபொழிற்றிருப்பூவணத்துறை
யானலலருமறையங்கமோதிய
ஞானனேயடிதொழுநன்மையாகுமே. (உ)

வெற்றரையுறுபிணிவினைகடீர்வதோர்
புற்றியர்தொழுதெழுபூவணத்துறை
யற்றிவெண்பிறையினேடாறுசூடிய
நற்றியையடிதொழுநன்மையாகுமே. (ரு)

வாசநன்மலர்மலிமார்பில்வெண்பொடிப்
பூசனைப்பொழிலிகழ்பூவணத்துறை
யீசனேமலர்புனைந்தேத்துவார்வினை
நாசனேயடிதொழுநன்மையாகுமே. (ஏ)

குருந்தொடுமாதவிகோங்குமல்லிகை
பொருந்தியபொழிற்றிருப்பூவணத்துறை
யருந்திறலவுணர்தமரணமூன்றெய்த
பெருந்தகையடிதொழப்பிடையில்லையே. (டு)

வெறிகமழ்புன்னைபொன்னுழல்விம்மிய
பொறியரவணிபொழிற்பூவணத்துறை
கிறிபடுமுடையினன்கேடில்கொள்கையி
னறுமலரடிதொழுநன்மையாகுமே. (கூ)

பறைமல்குமுழவொடுபாடலாடலன்
பொறைமல்குபொழிலணிபூவணத்துறை
மறைமல்குபாடலன்மாதோர்கூறின
னறைமல்குகழறொழவல்லலில்லையே. (எ)

வரைதனையெடுத்தவல்லரக்கனீண்முடி
விரறனிலடர்த்தவன்வெள்ளநீற்றினன்
பொருபுனல்புடையணிபூவணந்தனைப்
பரவியவடியவர்க்கில்லைப்பாவமே. (அ)

நீர்மல்குமலருறைவானுமாலுமாய்ச்
சீர்மல்குதிருந்தடிசேரகிற்கிலர்
போர்மல்குமழுவினன்மேயபூவண
மேர்மல்குமலர்புனைந்தேத்தலின்பமே. (கூ)

மண்டைகொண்டுழிதருமதியிறேரருங்
குண்டருங்குணம்பலபேசுங்கோலத்தர்
வண்டமர்வளர்பொழின்மல்குபூவணங்
கண்டவரடிதொழுதேத்தல்கண்மமே. (கo)

புண்ணியர்தொழுதெழுபூவணத்துறை
யண்ணலையடிதொழுதந்தண்காழியு
ணண்ணியவருமறைஞானசம்பந்தன்
பண்ணியதமிழ்செலப்பறையும்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

EFEO_TVG_149-202 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருக்கருக்குடி-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

நனவிலுங்கனவிலுநாளுந்தன்னெளி
நினைவிலுமெனக்குவந்தெய்துநின்மலன்
கனைகடல்வையகந்தொழுகருக்குடி
யனலெரியாடுமெம்மடிகள்காண்மினே. (க)

வேதியன்விடையுடைவிமலனென்னலர்
மூதெயிலெரியெழமுனிந்தமுக்கணன்
காதியல்குழையினன்கருக்குடியம
ராதியையடிதொழுவல்லலில்லையே. (உ)

மஞ்சுறுபொழில்வளமலிகருக்குடி
நஞ்சுறுதிருமிடறுடையநாதனை
ரஞ்சுரும்பார்குழலரிவையஞ்சவே
வெஞ்சுரந்தனில்விளையாடலென்கொலோ. (கூ)

ஊனுடைப்பிறவியையறுக்கவுன்னுவீர்
கானிடையாடலான்பயில்கருக்குடிக்
கோனுயர்கோயிலேவணங்கிவைகலும்
வானவர்தொழுகழல்வாழ்த்திவாழ்மினே. (ச)

சூடுவர்சடையிடைக்கங்கைகங்கையைக்
கூடுவருலகிடையெங்கொண்டொலி
பாடுவரிசைபறைகொட்டநட்டிரு
ளாடுவர்கருக்குடியண்ணல்வண்ணமே- (டு)

இன்புடையாரிசைவீணைபூணரா
வென்புடையாரெழின்மேனிமேலெரி
மூன்புடையார்முதலேத்துமன்பருக்
கன்புடையூர்கருக்குடியெமண்ணலே. (கூ)

காலமுஞாயிறுந்தியுமாயவர்
கோலமுமுடியரவணிந்தகொள்கையர்
சீலமுமுடையவர்திருக்கருக்குடிச்
சாலவுமினிதவருடையதன்மையே. (எ)

எறிகடல்புடைதழுவிலங்கைமன்னனை
முறிபடவரையிடையடர்த்தமூர்த்தியார்
கறைபடுபொழின்மதிதவழ்கருக்குடி
யறிவொடுதொழுமவராள்வரன்மையே. (அ)

பூமனுந்திசைமுகன்முனும்பொற்பமர்
வாமனனறிகிலாவண்ணமோங்கெரி

யாமெனவுயர்ந்தவனணிகருக்குடி
நாமனனினில்வரநினைதனன்மையே. (கூ)

சாக்கியர்சமண்படுகையர்பொய்ம்மொழி
யாக்கியவுரைகொளேலருந்திருநமக்
காக்கியவரனுறையணிகருக்குடிப்
பூக்கமழ்கோயிலேபுடைபட்டுய்ம்மினே. (கo)

கானலில்விரைமலர்விம்முகார்ழியான்
வானவன்கருக்குடிமைந்தன்றன்னெளி
யானமெய்ஞ்ஞானசம்பந்தன்சொல்லிய
ஊனமின்மொழிவலார்க்குயருமின்பமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-சற்குணலிங்கேசுவரர்-தேவியார்-சர்வாலங்கிருதமின்னம்மை.

திருப்பஞ்சாக்கரப்பதிகம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந்துஞ்சலிலாதபோழ்தினு
நெஞ்சகமைந்துநினைமினுடொறும்
வஞ்சகமற்றடிவாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தனவஞ்செழுத்துமே. (க)

மந்திரநான்மறையாகிவானவர்
சிந்தையுணின்றவர்தம்மையாள்வன
செந்தழலோம்பியசெம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திரமஞ்செழுத்துமே. (உ)

ஊனிலுயிர்ப்பையொடுக்கியொண்சுடர்
ஞானவிளக்கினையேற்றிநன்புலத்
தேனைவழிதிறந்தேத்துவார்க்கிட
ரானகெடுப்பனவைந்தெழுத்துமே. (கூ)

நல்லவர்தியனெனுதுகச்சினர்
செல்லல்கெட்சிவமூத்திகாட்டுவ
கொல்லைமன்றமர்கொண்டுபோமிடத்
தல்லல்கெடுப்பனவஞ்செழுத்துமே. (ச)

கொங்கலர்வனமதன்வாளியைந்ததத்
தங்குளபூதமுமஞ்சவைம்பொழிற்
றங்காவின்படமஞ்சுந்தம்முழை
யங்கையிலேவிரலஞ்செழுத்துமே. (டு)

EFEO_TVG_149-203 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தும்மலிருமலிருடர்ந்தபோழ்தினும்
வெம்மைநரகம்விளைந்தபோழ்தினு
மிம்மையினையடர்த்தெய்துமம்போழ்தினு
மம்மையினுந்துணையஞ்செழுத்துமே. (கூ)

வீடுபிறப்பையறுத்துமெச்சினர்
பீடைகெடுப்பனபின்னைநாடொறு
மாடுகொடுப்பனமன்னுமாநட
மாடியுகப்பனவஞ்செழுத்துமே. (எ)

வண்டமரோதிமடந்தைபேணின
பண்டையிராவணன்பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டுதுதித்தபின்னவர்க்
கண்டமளிப்பனவஞ்செழுத்துமே. (அ)

கார்வணனன்முகன்காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடிசெவ்விநாடொறும்
பேர்வணம்பேசிப்பிதற்றும்பித்தர்கட்
கார்வணமாவனவஞ்செழுத்துமே. (கூ)

புத்தர்சமண்கழுக்கையர்பொய்கொளாச்
சித்தத்தவர்கடெளிந்துதேறின
வித்தகநீறணிவார்வினைப்பகைக்
கத்திரமாவனவஞ்செழுத்துமே. (கo)

நற்றமிழ்ஞானசம்பந்தனன்மறை
கற்றவன்காழியர்மன்னனுன்னிய
வற்றமின்மாலையீரைந்துமஞ்செழுத்
துற்றனவல்லவரும்பராவரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவிற்கோலம்-பண்-காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

உருவினுருமையொடுமொன்றிநின்றதோர்
திருவினன்வளர்சடைத்திங்கள்கங்கையான்
வெருவிவானவர்தொழவெகுண்டுநோக்கிய
செருவினுறைவிடந்திருவிற்கோலமே. (க)

சிற்றிடையுமையொருபங்கனங்கையி
லுற்றதோரெரியினுருசரத்தினல்
வெற்றிகொளவுணர்கள்புரங்கள்வெந்தறச்
செற்றவனுறைவிடந்திருவிற்கோலமே. (உ)

ஐயனல்லதிசயனயன்விண்ணோர்தொழு
மையணிகண்டனுலவுண்ணம்வண்ணவான்
பையரவல்குலாள்பாகமாகமுஞ்
செய்யவனுறைவிடந்திருவிற்கோலமே. (ந)

விதைத்தவன்முனிவருக்கறமுன்காலினா
லுதைத்தவனுயிரிழந்துருண்டுவீழ்தரப்
புதைத்தவனெடுகர்ப்புரங்கண்மூன்றையுஞ்
சிதைத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (ச)

மூன்றினன்மூவருண்முதல்வனுயினன்
கொன்றுலாமலர்ப்பொழிற்கூகமேவினன்
னன்றிவான்பிறையினனடியர்மேல்வினை
சிந்துவானுறைவிடந்திருவிற்கோலமே. (நு)

தொருத்தவனருமறையங்கமாகமம்
வருத்தவன்வளர்பொழிற்கூகமேவினன்
மிருத்தவன்மிருத்தவர்புரங்கள்வெந்தறச்
செருத்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (கூ)

விரித்தவனருமறைவிரிசடைவெள்ளந்
தரித்தவன்றரியலர்புரங்களாசற
வெரித்தவனிலங்கையர்கோனிடர்ப்படச்
சிரித்தவனுறைவிடந்திருவிற்கோலமே. (எ-அ)

திரிதருபுரமெரிசெய்தசேவகன்
வரியரவொடுமதிசடையில்வைத்தவ
னரியொடுபிரமனதாற்றலாலுருத்
தெரியலனுறைவிடந்திருவிற்கோலமே. (கூ)

சீர்மையில்சமணுஞ்சிவரக்கையர்
நீர்மையிலுரைகள்கொள்ளாதநேசர்க்குப்
பார்மலிபெருஞ்செல்வம்பரிந்தருள்கிடுஞ
சீர்மையினனிடந்திருவிற்கோலமே. (கo)

கோடல்வெண்பிறையினைக்கூகமேவிய
சேடனசெழுமதிற்றிருவிற்கோலத்தை
நாடவல்லஃதமிழ்ஞானசம்பந்தன
பாடல்வல்லார்களுக்கில்லைபாவமே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-புராந்தகேசுவரர்-தேவியார்-புராந்தகியம்மை.
இத்தலம் - கூவமென வழங்கப்படுகின்றது.

EFEO_TVG_149-204 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருக்கழுமலம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மண்ணினல்லவண்ணம்வாழலாம்வைகலு
மெண்ணினல்லகதிக்கியாதுமோர்குறைவிலைக்
கண்ணினல்லஃதறங்கழுமலவளநகர்ப்
பெண்ணினல்லாளொடும்பெருந்தகையிருந்ததே. (க)

போதையார்பொற்கிண்ணத்தடிசில்பொல்லாதெனத்
தாதையார்முனிவுறத்தானெனையாண்டவன்
காதையார்குழையினன்கழுமலவளநகர்ப்
பேதையாளவளொடும்பெருந்தகையிருந்ததே. (உ)

தொண்டணைசெய்தொழிற்றுயராறுத்துய்யலாம்
வண்டணைகொன்றையான்மதுமலர்ச்சடைமுடிக்
கண்டணைனெற்றியான்கழுமலவளநகர்ப்
பெண்டணையாகவோர்பெருந்தகையிருந்ததே. (ங)

அயர்வுளோமென்றுநீயசைவொழிநெஞ்சமே
நியர்வளோமுன்கையாணேரிழையவளொடுங்
கயல்வயல்குகிகொளுங்கழுமலவளநகர்ப்
பெயர்பலதுதிசெய்பெருந்தகையிருந்ததே. (ச)

அடைவிலோமென்றுநீயயர்வொழிநெஞ்சமே
விடையமர்கொடியினன்விண்ணவர்தொழுதெழுங்
கடையுயர்மாடமார்கழுமலவளநகர்ப்
பெடையனகடையொடும்பெருந்தகையிருந்ததே. (ஞ)

மற்றொருபற்றிலேநெஞ்சமேமறைபல
கற்றநல்வேதியர்கழுமலவளநகர்ச்
சிற்றிடைப்பேரல்குற்றிருந்திழையவளொடும்
பெற்றெனையாளுடைப்பெருந்தகையிருந்ததே. (ட)

குறைவிலீவதுமொழிகுறைவொழிநெஞ்சமே
நிறைவளைமுன்கையாணேரிழையவளொடுங்
கறைவளர்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிறைவளர்சடைமுடிப்பெருந்தகையிருந்ததே. (எ)

அரக்கனாருவரையெடுத்தவனலறிட
நெருக்கினார்விரலினீடியாழ்பாடவே
கருக்குவாளருள்செய்தான்கழுமலவளநகர்ப்
பெருக்குநீரவளொடும்பெருந்தகையிருந்ததே. (அ)

நெடியவன்பிரமனுநினைப்பரிதாயவ
ரடியொடுமுடியறியாவழலுருவினன்

கடிகமழ்பொழிலணிகழுமலவளநகர்ப்
பிடிநடையவளொடும்பெருந்தகையிருந்ததே. (கூ)

தாருறுதட்டைச்சமணர்சாக்கியர்கட
மாருறுசொற்களைந்தடியிணையடைந்துய்ம்மின்
காருறுபொழில்வளர்கழுமலவளநகர்ப்
பேரறத்தாளொடும்பெருந்தகையிருந்ததே. (கஅ)

கருந்தடந்தேன்மல்குகழுமலவளநகர்ப்
பெருந்தடங்கொங்கையோடிருந்தவெம்பிரான்றனை
யருந்தமிழ்ஞானசம்பந்தனசெந்தமிழ்
விரும்புவாரவர்கள்போய்விண்ணுலகாள்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருந்துதேவன்குடி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மருந்துவேண்டிலலிவைமந்திரங்கள்ளிவை
புரிந்துகேட்கப்படும்புண்ணியங்கள்ளிவை
திருந்துதேவன்குடித்தேவர்தேவெய்திய
வருந்தவத்தோர்தொழுமடிகள்வேடங்களே. (க)

வீதிபோக்கரவனவினையைவிட்டுய்வன
வோதியோர்க்கப்படாப்பொருளோர்ப்பன
தீதிலேவன்குடித்தேவர்தேவெய்திய
வாதியந்தம்மிலாவடிகள்வேடங்களே. (உ)

மானமாக்குவனமரசுநீக்குவன
வானெயுள்கச்செலும்வழிகள்காட்டுவன
தேனுமண்டும்மிசைபாடுந்தேவன்குடி
யானஞ்சாடுமுடியடிகள்வேடங்களே. (ங)

செவிகளார்விப்பனசிந்தையுட்சேர்வன
கவிகள்பாடுவனகண்குளிர்விப்பன
புவிகள்பொங்கப்புனலாயுந்தேவன்குடி
யவிகளுய்க்கப்படுமடிகள்வேடங்களே. (ச)

விண்ணுலாவுந்நெறிவீடுகாட்டுந்நெறி
மண்ணிலாவுந்நெறிமயக்கந்தீர்க்குந்நெறி
தெண்ணிலாவெண்மதிதீண்டுதேவன்குடி
யண்ணலானடியடிகள்வேடங்களே. (ஞ)

பங்கமென்னப்படாபழிகளென்னப்படா
புங்கமென்னப்படாபுகழ்களென்னப்படும்

EFEO_TVG_149-205 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திங்கடோயும்பொழிலீண்டுதேவன்குடி
யங்கமாறுஞ்சொன்னவடிகள்வேடங்களே. (சு)

கரைதலொன்றும்மிலேகருதவல்லார்தமக்
குரையினானம்மிலையுலகினின்மன்னுவர்
திரைகள்பொங்கப்புனல்பாயுந்தேவன்குடி
யரையில்வெண்கோவணத்தடிகள்வேடங்களே. (எ)

உலகமூட்குந்திறலுடையரக்கன்வலி
விலகுபூதக்கணம்வெருட்டும்வேடத்தினன்
றிலகமாரும்பொழில்சூழ்ந்ததேவன்குடி
யலர்தயங்கும்முடியடிகள்வேடங்களே. (அ)

துளக்கமில்லாதனதூயதோற்றத்தன
விளக்கமாக்குவனவெறிவண்டாரும்பொழி
றிளேக்குந்தேவன்குடித்திசைமுகனேடுமா
லளக்கவொண்ணவண்ணத்தடிகள்வேடங்களே. (கூ)

செருமருதண்டுவர்த்தேரமணர்க
ளருமருவப்படாத்தொழும்பர்தமுரைகொளே
றிருமருவும்பெரும்கைசூழ்ந்ததேவன்குடி
யருமருந்தாவனவடிகள்வேடங்களே. (கo)

சேடர்தேவன்குடித்தேவர்தேவன்றனை
மாடமோங்கும்பொழின்மல்குதண்காழியர்
ஞடவல்லஃதமிழ்ஞானசம்பந்தனம்
பாடலபத்துமவல்லார்க்கில்லையாம்பாவமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - கர்க்கடகேசுவரர் - தேவியார் - அருமருந்துநாயகியம்மை.

திருக்கானப்பேர் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பிடியெலாம்பின்செலப்பெருங்கைமாமலர்தழீஇ
விடியலேதடமூழ்கிவிதியினல்வழிபடும்
கடியுலாம்பூம்பொழிற்கானப்பேரண்ணலின்
னடியலாலடைசரணுடையரோவடியரே. (க)

நுண்ணிடைப்பேரல்குனூபுரமெல்லடிப்
பெண்ணினல்லாளையோர்பாகமாப்பேணினன்.
கண்ணுடைநெற்றியான்கருதியகானப்பேர்
விண்ணிடைவேட்கையார்விரும்புதலகருமமே. (உ)

வரிவரிவாய்த்தங்கியநுண்சிறைவண்டினங்
காவிவாய்ப்பண்செயுங்கானப்பேரண்ணலே

ஈவிவாய்ச்சாந்துளும்பூவுளுஞானநீர்
தூவிவாய்ப்பெய்துகின்றுட்டுவார்தொண்டரே. (ரு)

கிறையுடைநெஞ்சுளுநீருளும்பூவுளும்
பறையுடைமுழவுளும்பலியுளும்பாட்டுளுங்
கறையுடைமிடற்றண்ணல்கருதியகானப்பேர்
குறையுடையவர்க்கலாற்கூடிலார்குற்றமே. (ச)

ஏனப்பூண்மார்பின்மேலென்புபூண்டிலா
ஞானப்பேராயிரம்பேரினனண்ணிய
கானப்பேரூர்தொழுங்காதலார்நீதிலர்
வானப்பேரூர்புகும்வண்ணமும்வல்லரே. (டு)

பள்ளமேபடர்சடைப்பாற்பட்டப்பாய்ந்தநீர்
வெள்ளமேதாங்கினன்வெண்மதிசூடினன்
கள்ளமேசெய்கிலார்கருதியகானப்பே
ருள்ளமேகோயிலாவுள்குமென்னுள்ளமே. (சு)

மானமாமடப்பிடிவன்கையாலலகிடக்
கானமார்கடகரிவழிபடுங்கானப்பே
ரூனமாமுடம்பினுறுபிணிகெடவென்னின்
ஞானமாமலர்கொடுநணுகுதனன்மையே (எ)

வாளினன்வேலினன்மால்வரையெடுத்தகிண்
டோளினனெடுமுடிதொலையவேபூன்றிமிக்
காளினன்கானப்பேர்தலையினல்வணங்குவார்
நாளுநாளுயர்வதோர்நன்மையைப்பெறுவரே. (அ)

சிலையினன்முப்புரஞ்தியெழச்செற்றவ
னிலையிலாவிருவரைநிலைமைகண்டேரங்கினன்
கலையினர்புறவிற்றேன்கமழ்தருகானப்பேர்
தலையினல்வணங்குவார்தவமுடையார்களே. (கூ)

உறித்தலைச்சுரையொடுகுண்டிகைபிடித்துச்சி
பறித்தலும்போர்த்தலும்பயனிலாப்பாவிகாண்
மறித்தலைமடப்பிடிவளரிளங்கொழுங்கொடி
கறித்தெழுகானப்பேர்கைதொழல்கருமமே. (கo)

காட்டகத்தாடலான்கருதியகானப்பேர்
கோட்டகத்திளவரால்குதிகொளுங்காழியா
னாட்டகத்தோங்குசீர்ஞானசம்பந்தன
பாட்டகத்திவைவலார்க்கில்லையாம்பாவமே. திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-கானீயசுவரர்-தேவியார்-மகமாயியம்மை.

இத்தலம்-கானையார்கோவிலென்று வழங்கப்படுகின்றது.

EFEO_TVG_149-206 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருச்சக்கரப்பள்ளி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

படையினர்வெண்மழுப்பாய்புலித்தோலரை
யுடையினருமையொருகூறனூரெரிவதோர்
விடையினர்வெண்பொடிப்பூசியார்விரிபுனற்
சடையினருறைவிடஞ்சக்கரப்பள்ளியே. (க)

பாடினரருமறைபனிமதிசடைமிசைச்
சூடினர்படுதலைதன்னெருக்கதனெடு
நாடினரிடுபலிகண்ணியோர்காலனைச்
சாடினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (உ)

மின்னினர்சடைமிசைவிரிகதிர்மதியமும்
பொன்னினர்கொன்றையும்பொறிகிளரரவமும்
தன்னினருலகெலாந்தொழுதெழநான்மறை
தன்னினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (ங)

நலமலிகொள்கையார்நான்மறைப்பாடலார்
வலமலிமழுவினர்மகிழ்மூர்வண்டறை
மலர்மலிசலமொடுவந்திழிகாவிரி
சலசலமணிகொழிசக்கரப்பள்ளியே. (ச)

வெந்தவெண்பொடியணிவேதியர்விரிபுன
லந்தமிலணிமலைமங்கையோடமருமூர்
கந்தமார்மலிகொடிகாரகிற்பன்மணி
சந்தினோடீனுபுனற்சக்கரப்பள்ளியே. (ஞ)

பாங்கினன்முப்புரம்பாழ்படவெஞ்சிலை
வாங்கினர்வானவர்தானவர்வணங்கிட
வோங்கினருமையொருகூறுடுமொலிபுன
லூங்கினருறைவிடஞ்சக்காப்பள்ளியே. (கூ)

பாரினர்தொழுதெழுபரவுபல்லாயிரம்
பேரினர்பெண்ணொருகூறனர்பேரொலி
நீரினர்சடைமுடிநிறைமலர்க்கொன்றையந்
தாரினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (எ)

முதிரிலாவோர்பிறைசூடினர்முன்னநா
ளெதிரிலாமுப்புரமெரிசெய்தார்வரைதனு
லகிரிலாவல்லாக்கன்வலிவாட்டிய
சதிரினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (அ)

துணிபடுகோவணஞ்சுண்ணவெண்பொடியினர்
பணிபடுமார்பினர்பனிமதிச்சடையினர்

மணிவணனவனெடுமலர்மிசையானையுந்
தனிவினர்வளநகர்சக்கரப்பள்ளியே. (கூ)

உடம்புபோர்சீவரமுண்டொழிற்சமணர்கள்
விடம்படுமுரையைவைமெய்யலவிரிபுனல்
வடம்படுமலர்கொடுவணங்குமின்வைகலுந்
தடம்புனல்சூழ்தருசக்கரப்பள்ளியே. (கo)

தண்வயல்புடையணிசக்கரப்பள்ளியெங்
கண்ணுதலவனடிகழுமலவளநகர்
நண்ணியசெந்தமிழ்ஞானசம்பந்தன்சொற்
பண்ணியவிவைசொலப்பறையுமெய்ப்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - ஆலந்துறையீசுவரர். தேவியார் - அல்லியங்கோதையம்மை.

சக்கரப்பள்ளியினிற்சார்ந்த அல்லியங்கோதை, சொற்கிரங்குமாலந்துறையானே என்னுஞ் சிவநாமப்பதிகமுடையானு முணர்க.

திருமழபாடி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காலையார்வண்டினங்கிண்டியகாருறை
சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிட
மாலையார்மதிதவழ்மாமழபாடியே. (க)

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய
பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தாமலர்துதையவே
மறையணிகாவினன்மாமழபாடியே. (உ)

அந்தணர்வேள்வியுமருமறைத்துழனியுஞ்
செந்தமிழ்க்கீதமுஞ்சீரினல்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விட
மந்தமந்துலவுசீர்மாமழபாடியே. (ங)

அத்தியினுரிதனையழகுறப்போர்த்தவன்
மூத்தியாய்மூவரின்முதல்வனுயிர்ன்றவன்
பத்தியாற்பாடடப்பரிந்தவர்க்கருள்செயு
மத்தனூருறைவிடமணிமழபாடியே. (ச)

கங்கையார்சடையிடைக்கதிர்மதிபுனைந்தவன்
வெங்கண்வாளரவுடைவேதியன்றீகிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விட
மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. (ஞ)

பாலனாராருயிர்பாங்கினனாணவருங்
காலனாருயிர்செகக்காலினற்சாடினன்
சேலினார்கண்ணினைடன்னெடுஞ்சேர்விட
மாலினார்வழிபடுமாமழபாடியே. (கூ)

விண்ணினிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே
யெண்ணிலார்முப்புரமெரியுணகைசெய்தார்
கண்ணினற்காமனைக்கனலெழுக்காய்ந்தவெம்
மண்ணலாருறைவிடமணிமழபாடியே. (எ)

காத்தினற்கயிலையையெடுத்தகாரக்கன
சிரத்தினையூன்றலுஞ்சிவனடிசரணென
விரத்தினற்கைந்ரம்பெடுத்திசைபாடலும்
வரத்தினன்மருவிடமாமழபாடியே. (அ)

ஏடுலாமலர்மிசையனெழின்மாலுமாய்
நாடினார்க்கரியசிரதனுறைவிடம்
பாடலாம்பெண்ணையின்பழம்விழப்பைம்பொழின்
மாடலாமல்குசீர்மாமழபாடியே. (கூ)

உறிபிடித்தூத்தைவாய்ச்சமணுடுசாக்கியர்
நெறிபிடித்தறிவிலாநீர்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணெனக்கொண்டுமான்
மறிபிடித்தானிடமாமழபாடியே. (கo)

ஞாலத்தாராதிநாளினனுடொறுஞ்
சீலத்தான்மேவியசிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர்ஞானசம்பந்தன்சொற்
கோலத்தாற்பாடுவார்குற்றமற்றார்களே. திருச்சிற்றம்பலம்.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வாருமன்னும்முலைமங்கையோர்பங்கின
ராருமன்னும்பலியுண்பதும்வெண்டலை
காருமன்னும்பொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நீருமன்னுசடைநிமலர்தந்நீர்மையே. (க)

நிருத்தனர்நீள்சடைமதியொடுபாம்பணி
கருத்தனர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
யருத்தனரமுதமாமங்கையோர்பாகமாப்
பொருத்தனர்கழலிணைபோற்றுதல்பொருளதே. (உ)

பண்ணினரருமறைபாடினர்நெற்றியோர்
கண்ணினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி

விண்ணினர்விரிபுனன்மேவினர்சடைமுடி
யண்ணலாரெம்மையாளுடையவெம்மடிகளே. (கூ)

பணங்கொணகம்மரைக்கரர்பதுபலபலி
யுணங்கலோடுண்கலனுறைவதுகாட்டிடை
கணங்கள்கூடித்தொழுதேத்துகாட்டுப்பள்ளி
நிணங்கொள்சூலப்படைநிமலர்தந்நீர்மையே. (ச)

வரையுலாஞ்சந்தொடுவந்திழிகாவிரிக்
கரையுலாமிடுமணலசூழ்ந்தகாட்டுப்பள்ளித்
திரையுலாங்கங்கையுந்திங்களுஞ்சூடியங்
கணையுலாங்கோவணத்தடிகள்வேடங்களே. (நி)

வேதனர்வெண்மழுவேந்தினரங்கமூன்
னேதினருமையொருகூறனைகொண்குழைக்
காதினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளி
நாதனர்திருவடிநாளுநின்றேத்துமே. (கு)

மையினர்மிடறனர்மான்மழுவேந்திய
கையினர்கடிபொழில்சூழ்ந்தகாட்டுப்பள்ளித்
தையலோர்பாகமாத்தண்மதிசூடிய
வையனரடிதொழவல்லலொன்றில்லையே. (எ)

சிலைதனன்முப்புரஞ்செற்றவன்சீரினர்
மலைதனல்வல்லரக்கன்வலிவாட்டினன்
கலைதனர்புறவணிமல்குகாட்டுப்பள்ளி
தலைதனல்வணங்கிடத்தவமதுவாகுமே. (அ)

செங்கண்மாறிகழ்தருமலருறைதிசைமுகன்
றங்கையாற்றிருமுதெழத்தழலுருவாயினன்
கங்கையார்சடையினன்கருதுகாட்டுப்பள்ளி
யங்கையாற்றிருமுமவர்க்கலலிலொன்றில்லையே. (கூ)

போதியார்பிண்டியாதொன்றவப்பொய்யர்கள்
வாதினுரையவைமெய்யலவைகலுங்
காரினர்கடிபொழிலசூழ்ந்தகாட்டுப்பள்ளி
பேரினர்தொழுதெழவின்பமவந்தெய்துமே. (கo)

பொருபுனல்புடையணிபுறவன்னகர்மனன்
னருமறையவைவல்லவணிகொள்சம்பந்தன்சொற்
கருமணிமிடற்றினன்கருதுகாட்டுப்பள்ளி
பரவியதமிழ்கொலபபறையுமெய்ப்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-தீயாடியப்பர்-தேவியார் - வார்கொண்டமுலையம்மை.

EFEO_TVG_149-208 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஅரதைப்பெரும்பாழி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

பைத்தபாம்போடரைக்கோவணம்பாய்புலி
மொய்த்தபேய்கண்முழக்கமுதுகாட்டிடை
நித்தமாகநடமாடிவெண்ணீறணி
பித்தர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (க)

கயல்சேல்கருங்கண்ணியர்நாடொறும்
பயலிகொள்ளப்பலிதேர்ந்துழல்பான்மையா
ரியலிவரனேர்நினைந்தோர்களுக்கெண்ணரும்
பெயரர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (உ)

கோடல்சாலவ்வுடையார்கொலையானையின்
மூடல்சாலவ்வுடையார்முளிகானிடை
யாடல்சாலவ்வுடையாரழகாகிய
பீடர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ங)

மண்ணர்நீராரழிலார்மலிகாலினர்
விண்ணர்வேதம்விரித்தோதுவார்மெய்ப்பொருள்
பண்ணர்பாடலுடையாரொருபாகமும்
பெண்ணர்கோயில்லரதைப்பெரும்பாழியே (ச)

மறையர்வாயின்மொழிமானுடுவெண்மழுக்
கறைகொள்சூலம்முடைக்கையர்காரார்தருங்
நறைகொள்கொன்றையகந்தார்தருஞ்சென்னிமேற்
பிறையர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ஞ)

புற்றரவம்புலித்தோலரைக்கோவணந்
தற்றிரவின்னடமாடுவர்தாழ்தரு
சுற்றமன்பாரிடந்தொல்கொடியின்மிசைப்
பெற்றர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (ரு)

துணையிறுத்தஞ்சுரிசங்கமர்வெண்பொடி
யிணையிலேற்றையுகந்தேறுவரும்மெரி
கணையினன்முப்புரஞ்செற்றவர்கையினிற்
பிணையர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (எ)

சரிவிலாவல்லரக்கன்றடந்தோடலை
நெரிவிலாரவ்வடர்த்தார்நெறிமென்குழ
லரிவைபாகமமர்ந்தாரடியாரொடும்
பிரிவில்கோயில்லரதைப்பெரும்பாழியே (அ)

வரியராவென்பணிமார்பினர்நீர்மல்கு
மெரியராவுஞ்சடைமேற்புறையேற்றவர்

கரியமாலோடயன்காண்பரிதாகிய
பெரியர்கோயில்லரதைப்பெரும்பாழியே. (கூ)

நாணிலாதசமண்சாக்கியர்நாடொறு
மேணிலாதமிமொழியவ்வெழிலாயவர்
சேணுலாமும்மதிலீயெழச்செற்றவர்
பேணுகோயில்லரதைப்பெரும்பாழியே. (கo)

நீரினூர்புன்சடைநிமலனுக்கிடமெனப்
பாரினூர்பரவரதைப்பெரும்பாழியைச்
சீரினூர்காழியுண்ஞானசம்பந்தன்செய்
யேரினூர்தமிழ்வல்லார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பரதேசுவரர்-தேவியார்-அலங்காரநாயகியம்மை.

திருமயேந்திரப்பள்ளி - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நிரைதருபவளமுஞ்சீர்திகழ்வயிரமுங்
கரைதருமகிலொடுகனவரைபுகுதரும்
வரைவிலாலெயிலெய்தமயேந்திரப்பள்ளியுள்
ளரவரையசனடியிணைபணிமினே. (க)

கொண்டல்சேர்கோபுரங்கோலமார்மாளிகை
கண்டலுங்கைதையுங்கமலமாவாவியும்
வண்டலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியிற்
செண்டுசேர்விடையினன்றிருந்தடிபணிமினே. (உ)

கோங்கிளவேங்கையுங்கொழுமலர்ப்புன்னையுந்
தாங்குதேன்கொன்றையுந்தகுமலர்க்குரவமும்
மாங்கரும்பும்வயன்மயேந்திரப்பள்ளியுள்
ளாங்கிருந்தவன்கழலடியிணைபணிமினே. (ங)

வங்கமார்சேனுயர்வருகுமியான்மிகு
சங்கமாரொலியதிற்றருபுகைமழ்தரும்
மங்கையோர்பங்கினன்மயேந்திரப்பள்ளியுள்
ளெங்களுபகன்றனதிணைபடிபணிமினே. (ச)

நித்திலத்தொகைபலநிரைதருமலரெனச்
சித்திரப்புனரிசேர்த்திடத்திகழ்ந்திருந்தவன்
மைத்திகழ்கண்டனன்மயேந்திரப்பள்ளியுட்
கைத்தலமுவனைக்கண்டடிபணிமினே. (ஞ)

EFEO_TVG_149-209 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சந்திரன்கதிரவன்றருபுகழாயனெடு
மிந்திரன்வழிபடவிருந்தவெம்மிறையவன்
மந்திரம்மறைவளர்மயேந்திரப்பள்ளியுள்
ளந்தமில்லழகனையடிபணிந்துய்ம்மினே. (கூ)

சடைமுடிமுனிவர்கன்சமைவொடும்வழிபட
நடநவில்புரிவினனறவனிமலரொடு
படர்சடை மதியினன் மயேந்திரப்பள்ளியுள்
ளடல்விடையுடையவனடிபணிந்துய்ம்மினே (எ)

திரமொருபதுமுடைச்செருவலியரக்கனைக்
கரமிருபதுமிறக்கனவரையடர்த்தவன்
மரவமர்பூம்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
ளரவமரசடையனையடிபணிந்துய்ம்மினே. (அ)

நாகணைத்துயில்பவன்னலமிகுமலரவ
னுகணைந்தவர்கழலணையவும்பெறுகிலர்
மாகணைந்தலர்பொழின்மயேந்திரப்பள்ளியுள்
யோகணைந்தவன்கழலுணர்ந்திருந்துய்ம்மினே. (கூ)

உடைதுறந்தவர்களுமுடைதுவருடையரும்
படுபழியுடையவர்பகர்வனவிடுமினீர்
மடைவளர்வயலணிமயேந்திரப்பள்ளியு
ளிடமுடையீசனையிணையடிபணிமினே. (கo)

வம்புலாம்பொழிலணிமயேந்திரப்பள்ளியு
ணம்பனர்கழலடிஞானசம்பந்தன்சொ
னம்பரமிதுவெனநவினவில்லவ
ரும்பரார்திர்கொளவுயர்பதியணைவரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-திருமேனியழகர்-தேவியார்-வடிவாம்பிகையம்மை.

திருவடகம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வன்னியுமத்தமுமதிபொதிசடையினன்
பொன்னியறிருவடிபுதுமலரவைகொடு
மன்னியமறையவர்வழிபடவடியவ
ரின்னிசைப்பாடலாடகத்தொருவனே. (உ)

கொடிநெடுமாளிகைக்கோபுரங்குளிர்மதி
வடிவுறவமைதரமருவியவேடகத்
தடிகளையடிபணிந்தரற்றுமின்பினி
லிடிபடும்வினைகள்போயில்லையாகுமே. (ஒ)

குண்டலந்திகழ்தருகாதுடைக்குழகனே
வண்டலம்பும்மலர்க்கொன்றைவாண்மதியணி
செண்டலம்பும்விடைச்சேடனூரேடகம்
கண்டுகைதொழுதலுங்கவலைகோயகலுமே. (கூ)

ஏலமார்தருகுழலேழையோடெழில்பெறுங்
கோலமார்தருவிடைக்குழகனருறைவிடஞ்
சாலமாதவிகளுஞ்சந்தனஞ்சண்பகஞ்
சீலமாடகஞ்சேர்தலாஞ்செல்வமே. (ச)

வரியணிநயனிநன்மலைமகண்மறுகிடக்
கரியினீயுரிசெய்தகறையணிமிடறினன்
பெரியவன்பெண்ணினோடாணலியாகிய
வெரியவனுறைவிடமேடகக்கோயிலே. (டு)

பொய்கையின்பொழிலுறுபுதுமலர்த்தென்றலார்
வைகையின்வடகரைமருவியவேடகத்
தையனையடிபணிந்தரற்றுமின்னடர்தரு
வெய்யவன்பிணிகெடவிடெளிதாகுமே. (கூ-எ)

தடவரையெடுத்தவன்றருக்கிறத்தோளடர்ப்
படவிரலூன்றியேபரிந்தவற்கருள்செய்தான்
மடவரலெருக்கொடுவன்னியுமத்தமுஞ்
மிடமுடைச்சடையினனேடகத்திறைவனே. (அ)

பொன்னுமாமணிகளும்பொருகிரைச்சந்தகி
றன்னுளார்வைகையின்கரைதனிற்சமைவுற
வன்னமாமயனுமாலடிமுடிதேடியு
மின்னவாறென வொணனேடகத்தொருவனே. (கூ)

குண்டிகைக்கையினர்குணமிலாத்தேரர்கள்
பண்டியைப்பெருக்கிடும்பளகர்கள்பணிகிலர்
வண்டிரைக்கும்மலர்க்கொன்றையுமவன்னியும்
மிண்டைசேர்க்குஞசடையேடகத்தெந்தையே. (கo)

கோடுசந்தனமிலைகொண்டிழிவைகைநீ
ரோடுசென்றணைதருமேடகத்தொருவனை
நாடுதென்புகலியுண்ஞானசம்பந்தன
பாடலத்திவைவல்லார்க்கில்லையாபமே. திருச்சிற்றம்பலம்.

திருவாத்தானம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

நீரிடைத்துயின்றவன்றம்பிநீள்சாம்புவான்
பேருடைச்சுக்கிரீவன்னதமன்றெழுக்

காருடைநஞ்சுண்கொத்தருள்செய்தவெஞ்
சீருடைச்சேடர்வாழ்திருவுசாத்தானமே. (உ)

கொல்லையேறுடையவன்கோவணவாடையன்
பல்லையார்படுதலைப்பலிகொளும்பரமனூர்
முல்லையார்புறவணிமுதுபதிறைகமழ்
தில்லையானுறைவிடந்திருவுசாத்தானமே. (உ)

தாமலர்போலவேதக்கனர்வேள்வியை
யூமனுந்தங்கனவாக்கினனெருநொடிக்
காமனுருடல்கெடக்காய்ந்தவெங்கண்ணுதல
சேமமாவுறைவிடந்திருவுசாத்தானமே. (கூ)

மறிதருகரத்தினன்மால்விடையேறியான்
குறிதருகோலநற்குணத்தினரடிதொழ
நெறிதருவேதியர்நித்தலுநியமஞ்செய்
செறிதருபொழிலணிதிருவுசாத்தானமே. (சு-டு-கூ)

பண்டிரைத்தயனுமாலும்பலபத்தர்கள்
தொண்டிரைத்துமலர்தூவித்தோத்திரஞ்சொலக்
கொண்டிரைக்கொடியொடுங்குருகினல்லினந்
தெண்டிரைக்கழனிசூழ்திருவுசாத்தானமே. (எ)

மடவரல்பங்கினன்மலைதனைமதியாது
சடசடவெடித்தவன்றலைபத்துநெரிதர
வடதரவூன்றியங்கேயவற்கருள்செய்தான்
றிடமெனவுறைவிடந்திருவுசாத்தானமே. (அ)

ஆணலார்பெண்ணலாரயனெடுமாலுக்குங்
காணுணவண்ணத்தான்கருதுவார்மனத்துளான்
பேணுவார்பிணியொடும்பிறப்பறுப்பானிடஞ்
சேணுலாமாளிகைத்திருவுசாத்தானமே. (கூ)

கானமார்வாழ்க்கையான்காரணங்டேரர்சொல்
லூனமாக்கொண்டுநீருரைமினுய்யவெனில்
வானமார்மதிலணிமாளிகைவளர்பொழிற்
றேனமாமதியந்தோய்திருவுசாத்தானமே. (கூ)

வாகிரிந்திழியுநீர்வளவயற்புகலிமன்
றிகைதிரிந்தெறிகடற்றிருவுசாத்தானரை
யுகைதெரிந்துணருஞ்சமபந்தனெண்டமிழ்வல்லார்
நகைதிரையின்றியேநன்னெறிசேர்வரே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - மந்திரபுரீசுவரர் - தேவியார் - பெரியநாயகியம்மை.

திருமுதுகுன்றம் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வண்ணமாமலர்கொடுவானவர்வழிபட
வண்ணலாரயிழையாளொடுமமர்விடம்
விண்ணின்மாமழைபொழிற்கிழியவெள்ளருவிசேர்
திண்ணிலார்புறவணிதிருமுதுகுன்றமே. (அ)

வெறியுலாங்கொன்றையந்தாரினன்மேதகு
பொறியுலாமரவசைத்தாடியோர்புண்ணியன்
மறியுலாங்கையினன்மங்கையோடமர்விடஞ்
செறியுளார்புறவணிதிருமுதுகுன்றமே. (உ)

ஏறனூர்விடையிசையிமையவர்தொழுமை.
கூறனூர்கொல்புலித்தோலினூர்மேனிமே
னீறனூர்நிறைபுனற்சடையனூர்நிகழ்விடந்
தேறலார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (கூ)

உரையினூருறுபொருளாயினுமையொடும்
விரையினூர்கொன்றைசேர்சடையினன்மேவிடம்
முரையினுரொலியெனவோங்குமுத்தாறுமெய்த்
திரையினுரெறிபுனற்றிருமுதுகுன்றமே. (ச)

கடியவாயினகுரற்களிறினப்பிளிறவோ
ரிடியவெங்குரலினோடாளிசென்றிடுகெறி
வடியவாய்மழுவினன்மங்கையோடமர்விடஞ்
செடியதார்புறவணிதிருமுதுகுன்றமே. (டு)

கானமார்கரியினீருரிவையார்பெரியதோர்
வானமார்மதியினோடரவர்தாமருவிட
மூனமாயினபினியவைகெடுத்தமையொடுந்
தேனமார்பொழிலணிதிருமுதுகுன்றமே. (கூ)

மஞ்சர்தாமலர்கொடுவானவர்வணங்கிட
வெஞ்சொலார்வேடரோடாடவர்விரும்பவே
யஞ்சொலாருமையொடுமமர்விடமணிகிளர்
செஞ்சொலார்பயிறருந்திருமுதுகுன்றமே. (எ)

காரினூரமர்தருங்கயிலைகன்மலையினை
யேரினூர்முடியிராவணனெடுத்தானிற
வாரினூர்முலையொடும்மன்னினூர்மருவிடஞ்
சீரினூர்திகழ்தருந்திருமுதுகுன்றமே. (அ)

ஆடினூர்கானகத்தருமறையின்பொருள்
பாடினூர்பலபுகழ்பரமனூரினைபடி

யேடினர்மலர்மிசையயனுமாலிருவருந்
தேடினரறிவொணாத்திருமுதுகுன்றமே. (கூ)

மாசுமெய்தாசுகொண்டுழல்சமண்சாக்கியர்
பேசுமெய்யுளவல்லபேணுவீர்காணுமின்
வாசமார்தருபொழில்வண்டினமிசைசெயத்
தேசமார்புகழ்மிகுந்திருமுதுகுன்றமே. (கo)

திண்ணினார்புரவணிதிருமுதுகுன்றரை
நண்ணினன்காழியுண்ஞானசம்பந்தன்சொல்
லெண்ணினனீரைந்துமாலையுமியலுமாப்
பண்ணினற்பாடுவார்க்கில்லையாம்பாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தென்குடித்திட்டை-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மூன்னேநான்மறையவைமுறைமுறைகுறையொடுந்
தன்னதாடொழுதெழுகின்றவன்றன்னிட
மன்னுமாகாவிரிவந்தடிவருடநற்
செந்நெலார்வளவயற்றென்குடித்திட்டையே (க)

மகரமாடுங்கொடிமன்மதவேடனே
நிகரலாகநெருப்பெழவிழித்தானிடம்
பகரபாணித்தலம்பன்மகரத்தொடுஞ்
சிகரமாளிகைதொகுந்தென்குடித்திட்டையே. (உ)

கருவினுலன்றியேகருவெலாமாயவ
னுருவினுலன்றியேயுருவுசெய்தானிடம்
பருவநாள்விழவொடும்பாடலோடாடலுந்
திருவினன்மிகுபுகழ்த்தென்குடித்திட்டையே. (ங)

உண்ணிலாவுவியரோங்குதன்றன்மையை
விண்ணிலாரறிகிலாவேதவேதாந்தனா
ரெண்ணிலாரெழின்மணிக்கனகமாளிகையிளந்
தெண்ணிலாவிரிதருந்தென்குடித்திட்டையே. (ச)

வருந்திவானோர்கள்வந்தடையமாநஞ்சுதா
னருந்தியாரமுதவர்க்கருள்செய்தான்மருவுமூர்
செருந்திபூமாதவிப்பந்தல்வண்செண்பகந்
திருந்துநீள்வளர்பொழிற்றென்குடித்திட்டையே. (ஞ)

ஊறினீரோசையுள்ளொன்றினொன்றிமால்
கூறினரமர்தருங்குமரவேடாதையூ

ராதினர்பொய்யகத்தையுணர்வெய்திமெய்
தேதினர்வழிபடுந்தென்குடித்திட்டையே. (சு)

கானலேக்கும்மவன்கண்ணிடந்தப்பநீள்
வானலேக்குந்தவத்தேவுவைத்தானிடந்
தானலேத்தெள்ளமூர்தாமரைத்தண்டுதை
தேனலேக்குமவயற்றென்குடித்திட்டையே. (எ)

மாலொடும்பொருதிறல்வாளரக்கன்னெரிந்
தோலிடும்படிவிரலொன்றுவைத்தானிடங்
காலொடுங்கனகமுக்குடன்வரக்கயல்வரால்
சேலொடும்பாய்வயற்றென்குடித்திட்டையே. (அ)

நாரணன்றன்னெடுநான்முகன்றனுமாய்க்
காரணன்னடிமுடிகாணவொண்ணனிடம்
ஆரணங்கொண்டுபூசுரர்கள்வந்தடிதொழச்
சீரணங்குபுகழ்த்தென்குடித்திட்டையே. (கூ)

குண்டிகைக்கையுடைக்குண்டருந்புத்தரும்
பண்டுரைத்தேயிடும்பற்றுவிட்டீர்தொழும்
வண்டிரைக்கும்பொழிற்றண்டலைக்கொண்டலார்
தெண்டிரைத்தண்புனற்றென்குடித்திட்டையே. (கo)

தேனலார்சோலைசூழ்தென்குடித்திட்டையைக்
கானலார்கடிபொழில்சூழ்தருங்காழியுண்
ஞானவர்ஞானசம்பந்தனசெந்தமிழ்
பானலார்மொழிவலார்க்கில்லையாம்பாவமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - பசுபதீசுவரர் - தேவியார் - உலகநாயகியம்மை.

திருக்காளத்தி-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

சந்தமாரகிலொடுசாதிதேக்குமரம்
முந்துமாமுகலியின்கரையினிலுமையொடும்
மந்தமார்பொழில்வளர்மல்குவண்காளத்தி
யெந்தையாரிணையடியெண்ணுநாத்துளவே. (க)

ஆலமாமரவமோடமைந்தசிர்ச்சந்தனஞ்
சாலமாபிலியுஞ்சண்பகமுந்தியே
காலமார்முகலிவந்தணைதருகாளத்தி
நீலமார்கண்டனேநினையுமாகினைவதே. (உ)

கோங்கமேருரவமேகொன்றையம்பாதிரி
மூங்கில்வந்தணைதருமுகலியின்கரையினி

EFEO_TVG_149-212 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

லாங்கமர்காளத்தியடிகளையடிதொழ
வீங்குவெந்துயர்கெடும்வீடெளிதாகுமே. (கூ)

கரும்புதேன்கட்டியுங்கதலியின்கனிகளு
மரும்புசீர்முகலியின்கரையினிலணிமதி
யொருங்குவார்சடையின்காளத்தியொருவனை
விரும்புவாரவர்கடாம்விண்ணுலகாள்வரே. (சு)

வரைதருமகிலொடுமாமுத்தமுந்தியே
திரைதருமுகலியின்கரையினிற்றேமலர்
விரைதருசடைமுடிக்காளத்திவிண்ணவ
னிரைதருகழலினைநித்தலுநினைமினே. (டு-சூ-எ-)

முத்துமாமணிகளுமுழுமலர்த்திரள்களு
மெத்துமாமுகலியின்கரையினிலெழில்பெறக்
கத்திடவரக்கனைக்கால்விரலூன்றிய
வத்தன்றன்காளத்தியனைவதுகருமமே. (அ)

மண்ணுமாவேங்கையும்மருதுகள்பிழந்துந்தி
கண்ணுமாமுகலியின்கரையினின்மைசேர்
வண்ணமாமலரயன்மாலவன்காண்கிலா
வண்ணலார்காளத்தியாங்கனைந்துய்மினே. (கூ)

வீங்கியவுடலினர்விரிதருதுவருடைப்
பாங்கிலார்சொலைவிடும்பரனடிபணியுமி
னேங்குவன்காளத்தியுள்ளமோடுணர்தர
வாங்கிடும்வினைகளேவானவர்க்கொருவனே. (கo)

அட்டமாசித்திகளனைதருகாளத்தி
வட்டவார்சடையனைவயலணிகாழியான்
சிட்டனான்மறைவலஞானசம்பந்தன்சொ
லிட்டமாப்பாடுவார்க்கில்லையாம்பாவமே. திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கரமுனம்மலராற்புனன்மலர்தூவியேகலந்தேத்துமின்
பரமனூர்பலபேரினும்பொலிபத்தர்சித்தர்கடாம்பயில்
வரமுன்னவருள்செய்யவல்லவெம்மையனுடனுமேயசீர்ப்
பிரமனூர்பிரமாபுரத்துறைபிஞ்ஞகனருள்பேணியே. (க)

விண்ணிலார்மதிசூடினன்விரும்பும்மறையவன்றன்றலை
யுண்ணகன்பலிபேணினனுலகத்துளனுயிரான்மலைப்
பெண்ணினார்திருமேனியான்பிரமாபுரத்துறைகோயிலு
ளண்ணலாரருளானுமர்கின்றவெம்முடையானியே. (உ)

எல்லியில்புகழாளனும்மிமையோர்கணத்துடன்கூடியும்
பல்லியார்தலையிற்பலியதுகொண்டுகந்தபடிறனுந்
தொல்லைவையகத்தேறுதொண்டர்கடேமலர்சொரிந்தேத்தவே
மல்லியம்பொழிறேன்மல்கும்பிரமாபுரத்துறைமைந்தனே. (கூ)

அடையலார்புரஞ்சிறியந்தணரேத்தமாமடமாதொடும்
பெடையெலாங்கடற்கானல்புல்கும்பிரமாபுரத்துறைகோயிலான்
முடையலார்தருங்கொன்றையான்முழுலேபரவிநின்றேத்தினு
லிடையிலார்சிவலோகமெய்துதற்கேதுகாரணங்காண்மினே. (சு)

வாயிடைம்மறையோதிமங்கையர்வந்திடப்பலிகொண்டுபோய்ப்
போயிடம்மெரிகானிடைப்புரிநாடகம்மினிதாடினான்
பேயொடுங்குடிவாழ்வினன்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்
மூயிடைப்பொருள்தந்தையாகுமென்மூதுவார்க்கருடன்மையே. (டு)

ஊடினாலினியாவதென்னுயர்கெஞ்சமேயுறவல்வினைக்
கோடிநீயுழல்கின்றதென்னழலன்றுதன்கையிலேந்தினான்
பீடுநேர்ந்ததுகொள்கையான்பிரமாபுரத்துறைவேதியன்
னேடுநேர்மதியோடராவணியெந்தையென்றுநின்றேத்திடே. (சு)

செய்யன்வெள்ளியன்ஒள்ளியார்சிலரென்றுமேத்தினினேந்திட
வையனுண்டகையந்தணனருமாமறைப்பொருளாயினான்
பெய்யுமாமழையானவன்பிரமாபுரம்மிடம்பேணிய
வெய்யவெண்மழுவேந்தியைநினைந்தேத்துமின்வினைவீடவே. (எ)

கன்றெருக்கையிலேந்திநல்வினைகனிபடநூறியுஞ்
சென்றெருக்கியமாமறைப்பொருடேர்ந்தசெம்மலரோனுமா
யன்றரக்கனைச்செற்றவன்னடியும்முடியுமவைகாண்கிலார்
பின்றருக்கியதண்பொழிற்பிரமாபுரத்தரன்பெற்றியே. (அ)

உண்டுடுக்கைவிட்டார்களும்முழப்கஞ்சிமண்டைகெர்டேரரும்
பண்டடக்குசொற்பேசுமப்பரிவொன்றிலார்கள்சொற்கொள்ளன்மின்
றண்டொடக்குவன்சூலமுந்தழன்மாமழுப்படைதன்கையிற்
கொண்டொடுக்கியமைந்தனெம்பிரமாபுரத்துறைகூத்தனே. (கூ)

பித்தனேப்பிரமாபுரத்துறைபிஞ்ஞகன்கழல்பேணியே
மெய்த்தவத்துநின்றேழ்களுக்குரைசெய்தான்பொருண்மேவிட
வைத்தசிந்தையுண்ஞானசம்பந்தன்வாய்நவின்றெழுமாலைகள்
பொய்த்தவம்பொறிநீங்கவின்னிசைபோற்றிசெய்யுமெப்மாந்தரே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருக்கண்டியூர்-திருவீரட்டம்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

வினவினேனறியாமையில்லுரைசெய்மினீரருள்வேண்டுவீர்
கனவிலார்புனற்காவிரிக்கரைமேயகண்டியூர்வீரட்டன்

EFEO_TVG_149-213 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

றனமுனேதனக்கின்மையோதமராயினாண்டமாளத்தான்
வனிவில்வாழ்க்கைகொண்டாடிப்பாடியிவ்வையமாப்பலிதேர்ந்ததே. (க)

உள்ளவாறெனக்குரைசெய்மின்னுயர்வாயமாதவம்பேணுவீர்
கள்ளவிழ்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகாதலான்
பிள்ளைவான்பிறைசெஞ்சடைம்மிசைவைத்தும்பெருநீரொலி
வெள்ளந்தாங்கியதென்கொலோமிகுமங்கையாருடனுகவே. (உ)

அடியராயினீர்சொல்லுமின்னறிகின்றிலேனரன்செய்கையைப்
படியெலாந்தொழுதேத்துகண்டியூர்வீரட்டத்துறைபான்மையான்
முடிவுமாய்முதலாயிவ்வையகமுழுதுமாயழகாயதோர்
பொடியதாதிருமார்பினிற்புரிநூலும்பூண்டெழுபொற்பதே. (ங)

பழையதொண்டர்கள்பகருமின்பலவாயவேதியன்பான்மையைக்
கழையுலாம்புனன்மல்குகாவிரிமன்னுகண்டியூர்வீரட்டன்
குழையொர்காதினிற்பெய்துகந்தொருகுன்றினங்கைவெருவுறப்
புழைநெடுங்கைகன்மாவுரித்ததுபோர்த்துகந்தபொலிவதே. (ச)

விரவிலாதுமைக்கேட்கின்றேனடிவிரும்பியோட்செய்வீர்வினம்புமின்
கரவெலாந்தினைமண்டுகாவிரிக்கண்டியூருறைவீரட்டன்
முரவமொந்தைமுழாவொலிக்கமுழங்கும்பேயொடுங்கூடிப்போய்
பரவுவானவர்க்காகவார்கடனஞ்சமுண்டபரிசதே. (ஞ)

இயலுமாறெனக்கியம்புமின்னிறைவன்னுமாய்நிறைசெய்கையைக்
கயனெடுங்கண்ணினூர்கடாம்பொலிகண்டியூருறைவீரட்டன்
புயல்பொழிந்திழிவானுளோர்களுக்காகவன்றயன்பொய்ச்சிரம்
மயனகவதரித்தமற்றதிலானுகந்தவருத்தியே. (ட)

திருந்துதொண்டர்கள்செப்புமின்மிகச்செல்வன்றன்னதுதிறமெலாங்
கருந்தடங்கண்ணினூர்கடாந்தொழுகண்டியூருறைவீரட்ட
னிருந்தூநால்வரோடாலநீழல்லறமுரைத்ததும்மிகுவெம்மையார்
வருந்தவன்சிலையாலமாமதிள்மூன்றுமாட்டியவண்ணமே. (ண)

நாவிரித்தரன்மெல்புகழ்பலபேணுவீரிறைநல்குமின்
காவிரித்தடம்புனல்செய்கண்டியூர்வீரட்டத்துறைகண்ணுதல்
கோவிரிப்பயனீனஞ்சாடியகொள்கையுங்கொடிவரைபெற
மாவரைத்தலத்தாலாக்கனைவலியைவாட்டியமாண்பதே. (அ)

பெருமையேசரணுகவாழ்வுறுமாந்தர்சாலிறைபேசுமின்
கருமையார்பொழில்சூழுந்தண்வயற்கண்டியூருறைவீரட்ட
னொருமையாலுயர்மாலுமற்றைமலரவனுணர்ந்தேத்தவே
யருமையாலவருக்குயர்ந்தெரியாகிநின்றவத்தன்மையே. (கூ)

நமொழிறப்பறக்குமாந்தர்கணவிலுமின்னுமைக்கேட்கின்றேன்
கமழிவயல்சூழுந்தண்புனற்கண்டியூருறைவீரட்டன்

றமரழிந்தெழுசாக்கியசமணுதோதுமதுகொளா
தமரானவரேத்தவந்தகன்றன்னேசூலத்திலாய்ந்ததே. (கo)

கருத்தனேப்பொழில்சூழுங்கண்டியூர்வீரட்டத்துறைகள்வனே
யருத்தனேத்திறமடியர்பான்மிகக்கேட்டுகந்தவிஞ்ஞுவுரை
திருத்தமாங்கிழ்காழிஞானசம்பந்தன்செப்பியசெந்தமி
ழொருத்தராகிலுமபலர்களாகிலுமுரைசெய்வாருயர்ந்தாரர்களே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-வீரட்டேசுவரர்-தேவியார்-மங்கைநாயகிஅம்மை.

இறை - உத்தரவு.

திருவர்லவாய் - பண் - கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

மானினேர்விழிமாதராய்வழுதிக்குமாபெருந்தேவிகேள்
பானல்வாயொருபாலனீங்கிவனென்றுநீபரிவெய்திடே
லீனமாமலையாதியாயவிடங்களிற்பலவல்லல்சே
ரீனர்கட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (க)

ஆகமத்தொடுமந்திரங்களமைத்தசங்கதபங்கமாப்
பாகதத்தோடிசைத்துரைத்தசனநங்கள்வெட்குறுக்கமா
மாகதக்கரிபோற்றிரிந்துபுரிந்துதின்றுணுமாசுசே
ராகதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (உ)

அத்தகுபொருளுண்டுமில்லையுமென்றுநின்றவர்க்கச்சமா
வொத்தொவ்வாமைமொழிந்துவாதிலழிந்தெழுந்தகவிப்பெயர்ச்
சித்திரத்தின்மடிந்தொடிந்துசனநங்கள்வெட்குறுக்கமே
சித்திரர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (ங)

சந்துசேனனுமிந்துசேனனுந்தருமசேனனுங்கருமைசேர்
கந்துசேனனுங்கனகசேனனுமுதலதாகியபெயர்கொளா
மந்திபோற்றிரிந்தாரியத்தொடுசெந்தமிழ்ப்பயனறிகிலா
வந்தகர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (ச)

கூட்டினூர்கிளியின்விருத்தமுரைத்ததோலியின்றெழிற்
பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
காட்டியேவருமாடலாங்கவாகையரைக்கிவொன்றிலாச்
சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (ஞ)

கனகநந்தியும்புட்பகந்தியும்பவணநந்தியுங்குமண
சுனகநந்தியுங்குனகநந்தியுங்கிவணநந்தியுமெழிகொளா
வனகநந்தியாமதுபொழிந்தவமேதவம்புரிவோமெனுஞ்
சினகருக்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (ட)

EFEO_TVG_149-214 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பந்தணம்மவையொன்றிலம்பரிவொன்றிலமெனவாசக
மந்தணம்பலபேசிமாசறுசிர்மையின்றியநாயமே
யந்தணம்மருகந்தணம்மதுபுத்தணம்மதுசித்தணச்
சிந்தணர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (எ)

மேலெனக்கெதிரில்லையென்றவரக்கனர்மிகைசெற்றதிப்
போலியைப்பணியக்கிலாதொருபொய்த்தவங்கொடுகுண்டிகை
பீலிகைக்கொடுபாயிடுக்கிநடுக்கியேபிறர்பின்செலுஞ்
சீலிகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (அ)

பூமகற்குமரிக்குமோர்வருபுண்ணியனடிபோற்றிலார்
சாமவத்தையினர்கள்போறலையைப்பறித்தொருபொய்த்தவம்
வேமவத்தைசெலுத்திமெய்ப்பொடியட்டிவாயசகதிக்குநே
ராமவர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (கூ)

தங்களுக்குமச்சாக்கியர்க்குந்தரிப்பொணாதருச்சேவடி
யெங்களையனேதொழிந்திடுக்கேமடித்தொருபொய்த்தவம்
பொங்குதுல்வழியன்றியேபுலவோர்களேப்பழிக்கும்பொலா
வங்கதர்க்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே. (கo)

எக்கராமமண்கையருக்கெளியேனலேன்றிருவாலவாய்ச்
சொக்கனென்னுளிருக்கவேதுளங்கும்மூடித்தென்னன்முன்னிவை
தக்கசீர்ப்புகலிக்குமன்றமிழ்நாதன்ஞானசம்பந்தன்வா
யொக்கவேயுரைசெய்தபத்துமுரைப்பவர்க்கிடரில்லையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது-பாண்டியராஜனுடைய சுரப்பிணிதீர்ப்பதற்காகத் திருஞானசம்பந்தசுவாமிகளெழுந்தருளியிருக்கும்போது பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார்கண்டு சுவாமிகளுடையதிருமேனி மிகுந்த பாலியமாயிருக்கின்றதுமன்றித், தனிமையாயுமிருக்கின்றது. சமணர்களோ சரீரதிடமுள்ளவர்களும் பலருமாயிருக்கின்றாரர்களென்று உட்பரிவற்றுக் குறிப்பினைத் திருஞானசம்பந்தசுவாமிகள் திருவுள்ளத்திலுணர்ந்துகொண்டு அஞ்சவேண்டுவதில்லையென்று கட்டளையிட்டபதிகம்.

தனித் திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கல்லானீழ லல்லால்தேவை, நல்லார்பேணு ரல்லோநாமே. (க)
கொன்றைசூடி நின்றதேவை, யன்றியொன்று நன்றிலோமே. (உ)
கல்லாநெஞ்சி னில்லான்ஈசன், சொல்லாதாரோ டல்லோநாமே. (கூ)
கூற்றுதைத்த நீற்றினானேப், போற்றுவார்க டோற்றிலரே. (ச)
காட்டுளாடும் பாட்டுளானை, நாட்டுளோருந் தேட்டுளாரே. (டு)
அக்கன்வேள்விப் பொக்கந்தீர்த்த, மிக்கதேவர் பக்கத்தோழே. (சு)
பெண்ணுமை விண்ணோர்கோவை, நண்ணுதாரை யெண்ணுநாமே. (எ)

தூர்த்தன்வீரம் தீர்த்தகோவை, யார்த்தமாக வேத்தினேமே. (அ)
பூவினனுந் தாவினனு நாவினனு மோவினரே. (கூ)
மொட்டமணர் கட்டரதேரர், பிட்டர்சொல்லை விட்டுளோமே. (கo)
அந்தண்காழிப் பந்தன்சொல்லைச், சிந்தைசெய்வோ ருய்ந்துளாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம்-திருவிருக்குக்குறள்-பண்-கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கருவார்கச்சித் திருவேகம்பத், தொருவாவென்ன மருவாவினையே. (க)
மதியார்கச்சி நகியேகம்பம் விதியாலேத்தப் பதியாவாறே. (உ)
கலியார்கச்சி மலியேகம்பம், பலியார்போற்ற நலியாவினையே- (கூ)
வரமார்கச்சிப் புரமேகம்பம், பரவாவேத்த விரவாவினையே. (ச)
படமார்கச்சி யிடமேகம்பத், துடையாயென்ன வடையாவினையே. (டு)
நலமார்கச்சி நிலவேகம்பங், குலவாவேத்தக் கலவாவினையே. (சு)
கரியின்னுரியன் றிருவேகம்பன், பெரியபுரமூன் றெரிசெய்தானே. (எ)
இலங்கையரசைத் தலங்கலூன்று, நலங்கொள்கம்ப னிலங்குசரணே. (அ)
மறையோனரியு மறியாவனலன், நெறியேகம்பங் குறியாற்முழுமே. (கூ)
பறியாத்தேரர் நெறியில்கச்சிச், செறிகொள்கம்பங் குறுகுவோமே. (கo)
கொச்சைவேந்தன் கச்சிக்கம்ப, மெச்சுஞ்சொல்லை நச்சும்புகழே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றேமம்-பண்-கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

நிறைவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
குறைவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
சிறைவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தா
னிறைவனென்றேயுலகெல்லாமேத்தநின்றபெருமானே. (க)

மாகத்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைப்
பாகத்திங்கள்சூடியோராடன்மேயபண்டங்கன்
மேகத்தாடுசோலைசூழ்மிடைசிற்றேமமேவினு
ளாகத்தோர்கொளாமையைப்பூண்டவண்ணலல்லனே. (உ)

நெடுவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடநீள்சடைக்
கொடுவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
படுவண்டியாழ்செய்பைம்பொழிற்பழனஞ்சூழ்சிற்றேமத்தான்
கடுவெங்கூற்றைக்காலினுற்காய்ந்தகடவுளல்லனே. (கூ)

EFEO_TVG_149-215 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கதிரார்திங்கள்வாண்முகமாதர்பாடக்கண்ணுதன்
முதிரார்திங்கள்சூடியோராடன்மேயமுக்கண
னெதிரார்புனலம்புன்சடையெழிலாருஞ்சிற்றேமத்தா
னதிரார்பைங்கணேறுடையாதிமூர்த்தியல்லனே. (ச)

வானார்திங்கள்வாண்முகமாதர்பாடவார்சடைக்
கூனார்திங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
றேனார்வண்டுபண்செயுந்திருவாரூஞ்சிற்றேமத்தான்
மானார்விழிநன்மாதோடமிழ்ந்தமைந்தனல்லனே. (ஞ)

பனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடப்பல்சடைக்
குனிவெண்டிங்கள்சூடியோராடன்மேயகொள்கையான்
றனிவெள்விடையன்புள்ளினத்தாமஞ்சூழ்சிற்றேமத்தான்
முனிவுமூப்புநீக்கியமுக்கண்மூர்த்தியல்லனே. (கூ)

கிளருந்திங்கள்வாண்முகமாதர்பாடக்கேடிலா
வளருந்திங்கள்சூடியோராடன்மேயமாதவன்
றளிருங்கொம்புமதுவுமார்தாமஞ்சூழ்சிற்றேமத்தா
னெளிருமெண்ணூன்மார்பனென்னுள்ளத்துள்ளானல்லனே. (எ)

சூழ்ந்தநிங்கள்வாண்முகமாதர்பாடச்சூழ்சடைப்
போழ்ந்தநிங்கள்சூடியோராடன்மேயபுண்ணியன்
ழுழ்ந்தவயற்சிற்றேமத்தான்றடவரையைத்தன்னுவினை
லாழ்ந்தவரக்கனெல்கவன்றடர்த்தவண்ணலல்லனே. (அ)

தனிவெண்டிங்கள்வாண்முகமாதர்பாடத்தாழ்சடைத்
தணிவெண்டிங்கள்சூடியோராடன்மேயதென்மையா
னனிவண்ணச்சிற்றேமத்தானலர்மேலந்தணனனு
மணிவண்ணனுமுன்காண்கிலாமழுவாட்செல்வனல்லனே. (கூ)

வெள்ளத்திங்கள்வாண்முகமாதர்பாடவிரிசடைப்
பிள்ளைத்திங்கள்சூடியோராடன்மேயபிஞ்ஞக
னுள்ளத்தார்சிற்றேமத்தானுருவார்புத்தரொப்பில்லாக்
கள்ளத்தானைத்தனதியுட்கரந்துவைத்தானல்லனே. (கo)

கல்லிலோதமல்குதண்கானல்சூழ்ந்தகாழியா
னல்லவாயவின்றமிழ்நவிலுஞானசம்பந்தன்
செல்வனூர்சிற்றேமத்தைப்பாடல்சீரார்நாவினல்
வல்லராகிவாழ்த்துவாரல்லலின்றிவாழ்வரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோமாகாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பொன்னகத்தகாதர் - தேவியார்-அகிலாண்டேசுவரியம்மை.

சீகாழி - பண் - கவுசிகம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தமார்முலையாடன்கூறனர்
வெந்தவெண்பொடியாடிமெய்யனர்
கந்தமார்பொழிலசூழ்தரும்காழியு
ளெந்தையாரடியென்மனத்துள்ளவே. (க)

மானிடம்முடையார்வளர்செஞ்சடைத்
தேனிடங்கொளுங்கொன்றையந்தாரினர்
கானிடங்கொளுந்தண்வயற்காழியா
ரூனிடங்கொண்டெனுச்சியினிற்பரே. (உ)

மைகொள்கண்டத்தர்வான்மதிச்சென்னியர்
பைகொள்வாளரவாட்டும்படிறனர்
கைகொண்மான்மறியார்கடற்காழியு
ளையனந்தணர்போற்றவிருக்குமே. (ங)

புற்றினகும்பூளையும்வன்னியுங்
கற்றைவார்சடைவைத்தவர்காழியுட்
பொற்றொடியோடிருந்தவர்பொற்கழ
லுற்றபோதுடனேத்தியுணருமே. (ச)

நலியுஞுற்றமூனம்முடனெய்வினை
மெலியுமாறதுவேண்டுகிலேல்வெய்ய
கலிகடந்தையார்கடற்காழியு
ளலைகொள்செஞ்சடையாரடிபோற்றுமே. (ஞ)

பெண்ணேர்கூறினர்பேர்புடனுடுவர்
பண்ணுமேத்திசைபாடியவேடத்தர்
கண்ணுமூன்றுடையார்கடற்காழியு
ளண்ணலாயவடிகள்சரிதையே. (ஙு)

பற்றுமானுமழுவுமழகுற
முற்றுமூரிரிந்துபலிமுன்னுவர்
கற்றமானமறையவர்காழியுட்
பெற்றமேறுதுகந்தார்பெருமையே. (எ)

னடுத்தவல்லரக்கன்முடிதோளிற
வடர்த்துகந்தருள்செய்தவர்காழியுட்
கொடித்தவங்குருந்கோயிலுளின்புற
விடத்துமாதொடுதாமுமிருப்பரே. (அ)

காலன்றன்னுயிர்வீட்டுகழலடி
மாலுநான்முகன்முனுமனப்புற

EFEO_TVG_149-216 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வோலமிட்டுமுன்றேடியுணர்கிலாச்
சிலங்கொண்டவனார்திகழ்காழியே. (கூ)

உருவநீத்தவர்தாமுறுதுவர்
தருவலாடையினருந்தகவிலர்
கருமம்வேண்டுதிரேற்கடற்காழியு
ளொருவன்சேவடியேயடைந்துய்மினே. (கo)

கானல்வந்துலவுங்கடற்காழியுள்
ஞானமில்லியிணைபடியேத்திடு
ஞானசம்பந்தன்சொல்லியதற்றமிழ்
மானமாக்குமகிழ்ந்துரைசெய்யவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழிப்பாலை-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

வெந்தருங்கிலியப்புகைவிம்மவே
கந்தநின்றுலவுங்கழிப்பாலையா
ரந்தமும்மளவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே. (க)

வானிலங்கவிளங்குமிளம்பிறை
தானலங்கலுகந்ததலைவனூர்
கானிலங்கவருங்கழிப்பாலையார்
மானலம்மடநோக்குடையாளொடே. (உ)

கொடிகொளேற்றினர்கூற்றையுதைத்தனர்
பொடிகொண்மார்பினிற்பூண்டதோராமையர்
கடிகொள்பூம்பொழில்சூழ்கழிப்பாலையுள்
ளடிகள்செய்வனவார்க்கறிவொண்ணுமே. (ங)

பண்ணலம்படவண்டறைகொன்றையின்
றண்ணலங்கலுகந்ததலைவனூர்
கண்ணலங்கவருங்கழிப்பாலையுள்
ளண்ணலெங்கடவுள்ளவனல்லனே. (ச)

ஏரினாருலகத்திமையோரொடும்
பாரினாருடனேபரவப்படுங்
காரினார்பொழில்சூழ்கழிப்பாலையெஞ்
சீரினார்கமலேசிந்தைசெய்மினே. (ஞ)

துள்ளுமான்மறியங்கையிலேந்தியூர்
கொள்வனரிடுவெண்டலையிற்பலி

கள்வனுருறையுங்கழிப்பாலையை
யுள்ளுவார்வினைமாயினவோயுமே. (ரு)

மண்ணினார்மலிசெல்வமும்வானமு
மெண்ணினீரினிதேத்துமின்பாகமும்
பெண்ணினார்பிறைநெற்றியோடுற்றமுக்
கண்ணினருறையுங்கழிப்பாலையே. (எ)

இலங்கைமன்னனீரைஞ்சிரட்டிதோ
டுலங்கவூன்றியதாமழுவாளினர்
கலங்கள்வந்துலவுங்கழிப்பாலையை
வலங்கொள்வார்வினையாயினமாயுமே. (அ)

ஆட்சியாலரானெடுமாலுமாய்த்
தாட்சியாலறியாதுதளர்ந்தனர்
சாட்சியாலறியான்கழிப்பாலையை
மாட்சியாற்றொழுவார்வினைமாயுமே. (கூ)

செய்யதுண்டுவராடையினொடு
மெய்யின்மாசுபிறங்கியவீரிலாக்
கையர்கேண்மையனேகழிப்பாலையெம்
மையன்சேவடியேயடைந்துய்மினே. (கo)

அந்தண்காழியருமறைஞானசம்
பந்தன்பாய்புனல்சூழ்கழிப்பாலையைச்
சிந்தையாற்சொன்னசெந்தமிழ்வல்லவர்
மூந்திவானுலகாடன்முறைமையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாரூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அந்தமாயுலகாதியுமாயினன்
வெந்தவெண்பொடிப்பூசியவேதியன்
சிந்தையேபுகுந்தான்றிருவாரூரெம்
மெந்தைதானெனையேன்றுகொளுங்கொலோ. (க)

கருத்தனேகருதார்புரமூன்றெய்த
வொருத்தனேயுமையாளொருகூறனே
திருத்தனேதிருவாரூரெந்திவண்ண
வருத்தவென்னெனையஞசலென்னுதே. (உ)

மறையன்மாமுனிவன்மருவார்புர
மிறையின்மாத்திரையில்லெரியூட்டினன்

EFEO_TVG_149-217 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சிறைவண்டார்பொழில்சூழ்திருவாரூரெம்
பிறைவன்றனெனேயேன்றுகொளுங்கோலோ. (கூ)

பல்லிலோடுகையேந்திப்பலிதிரிந்
தெல்லிவந்திடுகாட்டெரியாடுவான்
செல்வமல்கியதென்றிருவாரூரா
னல்லதீர்த்தனெனயஞ்சலெனுங்கொலோ. (ச)

குருந்தமேறிக்கொடிவிடுமாதவி
விரிந்தலர்ந்தவிரைகமழ்தேன்கொன்றை
திருந்துமாடங்கள்சூழ்திருவாரூரான்
வருந்தும்போழ்தெனைவாடலெனுங்கொலோ. (ஞ)

வார்கொண்மென்முலையாளொருபாகமா
வூர்களாரிடுபிச்சைகொளுத்தமன்
சீர்கொண்மாடங்கள்சூழ்திருவாரூரா
னூர்கணவெனையஞ்சலெனுங்கொலோ. (கூ)

வளைக்கைமங்கைகல்லாலோர்பாகமாத்
தளைக்கையானைத்துயர்படப்போர்த்தவன்
றிளைக்குந்தண்புனல்சூழ்திருவாரூரா
னினைக்கும்போழ்தெனையேன்றுகொளுங்கொலோ. (எ)

இலங்கைமன்னனிருபதுதோளிறக்
கலங்கக்கால்விரலாற்கடைக்கண்டவன்
வலங்கொண்மாமதில்சூழ்திருவாரூரா
னலங்கறந்தெனையஞ்சலெனுங்கொலோ. (அ)

கெடியமாலும்பிரமனுநேர்கிலாப்
படியவன்பனிமாமதிச்சென்னியான்
செடிகணீக்கியதென்றிருவாரூரெம்
மடிகடானெனையஞ்சலெனுங்கொலோ. (கூ)

மாசுமெய்யினர்வண்டுவராடைகொள்
காசைபோர்க்குங்கலதிகள்சொற்கொளேற்
றேசமல்கியதென்றிருவாரூரெம்
மீசன்றனெனையேன்றுகொளுங்கொலோ. (க0)

வன்னிகொன்றைமதியொடுகூவிளஞ்
சென்னிவைத்தபிரான்றிருவாரூரை
மன்னுகாழியுண்ஞானசம்பந்தன்வாய்
பன்னுபாடல்வல்லார்க்கில்லைபாவமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கருகாவூர்-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திலங்குமுறுவல்லுமையஞ்சவே
மத்தயானைமறுகவ்வுரிவாங்கியக்
கத்தைபோர்த்தகடவுள்கருகாவூரெம்
மத்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (க)

வீமுதவல்லசடையான்றனையுள்குவார்
கமுதநீழலகலாததோர்செல்வமாங்
கமுதமுல்லகமழ்கின்றகருகாவூ
ரமுதர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (உ)

பழகவல்லசிறுத்தொண்டர்பாவின்னிசை
குழகன்றுகுழையாவழையாவருங்
கழல்கொள்பாடலுடையார்கருகாவூரெம்
மழகர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ங)

பொடிமெய்பூசிமலர்கொய்துபுனர்ந்துடன்
செடியரல்லாவுள்ளாலல்கியசெல்வத்தர்
கடிகொண்முல்லகமழுங்கருகாவூரெம்
மடிகள்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ச)

மையலின்றிமலர்கொய்துவணங்கிடச்
செய்யவுள்ளம்மிகாலல்கியசெல்வத்தர்
கைதன்முல்லகமழுங்கருகாவூரெம்
மையர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (ஞ)

மாசிறண்டர்மலர்கொண்டுவணங்கிட
வாசையாரவருணல்கியசெல்வத்தர்
காய்சினத்தவிடையார்கருகாவூரெம்
மீசர்வண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (சு)

வெந்தநீறுமெய்பூசியவேதியன்
சிந்தைநின்றவருணல்கியசெல்வத்தான்
கந்தமல்வல்கமழுங்கருகாவூரெம்
மெந்தைவண்ணம்மெரியும்மெரிவண்ணமே. (எ-அ)

பண்ணினேர்மொழியாளோர்பாகனூர்
மண்ணுகோலம்முடையம்மலராளெடுங்
கண்ணனேடவரியார்கருகாவூரெம்
மண்ணல்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (கூ)

போர்த்தமெய்யினர்போதுழல்வார்கள்சொற்
றீர்த்தமென்றுதெளிவீர்தெளியேன்மின்

EFEO_TVG_149-218 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கார்த்தண்முல்லைகமழுங்கருகாவூரெம்
மார்த்தர்வண்ணம்மழலும்மழல்வண்ணமே. (கo)

கலவமஞ்ஞையுலவுங்கருகாவூர்
நிலவுபாடலுடையான்றன்னீள்கழல்
குலவுஞானசம்பந்தனசெந்தமிழ்
சொலவல்லாரவர்தொல்வினைதீருமே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-மூல்லைவனேசுவரர்-தேவியார்-கரும்பனையாளம்மை.

திருவாலவாய் - பண் - கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரிபோர்த்துடல்
னுட்டமூன்றுடையாயுனைசெய்வனன்
வேட்டுவேள்விசெய்யாவமண்கையரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே. (த)

மத்தயானையினீருரிமூடிய
வத்தனேயனியாலவாயாய்பணி
பொய்த்தவன்றவவேடத்தராஞ்சமண்
சித்தையழிக்கத்திருவுள்ளமே. (உ)

மண்ணகத்திலும்வானிலுமெங்குமாந்
திண்ணகத்திருவாலவாயாயருள்
பெண்ணகத்தெழிற்சாக்கியபேயமண்
டெண்ணர்கற்பழிக்கத்திருவுள்ளமே. (ந)

ஓதியோத்தறியாவமணுதை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே
யாதியேதிருவாலவாயண்ணலே
நீதியாகநினைந்தருள்செய்திடே. (ச)

வையமார்புகழாயடியார்தொழுஞ்
செய்கையார்திருவாலவாயாய்செப்பாய்
கையிலுண்டுழலுமமண்கையரைப்
பையவாதுசெயத்திருவுள்ளமே. (ஞ)

நாறுசேர்வயற்றண்டலைமிண்டிய
தேறலார்திருவாலவர்யாய்செப்பாய்
வீறிலாத்தவமோட்டமண்வேடரைச்
சீறிவாதுசெயத்திருவுள்ளமே. (கூ)

பண்டடித்தவத்தார்பயில்வாற்றெழூஉந்
தொண்டருக்கெளியாய்திருவாலவா

யண்டனேயமண்கையனைவாதினிற்
செண்டடித்துழறத்திருவுள்ளமே. (எ)

அரக்கன்முன்னிரியேற்றவன்றன்முடிச்
செருக்கினைத்தவிர்த்தாய்திருவாலவாய்
பரக்குமாண்புடையாயமண்பாவனைக்
கரக்கவாதுசெயத்திருவுள்ளமே. (அ)

மாலுநான்முகனும்மறியாநெறி
யாலவாயுறையுமண்ணலேபணி
மேலைவீடுணராவெற்றரையரை
சாலவாதுசெயத்திருவுள்ளமே. (கூ)

கழிக்கறைப்படுமீன்கவர்வாரம
ணழிப்பரையழிக்கத்திருவுள்ளமே
தெழிக்கும்பூம்புனல்சூழ்திருவாலவாய்
மழுப்படையுடைமைந்தனேநல்கிடே. (கo)

செந்தெனுமூலுக்திருவாலவாய்
மைந்தனேயென்றுவல்லமணுசறச்
சந்தமார்தமிழ்கேட்டமெய்ஞ்ஞானசம்
பந்தன்சொற்பகரும்பழிநீங்கவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருமழபாடி-பண்-கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையாரழலன்னமுகார்சடைக்
கங்கையான்கடவுள்விடமேவிய
மங்கையாளுறையும்மழபாடியைத்
தங்கையாற்றொழுவார்தகவாளரே. (க)

விதியுமாம்விளைவாமொழியார்த்தநோர்
கதியுமாங்கிவாம்வசியாற்றமா
மதியுமாம்வலியாம்மழபாடியு
ணதியந்தோய்சடைநாதனற்பாதமே. (உ)

முழவினுன்முதுகாடுறைபேய்க்கணக்
குழவினுன்குலவுங்கையிலேந்திய
மழவினுறையும்மழபாடியைத்
தொழுமினுந்துயரானவைதீரவே. (ந)

கலியினுன்மறையான்கதியாகிய
மலியினுன்மருவார்புரமூன்றெய்த

EFEO_TVG_149-219 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

சிலையினன்சோதிருமழபாடியைத்
தலையினல்வணங்கத்தவமாகுமே. (ச)

நல்வினைப்பயனன்மறையின்பொருள்
கல்வியாயகருத்தனருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப்
புல்கியேத்தும்புகழ்சாருமே. (ரு)

நீடினருலகுக்குயிராய்நின்று
ஆடினனெரிகானிடைமாநடம்
பாடினரிசைமாமழபாடியை
நாடினர்க்கில்லைநல்குரவானவே. (சு)

மின்னினரிடையாளொருபாகமாய்
மன்னினனுறைமாமழபாடியைப்
பன்னினரிசையால்வழிபாடுசெய்
துன்னினர்வினையாயினவோயுமே. (எ)

தென்னிலங்கையர்மன்னன்செழுவரை
தன்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை
யுன்னிலங்கவுறுபிணியில்லையே. (அ)

திருவினியகனஞ்செழுந்தாமரை
மருவினனுந்தொழத்தழன்மாண்பம
ருருவினனுறையும்மழபாடியைப்
பரவினர்வினைபற்றறுப்பார்களே. (கூ)

நலியுநன்றறியாச்சமணச்சாக்கியர்
வலியசொல்லினுமாமழபாடியு
ளொலிசெய்வார்கழலான்றிறமுள்கவே
மெலியுநம்முடன்மேல்வினையானவே. (க0)

மந்தமும்பொழின்மழபாடியு
ளெந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
மைச்சின்முகில்வைச்சபொழில் (கூ)

தங்கமிகுபொங்கரவுதங்குசடைநங்களிறைதன்றுகுழலார்
செங்கயல்கண்மங்கையுமைநங்கையொருபங்கனமர்தேவூரதன்மேற்
பைங்கமலமங்கணிகொடிண்புகலிஞானசம்பந்தனுரைசெய்
சங்கமலிசெந்தமிழ்கள்பத்துமிசைவல்லவர்கள்சங்கையிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பத்தாவதிற்குறைவு-இலமானதிற்சேர்ந்தது.

திருச்சண்பைநகர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எந்தமதுகிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தீபமொடுதூபமலிவாய்மையதனு
லந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றபழகன்
சந்தமலிகொந்தளகன்மாதினெடுமேவுபதிசண்பைநகரே. (க)

அங்கம்விரிதுத்தியரவாமைவிரவாரமமர்மார்பிலழகன்
பங்கயமுகத்தரிவையோடுபிரியாதுபயில்கின்றபதிதான்
பொங்குபரவைத்திரைகொணர்ந்துபவளத்திரள்பொலிந்தயலே
சங்குபுரியிப்பிதரளத்திரள்பிறங்கொள்ளிகொள்சண்பைநகரே. (உ)

போழுமதிதாழுநெடுபொங்கரவுதங்குபுரிபுன்சடையினன்
யாழின்மொழிமாழைவிழியேழையிளமாதினெடிருந்பதிதான்
வாழைவளர்காமன்மகிழ்மன்னுபுனைதுன்னுபொழின்மாடமுடலார்
தாழைமுகிழ்வேழமிருதந்தமெனவுந்துதருசண்பைநகரே. (ங)

கொட்டமுழவிட்டவடிவட்டணிகடட்டநடமாடிகுலவுமீ
பட்டநுதல்கட்டுமலர்மட்டுமலிபாவையொடுமேவுபதிதான்
வட்டமதிதட்டுபொழிலுட்டமதுவாய்மைவழுவாதமொழியாற்
சட்டகலியெட்டுமெருவெட்டும்வளர்தத்தையிலசண்பைநகரே. (ச)

பணங்கெழுவுபாடலினுடாடல்பிரியாதபரமேட்டிபகவ
னணங்கெழுபாகமுடையாகமுடையன்பர்பெருமானிடமா
மிணங்கெழுவியாடுகொடிமாடமதினீடுவியையார்புறவெலாந்
தணங்கெழுவியேடலர்கொடாமையிலன்னம்வளர்சண்பைநகரே. (ஞ)

பாலனுயிர்மேலனுவுகாலனுயிர்பாறவுதைசெய்தபரம
னுமையில்போலியவியாயிழைதனெடுமமர்வெய்துமிடமா

EFEO_TVG_149-237 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

மேலமலிசோலையினவண்டுமலர்கிண்டிநறவுண்டிசைசெயச்
சாலிவயல்கோலமலிசேலுகளநீலம்வளர்சண்பைநகரே. (கூ)

விண்பொயதனுன்மழைவிழாதொழியினும்விளைவுதான்மிகவுடை
மண்பொயதனுல்வளமிலாதொழியினுந்தமதுவண்மைவழுவா
ருண்பகரவாருலகினூழிபலதோறுநீலையானபதிதான்
சண்பைநகரீசனடிதாமுமடியார்தமதுதன்மையதுவே. (எ)

வரைக்குலமகட்கொருமறுக்கம்வருவித்தமதியில்வலியுடை
யரக்கனதுரக்கரசிரத்துறவடர்த்தருள்புரிந்தவழக
விருக்கையதருக்கன்முதலானவிமையோர்குழுமியெழவிழவினிற்
றருக்குலகெருக்குமலிதண்பொழில்கள்கொண்டலனசண்பைநகரே. (அ)

நீலவரைபோலநிகழ்கேழலருநீள்பறவைகேருருவமா
மாலுமலரானுமறியாமைவளர்தியுருவமானவரதன்
சேலுமினவேலுமனகண்ணிபொடுநண்ணுபதிசூழ்புறவெலாஞ்
சாலிமலிசோலைகுயில்புள்ளினெகிள்ளைபயில்சண்பைநகரே. (கூ)

போதியர்கள்பிண்டியர்கள்போதுவமூவாதவகையுண்டுபலபொய்
யோதியவர்கொண்டுசெய்வதொன்றுமிலாநன்றதுணர்வீருரைமினே
வாதியெமையாளுடையவரிவையொடுபிரிவிலியமர்ந்தபதிதான்
சாதிமணிதெண்டிரைகொணர்ந்துவயல்புகவெறிகொள்சண்பைநகரே. (கo)

வாரின்மலிகொங்கையுமைநங்கையொடுசெங்கரன்மகிழ்ந்தமருமூர்
சாரின்முரறெண்கடல்விசும்புறமுழங்கொலிகொள்சண்பைநகர்மேற்
பாரின்மலிகின்றபுகழ்நின்றதமிழ்ஞானசம்பந்தனுரைசெய்
சீரின்மலிசெந்தமிழ்கள்செப்புமவர்சேர்வர்சிவலோகநெறியே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவேதவனம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கற்பொலிசுரத்தினெரிகானினிடைமாநடமதாடிமடவா
ரிற்பலிகொளப்புகுதுமெந்தைபெருமானிடமென்பர்புவிமேன்
மற்பொலிகலிக்கடன்மலைக்குவடெனத்திரைகொழித்தமணியை
விற்பொலிதுதற்கொடியிடைக்கணிகைமார்கவரும்வேதவனமே. (க)

பண்டிரைபெளவப்புணரியிற்கனகமால்வரையைநட்டரவினைக்
கொண்டுகயிறிற்கடையவந்தவிடமுண்டருளுகன்றனிடமாம்
வண்டினிழற்பொழிலின்மரதவியின்மீதணவுதென்றல்வெறியார்
வெண்டிரைகள்செம்பவளமுந்துகடல்வந்தமொழிவேதவனமே. (உ)

காரியன்மெலோதிநிகிமாதைமுடிவார்சடையில்வைத்தமலியார்
காரியொருபான்மகிழுநம்பருறைவென்பர்பெருமாடமுகிற்

றேரியல்விழாவினெளிதிண்பணிலமொண்படகாளுமிசையால்
வேரிமலிவார்குமுனன்மாதரிசைபாடலொலிவேதவனமே. (கூ)

நீறுதிருமேனியின்மினைத்தொளிபெறத்தடவிவந்திடவமே
யேறியுலகங்கடொறும்பிச்சைதுகிர்ச்சையரிருந்தபதியா
மூறுபொருளின்றமிழியற்கிளவிதேருமடமாதருடனூர்
வேறுதிசையாடவர்கள்கூறவிசைதேருமெழிலவேதவனமே. (ச)

கத்திரிகைதுத்திரிகறங்குதுடிதக்கையொடிடக்கைபடக
மெத்தனையுலப்பில்கருவித்திரளலம்பவிமையோர்கள்பரச
வொத்தறமிகித்துநடமிட்டவொருவர்க்கிடமிதன்பருலகின்
மெய்த்தகையபத்தரொடுசித்தர்கண்மிடைந்துகளும்வேதவனமே. (டு)

மாலைமதிவாளரவுகொன்றைமலர்துன்றுசடைநின்றுசுழலக்
காலையிலெழுந்தகதிர்தாரகைமடங்கவனலாடுமரனூர்
சோலையின்மடங்கடொறுமிண்டியினவண்டுமதுவுண்டிசைசெய
வேலையொலிசங்குதிரைவங்கசுறவங்கொணரும்வேதவனமே. (கூ)

வஞ்சகமனத்தவுணர்வல்லரணமன்றவியவர்சிலவோத்
தஞ்சகமவித்தவமரர்க்கமரனுதிபெருமானிடமாங்
கிஞ்சுகவிதழ்க்கனிகளுறியசெவ்வாயவர்கள்பாடல்பயில
விஞ்சகவியக்கர்முனிவக்கணங்கைதந்துமிடைவேதவனமே. (எ)

முடித்தலைகள்பத்துடைமுருட்டுருவரக்கனெருக்கிவிரலா
லடித்தலமுன்வைத்தலமரக்கருணைவைத்தவனிடம்பலதுயா
கெடுத்தலைகினேத்தறவியற்றுதல்கிளர்ந்துபுலவாணர்வணமை
விடுத்தலைமதித்துநிதிநல்குமவர்மல்குபதிவேதவனமே (அ)

வாசமலர்மேவியுறைவானுநெடுமாலுமறியாதநெறியைக்
கூசுதல்செயாதவமணுதொடுதேர்குறுகாதவரனூர்
காசுமணிவாகனகநீடுகடலோடுதிரைவார்துவலைமேல்
வீசுவலிலவாணரவைவரிவிலேசுமெழிலவேதவனமே. (கூ-கo)

மந்தமுழவங்கடல்வளங்கெழுவுகாழிபதிமன்னுகவுணி
வெந்தபொடிநீறணியும்வேதவனமேவுசிவனின்னருளினூற்
சந்தமிவைதண்டமிழினின்னிசையினப்பரவுபாடலுலகிற்
பந்தனுரைகொண்டுமொழிவார்கள்பயில்வார்களுயர்வானுலகமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

வேதவனம் என்பது - வேதாரணியம்.

திருமாணிகுழி - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

பொன்னியல்பொருப்பரையன்மங்கையொருபங்கர்புனறங்குசடைமேல்
வன்னியொடுமத்தமலர்வைத்தவிறல்வித்தகர்மகிழ்ந்துறைவிடங்

EFEO_TVG_149-238 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கன்னியிளவாளைகுதிகொள்ளவிளவள்ளைபடரள்ளல்வயல்வாய்
மன்னியிளமேதிகள்படிந்துமணைசேருதவிமாணிகுழியே. (க)

சோதிமிகுநீறதுமெய்பூசியொருதோலுடைபுனைந்துதெருவே
மாதர்மனைதோறுமிசைபாடிவருபேசுமரனூர்மகிழ்விடந்
தாதுமலிதாமரைமணங்கமழவண்டுமுரறண்பழனமிக்
கோதுமலிவேலைபுடைசூழுலகினீடுதவிமாணிகுழியே. (உ)

அம்பனையகண்ணுமைமடந்தையவளஞ்சிவெருவச்சினமுடைக்
கம்பமதயானைபுரிசெய்தவரனூர்கருதிமேயவிடமாம்
வம்புமலிசோலைபுடைசூழமணிமாடமதினீடியபழகா
ரும்பரவர்கோனகரமென்னமிகமன்னுதவிமாணிகுழியே. (ங)

நித்தநியமத்தொழிலனுகிநெடுமால்குரளனுகிமிகவுஞ்
சித்தமதொருக்கிவழிபாடுசெயின்றசிவலோகனிடமாங்
கொத்தலர்மலர்ப்பொழிலினீடுகுமமஞ்ஞைநடமாடலதுகண்
டொத்தவரிவண்டுகளுலாவியிசைபாடுதவிமாணிகுழியே. (ச)

மாசின்மதிசூடிசடைமாமுடியர்வல்லசுரர்தொன்னகரமுன்
நாசமதுசெய்துகலவானவர்களுக்கருள்செய்ம்பனிடமாம்
வாசமலிமென்குமுன்மடந்தையர்கண்மாலிகையின்மன்னியழகா
ரூசன்மிசையேறியினிதாகவிசைபாடுதவிமாணிகுழியே. (ஞ)

மந்தமலர்கொண்டுவழிபாடுசெயுமாளியுயிர்வவ்வமனமாய்
வந்தவொருகாலனுயிர்மாளவுதைசெய்தமணிகண்டனிடமாஞ்
சந்திஞெகிரகில்சுமந்துதடமாமலர்கள்கொண்டுகெடில
முந்துபுனல்வந்துவயல்பாயுமணமாருதவிமாணிகுழியே. (ட)

எண்பெரியவானவர்கணின்றுதுதிசெய்யவிறையேகருணையா
யுண்பரியநஞ்சதனையுண்டுலகமுய்யவருளுத்தமனிடம்
பண்பயிலும்வண்டுபலகின்டிமதுவுண்டுகிறைபைம்பொழிலின்வா
யொண்பலவினின்கனிசொரிந்துமணநாறுதவிமாணிகுழியே. (ண)

எண்ணமதுவின்றியெழிலார்கைலைமாமலையெடுத்ததிறலார்
திண்ணியவரக்கனெரித்தருள்புரிந்தசிவலோகனிடமாம்
பண்ணமருமென்மொழியினர்பணைமுலைப்பவளவாயமகதா
ரொண்ணுதன்மடந்தையர்குடைந்துபுனலாடுதவிமாணிகுழியே. (அ)

நேமியனுமிதிருமாலுமுணராவகைநிமிர்ந்துமுடிமே
லேமலவுதிங்கண்மதமத்தமிதழிச்சடையெமீசனிடமா
மாமலரும்மல்லிகைகுருந்துகொடிமாதவிசெருந்திசூதின்
ஞாலவுபுன்னைவிரைதாதுமலிசேருதவிமாணிகுழியே. (கூ)

மொட்டையமணுதர்முதுதேரமதியில்லிகண்முயன்றனபடும்
முட்டைகண்மொழிந்தமொழிகொண்டருள்செய்யாதமுதல்வன்றனிடமா

ம்ட்டைமலிதாழையிளநீர்முதியவாழையில்விழுந்தவதரில்
லொட்டமலிபூகநிரைதாறுதிரவேறுதவிமாணிகுழியே. (கரி)

உந்திவருதண்கெடிலமோடுபுனல்சூழுதவிமாணிகுழிமே
லந்திமதிசூடியவெமானையடிசேருமணிகாழிகரான்
சந்தநிறைதண்டமிழ்தெரிந்துணருஞானசம்பந்தனதுசொன்
முந்தியிசைசெய்துமொழிவார்களுடையார்கணெடுவானிலனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

நடுநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - மாணிக்கமேனியீசுவரர் - தேவியார் - மாணிக்கவல்லியம்மை.

திருவேதிகுடி - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

நீறுவரியாடரவொடாமைமனவென்புரிணைபூண்பரிடவ
மேறுவரியாவருமிறைஞ்சுகழலாதியிருந்தவிடமாந்
தாறுவிரிபூகமலிவாழைவினைநாறவிளவாளைமேவில்
வேறுபிரியாதுவிளையாடவளமாரும்வயல்வேதிகுடியே. (க)

சொற்பிரிவிலாதமறைபாடிநடமாடுவர்தொலாணைபுரிவை
மற்புரிபுயத்தினிதுமேவுவதொளிரும்வளர்வானவர்தொழத்
தற்பெரியநஞ்சமுதமாகமுனையின்றவரியன்றதொருசீர்
வெற்பரையன்மங்கையொருபங்கர்கெனன்பர்திருவேதிகுடியே. (உ)

போழுமதிபூணரவுகொன்றைமலர்துன்றுசடைவென்றிபுகமேல்
வாழுநதிதாழுமருளாளரிருளார்மிடறர்மாதரிமையோர்
சூழுமிரவாளர்திருமார்பில்விரிநூலர்வரிகோலருடைமேல்
வேழவுரிபோர்வையினர்மேவுபதியென்பர்திருவேதிகுடியே. (ங)

காடர்கரிகாலர்கனல்கையரனன்மெய்யருடல்செய்பர்செவியிற்
றோடர்தெரிகிளர்சரிகோவணவராவணவர்தொல்லோகர்தான்
பாடலுடையார்களடியார்கண்மலரோடுபுனல்கொண்டுபணிவார்
வேட்மொளியானபொடிபூசியிசைமேவுதிருவேதிகுடியே. (ச)

சொக்கர்துணைமிக்கவெயிலுக்கறமுனிந்துதொழுமூவர்மகிழத்
தக்கவருள்பக்கமுறவைத்தவரனூரினிதுதங்குநகர்தான்
கொக்கரவமுற்றபொழில்வெற்றினிழல்பற்றிவரிவண்டிசைசூலா
மிக்கமரர்மெச்சியினிதச்சமிடர்போகவல்கும்வேதிகுடியே. (ஞ)

செய்யதிருமேனிமிசைவெண்பொடியணிந்துகருமானுரிவைபோர்த்
தையமிடுமென்றுமடமங்கையொடகன்றியுமண்ணலிடமாம்
வையம்விலமாறிடினுமேறுபுகழ்மிக்கிழிவிலாதவகையார்
வெய்யமொழிதண்புலவருக்குரைசெயாதவர்வேதிகுடியே. (ட)

உன்னியிருபோதுமடிபேணுமடியார்தமிடரொல்கவருளித்
தன்னியொருநால்வருடனெழிலிருந்ததுணைவன்றனிடமாம்

EFEO_TVG_149-239 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கன்னியரொடாடவர்கண்மாமணம் மிரும்பியருமங்கலமிக
மின்னியலுநுண்ணிடைநன்மங்கையரியற்றுபதிவேதிகுடியே. (எ)

உரக்கரநெருப்பெழுகெருக்கிவரைபற்றியவொருத்தன்முடிதோ
ளரக்கனையடர்த்தலினிசைக்கினிதுலகியருளங்கணனிட
முருக்கிதழ்மடக்கொடிமடந்தையருமாடவருமொய்த்தகலவை
விரைக்குழன் மிகக்கமழவிண்ணிசையுலாவுதிருவேதிகுடியே. (அ)

பூவின்மிசையந்தணனெடாழிபொலியங்கையனுந்தேடவெரியாய்த்
தேவுழிவரல்லரினியாவனெனின்றுதிகழ்கின்றவரிடம்
பாவலர்களோசையியல்கேள்வியதருதகொடையாளர்பயில்வா
மேவரியசெல்வகெடுமாடம்வளர்வீதிகழ்வேதிகுடியே. (கூ)

வஞ்சமணர்தேரர்மதிகேடர்தமதந்தறியிலாதவர்மொழி
தஞ்சமெனவென்றுமுணராதவடியார்கருதுசைவனிடமா
மஞ்சுபுலன்வென்றறவகைப்பொருடெரிந்தெழுவிசைக்கிளவியால்
வெஞ்சினமொழித்தவர்கண்மேவிநிகழ்கின்றதிருவேதிகுடியே. (கo)

கந்தமலிதண்பொழினன்மாடமிடைகாழிவளர்ஞானமுணர்சம்
பந்தன்மலிசெந்தமிழின்மாலைகொடுவேதிகுடியாதிகழுலே
சிந்தைசெயவல்லவர்கண்ணல்லவர்களென்னநிகழ்வெய்தியமையோ
ரந்தவுலகெய்தியசாளுமதுவேசரதமாணைநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வேதபுரீசுவரர் - தேவியார் - மங்கையர்க்கரசியம்மை.

திருக்கோகரணம் - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

என்றுமரியானயலவர்க்கியலிசைப்பொருள்களாகியெனது
ணன்றுமொளியாளெளிசிறந்தபொன்முடிக்கடவுணண்ணுமிடமா
மொன்றியமனத்தடியீர்கூடியிமையோர்பரவுநீடரவமார்
குன்றுகணெருங்கிவிரிதண்டலைமிடைந்துவளர்கோகரணமே. (க)

பேதைமடமங்கையொருபங்கிடமிருத்திடவமேறியமரர்
வாதைபடவண்கடலெழுந்தவிடமுண்டசிவன்வாழுமிடமா
மாதொடுமாடவர்கள்வந்தடியிறைஞ்சிநிறைமாமலர்கடூய்க்
கோதைவரிவண்டிசைகொள்கிதமுரல்கின்றவளர்கோகரணமே. (உ)

மூறைத்திறமுறப்பொருடெரிந்தமுனிவர்க்கருளியாலநிழல்வாய்
மறைத்திறமறத்தொருகிண்டுசமயங்களேவருத்தவனிடங்
துறைத்துறைமிருத்தருவிதூமலர்சுமந்துவயாயுந்திமதகைக்
குறைத்தையிடக்கரிபுரிந்திடுசாரன்மலிகோகரணமே. (ஙு)

இலைத்தலைமிருத்தபடைபெண்கரம்விளங்கவெரிவீசிமுடிமே
லலைத்தலைதொருத்தபுனல்செஞ்சடையில்வைத்தவழகன்றனிடமா
மலைத்தலைவருத்தமுழைதோறுமுழைவாளரிகள்கேழல்களிறு
குலைத்தலைமடப்பிடிகள்கூடிவிளையாடிகிழ்கோகரணமே. (ச)

தொடைத்தலைமலைத்திதழிதுன்னியவெருக்கலரிவன்னிமுடியின்
சடைத்தலைமிலைச்சியதபோதனனெனாதிபயில்கின்றபதியாம்
படைத்தலைபிடித்துமறவாளரொடுவேடர்கள்பயின்றுகுழுமிக்
குடைத்தலைநடிப்படியநின்றுபழிதீரநல்குகோகரணமே. (ஞ)

நீறுதிருமேனிமிசையாடிநிறைவார்கழல்சிலம்பொலிசெய
வேறுவிளையாடவிசைகொண்டிடுபலிக்குவருமீசனிடமா
மாறுசமயங்களும்விரும்பியடிபேணியரனாகமமிகக்
கூறுமனம்வேறிதிவந்தடியர்கம்பம்வருகோகரணமே. (ஙு)

கல்லவடமொந்தைகுழுமுளமலிகொக்கையரக்கனமிசை
பல்லபடநாகம்விரிகோவணவராளநகரொன்பரயலே
நல்லமடமாதரானமமுமவித்தியதிருத்தமுழுகக்
கொல்லவிடர்நோயகரப்புகல்கொடுத்தருளுகோகரணமே. (எ)

வாைத்தலைநெருக்கியமுருட்டிருணிறத்தவனவாய்களலறவ
விரற்றலையுகிர்ச்சிறிதுவைத்தபெருமானினிதுமேவுமிடமாம்
புனைத்தலைகெடுத்தமுனிவாணர்பொலிவாகிவினைதீரவதன்மேற்
குனைத்தலைகழற்பணியவோமம்விலகும்புகைசெய்கோகரணமே. (அ)

வில்லிமையினல்விறலாக்கனயிர்செற்றவனும்வேதமுதலோ
னில்லையுளதென்றியலிநேடவெரியாகியுயர்கின்றபரனா
செல்லையில்வனைத்தகடல்வட்டமுமிறைஞ்சிநிறைவாசமுருவக்
கொல்லையிலிருங்குறவர்தம்மயிர்புலர்த்திவளர்கோகரணமே. (கூ)

நேசமின்மனச்சமணர்தேரர்கணிரந்தமொழிபொய்களல்வித்
தாசைகொண்மனத்தையடியாரவர்தமக்கருளுமங்கணனிடம்
பாசமதறுத்தவனியற்பெயர்கள்பத்துடையமன்னனவனைக்
கூசவகைகண்டுபினவர்க்கருள்கணல்கவலகோகரணமே. (கo)

கோடலரவீனும்விரிசாரன்முனெருங்கிவளர்கோகரணமே
யிடமினிதாகவுறைவானடிகள்பேணியணிகாழிநகரா
னுடியதமிழ்க்கிளவியின்னிசைசெய்ஞானசம்பந்தன்மொழிகள்
பாடவலபத்தரவொத்திசையுமாள்வர்பரலோகமெளிதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தஞ்சைவடதேசத்திலிருப்பது. அத்தத்தேயத்தில் இது ஒரேதலம்.

சுவாமிபெயர் - மாபலநாதர் - தேவியார் - கோகரணநாயகியம்மை.

EFEO_TVG_149-240 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருவீழிமிழலை - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஓர்மருவுதேசினுடுதேசமலிசெல்வமறையோர்கள்பணியத்
தார்மருவுகொன்றையணிதாழ்சடையினனமர்சயங்கொள்பதிதான்
பார்மருவுபங்கயமுயர்ந்தவயலசூழ்பழனநீடவருகே
கார்மருவுவெண்கனகமாலிகைகவின்பெருகுவீழிநகரே. (க)

பட்டமுழவிட்டபணிலத்தினுடுபன்மறைகளோதுபணிநற்
சிட்டர்கள்சயத்துதிகள்செய்யவருள்செய்தமல்கொண்மேனியவனூர்
மட்டுலவுசெங்கமலவேலிவயல்செந்நெல்வளர்மன்னுபொழில்வாய்
விட்டுலவுதென்றல்விரைநாறுபதிவேதியர்கள்வீழிநகரே. (உ)

மண்ணிழிசுரர்க்குவளமிக்கபதிமற்றுமுளமன்னுயிர்களுக்
கெண்ணிழிவிலின்பநிகழ்வெய்தவெழிலார்பொழிலிலங்குபதம்
பண்ணிழிவிலாதவகைபாடமடமஞ்ஞைநடமாடலழகார்
விண்ணிழிவிமானமுடைவிண்ணவர்பிரான்மருவுவீழிநகரே. (ங)

செந்தமிழ்தெய்வமறைநாவர்செழுநற்கலைதெரித்தவரோ
டந்தமில்குணத்தவர்களர்ச்சனைகள்செய்யவமர்கின்றவரனூர்
கொந்தலர்பொழிற்பழனவேலிகுளிர்தண்புனல்வளம்பெருகவே
வெந்திறல்விளங்கிவளர்வேதியர்விரும்புபதிவீழிநகரே. (ச)

பூதபதியாகியபுராணமுனிபுண்ணியனன்மாதைமருவிப்
பேதமதிலாதவகைபாகமிகவைத்தபெருமானிடமா
மாதவர்களன்னமறையாளர்கள்வளர்த்தமலிவேள்வியதனு
லேதமதிலாதவகையின்பமர்கின்றவெழில்வீழிநகரே. (ஞ)

மண்ணின்மறையோர்மருவுவைதிகமுமாதவமும்மற்றுமுலகத்
தெண்ணில்பொருளாயவைபடைத்தவிமையோர்கள்பெருமானிடமா
நண்ணிவருநாவலர்கணுடொறும்வளர்க்கநிகழ்கின்றபுகழ்சேர்
விண்ணுலவுமாளிகைநெருங்கிவளர்வீள்புரிசைவீழிநகரே. (சு)

மந்திரனன்மாமறையீனுடுவளர்வேள்விமிசைமிக்கபுகைபோ
யந்தரவிசும்பணவியற்புதமெனப்படருமாழியிருள்வாய்
மந்தரனன்மாளிகைநிலாவுமணிநீடுகதிர்விட்டவொளிபோய்
வெந்தழல்விளக்கெனவிரும்பினர்திருந்துபதிவீழிநகரே. (எ)

ஆனவலியிற்றசமுகன்றலையரங்கவணியாழிவிரலா
லானமருயர்ந்தகுருதிப்புனலில்வீழ்தரவுணர்ந்தபரனூர்
தேனமர்திருந்துபொழில்செங்கனகமாளிகைதிகழ்ந்தமதிலோ
டானதிருவுற்றுவளரந்தணர்நிறைந்தவணிவீழிநகரே. (அ)

ஏனவுருவாகிமணிடந்தவிமையோனுமெழிலன்னவுருவ
மானவனுமாதியினுடந்தமறியாதவனன்மேனியவனூர்

வானணவுமாமதின்மருங்கலர்நெருங்கியவளங்கொள்பொழில்வாய்
வேனன்மலர்வெய்திடவிளங்கொளியின்மிக்கபுகழ்வீழிநகரே. (கூ)

குண்டமணராகியொருகோலமிகுபீலியொடுகுண்டிகைபிடித்
தெண்டிசையுமில்லதொருதெய்வமுளதென்பரதுவென்னபொருளாம்
பண்டையயனன்னவர்கள்பாவனைவிரும்புபரன்மேவுபதிசீர்
வெண்டரளவாணகைநன்மாதர்கள்விளங்குமெழில்வீழிநகரே. (கo)

மத்தமலிகொன்றைவளர்வார்சடையிலவைத்தபரன்வீழிநகர்சேர்
வித்தகனெவெங்குருவில்வேதியன்விரும்புதமிழ்மாலைகள்வல்லார்
சித்திரவிமானமமர்செல்வமலிகின்றதிவலோகமருவி
யத்தகுகுணத்தவர்களாகியனுபோகமோடியோகவரதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தோணிபுரம்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

சங்கமருமுன்கைமடமாதையொருபாலுடன்விரும்பி
யங்கமுடன்மேலுறவணிந்துபிணிதீரவருள்செய்யு
மெங்கள்பெருமானிடமெனத்தகுமுணக்கடலின்முத்தந்
துங்கமணியிப்பிகள்கரைக்குவருதோணிபுரமாமே. (க)

சல்லரியியாழ்முழவமொந்தைகுழலுளமதிமம்பக்
கல்லரியமாமலையர்பாவைபொருபாகமிலைசெய்
தல்லெரிகையேந்திநடமாடுசடையண்ணலிடமென்பர்
சொல்லரியதொண்டர்துதிசெய்யவளர்தோணிபுரமாமே. (உ)

வண்டரவுகொன்றைவளர்புன்சடையின்மேன்மதியம்வைத்துப்
பண்டரவுதன்னையிலர்த்தபரமேட்டிபழிதீரத்
தண்டரவிவ்வாண்கடலினஞ்சமுதுண்டகடவுள்ளூர்
தொண்டரவர்மிண்டிவழிபாடுமல்குதோணிபுரமாமே. (ங)

கொல்லேவிடையேறுடையகோவணவனுவணவுமாலை
யொல்லையுடையானடையலாரணமொள்ளழல்விளைத்த
வில்லையுடையான்மிகவிரும்புபதிமேவிவளர்தொண்டர்
சொல்லையடைவாகவிடர்தீர்த்தருள்செய்தோணிபுரமாமே. (ச)

தேயுமதியஞ்சடையிலங்கிடவிலங்கன்மலிகானிற்
காயமடுதிண்கரியினீருரிவைபோர்த்தவனினைப்பார்
தாயெனநிறைந்ததொருதன்மையினர்நன்மையொடுவாழ்வு
தூயமறையாளர்முறையோதிநிறைதோணிபுரமாமே. (ஞ)

பற்றலர்தமுப்புரமெரித்தடிபணிந்தவர்கண்மேலுக்
குற்றமதொழித்தருளுகொள்கையினன்வெள்ளின்முதுகானிற்

EFEO_TVG_149-241 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பற்றவனிசைக்கிளவிபாரிடமதேத்தநடமாடுந்
தூற்றசடையத்தனுறைகின்றபதிதோணிபுரமாமே. (கூ)

பண்ணமருகான்மறையர்தான்முறையினறதிருமார்பிற்
பெண்ணமருமேனியினர்தம்பெருமைபேசுமடியர்மெய்த்
திண்ணமரும்வல்வினைகடீரவருள்செய்தலுடையானூர்
தண்ணெனவிரும்புசரிதைத்தொழிலர்தோணிபுரமாமே. (எ)

தென்றிசையிலங்கையரையன்றிசைகள்வீரம்விளைவித்து
வென்றிசைபுயங்களையடர்த்தருளுவித்தசனிடஞ்சீ
ரொன்றிசையியற்கிளவிபாடமயிலாடவளர்சோலை
துன்றுசெயவண்டுமலிதும்பிமூரறுணிபுரமாமே. (அ)

நாற்றமிகுமாமலரின்மேலயனுகாரணனுநாடி
யாற்றலதனன்மிகவளப்பரியவண்ணமெரியாகி
யூற்றமிகுசீலுகுமேலுலகுமோங்கியெழுதன்மைத்
தோற்றமிகராருமறியாவுறைவுதோணிபுரமாமே. (கூ)

மூடுதுவராடையினர்வேடநீலகாட்டுமமணுதர
கேடுபலசொல்லிடுவரம்மொழிகெடுத்தடைவினைக்
காடுபதியாகநடமாடிமடமாதொருகாகிற்
றோடுகுழைபெய்தவர்தமக்குறைவுதோணிபுரமாமே. (கo)

தூஞ்சிருளினின்றுநடமாடிமிகுதோணிபுரமேய
மஞ்சனவணங்குகிருஞானசம்பந்தனசொன்மாலை
தஞ்சமெனநின்றிசைமொழிந்தவடியார்கடுமற்றம்
வஞ்சமிலர்நெஞ்சிருளுநீங்கியருள்பெற்றுவளர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஅவளிவணல்லூர் - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கொம்பிரியவண்டுலவுகொன்றைபுரிதாலொடுகுலாவித்
தம்பரிசினேடுசுடுநீறுதடவந்திடவமேறிக்
கம்பரியசெம்பொனெடுமாடமதில்கல்வாவிலாக
வம்பெரியவெய்தபெருமானுறைவுதவளிவணல்லூரே. (க)

ஓமையனகள்ளியனவாகையனகூகைமுரலோசை
யீமமெரிசூழ்சுடலைவாசமுதுகாடுநடமாடித்
தூய்மையுடையக்கொடரவம்விரவிமிக்கொளிதுளங்க
வாமையொடுபூணுமடிகள்ளுறைவுதவளிவணல்லூரே. (உ)

நீறுடையமார்பிலிமவான்மகளோர்பாகநிலைசெய்து
கூறுடையவேடமொருகூடியழகாயதொருகோல

மேறுடையரேனமிடுகொடிரவினின்றுநடமாடு
மாறுடையவார்சடையினுறைவுதவளிவணல்லூரே. (கூ)

பிணியுமலர்கேடுமிலர்தோற்றமிலரென்றுலகுபேணிப்
பணியுமடியார்களனபாவமறவின்னருள்பயந்து
துணியுடையதோலுமுடைகோவணமுநாகமுடனுரைங்க
வணியுமழகாகவுடையானுறைவுதவளிவணல்லூரே. (ச)

குழலின்வரிவண்டுமுரன்மெல்லியனபொன்மலர்கள்கொண்டு
கழலின்மிசையிண்டைபுனைவார்கடவுளென்றமரர்கூடிந்
தொழலும்வழிபாடுமுடையார்துயருநோயுமிலராவ
ரழலுமழுவேந்துகையினுறைவுதவளிவணல்லூரே. (ஞ)

துஞ்சலிலராயமரர்கின்றுதொழுதேத்தவருள்செய்து
நஞ்சுமிடறுண்டுகரிதாயெவெளிதாகியொருநம்பன்
மஞ்சுறநிமிர்ந்துமையுமுங்கவகலத்திதாடுவளாவி
யஞ்சமதவேழமுரியாவுறைவுதவளிவணல்லூரே. (கூ)

கூடரவமொன்றைகுழலியாழ்முழவினோடுமிசைசெய்ய
பீடரவமாகுபடம்புசெய்துபேரிடவமோடுங்
காடரவமாகுகனல்கொண்டிரவினின்றுநடமாடி
யாடரவமார்த்தபெருமானுறைவுதவளிவணல்லூரே. (எ)

ஒருவனையுமேல்வலிகொடேனெனைழுந்தவிறலோனிப்
பெருவரையின்மேலோர்பெருமானுமுளனேயெனவெகுண்ட
கருவனையுமாழ்கடலுமன்னதிறல்கைகளுடையோனை
யருவனையிலன்றியடர்த்தானுறைவுதவளிவணல்லூரே. (அ)

பொலிவரியநாகமுயர்பொங்கணையணைந்தபுகழோனும்
வெறிவரியவண்டறையவிண்டமலர்மேல்விழுமியோனுஞ
செறிவரியதோற்றமொடுவாற்றன்மிகநின்றுதெரிதேயு
மறிவரியனாயபெருமானுறைவுதவளிவணல்லூரே. (கூ)

கழியருகுபள்ளியிடமாகவடமீன்கள்கவர்வாரும்
வழியருகுசாரவெயினின்றடிசிலுள்கிவருவாரும்
பழியருகினோடொழிகபான்மையொடுநின்றுதொழுதேத்தும்
மழியருவிதோய்ந்தபெருமானுறைவுதவளிவணல்லூரே. (கo)

ஞானமொழியானதிறலோர்பரவுமவளிவணல்லூர்மேற்
றோனமொழிநன்மொழிகளாயபுகழ்தோணிபுரவூரன்
ஞானமொழிமாலைநலமாடுபுகழ்ஞானசம்பந்தன்
றேனமொழிமாலைபுகழ்வார்துயர்கடீயதிலர்தாமே. திருச்சிற்றம்பலம். (கக)

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சாக்ஷிநாயகர் - தேவியார் - சவுந்தரநாயகியம்மை.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

திருநல்லூர் - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வண்டிரியவிண்டமலர்மல்குசடைதாழவிடையேறிப்
பண்டெரிகைகொண்டபரமன்பதியதென்பரதனயலே
நண்டிரியநாரையிரைதேரவரைமேலருவிமுத்தந்
தெண்டிரைகண்மோதவிரிபோதகமழுந்திருநல்லூரே. (க)

பல்வளருநாகமரையார்த்துவரைமங்கையொருபாக
மல்வளர்புயத்திலணிவித்துமகிழ்மும்பரமனிடமாஞ்
சொல்வளரிசைக்கிளவிபாடிமடவார்நடமதாடச்
செல்வமறையோர்கண்முறையேத்தவளருந்திருநல்லூரே. (உ)

நீடுவரைமேருவிலதாகநிகழ்நாகமழலம்பாற்
கூடலர்கண்மூவெயிலெரித்தகுமுகன்குலவுசடைமே
லேடுலவுகொன்றைபுனலின்புனிகமுந்நிமலனிடமாஞ
சேடுலவுதாமரைகணீடுவயலார்திருநல்லூரே. (ங)

கருகுபுரிமிடறர்கரிகாடரிகையதனிலேந்தி
யருகுவருகரியினுரியதளர்படவரவரிடம்வினவின்
முருகுவிரிபொழிலின்மணநாறுமயிலாலமரமேறித்
திருகுசினமந்திகளிசிந்தமதுவார்திருநல்லூரே. (ச)

பொடிகொடிருமார்பர்புரிநூலர்புனல்பொங்கரவுதங்கு
முடிகொள்சடைதாழவிடையேறுமுதலாளரவரிடமா
மிடிகொண்முழவோசையெழிலார்செய்தொழிலாளர்விழமல்கச்
செடிகொள்வினையகலமனமிலியவர்கள்சேர்திருநல்லூரே (ஞ)

புற்றரவர்நெற்றியார்கணெற்றைவிடையூர்வரடையாளஞ்
சுற்றமிருள்பற்றியபலபூதமிசைபாடநசையாலே
கற்றமறையுற்றுணர்வர்பற்றலர்கண்முற்றுமெயின்மாளச்
செற்றவிருப்பிடமெருக்குபுனலார்திருநல்லூரே. (சு)

பொங்கரவரங்கமுடன்மேலணிவர்ஞாலமிடுபிச்சை
தங்கரவமாகவுழிதந்துமெய்துலங்கியவெண்ணீற்றர்
கங்கையரவம்விரவுகிங்கள்சடையிடமினவிற்
செங்கயல்வதிக்குதிகொளும்புனலதார்திருநல்லூரே. (எ)

ஏறுபுகழ்பெற்றதெனிலங்கையவர்கோனையருவரையிற்
சீறியவனுக்கருளுமெங்கள்சிவலோகனிடமாகுங்
கூறுமடியார்களிசைபாடிவலம்வந்தயருமருவிச்
சேறுகமழானவழியத்திகழ்தருந்திருநல்லூரே. (அ)

மாலுமலர்மேலயனுநேடியறியாமையெரியாய
கோலமுடையானுணர்வுகோதில்புகழானிடமதாகு

நாலுமறையங்கமுதலாறுமெரிமூன்றுதழலோம்புஞ
சிலமுடையார்கணெடுமாடம்வளருந்திருநல்லூரே. (க)

நீறுமுடைகோவணமிலாமையிலோலோவியதவத்தர்
பாறுமுடன்மூடுதுவராடையர்கள்வேடமவைபாரே
லேறுமடவாளொடினிதேறிமுனிருந்தவிடமென்பர்
தேறுமனவாரமுடையார்குடிசெயுந்திருநல்லூரே. (கo)

திரைகளிருகரையும்வருபொன்னிநிலவுந்திருநல்லூர்மேற்
பரசுதருபாணியைகலந்திகழ்செய்தானிபுராதன
னுரைசெய்தமிழ்ஞானசம்பந்தனிசைமாலைமொழிவார்போய்
விரைசெய்மலர்தூவிதிபேணுகதிபேறுபெறுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்புறவம் - திருவிராகம் - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்.

பெண்ணியலுருவினர்பெருகியபுனல்விரவியபிறைக்
கண்ணியர்கடைவிடையினர்கழலெழுமுடியவர்
மண்ணியபிணிகெடவருள்புரிபவர்மணுகுபுற்பதி
புண்ணியர்மறையவர்நிறைபுகழொலிமலிபுறவமே. (க)

கொக்குடையிறகொடுபிறையொடுகுளிர்சடைமுடியின
ரக்குடைவடமுமோரரவமுமலரைமிசையினிற்
றிக்குடைமருவியவருவினர்திகழ்மலைமகளோடும
புக்குடனுறைவதுபுதுமலர்விரைகமழ்புறவமே. (உ)

கொங்கியல்சுரிகுழல்வரிவளையிளமுலையுமையொரு
பங்கியரிருவருவுடையவர்பரசுவொடிரலீலமெய்
தங்கியகரதலமுடையவர்விடையவருறைபதி
பொங்கியபொருகடல்கொளவதன்மிசையுயர்புறவமே. (ங)

மாதவமுடைமறையவனுயிர்கொளவருமுரலியை
மேதகுதிருவடியிறையுறவுயிர்தவிலகினர்
சாதகவருவியல்கானிடையுமைவெருவுறவரு
போதகவரியதண்மருவினருறைபதிபுறவமே. (ச)

காமனையழல்கொளவிழிசெய்துகருதலர்கடிமதி
றூமமதுறவிறல்சுடர்கொளுவியவிறைதொகுபதி
யோமமொடுயர்மறைபிறவியவகைதனைடொளிகெழு
பூமகனலரொடுபுனல்கொடுவழிபடுபுறவமே. (ஞ)

சொன்னியமுடையவர்சுருதிகள்கருதியதொழிலினர்
பின்னையாடுவணர்பெருமையர்திருவடிபேணிட

முன்னியமுதல்வினையுறவருளினருறைமுதுபதி
புன்னியின்முகநிதிபொதியவிழ்பொழிலணிபுறவமே. (கூ)

வரிதருபுலியதளுடையினர்மழவெறிபடையினர்
பிரிதருமகுலவடமுடிமிசையணிபெருமைய
ரெரிதருமுருவினரிமையவர்தொழுவதோரியல்பினர்
புரிதருகுழலுமையொடுமினிதுறைபதிபுறவமே. (எ)

வசிதருமுருவொடுமலர்தலையுலகினவழிசெயு
நிசிசரனுடலொடுகெடுமுடிபொருபதுநெரிவுற
வொசிதரவொருவிரனிறுவினொளிவளர்வெளிபொடி
பொசிதருகிருவருவுடையவருறைபதிபுறவமே. (அ)

தேனகமருவியசெறிதருமுளரிசெய்தவிசினி
லூனகமருவியபுலனுகர்வுணர்வுடைபொருவலும்
வானகம்வரையகமறிகடனிலனெனுமெழுவகைப்
போனகமருவினனறிவரியவர்பதிபுறவமே. (கூ)

கோசரநுகர்பவர்கொழுகியதுவரனதுகிலினர்
பாசுரவினைதருபனகர்கள்பழிதருமொழியினர்
நீசரைவிடுமினிநினைவுறுமலர்தமுறைபதி
பூசுரர்மறையினிறைபுகழொலிமலிபுறவமே. (கo)

போதியல்பொழிலணிபுறவன்னகருறைபுனிதனை
வேதியர்பதிமிருதலைதமிழ்கெழுவிரகின
னேதியவொருபதுமுரியதோரிசைகொளவுரைசெய
நீதியரவிருநிலனிடைநிகழ்தருபிறவியே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவிழிமிழலை - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மட்டொளிவிரிதருமலர்நிறைசுரிகுழன்மடவரல்
பட்டொளிமணியல்குலுமையமையுருவொருபாகமாக்
கட்டொளிர்புனலொடுகடியுறவுடனுறைமுழுமிசை
விட்டொளியுதிர்பிதிர்மதியவர்பதிவிழிமிழலையே. (க)

எண்ணிறவரிவளைநெரிகுழலெழின்மொழியிளமுலைப்
பெண்ணுறுமுடலினர்பெருகியகடல்விடமிடறினர்
கண்ணுறுநுதலினர்கடியதோர்விடையினர்கனலினர்
விண்ணுறுபிறையணிசடையினர்பதிவிழிமிழலையே. (உ)

மைத்தருமதர்விழிமலைமகளுருவொருபாகமா
வைத்தவர்மதகரியுரிவைசெய்தவர்தமைமருவினர்

தெத்தெனவிசைமுரல்சரிதையர்திகழ்தருமார்பினர்
வித்தகருகுலையுடையவரிடம்வீழிமிழலையே. (ங)

செவ்வழலெனநனிபெருகியவருவினர்செறிதரு
கல்வமுலாவினர்கதிர்முதிர்மழவினர்தொழுவிலா
முவ்வமுனிசிசர்விறலவைபழிதரமுதுமதில்
வெவ்வழல்கொளநனிமுனிபவர்பதிவீழிமிழலையே. (ச)

டைங்கணதொருபெருமழலைவெளேனர்பலியென
வெங்கணுமுழிதர்வரினமையவர்தொழுதெழுமியல்பின
ரங்கணரழரர்களடியிணைதொழுதெழுவரமா
வெங்கணவரவினரூறைதருபதிவீழிமிழலையே. (ஞ)

பொன்னனபுரிதருசடையினர்பொடியணிவடிவின
ருன்னினர்வினையவைகளைதலைமருவியவொருவனர்
தென்னெனவிசைமுரல்சரிதையர்திகழ்தருமார்பினின்
மின்னெனமிளிர்வதோரரவினர்பதிவீழிமிழலையே. (கூ)

அக்கினொடரவரையணிதிகழொளியதோராமைபூண்
டிக்குகமலித்தலைகலனெனவிடுபலியேகுவர்
கொக்கரைகுழன்முழவிழவொடுமிசைவ'தோர்சரிதையர்
மிக்கவருறைவதுவிரைகமழ்பொழில்வீழிமிழலையே. (எ)

பாதமோர்விரலுறமலையடர்பலதலைநெரிதரப்
பூதமோடடியவர்புனைகழலுறழுதெழுபுகழின
ரோதமோடொலிதிரைபடுகடல்விடமுடைமிடறினர்
வேதமோடுறதொழின்மதியவர்பதிவீழிமிழலையே. (அ)

நீரணிமலர்மிசையுறைபவளிறைகடலுறுதுயி
ஞரணனெனவிவரிருவருறுமலரடிமுடி
யோருணர்வினர்செலலுறலருமுருவினொளிதிகழ்
வீரணருறைவதுவிரைகமழ்பொழில்வீழிமிழலையே. (கூ)

இச்சையரினிதனவிடுபலிபடுதலைமகிழ்வதோர்
பிச்சையர்பெருமையையிறைபொருதறிவெனவுணர்விலர்
மொச்சயவமணருமுடைபடுதுகிலருமழிவதோர்
விச்சையருறைவதுவிரைகமழ்பொழில்வீழிமிழலையே. (கo)

உன்னியவருமறையொலியினைமுறைமிகுபாடல்செ
யின்னிசையவருறையெழிறிகழ்பொழில்வீழிமிழலையை
மன்னியபுகலியுண்ஞானசம்பந்தனவண்டமிழ்
சொன்னவர்துயரிலர்வியனுலகுறுகதிபெறுவரே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருச்சேறை - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முறியுறுநிறமல்குமுகிழ்முலைமலைமகள்வெருவமுன்
வெறியுறுமதகரியதள்படவுரிசெய்தவிறலினர்
நறியுறுமிதழியின்மலரொடுநகுதலை
செறியுறுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. (க)

புனமுடைநறுமலர்பலகொடுதொழுவதோர்புரிவினர்
மனமுடையடியவர்படுதுயர்களைவதோர்வாய்மைய
ரினமுடைமணியினைடனிலையொளிபெறமிளிர்வதோர்
சினமுதிர்விடையுடையடிகடம்வளநகர்சேறையே. (உ)

புரிதருசடையினர்புலியதளையினர்பொடிபுல்கு
மெரிதருமுருவினரிடவமதேறுவரீடுலா
வரிதருவளையினரவரவர்மகிழ்தரமனைதொறுங்
கிரிதருசரிதையருறைதருவளநகர்சேறையே. (ங)

துடிபடுமிடையுடைமடவரலுடனொருபாகமா
விடிபடுகுரலுடைவிடையினர்படமுடையரவினர்
பொடிபடுமுருவினர்புலியுரிபொலிதருமரையினர்
செடிபடுசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. (ச)

அந்தரமுழிதருகிரிபுரமொருகொடியளவினின்
மந்தரவரிசிலையதனிடையரவிவாளியால்
வெந்தழிதரவெய்தவிடலையர்விடமணிமிடறினர்
செந்தழனிறமுடையடிகடம்வளநகர்சேறையே. (ஞ)

மத்தரமுறுதிறன் மறவர்தம்வடிவுகொடுருவுடைப்
பத்தொருபெயருடைவிசயனையசைவுசெய்பரிசினை
லத்திரமருளுநமடிகளதணிகிளர்மணியணி
சித்திரவளநகர்செறிபொழிறழுவியசேறையே. (ட)

பாடினரருமறைமுழுறமுறைபொருளெனவருட
மாடினருலகிடையலர்கொடுமடியவர்துதிசெய
வாடினர்படுதலையிடுபலியதுகொடுமகிழ்தருஞ்
சேடர்தம்வளநகர்செறிபொழிறழுவியசேறையே. (ண)

கட்டுரமதுகொடுகயிலைகன்மலிமலிகரமுடை
நிட்டுரனுடலொடுநெடுமுடியொருபதுநெரிசெய்தார்
மட்டுரம்மலரடியடியவர்தொழுதெழவருள்செயுஞ்
சிட்டர்தம்வளநகர்செறிபொழிறழுவியசேறையே. (அ)

பன்றியர்பரவையர்பரிசுடைவடிவொடுபடர்தர
வன்றியவரவரடியொடுமுடியவையறிகிலார்

நின்றிருபுடைபடநெடுவெரிநடுவெயோர்நிகழ்தரச்
சென்றுபாவெளிபடவருளியவவர்நகர்சேறையே. (கூ)

துகடுறுவிரிதுகிலுடையவரமணைனும்வடிவினர்
விகடமதுறுசிறுமொழியவைநலமிலமெனவிடன்
முகிடருமிளமதிபரவொடுமழருமுதுநதி
நிகடருசடைமுடியடிகடம்வளநகர்சேறையே. (கo)

கற்றநன்மறைபயிலடியவரடிதொழுகழியுறு
சிற்றிடையவளொடுமிடமெனவுறைவதோர்சேறைமேற்
குற்றமிலபுகலியுள்ளிகலுரைஞானசம்பந்தன
சொற்றகவுறமொழிபவரழிவிலர்துயர்தீருமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சென்னெறியப்பர் - தேவியார் - ஞானவல்லியம்மை.

திருநள்ளாறு - திருவிராகம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

தளிரிளவளரொளிதனதெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவனமுலையிணையவைகுலவலி
னளிரிளவளரொளிமருவுநள்ளாறுறைதங்கரமமே
மிளிரிளவளரெரியிடிலிவைபழுதிலைமெய்மையே. (க)

போதமர்தருபுரிகுழலெழின்மலைமகள்பூணணி
சீதமதணிதருமுகிழிளவனமுலைசெறிதலி
ணூதமதெழிலுருவனையநள்ளாறர்தங்காமமே
மீதமதரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (உ)

இட்டுறுமணியணியினர்புனர்வளரொளியெழில்வடங்
கட்டுறுகதிரிளவனமுலையிணையொடுகலவலி
னட்டுறுசெறிவயல்மருவுநள்ளாறர்தன்னுமமே
யிட்டுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (ங)

மைச்சணிவரியரிநயனிதொன்மலைமகள்பயனுறு
கச்சணிகதிரிளவனமுலையிணையொடுகலவலி
னச்சணியிடறுடையடிகணள்ளாறர்தங்கரமமே
மெச்சணியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (ச)

பண்ணியன்மலைமகள்கதிர்விடுமணியணிநிறக்
கண்ணியல்கலசமதனமுலையிணையொடுகலவலி
னண்ணியசுளிர்புனல்புகுதுநள்ளாறர்தங்காமமே
விண்ணியலெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (ஞ)

EFEO_TVG_149-245 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

போதுபுரிகுழன்மலைமகளிளவளர்பொன்னனி
சூதமுறுதளிர்நிறவனமூலையவையொடுதைதலிற்
றூதுறுநிறமுடையடிகணள்ளாரர்தங்காமமே
மீதுறுமெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (கூ)

கார்மலிகெறிபுரிசுரிகுழன்மலைமகள்கவினுற
சீர்மலிதருமணியணிமூலைதிகழ்வொடுசெறிதலிற்
றூர்மலிகருதலையுடையகள்ளாரர்தங்காமமே
யேர்மலியெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (எ)

மன்னியவளரொளிமலைமகடளிர்நிறமதமிகு
பொன்னியன்மணியணிகலசமதனமூலைபுணர்தலிற்
றன்னியறசமுகனெரியகள்ளாரர்தங்காமமே
மின்னியலெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (அ)

கான்முகமயிலியன்மலைமகள்கதிர்விடுகனமிகு
பான்முகமியல்பணையினைமூலைதுணையொடுபயிறலி
னுன்முகனரியறிவரியகள்ளாரர்தங்காமமே
மேன்முகவெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (கூ)

அத்திரயனிதொன்மலைமகள்பயனுறுமதிசயச்
சித்திரமணியணிதிகழ்மூலையிணையொடுசெறிதலிற்
புத்தரொடமணர்பொய்பெயருகள்ளாரர்தங்காமமே
மெய்த்திரளெரியினிலிடிலிவைபழுதிலைமெய்மையே. (கo)

நிற்றிடையரிவைதன்வனமூலையினையொடுசெறிதரு
நற்றிறமுறுகுழல்நகர்ஞானசம்பந்தன
கொற்றவனெதிரிடையெரியினிலிடவிலைகூறிய
சொற்றெரியொருபதுமறிபவர்துயரிலர்தூயரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இது - சமணர் வாதின்பொருட்டுத் தீயிலிடுதற்கு போகமார்த்தபூண்முலை யாளென்னும் பதிகம் உசயமாக இது தீயில பழுதுபடாது என்னுந் தன்னுகொண்டு அருளிச்செய்தபதிகம்.

திருவிளமர்-திருவிராகம்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

மத்தகமணிபெறமலர்வதோர்மதிபுரைறுதல்கர
மொத்தகருகமணிமிளிர்வதோரரவினரொளிகிள
ரத்தகவடிதொழவருள்பெறுகண்ணுமுமையவள்
வித்தகருறைவதுவிரிபொழில்வளருகர்விளமரே. (க)

பட்டிலகியன்முலையரிவையருலகினிலிடுபலி
யொட்டிலகினமறவடியினருமையுறவடினர்

கிட்டிலகழகியபொடியினர்விடைமிசைசேர்வதோர்
விட்டிலகழகொளிபெயரவருறைவதுவிளமரே. (உ)

அங்கதிரொளியினையிடைமிளிர்வதோரரவொடு
செங்கதிரெனநிறமனையதோர்செழுமணிமார்பினர்
சங்கதிர்பறைருமுன்முழவினெடிசைதருசரிதையர்
வெங்கதிருறுமழுவுடையவரிடமெனிலவிளமரே. (ங)

மாடமதெனவளர்மதிலவையிரிசெய்வர்விரவுதிர்ப்
பீடெனவருமறையுரைசெய்வர்பெரியபல்சரிதைகள்
பாடலராடியசுடலையிலிடமுறைருடருவில்
வேடமதுடையவர்வியனகரதுசொலில்விளமரே. (ச)

பண்டலைமழலைசெயாழெனமொழியுமைபாகமாக்
கொண்டலைகுரைகழலடிதொழுமவர்வினைருறுகிலர்
விண்டலையமரர்கடுகிசெயவருள்புரிவிறலினர்
வெண்டலைபலிகொளும்விமலர்தம்வளருகர்விளமரே. (ரு)

மீனகடோறிடுபலியதுகொள்வர்மதிபொதிசடையினர்
கானகடலடுவிடமமுதுசெய்கறையணிமிடறினர்
முனைகெடவருமதிலெரிசெய்தவர்கழல்பரவுவார்
வினைகெடவருள்புரிதொழிலினர்செழுருகர்விளமரே. (கூ)

நெறிகமழ்தருமுனைபுணர்வினர்புணர்வுறுமடவரல்
செறிகமழ்தருமுருவுடையவர்படைபலபயில்பவர்
பொறிகமழ்தருபடவரவினர்விரவியசடைமிசை
வெறிகமழ்தருமலரடைபவரிடமெனில்விளமரே. (எ)

தெண்கடல்புடையணிநெடுமதிலிலங்கையர்தலைவனைப்
பண்படவரைதனிலடர்செய்தபைங்கழல்வடிவினர்
திண்கடலடைபுனறிகழ்சடைபுருவதோர்சேர்வினர்
விண்கடல்விடமலியடிகடம்வளனகர்விளமரே. (அ)

தொண்டையுறவருதுயருறுகாலனைமாள்வுற
வண்டல்செய்திருவரைவெருவுறவாரழலாயினர்
கொண்டல்செய்தருதிருமிடறினரிடமெனிலளியினம்
விண்டிசைவுறுமலர்நறுமதுவிரிபொழில்விளமரே. (கூ)

ஒள்ளியர்தாழுதெழவுலகினிலுரைசெயுமொழிபல
கொள்ளியகளவினர்குண்டிகையவர்தவமறிவிலார்
பள்ளியமெய்யெனக்கருதன்மின்பரிவொடுபேணுவீர்
வெள்ளியபிறையணிசடையினர்வளருகர்விளமரே. (கo)

வெந்தவெண்பொடியணியடிகளிளவிளமருள்விகிர்தரைச்
சிந்தையுளிடைபெறவுரைசெய்ததமிழ்வைசெழுவிய

EFEO_TVG_149-246 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வந்தணர்புகலியுளமகமாருமறைஞானசம்
பந்தனமொழியிவையுரைசெயுமவரினேபறையுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-பதஞ்சலிமனோகரேசுவரர்-தேவியார்-யாழினுமென்மொழியம்மை.

திருக்கொச்சைவயம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

திருந்துமாகளிற்றினமருப்பொடுதிரண்மணிச்சந்தமூந்திக்
குருந்தும்மாகுரவமுங்குடைசமும்பீலியுஞ்சுமந்துகொண்டு
நிரந்துமாவயல்புகுநீடுகோட்டாறுசூழ்கொச்சைமேவிப்
பொருந்தினர்திருந்தடிபோற்றிவாழ்நெஞ்சமேபுகலதாமே. (க)

ஏலமாரிலவமோடினமலர்த்தொகுதியாயெங்குந்திக்
கோலமாமிளகொடுகொழுங்கனிகொன்றையுங்கொண்டுகோட்டா
முலியாவயல்புகுமணிதருகொச்சையேசிச்சிமேவு
நீலமார்கண்டனினினைமடநெஞ்சமேயஞ்சனியே. (உ)

பொன்னுமாமணிகொழித்தெறிபுனற்கைகள்வாய்நுரைகளுந்திக்
கன்னிமார்மூலைநலங்கவரவந்தேறுகோட்டாறுசூழ
மன்னினர்மாதொடுமருவிடங்கொச்சையேமருவினலு
முன்னைநோய்தொடருமாறில்லைகாணெஞ்சமேயஞ்சனியே. (ஊ)

கந்தமார்கேதகைச்சந்தனக்காடுசூழ்கதலிமாடே
வந்துமாவள்ளோயின்பவரளிக்குவளையைச்சாடியோடக்
கொந்துவார்குழலினர்குதிகொள்கோட்டாறுசூழ்கொச்சைமேய
வெந்தையாரடிநினைந்துய்யலாநெஞ்சமேயஞ்சனியே. (எ)

மறைகொளுந்திறலினராகுதிப்புகைகள்வானண்டமிண்டிச்
சிறைகொளும்புனலணிசெழுமதிதிகழ்மதிற்கொச்சைதன்பா
லுறைவிடமெனமனமதுகொளும்பிரமனூர்சிரமறுத்த
விறைவனதடியிணையிறைஞ்சிவாழ்நெஞ்சமேயஞ்சனியே. (ஏ)

சுற்றமுமக்களுந்தொக்கவத்தக்கனேச்சாடியன்றே
யுற்றமால்வலையுமைநங்கையைப்பங்கமாயுள்கினுனேர்
குற்றமிலடியவர்குழுமியவீதிசூழ்கொச்சைமேவி
நற்றவமருள்புரிநம்பனைநம்பிடாய்நாளுநெஞ்சே. (கூ)

கொண்டலார்வந்திடக்கோலவார்பொழில்களிற்கூடிமந்தி
கண்டவர்கழைபிடித்தேறிமாமுகிறனேக்கதுவுகொச்சை
யண்டவானவர்களுமமரருமுனிவரும்பணியவால
முண்டமாகண்டனுர்தம்மையேயுள்குமீயஞ்சனெஞ்சே. (எ)

அடலெயிற்றரக்கனுர்கெருக்கிமாமலையெடுத்தார்த்தவாய்க
ளுடல்கெடத்திருவிரலூன்றினருளைவிடமொளிகொள்வெள்ளி
படலிடைப்பவளமுமுத்தமும்தொத்துவண்புன்னைமாடே
பெடையொடுங்குருகினம்பெருகுதண்கொச்சையேபேணுநெஞ்சே. (அ)

அரவினிற்றுயிலரியுநற்பிரமனுமன்றயர்ந்து
குரைகழற்றிருமுடியளவிடவரியவர்கொங்குசெம்பொன்
விரிபொழிலிடைமிகுமலைமகண்மகிழ்தரவீற்றிருந்த
கரியருன்மிடறுடைக்கடவுளார்கொச்சையேகருதுநெஞ்சே. (கூ)

கடமெலியுடலுடையமணருங்கஞ்சியுண்சாக்கியரு
மிடமறவுரைதனையிகழ்பவர்களருகுதமீசர்வானோர்
நடவுரைநம்பனைநான்மறையவர்பணிந்தேத்தஞால
முடையவன்கொச்சையேயுள்கிவாழ்நெஞ்சமேயஞ்சனியே. (கூ)

காய்ந்துதங்காலினுற்காலனைச்செற்றவர்கடிகொள்கொச்சை
யாய்ந்துகொண்டிடமெனவிருந்தருல்லடிகளையாதரித்தே
யேய்ந்ததொல்புகழ்மிகுமெழில்மறைஞானசம்பந்தன்சொன்ன
வாய்ந்தவிம்மாலைகள்வல்லவர்நல்லவானுலகின்மேலே. திருச்சிற்றம்பலம்.

திருத்துருத்தியுந் - திருவேள்விக்குடியும் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

ஓங்கிமேலுழிதருமொலிபுனர்கங்கையையொருசடைமேற்
றூங்கினரிடபலிகலைகலனுக்கொண்டதம்மடிகள்
பாங்கினலுமையொடும்பகலிடம்புகலிடம்பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த்துரித்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (க)

தூறுசேர்சுடலையிற்சுடரெரியாடுவர்துளங்கொளிசேர்
நீறுசாந்தெனவகந்தணிவர்வெண்பிறைமல்குசடைமுடியார்
நாறுசாந்திளமுலைபரிவையோடொருபகலமர்ந்தபிரான்
வீறுசேர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (உ)

மழைவளரிளமதிமலிசொடுதலைபுல்குவார்சடைமேற்
கழைவளர்புனல்புகக்கண்டவெங்கண்ணுதற்கபாலியார்தா
மிழைவளர்துகிலல்குலரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விழைவளர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (கூ)

கரும்பனவரிசிலைப்பெருந்தகைக்காமனைக்கனலழித்த
சுரும்பொடுதேன்மல்குதூமலர்க்கொன்றையஞ்சுடர்ச்சடையா
ரரும்பனவனமுலையரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விரும்பிடந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (எ)

வளங்கிளர்மதியமும்பொன்மலர்க்கொன்றையும்வானரவு
களங்கொளச்சடையிடைவைத்தவெங்கண்ணுதற்சபாலியார்தாந்

துளங்குநூன்மார்பினரிவையோடொருபகலமர்ந்தபிரான்
விளங்குநீர்த்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (நி)

பொரியுலாமடுபுலியுரிவையர்வரியராப்பூண்டிலங்கு
நெறியுலாம்பலிகொளுநீர்மையர்சீர்மையைநினைப்பரியார்
மறியுலாங்கையினர்மங்கையோடொருபகலமர்ந்தபிரான்
வெறியுலாந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (சு)

புரிதருசடையினர்புலியுரியரையினர்பொடியணிந்து
திரிதருமியல்பினர்திரிபுரமூன்றையுந்தீவளைத்தார்
வரிதருவனமுலைமங்கையோடொருபகலமர்ந்தபிரான்
விரிதருதுருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (எ)

நீண்டிலங்கவிரொளிநெடுமுடியரக்கனின்னீள்வரையைக்
கிண்டிடந்திடுவனென்றெழுந்தவன்னுள்வினைக்கிழப்படுத்தார்
பூண்டநூன்மார்பினரிவையோடொருபகலமர்ந்தபிரான்
வேண்டிடந்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே (அ)

கரைகடலரவினைக்கடவுளுந்தாமரைநான்முகனுங்
குரைகழலடிதொழக்கூரெரியெனநிரங்கொண்டபிரான்
வரைகெழுமகளொடும்பகலிடம்புகலிடம்வண்பொழில்சூழ்
விரைகமழ்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே. (கூ)

அமுமுகவெயினிலையமணருங்குண்டருஞ்சாக்கியரு
நயமுகவுரையினர்நுவனசரிதைகள்செய்துழல்வார்
கயலனவரிநெடுங்கண்ணியொடொருபகலமர்ந்தபிரான்
வியனகர்துருத்தியாரிரவிடத்துறைவர்வேள்விக்குடியே (கo)

விண்ணுலாம்விரிபொழில்விளமணற்றுருத்திவேள்விக்குடியு
மொண்ணுலாமொலிகழலடிவரரிவையோடுறைபதியை
நண்ணுலாம்புகலியுளருமறைஞானசம்பந்தன்சொன்ன
பண்ணுலாமருந்தமிழ்பாடுவாரோடுவார்பழியிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவடகுரங்காடுதுறை - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

கோங்கமேகுரவமேகொழுமலர்ப்புன்னையேகொகுடிமுல்லை
வேங்கையேநாழிலேவிம்முபாதிரிகளேவிரவியெங்கு
மோங்குமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
வீங்குநீர்ச்சடைமுடியடிகளாரிடமெனவிரும்பினரே. (க)

மந்தமாயிழிமதக்களிற்றினமருப்பொடுபொருப்பினல்ல
சந்தமாரகிலொடுசாதியின்பலங்களுந்தகையமோதி

யுந்துமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
யெந்தையாரிணையடியிமையவர்தொழுதெழுமியல்பினரே. (உ)

முத்துமாமணியொடுமுழைவளாரமுமுகந்துந்தி
யெத்துமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
மத்தமாமலரொடுமதிபொதிசடைமுடியடிகடம்மேற்
சித்தமாமடியவர்சிவகதிபெறுவதுதிண்ணமன்றே. (ஊ)

கறியுமாமிளகொடுகதலியின்பலங்களுங்கலந்துந்தி
யெறியுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
மறியுலாங்கையினர்மலரடிதொழுதெழுமருவுமுள்ளக்
குறியினரவர்மிக்கூடுவார்நீடுவானுலகினூடே. (ச)

கோடிடைச்சொரிந்ததேனதனெடுங்கொண்டல்வாய்விண்டமுன்னீர்
காடுடைப்பீலியுங்கடலுடைப்பண்டமுங்கலந்துந்தி
யோடுடைக்காவிரிவடகரையடைகுரங்காடுதுறை
பீடுடைச்சடைமுடியடிகளாரிடமெனப்பேணினரே. (டு)

கோலமாமலரொடுதூபமுஞ்சாந்தமுங்கொண்டுபோற்றி
வாலியார்வழிபடப்பொருந்தினர்திருந்துமாங்கனிகளுந்தி
யானுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறை
நீலமாமணிமிடற்றடிகணினையல்வினைகள்வீடே. (ஊ - எ)

நீலமாமணிநிரத்தரக்கனையிருபதுகரத்தோடொல்க
வாலினுற்கட்டியவாலியார்வழிபடமன்னுகோயி
லேலமோடிலையிலவங்கமேயிஞ்சியேமஞ்சளுந்தி
யாலியாவருபுனல்வடகரையடைகுரங்காடுதுறையே. (அ)

பொருந்திறற்பெருங்கைமாவுரித்துமையஞ்சவேயொருங்குமோக்கிப்
பெருந்திறத்தனங்கனையருக்கமாவிழித்தபெருமைபோலும்
வருந்திறற்காவிரிவடகரையடைகுரங்காடுதுறை
யருந்திறத்திருவையல்லல்கண்டோங்கியவடிகளாரே. (கூ)

கட்டமண்டேரருங்கடுக்கடின்கழுக்களுங்கசிவொன்றில்லாப்
பிட்டர்தம்மறவுரைகொள்ளலும்பெருவரைப்பண்டமுந்தி
யெட்டுமாகாவிரிவடகரையடைகுரங்காடுதுறைச்
சிட்டனூரடிதொழச்சிவகதிபெறுவதுதிண்ணமாமே. (கo)

தாழிளங்காவிரிவடகரையடைகுரங்காடுதுறைப்
போழிளமதிபொதிபுரிதருசடைமுடிப்புண்ணியனைக்
காழியானருமறைஞானசம்பந்தனகருதுபாடல்
கோழையாவழைப்பினுங்கூடுவார்நீடுவானுலகினூடே. திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-குலேவனங்குஞ்சாதர்-தேவியார்-சடைமுடியம்மை.

EFEO_TVG_149-248 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருநெல்வேலி - பண் - சாதாரி

திருச்சிற்றம்பலம்.

மருந்தவைமந்திரமுமைகன் னெறியவைமற்றுமெல்லா
மருந்துயர்கெடுமவர்நாமமேசிந்தைசெய்தன்னெஞ்சமே
பொருந்துதண்புறவினிற்கொன்றைபொன்சொரிதரத்துன்றுபைம்பூஞ்
செருந்திசெம்பொன்மலர்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (க)

என்றுமோரியலபினொனிலைவரியவரைதேறிச்
சென்றுதாஞ்செடிச்சியர்மனைதொறும்பலிகொருமியல்பதுவே
துன்றுதண்பொழிலுழைந்தெருஷியகேதகைப்போதனைந்து
தென்றல்வந்துலவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (உ)

பொறிவளரரவமும்பொழிலமதியமுங்கங்கையென்னு
நெறிபடுசுழலிசைச்சடைமிசைச்சுலவிவெண்ணீறுபூசி
நிறிபடுகடுந்தும்பிளிமொழியவர்மனங்கவர்வர்போலுஞ்
செறிபொழிறழுவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (ங)

காண்டகுமலைமகள்கதிர்நிலாமுறுவலிசெய்தருளவேயும்
பூண்டநாகம்புறங்காடரங்காநடமாடலபேணு
மீண்டுமாமாடங்கண்மாளிகைமீதெழுகொடிமதியந்
தீண்டிவந்துலவியதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (ச)

ஏனவெண்கொம்பொடுமெழிறிகழ்மத்தமுமிளவரவுங்
கூனல்வெண்பிறைதவழ்சடையினர்கொலபுலித்தோலுடையா
ரானினிலேந்துகந்தாடுவர்பாடுவரருமறைக
டேனில்வண்டமர்பொழிற்றிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (ஞ)

வெடிதருதலையினர்வேனல்வெள்ளேற்றினர்விரிசடையர்
பொடியணிமார்பினர்புலியதளாடையர்பொங்கரவர்
வடிவுடைமங்கையோர்பங்கினர்மாகறைமையல்செய்வார்
செடிபடுபொழிலணிதிருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (ரு)

அக்குலமலையினர்திரைகுலரமுடியினரடிகளன்று
தக்கனுர்வேள்வியைச்சாடியசதுரனுர்கதிர்கொள்செம்மை
புக்கதோர்புரிவினர்வரிதருவண்டுபண்முரலுஞ்சோலைத்
திக்கெலாம்புகழ்வதுந்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (எ)

முந்திமாவிலங்கலேன்றெடுத்தவன்முடிகடோணெரிதரவே
யுந்திமாமலரடியொருவிரலுகிர்நுதியாலடர்த்தார்
கந்தமார்தருபொழின்மந்திகள்பாய்தரமதத்திவலை
சிந்துபூந்துறைகமழ்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (அ)

பைங்கண்வானரவணையவனெடுபனிமலோனுங்காண
வங்கணுவருளெனவவரவர்முறைமுறையிறைஞசின்றுர்

சங்கநான்மறையவர்நிறைதரவரிவையராடல்பேணத்
திங்களுள்விழுமலருகுருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (கூ)

துவருறுவிரிதுகிலாடையர்வேடமில்சமணரென்னு
மவருறுசிறுசொலையவமெனநினையுமெமண்ணலார்தாங்
கவருறுகொடிமல்குமாளிகைச்சூளிகையமில்களாலத்
திவருறுமதிதவழ்திருநெல்வேலியுறைசெல்வர்தாமே. (கo)

பெருந்தண்மாமலர்மிசையயனவனனையவர்பேணுகல்வித்
திருந்துமாமறையவர்திருநெல்வேலியுறைசெலவர்தம்மைப்
பொருந்துதீர்த்தடமல்குபுகலியுண்ஞானசம்பந்தன்சொனன
வருந்தமிழ்மாலைகள்பாடியாடக்கெடுமருவினையே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஅம்பர்மாகாளம் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

படியுளார்விடையினர்பாய்புலித்தோலினர்பாவநாசர்
பொடிகொண்மாமேனியர்பூதமார்படையினர்பூணதூலர்
கடிகொண்மாமலரிடுமடியினர்பிடிநடைமங்கையோடு
மடிகளாரருள்புரிந்திருப்பிடமம்பர்மாகாளந்தானே. (க)

கையின்மாமழுவினர்கடுவிடமுண்டவெங்காளகண்டர்
செய்யமாமேனியரூனமாருடைதலைப்பலிதிரிவார்
வையமார்பொதுவினின்மறையவர்தொழுதெழுகடமதாடு
மையன்மாதேவியோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (உ)

பரவினவடியவர்படுதுயர்கெடுப்பவர்பரிவிலார்பாற்
கரவினர்கனலனவருவினர்படுதலைப்பலிகொடேகு
மிரவினர்பகலெரிகானிடையாடியுவேடர்பூணு
மரவினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே (ங)

நீற்றினர்நீண்டவார்சடையினர்படையினர்நிமலர்வெள்ளை
யேற்றினரெரிபுரிகரத்தினர்புரத்துளாருயிரைவவ்வுங்
கூற்றினர்கொடியிடைமுனிவுறகனிவருகுலவுகங்கை
யாற்றினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (ச)

புறத்தினரகத்துளார்போற்றிநின்றமூதெழுமன்பர்சிந்தைத்
திறத்தினரறிவிலாச்செதுமதித்தக்கன்றன்வேள்விசெற்ற
மறத்தினர்மாதவர்நாலவருக்காலின்கீழருள்புரிந்த
வறத்தினரரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (ஞ)

பழகமாமலர்பறித்திண்டைகொண்டிறைஞ்சுவார்பாற்செறிந்த
குழகனுர்குணம்புகழ்ந்தேத்துவாரவர்பலர்கூடநின்ற

EFEO_TVG_149-249 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கழகனுர்கரியுரித்தாடுகங்காளர்நங்காளியேத்து
மழகனுரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (கூ)

சங்கவார்குழையினர்தழலனவுருவினர்தமதருளே
யெங்குமாயிருந்தவரருந்தவமுனிவருக்களித்துகந்தார்
பொங்குமாபுனலபரந்தரிசிலின்வடகரைதிருத்தம்பேணி
யங்கமாமறைதுவாரிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (எ)

பொருசிலைமதனனப்பொடிபடவிழித்தவர்பொழிலிலங்கைக்
குரிசிலைக்குலவரைக்கீழ்முடர்த்தவர்கோயில்கூழிற்
பெருசிலைகலமணிபீலியோடேலமும்பெருகுதுந்து
மரிசிலின்வடகரையழகமரம்பர்மாகாளந்தானே. (அ)

வரியராவதன்மிசைத்துயின்றவன்முனுமாமலருளாலு
மெரியராவணிகழலேத்தவொண்ணுவகையுயர்ந்துபின்னும்
பிரியராமடியவர்க்கணியராய்ப்பணிவிலாதவருக்கென்று
மரியராயரிவையோடிருப்பிடமம்பர்மாகாளந்தானே. (ஈ)

சாக்கியக்கயவர்வன்றலைபறிக்கையரும்பொய்யினுரை
லாக்கியமொழியவைபிழையவையாதலில்வழிபடுவீர்
வீக்கியவரவுடைக்கச்சையர்நச்சையானவர்கட்கெல்லா
மாக்கியவரனுறையம்பர்மாகாளமேயடைமினீரே. (கo)

செம்பொன்மாமணிகொழித்தெழுதிரைவருபுனலரிசில்சூழ்ந்த
வம்பர்மாகாளமேகோயிலாவணங்கினைடிருந்தகோனைக்
* கம்பினுர்நெடுமதிற்காழியுண்ஞானசம்பந்தன்சொன்ன
நம்பிநாண்மொழிபவர்க்கில்லையாம்வினைநலம்பெறுவர்தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவெங்குரு - திருமுக்கால் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

விண்ணவர்தொழுதெழுவெங்குருமேவிய, சுண்ணவெண்பொடியணிவீரே
சுண்ணவெண்பொடியணிவீருமதொழுகழ, லெண்ணவல்லாரிடரிலரே. (க)

வேதியர்தொழுதெழுவெங்குருமேவிய, வாதியவருமறையீரே
யாதியவருமறையீருமையலர்கொடு, ஓதியருணர்வுடையீரே. (உ)

விளங்குதண்பொழிலணிவெங்குருமேவிய, விளம்பிறையணிசடையீரே
யிளம்பிறையணிசடையீருமதிணையடி, யுளங்கொளவுறுபிணியிலரே. (ங)

விண்டலர்பொழிலணிவெங்குருமேவிய, வண்டமர்வளர்சடையீரே
வண்டமர்வளர்சடையீருமைவாழ்த்துமத், தொண்டர்கடுயர்பிணியிலரே. (ச)

மிக்கவர்தொழுதெழுவெங்குருமேவிய, வக்கினேடரவசைத்தீரே
யக்கினேடரவசைத்தீருமதடியிணை, தக்கவருறுவதுதவமே. (ஞ)

* கம்பினுர்நெடுமதில் - எனபது— ஆகாயம் பின்னிடும்படி மேலோங்கியமதி லெனப் பொருள்படுகின்றது. கம் - எ - து—ஆகாயம்.

வெக்தவெண்பொடியணிவெங்குருமேவிய, வந்தமில்பெருமையினீரே
யந்தமில்பெருமையினீருமையலர்கொடு, சிந்தைசெய்வோர்வினைசிதைவே.

விழமல்குபொழிலணிவெங்குருமேவிய, வழன்மல்குமங்கையினீரே
யழன்மல்குமங்கையினீருமையலர்கொடு, தொழவல்லல்கெடுவது துணிவே.

வித்தகமறையவர்வெங்குருமேவிய, மத்தகன்மலர்புனைவீரே
மத்தகன்மலர்புனைவீருமதடிதொழுஞ், சித்தமுடையவர்திருவே. (அ)

மேலவர்தொழுதெழுவெங்குருமேவிய, வாலகன்மணிமிடற்றீரே
யாலகன்மணிமிடற்றீருமதடிதொழுஞ், சீலமுடையவர்திருவே. (கூ)

விரைமல்குபொழிலணிவெங்குருமேவிய, வரைமல்குபுலியதளீரே
யரைமல்குபுலியதளீருமதடியிணை, யுரைமல்குபுகழவருயர்வே. (கo)

திருச்சிற்றம்பலம்.

திருஇன்னம்பர் - திருமுக்கால் - பண் - சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

எண்டிசைக்கும்புகழின்னம்பர்மேவிய, வண்டிசைக்குஞ்சடையீரே [தோ.
வண்டிசைக்குஞ்சடையீருமைவாழ்த்துவார், தொண்டிசைக்குந்தொழிலோ

யாழ்நரம்பின்னிசையின்னம்பர்மேவிய, தாழ்தருசடைமுடியீரே
தாழ்தருசடைமுடியீருமைசார்பவ, ராழ்துயரருவினையிலரே. (உ)

இளமதிறுதலியோடின்னம்பர்மேவிய, வளமதிவளர்சடையீரே
வளமதிவளர்சடையீருமைவாழ்த்துவா, ருளமதிமிகவுடையோரே. (ங)

இடிகுரலிசைமுரலின்னம்பர்மேவிய, கடிகமழ்சடைமுடியீரே
கடிகமழ்சடைமுடியீருமகழிருமு, மடியவரருவினையிலரே. (ச)

இமையவர்தொழுதெழுமின்னம்பர்மேவிய, உமையொருகூறுடையீரே
யுமையொருகூறுடையீருமையுள்குவர், ரமைகிலராகிலரன்பே. (ஞ)

எண்ணரும்புகழுடையின்னம்பர்மேவிய, தண்ணருஞ்சடைமுடியீரே
தண்ணருஞ்சடைமுடியீருமைசார்பவர், விண்ணவரடைவுடையோரே. (சு)

எழிறிகழும்பொழிலின்னம்பர்மேவிய, நிழறிகழ்மேனியினீரே
நிழறிகழ்மேனியினீருமைநினைபவர், குழறியகொடுவினையிலரே. (எ)

ஏத்தரும்புகழனியின்னம்பர்மேவிய, தூர்த்தனைத்தொலைவுசெய்தீரே [தோ.
தூர்த்தனைத்தொலைவுசெய்தீருமைத்தொழுமவர், கூர்த்தநற்குணமுடையோ

இயலுலோர்தொழுதெழுமின்னம்பர்மேவிய, வயனுமாலறிவரியீரே
யயனுமாலறிவரியீருமதடிதொழு, மயலுளார்மறுபிறப்பிலரே. (கூ)

ஏரமர்பொழிலணியின்னம்பர்மேவிய, தேரமண்சிதைவுசெய்தீரே
தேரமண்சிதைவுசெய்தீருமைச்சேர்பவ, ராழ்துயரருவினையிலரே. (கo)

EFEO_TVG_149-250 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ஏடமர்பொழிலணியின்னம்பரீசனே, நாடமர்ஞானசம்பந்த
னீடுமர்ஞானசம்பந்தனநற்றமிழ், பாடவல்லார்பழியிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது
சுவாமிபெயர்-எழுத்தறிந்தவீசுவரர்-தேவியார்-கொந்தார்பூங்குழலம்மை.

திருநெல்வெண்ணெய்-திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

நல்வெணெவிழுதுபெய்தாடுதிர்நாடொறு, நெல்வெணெமேவியநீரே
நெல்வெணெமேவியநீருமைநாடொறுஞ், சொல்வணமிடுவதுசொல்லே. (க)

நிச்சலுமடியவர்தொழுதெழுநெல்வெணெக், கச்சினவரவசைத்தீரே
கச்சினவரவசைத்தீருமைக்காண்பவ, ரச்சமோடருவினையிலரே. (உ)

நிரைவிரிதொல்புகழ்நெல்வெணெமேவிய, வரைவிரிதோவணத்தீரே
யரைவிரிதோவணத்தீருமையலர்கொடு, வரைவிரிப்போருயர்ந்தோரே. (கூ)

நீர்மல்குதொல்புகழ்நெல்வெணெமேவிய, வூர்மல்கியுறையவல்லீரே
யூர்மல்கியுறையவல்லீருமையுள்குதல், பார்மல்குபுகழவர்பண்பே. (ச)

நீடிளம்பொழிலணிநெல்வெணெமேவிய, வாடிளம்பரப்பசைத்தீரே
யாடிளம்பாப்பசைத்தீருமையன்பொடு, பாடுளமுடையவர்பண்பே. (ஞ)

நெற்றியோர்கண்ணுடைநெல்வெணெமேவிய, பெற்றிகொள்பிறைநுதலீரே
பெற்றிகொள்பிறைநுதலீருமைப்பேணுதல், கற்றறிவோர்கடங்கடனே.

நிறையவர்தொழுதெழுநெல்வெணெமேவிய, கறையணிமிடறுடையீரே
கறையணிமிடறுடையீருமைக்காண்பவ, ருறைவதுமும்மடிக்கீழே. (எ)

நெருக்கியபொழிலணிநெல்வெணெமேவியன், நரக்கனையசைவுசெய்தீரே
யரக்கனையசைவுசெய்தீருமையன்புசெய், திருக்கவல்லாரிடரிலரே. (அ)

நிரைவிரிசடைமுடிநெல்வெணெமேவியன், நிருவாயிடர்கள்செய்தீரே
யிருவாயிடர்கள்செய்தீருமையிசைவொடு, பரவவல்லார்பழியிலரே. (கூ)

நீக்கியபுனலணிநெல்வெணெமேவிய, சாக்கியச்சமண்கெடுத்தீரே
சாக்கியச்சமண்கெடுத்தீருமைச்சார்வது, பாக்கியமுடையவர்பண்பே. (கஅ)

நிலமல்குதொல்புகழ்நெல்வெணெயீசனை, நலமல்குஞானசம்பந்த
னனமல்குஞானசம்பந்தனசெந்தமிழ், சொலமல்குவார்துயரிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சுடுகாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-வெண்ணெயப்பர்-தேவியார்-நீலமார்க்கண்ணம்மை.

திருச்சிறுகுடி-திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

நிடமலிமகிலணிசிறுகுடிமேவிய, படமலியரவுடையீரே
படமலியரவுடையீருமைப்பணிபவ, ரடைவதுமமருலகதுவே. (க)

சிற்றிடையுடன்மகிழ்சிறுகுடிமேவிய, சுற்றியசடைமுடியீரே
சுற்றியசடைமுடியீருமதொழுகழ, லுற்றவருறுபிணியிலரே. (உ)

தெள்ளியபுனலணிசிறுகுடிமேவிய, துள்ளியமானுடையீரே
துள்ளியமானுடையீருமதொழுகழ. லுள்ளுதல்செயநலமுறுமே. (கூ)

செங்நெலவயலணிசிறுகுடிமேவிய, வொன்னலர்புரமெரித்தீரே
யொன்னலர்புரமெரித்தீருமையுள்குவார், சொன்னலமுடையவர்தொண்டே.

செற்றினின்மலிபுனற்சிறுகுடிமேவிய, பெற்றிகொள்பிறைமுடியீரே
பெற்றிகொள்பிறைமுடியீருமைப்பேணினஞ், சற்றவரருவினையிலரே. (ஞ)

செங்கயல்புனலணிசிறுகுடிமேவிய, மங்கையையிடமுடையீரே
மங்கையையிடமுடையீருமைவாழ்த்துவார், சங்கையதிலர்நலர்தவமே. (சு)

செறிபொழிறழுவியசிறுகுடிமேவிய, வெறிகமழ்சடைமுடியீரே [தோ.
வெறிகமழ்சடைமுடியீருமைவிரும்பிமெய்ந், நெறியுணர்வோருணர்ந்தோ

திசையவர்தொழுதெழுசிறுகுடிமேவிய, தசமுகனுரநெரித்தீரே
தசமுகனுரநெரித்தீருமைச்சார்பவர், வசையறுமதுவழிபாடே. (அ)

செருவரையலர்சிறுகுடிமேவிய, விருவரையசைவுசெய்தீரே
விருவரையசைவுசெய்தீருமையேத்துவா, ரருவினையொடுதுயரிலரே. (கூ)

செய்த்தலைபுனலணிசிறுகுடிமேவிய, புத்தரோடமண்புறத்தீரே
புத்தரோடமண்புறத்தீருமைப்போற்றுதல், பத்தர்கடம்முடைப்பரிசே.

தேனமர்பொழிலணிசிறுகுடிமேவிய, மானமர்காமுடையீரே
மானமர்கரமுடையீருமைவாழ்த்திய, ஞானசம்பந்தனதமிழே (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-மங்களேசுவரர்-தேவியார்-மங்களநாயகியம்மை.

திருவீழிமிழலை-திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

வெண்மதிதவழ்மதின்மிழலையுளீர்சடை, யெண்மதியணியுடையீரே
யெண்மதியணியுடையீருமையுணர்பவர், கண்மதிமிகுவதுகடனே. (க)

விதிவழிமறையவர்மிழலையுளீர்நடஞ், சதிவழிவருவதோர்சதிரே
சதிவழிவருவதோர்சதியுடையீருமை, யதிருணர்புகழ்வதுமழகே. (உ)

விளைமலிபொழிலணிமிழலையுளீரொரு, வரைமிசையுறைவதும்வலதே
வரைமிசையுறைவதோர்வலதுடையீருமை, யுரைசெயுமவையமறியொலியே.

விட்டெழில்பெறுபுகழ்மிழலையுளீர்கையி, லிட்டெழில்பெறுகிறதெரியே
யிட்டெழில்பெறுகிறதெரியுடையீர்புர, மட்டதுவரைசிலையாலே. (ச)

வேனிகர்க்கண்ணியர்மிழலையுளீர்நல, பானிகருருவுடையீரே
பானிகருருவுடையீருமதுடனுமை, தான்மிதவுறைவதுதவமே. (ஞ)

விரைமலிபொழிலணிமிழலையுளீர்சென்னி, நிரையுறவணிவதுகெறியே
நிரையுறவணிவதோர்கெறியுடையீரும, தரையுறவணிவனவரவே. (சு)

விசையுறுபுனல்வயன்மிழலையுளீரர, வசைவுறவணிவுடையீரே
யசைவுறவணிவுடையீருமையணிபவர், நசையுறுநாவினர்தாமே. (எ)

விலங்கலொண்மதிலணிமிழலையுளீரன்றல், இலங்கைமனிடர்கெடுத்தீரே
யிலங்கைமனிடர்கெடுத்தீருமையேத்துவார், புலன்களைமுனிவதுபொருளே.

வெற்பமர்பொழிலணிமிழலையுளிருமை, யற்புதனயனறியானே
யற்புதனயனறியாவகைகின்றவ, னற்பதமறிவதுநயமே. (கூ)

வித்தகமறையவர்மிழலையுளீரன்று, புத்தரோடமணழித்தீரே
புத்தரோடமணழித்திருமைப்போற்றுவார், பத்திசெய்மனமுடையவரே. (கஅ)

விண்பயில்பொழிலணிமிழலையுளீரனேச், சண்பையுண்ஞானசம்பந்தன் [வே.
சண்பையுண்ஞானசம்பந்தனதமிழிவை, பொண்பொருளுணர்வதுமுணர்

திருச்சிற்றம்பலம்.

திருமுதுகுன்றம்-திருமுக்கால்-பண்-சாதாரி.

திருச்சிற்றம்பலம்.

முரைசதிர்ந்தெழுதருமுதுகுன்றமேவிய, பரசமர்படையுடையீரே
பரசமர்படையுடையீருமைப்பரவுவா, ரரைசர்களுலகிலாவாரே. (க)

மொய்குழலாளொடுமுதுகுன்றமேவிய, பையரவம்மசைத்தீரே
பையரவம்மசைத்திருமைபபாடுவார், நைவிலர்நாடொறுநலமே. (உ)

முழவமர்பொழிலணிமுதுகுன்றமேவிய, மழவிடையதுவுடையீரே
மழவிடையதுவுடையிருமைவாழ்த்துவார், பழியொடுபகையிலர்தாமே. (கூ)

முருகமர்பொழிலணிமுதுகுன்றமேவிய, வுருவமர்சடைமுடியீரே
யுருவமர்சடைமுடியிருமையோதுவார், திருவொடுதேசினர்தாமே.

மூத்திருமுயர்முதுகுன்றமேவிய, பத்துமுடியடர்த்தீரே
பத்துமுடியடர்த்திருமைப்பாடுவார், சித்தநல்லவ்வடியாரே. (அ)

முயன்றவரருள்பெறுமுதுகுன்றமேவியன், றியன்றவரறிவரியீரே
யியன்றவரறிவரியிருமையேத்துவார், பயன்றலைநிற்பவர்தாமே. (கூ)

மொட்டலர்பொழிலணிமுதுகுன்றமேவிய, கட்டமண்டேரைக்காய்ந்தீரே
கட்டமண்டேரைக்காய்ந்திருமைக்கருதுவார், சிட்டர்கள்சீர்பெறுவாரே.

மூடியசோலைசூழ்முதுகுன்றத்தினை, நாடியஞானசம்பந்த
னடியஞானசம்பந்தனசெந்தமிழ், பாடியவவர்பழியிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருத்தோணிபுரம்- பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கரும்பமர்வில்லியைக்காய்ந்துகாதற்காரிகைமாட்டருளி
யரும்பமர்கொங்கையோர்பான்மகிழ்ந்தவற்புதஞ்செப்பரிதாம்

பெரும்பகலேவந்தென்பெண்மைகொண்டுபேர்ந்தவர்சேர்ந்தவிடஞ்
சுரும்பமர்சோலைகள்சூழ்ந்தசெம்மைத்தோணிபுரந்தானே (சு)

கொங்கியல்பூங்குழற்கொவ்வைச்செவ்வாய்க்கோமளமாதுமையாள்
பங்கியலுந்திருமேனியெங்கும்பாலவெள்ளீநீறணிந்து
சங்கியல்வெள்வளைசோரவந்தென்சாயல்கொண்டார்தமதூர்
துங்கியன்மாளிகைசூழ்ந்தசெம்மைத்தோணிபுரந்தானே. (உ)

மத்தக்களிற்றுரிபோர்க்கக்கண்டுமாதுமைபேதுறலுஞ்
சித்தந்தெளியநின்றுடியேதூர்த்தவண்ணர்சில்பலிக்கென்
றெத்தவடிவந்தென்னுள்ளங்கொண்டாவொருவர்க்கிடம்போலுந்
துத்தநல்லின்விசைவண்டுபாடுந்தோணிபுரந்தானே. (கூ-சு-டு-சு-எ)

வள்ளலிருந்தமலையதனைவலஞ்செய்தல்வாய்மையென
வுள்ளங்கொள்ளாதுகோதித்தெழுந்தன்றெடுத்தோளுரகெரிய
மெள்ளவிரல்வைத்தெனுள்ளங்கொண்டார்மேவுமிடம்போலுந்
துள்ளொலிவெள்ளத்தின்மேன்மிதந்தோணிபுரந்தானே. (அ)

வெல்பறவைக்கொடிமாலுமற்றைவினைமலர்மேலயனும்
பல்பறவைப்படியாயுயர்ந்தும்பன்றியதாய்ப்பணிந்துஞ்
செல்வநீண்டெஞ்சிந்தைகொண்டசெல்வரிடம்போலுந்
தொல்பாவைசுமந்தோங்குசெம்மைத்தோணிபுரந்தானே. (கூ)

குண்டிகைபீலிதட்டொடுகின்றுகோசரங்கொள்ளியரு
மண்டைகையேந்திமணங்கொள்கஞ்சியுணருமவ்வாய்மடிய
விண்டைபுனைந்தெருதேறிவந்தெனெழில்கவர்ந்தாரிடமாந்
தொண்டிசைபாடலரூத்தொன்மைத்தோணிபுரந்தானே. (கஅ)

தூமருமாளிகைமாடநீடுதோணிபுரத்திறையை
மாமறைநான்கினோடங்கமாறும்வல்லவன்வாய்மையினு
னாமருகேள்விநலந்திகழ்ஞானசம்பந்தன்சொன்ன
பாமருபாடல்கள்பத்தும்வல்லார்பார்முழுதாள்பவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திரு இராமேச்சரம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

திரிதருமாமணிநாகமாடத்திளைத்தொருபெயமுல்வாய்
நரிகதிக்கவெரியேந்தியாடுநலமேதெரிந்துணர்வா
ரெரிகதிர்மூத்தமிலங்குகானலிராமேச்சரமேய
விரிகதிர்வெண்பிறைமல்குசென்னிவிமலர்செயுஞ்செயலே. (க)

பொறிகிளர்பம்பையார்த்தயலேபுரிவோடுமைபாடத்
தெறிகிளரப்பெயர்ந்தெல்லியாடுமிறமேதெரிந்துணர்வா

EFEO_TVG_149-252 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

றெறிகிளர்வெண்டிரைவந்துபெருமிராமேச்சரமேய
மறிகிளர்மான்மழுப்புல்குகையெம்மணுளர்செயுஞ்செயலே. (உ)

அலைவளர்தண்புனல்வார்சடைமேலடக்கியொருபாக
மலைவளர்காதலிபாடவாடியமக்காவருமாட்சி
யிலைவளர்தாழைமுகிழ்விரியுமிராமேச்சரமேயார்
தலைவளர்கோலநன்மாலைசூடுந்தலைவர்செயுஞ்செயலே. (ங)

மாதெனநேரிழையோர்தடங்கண்மலையான்மகள்பாடத்
தேதெரியங்கையிலேந்தியாடுந்திறமேதெரிந்துணர்வா
ரேதமிலார்தொழுதேத்திவாழ்த்துமிராமேச்சரமேயார்
போதுவெண்டிங்கள்பைங்கொன்றைசூடும்புனிதர்செயுஞ்செயலே. (ச)

சூலமோடொண்மழுவின்றிலங்கச்சுடுகாட்டமாகக்
கோலநன்மாதுடன்பாடவாடுங்குணமேகுறித்துணர்வா
ரேலுநறும்பொழில்வண்டுபாடுமிராமேச்சரமேய
நீலமார்கண்டமுடையவெங்கணிமலர்செயுஞ்செயலே. (ஞ)

கணைபிணைவெஞ்சிலைகையிலேந்திக்காமனைக்காய்ந்தவர்தா
மிணைபிணைநோக்கிநல்லாளோடாடுமியல்பினராகிநல்ல
விணைமலர்மேலனம்வைகுகானலிராமேச்சரமேயா
ரணைபிணைபுல்குகரந்தைசூடுமடிகள்செயுஞ்செயலே. (ட)

நீரினர்புன்சடைபின்புதாழநெடுவெண்மதிசூடி
யூரினரஞ்சிருள்பாடியாடுமுவகைதெரிந்துணர்வா
ரேரினர்பைம்பொழில்வண்டுபாடுமிராமேச்சரமேய
காரினர்கொன்றைவெண்டிங்கள்சூடுங்கடவுள்செயுஞ்செயலே. (எ)

பொன்றிகழ்சுண்ணவெண்ணீறுபூசிப்புலித்தோலுடையாக
மின்றிகழ்சோதியர்பாடலாடன்மிக்கார்வருமாட்சி
யென்றுநல்லோர்கள்பரவியேத்துமிராமேச்சரமேயார்
குன்றினலன்றரக்கன்றடந்தோடடர்த்தார்கொளுங்கொள்கையே. (அ)

கோவலனன்முகனேஞ்கொணதகுழகனழகாய
மேவலனெள்ளெரியேந்தியாடுமிமையோரிறைமெய்ம்மை
யேவலனர்புகழ்ந்தேத்திவாழ்த்துமிராமேச்சரமேய
சேவலவெல்கொடியேந்துகொள்கையெம்மிறைவர்செயுஞ்செயலே. (கூ)

பின்னெடுமுன்னிடுதட்டைசாத்திப்பிரட்டேதிரிவாரும்
பொன்னெடுஞ்சீவரப்போர்வையார்கள்புறங்கூறல்கேளாதே
யின்னெடுஞ்சோலைவண்டியாழ்முரலுமிராமேச்சரமேய
பன்னெடுவெண்டலைகொண்டுழலும்பரமர்செயுஞ்செயலே. (கூ0)

தேவியைவவ்வியதென்னிலங்கையரையன்றிறல்வாட்டி
யேவியல்வெஞ்சிலையண்ணனண்ணுமிராமேச்சரத்தாரை

நாவியன்ஞானசம்பந்தனல்லமொழியானவின்றேத்தும்
பாவியன்மாலைவல்லாரவர்தம்வினையாயினபற்றறுமே. (கூக)

திருச்சிற்றம்பலம்.

பாண்டிநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர்-இராமாதேசுவரர்-தேவியார்- பர்வதவர்த்தனி— இது-மலை வளர்காதலியென்று தமிழிற்சொல்லப்படும்.

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

காம்பினைவென்றமென்மூரிபாகங்கலந்தானலந்தாங்கு
தேம்புனல்சூழ்திகழ்மாமடுவிற்றிருநாரையூர்மேய
பூம்புனல்சேர்புரிபுன்சடையான்புலியின்னரிதோன்மேற்
பாம்பினைவீக்கியபண்டரங்கன்பாதம்பணிவோமே. (க)

தீவினையாயினதீர்க்கநின்றமுன்றிருநாரையூர்மேயான்
பூவினைமேவுசடைமுடியான்புடைசூழப்பலபூத
மாவினிலேந்துகொண்டாட்டுகந்தானடங்கார்மதின்மூன்று
மேவினையெய்தழித்தான்கழலேபரவாவெழுவோமே. (உ)

மாயவன்சேயவன்வெள்ளியவன்விடஞ்சேருமைமிடற்ற
னாயவனாகியோரந்தரமும்மவனென்றுவையாகந்
தியவனீரவன்பூமியவன்றிருநாரையூர்தன்னின்
மேயவனைத்தொழுவாரவர்மேலவினையாயினவீடுமே. (ங)

தஞ்சிருளாடுவர்தூமுறுவலுளங்குமுடம்பின்ரா
யஞ்சுடராரெரியாடுவர்ழலார்விழிக்கண்ணி
னஞ்சுமிழ்நாகமணைக்கசைப்பானலனெங்குநாரையூ
ரெஞ்சிவனூர்க்கடிமைப்படுவார்க்கினியில்லையேதமே. (ச)

பொங்கிளங்கொன்றையினர்கடலில்விடமுண்டிமையோர்க
டங்களையாரிடர்நீரின்றதலைவர்சடைமேலோர்
திங்களைவைத்தனலாடலினர்திருநாரையூர்மேய
வெங்கனல்வெண்ணீறணியவல்லாரவரேவிழுமியரே. (ஞ)

பாருறுவாய்மையினர்பரவும்பரமேட்டிபைங்கொன்றைத்
தாருறுமார்புடையான்மலியன்றலைவன்மலைமகளைச்
சீருறுமாமறுகிற்சிறைவண்டறையுந்திருநாரை
யூருறையெம்மிறைவர்க்கிவையொன்றுடனொருவாவே. (ட)

கள்ளியிதலையேந்துகையர்கரிகாடர்கண்ணுதலர்
வெள்ளியகோவணவாடைதன்மேன்மிளிராடரவார்த்து
கள்ளிருணட்டமதாடுவர்நலனெங்குநாரையூ
ருள்ளியபோழ்திலெம்மேலவருவல்வினையாயினவோடுமே. (எ)

EFEO_TVG_149-253 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நாமமெனப்பலவும்முடையானலனெங்குநாரையூர்
தாமமீமெனப்பறையாழ்குழலுளார்கழல்பயில
வீமவிளக்கெரிசூழ்சுடலீயம்புமிடுகாட்டிற்
சாமமூசைக்கநின்றுவானுந்தழலாயசங்கரனே. (அ)

ஊனுடைவெண்டலைகொண்டுழல்வானெளிர்புன்சடைமேலோர்
வானிடைவெண்மதிவைத்துகந்தான்வரிவண்டியாழ்முரலத்
தேனுடைமாமலரன்னம்வைகுந்திருநாரையூர்மேய
வானிடையந்துகந்தானடியேபரவாவடைவோமே. (கூ)

தூசுபுனைதுவராடைமேவுந்தொழிலாருடம்பினிலுண்
மாசுபுனைந்துடைநீத்தவர்கண்மயனீர்மைகளாதே
தேசுடையீர்கடெளிந்தடைமின்றிருநாரையூர்தன்னிற்
பூசுபொடித்தலைவரடியாரடியேபொருத்தமே. (கo)

தண்மதிதாழ்பொழில்சூழ்புகலித்தமிழ்ஞானசம்பந்த
னெண்மதிசேர்சடையானுறையுந்திருநாரையூர்தன்மேற்
பண்மதியாற்சொன்னபாடல்பத்தும்பயின்றூர்வினைபோகி
மண்மதியாதுபோய்வான்புகுவர்வானெொதிர்கொளவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சௌந்தரேசர் - தேவியார் - திரிபுரசுந்தரியம்மை.

திருவலம்புரம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கொடியுடைமும்மதிலுருவக்குனிவெஞ்சிலைதாங்கி
யிடிபடவெய்தவமர்பிரானடியாரிசைந்தேத்தத்
துடியிடையாளையோர்பாகமாகத்துதைந்தாரிடம்போலும்
வடிவுடைமேதிவயல்படியும்வலம்புரநன்னகரே. (க)

கோத்தகல்லாடையுங்கோவணமுங்கொடுகொட்டியுங்கொண்டொருகை
தேய்த்தன்றனங்களைத்தேசழித்துத்திசையார்தொழுதேத்தக்
காய்த்தகல்லாலதன்கிழிருந்தகடவுளிடம்போலும்
வாய்த்தமுத்தீத்தொழினன்மறையோர்வலம்புரநன்னகரே. (உ)

நொய்யதோர்மான்மறிகைவிரவினுனேமெனிலேயாக்கி
மெய்யெரிமேனிவெண்ணீறுபூசிவிரிபுன்சடைதாழ
மையிருஞ்சோலைமணங்கமழவிருந்தாரிடம்போலும்
வைகலுமாமுழவம்மதிரும்வலம்புரநன்னகரே. (ங)

ஊனமராக்கையுடம்புதன்னையுணரிற்பொருளன்று
தேனமர்கொன்றையினனடிக்கேசிறுகாலையேத்துமினே

வானமரைந்துங்கொண்டாட்டுகந்தவடிகளிடம்போலும்
வானவர்நாடொறும்வந்திறைஞ்சுமவலம்புரநன்னகரே. (ச)

செற்றெறியுங்கையார்கலுழிச்செழுநீர்கோலச்செஞ்சடைமே
லற்றறியாதனலாடுநட்டமணியார்தடங்கண்ணி
பெற்றறிவாரொருதேறவல்லபெருமானிடம்போலும்
வற்றறியாப்புனல்வாய்ப்புடையவலம்புரநன்னகரே. (ஞ)

உண்ணவண்ணத்தொளிநஞ்சமுண்டுமையோடனுகிச்
சுண்ணவண்ணப்பொடிமேனிபூசிச்சுடர்ச்சோதிநின்றிலங்கப்
பண்ணவண்ணத்தனபாணிசெய்யப்பயின்றூரிடம்போலும்
வண்ணவண்ணப்பறைபாணியருவலம்புரநன்னகரே. (சு)

புரிதருபுன்சடைபொன்றயங்கப்புரிதாற்புரண்டிலங்க
விரைதருவேழத்தினீருரிதோன்மேன்மூடிவேய்
புரைதோளைதருபூந்துகிலாரணங்கையமர்ந்தாரிடம்போலும்
வரைதருதொல்புகழ்வாழ்க்கையருவலம்புரநன்னகரே. (எ)

தண்டணைதோளிருபத்தினெடுந்தலைபத்துடையானை
யொண்டணைமாதுமைதானடுங்கவொருகாலிரலூன்றி
மிண்டதுதீர்த்தருள்செய்யவல்லவிகிர்தர்க்கிடம்போலும்
வண்டணைதன்னெடிவைகும்பொழில்வலம்புரநன்னகரே. (அ)

தாருறுதாமரைமேலயனுந்தரணியளந்தானுந்
தேர்வறியாவகையாலியலித்திகைத்துத்திரிந்தேத்தப்
பேர்வறியாவகையானிமிர்ந்தபெருமானிடம்போலும்
வாருறுசோலைமணங்கமழ்வலம்புரநன்னகரே. (கூ)

காவியுநற்றுவராடையினுர்கடுநோன்புமேல்கொள்ளும்
பாவிகள்சொல்லைப்பயின்றறியாப்பழந்தொண்டருள்ளுருக
வாவியுணின்றருள்செய்யவல்லவழகரிடம்போலும்
வாவியினீர்வயல்வாய்ப்புடையவலம்புரநன்னகரே. (கo)

நல்லியனன்மறையோர்புகலித்தமிழ்ஞானசம்பந்தன்
வல்லியந்தோலுடையாடையினன்வலம்புரநன்னகரைச்
சொல்லியபாடல்கள்பத்துஞ்சொல்லவல்லவர்தொல்வினைபோய்ச்
செல்வனசேவடிசென்றணுகிச்சிவலோகஞ்சேர்வாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - வலம்புரநாதர் - தேவியார் - வடிவுடைநாயகியம்மை.

திருப்பருதியிமம் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

விண்கொண்டதூமதிசூடிநீடுவிரிபுன்சடைதாழப்
பெண்கொண்டமார்பிலெண்ணீறுபூசிப்பேணுர்பலிதேர்ந்து

EFEO_TVG_149-254 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கண்கொண்டசரயலோடோர்கவர்ந்தகள்வர்க்கிடம்போலும்
பண்கொண்டவண்டினம்பாடியாடும்பருதிநியமமே. (க)

அரவொலிவில்லொலியம்பினெலியடங்கார்புரமூன்று
நிரவவல்லார்நிமிர்புன்சடைமேனிரம்பாமதிசூடி
யிரவில்புகுந்தெனெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பரவவல்லார்வினைபாழ்படுக்கும்பருதிநியமமே. (உ)

வாண்முகவார்குழல்வாணெடுங்கண்வளைத்தோண்மாதஞ்ச
நீண்முகமாகியபைங்களிற்றின்னுரிமேனிகழ்வித்து
நாண்முகங்காட்டிநலங்கவர்ந்தநாதர்க்கிடம்போலும்
பாண்முகவண்டினம்பாடியாடும்பருதிநியமமே. (ங)

வெஞ்சுரஞ்சேர்வினையாடல்பேணிவிரிபுன்சடைதாழத்
துஞ்சிருண்மாலையுண்பகலுந்துணையார்பலிதேர்ந்து
வஞ்சுரும்பார்குழல்சோரவுள்ளங்கவர்ந்தார்க்கிடம்போலும்
பஞ்சுரம்பாடிவண்டியாழ்முரலும்பருதிநியமமே. (ச)

நீர்புல்குபுன்சடைநின்றிலங்கெநெடுவெண்மதிசூடித்
தார்புல்குமார்பில்வெண்ணீறணிந்துதலையார்பலிதேர்வா
ரேர்புல்குசாயலெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பார்புல்குதொல்புகழால்விளங்கும்பருதிநியமமே. (ஞ)

வெங்கடுங்காட்டகத்தாடல்பேணிவிரிபுன்சடைதாழத்
திங்கடிருமுடிமேல்விளங்கத்திசையார்பலிதேர்வார்
சங்கொடுசாயலெழில்கவர்ந்தசைவர்க்கிடம்போலும்
பைங்கொடிமுல்லைபடர்புறவிற்பருதிநியமமே. (சு)

பிறைவளர்செஞ்சடைபின்றயங்கப்பெரியமழுவேந்தி
மறையொலிபாடிவெண்ணீறுபூசிமனைகள்பலிதேர்வா
ரிறைவளைசோரவெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பறையொலிசங்கொலியால்விளங்கும்பருதிநியமமே. (எ)

ஆசடைவானவர்தானிவரோடடியாரமர்ந்தேத்த
மாசடையாதவெண்ணீறுபூசிமனைகள்பலிதேர்வார்
காசடைமேகலைசோரவுள்ளங்கவர்ந்தார்க்கிடம்போலும்
பாசடைத்தாமரைவைகுபொய்கைப்பருதிநியமமே. (அ)

நாடினர்காண்கிலர்நான்முகனுந்திருமானையந்தேத்தக்
கூடலராடலராகிநாளுங்குழகர்பலிதேர்வா
ரோடலர்சோரவெழில்கவர்ந்தவிறைவர்க்கிடம்போலும்
பாடலராடலராய்வணங்கும்பருதிநியமமே. (கூ)

கல்வளராடையர்கையிலுண்ணுங்கழுக்களிமுக்கான
சொல்வளமாகநினைக்கவேண்டாசுடுநீறுதுவாடி

நலவனசோரநலங்கவர்ந்தநாதர்க்கிடம்போலும்
பல்வளர்முல்லையங்கொல்லைவேலிப்பருதிநியமமே. (கூ)

பையரவம்விரிகாந்தள்விம்மும்பருதிநியமத்துத்
தையலொர்பாகமமர்ந்தவனைத்தமிழ்ஞானசம்பந்தன்
பெய்யிலிமாலைபுனைந்தபத்தும்பரவிப்புகழ்ந்தேத்த
வையுறவில்லைப்பிறப்பறுத்தலவலமுமடையாவே. (கஎ)

திருச்சிற்றம்பலம்.

சோழாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - பருதியப்பர் - தேவியார் - மங்களநாயகியம்மை.

திருக்கலிக்காமூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மடல்வனையின்மதுவிம்முசோலைவயல்சூழ்ந்தழகாருங்
கடல்வனையேர்தங்கலந்துமுத்தஞ்சொரியுங்கலிக்காமூ
ருடல்வரையின்னுயிர்வாழ்க்கையாயவொருவன்கழலேத்த
விடர்தொடராவினையானசிந்தும்மிறைவன்னருளாமே. (க)

மைவனைபோற்றினையோடுகூடிப்புடையேமலிந்தோதங்
கைவனையல்வளர்சங்கமெங்குமிருக்குங்கலிக்காமூர்
மெய்வரையான்மகள்பாகன்றன்னேவிரும்பவுடல்வாழு
மைவனையாசறுத்தாளுமென்பரதுவுஞ்சரதமே. (உ)

தூவியநீர்மலரேந்திவைபத்தவர்கடொழுதேத்தக்
காவியனேர்விழிமாதரொன்றுங்கவினர்கலிக்காமூர்
மேவியவீசனெம்பிரானெவிரும்பிவழிபட்டா
ரவியுணீங்கலனுதிமூர்த்தியமர்பெருமானே. (ங)

குன்றுகள்போற்றினையுந்தியந்தண்மனையார்தரமேறி
கன்றுடன்புல்கியாயம்மனைசூழ்கவினர்கலிக்காமூ
ரென்றுணரூழியும்வாழுமெந்தைபெருமானடியேத்தி
நின்றுணர்வாரைநினையுமில்லார்நீசர்நமன்றமரே. (ச)

வானிடைவாண்மதிமாடந்தீண்டமருங்கேகடலோதங்
கானிடைநீழலிற்கண்டல்வாழுங்கழிசூழ்கலிக்காமூ
ரானிடையைந்துகந்தாடினானெயமரர்தொழுதேத்த
நானடைவாம்வணமின்புதந்தகலமேநினைவோமே. (ஞ)

துறைவளர்கேதகைமீதுவாசஞ்சூழ்வான்மலிதென்றல்
கறைவளருங்கடலோதமென்றுங்கலிக்குங்கலிக்காமூர்
மறைவளரும்பொருளாயினானைமனத்தானினைந்தேத்த
நிறைவளரும்புகழெய்துமவாகைநினையாவினைபோமே. (சு)

EFEO_TVG_149-255 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

கோலநன் மேனியின் மாதர்மைந்தர்கொணர்மங்கிலியத்திற்
கலமும்பொய்க்கிலுந்தாம்வழுவாதியற்றுங்கலிக்காமூர்
ஞாலமுந்தீவளிஞாயிறுயநம்பன்சுழலேத்தி
யோலமிடாதவரூழியென்றுமுணர்வைத்துறந்தாரே. (எ)

ஊரரவந்தலைநீண்முடியானெலிநீருலகாண்டு
காரரவக்கடல்சூழவாழும்பதியாங்கலிக்காமூர்
தேரரவல்குலம்பேதையஞ்சத்திருந்துவரைபேர்த்தா
னீரரவம்படவைத்தபரதமுடையான்னிடமாமே. (அ)

அருவரையேந்தியமாலுமற்றையலர்மேலுறைவானு
மிருவருமஞ்சவெரியுருவாயெழுந்தான்கலிக்காமூ
ரொருவரையான்மகள்பாகன்றனனெயுணர்வாற்றொழுதேத்தத்
திருமருவுஞ்சிதைவில்லீச்செம்மைத்தேசுண்டவர்பாலே. (கூ)

மாசுபிறக்கியமேனியாருமருவுந்துவராடை
மீசுபிறக்கியமெய்யினருமறியாரவர்தோற்றங்
காசினிநீர்த்திரண்மண்டியெங்கும்வளமார்கலிக்காமூ
ரீசனெயெந்தைபிரானெயேத்திநினைவார்வினைபோமே. (கo)

ஆழியுணஞ்சமுதாரவுண்டன்றமர்க்கமுதுண்ண
ஞாழிதோறுமுணராவளித்தானுலகத்துயர்கின்ற
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னதமிழ்வார்கலிக்காமூர்
வாழியெம்மானெவணங்கியேத்தமருவாபிணிதானே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - சுந்தரேசுவரர் - தேவியார் - அழகுவனமுலையம்மை.

திருவலஞ்சுழி - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பள்ளமதாயபடர்சடைமேற்பயிலுந்திரைக்கங்கை
வெள்ளமதாரவிரும்பிநின்றவிகிர்தன்விடையேறும்
வள்ளலவலஞ்சுழிவாணனென்றுமருவினினைந்தேத்தி
யுள்ளமுருகவுணருமின்களுறுநோயடையாவே. (க)

காரணிவெள்ளமதியஞ்சூடிக்கமழ்புன்சடைதன்மேற்
பூரணிகொன்றையுந்தண்ணெருக்குந்தழையுந்நுழைவித்து
வாரணிகொங்கைகல்லாடனெடுமவலஞ்சுழிமேவியவ
ரூரணிபெய்பலிகொண்டுகந்தவகையறியோமே. (உ)

பொன்னியலுந்திருமேனிதன்மேற்புரிநூல்பொலிவித்து
மின்னியலுஞ்சடைதாழவேழுரிபோர்த்தரவாட

மன்னியமாமறையோர்கள்போற்றுமவலஞ்சுழிவாணர்தம்மே
லுன்னியசிந்தையினீங்கவல்லார்க்குயர்வாம்பிணிபோமே. (ங)

விடையொருபாலொருபால்விரும்புமெல்லியல்புல்கியதோர்
சடையொருபாலொருபாலிடங்கொடாழ்குழல்போற்றிசைப்ப
நடையொருபாலொருபாற்சிலம்புநாணும்வலஞ்சுழிசே
ரடையொருபாலடையாதசெய்யுஞ்செய்கையறியோமே. (ச)

கையமரும்மழுநாகம்வீணைகலைமான்மறியேந்தி
மெய்யமரும்பொடிப்பூசிவீசுகுழையார்தருதோடும்
பையமரும்மரவாடலாடும்படர்சடையார்க்கிடமா
மையமரும்பொழில்சூழும்வேவிவலஞ்சுழிமாகமே. (ஞ)

தண்டொடுசூலந்தழையவேந்தித்தையலொருபாகங்
கண்டிடுபெய்பலிபேணிநாணர்கரியினுரிதோலர்
வண்டிடுமொய்பொழில்சூழ்ந்தமாடவலஞ்சுழிமன்னியவர்
தொண்டொடுகூடித்துதைந்துதின்றதொடர்வைத்தொடர்வோமே. (சு)

கல்லியலும்மலைபங்கைகீங்கவளைத்துவலையாதார்
சொல்லியலும்மதின்மூன்றுஞ்செற்றசுடரானிடர்நீங்க
மல்லியலுந்திரடோளெம்மாதிவலஞ்சுழிமாகமே
புல்லியவேந்தனைப்புல்லியேத்தியிருப்பவர்புண்ணியரே. (எ)

வெஞ்சினவாளரக்கன்வரையெடுவிறலோலெடுத்தான்றோ
ளஞ்சுமோராறழிருநான்குமொன்றுமடர்த்தாரழகாய
நஞ்சிருள்கண்டத்தூரதரென்றுநஞ்சுமிடம்போலு
மஞ்சுலவும்பொழில்வண்டிண்டும்வலஞ்சுழிமாகமே. (அ)

ஏடியனுன்மூகன்சீர்கெடுமாலெனநின்றவர்க்ணர்
கூடியகூரெரியாய்நிமிர்ந்தகுழகருலகேத்த
வாடியவெண்டலைகையிலேந்திவலஞ்சுழிமேயவெம்மான்
பாடியகான்மறையாளர்செய்யுஞ்சரிதைபலபலவே. (கூ)

குண்டருமும்புத்தருங்கூறையின்றிக்குழுவாருரைதீர்த்துத்
தொண்டருந்தன்றொழிற்பேணநின்றகழலானழலாடி
வண்டமரும்பொழின்மல்குபொன்னிவலஞ்சுழிவாணனெம்மான்
பண்டொருவேள்விமுனிந்துசெற்றபரிசேபகர்வோமே. (கo)

வாழியெம்மானெனக்கெந்தைமேயவலஞ்சுழிமாகமேற்
காழியுண்ஞானசம்பந்தன்சொன்னகருத்தின்றமிழ்மாலை
யாழியிவையகத்தேத்தவல்லாரவர்க்குந்தமருக்கு
மூழியொருபேருமின்பமோர்க்கும்முருவும்முயர்வாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

EFEO_TVG_149-256 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திருஞானசம்பத்தசுவாமிகளருளிச்செய்த

திருநாரையூர் - பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

கடலிடைவெங்கடுநஞ்சமுண்டகடவுள்விடையேறி
யுடலிடையிற்பொடிப்பூசவல்லானுமையோடொருபாக
னடலிடையிற்சிலைதாங்கியெய்தவம்மானடியார்மே
னடலினைத்தொகைதீர்த்துகந்தானிடநாரையூர்தானே. (க)

விண்ணின்மின்னேர்மதித்திராசம்விரிபூமலர்க்கொன்றை
பெண்ணின்முன்னேமிகவைத்துகந்தபெருமானெரிபாடி
நண்ணியதன்னடியார்களொடும்திருநாரையூரானென்
றெண்ணுமினும்வினைபோகும்வண்ணமிறைஞ்சுநிறைவாமே. (உ)

தோடொருகாதொருகாதுசேர்த்தகுழையானிழைதோன்றும்
பீடொருகால்யிரியாதுநின்றபிறையன்மறையோதி
நாடொருகாலமுஞ்சேரநின்றதிருநாரையூரானைப்
பாடுமினீர்பழிபோகும்வண்ணம்பயிலுமூயர்வாமே (ங)

வெண்ணிலவஞ்சடைசேரவைத்துவிளங்குதலையேந்திப்
பெண்ணிலமர்ந்தொருகூறதாயபெருமானருளார்ந்த
வண்ணன்மன்னியுறைகோயிலாகுமணிநாரையூர்தன்னை
நண்ணலமர்ந்துறவாக்குமின்கண்ணுடலிலகறுமே. (ச)

வானமர்தேவளிநீர்நிலனுயிவழங்கும்பழியாகு
மூனமரின்னுயிர்தீங்குகுற்றமுறைவாற்பிறிதின்றி
நானமரும்பொருளாகிநின்றமுன்றிருநாரையூரொக்கை
கோனவனைக்குறுகக்குறுகாகொடுவல்வினைதானே. (ஞ)

கொக்கிறகுங்குளிர்சென்னிமத்தங்குலாயமலர்சூடி
யக்கடிவோடரையார்த்துகந்தவழகன்குழகாக
நக்கமருந்திருமேனியாளன்றிருநாரையூர்மேவிப்
புக்கமரும்மனத்தோர்கடம்மைப்புணருமம்புகழுனே. (சு)

ஊழியுமின்பமுங்காலமாகியுயருந்தவமாகி
யேழிசையின்பொருள்வாழும்வாழ்க்கைவினையின்புணர்ப்பாகி
நாழிகையும்பலஞாயிறுகிளர்நாரையூர்தன்னில்
வாழியர்மேதகுமைந்தர்செய்யும்வகையின்விளைவாமே. (எ)

கூசமிலாதரக்கன்வலையைக்குலுங்கவெடுத்தான்றோ
ணூசமதாகியிறவடர்த்தவிரலான்கரவாதார்
பேசவியப்பொடுபேணிநின்றபெரியோனிடம்போலுந்
தேசமுறப்புகழ்செம்மைபெற்றதிருநாரையூர்தானே. (அ)

பூமகனும்மவனப்பயந்தபுயலார்நிறத்தானு
மாமலவுந்திரிந்தேத்தக்காண்டலறிதற்கரியானூர்

பாமருவுங்குணத்தோர்களீண்டிப்பலவும்பணிசெய்யுந்
தேமருவுந்திகழ்சோலைசூழ்ந்ததிருநாரையூர்தானே. (ஞ)

வெற்றரையாகியவேடங்காட்டித்திரிவார்துவராடை
யுற்றனயோர்களுரைக்குஞ்சொல்லையுணராதெழுமின்கள்
குற்றமிலாததோர்கொள்கையெம்மான்குழகன்முழுலாரப்
பெற்றரவாட்டிவரும்பெருமான்றிருநாரையூர்சேர்வே. (கo)

பாடியலுந்திரைசூழ்புகலித்திருஞானசம்பந்தன்
சேடியலும்புகழோங்குசெம்மைத்திருநாரையூரான்மேற்
பாடியதண்டமிழ்மாலைபத்தும்பரவித்திரிந்தாக
வாடியசிந்தையினுர்க்குநீங்குமவலக்கடலுனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - நாலடிமேல்வைப்பு.

திருச்சிற்றம்பலம்.

வேதவேள்வியைநிந்தனைசெய்துழ, லாதமில்லியமனைடுதேரை
வாதில்வென்றழிக்கத்திருவுள்ளமே, பாதிமாதுடனுயபரமனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம்மாதியே. (க)

வைதிகத்தின்வழியொழுகாதவக், கைதவமுடைக்காரமண்டேரரை
யெய்திவாதுசெயத்திருவுள்ளமே, மைதிகழ்தருமாமணிகண்டனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம்மாதியே. (உ)

மறைவழக்கமிலாதமாபாவிகள், பறிதலைக்கையர்பாயுடுப்பார்களை
முறியவாதுசெயத்திருவுள்ளமே, மறியுலாங்கையின்மாமழுவாளனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம்மாதியே. (ங)

அறுத்தவங்கமராயினநீர்மையைக், கறுத்தவாழமண்கையர்கடம்மொடுஞ்
செறுத்துவாதுசெயத்திருவுள்ளமேமுறித்தவான்மதிக்கண்ணிமுதல்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம்மாதியே. (ச)

அந்தணாளர்புரியுமருமறை, சிந்தைசெய்யாவருகர்திறங்களைச்
சிந்தவாதுசெயத்திருவுள்ளமே, வெந்தநீறதணியும்விகிர்தனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம்மாதியே. (ஞ)

வேட்டுவேள்விசெயும்பொருளேவிளி, மூட்டுசித்தைமுருட்டமண்ணுண்டரை
யோட்டிவாதுசெயத்திருவுள்ளமே, காட்டிலானையுரித்தவெங்கள்வனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம்மாதியே. (சு)

அழலதோம்புமருமறையோர்திறம், விழலதென்னுமருகர்திறத்திறங்
கழலவாதுசெயத்திருவுள்ளமே, தழலிலங்குதிருவுருச்சைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னுலவாயிலுறையுமெம்மாதியே. (எ)

EFEO_TVG_149-257 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

நீற்றுமேனியராயினர்மேலுற்ற, காற்றுக்கொள்ளவுநில்லாவமணரைத்
தேற்றிவாதுசெயத்திருவுள்ளமே, யாற்றவாளரக்கர்க்குமருளினுய்
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (அ)

நீலமேனியமணர்நிறத்துநின், சீலம்வாதுசெயத்திருவுள்ளமே
மாலுநான்முகனுங்காண்பரியதோர், கோலமேனியதாகியசுன்றமே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (கூ)

அன்றுமூப்புரஞ்செற்றவழகநின், றுன்றுபொற்கமழ்பேணுவருகைத்
தென்றவாதுசெயத்திருவுள்ளமே, கன்றுசாக்கியர்காணுத்தலைவனே
ஞாலநின்புகழேமிகவேண்டுந்தென்-னலவாயிலுறையுமெம்மாதியே. (கo)

கூடலாலவாய்க்கோனிவிடைகொண்டு, வாடன்மேனியமணைவாட்டிட
மாடக்காழிச்சம்பந்தன்மதித்தவிப், பாடல்வல்லவர்பரக்கியவாளரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயமுந் - திருவானைக்காவுந் - திருமயேந்திரமுந் - திருவாரூருங் - கூடச்சதுக்கம்.

திருச்சிற்றம்பலம்.

மண்ணதுவுண்டரிமலரோன்காணு, வெண்ணவல்விரும்புமயேந்திரருங்
கண்ணதுவோங்கியகயிலையாரு, மண்ணலாரூராதியானைக்காவே. (க)

வந்துமாலயனவர்காண்பரியார், வெந்தவெண்ணீறணிமயேந்திரரு
கந்தவார்சடையுடைக்கயிலையாரு, மந்தணரூராதியானைக்காவே. (உ)

மாலயன்றேடியமயேந்திரருங், காலனையுயிர்கொண்டகயிலையாரும்
வேலையதோங்கும்வெண்ணவலாரு, மாலையாரூராதியானைக்காவே. (ங)

கருடனேயேறியயனோர்காணர், வெருள்விடையேறியமயேந்திரருங்
கருடருகண்டத்தெங்கயிலையாரு, மருளனரூராதியானைக்காவே (ச)

மதிசூதனனன்முகன்வணங்கியார், மதியதுசொல்லியமயேந்திரருங்
கதிர்மூலைபுல்கியகயிலையாரு, மதியனரூராதியானைக்காவே. (ஞ)

சக்கரம்வேண்டுமொள்ளிரமன்காணு, மிக்கவர்கயிலைமயேந்திரருங்
தக்கனைத்தலையரிதழலுருவு, ரக்கணியவராரூராதியானைக்காவே. (ட)

கண்ணனுநான்முகன்காண்பரியார், வெண்ணவல்விரும்புமயேந்திரருங்
கண்ணப்பர்க்கருள்செய்தகயிலையெங்க, ளண்ணலாரூராதியானைக்காவே. (எ)

கடல்வண்ணனன்முகன்காண்பரியார், தடவரையரக்கனைத்தலைநெரித்தார்
விடமதுவுண்டவெம்மயேந்திரரும், மடல்விடையாரூராதியானைக்காவே. (அ)

ஆதிமாலயனவர்காண்பரியார், வேதங்கடுதிசெயுமயேந்திரருங்
காதிலொருகுழையுடைக்கயிலையாரு, மாதியாரூரெந்தையானைக்காவே. (ஈ)

அறிவிலமண்புத்தரறிவுகொள்ளல, வெறியமான்கரத்தாரூர்மயேந்திரரு
மறிகடலோனயன்றேடத்தானு, மறிவரியகயிலையோனனைக்காவே. (கo)

ஏனமாலயனவர்காண்பரியார், கானமார்கயிலைமன்மயேந்திரரு
மானவாரூராதியானைக்காவை, ஞானசம்பந்தனதமிழ்சொல்லுமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பிரமபுரம் - ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

வரமதேகொளாவுரமதேசெயும்புரமெரித்தவன்பிரமநற்புரத்
தரனனுமமேபரவுவார்கள்சீர்விரவுநீள்புவியே. (க)

சேணுலாமதில்வேணுமண்ணுளோர்காணமன்றலர்வேணுநற்புரத்
தாணுவின்கழல்பேணுகின்றவராணியொத்தவரே. (உ)

அகலமார்தழைப்புகலுநான்மறைக்கிகலியோர்கள்வாழ்புகலிமாநகர்ப்
பகல்செய்வோனெதிர்ச்சகலசேகரனிகலாயகனே. (ங)

துங்கமாகரிபங்கமாவடுஞ்செங்கையானிகழ்வெங்குருத்திக
ழுங்கணனடித்தங்கையாற்றொழுதத்தங்குமோவினையே. (ச)

காணியொண்பொருட்கற்றவர்க்கேகையுடைமையோரவர்காதல்செய்யுநற்
றேணிவண்புரத்தாணியென்பவர்தூமதியினரே. (ஞ)

ஏந்தாவெதிர்வாய்ந்ததுண்ணிடைப்பூந்தணேதியாள்சேர்ந்தபங்கினன்
பூந்தாய்தொழுமாந்தர்மேனிமேற்சேர்ந்திராவினையே. (ட)

சுரபுரத்தினைத்துயர்செய்தாருகன்றுஞ்சவெஞ்சினக்காளியைத்தருஞ்
சிரபுரத்துளானென்னவல்லவர்சித்திபெற்றவரே. (எ)

உறவுமாகியற்றவர்களுக்குமானிதிகொடுத்துநீள்புவியிலங்குசீர்ப்
புறவமாநகர்க்கிறைவனேயெனத்தெறிகிலாவினையே. (அ)

பண்புசேரிலங்கைக்குராதனன்முடிகள்பத்தையுங்கெடநெரித்தவன்
சண்பையாதியைத்தொழுமவர்களைச்சாதியாவினையே. (ஈ)

ஆழியங்கையிற்கொண்டமாலய னறிவொணாததோர்வடிவுகொண்டவன்
காழிமாநகர்க்கடவுணமகற்றனற்றவமே. (கo)

விச்சையொன்றிலாச்சமணர்சாக்கியப்பிச்சர்தங்களைக்கரிசறுத்தவன்
கொச்சைமாநகர்க்கன்புசெய்பவர்குணங்கள்கூறுமினே. (கக)

கழுமலத்தினுட்கடவுள்பாதமேகருதுஞானசம்பந்தனின்றமிழ்
முழுதுமல்லவர்க்கின்பமேதருமுக்கணெம்மிறையே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

வேலினேர்தருகண்ணினாளைபங்கணங்கணன்மிழலைமாநக
ராலநீழலின்மேவினனடிக்கன்பர்துன்பிலரே. (க)

EFEO_TVG_149-258 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விளங்குனன்மறைவல்லவேதியர்மல்குசீர்வளர்மிழலையானடி
யுளங்கொள்வார்தமையுளங்கொள்வார்வினையொல்லையாசறுமே. (உ)

விசையினேடெழுபசையுநஞ்சினையசைவுசெய்தவன்மிழலைமாநக
ரிசையுமீசனைநசையின்மேவினன்மிசைசெயாவினையே. (ங)

வென்றிசேர்கொடிமூடுமாமுகின்மிழலைமாநகர்மேவிநாடொறு
நின்றவாதிதன்னடிநினைப்பவர்துன்பமொன்றிலரே. (ச)

போதகந்தனையுரிசெய்தோன்புயநேர்வரும்பொழின்மிழலைமாநக
ராதரஞ்செய்தவடிகள்பாதமலாலோர்பற்றிலமே. (ஞ)

தக்கன்வேள்வியைச்சாடினர்மணிதொக்கமாளிகைமிழலைமேவிய
நக்கனாடிதொழுவர்மேல்வினைநாடொறுங்கெடுமே. (ட)

போரணுவமுப்புரமெரித்தவன்பொழில்கள்சூழ்தருமிழலைமாநகர்ச்
சேருமீசனைச்சிக்தைசெய்பவர்தினைகெடுமே. (எ)

இரக்கமிற்முழிலாக்கனருடனெருக்கினன்மிகுமிழலையானடி
சிரக்கொள்பூவெனவொருக்கினர்புகழ்பரக்குநீள்புவியே. (அ)

துன்றுபூமகன்பன்றியானவனென்றுமோர்திலாமிழலையானடி
சென்றுபூம்புனனின்றுதூவினர்நன்றுசேர்பவரே. (கூ)

புத்தர்கைச்சமண்பித்தர்பொய்க்குவைவைத்தவித்தகன்மிழலைமாநகர்
சித்தம்வைத்தவரித்தலத்தினுண்மெய்த்தவத்தவரே. (க0)

சந்தமார்பொழின்மிழலையீசனைச்சண்பைஞானசம்பந்தன்வாய்நவில்
பந்தமார்தமிழ்பத்தும்வல்லவர்பத்தராகுவரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருப்பல்லவனீச்சரம் - ஈரடி.

திருச்சிற்றம்பலம்.

பரசுபாணியர்பாடல்லீணையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தரசுபேணிநின்முரிவர்தன்மையறிவாரார். (க)

பட்டநெற்றியர்நட்டமாடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திட்டமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (உ)

பவளமேனியர்திகழுநீற்றினர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தழகராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (ங)

பண்ணிலாயினர்பயிலுமொந்தையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தண்ணலாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (ச)

பல்லிலோட்டினர்பலிகொண்டுண்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெல்லியாட்டுகந்தாரிவர்தன்மையறிவாரார். (ஞ)

பச்சைமேனியர்பிச்சைகொள்பவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திச்சையாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (ட)

பைங்கணெற்றினர்திங்கள்சூடுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தெங்குமாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (எ)

பாதங்கைதொழுவேதமோதுவர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தாதியாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (அ)

படிகொண்மேனியர்கடிகொள்கொன்றையர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
தடிகளாயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (கூ)

பறைகொள்பாணியர்பிறைகொள்சென்னியர்பட்டினத்துறைபல்லவனீச்சரத்
திறைவராயிருப்பாரிவர்தன்மையறிவாரார். (க0)

வானமாள்வதற்கூனமொன்றிலாமறைபல்லவனீச்சரத்தானை
ஞானசம்பந்தனற்றமிழ்சொல்லவல்லவர்நல்லரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம் - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

உற்றுமைசேர்வதுமெய்யினையேயுணர்வதுதின்னருண்மெய்யினையே
கற்றவர்காய்வதுகாமனையேகனல்விழிகாய்வதுகாமனையே
யுற்றமறைப்பதுமுன்பணியேயமரர்கள்செய்வதுமுன்பணியே
பெற்றமுகந்ததுகந்தனையேபிரமபுரத்தையுகந்தனையே. (க)

சதிமிகவந்தசலந்தரனேதடிசிரநேர்கொள்சலந்தரனே
யதிரொளிசேர்திகிரிப்படையாலமர்ந்தனரும்பர்துதிப்படையான்
மதிதவழ்வெற்பதுகைச்சிலையேமருவிடமேற்பதுகைச்சிலையே
விதியினினிட்டார்விரும்பரனேவெனுபுரத்தைவிரும்பரனே. (உ)

காதமரத்திகழ்தோடினனேகானவனுய்க்கடிதோடினனே
பாதமதாற்கூற்றுதைத்தனனேபார்த்தனுடலம்புதைத்தனனே
தாதவிழ்கொன்றைதரித்தனனேசார்ந்தவினையதரித்தனனே
போதமமருமுனாப்பொருளேபுகலியமர்ந்தபரம்பொருளே. (ங)

மைத்திகழ்நஞ்சுமிழ்மாசுணமேமகிழ்ந்தரைசேர்வதுமாசுணமே
மெய்த்துடல்பூசுவர்மேன்மதியேவேதமதோதுவர்மேன்மதியே
பொய்த்தலையோடொருமத்தமதேபுரிசடைவைத்ததுமத்தமதே
விக்ருதகராகியவெங்குருவேவிரும்பியமர்ந்தனர்வெங்குருவே. (ச)

உடன்பயில்கின்றனன்மாதவனேயுறுபொறிகாய்ந்திசைமாதவனே
திடம்படமாமறைகண்டனனேதிரிபுரமேவியகண்டனனே
படங்கொளரவமைசெய்தனனேபகடுரிகொண்டனைசெய்தனனே
தொடர்ந்ததுயர்க்கொருநஞ்சிவனேதோணிபுரத்துறைநஞ்சிவனே. (ஞ)

EFEO_TVG_149-259 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

திகழ்கையதும்புகைதங்கழலேதேவர்தொழுவதுந்தங்கழலே
இகழ்பவர்தாமொருமானிடமேயிருந்தனுவோடெழின்மானிடமே
மிகவருநீர்கொளுமஞ்சடையேமின்னிகர்கின்றதுமஞ்சடையே
தகவிரதங்கொள்வர்சுந்தரதேக்கதராயுறைசுந்தரரே. (சு)

ஓர்வருகண்களிணக்கயலேயுமையவள்கண்களிணைக்கயலே
யேர்மருவுங்கழனகமதேயெழில்கொளுதாசனனகமதே
நீர்வருகொந்தளகங்கையதேநெடுஞ்சடைமேவியகங்கையதே
சேர்வருயோகதியம்பகனேசிரபுரமேயதிகம்பகனே. (எ)

ஈண்டுதியிலமாப்பினனேயிருங்கனிடந்தடியப்பினனே
தீண்டலரும்பரிசக்கரமேதிகழ்ந்தொளிசேர்வதுசக்கரமே
வேண்டிவருந்தகைத்தலியேயிகைத்தவரோடுநகைத்தலியே
பூண்டனர்சேலுமாபதியேபுறவமமர்ந்ததுமாபதியே. (அ)

நின்மணிவாயதுநீழலியேநேசமதானவர்நீழலியே
யுன்னிமகத்தெழுசங்கமதேயொளியதனெடுறுசங்கமதே
கன்னியரைக்கவருங்களனேகடல்விடமுண்டகருங்களனே
மன்னிவனைப்பதிசண்பையதேவாரிவயன்மலிசண்பையதே. (கூ)

இலங்கைபரக்கர்தமக்கிறையேயிடந்துகயிலையெடுக்கிறையே
புலன்கள்கெடவுடன்பாடினனேபொறிகள்கெடவுடன்பாடினனே
இலங்கியமேனியிராவணனேயெய்துபெயருமிராவணனே
கலந்தருள்பெற்றதுமாவசியேகாழியானடிமாவசியே. (கo)

கண்ணிகள்புண்டரிகத்தினனேகலந்திரிபுண்டரிகத்தினனே
மண்ணிகழும்பரிசேனமதேவானகமேய்வகைசேனமதே
நண்ணியடிமுடியெய்தலரோருளிர்மலிசோலியிலெய்தலரே
பண்ணியல்கொச்சைப்பசுபதியேபசுமிகவூர்வர்பசுபதியே. (கக)

பருமதின்மதுரைமன்னவையெதிரேபுகமதெழுதிலையவையெதிரே
வருநதியிடைமிசைவருகனேவசையொடுமலர்கெடவருகனே
கருதலிலிசைமுரறருமருளேகழுமலமமரிறைதருமருளே
மருவியதமிழ்விரகன்மொழியேவல்லவர்தம்மிடர்தீடமொழியே. (கஉ)

திருச்சிற்றம்பலம்.

திருவேகம்பம் - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

பாயுமால்விடைமேலொருபாகனேபாவைதன்னுருமேலொருபாகனே
தூயவானவர்வேதத்துவனியேசோதிமாலெரிவேதத்துவனியே
யாயுநன்பொருணுண்பொருளாதியேயாலநீழல்வரும்பொருளாதியே
காயவின்மதன்பட்டதுகம்பமேகண்ணுதற்பரமற்கிடங்கம்பமே. (க)

சடையணிந்ததுவெண்டலைமாலையேதம்முடம்பிலும்வெண்டலைமாலையே
படையிலங்கையிற்சூலமதென்பதேபரந்திலங்கையிற்சூலமதென்பதே

புடைபரப்பனபூதகணங்களேபோற்றிசைப்பனபூதகணங்களே
கடைகடோறுமிரப்பதுமிச்சையேகம்பமேவியிருப்பதுமிச்சையே. (உ)

வெள்ளெருக்கொடுதும்பைமிலைச்சியேவேறுமுன்செலத்தும்பைமிலைச்சியே
யள்ளூறுதுபூசுவதாகமேயானமாசுணமூசுவதாகமே
புள்ளியாடையுடுப்பதுகத்துமேபோனவூழியுடுப்பதுகத்துமே
கள்ளுலாமலர்க்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (ஊ)

முற்றலாமையணிந்தமுதல்வரேமூரியாமையணிந்தமுதல்வரே
பற்றிவாளரவாட்டும்பரிசரோபாலுநெய்யுகந்தாட்டும்பரிசரே
வற்றலோடுகலம்பலிதேர்வதேவானினோடுகலம்பலிதேர்வதே
கற்றிலாமனங்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (ச)

வேடனாகிவிசையற்கருளியேவேலனாஞ்சமிசையற்கருளியே
யாடுபாம்பனையார்த்ததுடையதேயஞ்சுபூதமுமார்த்ததுடையதே
கோடுவான்மதிக்கண்ணியழகிதேகுற்றமின்மதிக்கண்ணியழகிதே
காடுவாழ்பதியாவதுமும்மதேகம்பமாபதியாவதுமும்மதே. (டு)

இரும்புகைக்கொடிதங்கழல்கையதேயிமயமாமகடங்கழல்கையதே
யரும்புமொய்த்தமலர்ப்பொறைதாங்கியேயாழியான்றன்மலர்ப்பொறைதாங்கியே
பெரும்பகடமாடுதல்செய்துமேபேதைமார்மனம்வாடுதல்செய்துமே
கரும்புமொய்த்தெழுகம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (சு)

மூதிரமங்கைதவஞ்செய்தகாலமேமுன்புமங்கைதவஞ்செய்தகாலமே
வெதிர்களோடகில்சந்துமுருட்டியேவேழமோடகில்சந்துமுருட்டியே
யதிரவாறுவரத்தெழுவத்தொடேயானெயாடுவரத்தெழுவத்தொடே
கதிர்கொள்பூண்முலைக்கம்பமிருப்பதேகாஞ்சிமாநகர்க்கம்பமிருப்பதே. (எ)

பண்டரக்கனெடுத்தபலத்தையேபாய்ந்தரக்கனெடுத்தபலத்தையே
கொண்டரக்கியதுங்கால்விரலேயேகோளரக்கியதுங்கால்விரலேயே
யுண்டுழன்றதுமுண்டத்தலையிலேயுடுபதிக்கிடமுண்டத்தலையிலே
கண்டநஞ்சமடக்கினகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. (அ)

தூணியானசுடர்விடுசோதியேசுத்தமானசுடர்விடுசோதியே
பேணியோடுபிரமப்பறவையேபித்தனானபிரமப்பறவையே
சேணினோடுகீழுழிதிரிந்துமேசித்தமோடுகீழுழிதிரிந்துமே
காணுகின்றனருற்றதுகம்பமேகடவுணீயிடமுற்றதுகம்பமே. (கூ)

ஒருடம்பினையிருருவாகவேயுன்பொருட்டிறமிருருவாகவே
யாருமெய்தற்கரிதுபெரிதுமேயாற்றலெய்தற்கரிதுபெரிதுமே
தேரரும்மறியாதுதிகைப்பசோதித்தரும்மறியாதுதிகைப்பரே
கார்நிறத்தமணர்க்கொருகம்பமேகடவுணீயிடங்கொண்டதுகம்பமே. (கo)

கந்தமார்பெழிலசூழ்தருகம்பமேகாதல்செய்பவர்தீர்த்திடுகம்பமே
புந்திசெய்துவிரும்பிப்புகலியேபூசுரன்றன்விரும்பிப்புகலியே

EFEO_TVG_149-260 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

யந்தமில்பொருளாயினகொண்டுமேயண்ணலின்பொருளாயினகொண்டுமே
பந்தனின்னியல்பாடியபத்துமேபாடவல்லவராயினபத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

தொண்டைநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர்-ஏகாம்பரநாதர்-தேவியார் காமாக்ஷியம்மை.

திருவர்லவாய் - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

ஆலநீழலுகந்திருக்கையேயானபாடலுகந்திருக்கையே
பாலினேர்மொழியாளொருபங்கனேபாதமோதலர்சேர்புரபங்கனே
கோலநீறணிமேதகுபூதனேகோதிலார்மனமேவியபூதனே
யாலகஞ்சமுதுண்டகளத்தனேயாலவாயுறையண்டர்களத்தனே. (க)

பாதியாயுடன்கொண்டமாலையேபாம்புதார்மலர்க்கொன்றைநன்மாலையே
கோதினீறதுபூசிடுமாகனேகொண்டகற்கையின்மானிடமாகனே
நாதனுடொறுமாடுவதானேயேநாடியன்றுரிசெய்ததுமானையே
வேதநூல்பயில்கின்றதுவாயிலேவிகிர்தனூர்திருவாலவாயிலே. (உ)

காடுநீட்டுறப்பலகத்தனேகாதலானினைவார்தமக்கத்தனே
பாடுபேயொடுபூதமசிக்கவேபல்பிணத்தசைநாடியசிக்கவே
நீடுமாநடமாடவிருப்பனேநின்னடித்தொழுநாளுமிருப்பனே
யாடனீள்சடைமேவியவப்பனேயாலவாயினின்மேவியவப்பனே. (ங)

பண்டயன்றலையொன்றுமறுத்தியேபாதமோதினர்பாவமறுத்தியே
துண்டவெண்பிறைசென்னியிருத்தியேதூயவெள்ளெருதேறியிருத்தியே
கண்டுகாமனைவேவவிழித்தியேகாதலில்லவர்தம்மையிழித்தியே
பண்டகாயனேமிகுகண்டனேயாலவாயினின்மேவியகண்டனே. (ச)

சென்றுதாதையுகுத்தனன்பாலையேதியன்புசெகுத்தனன்பாலையே
வென்றிசேர்மழுக்கொண்டுமுன்காலையேவீடவெட்டிடக்கண்டுமுன்காலையே
நின்றமாணியையோடினகங்கையானிலவமல்கியுடித்தனகங்கையா
லன்றுநின்னுருவாகத்தடவியேயாலவாயரனகத்தடவியே. (ஞ)

நக்கமேகுவர்நாடுமோருமேநற்றன்மேனியின்மாசுணமூருமே
தக்கபூமனிச்சுத்தக்கருளொடேதாரமும்மத்தபாணத்கருளொடே
மிக்கதென்னவென்றேவிக்கணியையேமெல்லநல்கியதொண்டர்க்கணியையே
யக்கினரமுதுண்கலனேடுமேயாலவாயரனருமையோடுமே. (ஃ)

வெய்யவன்பல்லுகுத்தகுட்டியேவெங்கண்மாசுணங்கையகுட்டியே
பையனேயனலாடியமெய்யனேயன்பினினைவார்க்கருண்மெய்யனே
வையமுய்யவன்றுண்டகாளமேவள்ளல்கையதுமேவுகங்காளமே
யையமேற்பதுரைப்பதுவீணையேயாலவாயரன்கையதுவீணையே. (எ)

தோள்கள்பத்தொடுபத்துமயக்கியேதொக்கதேவர்செருக்கையக்கியே
வாளரக்கனிலத்துகளித்துமேவந்தமால்வரைகண்டுகளித்துமே

நீள்பொருப்பையெடுத்தவன்மத்தனேநின்விரற்றலையான்மதமத்தனே
யாளுமாறுமுறித்ததுமெய்கொலோவல்லவாயரனுய்த்ததுமெய்கொலோ. (ஙி)

பங்கயத்துளநான்முகன்மாலொடேபாதநீண்முடிநேடிடமாலொடே
துங்கமற்றழலின்னுருவாயுமேதூயபாடல்பயின்றதுவாயுமே
செங்கயற்கணினாடுபிச்சையேசென்றுகொண்டுரைசெய்வதுபிச்சையே
யங்கியைத்திகழ்விப்பதிடக்கையேயாலவாயரனர்திடக்கையே. (கூ)

தேரரோடமணர்க்குரல்காளையேதேவர்நாடொறுஞ்சேவதுகாளையே
கோரமட்டபுண்டரிகத்தையேகொண்டநீள்கமல்புண்டரிகத்தையே
நேரிலார்களழித்ததுகாகமேநீள்சடைத்திகழ்கின்றவுநாகமே
யாரமாகவுகந்ததுமென்பதேயாலவாயரனரிடமென்பதே. (கூ)

ஞானஞானிகடம்மொடுவிரகனேயேறுபல்பொருண்முத்தமிழ்விரகனே
யானகாழியுண்ஞானசம்பந்தனேயாலவாயினின்மேயசம்பந்தனே
யானவானவர்வாயிலுளத்தனேயன்பரானவர்வாயிலுளத்தனே
நானுரைத்தனசெந்தமிழ்பத்துமேவல்லவர்க்கிவைகற்றமிழ்பத்துமே. (கஃ)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - திருஇயமகம்.

திருச்சிற்றம்பலம்.

துன்றுகொன்றைநஞ்சடையதேதூயகண்டநஞ்சடையதே
கன்றின்மானிடக்கையதேகல்லின்மானிடக்கையதே
யென்றுமேறுவதிடவமேயென்னிடைப்பலியிடவமே
கின்றதும்மிழலையுள்ளுமேநீசெனச்சிறிதுமுள்ளுமே. (க)

ஓதிவாயதும்மறைகளேயுரைப்பதும்பலமறைகளே
பாதிகொண்டதும்மாதையேபணிகிற்மிகுமாதையே
காதுசேர்கனங்குழையதோகாதலார்கனங்குழையதோ
வீதிவாய்மிகுமவேதியாமிழலைமேவியவேதியர். (உ)

பாடுகின்றபண்டாரமேபத்தரன்னபண்டாரமே
நீடுகின்றதும்மத்தமேதொழுதவென்னையுன்மத்தமே
நீடுசெய்வதுந்தக்கதேநின்னடைத்திகழ்ந்தக்கதே
நாடுசேர்மிழலையூருமேநகநஞ்சமூலையூருமே. (ங)

கட்டுகின்றகழலுகமேகாய்ந்ததுமதனலுகமே
யிட்டமாவதிசைபாடலேயிசைந்ததூலினமர்பாடலே
தொட்டுவான்மூழவம்வாணனேகுலாயசிர்மிழலைவாணனே
நட்டமாடுவதுசந்தியேநானுய்ததற்கிரவுசந்தியே. (ச)

ஓவிலாதிடுங்காரணமேயுன்னுமென்னுடைக்காரணமே
யேவுசேர்வுநின்னுணையேயருள்வினின்றபொற்றுணையே
பாவியாதுரைமெய்யிலேபயின்றனின்னடிமெய்யிலே
மேவினன்விறற்கண்ணனேமிழலைமெயமுக்கண்ணனே. (ஞ)

EFEO_TVG_149-261 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

வாய்ந்தமேனியெரிவண்ணமேமகிழ்ந்துபாடுவதுவண்ணமே
கூய்ந்துவீழ்ந்தவன்காலனேகடுகடஞ்செயுங்காலனே
போந்தெம்மிடையிரவிலேயும்மிடைக்கள்ளமிரவிலே
மேய்ந்தும்மிழலையென்பதெவிரும்பியேயணிவதென்பதே (சு)

அப்பியன்றகண்ணனுமேயுமரர்கோமகனுமயனுமே
யொப்பிலின்றமரர்தருவுதேயொண்கையாலமரர்தருவுதே
மெய்ப்பயின்றவிரிருக்கையேமிழலையுருமதிருக்கையே
செப்புமின்னிருதுமேயுமேசேர்வுமக்கெருதுமேயுமே. (எ)

ஞானவக்குலம்விளக்கியேதாரகைச்செலவிளக்கியே
வானடர்த்தகயிலாயமேவுதுமேவுகயிலாயமே
தானெடுத்தவல்லரக்கனேதடமுடித்திரளரக்கனே
மேனடைச்செலவிருப்பனேமிழலைநற்பதிவிருப்பனே. (அ)

காயமிக்கதொருபன்றியேகலந்தகின்னவுருபன்றியே
யேயவிப்புவிமயங்கவேயிருவர்தாமனமயங்கவே
தூயமெய்த்திரளகண்டனேதோன்றிநின்றமணிகண்டனே
மேயவித்துயில்விலக்கணுமிழலைமேவியவிலக்கணு. (கூ)

கஞ்சியைக்குலவுகையனேகலக்கமாரமணர்கையனே
யஞ்சவாதிலருள்செய்யநீயணந்திடும்பரிசுசெய்யநீ
வஞ்சனேவரவும்வல்லையேமதித்தெனைச்சிறிதுமவ்வல்லையே
வெஞ்சலின்றிவருவித்தகாமிழலைசேரும்விறல்வித்தகா. (கo)

மேயசெஞ்சடையினப்பனேமிழலைமேவியவென்னப்பனே
யேயுமாசெயவிருப்பனேயிசைந்தலாசெயவிருப்பனே
காயவர்க்கசம்பந்தனேகாழிஞானசம்பந்தனே
வாயுரைத்ததமிழ்பத்துமேவல்லவர்க்குமிவைபத்துமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீகாழி - திருமாலைமாற்று.

திருச்சிற்றம்பலம்.

யாமாகாணியாமாமாயாழிகாமாகாணுகா
காணுகாமாகாழியாமாமாயாணிமாமாயா (க)

யாகாயாழிகாயாகாதாயாராராதாயாயா
யாயாதாராராயாதாகாயாகாழியாகாயா. (உ)

தாவாமூவாதாசாகாழிநாதாணியாமாமா
மாமாயாணிதாநாழிகாசாதாவாமூவாதா. (ங)

ணிவாவாயாகாயாழிகாவாவாணுவாராமே
மேராவாணுவாவாகாழியாகாயாவாவாணி. (ச)

யாகாலாமேயாகாழியாமேதாவிதாயாவி
லியாதாவிதாமேயாழிகாயாமேலாகாயா. (டு)

மேலேபோகாமேதேழிகாலாலேகாலாஞ்சே
யேனுலாகாலேலாகாழிதேமேகாபோலேமே. (சு)

ணியாமாணியேயாமாதாவேழிகாணிதானே
நேதாணிகாழிவேதாமாயாயேணிமாயாணி. (எ)

ணுவராவிழயாசைழியேவேகதளேரியளாயுழிகா
காழியுளாயரிளேதகவேயேழிசையாழவிராவணனே. (அ)

காலேமேலேகாணிகாழிகாலேமாலேமேபூ
பூமேலேமாலேகாழிகாணிகாலேமேலேகா. (கூ)

வேரியுமேணவகாழியொயேயேணிணிணேமடளோகரர்தே
தேரர்களோடமணேணிணேயேயேயொழிகாவணமேயுரிவே. (கo)

நேரகழாமிதயாசழிதாயேனனியேனனிளாயுழிகா
காழியுளாளினியேனினியேதாழிசயாதமிழாகரனே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுமலம் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மடமலிகொன்றைதுன்றுவாளெருக்கும்வன்னியுமத்தமுஞ்சடைமேற்
படலொலிதிரைகண்மோதியகங்கைத்தலைவனர்தம்மிடம்பகரில்
விடலொலிபரந்தவெண்டிரைமுத்தமிப்பிகள்கொணர்ந்துவெள்ளருவி
கடலொலியோதமோதவந்தலைக்குங்கழுமலநகரெனலாமே. (க)

மின்னியவரவும்வெறிமலர்பலவும்விரும்பியதிங்களுந்தங்கு
சென்னியதுடையான்றேவர்தம்பெருமான்செயிழையொடுமுறைவிடமும்
பொன்னியன்மணிபுமுரிகரிமருப்புஞ்சந்தமுமுந்துவன்றிரைகள்
கன்னியராடக்கடலொலிமலியுங்கழுமலநகரெனலாமே. (உ)

சிருறுதொண்டர்கொண்டடிபோற்றச்செழுமலர்புனலோடுதூபந்
தாருறுகொன்றைதம்முடிவைத்தசைவனூர்தங்கிடமெங்கு
மூருறுபதிகளுலகுடன்பொங்கியொலிபுனல்கொளவுடன்மிதந்த
காருறுசெம்மைநன்மையான்மிக்ககழுமலநகரெனலாமே. (ங)

மண்ணினுரத்தவானுளார்பரசவந்தரத்தமர்கள்போற்றப்
பண்ணினுலெல்லாம்பலபலவேடமுடையவர்பயில்விடமெங்கு
மெண்ணினுன்மிக்காரியல்பினுனிறைந்தாரேந்திழையவரொடுமைந்தர்
கண்ணினுலின்பங்கண்டொளிபரக்குங்கழுமலநகரெனலாமே. (ச)

சுருதியான்றலையுநாமகண்மூக்குஞ்சுடரவன்கரமுமுன்னியங்கு
பருதியான்பல்லுமிறுத்தவர்க்கருளும்பரமனூர்பயின்றினிதிருக்கை

EFEO_TVG_149-262 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

விருதிநான் மறையுமங்கமோராறும்வேள்வியும்வேட்டவர்ஞானங்
கருதினருளகிற்கருத்துடையார்சேர்கழுமலநகரெனலாமே. (ரு)

புற்றில்வாளரவமாமையும்பூண்டபுனிதனர்பனிமலர்க்கொன்றை
பற்றிவான்மதியஞ்சடையிடைவைத்தபடிறனர்பயின்றினிதிருக்கை
செற்றுவன்றிரைகளொன்றியொன்றேடிச்செயிர்த்துவண்சங்கொடுவங்கங்
கற்றுறைவளைகள்கரைக்குவத்துரைக்குங்கழுமலநகரெனலாமே. (சு)

அலைபுனற்கங்கைதங்கியசடையாரடனெடுமதிலொருமூன்றுங்
கொலையிடைச்சென்றீவெந்தழற்கண்டகுழகனர்கோயிலதென்பர்
மலையின்மிக்குயர்ந்தமரக்கலஞ்சரக்குமற்றுமற்றிடையிடையெங்குங்
கலைகளித்தேறிக்கானலில்வாழுங்கழுமலநகரெனலாமே. (எ)

ஒருக்கமுன்னினையாத்தக்கன்றன்வேள்வியுடைதரவழியபடையா
ரரக்கனைவரையாலாற்றலன்றழித்தவழகனூரமர்ந்துறைகோயில்
பரக்குமண்புகழார்பழியவைபார்த்துப்பலபலவறங்களேபயிற்றிக்
கரக்குமாறறியாவண்மையால்வாழுங்கழுமலநகரெனலாமே. (அ)

அருவரைபொருத்தவாற்றலினனுமணிகிளர்தாமையாலு
மிருவருமேத்தவெரியுருவானவிறைவனருள்றவிடம்வினவி
லொருவரிவ்வுலகில்வாழ்கிலாவண்ணமொலிபுனல்வெள்ளமுன்பரப்பக்
கருவரைசூழ்ந்தகடலிடைமிதக்குங்கழுமலநகரெனலாமே. (கூ)

உரிந்துயருருவிலுடைதவிர்ந்தாருமத்துகில்போர்த்துழல்வாருந்
தெரிந்துபுன்மொழிகள்செப்பினகேளாச்செம்மையார்நன்மையாலுறைவாங்
குருந்துயர்கோங்குகொடிவிடுமுல்லைமல்லிகைசெண்பகம்வேங்கை
கருந்தடங்கண்ணின்மங்கைமார்கொய்யுங்கழுமலநகரெனலாமே. (கo)

கானலங்கழனியோதம்வந்துலவுங்கழுமலநகருறைவார்மேல்
ஞானசம்பந்தனற்றமிழ்மாலைநன்மையாலுரைசெய்தநிவில்வா
ஞானசம்பந்தத்துறுபினிநீங்கியுள்ளமுமொருவழிக்கொண்டு
வானிடைவாழ்வாமண்மிசைப்பிறவார்மற்றிதற்காணையுநமதே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவீழிமிழலை - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

புள்ளித்தோலாடைபூண்பதுநாகம்பூசுசாந்தம்பொடிநீறு
கொள்ளித்தீவிளக்குக்கூளிகள்கூட்டங்காளியைக்குணஞ்செய்கூத்தடையோ
னள்ளற்காராமையபகடுவான்மதியமேய்க்கமுட்டாழைகளானை
வெள்ளைக்கொம்பினும்வினிபொழிலவீழிமிழலையானெனவினைகெடுமே. (க)

இசைந்தவாறடியாரிடுதுவல்வரனேரிழைகுசந்தனத்திளங்கமலப்
பசும்பொன்வாசிகைமேம்பரப்புவாய்கரப்பாய்பதத்திசெய்யதவர்பக்க

லசும்புபாய்கழனியலர்கயன்முதலோடுதரிந்தெடுத்தவான்சும்மை
விசும்புதூர்ப்பனபோல்விம்மியவீழிமிழலையானெனவினைகெடுமே. (உ)

நிருத்தனுறங்கனீற்றனுன்மறையனிலமார்மிடற்றனெற்மிக்க
னெருத்தன்மற்றெல்லாவுயிர்கட்குமுயிராயுளனிலன்கேடிலியுமைகோன்
றிருத்தமாய்காருமாடுநீர்ப்பொய்கைசிறியவரறிவினின்மிக்க
விருத்தனையடிவீழ்ந்திடம்புகும்வீழிமிழலையானெனவினைகெடுமே. (ஊ)

தாங்கருங்காலந்தவிரவந்திருவர்தம்மொடுங்கூடினரங்கம்
பரங்கினற்பிரித்துப்பண்டுபோலெல்லாம்பண்ணியகண்ணுதற்பரமர்
தேங்கொள்பூங்கமுகுதெங்கிளங்கொடிமாச்சென்பகம்வண்பலாவிலுப்பை
வேங்கைபூமகிழால்வெயிற்புகாவீழிமிழலையானெனவினைகெடுமே. (சு)

கூசுமாமயானங்கோயில்வாயிற்கட்குடவயிற்றனசிலபூதம்
பூசுமாசாந்தம்பூதிமெல்லோதிபாநிற்பொங்கரவரையோன்
வாசமாம்புன்னைமௌவல்செங்கழுநீர்மலரணைந்தெழுந்தவான்றென்றல்
வீசுமாம்பொழிற்றேன்றுவலைசேர்வீழிமிழலையானெனவினைகெடுமே. (ரு)

பாதியோர்மாதர்மாலுமோர்பாகர்பங்கயத்தயனுமோர்பால
ராதியாய்நடுவாயந்தமாய்நின்றவடிகளாரமரர்கட்கமரர்
போதுசேர்சென்னிப்புரிசடைப்பூசுரர்பூமகனனைய
வேதியர்வேதத்தொலியருவீழிமிழலையானெனவினைகெடுமே. (சு)

தன்றவம்பெரியசலந்தரனுடலந்தடிந்தசக்கரமெனக்கருளென்
றன்றரிவழிபட்டிழிச்சியவிமானத்திறையவன்பிறையணிசடைய
னின்றநாள்காலையிருந்தநாண்மாலைகிடந்தமண்மேல்வருகலியை
வென்றவேதியர்கள்விழாவருவீழிமிழலையானெனவினைகெடுமே. (எ)

கடுத்தவாளரக்கன்கையலையன்றெடுத்தகரமுரஞ்சிரநெரிந்தலற
வடர்த்ததோர்விரலாலஞ்செழுத்துரைக்கவருளினன்றடமிருடெவாள்
படித்தனன்மறைகேட்டிருந்தபைங்கிளிகள்பதங்களேயோதப்பாடிருந்த
விடைக்குலம்பயிற்றும்விரிபொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (அ)

அளவிடலுற்றவபனெடுமாலுமண்டமண்கிண்டியுங்காணு
மூளையெரியாயமூர்த்தியைத்தீர்த்தமுக்கணெம்முதல்வனைமுத்தைத்
தளையவிழ்கமலத்தவிசின்மேலன்னந்தன்னிளம்பெடையொடும்புல்கி
விளைகதிர்கவரிவீசவீற்றிருக்குமிழலையானெனவினைகெடுமே. (கூ)

கஞ்சிப்போதுடையார்கையிற்கோசாரக்கலதிகள்கட்டைவிட்டு
வஞ்சித்தேவிரியவெழுந்தகுஞ்சதனையுண்டமர்க்கமுதருளி
யிஞ்சிக்கேதலிக்கனிவிழக்கமுகின்குலையொடும்பழம்விழுத்தெங்கின்
மிஞ்சிக்கேமஞ்சுசேர்பொழில்வீழிமிழலையானெனவினைகெடுமே. (கo)

வேந்தர்வந்திறைஞ்சவேதியர்வீழிமிழலையுள்விண்ணிழிவிமானத்
தேய்ந்ததன்றேவியோடுறைகின்றவீசனெம்பெருமானைத்

EFEO_TVG_149-263 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

தோய்ந்தநீர்த்தோணிபுரத்துறைமறையோன்றாமொழிஞானசம்பந்தன்
வாய்ந்தபரமாலேவாய்நவில்வாரைவானவர்வழிபடுவாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருவாலவாய் - பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

மங்கையர்க்கரசிவளவர்கோன்பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்விபரண்டிமாதேவிபணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன்பூதனுயகனல்வேதமும்பொருள்களுமூருளி
யங்கயற்கண்ணிதன்னெடுமமர்ந்தவாலவாயாவதுமிதுவே. (க)

வெற்றவேயடியாரடிமைவீழும்விருப்பினன்வெள்ளநீறணியுங்
கொற்றவன்றனக்குமந்திரியாயகுலச்சிறைகுலாவிநின்றேத்து.
மொற்றைவெள்விடையனும்பரார்தலைவ னுலகினிலியற்கையையொழிக்கிட்
டற்றவர்க்கற்றசிவனுறைகின்றவாலவாயாவதுமிதுவே. (உ)

செந்துவர்வாயாள்சேலனகண்ணுள்சிவன்றிருநீற்றினைவளர்க்கும்
பந்தணைவிரலாள்பாண்டிமாதேவிபணிசெயப்பரிடைநிலவுஞ்
சந்தமார்தரளம்பரம்புநீர்மத்தந்தண்ணெருக்கம்மலர்வன்னி
யந்திவான்மதிசேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ங)

கணங்களாய்வரினுந்தமியராய்வரினுமடியவர்தங்களைக்கண்டாற்
குணங்கொடுபணியுங்குலச்சிறைகுலாவுங்கோபுரஞ்சூழ்மணிக்கோயின்
மணங்கமழ்கொன்றைவாளராமதியம்வன்னிவண்கூவிளமாலை
யணங்குவீற்றிருந்தசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (ச)

செய்யதாமரைமேல்னமேயனேயசெயிழைதிருநுதற்செல்வி
பையரவல்குற்பாண்டிமாதேவிநாடொறும்பணிந்திலிதேத்த
வெய்யவேற்சூலம்பாசமங்குசமான்விரிகதிர்மழுவுடன்றரித்த
வையனருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (ஞ)

நலமிலராகநலமதுண்டாகநாடவர்நாடறிகின்ற
குலமிலராகக்குலமதுண்டாகத்தவம்பணிகுலச்சிறைபரவுங்
கலைமலிசரத்தன்மூவிலைவேலன்கரியுரிமூடியகண்ட
னலைமலிபுனல்சேர்சடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (சு)

மூத்தின்முழ்வடமுஞ்சந்தனக்குழம்புநீறுந்தன்மார்பினின்முயங்கப்
பத்தியார்ன்றபாண்டிமாதேவிபாங்கெர்டுபணிசெயநின்ற
சுத்தமாம்பளிங்கின்பெருமலையுடனேசுடர்மரகதமடுத்தாற்போ
லத்தனருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (எ)

காவணங்கியல்வாமஞ்செழுத்தோதுகல்லாய்கல்லியல்வாகுங்
கோவணம்பூதிசாதனங்கண்டாற்றொழுதெழுகுலச்சிறைபோற்ற

வேவணங்கியல்வாமிராவணன்றிண்டோளிருபதுநெரிதரவூன்றி
யாவணங்கொண்டசடைமுடியண்ணலாலவாயாவதுமிதுவே. (அ)

மண்ணெலாநிகழமன்னனுய்மன்னுமணிமுடிச்சோழன்றன்மகளாம்
பண்ணினேர்மொழியாள்பாண்டிமாதேவிபாங்கினற்பணிசெய்துபரவ
விண்ணுளாரிருவர்கீழொடுமேலுமளப்பரிதாம்வகைநின்ற
வண்ணலாருமையோடின்புறுகின்றவாலவாயாவதுமிதுவே. (கூ)

தொண்டராயுள்ளார்திசைதிசைதோறுந்தொழுதுதன்குணத்தினைக்குலவக்
கண்டுநாடோறுமின்புறுகின்றகுலச்சிறைகருதிநின்றேத்தக்
குண்டராயுள்ளார்சாக்கியர்தங்களுரியினன்கணியியிடைவாரா
வண்டருயகன்றூனமார்துவிற்றிருந்தவாலவாயாவதுமிதுவே. (கூ)

பன்னலம்புணருமம்பாண்டிமாதேவிகுலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீராலவாயிசன்றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரியகாழியுள்ஞானசம்பந்தன்செந்தமிழ்வைகொண்
டின்னலம்பாடவல்லவரிமையோரேத்தவிற்றிருப்பவரினிதே. (கக)

திருச்சிற்றம்பலம்

திருப்பத்தணநல்லூர் - பண் - புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

இடரினர்கூற்றைப்பொடிசெய்தார்மதிலேயிலைசொல்லியுலகெழுந்தேத்தக்
கடரினராவர்காற்றுளராராவர்காதலித்துறைதருகோயில்
கொடிறனர்யாதுங்குறைவிலார்தாம்போய்க்கோவணங்கொண்டுகூத்தாடும்
படிரினர்போலும்பத்தணநல்லூர்ன்றவெம்பசுபதியாரே. (க)

கழியுளாரெனவுங்கடலுளாரெனவுங்காட்டுளார்காட்டுளாரெனவும்
வழியுளாரெனவுமலையுளாரெனவுமண்ணுளார்விண்ணுளாரெனவுஞ்
சுழியுளாரெனவுஞ்சுவடுதாமறியார்தொண்டர்வாய்வந்தனசொல்லும்
பழியுளார்போலும்பத்தணநல்லூர்ன்றவெம்பசுபதியாரே. (உ)

காட்டினரெனவுநாட்டினரெனவுங்கடுந்தொழிற்காலனைக்காலால்
வீட்டினரெனவுஞ்சாந்தவெண்ணீறுபூசியோர்வெண்மதிசடைமேற்
சூட்டினரெனவுஞ்சுவடுதாமறியார்சொல்லுளசொல்லுநல்வேதப்
பாட்டினர்போலும்பத்தணநல்லூர்ன்றவெம்பசுபதியாரே. (ங)

முருகினர்பொழில்சூழ்குலகினரேத்தமொய்த்தபல்கணங்களின்றுயர்கண்
டருகினராகியுறுதிபோன்றுள்ளமொண்மையாலொளிதிகழ்மேனி
கருதினரெல்லாங்கைதொழுதேத்தக்கடலுணஞ்சமுதமாவாங்கிப்
பருகினர்போலும்பத்தணநல்லூர்ன்றவெம்பசுபதியாரே. (ச)

பொன்னினர்கொன்றையிருவடங்கிடந்துபொறிகிளர்பூணநூல்புரள
மின்னினருருவின்மிளிர்வதோரரவமேவுவெண்ணீறுமெய்பூசித்

EFEO_TVG_149-264 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

துன்னினர்நால்வர்க்கறமமர்ந்தருளித்தொன்மையார்தோற்றமுங்கேடும்
பன்னினர்போலும்பந்தணர்நல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (நு)

ஒண்பொனரனேயவண்ணல்வாழ்கெனவுமுமையவள்கணவன்வாழ்கெனவு
மண்பினர்பிரியாரல்லுணபகலுமடியவரடியிணைதொழவே
நண்பினெல்லாநல்லனென்றேத்தவல்லவர்தீயனென்றேத்தும்
பண்பினர்போலும்பந்தணர்நல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (சு)

எற்றினுதுமிடைகொள்வாரில்லையிருநிலம்வானுலகெல்லை
தெற்றினர்தங்கள்காரணமாகச்செருமலைந்தடியிணைசேர்வான்
முற்றினர்வாழுமும்மதில்வேவமுனிலைச்சூலமுமழுவும்
பற்றினர்போலும்பந்தணர்நல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (எ)

ஒலிசெய்தருமுலின்முழவமதியம்பவோசையாலாடலறுத
கலிசெய்தபூதங்கையினுலிடவேகாலினுற்பாய்தலுமரக்கன்
வலிகொள்வர்புலியினுரிகொள்வரேனவாழ்வுகன்றுனுமோர்தலையிற்
பலிகொள்வர்போலும்பந்தணர்நல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (அ)

சேற்றினர்பொய்கைத்தாமரையானுஞ்செங்கண்மாலிவரிருகூறுத்
தோற்றினர்தோற்றத்தொன்மையையறியார்தூணையும்பெருமையுந்தம்மிற்
சாற்றினர்சாற்றியாற்றலோமென்னச்சரண்கொடுத்தவர்செய்தபாவம்
பாற்றினர்போலும்பந்தணர்நல்லூர்நின்றவெம்பசுபதியாரே. (கூ-கo)

கல்லிசைபூணக்கலியொலியோவாக்கழுமலமுதுபதிதன்னி
னல்லிசையாளன்புல்லிசைகேளாநற்றமிண்ஞானசம்பந்தன்
பல்லிசைபகுவாய்ப்படுதலையேந்திமேவியபந்தணர்நல்லூர்
சொல்லியபாடல்பத்தும்வல்லவர்மேற்றொல்வினைசூழகிலாவே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருஓமாம்புலியூர்-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

பூங்கொடிமடவாளுமையொருபாகம்புரிதருசடைமுடியடிகள்
வீங்கிருணட்டமாடுமெம்விகிர்தர்விருப்பொடுமுறைவிடம்வினவிற்
றேங்கமழ்பொழிலிற்செழுமலர்கோதிச்செறிதருவண்டிசைபாடு
மோங்கியபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (க)

சம்பரற்கருளிச்சலந்தரன்வியத்தழலுமிழ்சக்கரம்படைத்த
வெம்பெருமானரிமையவரேத்தவினிதினங்குறைவிடம்வினவி
லம்பரமாகியழலுமிழ்புகையினுகுதியான்மழைபொழியு
மும்பர்களேத்துமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (உ)

பாங்குடைத்தவத்துப்பகீரதற்கருளிப்படர்சடைக்கரந்தநீர்க்கங்கை
தாங்குதவிர்த்துத்தராதலத்திழிந்ததத்துவனுறைவிடம்வினவி
லாங்கெரிமூன்றுமமர்ந்துடனிருந்தவங்கையாலாகுதிவேட்கு
மோங்கியமறையோரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (ங)

புற்றரவணிந்துறுமெய்பூசிப்பூதங்கள்சூழ்தரவூரூர்
பெற்றமொன்றேறிப்பெய்பலிகொள்ளும்பிரானவனுறைவிடம்வினவிற்
கற்றநால்வேதமங்கமோராறுங்கருத்தினாருத்தியாற்றெரியு
மூற்றபல்புகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (சு)

நிலத்தவர்வானமாள்பவர்கீழோர்துயர்கெடநெடியமாற்கருளா
லலைத்தவல்லசுராசரவாழியளித்தவனுறைவிடம்வினவிற்
கூலத்தினுற்பொருள்கள்வேண்டுதலசெயயாத்தன்மையாரன்மையான்மிக்க
வுலப்பிலபல்புகழாரோம்மாம்புலியூருடையவர்வடதளியதுவே. (டு)

மணந்திகழ்திசைகளெட்டுமேழிசையுமலியுமாறங்கமைவேள்வி
யீரைந்தனல்வேதமுன்றெரிபிரண்டுறப்பனவொருமைபாலுணருங்
குணங்களுமவற்றின்கொள்பொருள்குற்றமற்றவையுற்றதுமிலரா
முணர்ந்தவர்வாழுமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (சு-எ)

தலையொருபத்துந்தடக்கையதிரட்டிதானுடையரக்கனெண்கயிலை
யலைவதுசெய்தவன்றிறல்கெடுத்தவாதியாருறைவிடமவினவில்
மலையெனவோங்குமாளிகைநிலவுமாதின்மாற்றலொன்று
முலவுபலபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (அ)

கள்ளவிழ்மலர்மேலிருந்தவன்கரியோனென்றிவர்காண்பரிதாய
வெள்ளெரியுருவருமையவளோடுமுகந்தினிதுறைவிடம்வினவிற்
பள்ளநீர்வாளைபாய்தருகழனிப்பனிமலர்ச்சோலைசூழாலை
யொள்ளியபுகழாரோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (கூ)

தெள்ளியரல்லாத்தேரரோடமணர்தடுக்கொடுசீவரமுடிக்குங்
கள்ளமார்மனத்துக்கலதிகட்கருளாக்கடவுளாருறைவிடம்வினவி
னள்ளிருள்யாமநான்மறைதெரிந்துரலந்திகழ்மூன்றெரியோம்பு
மொள்ளியர்வாழுமோமமாம்புலியூருடையவர்வடதளியதுவே. (கo)

வீளைதருவயலுள்வெயில்செறிபவளமேதிகண்மேய்புலத்திடறி
யொளிதரமலருமோமமாம்புலியூருடையவர்வடதளியரனைக்
களிதருநிவப்பிற்காண்டகுசெல்வக்காழியுண்ஞானசம்பந்த
னனிதருபாடல்பத்தும்வலலார்களமரலோகத்திருப்பாரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

திருக்கோணமாமலை-பண்-புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

நிகைகழலாவஞ்சிலம்பொலியலம்புநிமலர்நீறணிதிருமேனி
வரைகெழுமகளோர்பாகமாப்புணர்ந்தவடிவினர்கொடியரைவிடையர்
கரைகெழுசந்துங்காரகிற்பிளவுமளப்பருங்கனமணிவரன்றிக்
குரைகடலோதநித்திலங்கொழிக்குங்கோணமாமலையமர்ந்தாரே. (க)

கடிதெனவந்தகரிதனையுரித்துவவ்வுரிமேனிமேற்போர்ப்பர்
பிடியனநடையாள்பெய்வளைமடந்தைபிறைநுதலவளொடுமுடனுய்க்
கொடிதெனைகதறுங்குரைகடலுழந்துகொள்ளமுனித்திலஞ்சுமந்து
குடிதணெருக்கிப்பெருக்கமாய்ததோன்றுங்கோணமாமலையமர்ந்தாரே. (உ)

EFEO_TVG_149-265 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

பனித்தினந் திங்கட்பைந்தலைநாகம்படர்சடைமுடியிடைவைத்தார்
கனித்தினந் துவர்வாய்க்காரிகைபாகமாகமுன்கலந்தவர்மதின்மேற்
றனித்தபேருருவிழுத்தழுகந் தாங்கியமேருவெஞ்சிலையாக்
குனித்ததோர்வில்லார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (சு)

பழித்தினங்கங்கைசடைமுடிவைத்துப்பாங்குடைமதனனைப்பொடியா
விழித்தவன்றேவிவேண்டமுன்கொடுத்தவிமலனர்கமலமார்பாதர்
தெழித்துமுன்னரற்றுஞ்செழுங்கடற்றரளஞ்செம்பொனுமிப்பியுஞ்சுமந்து
கொழித்துவன்றிரைகள்கரையிடைச்சேர்க்குங்கோணமாமலையமர்ந்தாரே.(ச)

தாயிலுநல்லதலைவனென்றடியார்தம்மடிபோற்றிசைப்பார்கள்
வாயிலுமனத்துமருவினின்றகலாமாண்பினர்காண்பலவேடர்
நோயிலும்பிணியுந்தொழிலர்பானீங்கிதுழைதருநூலினர்ஞாலங்
கோயிலுஞ்சுண்ணயுங்கடலுடன்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரே. (டு)

பரிந்தநன் மனத்தால்வழிபடுமாணிதன்னுயிர்மேல்வருங்கூற்றைத்
திரிந்திடாவண்ணமுதைத்தவற்கருளுஞ்செம்மையார்கம்மையாளுடையார்
விரிந்துயர்மெனவன்மாதவிபுன்னைவேங்கைவண்செருந்திசெண்பகத்தின்
குருந்தொடுமுல்லைகொடிவிடும்பொழில்சூழ்கோணமாமலையமர்ந்தாரே.சு-எ

எடுத்தவன்றருக்கையிழித்தவர்விரலாலேத்திடவாத்தமாம்பேறு
தொடுத்தவர்செல்வந்தோன்றியபிறப்புமிறப்பதியாதவர்வேள்வி
தடுத்தவர்வனப்பாலவைத்ததோர்கருணைதன்னருட்பெருமையும்வாழ்வுங்
கொடுத்தவர்விரும்பும்பெரும்புகழாளர்கோணமாமலையமர்ந்தாரே. (அ)

அருவராதொருகைவெண்டலையேந்தியகந்தொறும்பலியுடன்புக்க
பெருவராயுறையுநீர்மையர்சீர்மைப்பெருங்கடல்வண்ணனும்பிரம
னிருவருமறியாவண்ணமொள்ளெரியாயுயர்ந்தவர்பியர்ந்தநன்மாற்குங்
குருவராய்நின்றூர்குரைகழல்வணங்கக்கோணமாமலையமர்ந்தாரே. (கூ)

நின்றுணுஞ்சமணுமிருந்துணுந்தேருநெறியலாதனபுறங்கூற
வென்றருஞ்சுண்ணம்பரிசினொருபான்மெலியவொடுமூடனுகித்
துன்றுமொண்பவ்வமவ்வலுஞ்சூழ்ந்துதாழ்ந்துறுதிறைபலமோதிக்
குன்றுமொண்கானல்யாசமவந்தலைவுங்கோணமாமலையமர்ந்தாரே. (கo)

குற்றமிலாதார்குரைகடல்சூழ்ந்தகோணமாமலையமர்ந்தாரைக்
கற்றுணர்கேள்விக்காழியர்பெருமான்கருத்துடைஞானசம்பந்த
னுற்றசெந்தமிழ்மாலையிராந்துமுரைப்பவர்கேட்பவருயர்ந்தோர்
சுற்றமுமாகித்தொல்வினையடையார்தோன்றுவர்வானிடைப்பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்.

ஈழநாட்டிலுள்ளது.
சுவாமிபெயர் - கோணீசர் - தேவியார் - மாதுமையம்மை.

திருவெள்ளடை - பண் - அந்தாளிகுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

சுண்ணவெண்ணீறணிமார்பிற்சூல்புனைந்
தெண்ணருஞ்பலகணமேத்தநின்றருடிவார்
விண்ணவர்பைம்பொழில்வெள்ளடைமேவிய
பெண்ணமர்மேனியெம்பிஞ்ஞகனுரே. (க)

திரைபுல்குகங்கைதிகழ்சடைவைத்து
வரைமகளோடனுதிர்மல்கு
விரைகமழ்தண்பொழில்வெள்ளடைமேவிய
வரைமல்குவாளரவாட்டுகந்தீரே. (உ)

அடையலர்தொன்னகர்மூன்றெரித்தன்ன
கடைமடமங்கையோர்பாகமுந்து
விடையுகந்தேறுதிர்வெள்ளடைமேவிய
சடையமர்வெண்பிறைச்சங்கரனீரே. (கூ)

வளங்கிளர்கங்கைமடவரலோடு
களம்படவாடுதிர்காடரங்காக
விளங்கியதண்பொழில்வெள்ளடைமேவிய
விளம்பிறைசேர்சடையெம்பெருமானே. (ச

சுரிகுழனல்லதுடியிடையோடு
பொரிபுல்குகாட்டிடையாடுதிர்பொங்கு
விரிதருபைம்பொழிலவெள்ளடைமேவிய
வெரிமழுவாட்படைபெற்றைபிரானே. (டு)

காவியுங்கண்மடவாளொடுங்காட்டிடைத்
தீயகலேந்திநின்றாடுதிர்தேன்மலர்
மேவியதண்பொழில்வெள்ளடைமேவிய
வாவினிலேந்துகொண்டாட்டுகந்தீரே. (சு-எ-அ-கூ-கo-கக

திருச்சிற்ற

திருநல்லூர்ப்பெருமணம் - பண் - அந்தாளிகுறிஞ்சி

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம்வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம்பாட்டுமெய்யாய்த்தில
செலலூர்பெருமணஞ்சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே. (க

தருமணலோதஞ்சேர்தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டுபாவைகல்லார்கள்
வருமணங்கூட்டிமணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான்பெண்ணோர்பாகங்கொண்டானே. (உ

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர்ப்பெருமணமேவினின்
றின்புறுமெந்தையீயடியேத்துவார்
துன்புறுவாரல்லர்தொண்டுசெய்வாரே. (கூ

வல்லியந்தோலுடையார்ப்பதுபோர்ப்பது
கொல்லிபல்வேழத்துரிவிரிகோவண
நல்லியலார்தொழுநல்லூர்ப்பெருமணம்
புல்லியவாழ்க்கையெம்புண்ணியனுர்க்கே (ச

EFEO_TVG_149-266 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr

ஏறுகந்தேறிடுகாட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்நிரையார்விரிதேன்கொன்றை
நாறுகந்தீர்திருநல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமைகூறுகந்தீரே. (கு)

சிட்டப்பட்டார்க்கெளியான்செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னியான்பதியாவது
நட்டக்கொட்டாட்டருநல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத்தீரார்லெம்பிரானீரே. (கூ)

மேகத்தகண்டனெண்டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய்புலித்தோலொடுபங்கித்த
நாகத்தநல்லூர்ப்பெருமணத்தானலல
போகத்தன்யோகத்தையேபுரிந்தானே. (எ)

தக்கிருந்தீரன்றுதாளாலசக்கனை
யுக்கிருந்தொல்கவுர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்றுநல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரைமைப்போக்கருளீரே. (அ)

ஏலுந்தண்டாமரையானுமியல்வுடை
மாலுந்தம்மாண்பறிகின்றிலர்மாமறை
நாலுந்தம்பாட்டென்பர்நல்லூர்ப்பெருமணம்
போலுந்தங்கோயில்புரிசடையார்க்கே. (கூ)

ஆதரமணைதிசார்கியர்தாஞ்சொல்லும்
பேதைமைகேட்டுபபிணக்குறவீர்வம்மி
னுதனைநல்லூர்ப்பெருமணமேவிய
வேதனதாடொழவீடெளிதாமே. (கo)

நறும்பொழிற்காழியுண்ஞானசம்பந்தன்
பெறும்பதனல்லூர்ப்பெருமணத்தானை
யுறும்பொருளாற்சொன்னவொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவமவலமிலரே. (கக)

திருச்சிற்றம்பலம்.

சோழநாட்டிலுள்ளது.

சுவாமிபெயர் - திலோகத்தியாகேசர் - தேவியார் - நங்கையுமையாயியம்மை.

மூன்றுந்திருமுறை முற்றிற்று.

மூவர்முதலிகளுக்குள் முதன்மையாகியீ


திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்த

மூன்றுதிருமுறையும்


முற்றுப்பெற்றன.

ஆகப்பதிகம் - நூஅறுசு.

EFEO_TVG_149-267 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr



EFEO_TVG_149-268 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr



EFEO_TVG_149-269 07/06/2011 © École française d'Extrême-Orient, www.efeo.fr